ஆவணி உதயம்
புரட்டாசி உதயம் } 1981

JL
V211m N81
N81.11
85371



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி - ஜூன் 16

பட்டுள்ளன. குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரியம் இவற்றின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கான செலவு இதில் அடங்காது.

**குடிநீர் வசதி:**

266 குடியிருப்புகளுக்கு ரூ. 57 இலட்சம் செலவில் குடிநீர்வசதிப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் மயானங்களுக்குச் சாலை வசதி:**

191 பணிகள் ரூ. 10.74 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அமைக்கப்பட்ட சாலைகளின் நீளம் 163.49கி. மீ.

**சிறுபாசன வசதி:**

சிறு பாசன ஆதாரங்கள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் 131 பணிகள் ரூ. 10.82 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**கிராமச் சாலை வசதி:**

புதிய சாலை அமைத்தல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ. 2 கோடியே 30 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட மற்றும் மேம்பாடு செய்யப்பட்ட சாலைகளின் நீளம் 1266 கி.மீ.

**சிறு பாலங்கள்:**

சிறு பாலங்கள் மற்றும் மதகுகள் கட்டும் 404 பணிகள் ரூ. 53.76 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**பள்ளிக் கட்டடங்கள்:**

31 புதிய பள்ளிக் கட்டிடங்கள் ரூ. 13.5 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

**தாய் சேய் நல விடுதிகள்:**

11 தாய்சேய் நலவிடுதிக் கட்டடங்கள் ரூ. 5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஊரக மருந்தகம்:**

ரூ. 50 ஆயிரம் செலவில் ஓர் ஊரக மருந்தகம் கட்டப்பட்டுள்ளது.

**ஊராட்சி மன்றக் கட்டடங்கள்:**

இரண்டு ஊராட்சி மன்றக் கட்டடங்கள் சுமார் ரூ. 1 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

**மகளிருக்கான பொதுக் கழிப்பிடங்கள்:**

மகளிருக்காக பத்து பொதுக் கழிப்பிடங்கள் ரூ. 63 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் வீட்டு வசதி:**

ஒரு வீடு ரூ. 3000 மதிப்பீட்டில் 651 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கட்டவேண்டிய வீடுகளின் இலக்கு 375. இலக்கைப் போல் சுமார் இருமடங்கு அளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளது தனிச்சிறப்பு மிகு சாதனையாகும்.


ரூ. 3000 த்தில் ரூ. 1000அரசு மான்யமாக அளிக்கப்படுகிறது.

மேற்கண்ட ஐந்து முதல் கட்ட தன்னிறைவுத்திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 1965 ஆதி திராவிடக் குடிசைகள் உள்பட 6715 கிராமக் குடிசைகளுக்கு மின்ஒளி வழங்குத் திட்டத்தின் கீழ் மின் வசதி பெற்றுள்ளன.

**இரண்டாம் கட்டம்**

தன்னிறைவுத் திட்டம் இரண்டாம் கட்டமாக ஆவுடையார் கோயில் கறம்பக்குடி, திருவரங்குளம், பொன்னமராவதி, கந்தர்வக்கோட்டை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 2 கோடி 8 இலட்சம் செலவில் 1116 பணிகள் செயலாக்கம்பெறுகின்றன. குடிநீர் வடிகால் வாரி

அரிமளத்தில் தாய் சேய் நல விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் 3.8.81 அன்று, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



மலைக்குடி பட்டியில் அன்னவாசல் ஒன்றியத்தில் ரூ. 50,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தாய் சேய் நல விடுதி.



இலுப்பூர் பேரூராட்சியில் ரூ 40,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி.

யம், மின்சார வாரியம் மற்றும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மதிப்பீடு இதில் அடங்காது. மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் முன்னேற்ற நிலையில் உள்ளன. பணிகளின் செயல்பாடு குறித்து செப்டம்பர் மாதம் முடிய அரசு ஆய்வு செய்ததில் இம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 61.7 சதவீதம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் (1981-82க்குள்) செய்து முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**குடிநீர் வசதி:**

336 குடியிருப்புகளுக்கு ரூ 90 இலட்சம் செலவில் குடிநீர்வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 133 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 203 பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

**சிறு பாலங்கள்:**

428 பணிகள் ரூ. 68.14 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

**கிராமச் சாலை வசதி:**

637 புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் மேம்பாட்டுப்பணிகள் ஒரு கோடி 19 இலட்சம் ரூபாய் செலவில் (மொத்தம் 718 கி.மீ. நீளம்) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பள்ளிக் கட்டடங்கள்:**

34 பள்ளிக் கட்டடப் பணிகள் ரூ. 13.6 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தாய் சேய் நல விடுதிகள்:**

11 தாய் சேய் நல விடுதிக் கட்டடங்கள் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊரக மருந்தகக் கட்டடங்கள்:**


6 கட்டடப் பணிகள் ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் வீட்டு வசதி:**

500 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு சுமார் 342 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**குடிசைகளுக்கு மின் வசதி:**

மேற்கண்ட ஐந்து இரண்டாம் கட்டத் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 1902 ஆதி திராவிடர் குடிசைகள் உள்பட 6251 குடிசைகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது.





# பண்பாளர் பண்டித நேரு

**எஸ்.எம்.மருதம்**

"என்னுடைய அருமைமிகு நண்பரும், மனித குலத்தின் மாபெரும் நண்பரும் மிகச் சிறந்த ஜனநாயகவாதியுமான ஜவகர்லால் நேரு இல்லாத இந்தியாவிற்கு நான் வந்திருக்கிறேன்''

நேரு மறைந்தபின்பு 1965-ம் ஆண்டு இந்தியாவிற்கு வருகை தந்த, கமால் அப்துல் நாசர் உருக்கமாகக் குறிப்பிட்ட மணிவாசகம் இது! உலகத் தலைவர்கள் எல்லாம் ஒப்புக்கொண்ட உண்மை இது. நேரு தலைசிறந்த ஜனநாயகவாதி மட்டுமல்ல, மிகச் சிறந்த சோஷலிச சிந்தனையாளர், மனிதரைப்பற்றியே சிந்தித்த மாபெரும் பகுத்தறிவாளர்.

ஏழை எளிய குடும்பத்தில் பிறந்து ஏற்றமிகு தலைவனாக உயர்வது எப்படி சிறப்போ, அதுபோன்று, செல்வச் சீமான் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்து தியாகவேள்வியில் குதித்து இன்ப வாழ்விற்கு விடை கொடுத்து உயரிய தலைவனாவதும் சிறப்புடைய ஒன்றாகும்.

1921-ம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து 1945-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை ஏறத்தாழ [illegible] ஆண்டுகள் இடர்மிகு காராக்கிரகத்தின் கதவுகளுக்கு அப்பால் தன் வாழ்வைக் கழித்தவர் ஜவகர்லால் நேரு.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய நேரம். அலகாபாத் நகருக்கு வருகை தந்தார். அப்போது நகரின் முக்கிய சாலையில் குதிரைகள் பூட்டிய ஆடம்பரச் சாரட்டு வண்டியொன்றில் ஒருவர் கம்பீரமாகச் சென்றுகொண்டிருப்பதையும் வண்டிக்கு முன்னால் சில பணியாளர்கள் மேல்நாட்டு அல்சேஷன் நாய்களைப் பிடித்துக் கொண்டு ஓடி வருவதையும் பார்த்த காந்தியடிகள், உடன் வந்தோரிடம் ''எந்த ஊர் மகாராஜா இவர்'' என்று கேட்டார்.

''இவர் எந்த ஊர் ராஜாவும் இல்லை. அலகாபாத்தில் பெரிய வழக்கறிஞர் மோதிலால் நேரு — பெரிய பணக்காரர்'' என்கிற பதில் கிடைத்தது.

பின் காந்தியடிகள், மோதிலால் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தார். தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த வக்கீலாயிற்றே எனக் கருதி அவருக்கு உற்சாகமான வரவேற்பளித்தார் மோதிலால். மேல்நாட்டு விஷ்கிப் பாட்டிலை உடைத்து, கோப்பையிலே ஊற்றிக் கொடுத்தார். ஆனால் காந்தியடிகள் அதை அருந்த மறுத்தார். பின்பு இந்திய நாட்டு மக்களின் ஏழ்மை நிலை குறித்தும் இதற்குக் காரணம் வெள்ளை ஏகாத்திபத்திய அரசே காரணம் என்றும் நீண்ட விளக்கமளித்தார். மோதிலால்நேரு மனம் மாறியது. விஷ்கி பாட்டிலைத் தூக்கி எறிந்தார். ஆடம்பர ஆடையை விடுத்து கதராடை அணியத்துவங்கினார். விடுதலைப் போர்க்களத்தில் குதித்தார். சிறை சென்றார்.

சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்பு, அலகாபாத் நகருக்கே மின்சாரம் வராத நேரம், மோதிலால் நேருவின் ஆனந்த பவனத்தில் மட்டும் மின் விளக்குகள் ஒளிவீசி எரிவதை மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வேடிக்கை பார்த்துச் சென்றவண்ணமிருந்தனர். தனி ஜெனரேட்டர் ஏற்பாடு செய்து மின் விளக்கு போடப்பட்டிருந்தது.

மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளை இடையிலே குறிப்பிட்டதற்குக் காரணம், எத்தகைய வசதி உள்ள குடும்பம் நேருவின் குடும்பம் என்பதற்காகத்தான். அத்தகைய குடும்பத்திலே உதித்த உத்தமத்தலைவர் ஜவகர்லால் நேரு, இந்நாட்டிற்காக எத்தகைய இன்னல்களை ஏற்றார் என்பதற்காகத்தான்.

1946ல் நேரு இடைக்கால அரசின் பிரதமராகப் பதவி ஏற்றிருந்த நேரம். பாகிஸ்தான் பிரிவினைக்காக அன்றைய முஸ்லிம் லீக் 'நேரடி நடவடிக்கை' தீர்மானத்தை அறிவித்தது. இதையடுத்து, பஞ்சாபிலும், வங்கத்திலும் பீகாரிலும் கடுமையான, கொடுமையான வகுப்புக் கலவரம் வெடித்தது. பல்லாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். உடனே நேரு பஞ்சாப் மாநிலத்தில் சமாதான யாத்திரை மேற்கொண்டனர்.

ஒரு நாள் நடுநிசி! நேருவின் கார் ஒரு காட்டுப் பாதையில்சென்று கொண்டிருந்தது. ''கலவரப்பகுதி தனி இரவில செல்லவேண்டாம்'' என்று பலர் எச்சரித்தும் நேரு அதைப் பொருட்படுத்தவில்லை. வளைவான சாலையிலே கார் சென்றபோது, கார் வெளிச்சத்தில் சற்று தூரத்தில் சில முரட்டு உருவங்கள் புதரில் மறைவது தெரிந்தது, உடனே டிரைவர் காரை நிறுத்தினார். நேருவுடன் இருந்த செயலாளர் ''நாம் பாதுகாப்போடு வரவில்லை. இரவு நேரம் எதுவும் நடக்கலாம். எனவே வந்த வழியே திருப்பி விடலாம்'' என்றார்.


ஆனால் நேரு அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. காரை ஓட்டச் செய்து அதே இடத்தில் நிறுத்தச் சொல்லி கீழே இறங்கினார். பதுங்கி இருப்பவர்களை அழைத்தார். அவர்கள் காரை நோக்கி வந்தனர். அவர்களிடம் விவரம் கேட்டார். படுகொலைக்குப் பயந்து இங்கே ஒளிந்திருப்பதாக அவர்கள் கூறினார்கள். பின் அவர்களைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு அம்பாலா நகர் பயணிகள் விடுதிக்குச் சென்றார். அங்கு தங்களுக்காக இருந்த உணவை அவரே எடுத்துவந்து அவர்களைச் சாப்பிடச் செய்தார். அங்கிருந்த அதிகாரிகளை அழைத்து அவர்களை அகதிகள் முகாமிற்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார். டில்லி திரும்பிய பின்பும் கூட அகதி முகாம் அதிகாரிக்குக் கடிதம் எழுதி அவர்கள் நலன் பற்றி விசாரித்தார்.

வங்கத்திலும், பஞ்சாபிலும் இந்துக்கள் படுகொலை செய்யப்படுவதை அறிந்ததும் பீகாரில் ஆவேசமடைந்த இந்துக்கள் முஸ்லீம்களைத் தாக்க ஆரம்பித்தனர். உடனே நேரு அப்பகுதியிலும் [illegible] கொண்டார். கலவரம் நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்ட அதே பகுதிக்கு விரைந்தார். அங்கே ஆத்திரம் கொண்ட இந்து ஒருவன் ஒரு முஸ்லீமை வெட்ட முனைந்து கொண்டிருந்தான். காரைவிட்டு இறங்கி ஓடிய நேரு, பின்புறமாக அரிவாள் ஏற்றியவனின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ''உன் சகோதரனைக் கொல்லாதே'' என்று கூறினார். ஆனால் அவன் திமிறினான். நேரு விடவில்லை. ''என்னைக்கொன்று விட்டு, என் பிணத்தின்மேல் ஏறிநின்று அவனைக் கொல்'' என்று உரத்தகுரல் எழுப்பினார். இயந்திரம்போல் இயங்கியஅவன் நிதானமடைந்து திரும்பினான். ஆசியாவின் ஜோதி, மனிதருள் மாணிக்கம், நேரு தன் கையைப் பிடித்திருப்பதைப் பார்த்தான், அவன் கண்கள் குளமாயின. அரிவாளை வீசி எறிந்துவிட்டு, 'பண்டிட்ஜி' என்று காலில் விழுந்து கதறினான். அத்தகைய மனிதாபிமானி, துணிச்சல்காரர் நேரு!

ஜவகர்லால் நேரு இந்த நாட்டின் சாதி அமைப்புகளைச் சாடினார். அவர் ஒரு அரசியல் வாதியாக மட்டுமல்ல, சமுதாய சீர்திருத்தவாதியாக, பகுத்தறிவாளராகப் பரிமளித்தார் என்பதற்கு அவர் எழுதிய நூல்கள் தெளிவான சான்றுகளைத் தரும்.

''குருட்டு நம்பிக்கைகளால் வெள்ளையுள்ளம் கொண்ட மக்கள் நீண்ட காலம் எவ்வளவு அக்கிரமத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணுந்தோறும் நமக்கு ஆச்சரியம் எழுகிறது. இந்த நன்மையின் காரணமாகத்தான் மதம் ஒரு பெரிய வியாபார மாகிவிட்டது. மனித ஆர்வத்தையும் எண்ணத்தையும் வளர்க்காமல், வெறும் உணர்ச்சி மூடநம்பிக்கைகளையே வளர்த்து அறிவார்ந்த செயல்களுக்குத் தடையாகவே மதங்கள் இருந்து வந்தன என்பது என் கருத்தாகும். எனவே இந்து மதமோ எந்த மதமோ என்னை ஈர்க்கவில்லை'' —என்று உலகப் புகழ் வாய்ந்த ''டிஸ்கவரி ஆஃப் இந்தியா'' இந்தியாவைப் பற்றிய கண்டுபிடிப்பு என்ற நூலிலே நேரு எழுதியிருக்கிறார்.

''நமது நாட்டில் பல்வேறு சாதி அமைப்புகள் மனிதர்களால் உருவாக்கப்பட்டன. சாதி அமைப்புகள் உயர்வு தாழ்வைக் கற்பிப்பதால் அது சோஷலிசத்திற்கு மட்டும் எதிரிடையானது மட்டுமல்ல, சமத்துவ மனப்பான்மைக்கும், ஒன்றுபட்டு வாழும் மனப்பான்மைக்கும்விரோதமானதாகும். நமது சமுதாயத்திலும் நம்மில் பலரிடையேயும் அந்தச் சாதி முறை வேர் ஊன்றியிருப்பது எனக்குத் தெளிவாகத் தெரியும்.





85372

Verified

கவியரசு கண்ணதாசன்

தோற்றம் 24.6.1927 மறைவு 17.10.1981





அறியலாமோ?'' என வினாவை வீசினர்.

''நான் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறேன். அப்போது பெஷாவர் நகருக்கும் செல்வேன். எல்லைகாந்தி கான் அப்துல் கபார்கானும் அவர் சகோதரர் கான் சாகிப்பும் அவதரித்த புண்ணிய ஸ்தலமல்லவா பெஷாவர்?'.

சிரித்துக் கொண்டே நேரு அளித்த இந்த விடை நண்பர்களின் சிரிப்பொலியையும் இணைத்துக்கொண்டது.

''நான் இந்திய மக்களையும் இந்திய மண்ணையும் வெகுவாக நேசித்தேன். நான் மறைந்தபின் என் உடலை மதச்சடங்குகள் எதுவுமின்றி எரித்து, அச் சாம்பலை இந்தியத் திருநாட்டின் எழில்மிக்க வயல் வெளிகளிலும், இமயத்தின் மடியிலும் தூவிவிடுங்கள்'' என்று நேரு எழுதி வைத்த உயில் அவர்தம் உள்ளக்கிடக்கையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டும் சான்றல்லவா?

அதனை வேரோடு கிள்ளி எறிவது அவ்வளவு சுலபமான பணியல்ல என்பதையும் நான் அறிவேன். இதற்குச் சிறிது காலம் ஆகும் என்றாலும் அதை நாம் அடியோடு ஒழித்துக் கட்டியே ஆகவேண்டும்.''

—1957-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் எட்டாம்நாள் திண்டுக்கல் நகரில் பேசும்போது நேரு கூறிய அழுத்தமான கருத்தாகும்.

சுதந்தரப் போராட்ட காலத்தில் ஒருநாள் நேரு, தனது நண்பர்கள் சிலரிடம் தான் ஸ்தல யாத்திரை சென்று ஒரு புண்ணியத்தலத்தை தரிசிக்கப்போவதாகக் கூறினார். நண்பர்களை ஆச்சரியம் அரவணைத்துக் கொண்டது. நேருவுக்கு திடீரென எப்போது பக்தி ஏற்பட்டுவிட்டது என்று பேசிக்கொண்டார்கள்.

''தாங்கள் தரிசிக்கச் செல்லும் புண்ணிய ஸ்தலம் எதுவென்று

# மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்


திருமதி பிரீடா சந்திரசேகரன்,
உதவி இயக்குநர்,
(மீனவப் பெண்கள் நலன்)
மீன் துறை


தமிழகத்தைச் சேர்ந்த 1000 கிலோ மீட்டர் கடலோரப் பகுதியிலுள்ள 402 மீனவக் குப்பங்களில் சுமார் 4 இலட்ச மீனவர்கள் வசித்து வருகின்றார்கள். இவர்கள் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்து வருகின்றனர். கடலின் கொந்தளிப்பையும், காற்றின் சீற்றத்தையும் சிறிய கட்டுமரங்களையோ அல்லது வல்லம் எனப்படும் சிறிய படகுகளைக் கொண்டு எதிர்த்து சென்று அன்றாடம் மீன்பிடிப்பு நடத்தி வருகின்றனர். இவ்வளவு கடினமாக உழைத்தும் அவர்களுக்குக் கிடைக்கும் வருவாயோ மிகவும் சொற்பம். வருடம் முழுவதும் இவர்களது வருவாய் சீராக இருப்பதில்லை. கடலின் நீரோட்டத்தையும் காற்றின் போக்கையும் நம்பியே இவர்களது வாழ்வு நடைபெறுகிறது. இவ்வாறு வருவாய் இல்லாது அன்றாடம் அவதியுறும் மீனவர்களின் நலனுக்காகவும், அவர்கள் தொழிலில் மேம்பாடடைந்து பொருளாதார நிலை உயரவும், கூட்டுறவே சிறந்ததெனக் கருதி தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டி, மீன்துறையின் மூலம் பல மீனவக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து செயல்படுத்தி வருகின்றது. இதுவரையில் தமிழகத்தில் 278 கடலோர மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மீனவர்கள் தனியார்களிடமிருந்து அதிக வட்டிக்குத் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்குக் கடன் வாங்குவதைத் தவிர்க்க அரசு குறைந்த வட்டியில் நீண்ட கால மற்றும் மத்திய கால கடன்களை வழங்கி வருகிறது. இதைத் தவிர இயற்கையின் சீற்றத்தால் விளையும் புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களை ஈடுகட்ட 25 சதவிகிதம் 50 சதவிகிதம் உபகரணங்களைப் பொறுத்து மானியத்துடன் கூடிய வெள்ள நிவாரண கடன்களையும் அவ்வப்போது அரசு அளித்து வருகிறது. மேற்கூறிய கடன்களை மீனவ கூட்டுறவு சங்கங்களே அரசிடமிருந்து பெற்று தனது உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. இவையல்லாது மீனவர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தின் கீழ், சொந்த நிலம் உள்ள மீனவர்களுக்கு வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப் படுகிறது. அவ்வாறு நிலம் இல்லாத கிராமங்களுக்கு அருகில் உள்ள நிலத்தை ஆர்ஜிதம்செய்து சங்கத்திற்கு வழங்கி வீடு கட்டப் பட்டு வருகின்றது. மேலும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்





# சாகா வரம் பெற்ற சத்தியக்கவிஞர்

"மரணம் மனிதர்களை வெற்றி கொள்ளலாம். கவிஞர்கள் மரணத்தையே தோற்கடிக்கிறவர்கள். ஆன்ற தமிழ்ப்புலவரும், அரசுக்கவிஞரும், அருமை நண்பருமான கவியரசு கண்ணதாசன் அவர்களின் மறைவில் மரணம் தோற்றுத்தான் போயிற்று!

மூவாத்தமிழ் மொழியில் சாகா வரம் பெற்ற சத்தியக் கவிஞர் அவர். அவரை எவ்வாறு மரணம் வெற்றி கொள்ள இயலும்?

சாதாரண மனிதர்களுக்கு மரணம் ஒரு முடிவாக இருக்கலாம். கவிஞரைப்போன்ற சரித்திர மனிதர்களுக்கு மரணம் ஒரு இடைவெளி மாத்திரமே. கல்லறையில் பூத்த கவி மலராக, நமது நெஞ்சின் அலைகளில் எப்போதும் நீந்தும் நிலவாக அவர் நிலை பெறுவார்.


காலக்காற்று இந்த மாபெரும் கவிஞரை எங்கெல்லாமோ அலைக்கழித்தது. எந்தத் துறைமுகத்திற்கு இந்தபடகு பயணப்பட்டாலும் அங்கெல்லாம் இது சீரோடும் சிறப்போடுமே போற்றப்பட்டது. அவரிடமிருந்த தமிழ்தான் அதற்குக் காரணம்.

மற்றவர்கள் கவிதை எழுதினார்கள். கவியரசு கவிதையாகவே வாழ்ந்தார். கவிஞர் என்றால் அது கண்ணதாசன் ஒருவரைத்தான் குறிக்கும் என்கிற அளவிற்கு அவருக்குப் புகழ் சேர்ந்தது.

## மாண்புமிகு முதல்வர்

பாரதி-பாரதிதாசனுக்குப் பிறகு தமிழுக்கு அவர்தான் என்பது நிலைமை! அவர் காலத்தில் வாழ்ந்தது தமிழர்களாகிய நமக்குப் பெருமை!

பல கவிஞர்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்த பிறகே வாழ்த்தப்பட்டார்கள். கவியரசு கண்ணதாசன் வாழ்ந்தபோதே வரலாறாகி விட்டார்! மரணத்திற்குப் பிறகு அவருக்குச்



**தமிழரசு**

மலர் 12 இதழ் 9

1—11—1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி - ஐப்பசி 16

கீழும், நூல், வலை, கட்டுமரம் முதலியவைகளை வாங்க மான் யத்துடன் கூடிய கடன் வழங்கப் பட்டு வருகின்றது.

இவை யல்லாது, தேசிய கூட் டுறவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெருமளவில் கடன் இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங் கப்பட்டு வருகிறது.

கடலோர மீனவ குடும்பங் களில் தற்போது சுமார் 4 இலட் சம் மீனவ மக்கள் வசித்து வரு கின்றார்கள். இவர்களில் 5 சத விகிதம் அதாவது 2 இலட்சம் பேர் பெண்களாவார்கள். மீனவ சமுதாயம் பொருளாதா ரத்தில் மிகவும் பின் தங்கியிருப்ப தாலும், குடும்பத் தலைவனுக்கு குடும்பத்தை கவனிக்கபோதிய அவகாசம் இல்லாததாலும், மீனவ பெண்களே நேரடியாக மீன்பிடிப்பில் ஈடுபடாவிட்டா லும், மீனவர்கள் பிடித்து வரும் மீன்களை ஏலம் விடுவது, மார்க் கெட்டிற்கு எடுத்து சென்று விற் பது, உப்பிட்டுப் பதப்படுத்துவது மற்றும் வலைகளைப் பழுதுபார்ப் பது போன்ற ஏனைய பணி களில் ஈடுபட்டுக் குடும்ப சுமை என்னும் வண்டியைக் கணவன் மனைவி இருவரும் இரு சக்கரங் களாக இருந்து நடத்தி வருகின்ற னர்.

அரசு திட்டங்களின் மூலம் ஓரளவு மீனவர்கள் முன்னேற்றம் அடைந்தாலும் ஒருங்கிணைந்த சமுதாய முன்னேற்றத் திட்டங் களை செயல்முறையில் கொண்டு வந்தால்தான் மீனவச் சமுதாயம் முன்னேற அதிக வாய்ப்புள்ளது. நாடு முன்னேற சமுதாயம் முன் னேற வேண்டும். சமுதாயம் முன் னேற குடும்பம் முன்னேற வேண் டும். எனவே குடும்பத்தை நிர் வகிக்கும் மீனவப் பெண்கள் முன் னேறினால்தான் மீனவ சமுதா யம் முன்னேற்றம் அடைய இய லும் என்பதை ஐக்கிய நாடு களின் உணவு மற்றும் விவசாய அமைப்புக்கூட வலியுறுத்தி கூறி யுள்ளது.

ஆகவே மீனவ சமுதாயம் முன்னேற அடிப்படையான மீனவப் பெண்களின் பொருளா தாரத்தை நல்ல நிலையில் கொண்டு வர அரசு புதுத் திட் டங்களைச் செயல்படுத்த இசைந் துள்ளது.

அநேக மீனவக் கிராமங்களில் பெண்கள் அவர்களே ஊக்கமாக செய்யக் கூடிய தொழில்களை அபிவிருத்தி செய்து, புதுத தொழில்களில் பயிற்சி கொடுத்து அவர்களது ஒய்வு நேரத்தில் உப யோகமுள்ள தொழில்களில் ஈடு



படுத்தினால், மீனவ குடும்பங் களின் வருவாயைப் பெருக்கவும் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும் வாய்ப் புள்ளது.

பெரும்பாலான மீனவர்கள் அன்று தொட்டு இன்று வரை நாளை என்று ஒன்று இருப்பதை மறந்து, தினந்தோறும் கிடைக் கும் வருவாயை அன்றே செலவு செய்துவிட்டு அதிக வட்டிக்குக் கடன் வாங்கி அல்லல்படும் நிலையை இன்றும் காணலாம். எனவே அவர்களிடையே சேமிப்புப்பழக்கத்தை ஊக்கு வித்து கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் பெறதிட்டமிட்டுள் ளது.

மேலும், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னும் கருத் தினை மீனவப் பெண்களிடையே வலியுறுத்தி, அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பண் டங்களை விநியோகிக்கவும், மற் றும் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் குறைந்த லாபத்திற்கு விற்று அந்த லாபத்தை அவர்கள் அடையவும் மீனவ மகளிருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தமிழகஅரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக, செங்கை மாவட்டத்தில் திருச்சி னாங்குப்பத்திலும்,தஞ்சைமாவட் டத்தில் கரையூர் தெருவிலும், மற்றும் நெல்லை மாவட்டத்தில் தருவைக் குளத்திலும் தனித்தனி யாக மீனவ மகளிர் கூட்டுறவு சங்கம், அமைக்க அரசு அனுமதியளித்துள்ளது. மீனவ மகளிர் அருகிலுள்ள அங்காடி களுக்கு மீன் விற்பனை செய்யமீன் களை எடுத்துச் செல்ல மூன்று சக்கர வண்டிகளை அளிக்கவும், மீன்களைப் பதப்படுத்தி நவீன முறையில் விற்பனை செய்ய பயிற்சியளிக்கவும், மற்ற கை வினைத் தொழில்களில் பயிற்சி யளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வழி வகுக் கப்பட்டுள்ளது.


இத்தகைய சீரிய நோக்கங் களுக்காகச் செயல்படவும், மீனவ மகளிர்க் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து, கூட்டுறவின் பலன்களை அடைய வும் பல மீனவ மகளிர் உற்சாகத் தோடு முன் வந்துள்ளனர். செங்கை மாவட்டம் திருச்சினாங் குப்பத்தில், திருச்சினாங்குப்பம் பெரிய பாளையத்தம்மன் மீனவ மகளிர்க்கூட்டுறவுச் சங்கம்கடந்த 18.9.81 அன்று பதிவு செய்யப் பட்டு 22.8.81 முதல் 260 உறுப் பினர்களோடும் ரூ. 2,500-பங்கு தொகையோடும் இயங்கி வரு கிறது. அரசு ஆணையில் அனு மதிக்கப்பட்டுள்ள ரூ. 5,000- பங்குத் தொகை உதவியைத்தவிர ரூ. 20,000 முதல் உதவிக்கடன் (Working Capital loan)மேற்கண்ட மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத் திற்கு அளிக்ககோரப்பட்டுள்ளது. இத்தொகைகளைக் கொண்டு முதற் தவணையாக 200 மீனவ மகளிருக்கு ரூ. 100- வீதம் குறைந்த வட்டியில் மீன் விற் பனை செய்யக் கடன் உதவி அளிக் கவும், அத்தியாவசியப் பொருட் களான மண்ணெண்ணெய், சர்க் கரை, அரிசி முதலியவைகளை மகளிர்க் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அளிக்கவும், அரசு கட்டுப் பாடுத் துணிகளை ( Controlled clothes) சங்கத்தின் மூலம் அளிக்க கவும் ஏற்பாடுகள் நடந்து வரு கின்றன. நெல்லை மாவட்டத் தில் தருவைக்குளத்தில் 6.10.81 அன்றும் தஞ்சை மவட்டத்தில் கரையூர் தெருவில் 16.10.81 அன்றும் மகளிர் கூட்டுறவுச் சங் கங்கள் பதிவு செய்யப் பட்டுள் ளன.

மீனவப் பெண்கள் பொருளா தாரத்தில் முன்னேற்றம் அடைந் தால், சமுதாயத்திலும் முன் னேற்றம் அடைவார்கள். இது போல் ஒருங்கிணைந்த திட்டங் களினால் மீனவப்பெண்கள் மட்டு மல்லாமல் மீனவ குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ப தில் சந்தேகமில்லை. மீனவ மகளிர்க் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவச் சமுதாய முன்னேற்றத் திற்கு ஏணிப்படியாக அமையும் என்பது உறுதி.



## அதியமான் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டுக் கண்டுபிடிப்பு






ஔவையாருக்கு நெல்லிக்கனி ஈந்து அழியாப்புகழ் பெற்ற சங்ககால வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தென்னார்க்காடு மாவட்டம் ஜம்பை என்ற ஊரில் இப்பொழுது கண்டுபிடித்துள்ளது. இந்தக் கல்வெட்டு தமிழக வரலாற்றுக்கு அரும் செய்திகளை அள்ளிக் கொடுக்கும் ஒப்பற்ற கண்டுபிடிப்பாகும். ஜம்பையில் இயற்கையாக அமைந்த குகைத்தளத்தில் நெடுமான் அஞ்சி பாழி ஒன்று அமைத்துக் கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

இந்தக் கல்வெட்டை தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டு நிறுவனத் தைச் சார்ந்த மாணவர் திரு. செல்வராஜ் என்பவர் கண்டுபிடித்தார். இக்கல்வெட்டை டாக்டர் இரா. நாகசாமி தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் நேரில் சென்று வாசகங்களைப் படித்தார். ''ஸதியபுதோ அதியன் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி'' என்றுள்ள அக்கல்வெட்டு கி. பி. முதல் நூற் றாண்டுத் தமிழ் எழுத்துக்களில் உள்ளது. அதிய மான் நெடுமான் அஞ்சியைக் கல்வெட்டு 'ஸத்ய புத்ரன்' என்று அழைக்கிறது. மௌரியப் பேரரசன் அசோகன் தனது கல்வெட்டில் சோழரையும், பாண்டியரையும், கேரளரையும், ஸத்ய புத்ரரையும் குறிக்கிறான். இந்த 'ஸத்ய புத்ரர்' யார் என்று இதுவரை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு உண்டு. ஒருசிலர் மட்டும் ஸத்ய புத்ரர் அதியமானாக இருக்கலாம் என்று கருதினர். இக்கல்வெட்டு அசோகன் கூறும் ''ஸத்ய புத்ரர்கள்'' அதியமான் மரபினரே என்பதை உறுதி செய்கிறது. சங்ககால வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி பாழி அமைத்துக் கொடுத்துள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்தி.

இதோடு இந்தப் பாறைக்கு அருகில் முதல் பராந்தக சோழனுடைய கல்வெட்டு ஒன்று உள்ளது. கி. பி. 947-ஆம் ஆண்டில் இக் கல்வெட்டில் சிவஞான செம்மல், செம்பியன் மாதேவியின் கணவர் கண்டராதித்த சோழ ருக்கு இம்மலை மேல் அதீதகரம் (சமாதிக் கோயில்) எடுக்கப்பட்டது என்று இக்கல்வெட்டு கூறுகிறது. கண்டராதித்த சோழனுக்கு மேற்கு எழுந்தருளின தேவர் என்ற பட்டப்பெயர் உண்டு. இதுகாறும் அவர் எங்கு இறந்தார் என்பது தெரியவில்லை. இக் கல்வெட்டின் மூலம் அவர் ஜம்பையில் இறந்தார் என்பது தெரிகிறது. இவ்வூரில் கோட்டைமேடு என்ற பகுதி ஒன்று உள்ளது. கோட்டை செங்கல்லால் ஆனதும், அகண்ட அகழியும் கொண்ட பரப் பான மேட்டில் உள்ளது. பல சோழர்காலப் பொருள்கள் கிடைக்கின்றன. சோழர்காலக் கோட்டை அமைப்பாகத் தென்படுகிறது. முத லாம் ராஜராஜ சோழன் காலத்தில் நித்த விநோத புரம் என்று இவ்வூர் அழைக்கப்பட்டது. 11-ஆம் நூற்றாண்டின் மத்தியில் வீர இராஜேந்திரபுரம் என அழைக்கப்பட்டது. இதிலிருந்து சோழர்கள் அப்பயிர் ஜம்பை ஒரு எல்லை பாதுகாப்பு இட மாக இருந்திருக்கிறது எனத் தெரிகிறது. இங்கு பண்டைய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன என டாக்டர் இரா. நாகசாமி கூறுகிறார்.



# அமோக விளைச்சலுக்கு





## உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001




HTM-MFL-2526


# சென்னைப் பெருநகருக்கு அதிக அளவு நீர்


வே. வரதராசன்

பொறியியல் இயக்குநர்

சென்னைப் பெருநகர் குடிநீர்
வழங்கல் கழிவு நீரகற்று வாரியம்.



**1981**-ஆம் ஆண்டில் சென்னை நகரில் வாழும் சுமார் 32.5 இலட்சம் மக்களும், நாளொன்றிற்கு 220 மில்லியன் லிட்டர் குடிநீரை, பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகிய நீர் நிலைகளிலிருந்து பெற்று வருகின்றனர் இதன்றியும் நகரிலுள்ள தொழிற்சாலைகளின் உபயோகத்திற்குத் தனியே நாள்தோறும் 50 மில்லியன் லிட்டர் நிலநீர் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் நீர் ஒவ்வொரு நபருக்கும், நாளொன்றிற்கு 70 லிட்டர் என்ற அளவில் அமைகிறது. இந்த அளவு, சென்னைப் போன்ற தலைநகரங்களில் வாழும் மக்களுக்கு முற்றிலும் போதுமானதல்ல. பெங்களூர், பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற மாநகரங்களில் வழங்கப்படும் நீரின் அளவை ஒப்பு நோக்கின் இங்கு வழங்கப்படும் நீரின்அளவு மிகவும் குறைவென்பது தெரியவரும். இம்மாதிரி நகரங்களுக்கு நம் நாட்டு மத்திய அரசின் பொறியியல் நிபுணர்கள் வகுத்துள்ள தர நிர்ணயப்படி, நபரொன்றிற்கு சுமார் 145 லிட்டராவது வழங்கப்பட வேண்டும்.

கி.பி. 2002-இல் சென்னை நகரில் மட்டும் மக்கட் தொகை 40.59 இலட்சமாகப் பெருகக்கூடும் என்றும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அடிப்படையில் சேரும் புறநகர்ப் பகுதிகளும் இணைத்தால், சென்னைப் பெருநகரின் மக்கட் தொகை 69.72இலட்சம் ஆகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களனைவர்க்கும், நாள்தோறும் 145 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க, 1294 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படும். இப்போதிருக்கும் மக்களுக்கும், குறைந்தது ஒவ்வொருவர்க்கும் 93 லிட்டராவது நாள்தோறும் வழங்கினாலேயே அது அவர்கள் தேவைகளுக்கு ஓரளவு போதுமானதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகையால், நகரின் நீர்வழங்கு ஆதார நிலைகளை அதிகரிப்பது உடனடிப் பணியாகிறது.

நீண்ட கால அடிப்படையில், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குதலை அதிகரிக்கும் பல்வேறு திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. ஆனால் எந்தவிதத்திலாவது உடனடியாக நீரின் அளவை அதிகரித்து நகருக்கு வழங்கவேண்டும் என்பதில் தீவிர கவனம் செலுத்தித் தமிழக அரசு அரசாணைபடி தாமரைப்பாக்கம் நிலத்தடி நீரை கொணர்ந்து சென்னை நகருக்கு வழங்குவதற்காக ரூ. 121 இலட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு ஆணை பிறப்பித்தது.

### திட்ட விவரம்

தாமரைப் பாக்கம் பகுதியில் உள்ள ஆழ் துளைக்கிணறுகளிலிருந்து மணலி தொழிற் கூடங்களுக்கு நிலத்தடி நீரை எடுத்துச் செல்வதற்காக ஏற்கனவே பதிக்கப்பெற்றுள்ள 600 மி.மீ. விட்டம் உள்ள வலுவேற்றப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் குழாய்கள் சுமார் 35 கி.மீ. தூரத்திற்கு போடப்பட்டுள்ளன. இந்த குழாய்கள் மணலி அருகில் முடிவடைகின்றன. இந்த இடத்திலிருந்து சென்னை நகரின் வட பகுதிக்கு 80 இலட்சம் காலன் தண்ணீரை கொண்டு சென்று மக்களுக்கு வழங்குவதே இத்திட்டமாகும். மேலே கூறிய இடத்திலிருந்து இதற்காக 750 மி.மீ. (2½ அடி) விட்டம் உள்ள வார்ப்பு இரும்புக் குழாய்களின் வழியாக அண்ணாபூங்காவிலுள்ள நீர்த்தேக்கங்களுக்கு தண்ணீர் கொண்டு வரப்படும். இக்குழாய்களின் நீளம் 8.8 கி.மீ. இது வரும் வழியில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கில் இதற்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு பாலத்தின் மூலம் இக்குழாய்கள் கடந்து வருகின்றன. மேலும் வரும் வழி





சூட்டப்படப்போகிற கீர்த்தி கிரீடத்தை வாழ்ந்த போதே பார்க்கக் கொடுத்து வைத்த கவிஞர்களில் அவரே தலையானவர்.

மற்றவர்கள் சரித்திரம் படித்தவர்கள். கவிஞர் சரித்திரமே படைத்தார். பள்ளியிறுதி பார்க்காத அவர், பழந்தமிழ்ச்சாறைப் பருகி புதுத் தமிழ் பொழிய வாழ்ந்தார் என்பது அதிசயமாகவே இருக்கிறது.

அவர் சொன்னால் கவிதை—அவர் சொன்னதெல்லாம் கவிதை என்று வாழ்ந்தவர் அவர்.

இலக்கியம் படைக்க முடிந்தவர்களால் எளிதான கவிதைகளைப் படைக்க முடிந்ததில்லை! இந்த இலக்கிய வேலி கவியரசு காலத்திலேதான்—அவராலேதான் வீழ்த்தப் பட்டது.

'மாங்கனி' போன்ற காவியங்களை எழுதிய அவரது கரமே கோடிக்கணக்கானவர்கள் கேட்டு மகிழ்கின்ற எளிதான, இனிமையான திரைப் படப் பாடல்களையும் எழுதியது.

திரைப்படப்பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சிக்குரிய அற்புதங்களானதற்கு அவரே பெருங்காரணமாக இருந்தவர்.

அருவிநடை - ஆன்றபுலமை - அன்புள்ளம்- பிள்ளைமனது-உயர்ந்த சிந்தனை-உலகளாவிய பார்வை இதுதான் கவியரசு கண்ணதாசன்.

பாரதி நூற்றாண்டு விழாக்காணுகின்ற இந்த ஆண்டில், இந்த மாபெரும் கவிஞரின் மறைவு நம்மை வாட்டுகிறது.

நூறு கவிஞர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய இலக்கியப்பணியைக்கவிஞர் அவர்கள் ஒருவரே செய்தார்.

எப்போதோ ஒருமுறை தோன்றுகின்ற இதிகாசக் கவிஞர் அவர்.


அவரது பிரிவால் வாடுகின்ற குடும்பத் தினருக்குத் தமிழக அரசின் சார்பாகவும் எனது சார்பாகவும் கழகத்தின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழிகின்ற விழிநீரைத் துடைத்துக் கொண்டு அமரத்துவம் பெற்றுவிட்ட அந்த அழியாத கவிஞனின் கலை இலக்கியத் தொண்டினை உலகமெல்லாம் போற்றச் செய்வோம்.

வாழ்க கவியரசு கண்ணதாசன்! வளர்க அவர்தம் நீடு புகழ்!!.

(கவியரசு கண்ணதாசன் அவர்கள் மறைவு குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விடுத்த இரங்கற் செய்தி)






# தோல் தொழில் வளர்ச்சி பெற...

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி





சிறு தொழில் துறையில் தரமான தோல் தயாரிப்புக்குப் பொதுவான வசதிகளைக் கொண்ட சேவைநிலையங்களைத் தமிழ்நாட்டில் நிறுவ அரசு உத்தேசித்திருக்கிறது. இத்தகைய சேவை நிலையங்களை அமைப்பதற்கு அரசு, ''வர்த்தகக் கார்ப்பரேஷனின் தோல் வளர்ச்சி நிதியிலிருந்து ''ரூ.25 இலட்சம் நிதிவசதி அளிக்கப்படும். அத்துடன் கூட்டுறவுச் சேவை சங்கங்களுக்குப் பங்குமூலதனம் வழங்குவதன் மூலம் மாநில தொழில் முதலீட்டுக் கழகத்தின் கடன் வசதி மூலமும் இதற்குத் தமிழக அரசு உதவும். ஏற்கெனவே இப்படிப் பட்ட ஒரு சேவை நிலையம் வாணியம்பாடியில் நிறுவப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள சுமார் 60 தோல் பதனிடும் சிறு ஆலைகளுக்குத் தோல் பதனிடும் வேலையில் இது உதவிகரமாக இருக்கும்.



**இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள்**

திண்டுக்கல், ராணிப்பேட்டை, பேரணாம்பட்டு ஆகிய இடங்களிலும் இந்த நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதனிடும் வேலையில் செலவைச் சமாளிப்பதற்குச் சிறு ஆலைகளுக்கு இந்த நிலையங்கள் மிகவும் வசதியானவை.

நாட்டில் உற்பத்தியாகும் தோல்; தோல் பொருட்களின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 77 சதவிகிதம் சென்னை துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் 400 பதனிடும் ஆலைகள் உள்ளன. இதில் ஒரு இலட்சம் பேர்க்கு மேல் பணிபுரிகிறார்கள். இவை தவிர, கிராமங்களில் சிறு அளவில் பதனிடும் தொழிலும் நடக்கிறது.

இந்த ஆலைகளால் தண்ணீர் அசுத்தம் அடைகிற நிலையிலும் உள்ளது. சென்னையிலுள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் இதற்கான ஒரு மாதிரித் திட்டத்தைத் தமிழக அரசு தயாரித்திருக்கிறது.

**தமிழகத்தில் தலைமையகம்**

மத்திய அரசின் அமைப்பான பாரதத் தோல் தொழில் கார்ப்பரேஷன் தனது தலைமையகத்தை தமிழகத்தில் வைத்திருந்தால், தமிழகத் தோல் தொழிலுக்கு நேரடியாகப் பயன் ஏற்படும். அது முடியாவிட்டாலும் ஒரு மண்டல அலுவலகத்தையாவது அமைத்து இத்தொழிலின் வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கலாம்.

முறையான நிறுவனமாக இல்லாத சிறு தோல் பதனிடும் ஆலைகளுக்கு உதவ மத்திய அரசின் நிறுவனத்தை அமைக்க வேண்டும்.

(டெல்லியில் 15.10.81 அன்று நடந்த தோல் தொழில் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து)



# வளரும் தமிழகம்

## சமுதாய வளர்ச்சியில் ஆலயங்கள் ஆற்றிடும் அரும்பணிகள்



வளரும் தமிழகம் என்ற தலைப்பில், தமிழக அரசு என்னென்ன திட்டங்களைத் தமிழகம் வளர்வதற்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்று விளக்குகிற வரிசையில், சமுதாய வளர்ச்சிக்கு ஆலயங்கள் ஆற்றும் பணி பற்றி, விளக்குகிற பொறுப்பை எனக்களித்திருக்கிறார்கள்.



கல்வி, மருத்துவம், தொழில் வேலை வாய்ப்பு, வேளாண்மை, ஏழ்மையைப் போக்குதல், போன்ற பணிகளில் திட்டமிட்டு, தமிழக அரசு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையில் ஆற்றிவரும் அரும் பணிகளை விளக்க வேண்டிய தலைப்பில் ஆலயங்கள் ஆற்றும் பணி பற்றி எடுத்துச் சொல்வது, ஒரு புதிய கோணத்தில், சமுதாயத்திற்கு அரசு ஆற்றும் பணி ஆலயங்களின் மூலம் எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஆலயங்கள் என்பதும், ஆன்மீகநெறி என்பதும், சமுதாய வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது என்கிற கருத்து எடுத்து வைக்கப்படுகிற இந்தக் காலத்தில், ஆன்மீக நெறியும், ஆலயங்களின் பணியும் சமுதாயத்தோடு இணைந்ததுதான் என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய கடமையும் எனக்குத் தரப்பட்டுள்ளது. ஆராய்ச்சி அறிவும், ஆன்மீக நெறியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல. ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு நிலைத்து நிற்கின்றன என்ற கருத்து நீண்டகாலமாக இருந்துவருகிறது. உலகம் இயங்குவதற்கு அடிப்படை ஆதாரம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள்தான் என்ற கருத்தை ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னால் ஆன்மீக நெறியாளர்கள் சொன்ன கருத்துத்தான் இன்றுவரை ஆராய்ச்சியாளர்களால், விஞ்ஞானிகளால் அடிப்படையாகப் போற்றப்பட்டு வருகின்றது. ஆன்மீக நெறியாளர்கள் சொன்னதற்கும் மேலாக ஆறாவது அடிப்படைப் பொருள் இருப்பதாக இதுவரை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்கவில்லை. விஞ்ஞானம் தோல்வியுறுகிற இடத்திலிருந்து ஆன்மீக உணர்வு ஆரம்பமாகிறது. அல்லது விஞ்ஞானத்திற்குச் சந்தேகம் தோன்றுகிற இடத்திலிருந்து ஆன்மீக உணர்வு பிறக்கிறது என்ற கருத்தும் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர்**

**திரு. இராம. வீரப்பன்**

எனவே இறைவழிபாடு அல்லது ஆலய வழிபாடு என்பது மனித சமுதாயத்தில் ஆதி காலந்தொட்டே ஏற்பட்டுவிட்ட ஒன்று என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்தகைய இறைவழிபாட்டுக்கும் தமிழன்தான் ஒரு நல்வழி காட்டி, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற இலக்கணத்தை வகுத்திருக்கிறான்.

சுமார் 3,000 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் தமிழ்ப் பெரும் இலக்கண நூலில், 'கோயில்' என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அக்கோயில்களில் தெய்வத் திருவுருவங்களான 'படிமைகள்' என்னும் விக்கிரகங்கள் வைத்து வணங்கப்பெற்று வந்தமை பற்றிய குறிப்பும் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. அரசனும், மக்களும் மேற்கொள்வதற்குரிய பணிகளுள், அறநிலையங்களையும், அவற்றில் நடைபெறும் அறச்செயல்களையும் அவைகள் சரியாக நடைபெறுகின்றனவா என்று மேற்பார்வையிட்டுக் கண்காணித்துப் பாதுகாப்பதற்குரிய கடமையாக 'அறப்புறங்காவல்' என்னும் தலைப்பில் தொல்காப்பியம் சிறப்பாகக் கூறுகின்றது.

உலகிலேயே கட்டடக் கலையில் ஒப்பற்றவர்கள் என்ற பெருமையையும், கோபுரம் கட்டுவதில் தலைசிறந்தவர்கள் என்ற பெருஞ்சிறப்பையும், ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தில் தமிழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற அளவுக்கு நமது முன்னோர்கள் நமக்கு ஆலயங்களின் மூலம் அரும்புகழை ஈட்டித் தந்துள்ளனர்.

தொன்றுதொட்டே தமிழ்நாட்டில், அறநிலையங்களாகிய திருக்கோயில்கள், பொதுமக்களின் சமுதாய வாழ்க்கையில், பல துறைகளில், ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகின்றன. பண்டைக் காலம் முதலே, தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் இறைவழிபாட்டுத் தலங்களாக மாத்திரமின்றி, அறிவு புகட்டும் கல்விக் கூடங்களாகவும், இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளை வளர்க்கும் பல் கலைக் கழகங்களாகவும் விளங்கி வந்துள்ளன. மேலும், அவைகள் நூலகங்களாகவும், நீதி மன்றங்களாகவும் இருந்து வந்திருக்கின்றன; ஆவணக் காப்பகங்களாகவும், அறச்சாலைகளாகவும் பயன்பட்டன. பிணியாளர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கிப் பணிபுரிந்தன; தம்மைச் சார்ந்துள்ள மக்களுக்குப் பலவகைத் தொழில் தரும் நிறுவனங்களாக இயங்கி வந்தன. இக்காலத்தில் உள்ள வங்கிகளைப் போன்று, அவைகள் பணம் கொடுத்தும், வாங்கியும், பொதுமக்களுக்கு உதவி புரிந்தன. போர்க்காலத்தில் பாதுகாப்பு அரணாகவும், படைவீடுகளாகவும் பயன்பட்டன. இதனால்தான் நமது தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள், 'அறநிலையங்கள்' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றன. கோயில்களை மையமாகக்கொண்டே, தமிழ் மக்களின் சமுதாய வாழ்க்கை அமைந்துள்ளது.

இத்திருக்கோயில்களுக்குப் பெருவேந்தர் பலரும் ஆர்வத்தோடு திருப்பணிகள் செய்தனர்; நன்கொடை, மானியங்கள், நிவந்தங்கள் அளித்தனர். ஆங்கிலேயர்களுள் பலருங்கூட திருப்பணிகளைச் செய்து, நன்கொடைகளை வழங்கியுள்ளனர். திருப்பணி செய்வதன் சிறப்பையும், கடமையையும் விளக்கும் முறையில் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் தென்காசிக் கோயிலைக் கட்டுவித்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவன், தான் 17 ஆண்டுகள் அரிதின் முயன்று, சிற்பக்கலை நலம் பெரிதும் சிறக்கக் கட்டிய கோயிலைப் பற்றித் தன் மரணப் படுக்கையிலிருந்து பாடிய பாடல், கருங்கல் மனத்தையும் கரைக்க வல்லதாகும்.

''இத் தென்காசி ஆலயம், என் ஆற்றலை மட்டும் நம்பிக் கட்டப்பட்டதல்ல ; தெய்வச் செயலாலே அமைந்தது. இதனை இன்னும் விரிவு செய்து, போற்றுகின்ற பெருமக்களை, அவர்களின் திருவடிகளிலே விழுந்து நான் வணங்குகிறேன்'' என்னும் பொருள்பட—


''சேலேறிய அயல் தென்காசி ஆலயம்
தெய்வச் செயலாலே சமைந்தது;
இங்கென் செயலல்ல; அதனை இன்னும் மேலே
விரிவுசெய்தே
புரப்பார் அடிவீழ்ந்து அவர்தம்பால் ஏவல்
செய்து
பணிவேன் பராக்கிரம பாண்டியனே''—

எனத் தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டியன் பாடிய உருக்கம் மிகுந்த கல்வெட்டுச் செய்யுளும்,

''இந்த அறம் காப்பவர்களின் அடி, என் முடிமேலது'' என்று கூறும் தஞ்சை இராசராசப் பெருவேந்தருடைய கல்வெட்டும், நம் கோவில்களை நாம் போற்றிக்காத்து வளர்த்து வரவேண்டிய பொறுப்பையும், கடமையையும் நமக்கு உணர்த்துகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, கோயில்களை நிருவகித்து வந்தவர்களில் பலர் ஆலயங்களின் வருவாயை நன்முறையில் பயன்படுத்தாமல், வீணடிப்பதை அறிந்து, அரசாங்கமே அறநிலையங்களில் தலையிட முற்பட்டது. எனினும் சமயச்சார்பு வாய்ந்தவர்கள், அவ்வச்சமய நிறுவனங்களை நிருவகித்து வந்தால் போதுமென்று பிறகு கருதினார்கள். அப்போதும் பலன் ஏற்படவில்லை. இப்படிப்பட்ட இடையூறுகளுக்குப் பின்னால், அறநிலையங்கள் நல்லமுறையில் இயங்கவும், பொதுச்சொத்துக்கள் காக்கப் படவும் ஆலயங்களில் வழிபாடுகள் முறையாக நடத்தப்படவும், விதிமுறைகளும், சட்டங்களும் இயற்றப்பட்டு அறநிலையத்துறை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இன்று, தமிழக இந்து சமய அறநிலையத்துறையின் ஆணைக்குட்பட்ட ஆலயங்கள் அறநிலையங்கள் சுமார் 33,620 ஆகும். இந்த அறநிலையங்களுக்குச் சொந்தமான நஞ்சை புஞ்சை நிலங்கள் 5 இலட்சம் ஏக்கர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை தவிர ஆயிரக் கணக்கான கட்டிடங்கள், காலிமனைகள் உடைமைகளாக உள்ளன. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும், அறநிலையங்களின் ஆண்டு



யில இக்குழாய் மூன்று இடங்களில் இருப்புப் பாதைகளைக் கடந்து அண்ணா பூங்காவிற்கு வந்து சேருகிறது. அவ்வாறு கொண்டு வரப்பட்ட தண்ணீர் குளோரின் வாயு கலக்கப்பட்டு பொதுமக்களின் உபயோகத்திற்குப் பல்வேறு அளவுள்ள குழாய்கள் வாயிலாக இறைத்து வழங்கப்படும். இத்திட்டத்தினால் சென்னை மாநகராட்சிக் கோட்டங்கள் 2லிருந்து 21ம் 45-ஆவது கோட்டமும் சேர்ந்த வட சென்னையிலுள்ள பகுதிகளான வண்ணையம்பதி, இராயபுரம் மற்றும், தண்டையார்பேட்டையில் வாழும் சுமார் 4.5 இலட்சம் மக்கள் பலன் பெறுவார்கள். மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் மொத்தத்தில் சென்னை நகரத்திற்கு புழலேரியிலிருந்து கொடுக்கப்படும் நீரில் 16% அதிகரிக்கப்படுவதால் மற்ற இடங்களுக்கும் நீர் வசதி அபிவிருத்தி அடையும். மொத்த தூரத்திற்கும் குழாய்களின் மூலமாகவே தண்ணீர் கொண்டுவரப்படுவதால் சேதாரம் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் போதே வேறு ஒரு திட்டமும் இயக்கி வைக்கப்படுகிறது. அது, ஒருங்கிணைக்கப்பட்ட நகர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ஐ.சி.டி.பி.) மண்டலக் குடிநீர் வழங்கு முறையின் ஒரு மேம்பாட்டுப் பணியாக நாள் ஒன்றுக் 3 மில்லியன் காலன் தண்ணீர் வழங்குவதற்கு போதுமான கொள்ளளவு உடைய கீழ்நிலை தொட்டிகளையும், நீர் இறைக்கும் குழாய்களையும், நீர்இறைக்கும் நிலையத்தையும் அதற்குரிய இயந்திர சாதனங்களையும் அண்ணா பூங்காவில் அமைப்பதாகும். இதனுடைய மதிப்பீடு ரூ. 56.84 இலட்சம்.

ஏற்கெனவே அண்ணா பூங்காவில் இருக்கும் 20 இலட்சம் காலன் நீர்நிலைத் தொட்டிகள் மற்றும் நீரிறைக்கும் எந்திரங்களின் திறனோடும் புதிதாக அமைக்கப்பட்ட மேற்கூறியவை இணைந்து செயல்படும்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் வாயிலாக, அண்ணா பூங்காவில் கட்டப் பெற்றுள்ள பழைய மற்றும் புதிய தரைமட்டத் தொட்டிகளில் நாளொன்றிற்கு 50 இலட்சம் காலன் நீரையும், மேல் நிலைத் தொட்டியில் நாளொன்றிற்கு 5 இலட்சம் காலன் நீரையும் சேமித்துவைக்க இயலும். இத் தொட்டிகளில் உதவியோடு, இங்குள்ள நீரிறைக்கும் நிலையம், இப்பகுதி வாழ் மக்களுக்கு அதிக அளவு நீரை, உயர் அழுத்தத்துடன் வழங்க வகை செய்யும்.




## கம்ப்யூட்டர் மூலம் மொழி பெயர்ப்பு

ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளில், மொழிபெயர்க்கக் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி, இந்திய விஞ்ஞானிகள் முதன் முறையாகச் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

மனிதர்கள் உதவியுடன் இயந் திரங்கள் மொழிபெயர்ப்புச் செய் யும் திட்டத்தின் கீழ் 20 வரிகள் கொண்ட எளிய சொற்களை ஆங் கிலத்திலிருந்து இந்தி, இந்தியி லிருந்து கன்னடம் போன்ற மொழி களில் கம்ப்யூட்டர் மொழிபெயர்ப்பு செய்யத் துவங்கியுள்ளது.

பெங்களூரில் இந்திய விஞ்ஞானக் கழகம் இந்த ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ளது.





# மாநகராட்சியின் குடும்ப நல வெள்ளி விழாப் பணி

“திட்டமிட்ட குடும்பமே திகட்டாத இன்பம்”.
“அளவான குடும்பமே வளமான குடும்பம்”.

நி. வே. பாலு,
மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி.

இக் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு சென்னை மாநகராட்சி குடும்பநலப் பணியாற்றி வருகின்றது. 1981-மாநகராட்சியின் குடும்ப நலப் பணியின் வெள்ளிவிழா ஆண்டு. மாநகராட்சியின் ஆணையர் திருமதி யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. அவர்களின் நிருவாகத் தலைமையில் மாவட்டக் குடும்ப நல அலுவலர் சென்னை மாவட்டத்தின் திட்ட அலுவலராகப் பணியாற்றுகிறார். மாநகராட்சியின் கீழ் 24 குடும்ப நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1980-81ஆம் ஆண்டில் நடைபெற்ற குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் 20,328. பொருத்தப்பட்ட கருத்தடை வளையங்கள் 7,547.

மாநகராட்சியின் குடும்பநலப் பணி தாய்சேய் நலத்தை அடிப்படையாகக் கொண்டது. தாய்மைப்பேறு அடையவிருப்போருக்குத் தேவையான தடுப்பூசிகள், உயிர்ச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. குழந்தை பிறந்தபின் குழந்தையின் நலத்திலும் தாயின் நலத்திலும் நாட்டம் செலுத்தப்படுகிறது. முத்தடுப்பு ஊசி, இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து, காச நோய்த் தடுப்பு மருந்து இவையும் குழந்தையின் நலத்திற்குத் தேவையான சத்துணவும், வழங்கப்படுகின்றன. பிறந்த குழந்தைகளுக்கு 5 வயது ஆகும் வரை இலவச சத்துணவும், உயிர்ச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. குழந்தையைப் பெற்றெடுத்த தாயின் நலமும் நன்கு கவனிக்கப்படு [illegible] மருந்துக்களும் உயிர்ச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன [illegible]

குடும்ப நலத்தின் அவசியத்தை குடும்ப நலப் பணியாளர்கள் பெற்றோருக்கு விளக்குகிறார்கள். வீடுவீடாகச் சென்று குடும்ப நலக் கருத்துக்களைப் பரப்புகிறார்கள். தற்காலிகக் கருத்தடை முறைகளையும் நிரந்தரக் கருத்தடை முறைகளையும் மேற்கொள்ளச் செய்கிறார்கள். 1980 81ஆம் ஆண்டு பணியின் இலக்கை விட 101.1 விழுக்காடு அதிகமாக அறுவைச் சிகிச்சைகளும் 260.3 விழுக்காடு அதிகமான கருத்தடை வளையங்களும் பொருத்தப்பட்டுள்ளன. 1981-82ஆம் ஆண்டில் செப்டம்பர் முடியச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகள் 10,617. இது குறித்த இலக்கைவிட, 153.5 விழுக்காடு அதிகம். பொருத்தப்பட்ட கருத்தடை வளையங்கள் 3870 இதுவும் குறித்த இலக்கை விட 234.1 விழுக்காடு அதிகமாகும்.

தேசிய குடும்பநல இருவார விழாவின் மகளிர் நாள் சென்னை மாநகராட்சியாலும் குடும்பநலத் துறையினராலும் சேர்ந்து 29.10.81ஆம் நாள் இராஜாஜி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. மேதகு ஆளுநரின் துணைவியார் திருமதி சாந்தி சாதிக் அலி அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்கள். அவர் தமது உரையில் ‘நம்முடைய திட்டங்கள் எதிர்பார்த்த பயனளிக்காமைக்குக்காரணம் பெருகி வரும் குடும்பமே’ என்பதைத் தெளிவாக விளக்கினார். பெண்களே குடும்ப நலத்தின் கண்கள். அவர்களுடைய உடல் நலம், சமூக நலம், பொருளாதார மேம்பாடு இவை யாவும் அளவான குடும்பத்தால் அமைவுறும் என்பதைத் தெளிவுபடுத்தினார்.

ஹண்டே அவர்கள் விழாவில் சிறப்புரையாற்றிக் குடும்ப நலப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கினார்கள். மாண்புமிகு அமைச்சர் தம் நல்லுரையில் ஆண்களுக்கான ‘வாசக்டமி’ அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை அருகி வருவதைக் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார். அதை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்றார். மேலும் மகளிர்க்கான அறுவைச் சிகிச்சை ‘லாப்ரோஸ்கோப்’ என்ற எளிதான முறையில் குறைந்த நேரத்தில் செய்யப்படுகின்றதை விளக்கினார். இதன் மூலம் சிறுதழும்பும் உடலில் தோன்றா வண்ணம் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது என்றார். பெருகி வரும் மக்கள் தொகை, திட்டங்களின் பயனை நுகர இயலாதவாறு செய்கிறது என்றார்.

கூட்டத்தில் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் பேசும் பொழுது ‘ஆண்களும் முழுமனதுடன் குடும்ப நலத்தில் ஈடுபட வேண்டும்’ என்றார். மாதர்சமூகப் பணி மன்றங்கள் இப்பணியில் ஈடுபட்டுப் பாடுபட வேண்டும் என்றார். சென்னை மாவட்ட ஆட்சியாளர் திருமதி. கரியாலி இ.ஆ.ப. அவர்கள், சமூகக் கண்ணோட்டத்தில் குடும்பநலக் கருத்தை விளக்கினார். பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாவிட்டால் பிரச்சினைகள் பெருகும். இடநெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், கல்விக் கூடங்களில் நெருக்கடி, அடிப்படை வசதிகள் போதாமை போன்ற பல் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும் எனக் கூறினார். சட்ட மன்ற உறுப்பினர் [illegible] சமரசம் அவர்களும் சிறப்புரையாற்றினார்.

## மாணவிக்கு முதல்வர் உதவி

சென்னை ஸ்டெல்லாமேரிக் கல்லூரியில் பி.எஸ்ஸி., மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவியான செல்வி ராதிகாவிற்கு (வயது 21) ரத்தத்தில் புற்றுநோய் காரணமாக தற்போது அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும், இதற்கான சிகிச்சைக் கட்டணத் தொகையான ரூ. 12,000-ல் ரூ. 8000/ ஐ மட்டும்தான் மாணவியின் பெற்றோரால் கட்ட முடிந்தது என ஒரு இதழ் மூலம் அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாணவியின் பெற்றோர் கட்ட வேண்டிய ரூ. 4,000/ ஐ உடனடியாக அரசே கட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளார்கள். மேலும் இந்த மாணவியின் சிகிச்சைக்காக ஆகும் அனைத்துச் செலவினையும் அரசே ஏற்கும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். செல்வி ராதிகாவின் தந்தை திரு எஸ். கோபாலகிருஷ்ணன் துங்கபத்திரா அணைக்கட்டுத்திட்டத்தில் ஸ்டோர் கீப்பராகப் பணி புரிந்து வருகிறார்.

வருமானம் சுமார் 16 கோடி ரூபாய்தான். இதில் பத்து ஆலயங்களில் மட்டும் சுமார் 5.5 கோடியும் 100 கோயில்களில் சுமார் 2.5 கோடியும் வருமானம் வருகிறது. இவை தவிர இவ்வளவு பெரிய சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் சுமார் 8 கோடிதான்.

இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் வருமானம் முறையாக வராததற்குக் காரணம், ஆலயச் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள், நியாயமான நிலக்குத்தகைகளை—கட்டிடம், மனை வாடகைகளைக் கொடுக்காமல் இருப்பதுதான் என்பதை வருத்தத்துடன் பொதுமக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும், கடந்த மூன்றாண்டுகளில், கடினமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வருமானத்தை உயர்த்துவதற்கான செயல்முறைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வளவு நெருக்கடிகளுக்கிடையேயும், கடந்த மூன்றாண்டுகளில் அறநிலையத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சுமார் 150 ஆலயங்களில் திருப்பணி முடித்து, குடமுழுக்குவிழா நடைபெற்றுள்ளது. மேலும் சுமார் 1,416 திருப்பணிகளுக்கும், 1,153 இதர வேலைகட்கும் அனுமதி வழங்கப்பட்டு சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவைதவிர, அறநிலையத்துறையின் கீழ் இயங்கிவரும் கல்வி நிறுவனங்கள்—44; பெண்கள் தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளி—1; அன்பு இல்லங்கள்—50; மருத்துவமனைகள்—24, இதைத் தவிர, ஆன்மீக நூல் வெளியீடுகள், நாதசுர, தவில் பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. பெரிய ஆலயங்களில் ஆண்டுக்கு 15 இலட்ச ரூபாய் செலவில், சுமார் 2,000 ஆதிதிராவிட, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மணமக்களுக்கு இலவசமாகத் திருமணங்களை நடத்தும் திட்டமும் நிறைவேற்றப்படுகிறது. அக்டோபர் 5-ஆம் தேதியில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணி சுவாமி திருக்கோயிலின் சார்பில் 101 மணமக்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்படவிருக்கிறது. சாதி வேறுபாடுகளை ஒழித்து சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்துகிற இடமும், ஆலயங்கள்தான்; ஆண்டவன்முன் அனைவரும் சமம் என்ற தத்துவம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையொட்டித்தான் கடந்த ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று தமிழகம் முழுவதும் சுமார் 5,000 திருக்கோயில்களில் 10 இலட்சம்மக்கள் கலந்து கொண்ட சாதிவேறுபாடற்ற பொது விருந்தும், சிறப்பு வழிபாடும் நடத்தப்பட்டன.

இவை அனைத்தும் சமுதாய வளர்ச்சிக்கு அறநிலையங்கள் ஆற்றும் பணியாகும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில்களுக்குத் திருப்பணி தேவையா என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். கோயில்களின் திருப்பணி என்பது, நமது முன்னோர்கள் ஏற்படுத்திய கலைச் செல்வங்களாம் ஆலயங்களைக் காப்பாற்றுவது மாத்திரமின்றி, திருப்பணியின் மூலம் செலவிடப்படும் கோடிக்கணக்கான ரூபாய்களில் பெரும் பகுதி கட்டிடச்சிற்பக் கலைஞர்கட்கு வாழ்வளித்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் சமுதாயப் பணி என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இவை தவிர தமிழகம் முழுவதும், சிற்றூர் பேரூர்களிலெல்லாம் எங்கெங்கே வசதி இருக்கிறதோ, அந்த ஊர்களில் எல்லாம், ஆலயங்களின் சார்பில் திருமணக்கூடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளன.


ஆதிதிராவிட மக்கள் தாங்கள் வாழும் குடியிருப்புப் பகுதியில், கிராமக் கோயில்கள் வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கின்றனர். அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் சார்பில் கட்டிக் கொடுக்கவும், ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கிவரும் 'அண்ணாவின் அரசு' அறநிலையங்கள் மூலமாகவும், தமிழகத்தின் மரபுப்படி, சமுதாயப் பணிகளை நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

[மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 4-10-81 அன்று 'வளரும் தமிழகம்' என்ற நிகழ்ச்சியில் ''சமுதாய வளர்ச்சியில் ஆலயங்கள் ஆற்றும் அரும்பணிகள்'' என்ற தலைப்பில் சென்னை வானொலியில் ஆற்றிய உரை.]

# புதிய தொழில் துவங்க போதிய வசதிகள்



**12-10-1981** காலை பம்பாயில் அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் சங்கக் கூட்டத்தில் தமிழக தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அக்கூட்டத்தில் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த சுமார் 100 தொழில் அதிபர்கள் கலந்து கொண்டனர். தமிழக தொழில் அமைச்சருடன் தமிழக தொழில் துறை செயலர் திரு சி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்.' தமிழக தொழில் அபிவிருத்திக் கழகத்தின் (சிப்காட்) தலைவர் திரு கீதா கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். தமிழக தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டிட்கோ) நிர்வாக இயக்குதர் திரு வெங்கடேசன், ஐ.ஏ.எஸ். மற்றும் தொழில் அபிவிருத்திக் கழகத்தின் பொது மேலாளர் திரு மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொழில் அமைச்சர் பேசியதாவது:

''தமிழகத்தில் வேகமாக தொழில் வளர்ச்சியை உண்டாக்க விரும்பும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பில் உங்களையெல்லாம் தமிழகத்திற்கு வருகை தந்து, தமிழக அரசு உருவாக்கி கொடுத்துள்ள சாதகமான வசதிகளை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு தொழில் துவங்க அழைக்கிறேன்.'

தமிழக அரசு புதிதாக தொழில் வளர்ச்சியை பெருக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அமைச்சர் தொழிலதிபர்களுக்கு விளக்கிக் கூறினார். குறிப்பாக

1. ரூபாய் 1 கோடி வரையிலான வட்டியில்லா விற்பனை வரிக்கடன் திட்டம்.
2. 5 ஆண்டுகளுக்கு தமிழகத்தின் 5 தொழில் இணையங்களில் துவங்கப்படும் தொழில்களுக்கு மின்வெட்டு இல்லை என்ற மகிழ்ச்சியான திட்டம்.
3. எலெக்ட்ரானிக், மருந்துப் பொருட்கள், மற்றும் ஆட்டோமோபைல் உதிரி பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள் தமிழகத்தில் எங்கு துவங்கினாலும் அதற்கான தனிச் சலுகைக்கான திட்டம் ஆகியவற்றை விளக்கிக் கூறினார்.

மேலும் அமைச்சர் பேசியதாவது:—

சட்டம், ஒழுங்கு தமிழகத்தில் சிறப்பாக உள்ளது. குறிப்பாக தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுகிறது. சுமார் 14 லட்சம் பேர் தமிழகத்தில் ஆலைகளில் பணிபுரிகின்றனர். அவர்களில் சுமார் 6,000 பேர்தான் தற்போது வேலைக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். மொத்த எண்ணிக்கையில் கணக்கிட்டுப் பார்க்கையில் ½ சதவிகிதம் தான். ஆகவே தமிழகத்தில் தொழில் அமைதி சிறப்பாக உள்ளது என்பதற்கு வேறு ஒன்றும் எடுத்துக் காட்டத் தேவையில்லை. தமிழக மக்களும், தொழிலாளர்களும் எதையும் அழிக்கும் மனோபாவம் இல்லாதவர்கள். பக்குவமும், தொழில் நுட்ப அறிவும் நிறைந்த தொழில் வல்லுநர்கள் தமிழகத்தில் நிறைய உள்ளனர். மேலும் மின்சார உற்பத்தியில் தமிழக அரசு சீரிய கவனம் எடுத்து வருகிறது.

சிறப்பாக தமிழக அரசு தொழில் துவங்க முன்வருவோருக்கு எல்லாவிதமான வசதிகளையும் காலதாமதம் இன்றி செய்து உதவிட இருக்கிறது. எனவே தொழிலதிபர்களை தமிழகத்தில் வந்து தொழில் துவங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பில் அழைக்கிறேன், என்று அமைச்சர் அவர்கள் கூறினார்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## 15—10—81

உடல் ஊனமுற்றோருக்கு மருத்துவக் கல்லூரியில் இந்த ஆண்டு மேலும் 30 இடங்கள் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஹண்டே அவர்கள் அறிவித்தார்கள்.

## 16—10—81

சிறுதொழில் துறையில் தரமான தோல் தயாரிப்புக்குப் பொதுவான வசதிகளைக் கொண்ட சேவை நிலையங்களைத் தமிழ்நாட்டில் நிறுவ அரசு தீர்மானித்துள்ளது என்று டில்லியில் நடந்த தோல் தொழில் மாநாட்டில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

## 17—10—81

தமிழகத்தில் புதிய தொழில்களைத் துவக்க, முன் வருமாறு ஆமதாபாத்தில் தொழிலதிபர்களை மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

## 22—10—81

தஞ்சாவூரில் நெல் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து வெளிமார்க்கெட்டை விட கூடுதல் விலையில் 'கொள்முதல்' செய்ய அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

## 23—10—81

மறைந்த அரசுக் கவிஞர் கண்ணதாசன் பெயரில் காரைக்குடியில் மணிமண்டபம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

## 28—10—81

தமிழகத்தில் 82 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் மேலும் 25 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டத் தீர்மானித்து இருப்பதாகவும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 29—10—81

சென்னை நகரில் மழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு இலவச உணவுப் பொட்டலங்களை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழகத்தில் 'நேசமணி-ஜீவா' ஆகியோர் பெயர்களில் புதிய போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கவிருப்பதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

அரசு மருத்துவமனை வார்டுகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும் மருத்துவ மனை ஊழியர்களுக்கு, இனி ஒவ்வொரு ஆண்டும் 500 ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பொருள்களை அரசு பரிசாக அளிக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

## 30—10—81

குடிசைப் பகுதிகளை மேம்படுத்தப் போர்க்காலவேகத்தில் அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஹண்டே அவர்கள் அறிவித்தார்கள்.

வீடுகள் கட்டித்தரும் தனியார் நிறுவனங்கள் அயல் நாட்டிலுள்ள தமிழர்களுக்காக வீடுகளைக் கட்டித்தருவதற்குப் பெரும் தொகைகளைக் கொள்ளையடிப்பதைத் தடுக்கும் வகையில் தமிழ்நாடு வீட்டு வசதிவாரியமே அத்தகையோருக்கு வீடுகளைக் கட்டித்தர யோசனை செய்யப்படுகிறது என்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. வேலூர் நாராயணன் அவர்கள் அறிவித்தார்கள்.



# வனவிலங்கு வாரச் சுற்றுலா

வனவிலங்கு வார விழாவையொட்டி தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையும்-வனத்துறையும் இணைந்து தென்னார்க்காடு தஞ்சைதஞ் திருச்சி புதுக்கோட்டை ஆகியமாவட்டங்களில் உள்ள சுற்றுலாத் தலங்கள்-வனவிலங்குச் சரணாலயங்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கு, இதழ்த் துறையாளர்களை அழைத்துச் சென்றனர்.

அக்டோபர் 6ஆம் நாள் காலை 9 மணி அளவில் சென்னையிலிருந்து புறப்பட்டோம். முதன் முதலாகப் பார்வையிட்ட இடம் பிச்சாவரம் என்னும் சுற்றுலாத் தலமாகும். தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பிச்சாவரம். இது, காடு உள்ளிட்ட கடற்பகுதி ஆகும். ஏறக்குறைய 3000 ஏக்கர் பரப்பளவு கொண்ட உப்பங்கழிப் பகுதிகளைக் கொண்டது இது. இங்கே அநேக தீவுகள் உள்ளன. சுரபுன்னை மரங்கள் இந்தத் தீவில் மிகுதியாக உள்ளன. இதே மரங்கள், இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனம் என்னும் இடத்தில் காணப்படுகின்றன. இவை தாமாக வளரக்கூடியவை. இவற்றின் விதைகள் நீரிலே விழுவதால், இவை தாமாகவே முளைத்து வளர்கின்றன. ஏராளமான கிளைகளும் விழுதுகளும் கொண்ட மரங்களாக இவை திகழ்கின்றன.

சதுப்பு நிலத்தில் நீர் மட்டத்திற்கு மேலே வளர்ந்திருக்கும் சில வகை மரங்கள், தாவரங்கள் ஆகியவற்றில் மருந்துக்குப் பயன்படுபவை உள்ளன.

உமரி, கருங்கண்டன், வெண்கீண்டன், நரிக்கண்டன், பன்னிகுத்தி எனப் பல வகையான செடிகள் இங்கு உள்ளன. பன்னிகுத்தியின் காய் பாசிப்பயறு போல இருக்கும் என்றும் அதனைச் சாப்பிடலாம் என்றும் சொல்கிறார்கள்.

**தமிழ்ப்பித்தன்**

மடவா, காலா, கொடுவா, வெளவா, வஞ்சனம், வெள்ரா என்னும் மீன்கள் இங்கே உள்ளன. இவற்றில் வெள்ரா என்பது உயர்ரக மீனாகும்.

இங்குள்ள நீர்ப்பரப்பு அகலப் பெருங்கடலைப் போல மிகப் பெரும் பரப்புடன் காட்சி தருகின்றது. படகு விடுவதற்கும் மீன் பிடிப்பதற்கும் இந் நீர்ப்பரப்பு பயன்படுகிறது. இது 4850 ஏக்கர் பரப்பளவு கொண்டது.

நித்தமும் ஏராளமான மக்கள் இங்கு வந்து செல்கின்றனர்; விடுமுறை நாட்களில் நாள்தோறும் 500க்கும் மேற்பட்ட மக்கள் வருகை புரிகிறார்கள். தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் -வெளி மாநிலங்களிலிருந்தும் - வெளிநாடுகளிலிருந்தும் இங்கு வருகை புரிகின்றனர்,

கடற் கரையும், கடலையொட்டி ஆறும், சதுப்பு நிலத் தாவரங்கள் கொண்ட சோலையும் நிறைந்த பகுதி இந்தியாவிலேயே பிச்சாவரம் ஒன்றுதான் என்று கருதப் பெறுகிறது.



இந்நீர்ப் பகுதியில் படகில் தான் செல்லவேண்டும். இந்தப் பகுதி முழுவதையும் சுற்றிப் பார்க்க நினைத்தால், ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும்.

இங்கு புதை மணலும் உண்டு; கரை ஓரங்களில் குள்ள நரிகள் உள்ளன: பெரிய விலங்குகள் இருப்பதாகத் தெரியவில்லை, கொக்கு, குருவி, காடை, கௌதாரி போன்ற பறவைகளும் உள்ளன. நீர்ப்பாம்பும் இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. யாழி என்னும் ஒருவகை கிளிஞ்சல் தண்ணீருக்குள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சுற்றுலாப் பகுதி, பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயத்தைக்கவர்ந்த இடமாகும். அதனால் இந்த இடத்தைச் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றத் தமிழக அரசு முனைப்பாக ஈடுபட்டு வருகிறது.

தற்போது, [illegible] தங்கும் விடுதிகள், [illegible] வாங்குதல் போன்ற [illegible]

## காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள்

தமிழ்நாட்டில் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் காவல் நிலையங்கள் மற்றும் காவல் துறையின் மற்ற அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு மூன்று ஆண்டுகளில் அரசுக் கட்டடங்கள் கட்டப்படவேண்டும் என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதன் முதல் கட்டமாக, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் **150** காவல் நிலையங்களுக்கு ரூ. **341.34** இலட்சம் செலவில் புதிய அரசுக் கட்டடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாவட்டம் வாரியாக காவல் நிலையங் களுக்கெனக் கட்டப்பட இருக்கும் புதிய அரசுக் கட்டடங்கள் எண்ணிக்கை பின் வருமாறு:

செங்கல்பட்டு 9, தென் ஆர்க்காடு 13, தஞ்சாவூர் 13, திருச்சிராப்பள்ளி 12, புதுக் கோட்டை 5, மதுரை 20, இராமநாதபுரம் 11, திருநெல்வேலி 15, கன்யாகுமரி 2, கோயம் புத்தூர் 8, பெரியார் 6, நீலகிரி 8, வட ஆர்க்காடு 11, சேலம் 11, தர்மபுரி 4, சென்னை 2, ஆக மொத்தம் 150.

மதுரை நகரில் செல்லூரிலும், கோவை நகரில், காட்டூர், சிங்காநல்லூர், ஆர். எஸ். புரம், இராமநாதபுரம் ஆகிய நான்கு இடங் களிலும் ரூ. **5.5** இலட்சம் செலவில் காவல் நிலையங்கள் கட்டப்படும்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி பஜார் காவல் நிலையத்திற்கும், உதகமண்டலத்தில் மேற்கு நகரக் காவல் நிலையத்திற்கும், சேலத்தில் கிச்சிப்பாளையம் காவல் நிலையத் திற்கும் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூ. **3,08,000** செலவில் கட்டப்படும்.

சென்னை நகரில் கொத்தவால்சாவடி காவல் நிலையத்திற்கும், அடையாறு காவல் நிலையத்திற்கும் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூ. **6** இலட்சம் செலவில் கட்டப்படும். மீதமுள்ள **140** காவல் நிலையங்கள் ஒவ்வொன்றும் ரூ. **2,09,000** செலவில் கட்டப்படும்.

## தொழில் நுட்பக்கல்வி பயின்றோர்க்கு வேலைவாய்ப்பளிக்க கட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள்

படித்தவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங் களை நிறைவேற்றி வருகிறது.

தொழில் நுட்பக் கல்வி பயின்றவர் களிடையே நிலவும் வேலையில்லாப் பிரச்னை யைப் போக்கவும், அதே சமயத்தில் பொதுப் பணிகளை மேற்கொள்ளத் தகுதி மற்றும் தரத்தில் கவனம் செலுத்தும் கட்டட ஒப்பந்தக் காரர்கள் கிடைக்கப் பெறுவதற்கும் ஏதுவாக, சுய உதவி அடிப்படையில் வேலைவாய்ப்பில்லா திருக்கும் பட்ட மற்றும் பட்டப்பொறியாளர் களைக்கொண்ட கட்டுமான கூட்டுறவுச் சங்கங் களைத் தோற்றுவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்றப்பணிகள் சிலவற்றை இச்சங்கம் மூலம் நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க சென்னையில் இத்தகைய சங்கம் ஒன்றைச் சோதனை முறையில் நிறுவ தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இச்சங்கம் பொருளாதார ரீதியில் வலுவடையும் பொருட்டு ஆரம்பத்தில் இச்சங்கத்தின் உறுப் பினர்களுக்கு நிதி உதவி அளித்து அரசு ஆதரவு அளிக்க வேண்டியுள்ளது. சங்கம் நிறுவுவதற்கான மூலதனத்தொகை ரூ. 3 இலட் சத்து 84 ஆயிரம் ஆகும். இதில் பங்குத் தொகைக்காக ரூ. 3 இலட்சத்தை வட்டி இல்லாக் கடனாக இச்சங்கத்திற்கு அரசு வழங்கும். மேலும் இச்சங்கத்தைத் திறம்பட நடத்த அரசு செலவிலேயே கூட்டுறவுச் சார்பதிவாளரை நியமனம் செய்யும்.

சங்கத்திற்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்புத்தொகை செலுத்துவதி லிருந்து விலக்களித்தல், மதிப்பீட்டுத்தொகை யைக்காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாக நிய மனமுறையில் பணிகளை அளித்தல், திறந்த முறை ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது சங்கத்திற்குக் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை 10 சதவீதம் கூடுதலாக முன்னுரிமை அளித்தல் போன்ற சலுகைகளும் இச்சங்கத்திற்கு வழங்கப் படும். மேலும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இச்சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவார். அவர் செலுத்த வேண்டிய பங்குத்தொகையான ரூ. 2000 த்தை அரசே செலுத்தும்.

வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் முக்கியமான அரசுக் கட்டடங்கள் சிலவற்றைக் கட்டும் பணியினையும் இச்சங்கம் மேற் கொள்ளும்.



# மங்கலம் பேசுக!



## கவியரசு கண்ணதாசன்

தோழர் தோழியர் யாவரும் வருக!
சூழ நின்று தமிழிசை பாடுக!
ஆழி கொண்ட அலையென முழங்குக!
ஏழை மானிடச் சாதியைக் காப்பதே
எங்கடன் என நற்பணி ஏற்றுக!
'வாழ்க' என்ற முழக்கமல்லா தொரு,
வார்த்தை யின்றி மங்கலம் பேசுக!
பைந்தமிழ்க் கவிப் பாவலர் சூழுக!
பாட்டினாற் றமிழ் நாட்டினை ஆளுக!
நைந்த தோலரை நலிந்த மனத்தரை!
விழுந்த கண்ணரை விலாவிலா மாந்தரை
கை கொடுத்துக் கரையினில் ஏற்றுக!
கட்டை யொன்றினில் முட்டுக் கொடுத்தவர்
நெட்டை மேனியும் நிற்குமா றாக்குக!
அரசியல் முறை ஆய்ந்தவர் கூடுக!
ஆட்டு மந்தையின் மேய்ப்பரும் சேருக!
இறை வரைமுறை பிழைபடு மாறுளம்
இயங் கிடாது பொதுப்பணி யாற்றுக!
கறை படுஞ்சிறு கடுமொழி யறியும்
காத்து நாவினிற் பூந்தமிழ் பேசுக!
கடமை ஒன்றே உடமையென் றாக்குக!
இல்லறப் பணி மெல்லியர் வல்லியர்
நல்லறத் தினில் நால்வகைப் பண்பினில்
கல்மனத் தவன் கணவனென் றாயினும்
கண்ணெனக் கொடு காத்தறம் நாட்டுக!
வல்ல மைந்தரை வளர்த்துயிர் கூட்டுக!
வாழும் வீடுகள் ஆயிரம் கட்டுக!
இல்ல தொன்றே இல்லாள் இவளென
நல்ல செய்தொரு நற்புகழ் நாட்டுக!
வீர மைந்தர் வேலொடும் தோன்றுக!
வேங்கை யென்று பேர்பெற வாழுக!
சோர மென்பதைத் தூவெனத் தள்ளுக!
சோம்ப லென்பதைக் காம்பிலே கிள்ளுக!
பார மாயினும் பாசம்மேற் கொள்ளுக!
பார்க்கும் யாவையும் பகுத்தறி வாக்குக!
பாதை கண்டு பயணம் தொடங்குக!



வானதி பதிப்பகம்
வெளியிட்டுள்ள
கண்ணதாசன்
கவிதைகள்
மூன்றாம் தொகுதி
யிலிருந்து . . .

பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 4.50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் பணிகள் நடைபெற உள்ளன.

இதனையடுத்து, 3 இலட்ச ரூபாய் செலவில், சிற்றுண்டி வசதியுடன் கூடிய குடில்கள், வரவேற்பறை, சமையலறை, கழிவறை ஆகியவை பிச்சாவரத்தில் கட்டப்பட உள்ளன. 1981-82ல் ரூ. 5 இலட்சம் செலவில் படகுத்துறை அமைப்பதுடன், படகுகளும் வாங்கப்பட உள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்குப் படகுச் சவாரி மகிழ்வூட்டும் என்பது உறுதி.

1982-83ல் தங்கும் விடுதிகளை அதிக அளவில் கட்டுவதற்கும், படகுகளை மிகுதியாக வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 15 இலட்ச ரூபாய்க்குரிய திட்டம், மாநிலத் திட்டக் குழுவின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தென்னார்க்காடு மாவட்டத்தின் சிறந்த சுற்றுலாத் தலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிச்சாவரத்தின் மேம்பாட்டுக்கு, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் உபரி நிதித் தொகையை செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிச்சாவரத்தின் நீர்ப்பரப்பில் படகுகளின் வாயிலாகப் பயணம் செய்த பத்திரிகையாளர் அனைவரும் அகமகிழ்ந்தனர்; வியப்படைந்தனர்; பலர் - படகை விட்டு இறங்குவதற்கு மனமில்லாதிருந்தனர். ஆனாலும் என்ன செய்வது? திட்டமிட்டபடி ஏனைய பகுதிகளுக்கும் செல்ல வேண்டும் என்ற கடமை உணர்வு உந்தியதால் புறப்பட்டோம்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் அருகில் உள்ள கோடியக் கரைக்குச் சென்றோம். இந்த இடத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. இங்கு விலங்குகளும் பறவைகளும் உள்ளன. Flamingo என்று சொல்லப்படும் பூ நாரை இங்கு அக்டோபர் திங்கள் முதல், மார்ச் திங்கள் வரை வந்து செல்கின்றன. நீளமான கழுத்தும் நீளமான கால்களும் 4 அடி உயரமும் கொண்ட இந்தப் பூநாரை சைபீரியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகை புரிகின்றன. இந்த ஆண்டு - நாங்கள் சென்ற சமயத்தில் அந்தப் பறவைகளைக் காண இயலவில்லை. செப்டம்பர் திங்களில் ஏறக்குறைய 5 ஆயிரம் பறவைகள் இங்கு வருகை புரிந்தனவாம்.



பிச்சாவரம்

சென்ற ஆண்டு 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட பறவைகள் வந்து சென்றன எனத் தெரிகிறது.

இங்குள்ள வனப்பகுதியில் வெளிமான்களும், புள்ளிமான்களும் ஏராளமாக உள்ளன. ஒரு சில குதிரைகளும் காணப்படுகின்றன. பத்துப் பெண்மான்களுக்கு ஒரு ஆண் மான் வீதம் இங்கு மான்கள் திரிகின்றன.

மான்கள் கூட்டம் கூட்டமாக நிற்பதும், ஜீப் வரும் சத்தத்தைக் கேட்டவுடன் அவை நான்கு கால் பாய்ச்சலுடன் வெகுவேகமாக ஓடிச் செல்வதும் ரசிக்கத்தக்க காட்சிகள்.

ஏறக்குறைய 800 ஏக்கர் பரப்பளவுள்ளது இந்தக் காட்டுப் பகுதி. காட்டில் உள்ள ஒருவகைச் செடியை மான்கள் சுவைத்துத் தின்கின்றன. அதைத் தின்பதன் வாயிலாக மான்களின் தண்ணீர்த் தாகம் அடங்குகிறது.

இருந்தாலும் , அவற்றிற்கு நல்ல தண்ணீர் வழங்க வேண்டும் என்ற சிறந்த எண்ணத்தின் காரணமாக, காட்டுப் பகுதியில் தண்ணீர்த் தொட்டிகள் 3 கட்டப்பட்டுள்ளன. அவற்றில் குடிதண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டுள்ளது. மான்கள் அந்த நீரை அருந்திச் செல்கின்றன.

வனத்துறை அலுவலர்கள் அடிக்கடி இந்தப் பகுதிக்குச் சென்று, வெளியார், மான்களை வேட்டையாடிக் கொல்லாத வகையில் பார்த்துக் கொள்கின்றனர். இத்துடன் மான்களை வேட்டையாடக் கூடாது என்று அரசு சட்டமியற்றியிருப்பதால்-மான்கள் பாதுகாக்கப்படுகின்றன. கோடியக்கரையில் உள்ள இந்தச் சரணாலயம் புகழ் பெற்றதாகும். இதனை மேம்பாடு செய்வதற்கு அரசு முனைந்து வருகிறது.

இங்கு கலங்கரை விளக்கு ஒன்று உள்ளது. 1890 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது இது. 13.4 மீட்டர் உயரமுள்ளது; இந்தக் கலங்கரை விளக்கத்தின் ஒளி 12 மீட்டர் தொலைவுவரை தெரிகிறது. கலங்கரை விளக்கக் கோபுரத்தின் மீது நின்றுபார்த்தால் கடற்கரை வளைந்து ஒரு திருப்பம் போல் இருப்பது நன்கு தெரிகிறது.

கோடியக் கரையை விட்டுத் திருச்சி நகரை அடைந்தோம். மறுநாள் காலையில் அங்கிருந்து தெற்கே மதுரை செல்லும் வழியில் ஏறக்குறைய 28 கிலோ மீட்டரில் உள்ள விராலி மலைக்குச் சென்றோம்.

முருகப் பெருமான் உறையும் திருத்தலமான இவ்வூரில் மயில்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஏறக்குறைய 3,227 மயில்கள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். விராலிபட்டி, ராஜகிரி, மலைக்குடிப்பட்டி, புதுப்பட்டி, குறிஞ்சிப்பட்டி என விராலிமலையைச் சுற்றிலும் உள்ள 30 கிராமங்களுக்கும் இம் மயில்கள் சென்று வருகின்றனவாம்.

விராலிமலை ரெவின்யூ கிராமம் ஆனதால் இங்கு மயில்களுக்குச் சரணாலயம் அமைக்க இயலாத சூழ்நிலை உள்ளது. அதனால் மயில்கள் புகலிடம் துவக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வனத்துறையைச் சேர்ந்தவர்கள் மயில்களை மிகவும் கருத்துடன் காத்து வருகின்றனர். அவற்றிற்கு வேண்டிய கம்பு, ராகி போன்ற உணவு தானியங்களை நாள் ஒன்றிற்கு இரு முறை வழங்கி வருகின்றனர்.

தினமும் அதிகாலையில் இங்கு மயில்கள் தோகை விரித்து ஆனந்தமாக நடனமிடும் காட்சி, கண் கொள்ளாக்காட்சியாகும்.

விராலிமலையை விட்டு, மீண்டும் திருச்சி வழியாகச் சென்று கல்லணையை அடைந்தோம். கரிகால் சோழ மன்னனால் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் காவிரி நதியில் கட்டப்பட்டுள்ள அணை இது.

கல்லணைக்குச் செல்லும் பாதையில் நாங்கள் பயணம் செய்தபோது காவிரியின் அகன்ற தோற்றம் - கடல் போலக்காட்சியளித்தது. காவிரித்தாய், நாட்டு மக்களுக்கு உணவு நல்குவதற்காகக் கடமை உணர்வு கொண்டு புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறாள் என்பது எங்களுக்குப் புரிந்தது.

கல்லணையை அடைந்தோம். அதன் தோற்றம் எங்களை வியப்பில் ஆழ்த்தியது. அதன் அமைப்பைப் பார்த்ததும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை 'தம்பிக்கு' எழுதிய கடிதக் கட்டுரையில் கல்லணை குறித்துத் தீட்டியிருந்த வாசகங்கள் நினைவுக்கு வந்தன.

''கல்லணை - கரிகாலச் சோழனுடைய கருத்தில் உருவாகி, தமிழகக் கட்டட அமைப்புத் திறனின் அரண் பெற்று, சிங்கள நாட்டு உழைப்புத் துணையுடன் உருவாயிற்று.

''இதனைவிட அளவில் பெரிய அதிசயமிக்க விஞ்ஞான நுணுக்கத் திறமைகள் தெரியத்தக்க அணைகளும் தேக்கங்களும் இன்று பல உள. எனினும் கல்லணை கட்டப்பட்ட காலத்தைக் கருத்திலே வைத்துப் பார்க்கும்போதுதான் அதன் சிறப்பு நன்கு விளங்குகிறது. எவரும் பாராட்டுகிறார்கள்

"விஞ்ஞான அறிவு மிகவும்பரவியுள்ள இந்நாளிலேயும் இந்தத் துறை விற்பன்னர்கள் கல்லணை கண்டு வியந்து பாராட்டுகிறார்கள்.

''தமிழன் பெற்றிருக்கும் தனிச் சிறப்பைக் கண்டு பாராட்டுகிறார்கள். கல்லணை கண்டு மனம் மகிழாதவர்களை நம்மால் காண முடியாது''.

இவ்வாறு பேரறிஞர் அண்ணா அவர்கள் கல்லணைக்கும் அதனை உருவாக்கிய மன்னனுக்கும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

324 மீட்டர் நீளம் - 12 மீட்டரிலிருந்து 18 மீட்டர் வரை அகலம் கொண்டது இது. திருச்சியிலிருந்து தஞ்சை செல்லும் சாலையில், 19 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இது, சுற்றுலாப் பயணிகளின் இதயத்தைக் கவரும் இடமாகத் திகழ்கிறது. கரிகால் மன்னன் யானை மீதமர்ந்த நிலையில் சிலை ஒன்றும் உள்ளது. கம்பீரமான தோற்றத்துடன் திகழும் அந்தச் சிலை நம்முடன் கண்களால் பேசுகிறது.

கரிகாலனிடம் விடை பெற்றுத் திருச்சிக்குச் சென்று மாலை 5 மணியளவில் புறப்பட்டு வன விலங்கு வார நிறைவு விழா நடைபெறும் முக்கொம்பு என்னும் சுற்றுலாத் தலத்திற்குச் சென்றோம்.

காவிரி ஆறு அய்யன் கால்வாய், கொள்ளிடம், காவிரி என மூன்று கிளையாகப் பிரியுமிடத்திற்கு முக்கொம்பு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. திருச்சியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது இது.

இங்கு பொதுப்பணித் துறையினரால் அழகான பூங்கா ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது.

காவிரி நதியையும் அதன் அருகில் கண்கவர் பூங்காவையும், கண்டபோது,

'காவிரித் தாயே!
காவிரித் தாயே
காதலர் விளையாட
பூவிரித்தாயே'—

என்று அமரர் அரசுக் கவிஞர் கண்ணதாசன் ஒரு திரைப்படத்திற்காக எழுதிய பாடல் நினைவுக்கு வந்தது.

சிறுவர், முதியோர், இளைஞர் இப்படிப் பல்வேறு வகையினரும் நித்தமும் வருகை புரிந்து, ரசித்து மகிழத் தக்க பூங்காவாக முக்கொம்பில் உள்ள பூங்கா காட்சியளித்தது.

பூங்காவில் பல்வேறுவகையான சிலைகள் உயிர் உருவங்கள்போல். உருவாக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் ஏறிச் செல்ல ரயில் ஒன்றும் உள்ளது. ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய் செல்வில் இந்தப் பூங்கா அமைக்கப் பெற்றுள்ளது; சுற்றுலாப் பயணிகளை இது மிகவும் கவர்கிறது:

காவிரி நதியில் வெள்ளம் அதிகமாக வருகின்ற காலத்தில் கரையோரத்தில் உள்ள மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது, என்ற எண்ணத்தினால் இங்கு மேலணை என்ற பெயரில் வெள்ளத் தடுப்பு அணை ஒன்றினைத் தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது.

கல்லணை





# அரசுக்கவிஞர் கவியரசர் கண்ணதாசன் வாழ்க்கைக் குறிப்பு

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சிறுகூடல் பட்டி என்னும் சிற்றூரில் சாத்தப்பச் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோரின் எட்டாவது மகனாக 24.6.1927ல் திரு கண்ணதாசன் பிறந்தார்.

பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் முத்தையா என்பதாகும். இவருடன் பிறந்த சகோதரர் இருவர்; சகோதரியர் அறுவர். புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் திரு ஏ.எல். சீனிவாசன் இவரது உடன் பிறந்தவர் ஆவார்.

தேவகோட்டைக்கு அருகிலுள்ள அமராவதிபுதூரில் உள்ள குருகுலத்தில் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயின்றார். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், அப்போது அந்தக் குருகுலத்தில் இவருக்கு ஆசிரியர். குருகுலத்தில் எட்டாவது வரைதான் பயின்றார் என்றாலும், தமிழ் இலக்கியம், இலக்கணங்களில் ஆர்வமும் திறமையும் இவருக்கு ஏற்பட்டன. குடும்பச் சூழ்நிலையின் காரணமாகக் குருகுலக் கல்வியைத் தொடர இயலாமற் போய்விட்டது.

ஏற்கெனவே எழுத்தார்வம் கொண்டவர் ஆதலின், பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிய விரும்பினார். எண்ணிய வண்ணமே நடைபெற்றது. 1944-ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் இராமச்சந்திரபுரத்திலிருந்து வெளிவந்த 'திருமகள்' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அப்போது கண்ணதாசன் என்ற புனைபெயரைச் சூட்டிக்கொண்டார். பின்னர் 'திரை ஒலி', 'மேதாவி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணிபுரிந்து, அதன் பின்னர் சேலம் மாடர்ன் தியேட்டர் நடத்தி வந்த 'சண்டமாருதம்' என்னும் திரைப்பட இதழின் ஆசிரியரானார். சிறிது காலத்தில் அப்பத்திரிகை நிறுத்தப்பட்டதால், 1948இல் மாடர்ன் தியேட்டர்ஸ் கதைத் துறையில் பணிபுரியத் தொடங்கினார். 1949-ஆம் ஆண்டில் ஜுபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தார் தயாரித்த 'கன்னியின் காதலி' என்னும் படத்தில் முதன்முறையாகப் பாடல் எழுதினார். அவரது முதற் பாடலின் பல்லவி.

கலங்காதிரு மனமே-உன்
கனவெல்லாம் நனவாகும் ஒருதினமே!

'அவள்' இவரது முதல் கவிதை. அகத்துறையைச் சேர்ந்த இந்தக் கவிதையை 1944-ஆம் ஆண்டு 'திருமகள்' இதழில் எழுதினார். இவர் எழுதிய முதற்காவியம் 'மாங்கனி'

1949-ஆம் ஆண்டில் இவர், காரைக்குடியில் இருந்த பழனியப்பச் செட்டியார் தெய்வானை ஆச்சி தம்பதியருக்குச் சுவீகார மகன் ஆனார். அப்போது முத்தையா என்னும் பெயர் நாராயணன் என மாற்றப்பட்டது.

மூன்று மனைவியரை உடைய கவிஞருக்கு 9 ஆண் மக்களும், 6 பெண்மக்களும் உள்ளனர்.

1954-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 'தென்றல்' என்னும் இலக்கிய வார ஏட்டைச் சொந்தமாகத் தொடங்கி நடத்தினார். தென்றல் ஏட்டில் இவர் நடத்தி வந்த 'வெண்பாப் போட்டி' தமிழ் இலக்கியப் பித்தர்களை மிகவும் ஈர்த்தது. அவ்வெண்பாப் போட்டியில் பங்குகொண்டு பயிற்சி பெற்ற பலர் இன்று புகழ் பெற்ற கவிஞர்களாக விளங்குகிறார்கள். அந்நாளில் இவர், குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், இவர் நடத்திய இலக்கிய ஏடு, எல்லாச் சாராரிடமும்-எல்லாக் கட்சியினரிடமும் இவருக்கு ஆதரவை உருவாக்கியது.

'தென்றல் திரை', முல்லை', 'கடிதம்' ஆகிய ஏடுகளின் ஆசிரியராக இருந்ததுடன் அவற்றைச் சொந்தத்தில் நடத்தவும் செய்தார். பின்னர் 'கண்ணதாசன்' என்னும் திங்கள் ஏட்டின் ஆசிரியராக இருந்து இலக்கிய பணியை மிக அருமையாகத் தொடர்ந்து செய்து வந்தார்.

இவரது கவிதைகள் ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. மாங்கனி, ஆட்டனத்தி, ஆதிமந்தி, கவிதாஞ்சலி, தைப்பாவை, பாண்டிமாதேவி (முற்றுப் பெறவில்லை) ஆகியவை இவரது காவியங்கள்.





ஏறக்குறைய எட்டுக் கவிதைத் தொகுப்புகளையும், 20-க்கு மேற்பட்ட நவீனங்களையும், 20-க்கு மேற்பட்ட கட்டுரை நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இவரது 'அர்த்தமுள்ள இந்து மதம்' இதுவரை 6 பாகம் வெளிவந்துள்ளது. இந்நூல் எண்ணற்ற வாசகர்களின் வரவேற்பைப் பெற்றது. இந்நூல் 45 நிமிடம் ஓடுகின்ற அளவுக்கு எல்.பி. இசைத் தட்டாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இவரே பேசியுள்ளார்.

வணங்காமுடி, தமிழ்மன்னன், காரை முத்துப்புலவர் என்பவை கவிஞரின் ஏனைய புனை பெயர்கள்.

கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் ஈடுபாடு கொண்ட கவிஞர் அன்னார் இருவரையும் தமது மானசீகக் குருநாதர்களாகக் கொண்டிருந்தார்.

நாவலைப் பொறுத்தவரை, வங்க இலக்கிய மேதை சரத்சந்திரருக்கு இவரது உள்ளத்தில் தனி இடம் உண்டு. அதன் காரணமாகவே சரத்பாபுவின் 'சந்திரநாத்' என்னும் நவீனத்தை இவர் 'மாலையிட்ட மங்கை' என்னும் பெயரில் சொந்தமாகத் திரைப்படமாக்கினார்; அதற்குரிய வசனம், பாடல்களை இவரே அமைத்தார்.

இவரது 'அழகி' என்னும் கவிதை இதுவரை ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவர் எழுதிய 'பாடாய் தும்பி! மணவறைப் பாட்டு' என்னும் கவிதை சாகித்திய அகாதமியினால் 1958-ஆம் ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

சில கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு AU REVOIR என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

இவர் எழுதிய குட்டிக் கதைகள் கன்னடத்திலும், புஷ்பமாலிகா என்னும் நூல் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

'விளக்கு மட்டுமா சிவப்பு?' என்னும் நவீனம் 'மலையாள நாடு' என்னும் இதழில் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது.

திரைப்படங்களுக்கு மிகச் சிறப்பாக உரையாடல் எழுதிய பெருமை இவருக்கு உண்டு. ஏறக்குறைய 20 படங்களுக்கு மேல் உரையாடல்கள் எழுதியிருக்கிறார். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப்பாடல்களையும் எழுதியிருக்கிறார்.

இந்தியாவிலேயே சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் என்னும் விருதை மத்திய அரசினிடம் 1970-ஆம் ஆண்டு பெற்றார். அதே ஆண்டில் தமிழ்நாடு அரசு அளித்த சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் விருதையும் பெற்றிருக்கிறார்.

பண்டிதரும் பாமரரும் ஒருசேரப் போற்றிப் புகழும் வண்ணம் பாடல்களையும், கவிதைகளையும் எழுதுவதில் தனித் திறமை பெற்றவர் இவர்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அரசுக் கவிஞராக நியமிக்கப்பட்ட கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு விருது வழங்கும் விழா 9.7.1978-ல் நடைபெற்றது.

இவருடைய 'சேரமான் காதலி' நூல் சாகித்ய அகடமியின் பரிசினைப் பெற்றது. எம்.ஏ.சி. அறக்கொடையின் சார்பில் அண்ணாமலையரசர் நினைவுப் பரிசாக வழங்கப்படும் ரூ. 10,000 ஐ சிறந்த கவிஞர் என்பதற்காகப் பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் நடந்த தமிழ்ச்சங்க விழாவிலும், கவிஞர்கள் மாநாட்டிலும் கலந்துகொள்ள சென்ற கவிஞர் கண்ணதாசன் நெஞ்சுவலி காரணமாக சிகாகோ நகர மருத்துவமனையில் கடந்த ஜூலை மாதம் 24ஆம் நாள் சேர்க்கப்பட்டார். சிலநாட்கள் உணர்வு இழந்த நிலையில் இருந்த இவர், பிறகு கண் விழித்துப் பார்த்தார், பிறர் பேசுவதைப் புரிந்து கொண்டார். அவர் உதடுகள் அசைந்தன என்றாலும் பேசமுடியவில்லை.

இன்னும் மூன்று மாதங்களில் முழுமையாக குணம் அடைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கடந்த 17.10.81 சனிக்கிழமை இந்திய நேரப்படி இரவு 10.45 மணிக்கு மரணமடைந்தார்.

கவியரசர் பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோருக்குப் பின்னே இந்த நூற்றாண்டில் தலைசிறந்த கவிஞராகத் திகழ்ந்த கவியரசு கண்ணதாசன் புகழ் என்றுமுள்ள தென்றமிழ்போல நிலைக்கட்டும்!

நீண்ட காலமாக மறு நிலவரித் திட்டம் ( Re - settlement ) மேற்கொள்ளப்படாத காரணத்தால், இரயத்துவாரி கிராமங்களிலுள்ள நிலப்பதிவேடுகள் பழமையானவையாகவும், தற்போதுள்ள நிலையைப் பிரதிபலிக்காமலும் உள்ளன. இதனால் கீழ்க்கண்ட தொல்லைகள் ஏற்படுகின்றன:

ஒரு விவசாயி, அரசாங்கத்திடமோ அல்லது கூட்டுறவு வங்கியிடமோ கடன் பெற விரும்பினால், அவர் தனக்குச் சொந்தமான நிலத்தின் சிட்டா, பட்டா புத்தகம், ரிஜிஸ்டாரின் நகல், அடங்கல் போன்ற பதிவேடுகளின் நகலைத் தயாரித்துக் கொடுக்கவேண்டும். அப் பதிவேடுகளில் கடன் பெற விழைபவரின் பெயர் இருந்தால்தான், உடனடியாகக் கடன் பெற இயலும். அவ்வாறு இல்லாமல், கடன் பெற விழைபவரின் தகப்பனார் பெயரிலோ, அல்லது மற்றவர்களின் கூட்டுப் பெயரிலோ பதிவேடுகள் இருப்பின் அப்பெயரில் உள்ளவர்களின் மற்றும் அவர்களது எல்லா வாரிசுதாரர்களிடம் இருந்தும் ஒப்புதல் பெற்றால் அல்லாமல் கடன் எளிதில் பெற இயலாது. கடன் பெற விழைபவர் தனிப் பட்டா வைத்துக்கொண்டிருந்தால், எளிதில் கடன் பெற இயலும்.



# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

கூட்டுப்பட்டாவாக நிலங்கள் இருப்பின் மனுச் செய்பவரின் உரிமை நிலத்தின்மேல் எந்த அளவு உள்ளது என்பதை அறிவதும் கடினம்.

மேலும், ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் உள்ள கிராமக் கிணற்றுக்கு மின் இணைப்புப் பெற விரும்பினால் அவர்மின்இலாகாவினருக்கு மனுச்செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது, அந்த நிலம் தனிப்பட்டாவாக உள்ளதா அல்லது கூட்டுப்பட்டாவாக உள்ளதா என்று மின்துறையினர் கவனிக்கிறார்கள். தனிப்பட்டாவாக உள்ள நிலங்களுக்கு மின் இணைப்பு எளிதில் கிடைக்கிறது. கூட்டுப்பட்டாவாக இருந்தால் எல்லாக் கூட்டுப்பட்டாதாரர்களின் ஒப்புதல் பெற்றால் அன்றி மின் இணைப்புப் பெற இயலாது.

ஒரு நிலம் பலருடைய கூட்டுப்பட்டாவாக இருப்பதால், ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய நிலவரிப் பாக்கி எவ்வளவு என்று சரிவர அவர்கள் தெரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில பட்டாக்களில் அடையாளம் கண்டு கொள்ள முடியாத நபர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ள நிலையும் உள்ளது. பல ஆண்டுகளாகக் கூட்டுப் பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக மாற்றப்படாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

மேலும் விற்பனை, பரிவர்த்தனை ( Transferred ) போன்ற மாறுதல்களால் ஏற்படும் நில உட்பிரிவுகள் (Sub-Division) சரிவரப் பதிவேடுகளில் செய்யப்படாமல் இருப்பதால், நிலத்தை அனுபவிப்பவரின் பெயருக்கும் பதிவேடுகளில் உள்ள பெயர்களுக்கும் சம்பந்தமில்லாத நிலையில், நிலத்தை அனுபவிப்பவர்கள் கடன் வசதி பெறாத நிலை ஏற்படுகிறது.

ஒருவர் பயிரிட்டு அனுபவித்து வரும் நிலத்திற்கும், அந்த நிலத்தின் பட்டாவிலுள்ள பெயருக்கும் தொடர்பில்லாமல் நிலம் ஒருவருடைய உரிமையின் கீழும், பட்டா வேறு ஒருவரின் பெயரிலும் இருந்துவரும் நிலையிலும் உள்ளதால், நிலவரி வசூல், வராத கடன் வழங்குதல் போன்றவற்றில் ஏற்படும் சிக்கலைத் தவிர்க்க, அரசு நில உரிமையாளர்களுக்குப் பட்டா பாஸ் புத்தகத்தை வழங்கியுள்ளது. இந்தப் பட்டா உரிமைப் புத்தகத்தில், பட்டா யார் பெயரில் இருக்கிறதோ அவருடைய பெயர்தான் காணப்படும். அந்தப் புத்தகத்தில் நிலத்தை அனுபவித்து வரும் விவசாயியின் பெயர், பட்டா மாற்றம் செய்யப்படும்போதுதான் குறிக்கப்படும்,

**நில உடைமைப் பதிவுத் திட்டத்தின் குறிக்கோள்கள் :**

1. விவசாயிகள் தங்கள் நில உரிமையினை எளிதில் அறியமுடியும்.





2. கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக மாற்றப்படும்.
3. ''சிட்டா'' போன்ற கிராமக் கணக்குகளில் நில உரிமையாளர்களின் பெயர்கள் குறிக்கப்படும்.
4. விற்பனை, பாகப்பிரிவினை நிலங்களை மாற்றிக்கொள்ளுதல் போன்ற மாறுதல்களைச் சரியான முறையில் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்படும். மேற்கூறிய குறிக்கோள்களைக் கொண்ட நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தை அரசு செயலாக்க முன்வந்துள்ளது.

### இத்திட்டத்தின் வாயிலாக ஏற்படும் நன்மைகள்:

1. ஒவ்வொரு புலத்தினையும் மீண்டும் அளந்து, வருவாய்த்துறைப் பதிவேடுகளில் பதிக்கப்படும்.
2. பூமியில் உட்பிரிவுகள் செயல்படுத்தப்படும்.
3. கூட்டுப்பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாகப் பிரித்துத் தரப்படும்.
4. விவசாயிகள் தங்குதடையின்றி வங்கிகளில் கடனுதவி பெற வாய்ப்பு பெருகும்.
5. அவர்கள் தங்கள் உரிமையினை எளிதில் அறியமுடியும்.
6. அரசுக்குச் சொந்தமான நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு, அவற்றிலுள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றவும் இத்திட்டம் வகை செய்யும்.
7. மேலும் கூட்டுப்பட்டா நிலங்களின் ஈட்டின்பேரில் வாங்கப்பட்ட கடன் பணத்தை உரியவர்களிடத்தில் வசூலிக்க இத்திட்டம் வகை செய்யும்.
8. இத்திட்டத்தின் கீழ் பட்டாப்புத்தகங்கள் புதுப்பிக்கப்படுவதால் விவசாயிகளுக்குத் தங்கள் கைப்பற்றியுள்ள நிலத்தின் எல்லா விவரங்களும் அந்நிலத்தில் தங்களுக்குள்ள உரிமைகளையும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் பட்டாதாரர்களுக்கு அவர்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கான புலப்படங்களும் எல்லா அளவுகளுடனும் கொடுக்கப்படுகிறது.
9. இதுநாள் வரை குடும்பத்தில் பர்கப் பிரிவினை ஏற்படுங்கால், நிலங்களைப் பாகத்திற்கேற்பப் பிரித்துத் தர விவசாயிகள் அதற்குண்டான கட்டணத்தைச் செலுத்திவிட்டு அலுவலர்களை நாடி அல்லலுற வேண்டியிருந்தது. இதனால் பண விரயமும், கால தாமதமும் நேர்ந்து வந்தது. இனி அந்நிலை இத்திட்டத்தின்கீழ் தவிர்க்கப்படும்.
10. புதிய திட்டப்படி, மனு இல்லாமலேயே நிலங்கள் பிரிவினைப் பத்திரங்களையும், அனுபோகத்தையும் அனுசரித்து அளக்கப்பட்டு, பிரித்துத் தரப்படுவது மட்டுமின்றி பட்டா மாறுதலும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
11. மேலும் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்கு இத்திட்டம் வழி வகுத்துள்ளது.
12. விவசாய வருமான வரி வசூல் செய்வதில் கூட்டுப் பட்டாவாகயிருந்தால் யார் மேற்படிவரியைச் செலுத்த வேண்டும் என்று துல்லியமாக நிர்ணயிக்க முடிவதில்லை. தனிப்பட்டாவாகப் பிரித்து இருந்தால் யார் எவ்வளவு எந்தப் பயிருக்கு விவசாய வருமானவரி செலுத்தவேண்டும் என்று தீர்மானிக்க ஏதுவாகிறது.

மாநிலத்தில் 30,000 சதுர மைல்கள் பரப்புள்ள நிலங்கள் அளவை செய்யப்பட்டு, ஐந்தாண்டுகளில் மாநிலம் தழுவிய அளவில் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 1.48 கோடி செலவாகுமென எதிர் பார்க்கப்படுகிறது.



### 1-8-81 வரை செய்யப்பட்ட பணிகள் :

| | |
|---|---|
| அளக்கப்பட்ட உட்பிரிவுகள் | 10,69,081 |
| புதுப்பிக்கப்பட்ட சர்வே கற்கள் | 6,77,743 |
| வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை | 2,64,686 |
| பயனடைந்தோர் | 4,05,059 |

இத்திட்டம் நில உரிமையாளர்களுக்கு ஓர் ஒப்பற்ற வரப்பிரசாதமாகும், நிலப்பதிவேடுகளில் நெடுங்காலமாக இருந்து வந்த குறைகளைக் களைவதுடன், விவசாயப்பெருங்குடி மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற ஒரு வாய்ப்பையும் இத்திட்டம் வழங்குகின்றது. நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களில் எல்லைகளைக் குறித்த வழக்கினை வழக்கு மன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய நிலை, இத்திட்டத்தால் பெருமளவு தவிர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த அணையின் அருமையையும் இது இடம் பெற்றுள்ள முக்கொம்பின் எழிலையும் காண்பதற்கு நித்தமும் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது இங்கு வந்து செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் விரிவு செய்யப்பட்டுள்ளதால், ஒரு திங்களில் ஏறக்குறைய 25,000 சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை புரிகிறார்கள்.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு மிக்க சுற்றுலா இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்கும் - போக்குவரத்து வசதிக்கும் போக்குவரத்துக் கழக உபரி நிதியிலிருந்து 3 இலட்ச ரூபாய் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் முக்கொம்பு, கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய இரு இடங்கள்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு,முக்கொம்பை முதற் கட்டமாகத் தேர்ந்தெடுத்து, திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

முக்கொம்புக்குச் செல்வதற்குத் தனிப் பேருந்து வசதிகளை ஏற்படுத்தவும், இதனை வண்ணப் படங்களில் எடுத்து அவற்றின் வாயிலாக விளம்பரம் செய்து, அனைவரையும், கவருகின்ற சிறந்த சுற்றுலாத்தலமாக உருவாக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வனவிலங்கு வார நிறைவு விழா முக்கொம்பில் அக்டோபர் 8ஆம் நாள் மாலையில் நடைபெற்றது. மாண்புமிகு நிதியமைச்சர், நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்களும் பங்குபெற்றனர். இவ்விழாவில் பல்வேறு பெருமக்கள் கலந்து கொண்டனர். (இவ்விழா குறித்து நிகழ்ச்சித் தொகுப்புக் கட்டுரை 16.10.81 தமிழரசு இதழில் வெளிவந்துள்ளது.)

அந்த விழாவில் பேசிய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்ட செய்தி, கல்லணையின் பெருமையை எடுத்துரைக்கும் வகையிலே இருந்தது. அவர் குறிப்பிட்டதாவது:

''1968ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த சமயத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது, வெளிநாட்டுப்பேராளர்களை அழைத்து வந்து இந்த இடத்தைக் காண்பித்தேன். பார்வையிட்ட பேராளர் அனைவரும் பஸ்ஸில் ஏறி விட்டனர். ஆனால் ரஷ்ய அறிஞர் ஒருவர் பஸ்ஸில் ஏறுவதற்குக் கொஞ்சம் நேரமாகிவிட்டது. காரணம், அவர், இந்த இடத்தின் அழகில் மெய்மறந்ததுதான்.

'தலை சுற்றுகிறது. நான் 5 கண்டங்களிலும் சுற்றியிருக்கிறேன். அணைகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால் தரையிலேயே அணை கட்டி 7 பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். இத்தகைய விஞ்ஞான அறிவுக்கு இணை உலகம் முழுதும் கிடையாது. 2,000 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி ஓர் அணை கட்டப்பட்டிருப்பதை எங்கள் நாட்டு ஆய்வாளர்களிடம் தெரிவித்து ஆராய்ச்சி செய்யச் சொல்ல வேண்டும் போல் தோன்றுகிறது' என்று குறிப்பிட்டுப் பாராட்டினார்.''

—இவ்வாறு வெளிநாட்டறிஞரின் வியப்புக் குறித்து, முத்தமிழ்க் காவலர் சொல்லிய செய்தி-கல்லணையின் பெருமையை எடுத்துரைக்க வல்லதாகத் திகழ்கிறது.

முக்கொம்பு விழாவிற்குப் பின்னர்-திருச்சி நகருக்கு இரவு 10.30 மணிக்குச் சென்றோம். செவிக்கு உணவு இல்லாத போது வயிற்றுக்கும் ஈயப்படும் என்னும் மொழிக்கு இணங்க இரவு சிற்றுண்டி அருந்தினோம்.

மறுநாள் காலை 9 மணியளவில் சென்னையை நோக்கிப் புறப்பட்ட நாங்கள் திருவரங்கம் சென்று, அரங்கத்தம்மானைக் கண்டு களித்தோம். கம்பரது இராமாயணம் அரங்கேற்றம் செய்யப்பட்ட மண்டபத்தைக் கண்ணுற்ற போது-அந்த நாளில் வாழக் கொடுத்து வைக்க வில்லையே என்ற ஏக்கம் நம்மைத் தொட்டது.

ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்தின் திருப்பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாயக்க மன்னர்களில் ஒருவரான அச்சுத தேவராயர் என்பவரால் கி.பி. 1680ல் உருவாக்கப்பட்ட இது ராய கோபுரம் என வழங்கப்பெற்றது. விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் விளைவாக கோபுரம் முடிவு பெறாமல் நின்று விட்டது. தற்போது பல்வேறு மடங்களின் தலைவர்களின் முயற்சியால் ராஜகோபுரம் கம்பீரமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. 13 நிலைகள் கொண்ட இதன் மொத்த உயரம் 236 அடி ஆகும். இதுவரை [illegible] இலட்ச ரூபாய் [illegible] முடிவடைந்துள்ளன. மொத்தச் செலவு 52 இலட்சம் ரூபாய் ஆகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு துவக்கம் ஆகிய இத் திருப்பணி, 1982 அல்லது 1983ல் முடிவு பெறலாம். நாள்தோறும் ஏறக்குறைய 300 பேர் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஸ்ரீரங்கத்தை விட்டுப் புறப்பட்டு, சமயபுரம் வந்து சேர்ந்தோம். எங்களுக்கும் முன்னதாகவே அங்கு வந்து வரவேற்றார், ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலயத்தின் நிருவாக அலுவலரும், இந்து அறநிலையத் துறையின் துணை ஆணையாளருமாகிய திரு. வேலுச்சாமி அவர்கள். காரணம் சமயபுரம் மாரியம்மன் ஆலயமும் ஸ்ரீரங்கம் ஆலய நிருவாகத்தின் கீழ்தான் இருந்து வருகிறது.

சமயபுரத்தம்மன் பேருருவம் எவரையும் கவரத் தக்க அளவில் அமைந்திருக்கிறது. அன்று வெள்ளிக்கிழமையானபடியால் பக்தர்கள், அம்மனைத் தரிசிக்கவரிசை வரிசையாக நின்று கொண்டு இருந்தனர். பத்திரிகையாளர்களாகிய நாங்களும் அம்மனைத் தரிசித்து அகமகிழ்ந்தோம். நிருவாக அதிகாரி அவர்களால் வழங்கப்பெற்ற பிரசாதங்களையும்-சமயபுரத்தின் தல வரலாறு நூலையும் பெற்றுக் கொண்டு நன்றி கூறியவாறு உந்தில் அமர்ந்தோம்.

உளுந்தூர்ப்பேட்டையில் மதிய உணவு; வனத்துறையினரின் ஏற்பாடு. உணவுக்குப் பின்னர் வனத்துறை அலுவலர்கள் விடை பெற்றுச் சென்றனர். அவர்கள் அனைவருக்கும் நாங்கள் நன்றி தெரிவித்துச் சென்னை நோக்கிப் புறப்பட்டோம்.

வனவிலங்கு வார விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த சுற்றுலா இதழ்த் துறையாளர்களுக்கெல்லாம புதிய அனுபவத்தைத் தந்தது. சுற்றுப் பயணத்தின்போது வனத்துறை அலுவலர்கள் இதழ்த் துறையாளர்களை மிகவும் அன்புடன் உபசரித்ததை மறக்க முடியாது! அவர்களது தொண்டு, இதழ்த் துறையாளர்களின் இதயங்களை மகிழ்வித்தது.

தஞ்சை மாவட்ட வனத்துறை அலுவலர் திரு. கணேசன் அவர்களுக்கும், அவரது துறையைச் சேர்ந்த ஏனைய அலுவலர்களுக்கும் சுற்றுலாவை மிக நெறியுடன் நடத்திய மக்கள் தொடர்பு அலுவலர் திரு [illegible] கண்டன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துப் [illegible] சுற்றுலா நிகழ்ச்சிகள் பசுமை நிறைந்த நினைவுகளாக நெஞ்சத்திலே இன்னும் சுழன்று [illegible]றன.

# உலக சிக்கன நாள் விழா

சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி அரங்கில் 31.10.81 அன்று ''உலக சிக்கன நாள் விழாவும், சிறு சேமிப்பு நாவன்மைப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியர்க்கு பரிசுகள், வெற்றி பெற்ற கல்லூரி பள்ளிகளுக்கு சுழற் கேடயங்கள் சிறந்த சிறு சேமிப்பு முகவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கும் விழாவும்'' இணைந்து நடைபெற்றன. காயிதே மில்லத் அரசினர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் திருமதி இரா. இராஜேஸ்வரி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சிறோடும் சிறப்போடும் நடைபெற்ற இந்த இனிய விழாவுக்கு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி அவர்கள் தலைமை வகித்தார்.

''இதையொட்டி சிறுசேமிப்பு பற்றி கல்லூரி பள்ளி மாணவ-மாணவியர்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச்சுப்போட்டி நடந்தது. சட்டக் கல்லூரி-விவேகானந்தா கல்லூரி ஆகியவற்றை சேர்ந்த மாணவர்களுக்கு ''சுழல் கேடயங்கள்'' அளிக்கப்பட்டன. இதே போல் புனித ரபேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஏ.ஆர்.சி. பெண்கள் மேல் நிலைப் பள்ளி, டான்பாஸ்கோ மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றிலிருந்து பங்கு பெற்ற மாணவ-மாணவியர்களுக்குப் பரிசுகளும் சுழல் கேடயங்களும் வழங்கப்பட்டன.



மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பரிசுகளையும் கேடயங்களையும் அளித்து உரையாற்றினார். விழாவில் சிறுசேமிப்புத்துறை துணை இயக்குநர் திரு. பி. ஸ்ரீதரன் அவர்களும் தேசிய சேமிப்பு நிறுவனத்தின் தலைமை மண்டல இயக்குநர் என். சுப்பிரமணியன் அவர்களும் விழாவில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்.

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் உரை

விழாவில் பங்கேற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தமது உரையில்;

அமைச்சர்களாகிய நாங்கள் சிக்கனத்தையும் சிறு சேமிப்பையும் பற்றிப்பேசுவதைவிட, மாணவ-மாணவியர்களாகிய நீங்கள் அது பற்றி என்ன உணருகிறீர்கள் என் [illegible] இந்த பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. அதில் பங்கேற்கிற வாய்ப்பு கிடைத்தது. ''சிக்கனம்'' என்பது வெறும் பெயர் அளவில் மட்டுமல்ல என்பதை உணர வேண்டும். மனித வாழ்க்கையில் ''சிக்கனம்'' மிக அவசியம். அப்போதுதான் வாழ்க்கை நன்றாக அமையும். சேமிப்பும் சிக்கனமும் பணத்தில் மட்டும் இருந்தால் போதாது. எல்லாத் துறைகளிலும் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும். குழந்தைப் பருவத்திலே சிக்கனத்தைக் கற்றுக் கொடுக்கப் பள்ளிகளிலே இந்தத் திட்டம் தொடங்கப்படவேண்டும். இப்போது தமிழ்நாட்டில் 12 இலட்சம் மாணவர் - மாணவியர்கள் இந்த சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ளார்கள்.

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை'' என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லுக்கொப்ப சிக்கனமில்லாமல் வாழுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பிற்காலத்தில் [illegible] மத்தை அடைவார்கள் [illegible] பதைப் பல நிகழ்ச்சிகள் [illegible] காட்டியிருக்கின்றன. [illegible] கிராமத்திலும் பழமொழி [illegible] துண்டு. ''[illegible]



# அல்லல் இனி இல்லை

இந்நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. எனவே, இந்நாட்டின் ஒட்டு மொத்தமான வளர்ச்சி தனித் தனி கிராமங்களின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது. என்பதைக் கூற வேண்டியதில்லை. இந்தியாவில் வளமும், வளர்ச்சியும் கிராம மக்களின் வாழ்வில் ஏற்படும் எழுச்சியையும் மலர்ச்சியையும் பொறுத்தே அமையும் என்பது மறுக்க முடியா உண்மை. எனவே, ஒரு கிராமம் முன்னேற அதற்கு அத்தனை அடிப்படை வசதிகளும் தேவையானவை. இன்றியமையாதவை. ஒவ்வொரு கிராமமும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற்று ஒவ்வொன்றும் தன்னிறைவோடு திகழ வேண்டுமென அன்று அண்ணல் காந்தி அடிகளும், பேரறிஞர் அண்ணாவும் கண்ட கனவை இன்று தமிழக முதல்வரின் சீரிய தலைமையில் தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது.

கிராம மக்கள் வாழ்வில் புத்தொளி வீசச் செய்ய தமிழ் நாடு முதல்வர் அவர்கள் சிந்தையில் உதித்த தன்னிறைவுத் திட்டம் என்னும் தன்னிகரில்லாத் திட்டத்தை அளித்துள்ளார்கள். வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதிலும் அதை விரைவாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற இரு பெரும் கொள்கையோடு செயல்படும் இத்திட்டம் அனைத்து அரசுத்துறைகளையும் புதிய முனைப்போடு செயல்பட ஊக்குவித்துள்ளது என்பது காலம் காட்டிவரும் உண்மை.

**எச். பி. என். ஷெட்டி,**
**ஐ.ஏ.எஸ்.,**
**ஆணையாளர் மற்றும்**
**அரசுச் செயலாளர்,**
**ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை,**

காலைக் கடன்களைக் கழிப்பதற்குக் கூட தக்க இடமின்றி ஒளிந்தும் மறைந்தும், ஒதுங்கியும் பதுங்கியும் அல்லல்பட்ட கிராம மக்களின் சங்கடமான நிலை இனியும் தொடரக்கூடாது என்று கருதிய அரசு அதற்கான திட்டம் ஒன்றை 1980-81ஆம் ஆண்டிலிருந்து தன்னிறைவுத் திட்டத்தோடு இணைத்து நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பெண்களுக்காகத் தனிக் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன. தன்னிறைவுத்திட்டத்தின் முதற்கட்டம் 69 வட்டாரங்களில செயல்படத் தொடங்கி, வேலைகள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு விட்டன. இந்த 69 வட்டாரங்களிலும் சில ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஊராட்சிகளும் இரண்டு கழிவறைகள் விதம் 138 அறைகள் கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கழிவறைக் கட்டடத்திலும் 4 அறைகள் உண்டு. அவற்றின் பீங்கான் பேசின்கள் பொருத்தப்பட்டு, கதவுகளும் அமைக்கப்பட்டுள்ளன். கட்டட நீளத்திற்கு இணையாகத் தண்ணீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. கட்டடத்தின் கூரைக்குக் கான்கிரீட் இடப்பட்டு மழை, வெய்யிலிருந்து தகுந்த பாது காப்புச் செய்யப்பட்டுள்ளது. கழிவறைகள் பாதாளத் தொட்டியுடன் இணைக்கப்பட்டு, பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளன.

ஊராட்சியைச் சார்ந்த துப்புரவுப் பணியாளர் (பெண்) கழிவறைகளை நாள்தோறும் இரண்டு முறை துப்புரவுச் செய்வதுடன், தொட்டிகளில் தேவைக்கேற்ப நீரையும் நிரப்புவார். கட்டடத்தின் சுற்றுப்புறத்தையும் துப்புரவாக வைத்திருப்பதும் அவர் பொறுப்பாகும். இவருக்குத் தொடர்புள்ள, ஊராட்சி மாதந்தோறும் ஊதியம் அளிக்கும். இக் கழிவறைகளை பேணிக்காப்பது ஊராட்சிகளின் பொறுப்புக்களில் ஒன்றாகும்.

இக்கழிவறைகளைக் கட்டுவதற்கான செலவு முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. 1980-81ஆம் ஆண்டில் மட்டும் இத்தகைய கழிவறைகள் கட்டுவதற்காக ரூ.8.74 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. கழிவறைகள் கட்டும் இத்திட்டத்தை முதலில் மாதிரித் திட்டமாகத்தான் அரசு நிறைவேற்றத் தொடங்கியது. ஆனால், இத்திட்டம் மகளிரால் பெரிதும் வரவேற்கப்படுகிறது என்பதை ஓர் ஆய்வின் மூலம் அரசு அறிந்தது. மேலும் கட்டடங்கள் சூழ்ந்துள்ள இடங்களிலும், தேசிய -மாநில நெடுஞ்சாலைகளுக்கு அருகிலுள்ள ஊர்களிலும் நீர் வசதி நிறைந்த பகுதிகளிலும் பெருவாரியாக உள்ள கிராமங்களிலும் கட்டப்பட்டுள்ள கழிவறைகளைக் கிராம மகளிர் தவறாது பயன்படுத்தி வருகின்றனர். கழிப்பிட வசதிகளை கண்ணுற்ற பிற ஊர்களைச் சார்ந்த மகளிர் தங்களுடைய கிராமங்களிலும் இத்தகைய கழிப்பறைகள் கட்டப்படவேண்டும் என்று முறையிடத் தொடங்கிவிட்டனர்.


எனவே, கிராமத்திற்கு ஒரு கழிப்பிடம் என்ற வகையில் இம் மாநிலம் முழுவதிலுமுள்ள கிராமங்களில் ரூ. 23 கோடி செலவில் கழிவறைகள் கட்டும் மிகப்பெரிய திட்டமொன்று அரசின் ஆய்வில் உள்ளது.

சில கிராமங்களில் இக்கழிப்பறைகளை பெரும்பாலும் மாலை நேரங்களில் பயன்படுத்துவதால் இக்கழிப்பிடங்களுக்கு மின் வசதி செய்து தரப்பட வேண்டுமென்றும், தொட்டிக்குப் பதிலாகக் குழாய்கள் மூலம் நீர் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் வந்துள்ளன. இக்கோரிக்கைகளின் மீது அரசு விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

பெண்களுக்கான கழிப்பறைகள் கட்டும் இத்திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முறையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று கூறலாம்.

அண்மையில் தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த திட்டக்குழு உறுப்பினர் திரு முகமது பஸல், இத்திட்டத்தை வெகுவாகப் பாராட்டினார். இத்திட்டத்தின் இன்றியமையாமைக்கு இப்பாராட்டு ஓர் எடுத்துக்காட்டு.

# நூல் நயம்



**டி. வி. நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது எப்படி?**

**ஆசிரியர்:** வெ. நல்லதம்பி

**வெளியீடு:** வள்ளுவன் வெளியீட்டகம்,
40, மூன்றாவது கிழக்குத்தெரு,
காமராஜ் நகர், சென்னை-41.

**விலை:** ரூ. 5 **பக்கம்:** 100

டெலிவிஷனில் தோன்றவேண்டும் என்ற ஆசை யாருக்கு இல்லை. அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வழிசொல்லும் நூல்தான், டி.வி.நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது எப்படி' என்ற இந்த நூல்'.

தமிழில் வழிகாட்டும் நூல்கள் குறைவு என்று குறைபட்டுக் கொள்ளுவோர் மனக்குறையைப் போக்கும் வகையில் ஆசிரியர் நல்லதம்பி இந்நூலை எழுதியுள்ளார். திறமைகளை வளர்த்து கொள்ள அருமையான வழிவகைகளைக் கூறும் இந்நூலை இளைய தலைமுறையினர் அனைவருமே படிக்க வேண்டும். பொது அறிவுக்காக மேல்நிலைப் பள்ளிகள் நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் அனைத்திலும் கட்டாயமாக இடம் பெறவேண்டிய தகுதி உடையது இந்நூல்.

இந்நூலை படிக்கும் பொழுது ஒவ்வொரு துறையிலும் இது போன்ற நூல்கள் வளர வேண்டும் என்ற ஆசை நம் உள்ளத்திலே எழுகிறது. அந்த அளவுக்கு ஆசிரியர் சுவைபட செய்திகளை விளக்கியுள்ளார். இறுதியில் தரப்பட்டுள்ள படக்குறிப்புகளும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. ஒரு வழிகாட்டும் நூல் என்ற வகையிலும் இதனை வரவேற்பது நம் அனைவரது கடமையாகும்.

—மாமூலன்

## ராஜராஜன் சிலை உள்ள இடத்தில் அழகிய மண்டபம்!

தஞ்சை பெரியகோயில் அருகே ராஜராஜன் சிலை வைக்கப்பட்டு உள்ள இடத்தில் ரதம் போன்ற அழகிய மண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் கூறினார்கள்.

தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக் கழகம் தொடங்குவதையொட்டி தஞ்சை நகர வளர்ச்சிக்கு ரூ.35 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ராஜராஜசோழன் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவை அமைச்சரவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில், "தஞ்சை நகர வளர்ச்சிக்கு இந்த நகரசபை செய்துள்ள அனைத்துச் சேவைகளையும் பாராட்டுகிறேன்" என்றார்.

பேருந்து நிலையம் எதிரில் நகரசபைப் பள்ளிக் கூடத்தின் அருகில் ரூ. 8½ இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் கட்டப்படுகிறது என்ற தகவலையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



காரன்'' என்பார்கள். 'ஓட்டைக் கை' என்றால் கிடைப்பதை எல்லாம் செலவழிக்கிறவர் என்று அர்த்தம். கையை விரிக்க வேண்டிய நேரத்தில் விரிக்கவும், சேர்க்க வேண்டிய நேரத்தில் சேர்க்கவும் தெரிய வேண்டும். அப்படி இல்லாதவர்கள் எப்படி எல்லாம் அவதியுறுகிறார்கள் என்பதை அன்றாட வாழ்க்கையில் காண முடிகிறது. மனித வாழ்க்கையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சிறிய எறும்பு கூட தனக்குத் தேவையான ஆகாரத்தை முன்னதாக சேர்த்து வைத்துக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுள்ளது. ''சிறுதுளி பெருவெள்ளம்'' என்பதுபோல ''சேமிப்பு - சிக்கனம்'' என்ற பழக்கம் அனைவருக்கும் வர வேண்டும்.

**முன்னணியில் தமிழகம்:**

தமிழ் நாட்டில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது மூதாதையர்களுக்கு சேமிக்கிற உணர்வை வைத்திருந்தார்கள். கணவன் செலவுக்குத் தரும் பணத்தைக்கூட கிராமப்புறத்துப் பெண்கள் சிறுகச்சிறுகச் சேமித்து மிச்சப்படுத்தி அப்படி சேமித்த பணத்தைக் கொண்டு பொருள்களை வாங்குவார்கள். தங்கம்-பித்தளை, எவர்சில்வர் என்று பொருள்களைச் சேர்த்து வைக்கிறோம். அதனைப் போல சிறுக சிறுக சேமித்த பணத்தை வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டும். சிறு சேமிப்பில் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது. சிறு சேமிப்பு உணர்வைக் காப்பாற்றும் பொறுப்பு மாணவ-மாணவிகளிடம் தான் இருக்கிறது. ''சேமிப்பு சிக்கனம்'' என்று கூறி தேவைக்குக் கூட செலவு செய்யாமல் 'கருமி' யாகவும் இருக்கக் கூடாது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்க கற்றுக் கொண்டால் சேமபபு தானாக வந்துவிடும். மாணவ - மாணவிகள் கூட தங்கள் படிப்பிற்குத் தேவையான புத்தகங்களைக் கவுரவ பிரச்னையாகக் கருதாது பாதி விலை கொடுத்து வாங்கலாம். அப்படி வாங்குகிறவர்களும் இருக்கிறார்கள். பாதி விலையில் புத்தகங்கள் வாங்கும் போது எவ்வளவு பெரிய பொருளாதார பிரச்னை தீர்க்கப்படுகிறது என்பதை உணர முடிகிறது. 'விரலுக்கு தகுந்த வீக்கம்' என்பதுபோல - அவரவர் தகுதிக்கு ஏற்ப சேமிப்பு பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வங்கிகளுக்கோ அல்லது அஞ்சல்நிலையங்களுக்கோ போய்த்தான் மாணவ-மாணவியர்கள் சேமிப்பு நிதியைப் போட வேண்டும் என்ற நிலை இப்போது இருந்து வருகிறது. அதனை மாற்றி அந்தந்த பள்ளி - கல்லூரிகளிலேயே 'சேமிப்பு நிதி' யைப் போட முடியுமா? என்பதை இத்துறையினர் பரிசிலனை செய்ய வேண்டும். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உறுதுணையானது சேமிப்புதான். மாணவ மாணவியர்களின் விளையாட்டுக் கலை போன்ற இதர நடவடிக்கைகளுக்குப் போடப்படும் மதிப்பெண்கள் போல அதிகமாக 'சேமிப்பு நிதி' கணக்கு வைத்திருப்பவர்களுக்குத் தனியாக மதிப்பெண்கள் போட வேண்டும். மருத்துவம் என்ஜினியரிங் போன்ற தொழில் கல்வி படிககப் போகும் மாணவ - மாணவிகளுக்கு இந்த மதிப்பெண் உதவியாக இருக்கும். இதுபற்றி கல்வித் துறை பரிசிலனை செய்யவேண்டும்.

எந்த ஒரு பொருளையும் பாழாக்காமல் - வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். தண்ணீர் மற்றும் உணவுப் பொருள்களைச் சிலர் வீணாக்குவதை நம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை. மக்களுக்குத் தேவையான பொருள்களை அழிக்கிறவர்களைப் புறக்கணிக்க வேண்டும். இப்படி யார் செய்தாலும் அவர்களை உலகம் எதிரான குற்றவாளியாக அறிவிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

சென்னை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு இராம் வைகுந்தன் நன்றி கூறினார்.

தொகுப்பு: ஜி. ஆனந்தன்



வர் பக்கம்

# உயிர்களின் தோழர் நேரு

டேராடூன் சிறையில் நேரு இருந்தார். அவர் ஏன் சிறை வைக்கப்பட்டாரென்று தெரியுமா? இந்திய நாட்டை ஆண்டு வந்தனர் பிரிட்டிஷார். அவர்களுடைய ஆட்சி கூடாது. இந்திய நாட்டிற்கு விடுதலை வேண்டும் என்று போராடினர் மக்கள். அவர்களை அடக்க முயன்ற அந்நிய அரசாங்கம். சிறையிலிட்டது. அப்போதாவது, கொண்ட கொள்கையை விடுகிறார்களா என்று பார்க்க.

சிறைவாசம் மனமாற்றத்தை ஏற்படுத்துமா என்ன? நேருவும் பல முறை சிறையில் இடப்பட்டார். பெற்றோரை, உற்றாரைப் பிரிந்து மாதக் கணக்கில் வருஷக் கணக்கில் சிறையில் கிடக்க வேண்டும். இருந்த போதும் நேருஜி கலங்கவில்லை. சிறை வாழ்வையும் மனம் உவந்து ஏற்றுக் கொண்டார். அந்த வாழ்க்கைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார்.

அது மட்டுமா? சிறையில் தன்க்குச் சில நண்பர்களையும் ஏற்படுத்திக் கொண்டார். நண்பர்கள் யார் தெரியுமா? ஒரு சிறிய பூனைக் குட்டியும் ஓர் அழகான சடை நாய்க் குட்டியும்! பூனைக்குட்டி, சிறை அதிகாரி ஒருவருடையது. மிருதுவான உடம்பு; வென்று அடர்ந்த ரோமம். நீலமணிக் கண்கள்; சின்ன நாக்கை நீட்டித் தன் உடம்பெங்கும் சுத்தம் செய்து கொள்ளும். நேருவின் ஜன்னலருகில் நின்று ''மியாவ்'' என்று கத்தும். அந்தப் பூனைக்குட்டி நேருவை மிகவும் கவர்ந்துவிட்டது. அன்போடு அதைத் தடவிக் கொடுப்பார்; தட்டிக் கொடுப்பார்.

அந்த அன்பான பூனை அவரைப் பிரியும்படியாகிவிட்டது. பூனையை வளர்த்த சிறை அதிகாரிக்கு வேறு ஊருக்கு மாற்றலாகியது. பூனைக்குட்டியும் அவருடன் சென்றுவிட்டது.

நேருஜியால் அந்த அழகிய பூனைக்குட்டியை எளிதில் மறக்கவே முடியவில்லை. காலம் தான் மறக்கச் செய்தது.

அதே சிறையில் இன்னுமொரு சிறை அதிகாரி ஒரு பெண் நாய் வளர்த்து வந்தார். அவர் சிறையைப் பார்வையிட வருவார். உடன் அந்த நாயும் வரும். நேருஜியின் அறை வந்ததும், அந்த நாய் துள்ளிக் குதிக்கும்; வாலைக் குழைக்கும். நேருஜி சிரித்துக் கொண்டே கையை ஆட்டுவார் நாயைத் தட்டிக் கொடுப்பார். இப்படியாக அன்பு வளர்ந்தது.

அந்த அதிகாரிக்கும் மாற்றல் வந்தது. அவர் போகும்போது நாயை அங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். பாவம்! அந்த நாய்க்கு இருக்க இடமில்லை; உணவு கொடுப்பதற்கு யாருமில்லை. அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. நேருஜி அதைப் பார்த்து மனமிரங்கினார். அவரோ சிறைவாசி



அவரால் இயன்றதைத்தானே செய்ய முடியும்? அதற்குத் தன் உணவைப் பகிர்ந்து கொடுப்பார். நாயின் கண்களில் நன்றியும் அன்பும் மின்னும். அவர் தங்கியிருந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வரும். நேருஜியின் அறைக்கு அடுத்தாற்போல் ஒரு குப்பைக் குழி. அங்கே ஒரு நாள் பல குட்டிகளை ஈன்றது, அந்த நாய். தாய் நாயையும் குட்டிகளையும் கவனித்துக் கொண்டார் நேருஜி. அவருக்கு எத்தனையோ வேலைகள், கவலைகள், பொறுப்புக்கள்! அவற்றிடையே இந்தப் பணியையும் ஏற்றுக் கொண்டார்.

ஒரு நாள் இரவு. அங்கிருந்து மூன்று நாய்க் குட்டிகளுள் ஒன்றிற்குக் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டது. அது முனகி அழும் ஒலி கேட்டது. நேருவின் மனம் துடித்தது. அதற்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய முனைந்தார் நேரு.

அன்றிரவு அவருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. படுக்கையில் படுப்பார்: உடனே எழுந்திருந்து வருவார்; நாய்க்குட்டியைக் கவனிப்பார்; திரும்பிப் படுக்கைக்குச் செல்வார். இங்ஙனமே இரவு பூராவும் கழிந்தது. ஏறக்குறையப் பத்துப் பன்னிரண்டு முறை எழுந்து வந்திருப்பார் அவர். பொழுதும் விடிந்தது. நாய்க்குட்டியின் உடம்பும் குணமாகியது. நேருவின் மனம் குளிர்ந்தது. தாய் நாயும் மற்ற நாய்க்குட்டிகளும் ஆனந்தக் கூச்சலிட்டன. நேருவின் மனம் மேலும் குளிர்ந்தது.

(நன்றி: திலகவதி எழுதிய 'நேருவின் வாழ்விலே' என்னும் நூலிலிருந்து)





## நேரு பற்றிய செய்திப்படம்

**ப**ண்டித ஜவஹர்லால் நேருவைப் பற்றி இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டாகத் தயாரிக்கும் முழு நீளச் செய்திப் படத்தின் (டாகுமெண்டரி) படப்பிடிப்பு, அடுத்த ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்தில் துவங்கும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.

இத்தகவலை, புதுடில்லிக்கு வந்துள்ள ரஷ்ய திரைப்படக் குழுவின் தலைவரான பி. எம். பல்லோவ் தெரிவித்தார்.

பண்டித ஜவஹர்லால் நேருவை ஓர் அரசியல் தலைவர் என்னும் ரீதியில் மட்டுமின்றி, ஒரு பெரும் தத்துவ அறிஞர், தீர்க்க தரிசி என்னும் கண்ணோட்டத்தில் இப்படத்தில் சித்திரிக்கப்படும்.

இதற்கான திரைக் கதையை ரஷ்யாவைச் சேர்ந்த இந்திய இயல் அறிஞரான வி. ஜிம்யானின் என்பவர் தயாரித்துள்ளார்.

## அப்பாவின் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திய பிள்ளைக்கும் நோபல் பரிசு

**இ**ந்த ஆண்டு பௌதிகத்துக்கான நோபல் பரிசு இரண்டு அமெரிக்கர்களுக்கும், ஒரு ஸ்வீடன் ஆராய்ச்சியாளருக்கும் வழங்கப் பட்டுள்ளன.

இந்த நோபல் பரிசின் தொகை 1,80,000 டாலர். இதில் பாதித் தொகையை ஸ்வீடனில் உள்ள உப்ஸாலா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கேய் செய்க்பான் பகிர்ந்து கொள்வார். மீதி பாதித் தொகை அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அமெரிக்கப் பேராசிரியர் நிகலாஸ் ப்ளோம் பெர்கனுக்கும், ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆர்தர் ஸ்கோலாவுக்கும் சமமாகக் கிடைக்கும்.

''லேசர் கதிர்'' பற்றி ஆராய்ச்சிக்காக நிகலாஸ் ப்ளோம் பெர்கான், ஆர்தர் ஷாலோ ஆகியோருக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நோபல் பரிசு பெறும் ஸ்வீடன் பேராசிரியர் கேய் செய்க்பானின் தந்தைமான் கெய்க்பான் என்பவர் 1924ல் நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. எக்ஸ்ரே கதிரில் நிறமாலை ஆராய்ச்சிக்காக அப்போது அவருக்கு நோபல் பரிசு தரப்பட்டது. இப்போது அதன் அடிப்படையிலேயே அவரது மகனும் மேற்கொண்டு ஆய்வு நடத்தியதற்காக நோபல் பரிசு பெறுகிறார்.

இரசாயனத் துறையில் 1981-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு ஒரு ஜப்பானியப் பேராசிரியருக்கும், ஓர் அமெரிக்க ஆராய்ச்சியாளருக்கும் கூட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பானிலுள்ள கியோடோ பல்கலைக் கழகப் பேராசிரியர் கெனிச்சி புகுய், அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள கார்பெனல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரோல்ஸ் ஹாப்மன் ஆகியோர் இப்பரிசைக் கூட்டாகப் பெறுகின்றனர். அவர்களுக்கு 18,0000 டாலர் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

இரசாயன மாறுதல்கள் பற்றித் தங்களது தனிப்பட்ட ஆய்வுகளுக்காக இவர்கள் அப்பரிசுகளைப் பெறுகின்றனர்.

அப்பாவின் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திய பிள்ளைக்கும் நோபல் பரிசு



## விருந்தோம்பலுக்கு வழிகாட்டி

**பு**துதில்லி மாநகரில் வெளிநாட்டுத் தூதரகங்கள் நிறைந்துள்ள பகுதியில், இலேசான சிவப்பு வண்ணம் கொண்ட மாபெரும் அழகிய கட்டடம் காட்சி அளிக்கிறது.

தற்கால உலகத்தின் தலைசிறந்த ஆண்களும், பெண்களும் தங்கியுள்ள அந்தக் கட்டடம் தான் அசோக் ஓட்டல். சிவப்புக் கல்லில் அமைக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடு மிகுந்த குடைகள் இங்கு வருவோரை மிகவும் கவர்கின்றன.

உலகத் தலைவர்கள் முழங்கிய சமாதான சங்க நாதம் இந்த ஓட்டலின் மண்டபங்களில் எதிரொலித்திருக்கின்றன. இந்த ஓட்டலின் சொகுசு மிகுந்த அறைகளில் மிகப் பெரிய வர்த்தகப் பேரங்கள் நடத்தப் பட்டு வெற்றிப் பலனை அளித்திருக்கின்றன.

இந்த ஓட்டலின் அமைதியான சூழ்நிலையானது கலைஞர்களை ஈர்த்திருக்கிறது. நாட்டின் தலைசிறந்த கலைஞர்கள் இந்த ஓட்டலின் மண்டபங்களில் தங்கள் கலைத் திறமையை அரங்கேற்றியிருக்கிறார்கள்.

இணையற்ற ஆடம்பரத்திற்கும், தாராளமான கொடைவள்ளல் தன்மைக்கும் பெயர் போன அசோக சக்கரவர்த்தியின் பெயரை இந்த ஓட்டலுக்குப் பண்டித நேரு சூட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சூஎன்லாய், தலாய்லாமா, பிரஷ்னேவ், குருஷேவ், காஸ்டிரோ, ஐசனோவர், சுகர்னோ, ஜிம்மி கார்ட்டர் மற்றும் டானிகே, யாமினி கிருஷ்ணமூர்த்தி முதலானோர் இந்த ஓட்டலில் தங்கியும் அதன் அருமையான உணவு வகைகளைச் சுவை பார்த்தும் இருக்கிறார்கள்.

கடந்த 25 ஆண்டுக் காலத்தில் டெல்லியில் நடந்த ஒவ்வொரு சர்வதேச மாநாட்டின் தேவைகளை இந்த ஓட்டல் சிறந்த முறையில் பூர்த்தி செய்து பாராட்டுப் பெற்றுள்ளது. வயிற்றுக்கு மட்டுமல்லாமல் கண்ணுக்கும் கருத்துக்கும் சிறந்த விருந்தாக விளங்குகிறது இந்த சொகுசு ஓட்டலை இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது.

### நேரு பொன்மொழி

குழந்தைகள் மீது ஆசை கொண்டிருக்க வேண்டியது தான். ஆனால், அந்த ஆசை அளவுக்கு மீறிப் போனால், அது அவர்களைக் கெட்ட பழக்கங்களின் பாதையில் இழுத்து விடும்.

## ஒருமனப்படு!

ஒளிப்படம் பிடிக்கக் கல் தம்பி!
உணர்ச்சிக் கவிதை சொல் தம்பி!
கிளியிடம் பழச்சுவை கேள் தம்பி!
கிழவியின் பழங்கதை கேள் தம்பி!

நிலப்படம் முழுதையும் கற்றுணர் வாய்!
நின்மொழி யின்மேல் பற்று வைப்பாய்!
கலப்படம் கண்டால் உமிழ்ந்திடுவாய்!
கடுஞ்சினம் தீது கைவிடுவாய்!

மரஞ்செடி கொடிகள் நடு தம்பி!
மறைமலை யடிநெறி மடு தம்பி!
பரம்பொருள் மேல்பயம் விடுதம்பி!
பகுத்தறி வுச்சுடர் எடுதம்பி!

மருந்தகம் குருதி கொடு தம்பி!
மக்கள் துயரம் கெடு தம்பி!
அருந்தமிழ்க் கேஉயிர் கொடு தம்பி!
ஆணவம் அழிவாம் விடுதம்பி!

—சா. அடல்எழிலன்.



# கூபாபுல்- ஒரு அதிசய தீவன மரம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் கூபாபுல் என்ற அதிசய தீவனம் மரவளர்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கூபாபுல் என்றால் புல் என்ற ஒரு எண்ணம் சிலருக்கு இருந்து வருகிறது. இது தவறு. கூபாபுல் என்பது ஒரு மரம் ஆகும். வெளிநாட்டிலிருந்து வந்த மூங்கில் மரம் என்ற பொருளையுடைய ஒரு சொற்றொடர் கூபாபுல் ஆகும். கால்நடைகளுக்கு சிறந்த உணவாகவும், வீடுகளில் எரிப்பதற்கு விறகாகவும், வீடு கட்ட பயன்படும் மரமாகவும் இப்படி பலவிதங்களிலும் நன்மை பயக்கக்கூடிய ஒரு அதிசய தீவன மரம் கூபாபுல் ஆகும்.

இந்த மரம் ஹவாய், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் பெருத்த அளவிலே பயிர் செய்யப்பட்டு அங்குள்ள மக்கள் பெருவாரியாக பயன் பெறுகின்றனர். இதை இந்தியாவிற்கு கொண்டு வந்து ஐந்தாறு ஆண்டுகளே ஆகின்றன. மகாராஷ்டிராவில் ''உருளிக்கஞ்சன்'' என்ற இடத்தில் இது பயிர் செய்யப்பட்டு நல்லமுறையில் வளர்ந்து வருகிறது. இதன் நன்மைகளை உணர்ந்து மதுரை சிறுவிவசாயிகள் மேம்பாட்டுக் கழகமும் இதனை மதுரை மாவட்டத்தில் புகுத்துவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்து செயல்படுத்தி வருகிறது.

கூபாபுல் மரத்தினால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன என்ன என்பதைப் பற்றி இப்பொழுது ஆராயலாம். கூபாபுல் இலையில் புரதச்சத்து, வைட்டமின் 'ஏ.' சத்து அதிகமாகக் காணப்படுகிறது. மற்ற மாட்டுத் தீவனத் தழைகளில் 10 அல்லது 13 சதவிகிதம்தான் புரதச்சத்து இருக்கும். கூபாபுல் இலையில் கிட்டத்தட்ட 24 சதவிகிதம் புரதச்சத்து இருக்கிறது. இந்தத் தழைகளை மாடுகளுக்கு போடுவதால் பால் உற்பத்தி அதிகமாகப் பெருகுகிறது. புரதச்சத்தின் அளவிற்கு ஏற்பத்தான் பால் உற்பத்தி இருக்கும். ஆதலால், புரதச்சத்து கூடகூட பால் உற்பத்தியும் அதிகரிக்கின்றது. புண்ணாக்கிற்குப் பதிலாக இந்த தழைகளை மாடுகளுக்குப்போடலாம். இதனால் புண்ணாக்கு போன்றவற்றிற்கு ஆகும் செலவும் குறைகிறது. சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்-ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பல திட்டங்களில் ஆயிரக்கணக்கான ஆடுகளையும், மாடுகளையும் சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் வாங்கி வழங்கி உள்ளோம். இந்த மாடுகளை நல்ல முறையில் பேணிக் காக்க வேண்டுமென்றால் சத்தான உணவை அவைகளுக்கு வைப்பது அவசியம். நல்ல உயர்ரக மாடுகளுக்கு சத்தான உணவு அளித்தால்தான் நல்லமுறையிலே பால் கிடைக்கும் இதற்காகவே கூபாபுல் நடும் திட்டத்தை மதுரை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

கூபாபுல் வெகு உயர்ந்து வளரக்கூடிய மரமும் ஆகும். இரண்டு, மூன்று ஆண்டுகளிலேயே 30 அல்லது 40 அடி உயரத்திற்கு வளரக்கூடிய ஒரு அதிசயமரம் இது. இந்த மரத்தினுடைய கழிகளை வீடு கட்டுவதற்கு பயன்படுத்தலாம். அது மட்டுமல்ல; இதை விறகாகவும் பயன்படுத்தலாம். இதையொத்த மற்ற மரங்களைவிட கூபாபுல் மரத்திலிருந்து கிடைக்கும் விறகின் அளவு கிட்டதட்ட இரண்டு மடங்காக இருக்குமென்று புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. விறகுப் பஞ்சம் இருக்கின்ற நேரத்தில் இது பொது மக்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும். வேறு ஏதும் பயிரிட முடியாத தரிசு நிலங்களில் விறகுக்காக கூபாபுல்லைப் பயிரிட்டால் நல்ல வருவாய் கிட்டும்.

இந்த அதிசய மரத்தினால் மற்றுமொரு நன்மையும் விவசாயிகளுக்குக்கிடைக்கிறது. இது நைட்ரஜனை தான் வளர்கின்ற நிலத்தில் சேர்க்கும் தன்மையுடையதாக இருப்பதால், மண் வளம் அதிகரிக்கின்றது. ஒரு ஆண்டில் ஓர் ஏக்கரில் ரூபாய் 1,000 மதிப்புள்ள நைட்ரஜனை சேர்க்க வல்லது. தங்களுடைய நிலத்திற்கு இடவேண்டிய உரத்தில் அளவை விவசாயிகள் இதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம். மற்றுமொரு முக்கியமான பயன் இந்த மரத்தினுடைய தழைகளை நிலத்திற்கு உரமாகவும் பயன்படுத்தலாம்.

**ஆர். பூரணலிங்கம், ஐ.ஏ.எஸ்.**
**மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்**

மதுரை மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 40,000 கன்றுகளைப் பயிரிட மொத்தம் 3.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறுவிவசாயிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வேண்டிய நிதி வனத்துறைக்கு அளிக்கப்பட்டுஅவர்கள் இந்த கன்றுகளை தயாரித்து வருகின்றார்கள். ஏற்கனவே 5 இலட்சம் கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு விட்டன. இன்னும் 7 இலட்சம் கன்றுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. அவையும் விரைவில் விநியோகிக்கப்படும். இந்தக் கன்றுகளின் அடக்கவிலை 25 காசு ஆகும். இருப்பினும் விவசாயிகளின் நலன்கருதி 10 காசுகளுக்கே அவை வழங்கப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்ல; இந்த கூபாபுல் பயிரிடும் முறையையும், அதனுடைய பயன்களையும் விளக்க ஒரு சிறு கையேடு தயார்செய்து, அதுவும் விவசாயிகளுக்கு பெருத்த அளவிலே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கூபாபுல் மரங்களைச் சாலை ஓரங்களிலும் நடலாம். சாலை ஓரங்களில் நட்டால், அதனுடைய பயன் கிராம மக்களுக்கு நல்ல முறையிலே தெரியும் என்பதால்,ஒவ்வொரு ஒன்றியத்திலும் 5,000 மரங்களை சாலை ஓரங்களில் நடவேண்டுமென ஆணையாளர்களுக்கு அறிக்கைவிடப்பட்டிருக்கிறது.நடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் அனைவரும் கூபாபுல் மரத்தினைத் தங்களுடைய வயல்வரப்புகளின் ஓரத்தில் நட்டு பயனடையலாம்; அல்லது தங்களது நிலத்தில் ஒரு பகுதியை கூபாபுல் நடுவதற்காக ஒதுக்கி அதிலும் பயிர் செய்யலாம். ஆரம்பகாலத்தில் தண்ணீர் பாய்ச்சி வளர்த்தால் நல்ல பயன் கிடைக்கும். பால் கூட்டுறவு சங்கங்களும், பஞ்சாயத்து அலுவலகங்களும் இந்த கூபாபுல் கன்றுகளை வாங்கி நட்டால் பலரும் பயன்பெறலாம்.

மாடுகளுக்கு கூபாபுல்தழைகளை வழங்குவதில் ஒருசிறு எச்சரிக்கை. கூபாபுல் தழைகளில் 'மைமோசின்' என்ற ஒரு விஷச்சத்து இருக்கின்ற காரணத்தால் இந்த தழைகளை மற்ற தீவனங்களுடன் சேர்த்துத்தான் மாடுகளுக்குக் கொடுக்க வேண்டும். கூபாபுல் தழைகளை மட்டும் மாடுகளுக்குக் கொடுத்துவிடக்கூடாது. மற்ற வைக்கோல் போன்ற தீவனங்களுடன் சேர்த்து அளிக்கலாம். இதை விவசாயிகள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்



## வளரும் தமிழகம்

# மக்கள் பணியில் பதிவுத்துறை

**ஆர். சண்முக சிகாமணி, இ.ஆ.ப.**
**பத்திர பதிவுத்துறைத் தலைவர்.**

முற்காலத்தில் ஆவணங்கள் செப்பேடுகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் வரையப்பட்டன. பின்னர், ஆவணங்கள் ஓலைகளிலும் எழுதப்பட்டு வந்தன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆங்கில ஆட்சியின் போது 1802வது ஆண்டு 17வது Madras Regulation படி தற்போதைய பதிவு முறை நடைமுறைக்கு வந்தது. 1865-ஆம் ஆண்டு முதல் பதிவுத்துறை ஒரு தனித்துறையாகச் செயல்படத் துவங்கியது. 1908-ம் ஆண்டு இயற்றப்பட்ட Indian Registration சட்டம் படி தற்போது பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

பதிவுத்துறை என்ற பெயரைக் கொண்டு 'ஆவணப்பதிவு' மட்டும்தான் இத்துறையின் பணி என்று எண்ணிவிடலாகாது. ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரையில் நிகழ்கின்ற பல்வேறு நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்ட 12 சட்டங்களை இத்துறை நிர்வகித்துவருகின்றது. பிறப்பு, இறப்பு பதிவேடுகள் இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன.

திருமணச் சட்டங்களையும் இத்துறை செயலாற்றி வருகிறது. மாறிவரும் இன்றைய சமுதாயம் சிறப்பு திருமணச் சட்டம்அல்லது இந்து திருமண விதிகள், இவற்றில் ஏதாவது ஒன்றின் கீழ் பதிவுத்திருமணம் செய்வதை சிறிய அளவில் தான் ஏற்றுக் கொண்டுள்ளது. விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட பெரும்பாலான நம் நாட்டு மக்கள், சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும், பிடிபட்டுள்ளதால் தம் ஆயுள் காலம் முழுவதும் கடன்பட்டுள்ளனர் என்பது பொருளாதார வல்லுனரின் கணிப்பு. இத்தகைய அநாவசிய செலவுகளில் இருந்தும் கடன் தொல்லைகளிலிருந்தும் தங்களை விடுவிக்கும் பொருட்டு சட்ட ரீதியான பதிவுத் திருமணங்களை பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளுதல் நலம் பயக்கும். சமீப காலமாக திருமணச் சட்டங்களுக்கு புறம்பாக 'வாழ்க்கை ஒப்பந்தம்' என்ற பெயரில் சட்ட ஆதாரமற்ற திருமணப் பதிவுகள் நடைபெறுவது, மணமக்களுக்கு பாதுகாப்பு அளிக்க தவறுவதோடு குழந்தைகட்கும் சட்ட உரிமையை மறுப்பதாக அமைவதால் இத்தகைய வாழ்க்கை ஒப்பந்தப் பதிவுகள் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

வரதட்சணை தடுப்புச் சட்டமும் இத்துறையால் நிர்வகிக்கப்படுகிறது. திருமணங்களின் போது மணமக்களின் பெற்றோரிடமிருந்து வரதட்சணைகொடுப்பதும் வாங்குவதும் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரத்தக்க சட்டப் பூர்வமான குற்றம் ஆகும். இந்த சமூக இன்னலால் அவதியுறும் பெற்றோர்கள் வழக்குகள் தொடர இத்துறை அலுவலரின் உதவியை நாடலாம்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் சீட்டு நிறுவனங்கள் ஒரு வங்கியின் சேவையை ஏழை, எளிய மக்களுக்கு ஆற்றி வருகின்றன. இந்த சீட்டு நிறுவனங்களில் பரிசு பெறுபவர், உறுப்பினர் ஆகிய இவர்கள் பெற வேண்டிய தொகையைக் காலதாமதமின்றி பெற வகை செய்யும் Tamil nadu Chit Funds சட்டத்தையும் இத்துறை செயலாற்றி வருகிறது. பொதுவாக நடுத்தர மக்கள் தம் வாழ்நாள் முழுவதும் சேமித்து வைத்த பொருளை சில சீட்டு நிறுவனங்களிடம் இழந்து துயருறும் அவலநிலையைப் போக்குவதற்காக தமிழக அரசே, அரசுத் துறையில் Chit Corporation ஒன்றை விரைவில் துவக்க ஆணையிட்டு இருக்கிறது.


1932-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட Indian Partnership சட்டமும் இத்துறையால்செயலாற்றப்பட்டு வருகிறது. 1975ஆம் ஆண்டு Tamil nadu Societies Registration சட்டம் இத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கல்வி, இலக்கியம், விஞ்ஞானம், மதம், அறம், சமூக சேவை, கலைகள், பொழுதுபோக்கு, விளையாட்டு, கலாச்சாரம் போன்றவையின் மேம்பாட்டுக்கான 1979-80ம் ஆண்டில் மட்டும் மாநிலத்தின் 34,605 சங்கங்கள் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு 83 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வந்தன. இச்சங்கங்கள் ஆண்டுக்கு35கோடி ரூபாய் வருமானம் பெற்று வருகின்றன. அதில் சுமார் 4 கோடி ரூபாய் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ஆகும்.

Companies என அழைக்கப்படும் நிறுவனங்களில் சில் லாப நோக்கும் தொழில் நோக்கும் இல்லாதன. தமிழ்நாட்டில் மட்டும் இயங்கும் நோக்குடைய அத்தகைய நிறுவனங்களை முறைப்படுத்தும் Tamilnadu Non-Trading Companies Act. 1.7.81, முதல் அமலுக்கு வந்து, இச்சட்டத்தைச்செயலாற்றும் பொறுப்பும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின் தலையாய பணி ஆவணங்களைப் பதிவு செய்வது ஆகும். ஒவ்வொரு பதிவு அலுவலகமும் காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இயங்கினாலும் பொதுவாக ஆவணப் பதிவுக்கான பணிகள்காலை 10.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை தான் நடைபெறும்.

ஒரு நிலத்தை அல்லதுவீட்டை வாங்குவதற்கு முன் அதன்பேரில் அடமானம் போன்றவைகள் உள்ளனவா என்று அறியவும், அதன் கடந்த கால வரலாற்றை அறியவும் பொதுமக்கள் வில்லங்க சான்றிதழ்களைப் பதிவு அலுவலகங்களில் பெறுகின்றனர். வில்லங்க சான்றிதழ்களைப் துரிதமாகப் பெறுவதற்கு ஆவணங்களிலும், வில்லங்க மனுக்களிலும் வாங்கும் நிலம் அல்லது வீடு பற்றி கூடுமானவரை முழுமையான மற்றும் சரியான விவரங்களை அளித்தால் இவற்றை விரைவாக அவர்கள் பெற உதவி புரியும்.

1975 ஜூலைத் திங்கள் [illegible] ஆவணங்களின் [illegible]



# 1250 அடி உயரத்திலிருந்து...

மாமூலன்

இந்தியாவிலுள்ள அனைத்து தேசிய மாணவர்படை இயக்ககங்களிடையே எப்பொழுதும் சிறந்த பெயர் தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படைக்கு உண்டு.


இந்தச் சிறப்புக்குக் காரணமாக விளங்குபவர்கள் தமிழ்நாடு புதுவை மாநில தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவ மாணவிகளும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களும் தேசிய மாணவர் படையில் பணியாற்றும் அதிகாரிகளும் ஆவர்.

தேசிய மாணவர்படை இயககககங்களிடையே ஆண்டுதோறும் குடியரசு நாள் விழாவையொட்டி டெல்லி முகாமில்நடைபெறும் போட்டிகளில் பலமுறை வெற்றி வாகைசூடி வீரமுதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றிருக்கிறது தமிழ்நாடு என்.சி.சி. அணி. பயிற்சியிலும், கடமை உணர்வுடன் திறமையுடன் ஏற்ற பணிகளைச்செய்து முடிப்பதிலும் அறிவுக் கூர்மையுடன் தாம் கற்றதை எடுத்துரைப்பதிலும் வல்லவர்களாகத் திகழ்பவர்கள் தமிழ்நாடு என்.சி.சி. மாணவர் படையினர்.

இவ்வாண்டு ஆக்ரா அருகில் உள்ள Para Training school லில் பயிற்சி பெற்று 1250 அடி உயரத்துக்கு மேல் பறந்துகொண்டிருந்த விமானத்திலிருந்து பூமிக்கு 'பாராசூட்' மூலம் குதித்திருக்கிறார்கள். 1974-ஆம் ஆண்டு முதல் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஐந்து வாரம் பயிற்சி அளிக்கப்பட்டு, பின்னர் 1250 அடி உயரத்திலிருந்து பூமிக்குக் குதித்திருக்கிறார்கள்.

இப்பயிற்சி இவ்வாண்டு செப்டம்பர் 21-ஆம் நாள்முதல் அக்டோபர் 23-ஆம்நாள் வரை நடைபெற்றது. இப்பயிற்சிக்காக தமிழ்நாட்டிலிருந்து 16 மாணவர்களும் 3 மாணவிகளும் சென்றிருந்தனர். இப் பயிற்சிக்கு உரிய மாணவர்கள் சீனியர் டிவிஷன் என்.சி.சி. மாணவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.





கமமோடர் வி. ஜனார்த்தன்

கடுமையான போட்டிகளுக்கு இடையே தான் பாரா டிரெயினிங்கிற்கு மாணவ மாணவியர் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாட்டிலும் புதுவையிலும் ஒவ்வொரு பகுதியிலுமாக மொத்தம் 45 மாணவ மாணவியினர் முதலில் தேர்வு செய்யப்பட்டு அவர்களிலிருந்து 19 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

டி. பன்னீர்செல்வம்,
வெயின் ஜோன்ஸ்
ஆர். சீனிவாசன்
கே.ஜி.பினோ
வி.பத்மநாபன்
என். ஏழுமலை
இ. ராஜா
ஆர்.சிவசங்கர்.
எஸ். இளவரசு.
ஏ. ஜேம்ஸ்ராஜன்
டி. கண்ணன்
பி. ஆரோக்கிய மரியதாஸ்
வி. கிருஷ்ணமூர்த்தி
ஏ. செல்லபாண்டியன்
ஜே. சங்கர்ராமன்
வி. நடராஜன்

**மாணவியர்**

சென்னை ஸ்டெல்லாமேரி கல்லூரியைச் சேர்ந்த எலிசபெத் தாமஸ்.

கோவை நிர்மலாகல்லூரியைச் சேர்ந்த மரியம்மை.

மதுரை பாத்திமா கல்லூரியை சேர்ந்த செல்லம்மாள்.

ஆக்ரா 'பாரா பயிற்சி பள்ளியில் குதிக்கும் பயிற்சி பெற இந்தியா முழுமையிலிருந்தும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 212 மாணவர்களும், 48 மாணவியரும் வந்திருந்தனர். இவர்களில் பயிற்சி பெறும் பொழுதே இப் பயிற்சிக்குத் தகுதியில்லாதவர்கள் என்று 18பேர் நீக்கப்பட்டனர். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து சென்ற மாணவ மாணவியர் யாரும் நீக்கப்படவில்லை.

இப் பயிற்சியில் பங்கேற்ற டி. பன்னீர்செல்வம், ஆர். சீனிவாசன், வி. பத்மநாபன், வெயின் ஜோன்ஸ், எலிசபெத் தாமஸ் ஆகியோரே சந்தித்த பொழுது சொன்னார்கள்:—

''நாங்கள் பயிற்சி பெற்ற இடம் ராணுவத்தினர் பயிற்சி பெறுவதற்காக அமைக்கப்பட்டதாகும். காலையிலே எழுந்ததும் ஓட்டப்பந்தயம் நமக்கும் உடற்பயிற்சி உண்டு. 12 நாட்கள் கழித்து 'ரோலிங்' முறையைக் கற்றுக் கொடுத்தார்கள்.

பாராசூட்டிலிருந்து குதித்தவுடன் எப்படி நடந்தகொள்ள வேண்டும் எனும் ரோலிங்முறையில் ஆறுவிதம் உள்ளன.

சறுக்குமரத்தில் வளைந்து குதித்திடும் பயிற்சிகள், ஊஞ்சல் மூலம் குதிக்கும் பயிற்சிகள் என்று பலவிதமான அளிக்கப்படுகின்றன. Fan decent Test என்பது தான் மிக முக்கியம். அதில் தேர்ச்சி பெற்றுவிட்டால் பிறகு கவலையில்லை. விமானத்திலிருந்து கீழே குதிக்க பயப்படுகிறோமா என்பதைக் கவனிக்க விமானத்தில் அழைத்துச் சென்று காட்டுவார்கள். அப்பொழுது கதவுகள், ஜன்னல்கள் திறந்திருப்பதால் அச்சப்படுகிறோமா என்று கவனிப்பார்கள்.

## முதலில் குதித்தோம்!

பயிற்சி பெற்றவர்களில் முதலில் குதிப்பவர்களாக ராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். ஆனால், தமிழ்நாடு மாணவர்கள் மூன்றாவது அணியாகவே இருந்தோம். அவர்கள் சென்ற பொழுது பருவ நிலை காரணமாகக் குதிக்க முடியவில்லை. இரண்டாவது அணியினர் சென்ற பொழுது விமானத்தில் கோளாறு ஏற்பட்டது. எனவே, மூன்றாவது அணியினராக இருந்த நாங்கள் முதலில் குதிக்கின்றோம் என்று சொல்லி விமானத்தில் கிளம்பினோம்.

''பயிற்சிபெற்ற ஏறத்தாழ 240 மாணவ மாணவியரில் தமிழ்நாடு -புதுவை மாநில என்.சி.சி. யைச் சேர்ந்த நாங்கள்தான் முதலில் 1250 அடி உயரத்திலிருந்து குதித்தோம். முதலில் கொஞ்சம்





விதவைகள் மறு விவாகம் செய்து கொள்வதை நான் ஆதரிக்கிறேன். ஆனால், அது விஷயத்தை அவரவர்கள் இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டும்.

* * *


நாம் ஒரு கடவுளையோ அல்லது பல கடவுளர்களையோ நம்புகிறோமா, இல்லையா என்பது கேள்வி இல்லை. நாம் இறுதியாக இலட்சியம் என்பதில் நம்பிக்கை கொள்கிறோமா இல்லையா என்பதுதான் முக்கியமானது,

* * *

நான் இன்னும் சில ஆண்டுக் காலமே நீடித்திருக்கக் கூடும். ஆனால், எனது ஆசை எல்லாம், எனது இறுதிநாள் வரைக்கும் மிகவும் கடினமாக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான்.

* * *

எனக்கு சிவப்பு ரோஜாப் பூக்கள் மிகவும் பிடிக்கும். அவற்றை முதன் முதல் எப்போது எனது சட்டைப் பொத்தான் துவாரத்தில் செருகிக் கொள்ள ஆரம்பித்தேன் என்பது ஞாபகமில்லை!



அச்சமாகத் தோன்றினாலும் குதித்தோம்.

''இப்பயிற்சியில் இரண்டாவது முறையாகக் குதிக்கும் பொழுது தான் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவம் ஏற்பட்டது. 18 செகண்டுக்குள் விமானத்திலிருந்த அத்தனைப் பேரும் வரிசையாகத் தொடர்ந்து குதித்து விடவேண்டியிருந்ததால் ஒருவித வேகமும் துடிப்பும் இருந்தது.

''தேர்வு நிலையில் மிக வெற்றிகரமாகச் செய்தோம். இறுதி நாள் விழாவின்பொழுது தேசிய மாணவர் படையின் டைரக்டர் ஜெனரல் வந்திருந்தார் அவர் முன்பு தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களும், மூன்று மாணவியரும் மீண்டும் 1250 அடி உயரத்திலிருந்துகுதித்துக்காட்டினோம்.

''தமிழ்நாட்டிலிருந்து மாணவர் படைக்கு மாணவர் டி. பன்னீர் செல்வம் தலைவராக இருந்தார்.

''எங்களைப் போன்று தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்கள் முதன்மையாக வந்து இப்பயிற்சியைப் பெறவேண்டும். இஃது ஓர் அருமையான அனுபவம்'' என்றார்கள் ஒருமித்த குரலில்.

''இப்பயிற்சிக்கு வந்திருந்த வெளி மாநில மாணவர்களில் சிலர் கடைசி நேரத்தில் குதிக்க அஞ்சினர். மறுத்து விட்டனர். ஆனால் நாங்கள் அப்படி அல்ல. எல்லோருமே குதித்தோம்.

**கம்மோடர் வி. ஜனார்த்தன்**

தமிழ்நாடு - புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்குநரான கம்மோடர் வி. ஜனார்த்தன் **AVSM** (இந்திய கப்பற் படை.) இப்பயிற்சிப் பற்றி சொன்னார்:—

''ஆக்ராவில் ஐந்து வாரக் கால அளவுக்குப் பயிற்சி கொடுக்கப் பட்டு வரும் 1250 அடி உயரத்தில் விமானத்திலிருந்து குதிக்கும் பயிற்சி தேசிய - மாணவர் படையினருக்கு அளிக்கப்படும் துணிவுமிக்க பயிற்சியாகும். மிக முக்கியமான பயிற்சியும் கூட இது.

''விமானத்திலிருந்து பாராசூட் மூலம் குதிக்கும் இப்பயிற்சியில் பங்குபெற தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் மிக ஆவலாக உள்ளனர். ஏறத்தாழ இவ்வாண்டு பங்கேற்ற 250பேர்களில்தமிழ்நாடு-புதுவை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் 19 பேர். இன்னும் அதிகமான என். சி.சி. மாணவர்களுக்கு எதிர் காலத்தில் இப்பயிற்சி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அடுத்த ஆண்டே இப்பொழுது இருப்பதைவிட இரண்டு மடங்கு அளவு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வாய்ப்பு ஏற்படலாம் என்று நம்புகிறேன்.

உண்மைதானே, ஆர்வமும் திறமையுமிக்க தேசிய மாணவர் படையினருக்கு இதில் நிறைய வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும்.

**தமிழ்நாடு அரசின் உதவி**

விமானத்திலிருந்து பாராசூட் மூலம் குதிக்கும் பயிற்சி பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு ரூ. 500 மதிப்புள்ள 'கோட்டு' வழங்கு கிறது.

இவ்வாண்டு வீரச்செயலான இப்பயிற்சி பெற்று திரும்பிய மாணவ மாணவியருக்கு 25.10.81 அன்று தமிழ்நாடு அரசின் கல்வித்துறை ஆணையர் செயலாளரான திரு சி. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அக்கோட்டுகளை வழங்கினார்.

வீரச் செயலில் ஈடுபட்டு வெற்றிக்கொடி நாட்டும் துணிவுமிக்க நமது தேசிய மாணவர் படையினரை நாமும் பாராட்டுவோம்! நாளும் இத்துணிவும் வெற்றியும் தொடர வாழ்த்துவோம்!






# தமிழ்நாட்டின் 47வது தொழிற்பேட்டை


**என். தில்லைகோவிந்தன்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (தகவல்)
பெரியார் மாவட்டம்.


**சு**யமரியாதைச் சுடர் தந்தை பெரியார் அவர்களின் பெயரால், அண்ணாவின் அரசுதோற்றுவித்த பெரியார் மாவட்டம் தாராபுரத்தில், தமிழ்நாட்டின் 47-வது தொழிற்பேட்டையின் தொடக்க விழா கடந்த 18-10-81-ஆம் நாள் மாலை சீரோடும் சிறப்போடும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமையேற்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் தன்னுடைய தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''இன்றைக்கு இந்த அரசு கிராமப்புறங்களில், குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இதுபோன்ற தொழிற்பேட்டைகளை அமைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. இங்கே ரூபாய் 14 இலட்சம் செலவில் 32 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்பேட்டை வளர்ச்சியடைந்து, இதுபோன்ற இன்னும் பல தொழிற்பேட்டைகள் ஏற்படுவதற்கு ஏற்ற வகையில் இந்தத் தொழிற்பேட்டையை நன்கு பயன்படுத்த வேண்டும். ''அரசின் சொத்து மக்களின் சொத்து'' என்ற எண்ணம் பொது மக்களிடம் வளர வேண்டும்''.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தொழிற்கூடங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரையில், குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காகக் கடந்த நான்கு ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பினைப்பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இன்றைக்கு இதுபோன்ற தொழிற்பேட்டைகளை அமைப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளார். தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுகளில் ஆயிரம் தொழிற் கூடங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பொறுப்பு ஏற்ற நான்கு ஆண்டுகளில் 500 புதிய தொழிற் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்நிலை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

''இன்று இங்கே அமைக்கப்பட்டுள்ள 32 தொழிற்கூடங்களில், 18 தொழிற்கூடங்கள் பட்டு நூல் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோல் ஒரே இடத்தில் 18 தொழிற்கூடங்கள் பட்டு நூல் உற்பத்திக்காக இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். இனி தாராபுரம் பகுதியில் உள்ள விவசாயிகள் பட்டுப்புழுக்களை எடுத்துக்கொண்டுஒசூருக்கு அலைய வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு பட்டு நூல் உற்பத்திக்கு என்று தனி இயக்குநரை நியமித்து அவருடைய அலுவலகத்தையும் சேலத்தில் அமைத்திருக்கிறோம். தர்மபுரியில் உள்ள விவசாயியும் தாராபுரம் போன்ற மற்ற ஊர்களில் உள்ள விவசாயியும் இயக்குநரைத் தேடி சென்னை வரவேண்டியதில்லை.

''உங்களுடைய நன்மையைக் கருதித்தான் பட்டுப்பூச் செடி அதிகமாகப் பயிரிடப்படுகின்ற

வர்கள் உரிமம் பெற்றவராக இருக்கவேண்டும் என்ற 1971ஆம் ஆண்டு Tamilnadu copy writers Licence விதிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஆவணங்களைப் பொறுத்தவரை யார் வேண்டுமானாலும் அவற்றை எழுதலாம் என்ற இன்றைய நடைமுறை மக்களை பல இன்னல்களுக்கு ஆளாக்கி வருகிறது. குறிப்பாக ஆவணங்களை எழுதுபவர்கள், விற்பவர்கள் அல்லது வாங்குபவரின் கருத்துக்களைச் சரியாகப்புரியாமலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ ஆவணங்களின் தன்மையை தவறாக எழுதிவிடுகின்றனர். எனவே குமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை வட்டத்தில் உள்ள நடை முறையைப் பின்பற்றி மாநிலம் முழுவதும் ஆவணம் எழுதுபவரும் உரிமம் பெற்றவராக இருக்கவேண்டும் என்று வகைப்படுத்த Documentary writers Licence விதிகள் விரைவில் அமலுக்கு வர உள்ளன.

வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பிறகு Indian Stamp சட்டத்தின் நிர்வாகம் முழுவதும் 1980 ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் பதிவுத்துறைத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முத்திரைத் தாள்கள் தற்போது முன்னோடித் திட்டமாக 75 பதிவு அலுவலகங்களிலும் நீதி மன்ற கட்டண வில்லைகள் அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உரிய முத்திரைத்தாள்கள் குறைவாக அல்லது பற்றாக் குறையாக எந்த இடத்தில் இருப்பின் குறைவு முத்திரைத் தொகையை பணமாகப் பெற்று பத்திரங்களைப் பதிய பதிவாளர்களுக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படும் ஆவணங்களில், சிறப்பாக Sale மற்றும் Settlement ஆவணங்களில் சந்தை மதிப்பின் மீதே முத்திரை வரி விதிக்கப்படுகின்றது. நிலத்தின் மதிப்பு, கட்டிட மதிப்பு ஆகியவைகளைக் காட்டும் வழிகாட்டிப் பதிவேடுகள் அனைத்து பதிவு அலுவலகங்களிலும் உள்ளன. ஆவணங்களில் கண்ட நிலம் அல்லது வீட்டைப் பற்றிய உண்மை மதிப்பைத் தெரிவித்தால் அரசுக்கு முத்திரை தீர்வை இழப்பைத் தவிர்க்கவும், ஆவணங்களை விரைவில் பதிவு செய்வதற்கும் ஏதுவாக இருக்கும்.

ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களும் ஏனைய சமுதாயத்தை சேர்ந்த அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் கடன் பெறுவதற்கு பதிவுச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க முழுக் கட்டணத்தையும் முறையே முழுச் சலுகையாகவும், பாதிக் கட்டணச் சலுகையாகவும் பெறலாம் என ஒவ்வொரு ஆண்டும் அரசு அறிவித்து கணிசமான சலுகை அளித்து வருகிறது.

1981ஆம் ஆண்டு ஜனவரிவரை இத்துறையில் 41 மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் 9 ஆய்வாளர்கள் மட்டும் பணியாற்றினர். தற்போது 84 மாவட்ட பதிவாளர்கள் மற்றும் 10 ஆய்வாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இத்துறையின் நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்கும் முயற்சியின் கீழ் வேலூர், கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகர்களைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்படுகின்ற 4 சரகங்கள், 1.8.81 முதல் 4 துணைப் பதிவுத்துறைத் தலைவர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆவணங்களைப் பதிவு செய்யும் வசதியை நல்க, பதிவுத் துறை தற்போது 492 பதிவு அலுவலகங்களை மாநிலம் முழுவதும் கொண்டது. எனவே மக்கள் தாங்கள் வசிக்கும் இடங்களில் இருந்து 5 அல்லது 10 மைல் தொலைவில் பதிவு அலுவலகத்தின் சேவைகளைத் தங்குதடையின்றி பெறலாம்.

இந்த தொன்மையான துறையில் உள்ள சுமார் 5,000 அலுவலர்கள் "வளரும் தமிழகத்தில்' இன்னும் பெருமளவில் சீரோடும் சிறப்போடும் நேர்மையோடும் பணியாற்றிட மக்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறேன்,

[நன்றி: சென்னை வானொலி 6.9.81]

## சிறுதொழில் செய்ய குறைந்த வட்டிக்குக் கடன் வசதி

சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் புரியும் கைவினைஞர்களுக்குக் கூட்டுறவு நகர வங்கிகள் தற்பொழுது கடன் வழங்கி வருகின்றன. இக்கடன்கள் 10 முதல் 15 சதவீத வரையிலான வட்டிக்குத் தரப்படுகின்றன. நலிந்த நிலையில் உள்ளவர்களுக்கு இக்கடன்களை மிகக் குறைந்த வட்டிக்கு அதாவது, ஆண்டொன்றிற்கு 4 சதவீத வட்டிக்குத் தர, தமிழக அரசு திட்டமொன்றை நிறைவேற்ற உள்ளது. இக்கடன்கள் குறிப்பாகக் கீழ்க் கண்ட தொழில்களை மேற்கொள்ள வழங்கப்படும்:—

1. நகை செய்தல்
2. தச்சு வேலை
3. மண்பாண்டம் செய்தல்
4. தையற் கலை
5. ரொட்டி தயாரித்தல்
6. கயிறு பின்னுதல்
7. தோல் பொருள் தயாரித்தல்
8. எண்ணெய் எடுத்தல்
9. நோட்டுப்புத்தகம் - பைண்டிங் செய்தல்
10. ஊறுகாய், அப்பளம் போன்ற பொருள்கள் தயாரித்தல்.

இக்கடன்கள் நபர் ஒன்றுக்கு 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படும். 5,000 ரூபாய் நடைமுறை மூலதனக் கடனாகவும், மீதி 2,000 ரூபாய் காசுக் கடனாகவும் வழங்கப்படும். தனி நபர் ஜாமீன் பேரில் வழங்கப்படும் இக்கடன்களை ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம். ஆண்டு ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரையில் வருமானம் பெறும் நகர்ப்புற மக்களுக்கும் 2,500 ரூபாய் வரையில் வருமானம் பெறும் கிராம மக்களுக்கும் இந்தக் குறைந்த வட்டிக் கடன்கள் வழங்கப்படும்.

இத்திட்டம் முதற் கட்டமாக நகர்ப்புறங்களில் அரசு முதலீடு செய்துள்ள 64 கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாகவும், கிராமங்களில் 26 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்படும். இத்திட்டம் பற்றி மேற்கொண்டு விவரங்களை அருகில் உள்ள கூட்டுறவுச் சரகத் துணைப்பதிவாளர் அலுவலகத்திலிருந்தோ அல்லது மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்திலிருந்தோ தெரிந்து கொள்ளலாம்.

நகர்ப்புறங்களிலும், கிராமங்களிலும் உள்ள நலிந்த கைவினைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் தமது கடன் தேவைகளைப் பெற்று, தம் தொழில்களை வளர்த்துப் பயனடையலாம்.

# சென்னை நகருக்கு அதிகக் குடிதண்ணீர்

சென்னையை அடுத்துள்ள தாமரைப்பாக்கத்திலிருந்து நிலத்தடி தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இந்தத் திட்டம் ஒருகோடியே 21 லட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக ராயபுரம் அண்ணா பூங்காவில் ஒன்றரைக் கோடி லிட்டர் தண்ணீர் கொள்ளக் கூடிய இரண்டு தரைமட்டத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. அந்தத் தண்ணீரை மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு ஏற்றுவதற்கு புதிய நீரேற்று நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. புதிய நீரேற்று நிலையத்தை 30.9.'81 அன்று மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில் சென்னை கடற்கரை சாலை(காமராஜ்சாலை) சிங்கப்பூரிலுள்ள சாலைகள் போல சுத்தமாக வைத்துக் கொள்ளும் புதிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

விழாவுக்கு மாண்புமிகு தொழிலாளர் நலம்-வீட்டு வசதி நீர்வழங்கு துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது உரையில், சென்னைக்கு குடிதண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள "ரெட்ஹில்ஸ்" ஏரியில் 59 சதவிகிதத் தண்ணீர் ஆவியாய்ப் போய்விடுகிறது. ஆவியாய்ப் போவதைத் தடுக்க அரசு புதிய திட்டம் போட்டுள்ளது என்று குறிப்பிட்டார். விழாவில் இத்துறைப் பொறியாளர் திரு வரதராஜன், சென்னை பெருநகர் நிர்வாக இயக்குநர் திரு யு.எஸ். நடராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

### திட்டத்தின் விவரம்

சென்னை நகருக்கு நீண்ட கால அடிப்படையில் அதிக அளவு, குடிநீர் வழங்குவதற்கான பல்வேறு திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. உடனடியாக அரசு ரூ. 121 லட்சம் மதிப்பீட்டில் மணலியிலிருந்து அண்ணா பூங்கா (இராபின்சன் பார்க்)வரை தாமரைப் பாக்கம் துளைக்கிணறுகளிலிருந்து நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் (8 மில்லியன் காலன்) நீரைக் கொண்டுவருவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின்படி தாமரைப்பாக்கம் துளைக் கிணறுகளிலிருந்து மணலி தொழிற்பேட்டைக்கு வழங்குவதற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 600 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட எஃகுக் கம்பிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் (ஆர்.சி.சி.) இரட்டைக் குழாய்களிலிருந்து நாளொன்றுக்கு 8 மில்லியன் காலன் நீரை நேரடியாகப் பெற இயலும். நாளொன்றுக்கு 8 மில்லியன் காலன் என்ற அளவில் எடுக்கப்படும் நீர் அனைத்தும் 750 மில்லி மீட்டர் விட்டமுள்ள வார்ப்பு





இரும்புக் குழாய்கள் மூலம் கொணர்ந்து அண்ணா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட நீர்த் தேக்கங்களுக்கு கொணர்ந்து சேமிக்கப்படும். இந்த நீர்த்தேக்கங்களில் குளோரின் சேர்ந்த பிறகு நீர் இறைவைகளின் (பம்புகள்) மூலம் இறைக்கப்பட்டு பொது மக்களின் உபயோகத்திற்காக ஏற்கனவே உள்ள பொதுப்பகிர்வுக் குழாய்களில் விடப் படும். மணலியிலிருந்து குழாய்கள் கத்திவாக் கம் பெருஞ்சாலை, கண்ணன் தெரு, டாக்டர் விஜயராகவலு வீதி, திருவொற்றியூர் நெடுஞ் சாலை மற்றும் சிமெட்டரி சாலை வழியாக அண்ணா பூங்காவிற்குப் பதிக்கப்பட்டுள்ளன. பக்கிங்ஹாம் கால்வாயைக் கடக்கும் இடத்தில் இதற்கெனவே அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் படுக்கைப் பாலம் அமைத்து அதன் மீது இக்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இத்திட்டம் முழு அளவில் முடிக்கப்பட்டு இப்போது செயல்பட உள்ளது. இத் திட்டத் தால் தற்போது நகருக்கு வழங்கிவரும் குடி நீரின் அளவு சற்றொப்ப 16 விழுக்காடு அதி கரிக்கும். இதனால் வட சென்னையில் மாநக ராட்சிக் கோட்டங்கள் 2 முதல் 21 மற்றும் 45 இல் அடங்கிய வண்ணாரப்பேட்டை, இராயபுரம், தண்டையார்ப்பேட்டை ஆகிய இடங்களில் வசிக்கும் சுமார் 4.5 இலட்சம் மக்கள் பயனடைவர்.

கீழ்நிலைத் தொட்டிகள்

| விவரம் | எண்ணிக்கை | அளவு | கொள்ளளவு | ஆழம் |
|---|---|---|---|---|
| ஏற்கனவே இருக்கும் தொட்டிகள் | 2 | 45.1 மீ. | 9 | 3.65மீ. |
| கூடுதல் தொட்டிகள் (இரு அறைகள் கொண்டது (மதிப்பீடு ரூ.21.50 இலட்சம்) | 2 | 49.7 மீ. 45.1 மீ. | 14.1மில்லியன் லிட்டர் | 3.65 மீ. |

புதிய நீரிறைக்கும் நிலையம்
மதிப்பீடு: ரூ. 2 93 இலட்சம்

நிலைய அளவு: 21.20 மீ. 10.06 மீ.
நீரிறைக்கும் இயந்திரங்களின் விவரம்

| விவரம் | எண்ணிக்கை | உயர் அழுத்தம் | விசைத் திறன் |
|---|---|---|---|
| ஏற்கனவே இருக்கும் பம்பு செட்டுகள் | 3 | 24.38 மீட்டர் | 155 எச்.பி. (ஒவ்வொன்றும்) |
| புதிய பம்பு செட்டுகள் (மதிப்பீடு ரூ. 8.8இலட்சம் | 3 | 24.38 மீட்டர் | 120 எச்.பி. (ஒவ்வொன்றும்), |

வட்ட வடி சேமத்தொட்டி

விட்டம்: 6 மீட்டர் ஆழம்: 6.4 மீட்டர் மதிப்பீடு: ரூ.0.99 இலட்சம்.



# செங்கை மாவட்டம்:

# தன்னிறைவுத் திட்டம்

கிராமங்களின் வளர்ச்சிக்கான தன்னிறைவுத் திட்டத்தில் முதற்கட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு ரூபாய் 402.17 இலட்சம் மதிப்பீட்டில் 1019பணிகள் முடிக்கப்பட்டன.

| பணிகளின் விவரம் | செலவுத் தொகை (ரூ. லட்சத்தில்) | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| குடிநீர் வசதி | 227.98 | 375 |
| இணைப்புச் சாலைகள் | 108.64 | 731 |
| சிறு பாசனங்கள் | 5.94 | 330 |
| ஆதிதிராவிடர் காலனி மற்றும் மயானப்பாதைகள் | 23.04 | 328 |
| சிறு பாசனங்கள் | 5.41 | 76 |
| ஊரக மருந்தகங்கள் | 2.75 | 7 |
| தாய்சேய் நல விடுதிகள் | 7.76 | 14 |
| பள்ளிக்கூட கட்டடங்கள் | 20.00 | 50 |
| பெண்களுக்கான தனி கழிப்பிடம் | 0.63 | 10 |
| மொத்தம் | 402.17 | 1919 |

தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாகப் பத்து ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு ரூ. 409.52 இலட்சம் செலவில் 1,775 வேலைகள் எடுக்கப்பட்டு வேலைகள் செயலில் உள்ளன.

| பணிகளின் விவரம் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| (1) இணைப்புச் சாலைகள் | 669 |
| (2) சிறு பாலங்கள் | 443 |
| (3) ஆதிதிராவிடர் காலனி மயானங்களுக்குச் சாலைகள் | 353 |
| (4) சிறு பாசன ஏரிகள் | 151 |
| (5) ஊரக மருந்தகங்கள் | 9 |
| (6) தாய்சேய் நல விடுதி | 50 |
| (7) பள்ளிக் கட்டடங்கள் | 100 |
| மொத்தம் | 1775 |

மக்கள் நலம் காக்கும் வளர்ச்சிப்பணிகள் ஓங்குகின்றன.

சாதி மத பேதம் இல்லாத சமுதாயம் மலர்வதற்குச் சமத்துவத் திட்டங்கள் வழி காட்டுகின்றன.

## ஆதி திராவிடர் நலம்

1. ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியது.

(அ) நிலம் கையகப்படுத்தியது (32 கிராமங்களில்)—67.67 ஏக்கர்.

(ஆ) பட்டா வழங்கப்பட்டு பயன் அடைந்த குடும்பங்கள்—1,500

(இ) இதற்கான செலவுத் தொகை—ரூபாய் 4,74,188.00.


2. குடியிருப்பு வசதிகள்

| | | குடியிருப்புகள் |
|---|---|---|
| (அ) | குடிநீர் வசதி செய்து கொடுத்தது | 45 |
| (ஆ) | மயானப் பாதை அமைப்பு | 8 |
| (இ) | இணைப்புப் பாதை—கிராமப் பாதையுடன் இணைப்பு | 34 |
| (ஈ) | வானொலிப் பெட்டி வழங்கியது | 9 |

3. விவசாயம் வியாபாரம் செய்ய வசதி செய்து கொடுத்தது:

(அ) உழவு மாடுகள் வழங்கியது (இலவசமாக)

| | | பேர்கள் |
|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் | 21 |
| 2 | பழங்குடியினர் | 12 |
| 3 | மதம் மாறிய கிறிஸ்தவர்கள் | 3 |
| 4 | சிறு வியாபாரம் செய்ய | 27 |
| 5 | இதற்கான செலவு | ரூ. 55,000. |



பகுதிகளுக்கு மத்திய இடமான சேலத்தில் இயக்குநர் அலுவலகத்தை அமைத்து உள்ளோம். விவசாயிகள் இருக்கும் இடத்திற்கே அதிகாரிகளை அனுப்பி வைத்து அவர்களின் தேவையை அறிந்து உதவி செய்ய வேண்டும் என்பது தான் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் கொள்கையாகும்.

''1978-ம் ஆண்டில் பட்டுத் தொழிலுக்குத்தேவையான முசுக்கொட்டை உற்பத்தி அளவு 5 ஆயிரம் ஏக்கர் தான். ஆனால் அண்ணாவின் அரசு பதவியேற்ற இடையில் ஏற்பட்ட தடங்கல்களையும் கழித்து சுமார் 4 ஆண்டுகளில் முசுக்கொட்டை உற்பத்தி 45 ஆயிரம் எக்கரில் பயிர் செய்யப்படுகின்றது. மேலும் இம் மாவட்டத்தில் 50 தொழிற்கூடங்கள் துவக்க ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

தாராபுரம் பக்கம் உள்ள தளவாய்ப்பட்டிணத்தில் 25 தொழிற்கூடங்கள் நிறுவ ரூ. 25 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் தினம் இப் பகுதி மக்கள் 250 நபர்களுக்கு வேலை கிடைக்கும். இது போன்று பல்வேறு திட்டங்களை அரசு தீட்டி செயல்பட்டு வருகின்றது.

''தாராபுரம் வட்டத்தில் 5 இலட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 1 இலட்சம் ஏக்கர் நிலம் மட்டுமே பாசன வசதி பெறுகின்றது. இப்பகுதி பட்டுப்புழு வளர்ப்பதற்கேற்ற தட்ப வெப்ப நிலை இந்தப் பகுதியில் இருப்பதால் பாசன வசதியற்ற நிலங்களுடைய விவசாயப் பெருமக்கள் பட்டுப்புழு உற்பத்திக்கான செடிகளைப் பயிரிட்டுப் பயன்பெற வேண்டும்''

அலங்கார விளக்குகள் தொழிற்கூடங்களில் ஒளி சிந்த விழாவில் பெருந் திரளாகக் கூடியிருந்த அனைவரையும் ''சிட்கோ'' தலைவர் திரு இராம்சந்தர், இ.ஆ.ப., வரவேற்றார்.

திரு ஏ. சேனாபதிக் கவுண்டர் பாராளுமன்ற உறுப்பினர், தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு எ. பெரியசாமி, காங்கேயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே.ஜி. கிருஷ்ணசாமி, பட்டுப்புழு உற்பத்தித்துறை இயக்குநர் திரு சி. ஆர். இராசேந்திரன், பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. ந. தியானேசுவரன், இ.ஆ.ப., பெரியார் மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர் திரு எம். சீனிவாசன், தாராபுரம் சிறு தொழில் அமைப்புத் தலைவர் திரு ஏ. தண்டபாணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

''சிட்கோ'' நிர்வாக இயக்குநர் திரு டி. கங்கப்பா, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவேறியது.

## நேரு சொன்னவை

இளைஞர்கள் சிந்தனை செய்யத் துணிவுள்ளவர்கள்; செயல்படவும் துணிந்தவர்கள். ஆகையால், அவர்களால்தான் நாட்டையும், உலகத்தையும், அவை ஆழ்ந்துள்ள சகதியினின்றும், பழைய பாதையினின்றும் கிளப்பித் தூக்கி விட முடியும்.

• • •

இன்று செய்யப்பட வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்க, இறந்து போன காலத்தைப் பற்றிப் புகழ் பாடிக் கொண்டிருப்பதில் நமது சகதி தான் வீணாகிறது.

நமது நாட்டு மக்கள் பலர் அயல் நாடுகளுக்குப் பயணம் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் இந்தியாவிலேயே பல இடங்களுக்கும் சென்று பார்ப்பதில்லை. பதினாயிரக் கணக்கான மைல்கள் பயணம் செல்பவர்கள், ஆயிரம் இரண்டாயிரம் மைல்கள் மட்டுமே பயணம் செய்து இந்தியாவைப் பற்றித் தெரிந்து, கொள்ள விரும்புவதில்லை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



(ஆ) இலவசத் தொழில் கருவிகள் வழங்கியது.

| | | பேர்கள் |
|---|---|---|
| 1 | முடிதிருத்துவோர் | 43 |
| 2 | சலவைத் தொழிலாளர்கள் | 51 |
| 3 | தச்சர்கள் | 16 |
| 4 | தோல் தைப்பவர்கள் | 4 |
| 5 | கல்லுடைக்கும் தொழிலாளர்கள் | 3 |

## பிற்பட்டோர் நலம்

### 1. நிலமற்ற ஏழைகளுக்கு நில அடமானம் :

அ. நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது——680.19 ஏக்கர்

ஆ. பயனடைந்த குடும்பங்கள்——817

### 2. இலவச வீட்டு மனைப்பட்டா

| | |
|---|---|
| (அ) புறநகர் இல்லப் பகுதியில் நிலம் ஒப்படை செய்தது | 35.08 ஏக்கர் |
| (ஆ) பயனடைந்த குடும்பங்கள் | 1006 |
| (இ) புறநகர் பகுதியில் ஒப்படை செய்தது | 88.48 [ஏக்கர்] |
| (ச) பயனடைந்த குடும்பங்கள் | 2212 |

### 3. கல்வி

| | சலுகை பெற்ற மாணவர்கள் | செலவுத் தொகை ரூபாய் |
|---|---|---|
| (அ) பள்ளிப் படிப்பு தனிக்கட்டணம் இலவச புத்தகம் வழங்கியது | 8,752 | 68,133 |
| (ஆ) கல்லூரி படிப்பு | 2,999 | 6,55,998 |
| (இ) மாணவ விடுதிகள் | 3 | 25,880 |
| (ச) கல்லூரி மாணவர்களுக்கு விடுதியில் உணவு வழங்கியது. | 850 | 3,45,444 |
| (உ) இலவச சீருடை வழங்கியது | 675 | 31,492 |
| (ஊ) அதிக மதிப் பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசு | 4 | 210 |

### 4. சிறுதொழிற் கருவிகள்

| | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை | செலவு (ரூபாய்) |
|---|---|---|
| (அ) சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டி | 182 | 58,968 |
| (ஆ) நாவிதர்களுக்கு முடிதிருத்தும் கருவிப் பெட்டிகள் | 175 | 16,153 |
| (இ) கல்லுடைக்கும் தொழிற் கருவிகள் | 40 | 3,980 |

(1) இவ்வாண்டு இதுவரை கண் சிகிச்சை பெற்றவர்கள்——2069 பேர்கள்.

காது கேட்காத 14 வயதுக்குட்பட்ட ஏழை குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் வழங்கியது

1. இதுவரை காது கேட்கும் கருவி வழங்கப் பெற்று பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை——32

**உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கியது.**

(1) இதுவரை மூன்று சக்கர வண்டிகள் பெற்று பயனடைந்தவர்கள்—65 பேர்கள்

## வறட்சி நிவாரணப் பணிகள்

| | ரூபாய் (லட்சம்) |
|---|---|
| அரசு ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு | 257.12 |
| இதுவரை செலவிடப்பட்ட மொத்த தொகை | 241.1[illegible] |

சுமார் 93 சதம் செலவு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தொடங்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | 415[illegible] |
| முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | 3357 |
| வறட்சியால் பாதிக்கப்பட்ட மொத்த கிராமங்களின் எண்ணிக்கை | 70[illegible] |





| | பணிகளின் விவரம் | எடுக்கப் பட்டவை | தொடங்கப் பட்டவை | ஒதுக்கீடு (லட்சம்) | செலவு (லட்சம்) |
|---|---|---|---|---|---|
| 1 | ஆழ்துளைக் குடிநீர் கிணறுகள் | 423 | 373 | 60.00 | 59.35 |
| 2 | ஏரிகள், குளங்கள் அருகில் திறந்த வெளிக் கிணறுகள் அமைத்தல் | 8 | | 2.00 | 1.00 |
| 3 | குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதல் | 1597 | 1140 | 15.00 | 15.17 |
| 4 | நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல் | 2 | 2 | 6.12 | 2.58 |
| 5 | டாங்கர்கள் மூலம் குடிநீர் வழங்குதல் | 15 (டாங்கிகள்) | | 1.00 | 0.95 |
| 6 | புதிய சாலைகள் அமைத்தல் | 224 | 209 | 32.00 | 30.00 |
| 7 | சாலைகள் புதுப்பித்தல் | 152 | 121 | 15.00 | 14.40 |
| 8 | சிறு பாசன மேம்பாட்டுத் திட்டம (50 ஏக்கர் ஆயக்கட்டுக்குக் கீழ்) | 357 | 342 | 30.00 | 30.0[illegible] |
| 9 | குளம், குட்டைகள் ஆழப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத்திட்டம் | 524 | 458 | 9.00 | 9.21 |
| 10 | பொதுப்பணித் துறை ஏரிகளைச் செப்பனிடல் (50 ஏக்கர் ஆயக்கட்டுக்கு மேல்) | 846 | 395 | 87.00 | 78.27 |
| 11 | சிறு விவசாயிகள் பாசன வசதிக்காகத் தக்காவிக் கடன்கள் | | | 22.485 | 15.588 |
| 12 | குழந்தைகள்நலக் காப்பகம் | | | 9.927 | 6.010 |

## ஊராட்சி ஒன்றியம் மூலம் வளர்ச்சிப்பணிகள்

| திட்டங்களின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை | எடுக்கப் பட்டுள்ள வேலைகள் |
|---|---|---|
| இணைப்புச் சாலைகள் | 10,15,000 | 227 |
| பள்ளிக்கூட கட்டடம் | 16,00,000 | 218 |
| ஆசிரியை குடியிருப்பு இல்லம் கட்டுதல் | 34,800 | 6 |
| பள்ளிகளில் சுற்றுப்புற சுகாதார திட்டம் | 16,665 | 5 |
| குடிநீர்க் திட்டம் குடிநீர் வடிகால் வாரிய ஒதுக்கீடு நீங்கலாக | 14,00,000 | 275 |
| சிறுபாசன ஏரி பராமரிப்பு | 4,00,000 | 132 |
| தல சாலை மான்யம் [ஊராட்சி ஒன்றிய சாலை பராமரிப்பு. | 11,94,879 | 383 |

## தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்

| | |
|---|---|
| (1) பள்ளிக்கூட கட்டடங்கள் கட்டப்படயிருப்பவை | 162 |
| (2) கட்டடங்களுக்கான தளவாட சாமான்கள் வாங்க ஒதுக்கீடு | ரூ. 68.04 (இலட்சம்) |
| (3) கட்டடங்களுக்கான வேலைக்காக மானியம் (கூலி ரொக்கம் வழங்க) | ரூ. 102.80 (இலட்சம்) |
| (4) கட்டடங்களுக்கான வேலைகளுக்காகக் கூலிக்கு அரிசி வழங்க ... | 540 (மெ. டன்) |

## ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்

சிறு விவசாயிகள்; மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் நலனுக்காக, விவசாயம், நீர்ப்பாசனம், மீன் வளம், கைத்தொழில்கள், ஆடைகள், இதர தொழில்கள், கறவை மாடுகள், ஆடுகள் வளர்ப்பு ஆகியவைகளுக்கு அரசு மானியம் அளித்து வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களை மேம்பாட்டிற்கு கொண்டு வர அரசின் சீரியநோக்கத்தினை நிறைவேற்ற இத்திட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனும், அரசு மானியமும் அளித்து செயல் ஒடுத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| (அ) பயன் அடைந்த மொத்த குடும்பங்கள் ... | 19563 |
| (ஆ) பயன் அடைந்த ஆதி திராவிட குடும்பங்கள் | 6,920 |
| (இ) அரசு மானியமாக அளித்த தொகை | ரூ. 98.31 [இலட்சம்] |



# தனி ஒருவனுக்கு...

— புதுமைப்பித்தன்

அம்மாசிச் சாம்பான் பிறப்பில் பிச்சைக்காரன் அல்ல. இவன் பிறந்த மூன்றாவது மாதத்திலேயே இவனுடைய தகப்பனான பாவாடை காலமாகிவிட்டான். வீட்டிலிருந்து சொத்தை (கலப்பை முதலியன) சின்னக் கடன் விஷயங்களுக்கு, சேரி பாபத்திலும், பண்ணை சுப்பராயப்பிள்ளை பற்றிலுமாகப் பறிமுதல் செய்யப்பட்டது.

இவனுடைய வளர்ச்சிப் படலத்தைப் பற்றிய பிள்ளைத் தமிழ் யாரும் எழுதி வைக்காமல் போய்விட்டதால், இருவது வயது வருமட்டுமுள்ள சரித்திரக் குறிப்புகள் கிடைக்கவில்லை. கொஞ்சநாள் பண்ணையில் வேலை பார்த்துவந்ததாகவும் தெரிகிறது. பிள்ளையவர்கள் மனமுவந்து கொடுத்த சிறிய கடன் தொகையைக் கொண்டு கலியாணமும் நடந்தது. நடந்த மூன்றாம் மாதம் இவன் தாய் பரகதி-பறையருக்குப் பரகதியடைய உரிமையுண்டோ என்னவோ - செத்துப் போய்விட்டாள்.

என்ன காரணத்தாலோ இவனது பெண்டாட்டியும் தாய் வீடு நோக்கிக் கம்பி நீட்டிவிட்டாள். ஆக இம்மாதிரித் தொல்லைகளால், பழைய கடனும் கொடுக்க முடியாமல் புதிய கடனும் வாங்க மார்க்கமில்லாமல் இருக்கும் பொழுது ஒரு ரஸவாத பண்டிதர்-சாமியார் அங்கே வந்து சேர்ந்தார்.

சாமியாருக்கும் அம்மாசிக்கும் எப்படியோ பழக்கம் ஏற்பட்டது. கேட்பானேன்; பிள்ளையவர்கள் வீட்டுப் பித்தளைச் செப்புப் பாத்திரங்களில் கை வைத்தால், அவ்வளவையும் சுவர்ணமாக்கித் தந்துவிடுவதாகச் சுவாமியார் வாக்களித்தார்.

தொல்லை தீர வழியிருக்கும் பொழுது, தர்ம சாஸ்திரமா குறுக்கே நிற்கமுடியும்? பண்ணை பிள்ளையவர்களின் பாத்திரங்கள் ஊருக்குப் பக்கத்திலிருந்த பாழ் மண்டபத்திற்கு வந்துவிட்டன. ஸ்புடம் போட்டுத் தங்கமாக்கிவிட, இதற்குள் பிள்ளையவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட ''பயலை அப்படியே புடம் போட்டு விடுகிறேன் பார்'' என்று இரைந்து கொண்டு பண்ணை ஆட்களைத் திரட்டிவந்தார்.

கூட்டத்தைத் தூரத்தில் கண்டவுடன், அந்தர்த்தியானமாவது தவிர வேறு வழியில்லை என்று கண்ட சாமியார் நடையைத் தட்டிவிட்டார். அம்மாசியைக் கையும், களவுமாகப் பிடித்துக்

## சிறுகதை

கொண்டார்கள். அன்று பட்ட நரக வேதனைக்கு மேல் ஆறு மாதம் கடுங்காவல்.

சில சந்தர்ப்பங்களில் சிறைவாசம் ஒரு புகழைக் கொடுக்கும். சமுதாயத்தில் ஒரு மகத்தான ஸ்தானத்தைக் கொடுக்கும். அம்மாசியின் சிறைவாசம் அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல.

சிறையை விட்டு வெளியேறியவுடன் அம்மாசி சொந்த ஊருக்கு செல்லவில்லை. நியாயத்தின் முடிவைக் கண்டு பிடித்த அந்த மகான் இருக்கும் திருப்பதிக்கு- இந்த சண்டாளன்; இந்தப் பதிதன், இந்த சமூகத் துரோகி, புழு செல்ல முடியுமா?

விலை சரசமான காவிக்கட்டி இருக்கும்பொழுது சோற்றுக்குப் பஞ்சமா என்று பட்டது. உடனே அம்மாசிச் சாம்பான், ஏழை அமாவாசைப் பரதேசி யானார்.

தாயுமானவரையும் குதம்பைச் சித்தரையும் தப்பும் தவறுமாக உச்சரிக்க எங்குதான் கற்றுக் கொண்டாரோ? முதலில் பக்கத்து ஊரில் முகாம் போட்டார். வீட்டுக்கு முன் வந்து நின்றால் இரண்டில் ஒன்று தீர்மானமாகத் தெரிந்தாலொழியப் போவதில்லை.

கொஞ்சநாள் கவலையற்ற சாப்பாடு.

## 2

ஒரு மாதத்திற்கு முன்தான், ஏழை அமாவாசைச் சுவாமியாரின் வழியாக இறந்துபோன தாயுமானவர் கடவுளின் பரிபூரணானந்தத்தை எங்கள் ஊர்த் தெரு வழியாக வாரி இறைத்துக் கொண்டிருந்தார். ஊரைக் கவர்ச்சிக்கும்படி ஒன்றும் செய்யவில்லை. நூற்றியோராவது பிச்சைக்காரனாகத் தான். கவலையற்ற சாப்பாடு. எங்களூர்ப் பாழ் மண்டபத்தில் கவலையற்ற நித்திரை. ஸ்வானுபூதி.

இதற்குள் யாரோ சுவாமியாரின் பூர்வாசிரம ரகசியத்தையறிந்து ஊர் பூராவும் பரப்பிவிட்டார்கள். உளவு பார்க்க வந்தவன் என்ற தங்கள் கொள்கையையும் சேர்த்துக் கட்டிவிட்டதினால், எங்களூர்க்காரர்கள் மதிப்பில் சுவாமியார் பதவியிலிருந்து திருட்டுப் பேர்வழி என்ற ஸ்தானத்திற்கு இறங்கிவிட்டார். பரி மறுபடியும் நரியாவது திருவிளையாடல் காலத்துக்காரர்களுக்கு மட்டுந்தானா உரிமை?

இவ்வளவும் ஒரே நாளில்; இது சுவாமியார் - பாவம் - அவருக்குத் தெரியாது.



வழக்கம்போல் கற்பறையுடன் ''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமான பொருளைத்தேடி'' எங்களூர்க்காருக்குத் தெரியப்படுத்தத் தெருக்கோடியில் வருமுன்னமே, அவரைச் சூழ்ந்து ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது.


ஏசலும், இரைச்சலும் சுவாமியாருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அவரும் காதுள்ள, சாதாரண அறிவுள்ள மனிதன் தானே! பூர்வாசிரமக் கதைதான் இந்த விபத்திற்குக் காரணம் என்று தெரிந்து கொண்டார். தெரிந்து என்ன செய்கிறது? அதற்குள்தான் மரத்துடன் வைத்துக் கட்டியாகிவிட்டதே.

தர்மத்தின் காப்பாளர்களும், நீதியின் பொக்கிஷங்களுமான பெரியார்கள் நிறைந்த இந்தக் கிராதக யுகத்து எங்களூர் வாசி இம்மாதிரியான மோசத்தையும் புரட்டையும் பொறுத்திருப்பார்களா? நியாயத்தைப் பரிமாறுவதற்காகக் கருட புராணத்தைப் பாராயணம் செய்த, ஹிந்து தருமத்தின் மெய்க்காப்பாளர்களான எங்களூர்ப் பெரியார்கள், அதற்குத் தகுந்த மகத்தான ஒரு மனநிலையைத் திருப்தி செய்தார்கள்.

இந்தத் 'திருத்தொண்டினால்' சுவாமியாரை எளிதில் கண்டு பிடிக்க முடியாது போய்விட்டது. காலில் பலத்த காயம். முகத்தில் முதுகில் புளியம்விளார்களின் முத்தத்தினால் உண்டான இரத்தம் உறைந்த நீண்ட வரைகள் உடம்பு முகம் முழுதும் ஒரே வீக்கம்.

''பயம் இருக்கட்டும். உன்னை ஜெயிலுக்கு அனுப்பாமல் மன்னிக்கிறோம். ஓடிப்போ!'' என்று தங்கள் தயாள சிந்தனையைச் சுவாமியாருக்கு எடுத்துக்காட்டி, ஊருக்கு வெளியே பிடித்து நெட்டித் தள்ளிவிட்டார்கள். சுவாமியாருக்கு அந்தப் பாழ் மண்டபத்தை அடைவதற்குள் மோக்ஷமோ, நரகமோ இரண்டிலொன்றிற்குப் போய்விட்டுப் பத்துத்தடவை திரும்பிவிடலாம் என்று தோன்றிற்று.

இதற்குமேல் எங்களூரில் கவந்தப் படலத்தை நடத்தலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்குமானால், அவரைப் பைத்தியக்காரன் என்று சொல்லிவிடலாம். சுவாமியார் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை. ஆனால், இந்த ஊரை விட்டுப் போவதற்கும் தான் இவ்வூர் மஹாஜனங்களின் அன்பின் திருத்தொண்டின் மூலமாகக் காண்பித்து, அவரை அங்கிருந்து அகலாமலிருக்கும்படி செய்துவிட்டார்களே.



அந்தப் பாழ்மண்டபம் எப்படி இருந்தாலும் வேளைக்குவேளை உணவும் மருந்தும் கொடுக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரி அல்ல; மூன்று நாட்கள் அவர் இருந்த ஸ்திதியில் அங்கு இருந்தால், வலுவில் சுமத்தப்பட்ட உண்ணாவிரதம் தான் நிச்சயம்.

காய்ச்சல், வலி, பசி, தாகம் இவைகளின் கூத்துப் பொறுக்க முடியவில்லை. சற்றுத் தூரத்திலுள்ள கோபுரங்களிலும், மரக் கிளைகளிலும், சுவாமியாரின் இறுதியை எதிர்பார்த்து, அவரை தங்கள் வயிற்றில் சமாதியடையச் செய்ய, காக்கைகளும் கழுகுகளும் காத்திருந்தன. அவைகளும் இவரைத் தீண்டாத பறையன் பதிதன் என்று நினைத்தோ என்னவோ, கிட்டவே நெருங்கவில்லை.

ஊருக்கு வெளியிலே, அந்தப் பாழ்மண்டபத்தின் பக்கத்தில் தான் ஒரு சுடலைமாடன் பீடம். ஊரின் காவல் தெய்வம் என்று கௌரவத்துடன், நமது அரசாங்கத்துடன் கூட்டுறவு செய்து கொண்டு, வரிவாங்கும் தொல்லைகள் எல்லாம் அற்ற ஒரு மௌன அரசாட்சி நடத்திக் கொண்டிருந்தது. அதைப் பற்றிக் கதைகள் பல.


எங்களூர் மறவர்களுக்கு 'பிளி ளஸ் டூல் சீலையில்' சுடலை மாடன் பாடு கொண்டாட்டம் தான். இனம் [illegible] பணத்தைக் கண்டால் [illegible]


பதிவு எண். M. 8676 Licence No. [illegible] தமிழ்...

# தமிழ் மாநில வெள்ளி விழா ஆண்டு நிகழ்ச்சி

## சென்னை-கலைவாணர் அரங்கம்

(1-11-1981)











லைக்குப் படைபபு என்ற சம்பிர தாயத்தை வைத்துக் கொண்டு, குடித்துக் களிப்பார்கள்.

அன்று சின்னச்சாமி தேவ னுக்கும் படைப்புப் போட வேண்டும் என்று தோன்றிற்று. கேட்பானேன்; சாயங்காலம் முதல் ஒற்றைப் பறைமேளம் ஒன்று சுடலை மாடனுடைய கேட்காத திருச்செவிகளுக்குச் சங்கீதக் கச்சேரி நடத்தியது.

படைப்புக்குரிய பொங்கல்; பக்கத்தில் மரத்தடியில் சின்னச் சாமித் தேவன் மனைவியின் கண் காணிப்பில் தயாராகிக் கொண் டிருந்தது. மாடனைச் சுற்றித் தேவருக்கும், அவருடைய நண் பர்களும் பூசாரியும்தான்.

இரவு பத்துமணியாகிவிட்டது. பானையும் அடுப்பிலிருந்து இறங்கி 'சாம்போர்' என்று அவர்கள் உச்சரிப்பில் மரியாதை பெறும் குழம்புடன் கலந்து, சுடலையின் திருச்சேவையை எதிர்பார்த்து நின்றது.

பூசாரி சுடலையின் பாட்டைப் பாடி ஆராதனை நடத்துகிறான். தேவரின் மனைவியும் சுடலையின் அருள்பெற சன்னதிக்குச் சென்று விட்டாள்.

இருளிலே ஒரு உருவம் நகர்ந்து நகர்ந்து சோற்றுப் பானையை அணுகுகிறது; சுவாமி யார்தான். பசியின் தனியரசிற்கு முன் எந்தச் சுடலைமாடன்தான் எதிர்க்கமுடியும்? வாரி வாரி ஆத்திரத்துடன் கொதிக்கும் சோற்றை வாயில் தின்கிறார். அவ்வளவுதான், ஒரு கவளத்திலே இவருடைய இவ்வுலக ஆசை நிறைவேறியது.

சற்று தூரத்திலிருந்த சுடலை பக்தர்கள் இவர் ஒரு கவளம் எடுக்கும் போதே கண்டு தடுக்க ஓடிவந்தார்கள். கிட்ட நெருங் கியதும் தண்டிப்பதற்குச் சுவாமி யாரின் பிணம்தான் கிடந்தது. ''மாடனின்'' ''சக்தி'' ''அருள்'' என்று வியந்தார்கள். ''பறப் பயலுக்கு வேண்டும்'' என் றார்கள். இதையெல்லாம் கேட்க ஏழை அம்மாவாசைச் சாமி யாருக்குக் கொடுத்து வைக்க வில்லை! சுடலையின் சக்திக்காக அன்று இரட்டிப்புப் பூசை.

## 3

ஊரில் கொஞ்சம் பரபரப்புத் தான். சுடலையின் சக்தி வெளி யாகும் பொழுது இல்லாமலா இருக்கும்?

திடீரென்று இறந்தவனை அறுத்துச் சோதனை செய்யா மல், போலீஸ் விசாரணையில்லா மல் புதைத்து விட முடியுமா? எங்களூர் டாக்டரும் இன்ஸ் பெக்டரும் தேசபக்தர்கள் அல்ல. ஆனால் கிழக்குமேற்காக இரண் டரைப் பர்லாங்கும், தென் வட லாக ஒன்றரைப் பர்லாங்கும் விஸ்தீரணமுள்ள எங்களூர் நிலப் பரப்பைப் பொறுத்த மட்டில் தேச பக்தர்கள் தான். வீண் ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக் கெடுக்க வேண்டாம் என்று பட் டினியால் இறந்தான் என்று முடி விற்கு வந்தார்கள்.

பிறகு என்ன? புதைக்க வேண் டியதுதான் பாக்கி.

எங்களூர் ஆஸ்பத்திரித் தோட்டி இந்த மாதிரி பிணங் களைப் புதைத்து விடுவதில் சமர்த்தன். ஒருவனே முடித்து விடுவான். ஒற்றைக் கம்பில் பிணத்தை இறுக்கிக் கட்டவேண் டியது-தலை சற்றுத் தொங்கி னால் என்ன மானம் போய் விட்டது? மேலே மண்வெட் டியைச் சொருக வேண்டியது; பிறகு கட்டைபோல் தலையில் தூக்கிக் கொண்டுபோய் புதைக்க வேண்டியது. 'இதுதான் அவ னுக்குத் தெரியும். அதில் அவன் ''எக்ஸ்பர்ட்.''


அன்று சாயங்காலம்; அதாவது பிணத்தை அறுத்துச் சோதித்த அன்று சாயங்காலம்.

அப்போது எங்களூர் கோகலே ஹாலில் ''பாரத ஜனங்களின் தற்கால நிலைமை'' என்ற பிர சங்கம். ஊர் பூராவாகவும் திரண்டு இருந்தது. அதைக்கேட்க அவ்வளவு உற்சாகம். முதலில் 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற பாட்டை ஒரு நண்பர் வெகு உருக்கமாகப் பாடினார்.

''தனியொருவனுக்கு உண வில்லையெனில், ஜகத்தினை யழித்திடுவோம்'' என்று அடிகள் வந்தவுடன் என்ன உருக்கம்! உருக்கம்! என்ன கனிவு! நாங்கள் ஆனந்தப் பரவசத்தில் கை தட்டி னோம்.

[ஸ்டார் பிரசுரம் வெளியிட்டுள்ள 'ஆண்மை' என்ற சிறுகதை தொகுப்பி லிருந்து]





# சென்னைப் பெருநகரில் கழிவு நீரகற்றும் இயந்திரங்கள்


கழிவு நீரகற்றும் எந்த முறை யைப் பராமரிப்பதிலும், அவை மனிதக் கழிவை அகற்றுவதனால் அதற்குப் பொறுப்பான பொறி யாளருக்குப் பல சிக்கல்கள் ஏற் படுவது இயல்பு. அதிலும் சென்னை நகரில் கழிவு நீரகற்று முறை மேலும் சில தனித்தன்மை கள் வாய்ந்தது. சென்னை நகரப் பரப்பு முழுவதும் சமதளத்தில் அமைந்துள்ளது; மிகக் குறைந்த ஆழத்திலேயே ஊற்றுநீர்ச் சுரப்பு மிகுந்த நிலப் பரப்பும் வாய்ந் துள்ளது; எனவே கழிவுநீர்க் குழாய்களை ஈர்ப்போட்டத்தில் பதிக்கும் போது, பொதுவாகப் பிற பாகங்களில் அனுசரிக்கப் படும், தாழ்வான சரிவை விடச் சற்று தட்டையான சரிவையே தர வேண்டியுள்ளது. வீடுகளில் சமையல் பாத்திரங்களைத் துலக் கும் சாம்பல், செங்கற்பொடி முதலியவையும், வீதிகளில் மழை நீர் அடித்து வரும் வண்டலும் அதிக அளவில் கழிவுநீர்க்குழாய் களில் புகுந்து, அடிக்கடி அடைப் பேற்படச் செய்கின்றன. இத னால் கழிவுநீர் பின்னோக்கிப் பாய்ந்து, சில சமயங்களில் வீடு களில் உள்ள கழிப்பறை வரை யும் சென்று அனைவரையும் தொல்லைக்கு ஆளாக்குகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று வாரி யம் தற்போது கழிவுநீர்க் குழாய் நுழைவழிகளில் ஆட்கள் மூழ்கி மூங்கில் பத்தைகளைச் செலுத்தி அடைப்பை நீக்கும் பழைய துப் புரவு முறையைக் கையாண்டு வந்தது. அது கழிவு நீர்க் குழாய் களில் ஏற்படும் அடைப்புகளைச் சரிவரப் போக்குவதற்குப் போது மானதாக இல்லை. நாள்தோறும் சுமார் 450 கழிவுநீர்க் குழாய் அடைப்புகள் பற்றிய முறையீ டுகள் வாரியத்திற்கு வருகின்றன. 740 கழிவு நீர்க் குழாய்ப் பணி யாளர் கழிவுநீர் நுழைவழிகளி லும், கழிவுநீர்க் குழாய்களிலும், தூர்ந்துள்ள வண்டலை அகற்றித் துப்புரவு செய்யும் பணியில் ஈடு பட்டு உள்ளனர். இத்தொழி லாளர்கள் இதுவரை, அடைப்பு ஏற்பட்டுள்ள கழிவுநீர்க் குழாய் களில் மூங்கில் பத்தையைச் செலுத்தி அடைப்பு நீங்கும்வரை குத்தித் துளைக்கும் பழைய முறையையே கையாண்டு வந்த னர். சிக்கலான வேலைக்கு, இது சரியான கருவியல்ல; எனவே இம்முறை ஓரளவே வெற்றி தரு கிறது. இதனால் கழிவுநீர்க் குழாய் அடைப்புகளைப் பற்றிய முறையீடுகளைக் கவனிப்பதற்கே பொழுது சரியாகி விடுகிறது. அடைப்பு வராமல், வருமுன் காத்துப் பராமரிக்க நேரம் போதவில்லை. மேற்குறிப்பிட்ட பழைய முறையை பின்பற்றுவத னால் மனிதக் கழிவுகள் நிரம்பிய கழிவுநீர் நுழைவழிகளில் பணி யாளர் மூழ்கி, அடைப்பினை நீக்க வேண்டிய அவல நிலையும் தொடர்கிறது. இச்சிக்கலுக்கு உடனடித் தீர்வு - தகுந்த கருவி களைக் கொண்டு இயந்திர சாத னங்கள் வாயிலாகக் கழிவுநீர் அடைப்புகளை நீக்குவதேயாகும். இதனால் கணிசமான அளவில் நேரம் மிச்சமாவதோடு, கழிவு நீரில் மனிதன் மூழ்கும் நிலையும் தவிர்க்கப்படும். இதற்காகப் பல் வேறு கழிவுநீர்க் குழாய்த் துப் புரவு இயந்திரச் சாதனங்களை ரூ. 42 இலட்சம் திட்ட மதிப்பீட் டில் உலக வங்கியின் நிதி உதவி யோடு வாரியம் தருவித்து வரு கிறது. இத் திட்டத்தின்கீழ் பின் வரும், பெருமளவிலான செயற் குறிப்புகள் நிறைவேறி வருகின் றன.


இந்தச் சாதனங்களை வாங்கு வதில் உலகளாவிய ஒப்பந்தங் களைப் பெற்று, அவற்றிலிருந்து ஏற்ற சாதனங்கள் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளன.

### கம்பி இயந்திரங்கள்


இவற்றுள், கம்பி இயந்திரங் கள்-ஓர் உருளையின் மீது சுருட் வைக்கப்பட்டுள்ள தேவைக் கேற்பப் பிரிக்கவும், இணைக்க வும் வல்ல, தனித் தனியான எஃகுக் கம்பிகளின் தொடரைக் கொண்ட வளைவான



14-11-1981 [illegible]




[illegible] 10-11-81 [illegible]



[illegible] 10-11-81 அன்று [illegible] மாண்புமிகு [illegible] துவக்கிவைத்தார்கள்.

[illegible] மாண்புமிகு முதலவர் [illegible] 10-11-81 அன்று [illegible] துவக்கிவைத்தார்கள்.





14-11-1981 [illegible]



85372

# தமிழரசு


மலர் : 12 இதழ் : 11

1-12-1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி—கார்த்திகை 16

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR


இவ்வளையத்தைச் சுழற்றுவதற்கு வசதியாக, ஓர் ஐந்து குதிரை விசைத் திறனுள்ள டீசல் இயந்திரம் தள்ளு வண்டியில் பொருத்தப்பட்டுள்ளது. இச்சாதனத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதில் நகர்த்தலாம். கழிவு நீர்க் குழாய் நுழைவழிகளின் முன்பு இச்சாதனத்தை நிறுத்தி, ஒரு தள்ளுகுழாயின் வழியாக, இக்கம்பிகளை நீளமாக உட்செலுத்தலாம். கழிவுநீர்க் குழாய்களில் ஏற்படக்கூடிய பலவிதமான அடைப்புகளையும் நீக்குவதற்கேற்ற கருவிகள் இச்சாதனத்தில் உள்ளன. இக்கருவிகள் அடைப்பினுள் சிக்கிக் கொண்டால், இதிலுள்ள ஒரு பாதுகாப்பு லீவரை உடனே இயக்கி, கம்பியைத் திருப்பிச் சுற்றி, இழுத்துக் கொள்ளலாம்.



## 'வாக்டார்' ஜெட் இயந்திரங்கள்

நீர் பாய்ச்சித் தூர் உறிஞ்சும் 'வாக்டார்' ஜெட் இயந்திரம் மிகவும் சிக்கலான கழிவுநீர்க் குழாய் அடைப்புகளை நீக்குவதற்கும், கழிவுநீர்க் குழாய்த் தொடர்களை முழுவதும் துப்புரவு செய்வதற்கும் பெரிதும் உகந்தது. இங்கிலாந்து நாட்டிலுள்ள, வாக்டார் லிமிடெட் நிறுவனத்திலிருந்து வாரியம் வாங்கியுள்ள 'ஜெட்ராடர் வாக்டார்800' என்ற ஊர்தி, இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒரு சதுர அங்குலத்திற்கு இரண்டாயிரம் பவுண்டிற்கும் மேற்பட்ட உயர் அழுத்தத்தோடு தண்ணீரைப் பீச்சியடித்து, கழிவுநீர்க் குழாய்களைத் துப்புரவு செய்வது இதன் ஒரு பகுதி ஆற்றும் பணியாகும். கழிவுநீர்க் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ள பகுதி வரை, இதிலுள்ள உயர் அழுத்த நீரைப் பீச்சியடிக்கும் துவாரமுள்ள கருவிகளால் -உந்தி உட்செலுத்தும் தண்ணீரின் அழுத்தமே சம்மட்டி போல் செயலாற்றி, அடைப்புகளை உடைக்கும். இத்துளைக் கருவியிலிருந்து அதிவேகத்துடன் வெளியேறும் தண்ணீரால் கழிவுநீர்க் குழாயில் அடைபட்டுள்ள வண்டல் கழுவப் பெற்று, கழிவுநீர்க் குழாயின் நுழைவாயில் வந்து சேரும். பின்னர் அங்கிருந்து அவற்றை வாரிப் போடுவது எளிதாகும். இவ்வாக்டார் ஊர்தியின் மற்றொரு பகுதி வண்டல், கசடுகளை உறிஞ்சித் துப்புரவு செய்ய வல்லதாகும். காற்றழுத்த விசையால், கழிவு நீர்க் குழாயில் உள்ள எல்லாவித மான வண்டல்களையும், கசடுகளையும் உறிஞ்சி, இவ்வூர்தியின் பின்னாலுள்ள இரும்புத்தொட்டியில் சேமிக்கப்பட்டு, வசதி வாய்ந்த, தகுந்த இடங்களில் அந்தக் கழிவுகள் கொட்டிவிடப் படுகின்றன. இவ்வாறு, தண்ணீரைக் கொண்டு, அடைப்புகளை அறவே நீக்கவும் முழுதும் கழுவிப் போக்கவுமான இருவேறு துப்புரவுப் பணிகளை இப்பெரும் சாதனத்தின் வாயிலாகச் செய்ய முடிகிறது. இதனால், சென்னை நகரின் கழிவுநீரகற்று முறையைத் திட்டமிட்டு, நீண்டகால அடைப்புகளை நீக்குவதுடன், கழிவுநீர்க் குழாய்களைத் துப்புரவு செய்வதும் விரைவில் சாத்தியமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது. சென்னை நகர மக்களுக்குப் பெருமிதம் வாய்ந்த இச்சாதனத்தின் வாயிலாக, மேலும் சிறப்பாகப் பணியாற்ற, சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் கருதியுள்ளது.


இந் நவீன சாதனங்கள், சென்னை நகரின் பல பகுதிகளிலும் முறையாகப் பயன்படுத்தப் படும். ஒவ்வொரு பகுதியின் முற்காப்புப் பராமரிப்பிற்கும் வாளி இயந்திரங்கள் பொறுப்பேற்கும். அவ்வப்போது ஏற்படும் கழிவு நீர்க் குழாய் அடைப்புகளை, மூங்கில் பத்தைகளுக்குப் பதிலாகக் கம்பிச் சாதனங்களைக் கொண்டு நீக்கப்படும். இவற்றால் அகற்ற முடியாத பெரிய அடைப்புகளை 'வாக்டார்' இயந்திரத்தின் உதவியால் நீக்க முடியும். இவை நேர்த்தியாகப் பணிபுரிந்து, கழிவுநீர்க் குழாய்களில் கழிவு நீரோட்டம் ஒழுங்காகவும் ஒரே சீராகவும், வேகமுடனும் செல்ல வசதியானதாக இருக்கும்.

இந்தச் சாதனங்களைப் பயனபடுத்துவதோடு, கழிவு நீரிறைக்கும் நிலையங்களை நவீனமாக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இதனால் கழிவு நீரிறைத்தலை (1) தொடர்ந்தும் (2) வேண்டுமளவும் செய்வதோடு, (3) கழிவுநீர்க் குழாய்களை இயன்ற அளவு காலியாகவும் வைக்க முடியும். இதற்காக ரூ. 6.16 கோடி செலவில் 15 பெரிய கழிவு நீரிறைக்கும் நிலையங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. இதைத் தவிர, 15 கழிவு நீரிறைக்கும் நிலையங்களில் தானியங்கிக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் பொருத்தப் பெறுகின்றன.

சென்னை நகரின் கழிவுநீர்க் குழாய்களை இயந்திர சாதனங்களினால் துப்புரவு செய்யும் பணியின் இத்தொடக்க விழா, [illegible] றாண்டுப் பழமை வாய்ந்த இந் நகரின் கழிவுநீர[illegible] பராமரிப்பை நவீன மயமாக்குவதில் அடியெடுத்து வைப்பதற்கு ஓர் அடையாளமாகும்.

# பாரத தேசம்

## மகாகவி பாரதியார்



பாரத தேசமென்று பெயர்சொல்லுவார்—மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லுவார்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல்விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்கு வோம்எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம்.

வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்.

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

காசி நகர்ப்புலவர் பேசுமுரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்.

பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்.


ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள்வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல்செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்

குடைகள் செய்வோம்உழு படைகள்செய்வோம்
கோணிகள் செய்வோம்இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம்.

மந்திரம் கற்போம்வினைத் தந்திரங்கற்போம்
வானை யளப்போம்கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்.

காவியம் செய்வோம்நல்ல காடுவளர்ப்போம்
கலை வளர்ப்போம்கொல்ல ருலைவளர்ப்போம்
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள்செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்துசெய்வோம்.

சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர்மற்றோர்.



# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லே, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவருத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லே, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.

**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்




<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2317 TM


# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

**14—9—81**

திண்டுக்கல்லில், தோல் தொழிலுக்கான தொழிற்பேட்டை ஒன்றினைத் துவக்குவது பற்றி அரசு ஆலோசனை செய்து வருகிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

**15—9—81**

தமிழ் மொழிக்காக, தமிழர்களுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று தஞ்சையில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் திரு சாதிக்அலி அவர்கள் ''தமிழ்ப் பல்கலைக் கழகத்தினை''த் தொடக்கி வைத்தார்.

**17—9—81**

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த திரு எம். சாந்தப்பா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

**18—9—81**

தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் வளர்ச்சிப் பணிகளுக்கு பணம் பற்றாக்குறையாக உள்ளது. எனவே நகராட்சிகளுக்கு உதவுவதற்காக 'நிதிக் கழகம்' அமைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

**20—9—81**

தொழிற்சாலைகள் மூடப்பட்டு வேலையில்லாமல் இருக்கும்தொழிலாளர்களுக்கு இன்சூரன்சு திட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்.

**23—9—81**


பள்ளிகளிலுள்ள ஓவிய ஆசிரியர் பதவியின் பெயரை இனிமேல் ''கலை ஆசிரியர்'' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் ஒரு ''மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் துவக்க அரசு ஆலோசித்து வருவதாக மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

**25—9—81**

உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காத நிறுவனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய நெசவு ஆலைகளைத் தொடங்கவும், 4 நூற்பாலைகளை விஸ்தரிக்கவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.



**27—9—81**

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப் பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகளையும் ஒன்றாக இணைத்து ''திருநெல்வேலி மாநகராட்சி'' என்ற பெயரில் ஒரு மாநகராட்சியாக்குவதற்குத் தமிழகஅரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்திலுள்ள 4 கோடியே 80 இலட்சம் மக்களுக்கும் தனித்தனியே உடல் ஆரோக்கிய நிலையைப் பரிசோதித்து அது பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்து புத்தகங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

**28—9—81**

இந்து - சமய - நிறுவனங்களுக்கு உயர் மட்ட ஆலோசனைக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. 39 பேரை உறுப்பினராகக் கொண்ட இந்தக் குழுவிற்கு மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைவராக இருப்பார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில், தமிழ்நாடு சிமெண்ட் வாரியத்தின் சார்பில் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்படும் என்று அதன் நிர்வாக இயக்குநர் திரு பவுன்ராஜ் அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளை முதல் மூன்று

தொகுப்பு: ஜி. ஆனந்தன்



# கவியரசர் பாரதி
# தந்தை பெரியார்



"மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"
"என்றந்தப் பேதை உரைததான்—ஆ!
இந்த வசையெனக கெய்திட லாமோ!
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு
சேர்ப்பீர்!
"தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்".

இப்பொன் மொழிகளை உற்று நோக்கி உண்மைப் பொருள் தேறுவோர் தமிழ் மொழியை வளர்க்க முயலாதிருப்பாரோ?

—தந்தை பெரியார்

(திருவண்ணாமலை 30-வது
தமிழர் மாநாடு—தலைமையுரையில்—
'நவசக்தி' 21-11-1924).

தமிழ்மொழியின் சிறப்பை இந்நாளில் தமிழ் வளர்த்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல
இனிதாவ தெங்கும் காணோம்
..............................................
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்று கூறியிருந்தார். மற்றுமோரிடத்தில் அவர் தமிழர்களுக்கு ஓர் எச்சரிக்கையும் வழங்கியிருந்தார். அது வருமாறு:

"முன்று குலத் தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்போடு நித்தம் வளர்த்தார்"

"இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!
—இனி
ஏதுசெய் வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை
—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்"

## "பசிக்குத் தெரியுமாடா சூடு!"

சுதேசமித்திரன் காரியாலயம் ஜார்ஜ் டவுன் எர்ரபாலுசெட்டித் தெருவில் இருந்தபோது கவி பாரதியார் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அச்சமயம் நான் ஆசிரியர் ஸ்ரீ. ஏ. ரங்கசுவாமி ஐயங்கார் அறை மற்றும் எடிடோரியல் அறையிலும் பியூனாக வேலை செய்து வந்தேன். எனக்குக் கவிபாரதியாரிடம் நெருங்கிய பழக்கமுண்டு. காரியாலயத்தில் பாரதி வேலைகள் முடிந்ததும் பாட்டுகள் பாடுவார். பாரதியார் தினசரி என்னிடம் கொத்தவால் பஜாரிலிருந்து மாம்பழம் வாங்கி வரும்படி பணம் கொடுப்பார். நானும் நாள் தவறாமல் வாங்கி வந்து கொடுப்பேன். கவி பாரதியாருக்கு மாம்பழத்தின் மீது அலாதி பிரியமுண்டு. அடிக்கடி மாம்பழம் சாப்பிடுவதைக் கண்ட நான் பாரதியாரிடம், "சாமி! மாம்பழம் அதிகமாகச் சாப்பிடாதீர்கள். அது சூடு. உடம்பிற்கு ஆகாது" என்பேன். அதற்கு பாரதியார், "தம்பி சம்பந்தம்! பசிக்குத் தானடா மாம்பழம் சாப்பிடுகிறோம். பசிக்குத் தெரியுமாடா சூடு" என்று நம்மையே திருப்பிக் கேட்டு விடுவார். (தகவல் : எம். சம்பந்தம், முன்னாள் சுதேசமித்திரன் ஊழியர்).

தொகுத்து : ரகமி.



# மக்கள் கவிஞர்



## பேரறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா 1950-ல் வானொலியில் ஆற்றிய People's Poet என்னும் ஆங்கில உரையின் தமிழாக்கத்தின் சில பகுதிகள்

கடவுளர்களுக்குப் பாமாலைப் பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடவில்லை பாரதி. மண் ஆளும் மன்னவர்களுக்கு விண்ணப்பப் பாக்கள் எழுதி விடுக்கவில்லை. உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்கள், விளையாட்டு வெளிகளிலே ஓடி விளையாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார். கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப் போல வேதாந்த வியாக்கியானங்களைச் சுதந்தரக் கோரிக்கைக்குச் சப்பைக் கட்டாக உபயோகிக்கவில்லை. உலகத்தின் தூர தொலைவிலுள்ள நாட்டு மக்களின் சுதந்தரப்போராட்டங்களைக் கவிதைகளாக்கி மக்களுக்குச் சமர்ப்பித்தார். இத்தாலிய சுதந்தர உதயத்தை, மாஜினி என்ற தேசிய வீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை உன்னத சொற் சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார். புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார். ஜாரின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி வீறுடன் எழுந்து நின்ற ரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினார். சுதந்தர பெல்ஜியம், பிரான்சு, சிகப்பு ரஷ்யா குறித்த சொற் சித்திரங்களே அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தது.

பிஜித்தீவு வாழ்வு பற்றிய பேனாச் சித்திரத்தை மக்கள் முன் வைத்து, பாருங்கள் சகோதரர்களே உம்முடன் பிறந்த சோதரர் நிலையை எனக் காட்டினார். ஆங்கில நாடகாசிரியன் ஷேக்ஸ்பிரியரின் தன்மையிலே, மக்கள் கவிஞனின் லட்சணம் அதுதான். தன் நாட்டு மக்களின் முட்டாள் தனத்தையும், குற்றங் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டான் மக்கள் கவிஞன். சிந்தையிலும் செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள். அதே வேளையில் உலகத்தின் இதர நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல் புரிகின்றன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது என எடுத்துக் காட்ட அஞ்சமாட்டான்.

வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக் குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு தொடை நடுங்கவில்லை பாரதி. அவர்களது தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார். வஞ்சகத்தையும், துரோகத்தையும் அவற்றின் உண்மை சொரூபத்திலே கொணர்ந்து நிறுத்தினார். ஒப்பற்ற திரம், அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

பாரதியைத் தேசியக் கவி என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீதுள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் மற்றொரு தன்மையை—அதாவது பாரதி மக்களின் கவிஞர் என்ற உண்மையை—மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம். சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த, தேசியச் சிமிழ்களில் அவற்றை அடைக்க முடியாது. புராதன சம்பிரதாயங்களின், புராணக் கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழைமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக எறிகிறார்.

புராதன காலத்தில் அறியாமையும், குள்ளக் கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா நீங்கள்? செத்த சிந்தனைகள் என்ற பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டி அழவேண்டும்? நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள். இறந்தகால அந்தகாரத்தில் துழவ வேண்டாம். கடந்த காலம் கடந்து போனது போனதுதான். சென்றது இனி மீளாது. இது பாரதி வாக்கு. இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

புராணக் கோட்பாடுகளைப் போல மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அல்ல அவர் காட்டும் வழி, மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு

ஆண்டுகள் மின்வெட்டு இல்லாமல் இயங்கச் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 29—9—81

தேசிய மகாகவி பாரதியாரின் பெயரில், எட்டையபுரத்தில் கட்டப்பட்டுள்ள 'மணிமண்டபத்தை' தமிழக அரசு தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டது. மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாக் குழுவின் தனி அலுவலர் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் அதற்குரிய ஆவணங்களைப் பெற்றுக் கொண்டார்.

## 1—10—81

தேசிய மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாட தமிழகஅரசு ஏற்பாடு செய்துள்ளது. 376 ஒன்றியங்களிலும் பாரதி விழா, பாரதியாரின் லட்சியத்தை நிறைவேற்றும் விழாவாக நடத்தப்படும் என்று மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டில் ரூ. 1,000 வரையிலான பரிசுகளை விற்பனையாளர்களிடமே வாங்கிக் கொள்ளலாம். அதற்காகக் கருவூலத்திற்கு அலைய வேண்டியதில்லை என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் 7,500 அலுவலர்களுக்கு 8.33 சதவீதம் போனசும், 6.67 சதவிகிதம் கருணை ஊதியமாகவும் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

## 4—10—81

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க நவீன தோல் பதனிடும் ஆலை ஒன்று அமைக்கப்படும். கதர் மற்றும் பனைப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களைக் கண்டறிய ஒரு தூதுக்குழு வெளிநாடுகளுக்குச் செல்லும் என்று மாண்புமிகு கதர்-கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அறிவித்தார்.


மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களிலுள்ள தலைமை மருத்துவமனைகளில் பரிசோதனை நிலையங்களுடன் கூடுதல் மருத்துவ வசதிகளை ஏற்படுத்த அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தெரிவித்தார்.

## 5—10—81

ஆதிதிராவிடர்களின் கோரிக்கைக்கு இணங்க ஆதிதிராவிடர்களின் குடியிருப்புக்களில் கோவில்கள் கட்டித்தர அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

ரூ. 180 கோடி செலவில் கரும்புச் சக்கையில் இருந்து ''காகிதம் தயாரிக்குப் தொழிற்சாலை திருச்சி மாவட்டம் புகளூரில் அமைக்கப்படும்; இந்த ஆலை 1984-ஆம் ஆண்டு துவங்கும் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

புதிதாக நியமனம் செய்யப்படவிருக்கும் கிராம நிருவாக அலுவலர்களுக்கு 2 மாதப் பயிற்சி அளிக்கப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.



## 6—10—81

தமிழகத்திலுள்ள 'பாலிடெக்னிக்குகளில் புதிய கல்விப் பிரிவுகள்' அமைப்பது பற்றி ஆராய ஒரு நிபுணர் குழுவை அமைப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

சேலம், நெல்லை, திருச்சி ஆகிய நகரசபைகளை மாநகராட்சி (கார்ப்பரேஷன்களாக) உயர்த்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.


## 11—10—81

தமிழகத்திலுள்ள 1,117 ரெவின்யூ பிர்க்காக்களிலும், பிர்க்காவுக்கு ஒரு ''சார் பதிவாளர்'' அலுவலகம் துவக்க அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

## 13—10—81

நடைபெற இருக்கும் ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் ஆகிய பிரிவினருக்கு எந்த எந்த இடங்கள் ஒதுக்குவது என்பது பற்றி முடிவெடுக்க மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.





# சுவடிப் புலத்தின் அருமைகள்! பெருமைகள்!

**சு. அழகப்பராசு,**

ஆய்வு மாணவர்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

**ப**ல்லாயிரக் கணக்கான தமிழ்ச் சுவடிகள் இன்னும் பெயர் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. அதைப் பார்ப்போரும் படிப்போரும் குறைந்து விட்டனர். கால வெள்ளத்தால் தானே அழிகின்ற சுவடிகள் பல. இயற்கையின்றி மனிதர்களின் அறியாமையால் செயற்கையாய் அழிவன பல. சில பயன்படாமல் பூசைப் பொருள்களாய்ப் பாதுகாக்கப் பட்டுப் பரண்சிறை ஏறிவிட்டன. அச்சுவடிகளின் அருமை பெருமையை அவசியம் தமிழகம் அறிந்தாக வேண்டும். அதை உணர்த்த விழைவதே இவ்வெழுத்துரையின் நோக்கமாகும்.

### சுவடிகள் அரியன

அச்சு நூல்களை நாம் இக்காலத்தில் எல்லா இல்லங்களிலும் இருக்கக் காண்கிறோம். ஆனால் பழங்காலத்தில் எல்லா இல்லங்களிலும் ஏட்டுச் சுவடிகளைக் காண இயலாது. சுவடிகள் இருப்பிடமறிய நாம் அக்காலக் கல்வி முறை உணர்தல் வேண்டும். திண்ணைப்பள்ளிகள், பொதுச் சாவடி பள்ளிகள், அரசமரப் பள்ளிகள் போன்றவற்றில்தான் மாணவர்கள் கல்வி கற்றனர். அதிலும் எல்லா வீட்டுக் குழந்தைகளும் அக்காலக் கட்டத்தில் கல்வி பயில விழைவதில்லை; முடிவதுமில்லை. அந்தணர், பெருஞ்செல்வந்தர்கள், கணக்குப்பிள்ளை, நாட்டாண்மையர், பெருவணிகர், கிராம அதிகாரிகள் போன்றவர்களின் பிள்ளைகளும், அவர்கள் இல்லப்பணியாளர் குழந்தைகளும் பெரும்பான்மையும் கல்வி கற்றனர். இக்காலம் போல் பள்ளி நாடிச் செல்லாமல் ஆசிரியர் இல்லம் நாடி மாணவன் சென்று பொருள் நனி கொடுத்துக் கற்க வேண்டியிருந்தது.

அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான நீதி நூல்கள், அடிப்படைக் கணக்கு வாய்பாடுகள், கணக்குகள் போன்றவற்றைக் கற்றனர். செந்தமிழும் நாப்பழக்கம் என்ற முறையில் மனனம் செய்வர். இவர்கள் இக்கல்வியின் காலத்தை நான்கைந்தாண்டுகளுக்குமேல் நீட்டார். இதன்பின் மேற்படிப்புச் செல்வோர் எண்ணிக்கை இன்னும் குறைந்தது. ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி ஆசிரியர்களிடம் சென்று பயிலவேண்டி இருந்தது. மனனத்தின் நிறைவுக்குப் பின்னர் மண், கரும்பலகை போன்றவற்றில் எழுதப் பயிற்சி பெறுவர். இதில் முழுமைபெற்ற பின்னரே ஓலைச்சுவடியில் எழுதினர். சுவடி தயாரிக்க மாணவனுடன் பெற்றோரும் பணிமேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் மனனம் செய்தவரையே போதுமென்று சில பெற்றோர்கள் தம் மக்கள் படிப்பை முடித்தனர். இவற்றைத் தொடர்ந்து கற்கத் தொடங்கி சுவடியில் எழுதியோர் சமய நூல்கள், பக்திப்பாடல்கள் போன்றவற்றை எழுதி வைத்தனர். அவருள் இலக்கண இலக்கியங்களை எழுதியோர் சிலரும் இருந்தனர்.

### சுவடிகள் இருந்த இடம்

தனித்திறம் பெறவிழைந்து கற்றவர்களிடமும், ஆசிரியர்களிடமும் பயன்பாட்டிற்காகச் சுவடிகள் இருந்தன. பெருஞ்சான்றோர், செல்வந்தர் இவர்கள் பெருமைக்காகச் சுவடிகளைக் கொண்டிருந்தனர். மடங்கள், போன்ற சமய நிறுவனங்கள் அங்குள்ள சரஸ்வதி பண்டாரத்திற்காகச் (நூலகம்) சுவடிகளைச் சேகரித்தனர். இவற்றுள் சிறு சிறு நூல்கள் பல இடங்களிலும் இலக்கண இலக்கியங்கள் சில இடங்களிலுமே இருந்தன.

### சுவடிகளின் அழிவு

இயற்கை, செயற்கை இரு வகையிலும் சுவடிகள் அழிந்து படுகின்றன. செல்லரித்தல், ராமபாணம், புகை-தூசு போன்றன படிதல், தீக்கிரையாதல் காலவோட்டத்தால் காக்க முடியாமலே அழிதல்போன்றன இயற்கை காரணங்களாகும். கவனமின்மை கையாளுகின்ற முறை, பதினெட்டாம் பெருக்கில் ஆற்றிலிடுவது, ஓமம் வளர்க்கப்பயன்படுத்துதல் போன்றன செயற்கைக் காரணங்களாகும். இத்தனை இடர்ப்பாடுகளையும் தாண்டி காலங்கடந்து நிற்கின்ற சுவடிகள் மிகச் சிலவே. அவ்வாறு குறைந்து காணப்படும் சுவடிகளே பல்லாயிரக் கணக்கின எனில் தமிழ்நூல்கள் அனைத்தும் அழியாத்திறன் பெற்றிருப்பின் அதன் அளவு எண்ணிலடங்கா. அப்படிக் கிடைத்தரியச் சுவடிகளை இனிமேலும் அழியவிடுவது நாம் தமிழுக்குச் செய்யும் கொலைச் செயலை ஒக்கும்.

### சுவடிகள் இருக்குமிடம்

குறைவாக இல்லங்களில் உள்ள சுவடிகளை விடுத்து பெருமளவினதை மட்டும் நோக்கலாம். ஏறக்குறைய எட்டியவரையில் நூற்று நான்கு இடங்களில் தமிழ்ச் சுவடிகள் இருக்கின்றன. சுவடிகள் நூலகமாக இயங்குவன மிகச் சிலவே. தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம், அரசினர்க் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை அரசினர்க் கீழ்த்திசைச் சுவடி நூலகம் திருவனந்தபுரம், மதுரைப் பல்கலைக் கழக நூலகச்சுவடி பிரிவு, மதுரைத் தமிழ்ச் சங்க நூலகம், டாக்டர் ஐயர் அவர்கள் நூலகம்போன்றன அவ்வகையின. இன்னும் சில இடங்களில் எத்தனை சுவடிகள்-என்னென்ன சுவடிகள் என்று எதுவும் தெரியாது. சுவடிகள் இருக்கின்றன என்ற அளவில் மட்டும் செய்திகள் தெரிகின்றன.

ளைட்டினார். உலகம் மாயை என்ற சங்கரரின் வேதாந்தம்-பரமுலகம் போய்ப் பாமர மக்கள் போ என்ற பதுப்பா வைதிப் பண்பாடு மக்களிடையே பரவுவதைக் கடிந்தார். அந்தகைய நம்பிக்கையைக் கண்டு சிரித்துத் துப்பினார். ஆசிரம வாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னாகுமோ என வினை பீதி கொள்ளவில்லை. அந்தகைய சோம்பேறி வேதாந்தங்களில் ஊறிய மக்கள் உதவாக்கரைகளாக, ஒன்றுக்கும் உதவாத பிற்போக்கு வாதிகளாக ஆகிவிடுவார்கள் என்பது அவர் கொள்கை.

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால் சகிக்க முடியாது. பணக்காரர்களின் கொடுமையைப் பலமாகச் சாடுகிறார் அவர். தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் எனக் கர்ஜிக்கிறார். வாழ்வு வசதிகள் அனைத்தும் பெற்று மக்கள் வாழ வேண்டும். வர்த்தகம் வளமாக வேண்டும், இயந்திரத் தொழில்கள் பெருக வேண்டும், புதுயுகத்தின் நலன்களெல்லாம் நாட்டிலே குவிய வேண்டும் என்றெல்லாம் விரும்புகிறார். பூசாரித்தனமும், சுலோக ஜனையும் அவரது மதக் கோட்பாடுகள் அல்ல. மக்களுக்கு உழைத்தலே— சகோதர ஜீவர்களின் பணி புரிவதே— அவரது மதம்.



# தமிழ் மறவாப் பெரும்புலவர்



—நாவலர் சோமசுந்தர பாரதியார்

தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப்புலவர் பெருமானின் பாக்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச நேச நெருப்பு அவியாது வளர்ந்து, தமிழக முழுதும், இருளகற்றி, ஒளிரச்செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது.

புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர் செம்பரிதி யொளி கண்டு புகழ்வதில்லை. சிற்றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர் அமிர்தம் சிறந்த ருசியுடையதென்று அதிசயிப்பதில்லை. வெயிலிடுவது பரிதிக்கும் சுவையினால் உயர்வது அமிர்தத்துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப்பற்றுயர் திருப்பதால், ஒருவரும் அது கண்டு வியப்பதில்லை. சிறிது குறைந்த உயர்வளவில் மட்டே மாந்தர் கண்டு வியந்து, நயப்பது வழக்கம். சாமானியமாக, பரிசுக்குப் பாடாமலும், பணமுடையோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும் உண்மையில் வாழ்ந்த இவ்வுயர் புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் பெருமித மிகுதியால் மட்டுமே நமதுலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார் ஏனைப்புலவர் போலாது, புதுமுறைகளையே கிருட்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளைவிட்டுப் புதுக்கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும், மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதிய யாப்புகளையும் உண்டு பண்ணியிருக்கிறார். அநாயாசமாய், இயற்கையியல்புகளிலிருந்து, உருவகங்கள் உண்டுபண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால், பெரிய விஷயங்களை விளக்கத் துணியும், தனித்திறலும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது அரிய குணங்கள், வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமையுணர்ச்சி, சுதந்தரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும், இவர்க்கு இயல்பானவை. இவையெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது "கண்ணன் பாட்"டையும், "பாஞ்சாலி சபத"த்தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசிதமாகும். இவை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து உள்ளத்தனைய "நடுநிலையில் சிந்திப்பார்க்கு திவர் உயர்வு என்பது தெளிவாகும்.



# பாரதியாரின் இளவல் விசுவநாத ஐயர் பேட்டி

பாரதியார் ஒரு மேதை. மேதை மட்டுமல்ல; ஒரு சிறந்த அறிவாளியுங்கூட. சிறிய வயதிலிருந்து தமிழ் மீது பற்று கொண்டு கவி புனைவதிலும் அதை அழகாக இலக்கிய நயத்தோடு பாடுவதிலும் மிக்க ஆர்வங்காட்டியவர். 1882 ஆம் ஆண்டு எட்டையபுரத்தில் பிறந்தார். எங்களது தந்தையார் சின்னச்சாமி அய்யர் தமிழ் மீது அளவிலாத பற்றுதல் கொண்டவர். சமஸ்தானத்தில் பலருடன் தொடர்பு கொண்டவராதலால், சிறந்த அறிவாற்றலையும் கொண்டவராயிருந்தார். முத்துச்சாமி தீட்சிதர் போன்றவர்கள் வாழ்ந்த காலத்திலேயே பாரதியாரின் கவிதைகள் பாராட்டுப் பெற்றன. அப்பாடல்கள் மக்களிடையே வீர உணர்ச்சியை தூண்டின என்றே சொல்லவேண்டும். எங்கள் தந்தையார் எங்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டார்.

பாரதியார் தனது ஐந்தாவது வயதிலேயே தாயை இழந்துவிட்டார். அதன்பின் எங்களது தந்தைதான் தாயாகவும் தந்தையாகவும் இருந்து பேணி வளர்த்து வந்தார். கல்வி கற்பிப்பதற்பான ஏற்பாடுகளைச் செய்தார். அதன்பின் இரண்டாவது மனைவியாக எனது தாயான திருமதி வள்ளியம்மாளை மறுமணம் செய்து கொண்டார். என் தாயாருக்கு நானும், எனது தமக்கை ஆக இரண்டு பேர். முதல் மனைவியின் பிள்ளை பாரதியார் மட்டுமே. என் தாயாரை பாரதி தன் சொந்தத் தாயாக பாவித்து அன்பு செலுத்தி வந்தார். சில நேரங்களில் கஷ்டங்களைக் கூட என் தாயாரிடத்தில் சொல்லி ஆறுதல் பெறுவதுண்டு. அப்பொழுதெல்லாம் பாரதியை எங்கள் தந்தையார் சுப்பையா என்றுதான் கூப்பிடுவது வழக்கம். அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களில் நாவலர் சோமசுந்தர பாரதி ஒருவர். பாரதி தன் ஏழாவது வயதிலேயே கவிகள் புனைந்தார். அருங்கவிகள் திருஞான சம்பந்தர், பராசக்தி அருள்பெற்ற குமரகுருபரர் போன்றோர் இளம் வயதிலேயே கவி பாடினார்கள் என்று சொல்லப்படுவதற்கு நிகராக விளங்கினார் பாரதி என்றுகூட சொல்லாலம். அதனால் பிற்காலத்தில் பெருங்கவியாக விளங்கினார். தமிழ் இசையிலும், இலக்கியத்திலும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். பாடல்களை இயற்றுவதோடு மட்டுமின்றி, அவற்றை இசைபட, இலக்கியநடையில் தானே பாடியும் வந்தார்.

எங்கள் தந்தையார் எட்டயபுரத்தில் நடத்திவந்த காட்டன் ஜின்னிங் மில்லை அந்நிய அரசு ஆதரவின்மையால் நசித்து மேற்கொண்டு நடத்த முடியாமல் போய்விட்டது. அதனால் எங்களது தந்தையார் மனம்நொந்து போனார். 1898-ல் எங்கள் தந்தையார் மறைந்துவிட்டார். அதன்பின்னால் 'தந்தை போயின் கல்வி போம்' என்பதற்கேற்ப பாரதி தன் கல்லூரிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்.

1893ஆம் ஆண்டிலே இருந்து-பாரதிக்கு 8 அல்லது 9 வயதாகியிருக்கும் போதே பெரும் புலவர்கள் கூடும் கூட்டத்தில் தானும் பங்கேற்று அவர்களுக்கு நிகராக விளங்கினார் தனது 16-வது வயதிலே அப்பெரும் புலவர் கூட்டத்தில் தான் 'பாரதியார்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்கள். பாரதியின் புகழைப் பாராட்டாதவர்கள் எவருமிலர். பாரதியின் வளர்ச்சியைக் கண்டு

பொறுக்காத காந்திமதிநாத பிள்ளை என்ற புலவர், பாரதியை 'சின்னப் பயல்' என்று ஒரு பாடல் மூலம் கூற, அதற்கு பதிலடியாக பாரதியார் ஒரு பாடலைப் பாடி அதில்தம்மை 'சின்னப் பயல்' என்று கூறியவரை 'அதி சின்னப் பயல்'என்று கூறி அனைவரது பாராட்டுதலையும் பெற்றார்.

1879ம் ஆண்டில் பாரதிக்குக் கல்யாணம் நடந்தது. செல்லம்மாள் என்ற பெண்ணை மணந்து கொண்டார். அப்போது பாரதிக்கு வயது 16½ தான். மனைவியின் வயது 10 இருக்கும். அக்காலங்களில் குழந்தைக் கல்யாணம் நடப்பது சகஜம். பாரதிக்கு கல்யாணம் நடந்த சமயத்திலேயே என் தமக்கைக்கும், என் அத்தை மகனுக்கும் கல்யாணம் செய்வித்தார்கள். தமக்கைக்கு வயது 4 கூட ஆகவில்லை. என் அத்தை மகனுக்கு வயது 10.

## சுவடிகள் சேகரிக்கும் முறை

அயல் நாடுகளில் இருக்கின்ற சுவடிகளை அவர்கள் நமக்குத்தர இசையார். அவற்றிற்கான அட்டவணைகள்தான் நமக்கு முதன்மைத் தேவை. அங்கங்கே உள்ள தமிழியல் நிறுவனங்கள், அமைப்புகள் இவற்றைக்கொண்டோ தமிழர்களைக் கொண்டோ அட்டவணை தயாரிக்கலாம். அதை விடுத்து இங்கிருந்தே தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தனுப்பி அட்டவணையைத் தயாரிக்கச் செய்யலாம். அவற்றின் துணை கொண்டு நமக்குத் தேவையானவற்றை மட்டும் பிரதிசெய்து கொள்ளலாம். அதற்கு நுண்நிழற்படம் (Microfilm Photo stet) போன்ற முறைகளைப் பயன்படுத்தலாம்.

### தனியார் சேகரித்தல்

பொதுவில் சேகரிக்கும் முறையை தனியார் சேகரித்தல், அரசு சேகரித்தல் எனப்பகுத்துக் காணலாம். அந்தச் சுவடிகள் தோன்றிய பகுதி, அதிகம் வழக்காறு உள்ள பகுதி, பயிலப்பட்ட பகுதி போன்றன கொண்டு அவ்விடம் சென்று சுவடியைப்பெறலாம். நமக்குப் பழக்கமான விருப்பமான பகுதிக்குச் சென்றும் அரிதின் முயன்று பெறலாம். தனது நோக்கத்தை இதழ்களில் அறிவிப்புக் கொடுத்தும் பெறலாம்.

### அரசு சேகரித்தல்

தனியாரினும் அரசு எளிமையாகச் சேகரிக்க இயலும். அரசாணைகளை (Govt. orders) தகுந்த அலுவலர்களுக்கு அனுப்பிப் பெறலாம். அதிகமான தொகை தருவதாயின் அவற்றை விரைவில் பெறலாம். இதற்கான தனி அலுவலர்களை நியமித்துக் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அனுப்பி தொகைதந்து பெற்றுக்கொள்ளச் செய்யலாம். அரசு உண்மை ஊக்கம்கொண்டு தின, வார, மாத மிருமுறை, மாத இதழ்களில் அறிவித்து அவற்றைத் தகுந்தோர்களிடம் ஒப்படைக்கச் செய்யலாம். கண்காட்சி, நூலக விழாக்கள், கல்வி விழாக்கள் போன்றவற்றை நடத்தும்போது சுவடிக்கெனத் தனியிடம் தந்து வருவித்துப்பெறலாம். த்க்க தொகை அவர்களுக்குக் கிடைப்பின் அவற்றைத் தூரபலர் முன்வருவர்.

### சுவடிகளைப் பாதுகாத்தல்

ஏழுதிச் சேர்த்தோர் எழுதியவுடன் அந்த எழுத்துக்கள் நன்றாகத் தெரியும்பொருட்டு மஞ்சல், கரி, இலைச்சாறு, போன்றவற்றைத் தேய்ப்பர். பிறகு அடிக் கடி வெயிலில் உலர்த்தியும் வைப்பர். தாழம்பூ வசம்புபோன்றன பூச்சிகொல்லிகளாய்ப் பயன்படுத்தப்படும். எண்ணிக்கைஅதிகமானால் இவ்வாறு செய்தல் இயலாது. நூலகங்களில் ஏடு துடைப்பதற்கென்றே ஒரு பணியர் அமர்த்தப்படுவார். ஓலையில் உள்ள புழு, பூச்சிகள் இவற்றை அழிக்க எண்ணெயிடுவர். அவற்றைத்துணியில் தோய்த்துத் தேய்ப்பர். குளோரைடு (chloride), ரசகற்பூரம் போன்றவற்றையும் கட்டுகளின் அருகில் இடுவர். இதனால் இராமனபாணம் போன்றன சுவடியை விட்டு அகன்று விடும். மழைக்காலத்தில் பூஞ்சக்காளான் பிடித்து ஓலைகள் அழிந்து படாமலிருக்க ஈரப்பதம் சேகரித்துக் காட்டும் கருவியைக் கொண்டு பதம் உணர்ந்து அவற்றை நீக்க மருந்துகளிடுவர். மிகவும் அழிந்துபடக்கூடிய சூழலில் உள்ள சுவடிகளை பதினைந்து நாட்கள் மருந்திட்ட பெட்டியிலிட்டு பின்னெடுப்பர். இதனால் மருந்தின் தன்மைகள் வெளியேறாமல் உட்கிடந்து விரைவாகவும் தனது பணியை செம்மையாகவும் செய்யும். மேலும் குளிர்சாதன அறையிலிட்டும் பாதுகாக்கலாம்.

### பாதுகாத்த சுவடிகள் அச்சுருவம் பெறல்

பாதுகாத்த சுவடிகளைப் பதிப்பித்து தமிழின் இலக்கிய, இலக்கண, கலை போன்றவற்றின் செம்மையை உலகறியச் செய்ய வேண்டும். சுவடியைப் பதிப்பிப்பதும் எளிமையான செயலன்று. அதற்கு ஆழ்ந்ததொரு தனிப் பயிற்சியும், ஆர்வமும், விடா முயற்சியும் வேண்டும். வாய்மொழிவழி கேட்டு எழுதப்பெறுவதாலும், எழுதுவோரின் கல்வியறிவு, கேள்வியறிவு இலற்றாலும், கவனக்குறைவு ஊன்றிக் கவனியாமை போன்றலற்றாலும் ஏட்டுச்சுவடியில் பிழைகள் நேருகின்றன. சுவடிகளைப் பயில்வோர் தனது கருத்துக்களையும் இடைச் செருகி பதிப்பிப்போரை இடர் செய்கின்றனர். ஆசிரியர் மாணவருக்கும், மாணவர் தம் மாணவருக்கும் பிறருக்கும் வாய்வழியே புகட்டுவதால் பாடல் மாற்றங்கள் பெற்று மூலத்தைச் சிதைவு படுத்துகின்றன.

மாணவர்கள் ஆசிரியர் கூறும் ஒத்த மேற்கோள்களை, துணைச் செய்திகளை மூலத்தே அடுத்துக் குறித்துக் கொள்கின்றனர். பின்னர் அதைப் பகுத்துப் படியெடுப்போர் விடப்பட்டனவாகக் கொண்டு அவற்றைத் தொடர்ந்து படியெடுப்பர். அது பின்வரும் பதிப்பாசிரியர்களுக்கு இடர்தரும்.

### சுவடியில் எழுதும் முறையும் எழுத்து முறையும்

பழமை இலக்கண இலக்கியங்கள் பெரும்பான்மையும் செய்யுள் நூல்களாகவே இருந்தன. செய்யுளுக்கும் உரைக்கும், சான்றுகளுக்கும் வேறுபாடு தெரியாமல் பிரிப்பில்லாமல் தொடர்ந்தெழுதப்பட்டிருக்கும். மெய்கள் புள்ளி பெறாமலே இருக்கும். இன்னும் றகர - ரகர வேறுபாடுகள், கால் - ரகர வேறுபாடுகள், குறில் நெடில் வேறு பாடுகள் இன்றியே ஓலைகள் எழுதப்பட்டிருக்கும். மேற்கோள்கள் பல காட்டப்பட்டாலும்; எதற்காகக் காட்டப்பட்டன; எந்தெந்த நூல்களிலிருந்தெல்லாம் எடுக்கப் பட்டன; என்பதும் தெளிவின்றியே இருக்கின்றன. எழுத்துக்கள் இரண்டை ஒன்றிணைத்து எழுதும் முறையும் எண்கள், நாட்கள், மாதங்கள், அளவைகள் போன்றனவும் குறியீடாக எழுதப்பெறுதலுமுண்டு. மேலும் கிரந்தம், வட்டு எழுத்துகளும், மலையாளம், தெலுங்கு வரிவடிவங்களும் சிற்சில சுவடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தனைச் சிக்கல்களும், இடர்ப்பாடுகளும் உணர நமக்குத் தனிப் பயிற்சி அவசியமாகின்றது.

### சுவடிப் புலக்கல்வி

இப்படி அருமையும், பெருமையும், சீரும், சிறப்பும் மிக்க தமிழ்ச்சுவடிகள் பாதுகாக்கப் பட்டு அச்சுருவம் பெற்றாக வேண்டும். சுவடிகளைப் படிப்போர்-பதிப்பிப்போர் மிகக் குறைந்த எண்ணிக்கைக்குள்வந்து விட்டனர். அவர்களும் வயது முதிர்ந்தோர்களாய்க் காணப்படுகின்றனர். அவர்களுக்குப் பின்னர் சுவடி படிப்பறிந்தோர் வருங்காலத்தில் இல்லாது போய்விடுவர். அக்கல்வி இக்கால இளைஞர்களுக்குக் கற்பிக்கப்படல் வேண்டும். அப்பணியைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு தொடக்கநிலையில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இக்கல்வியை 1979 ஆம் ஆண்டு தொடங்கியது. அரசிடம் அனுமதிபெற்று தளரா முயற்சியில் சுவடியைப் படிக்கப் பயிற்சி தரும் நிறுவனம் இது ஒன்றே. தமிழ்ச்சுவடி பயிலும் பயிற்சி உலகில் வேறெங்கும் அமையவில்லை. இதன் தொடர்ச்சி வளர்ச்சி நிலையினதாக தமிழ்ப் பல்கலைக்கழக ஐம்புலங்களில் ஒன்றாகச் 'சுவடிப் புலம்' அமைந்திருக்கின்றது. இன்னும் பெரியதொரு நிலையில் இப்புலம் செயல்படும் என்பதில் ஐயமில்லை. கட்டாயமாக அப்பணி தொடர்ந்து நடந்து வளர்ந்து தமிழ்மொழியின் அறிவுப்பெட்டகங்கள் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும்.



# தாய்க்கு மேம்பட்ட காய்



நாகை மருத்துவன் சேரனார்

எது எளிது என்பதில் எவருக்கும் நாட்டம் உண்டு. இன்றைய அறிவியல் எதையும் எளிதாக்கும் பணியைத்தான் செய்து வருகின்றது. எளிதாக்கும் நாட்டம் அனைத்து அறிவியல் கலைகட்கும் செயலோட்டமாகி வருகின்றது. மருத்துவ அறிவியல் இதனைச் செம்மையாக வளர்த்துள்ளது.

உடலுக்குத் தரும் மருத்துவ முறைகள் உண்ணல், ஊசி ஏற்றல், முகரல், பூசல் என்பன. இந்த வரிசையே வரவர எளிதைக் காட்டுகின்றது. உண்ணலில் கசப்பு முதலியவை கடுமை. அதனைவிட ஊசி ஏற்றல் சிறுநேர வலி என்ற அளவில் எளிது. அதனைவிட முகரல் எளிது. முகரலில் வாய்ச்சுவை வெறுப்பும் இல்லை; வலியும் இல்லை. பூசல், மூன்றிலும் எளிது.

ஊசி ஏற்றல் சிறு நேரமானாலும் வலி வலிதான். அந்தக் கடுமையை எளிதாக்கத் தற்போது ஒரு கருவியைத் தோலில் வைத்த அளவிலேயே மருந்துத் தன்மை உடலில் ஏறிவிடும் முறை காணப்பட்டுள்ளது. அதனிலும் எளிதாகக் கருவியை வைக்கும் உணர்ச்சியும் தெரியாமல் மருந்தைச் செலுத்தும் முறை வந்துள்ளது. அதனிலும் எளிதாகக் கதிர்களைப் பாய்ச்சும் முறை வந்துள்ளது.

தற்கால இவ்வளர்ச்சிப் பாங்கு பண்டையத் தமிழ் மருத்துவத்திலும் காணப்பட்ட ஒன்றாகும். இதற்கு ஒரு சான்று:

மலக்கழிவிற்கு - பேதிக்குப் பல தமிழ் மருந்துகள் உள. அவற்றுள் எளிதான ஒன்று விளக்கெண்ணெய் கொடுப்பது. மருந்தில் இதுஎளிது என்றாலும் குடிப்பவர்க்கு அருவெறுப்பானது. ''முகத்தைப் பார்! விளக்கெண்ணெய் குடித்தவன்போல் உள்ளான்'' என்று கூறப்படும் வழக்கிலிருந்தே இதன் வெறுப்புக் கடுமையை உணரலாம். இதனை எளிதாக்கத் தாள் மருந்துகள் உருவாயின. அவற்றின் சுவையை மறைக்கக் கருப்பட்டி போன்ற இனிப்புக்குள் வைத்து வழங்கி எளிதாக்கினர். ஒரு மருத்துவர் இதனையும் எளிதாக்கப் புறப்பட்டார். அதனைக் காண அவரைத் தொடர்வோம்.

ஆற்றங்கரையில் எதையோ தேடியவராக நடைபோடுகின்றார் மருத்துவர். குனிந்து குனிந்து அங்கு படர்ந்திருக்கும் கொடிகளைக் கூர்ந்து நோக்குகின்றார். அவர் எதிர்பார்த்துப் போன கொடியைக் கண்டுவிட்டார் போலும். அந்தக் கொடியண்டை அமர்ந்து இலை, காய் முதலியவற்றை நோட்டமிடுகின்றார். அவரது வாய், ''இதுதான் ஆற்றுத் தும்மட்டிக் கொடி'' என்று மொணமொணக்கின்றது. ''ஒன்று, இரண்டு, மூன்று''— கொடியில் காய்த்துள்ள காய்களை எண்ணுகின்றார். அக்கொடியைப் போட்டுவிட்டார். தொடர்ந்து நடை. அதுபோன்ற கொடிகளைக் கண்டு காய்களை எண்ணிச் செல்கின்றவர் ஒரே காய் காய்த்துள்ள கொடியண்டை அமர்ந்து காயைப் பார்க்கின்றார். அது முற்றிய காய் ஆனதால் விட்டு எழுகின்றார். மற்றொரு கொடியில் ஒரே காய்; பச்சை நிறம்; நடுத்தரக் காய். அக்கொடியைத் தேர்ந்துகொண்டார்.

எலுமிச்சம் பழ அளவுள்ள அந்தக் காயைக் கத்தியால் ஒரு பக்கத்தில் சற்று அறுத்துப் பிளக்கின்றார். காயின் உள்ளே இடைவெளியுள்ளது. மடியிலிருந்து ஒரு சிறு காயை எடுத்து அந்தப் பிளவின் வழியாக நடு இடைவெளியில் வைத்து அழுத்துகின்றார். பிளவை மூடிப் பொதிந்து பொருந்துவாய்களை ஒன்று கூட்டுகின்றார். வாழைநாரால் காயைப் பக்குவமாகக் கட்டி அடியில் இலைச் சருகுகளை வைத்துப் பக்குவப் படுத்தி மீள்கின்றார். ஒவ்வொருநாள் காலையிலும் வந்து பார்த்துச் செல்கின்றார். நாற்பத்தெட்டு நாள்கள் கடந்துவிட்டன. பச்சைக்காய் முதிர்ந்து மஞ்சள் நிறங் கண்டு விடுகின்றது.

அதனைப் பறித்தெடுத்துச் செல்கின்றார். இல்லத்தில் அடுப்பில் சட்டி வைத்து அதில் காயை வைத்துக் காய் மூழ்கும் அளவில் நீர் ஊற்றிக் காய்ச்சுகின்றார். நீரெல்லாம் சுண்டுகின்றது. மறுபடியும் காய் மூழ்கும் அளவில் நீர் - காய்ச்சல் - சுண்டல். இவ்வாறு நான்கு முறை சுண்ட வைக்கின்றார். முடிவில் நீர் ஊற்றாமல் காயைப் புரட்டிப் புரட்டி வாட்டுகின்றார். தீய்ந்துபோகாமல வறுத்தெடுக்கின்றார். பின்னர் காய்க்குள் பொதியவைத்த சிறுகாயைப் பக்குவமாக தரையில் படாமல் எடுத்து ஒரு மங்குக் குப்பியில் வைத்து இறுக மூடிவிடுகின்றார். மகிழ்ச்சிப் பெருமூச்சு விடுகின்றார். ஆம், எதிர் பார்த்த மருந்து உருவாகிவிட்டது இனி அதனைப் பயன்படுத்திப் பார்க்க வேண்டும்.

அவரே பயன்படுத்த முனைகின்றார். குப்பியிலிருந்து காயை எடுத்து வலது உள்ளங்கையில் வைத்து மூடிக் கொள்கின்றார். இடது கையிலிருந்த ஒரு குவளை வெந்நீரைப் பருகுகின்றார். காயைக் குப்பியில் வைத்துவிட்டு சற்று நேரமானதும் மலங்கழிப்பு அறைக்குச் சென்று மீள்கின்றார். ஒரு முறை மலக்கழிவு நேர்ந்து விட்டது. மறுபடியும் காயைக் கையில் வைத்து ஒரு குவளை வெந்நீர் பருக மற்றொருமுறை மலக்கழிவு நேர்ந்தது.

மருந்தாக்கப்பட்ட காயைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு குவளை வெந்நீர் பருகினால் ஒருமுறை மலக்கழிவு; ஒவ்வொரு முறைக்கும் வேண்டுமளவு இவ்வாறே செய்தால் போதும். விளக்கெண்ணெய், தாள், இனிப்பு மூடிய மருந்து இவைக்கெல்லாம் கையில் வைத்த அளவே மருந்தாவது எத்துணை எளியதாயிற்று!

உள்ளே வைத்த காய் என்ன காய்? கடுக்காய்.

ஆம், ஆற்றுத் தும்மட்டியில் ஒருகாய்க்கொடியின் காயில் கடுக்காயைப் பொதிந்து 48 நாட்கள் வளர்த்து, பறித்தெடுத்து, மூழ்கும் அளவு நீரில் 4 முறை சுண்ட வைத்து, தீயாமல் வறுத்தெடுத்து கடுக்காயை எடுத்தால் மருந்தாகிவிடும். கையில் வைத்தாலே பயன்தரும். எளிதான மருந்தன்றோ.?

ஆற்றுத் தும்மட்டிக் கொடி கிடைக்காதபோது திருகுகள்ளியைக்குடைந்து கடுக்காயை வைத்து வளர்த்து விளங்காய் அளவு திருகுகள்ளி விழுதில் பொதிந்து ½ படி திருகுகள்ளிப் பாலில் சுண்ட வைத்து வறுத்தெடுத்தும் செய்வர்.

இதனையும் எளிதாக்க [illegible] தார் மற்றொரு தமிழ் மருத்[illegible]

# எழுச்சிமிகு தேசியகவி



**வி. சக்கரைச் செட்டியார்**

**ஸ்ரீ**மான் சுப்பிரமணிய பாரதியார், தமிழ் மறுமலர்ச்சியினை (RENAISSANCE) முன்கொண்டு கட்டியங்கூறிய பெருமான்; எழுச்சிமிக்க தேசியகவி இறந்துவிட்டார், ஆயினும் காலலர்ந்த காரத்துள் மறைந்த வீரபுருஷர்களைப் போன்று, அவர் தமது கவிதைகளின் குழலிசையால் இன்னமும் நம்மோடு உரையாடியவாறிருக்கின்றார். அவர் என்றுமழியாப் புகழுக்கு உரிமை பெற்றிருப்பது, அவர்தம் வாழ்வில் ஒரு சமயம் பல ராஜிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருந்த போதிலும் அவை காரணம் பற்றியோ அதிகார வர்க்கத்தினரோடு சேர்ந்து கொண்டே அவருக்குக் கீழ்ப்பட்டோ ராஜீய மகாநாடுகளிலும், கமிட்டிகளிலும் பிரதம ஸ்தானங்கள் ஏற்றிருந்தா ரென்பது பற்றியோ அல்ல; ஆனால், அவரது ஓய்விலா ஊக்க உணர்ச்சி அவர் தமிழ்நாட்டிற் களித்துள்ள இன்னிசைக் கீதங்களுள் எந்நாளும் தகதகவெனத் ததும்பி நிற்கின்ற தன்மையால் தான் ஆகும்.

இது போழ்து பாரதியாரின் பாடல்களை நால்வரின் பாடல்களைப் போல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாடும்படி செய்வித்தல் எப்போதும் நல்ல பாடல்களைப்போற்றுவதான தமிழ்நாட்டின் கடமையாகும். இந்தப் பாடல் தொகுதிகளை வெளிவரும் போதே அவற்றை ஆயிரக்கணக்காகத் தமிழ் படிக்கும் ஜனங்கள் வாங்க வேண்டும். பாரதியாருக்குத் தனது பாடல்களை ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் எளிய வீடுகளிலும், பணக்காரர் மாளிகைகளிலும், ராஜீய மேடைகளிலும், நிம்மதி நிலவும் இல்லங்களிலும் பாடக் கேட்பதன்றி வேறொன்றும் மனச்சாந்தி உண்டாக்கக் கூடியதல்ல. என் நாட்டவரே! இந்திய நாட்டையும் தமிழ் மொழியையும் போற்றுபவரே! பாரதியாரின் ஞாபகார்த்தமாக எனது இச்சிறு மாலையைச் சமர்ப்பித்திருக்கிறேன். நான் செய்வீர்கவென்று நம்புகிறபடி நீவிர் உங்கள் கடமையைச் செய்வீர்களா?

தன் கல்லூரிப் படிப்பை விட்டுவிட்ட பின் எங்களது குடும்பம் நிர்க்கதியாய் இருந்த போது, காசியிலிருக்கும் அத்தை ஊருக்குவந்து பாரதியை அழைத்துக் கொண்டு காசிக்குப் போய்விட்டார்கள். அங்கு ஜைய நாராயண கல்விச் சாலையில் படித்து வந்தார். சமஸ்கிருதத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று விளங்கினார். எம்மொழியைக் கற்றாலும் தமிழ்மீதுதான் அளவிடாத ஆர்வம் காட்டினார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு எட்டையபுரத்திற்கே வந்து பின்பு சென்னையில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் சப்-எடிட்டராக வேலையில் சேர்ந்தார்.

1920-21ஆம் ஆண்டில் சென்னையில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் சப்-எடிட்டராக வேலை பார்த்தபோது, நாங்கள் சைதாப்பேட்டையில் தான் குடியிருந்தோம். பாரதியாருடைய நண்பர் துரைசாமி என்பவருடன் தான் நெருங்கிப் பழகினார். அவரிடம் தான் இயற்றிய கவிகளைப் பாடிக் காண்பித்து வருவார்.

பின்பு திருவல்லிக்கேணியில் துளசிங்கம் பெருமாள் தெருவில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு வ.வே.சு. ஐயர் அவர்கள் அடிக்கடி வந்து போவார். சிந்துக்கவி என்று அக்காலத்தில் மிகவும் பிரபலமடைந்த ஒன்று. 'காயிலே புளிப்பதென்ன, கனியிலே இனிப்பதென்ன கண்ணபெருமானே' போன்ற சிந்துக்கவிகளை இயற்றி அதை அவருக்குப் பாடியே காட்டுவார்.

சென்னை வீட்டுக்கு ஒரு நாள் அவருடன் புதுவையில் பழகிய நீலகண்ட பிரும்மச்சாரி என்பவர், கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, மயிலாப்பூரிலுள்ள வக்கீல்களை மிரட்டி பணம் கேட்டு வந்ததாகச் சொன்னார். இப்படி செய்வது தவறு உன் வறுமை அப்படி மிரட்டச் செய்திருக்கிறது என்று கூறி தன் கையிலுள்ள சில்லறைகளைக் கொடுத்தார். அவர் முன்னால் தான் 'இனியொரு விதிசெய்வோம் இதை எந்நாளும் காப்போம் என்று பாடினார். அதில் 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று அவர் புரட்சிக் குரல் கொடுத்து புத்துணர்வூட்டியதை மறக்கவே முடியாது. இந்த நாடு சுதந்திரம் அடைந்தபிறகு எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதை முன்னமேயே தனது கருத்தினைத் தெளிவாகத் தெரிவித்தார்.

ஒருசமயம் திருச்சியில் நான் படித்துக் கொண்டிருந்த போது சென்னையிலிருந்த பாரதிக்கு ஆங்கிலத்திலேயே ஒரு கடிதம் எழுதினேன். அதைக் கண்ட பாரதி, ''இனி இவ்வாறு ஆங்கிலத்தில் கடிதம் எழுதாதே. தமிழிலேயே எழுது - கொச்சையாக இருந்தாலும் பரவாயில்லை'' என்று பதில் கடிதத்தில் குறிப்பிட்டார்.

யாருக்கும் அஞ்சாமல் - தான் நினைத்ததைத் தைரியத்துடன் செயலில் நடத்திக் காட்டி நிமிர்ந்து நில் நட என்று கூறி வருவார். அவருடன் நடந்து சென்றால் கீழே பார்த்துக் கொண்டு வராதே நிமிர்ந்து நடந்துவா என்பார்.

**[சென்னை தொலைக்காட்சி நிலையத்துக்கு அளித்த பேட்டியிலிருந்து.]**



# பாவலர் பாட்டினில் பாரதிக் கவிஞர்






**சா**தி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற் றொன்று
பாதியை நாடு மறந்தால்—மற்றப்
பாதி துலங்குவ தில்லை.
சாதி களைந்திட்ட ஏரி—நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே—நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்றுரைப் பார்என்னி டத்தில்—அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திடவில்லை—நான்
இன்றும் இருப்பத னாலே!
பன்னும் நம் பாரதி யாரின்—நல்ல
பச்சைஅன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு— நம்
நற்றமிழர்க் கெழில் மூச்சு!

மேலவர் கீழவர் இல்லை—இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை
நாலு தெருக்களின் கூட்டில்—மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று-சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்
மேலும்அப் பாரதி சொல்வார்-'சாதி
வேரைப் பொசுக்குங்கள்' என்றே.

செந்தமிழ் நாட்டினிற் பற்றும்—அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இலாதவை அன்றோ!—எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை—கையிற்
காசை நினைப்பதும் இல்லை.
செந்தமிழ் வாழிய! வாழி—நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்.



**பாவேந்தர் பாரதிதாசன்**

**பா**ரதிநாள் இன்றடா?
பாட்டிசைத்து ஆடடா?

கற்றகல்வி காட்ட வென்று
கவிபுனைந்த தமிழ் மொழி
கண்டு கேட்டுப் பொருள் விளங்காக்
கசப்புக் கொண்ட நாட்களில்
சொற்றொடரில் இனிமை தந்தான்
சுப்ர மண்ய பாரதி;
தூயன் வாழ்க! வாழ்க! வென்று
சொல்லிச் சொல்லி ஆடடா!

ஒருமனிதன் உணவே யின்றி
உயிர்துடிக்கக் கண்டிடில்
உருக்குலைப்போம் உலகந்தன்னை
ஒன்றுகூடும் என்றவன்
அருமைப் பாடல் தமிழகத்தில்
அச்சம் போக்கி வருகுது !
அண்டமும் கிழித்தெறியும்
ஆற்றல்நமக் கூட்டுது!

நாட்டை யாளும் உரிமை சொந்த
நாட்டினருக் கல்லவோ?
நமது பாட்டன் சொத்தடா
நமது நாடு தமிழனே!
நாட்டில் வேறு ஆட்சி செய்து
நம்மை யாள்வ தேதென
நாளும்பாடி அறிவளித்தோன்
நமது பாரதி! ஆடடா!

வறுமைநோய் பிடித்து வீட்டில்
மனைவி மக்கள் வாடிட
வாட்டமோடு இந்தியத்தாய்
மனத்தில் காட்சி தந்திடச்
சிறுமை நீக்கிக் களிப்பினோடு
தேசத் தொண்டு செய்தவன்
சீர்த்தி இன்று மனத்தில் எண்ணில்
திரண்டுதோ ளுயருது !

கார்மயில் போல் தமிழர் இங்குக்
களித்திருந்த நாட்கள் போய்க்
கண்ணிருண்டு அடிமை வாழ்வில்
கதிகலங்கி நின்றிடத்
தார்மொழியால் உணர்வளித்துத்
தலைநிமிரச் செய்தவன்
தமிழ்க்கவிகள் வாழ்க வென்று
தலைநி மிர்த்தி ஆடடா!

**-கவிஞரேறு வாணிதாசன்**

வர். இக் கடுக்காயை மேலும பக்குவப்படுத்தி வாணலியில் வைத்து வடித்து மணமுள்ள தைலநீராக்கினார். முல்லைப் பூச்செண்டில் ஒரு துளி தெளித்து சிறு குழந்தையை மூக்கால் முகர செய்தார். ஒருமுறை மலக்கழி வாயிற்று. அக் காலத்தில் அரசு குடும்பத்துக் குழந்தைகளுக்கு இவ்வாறு பயன்பட்டது. கையில் பொதியாமல் நீர் பருகாமல் முகர்ந்த அளவில் மருந்தாயிற்று.

இதனைவிட எளிது இருக்கவா போகின்றது என்று கருதவேண்டி யதில்லை! உண்டு.

சிதகிக் கடுக்காய் என்று ஒன்று உண்டு. இதனை வழங்கும் மரம் மிக அருமையாகவே காணப்படும். இந்தியாவில் காபூல் பகுதியில் சில மரங்களே உள்ளன என்பர். காய் காய்த்திருக்கும்போது அம் மரத்தின் அடியில் போய் பத்து மூச்சளவில் நிற்க வேண்டும். அவ் வளவுதான். ஒருமுறை மலக் கழிவு ஆகும். வேண்டியதற்கு ஏற்ப மரத்தடியில் நிற்கவேண்டி யதுதான் மருந்து. இதைவிட எளிமை, பார்த்தால் மருந்தாக வும், கேட்டால் மருந்தாகவும், நினைத்தால் மருந்தாகவும் இருக்க வேண்டும்.

கடுக்காய் என்னவோ சொல் லில் கடு இருந்தாலும் மருந்தில் எளிமை தருகின்றது. கடுக்காயை இவ்வாறு மருந்தாக்கிக் கையில் அவரையறியாமல் கொடுத்து விட்டால் மலக்கழிவில் நிற்பார். இதுகொண்டு தான் ''ஆள் கடுக் காய் கொடுக்கிறான் ''என்ற தொடர் தோன்றியது.



குழந்தைக்கு மலக்கழிவிற்காக ஆமணக்கு எண்ணெய்யாம் விளக் கெண்ணெய் கொடுக்கத் தாய் என்னென்ன பாடு படுத்துகின் றாள்.

''காலொடு கையமுக்கிப்
பிள்ளையை வாய்நெறித்துப்
பாலொடு நெய்பெய்யும்தாய்''

என்று முனைப்பாடியார் என் னும் அறநெறிச்சார ஆசிரியர் படம்பிடித்துப் பாடினார். இந்தத் தாயை விட, கையில் அமர்ந்து பயன்தரும் காய்-கடுக்காய் இந்த வகையில் மேம்பட்டது. இதற் குப் ஒரு பாட்டு; மருத்துவப் பாட்டு. பதார்த்த குண சிந்தா மணி என்றொரு மருந்து மூலிகை நூல். அது தாயையும் காயையும் வைந்து.

'கடுக்காயும் தாயும்
கருதில் ஒன்று என்றாலும்
கடுக்காய்அத் தாய்க்கதிகம்
காண்நீ !-கடுக்காய் நோய்
ஓட்டி உடல்தேற்றும்:
உற்ற வன்னையோ, சுவைகள்
ஊட்டிஉடல் தேற்றும்
உவந்து''

—எனப்பாடித் தாய்க்குமேல் மேம்பட்ட காயாக்கிக் காட்டி யுள்ளது.

தாய்க்கு மேலான கடுக்காய் தமிழ் மருந்தில் தலைநிற்பது. கடுமைப் பெயர் பெற்று எளிமை யில் பயன்தருவது. இவ்வாறா கும் தமிழ் மருந்து, உடல் நலத் திற்கு விருந்து.

## வேளாண்மைக் கடன் பெற வழிவகைகள்

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டு களில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங் கங்களில் தவணை கடந்த கடன் நிலுவைகள் தொடர்ந்து அதிகரித்து வந்ததால், அச் சங்கங்கள் வழங்கிய வேளாண்மைக் கடன்களின் அளவு குறைய நேரிட்டது.

வசதி படைத்த பெரிய விவசாயிகள் வேண்டுமென்றே தங்கள் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தாமல் இருந்ததால், பத்து ஏக்க ருக்கு மேல் சொந்த நிலமுடைய பணக் கார கடன்தாரர்கள் கணிசமாகக் கடன் பாக்கி வைத்திருந்தால், அதனை வசூ லிப்பதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க தமிழக அரசு நடப்பு ஆண்டு மார்ச் மாதம் முதல் வாரத்தில் அனுமதி வழங் கியது.

கடன்களைத் திருப்பிச் செலுத் தாத கடன்தாரர்களின் மீது கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுறையான நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, ஜூன் 81-உடன் முடிந்த கூட்டுறவு ஆண்டில் ரொக்கமாக மட்டும் சுமார் 100 கோடி ரூபாய் வசூ லிக்கப்பட்டது. இதில் சுமார் 78 கோடி ரூபாய் அளவிற்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மட்டும் வசூலித்து, கூட்டு றவுச் சங்கங்கள் ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளன. இதனால் தமிழகத்தில் உள்ள 15 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் தமது தவணை கடந்த கடன் நிலுவையை ஜூன் 80 இறுதியில் 70.5 சதவீதத்தி லிருந்து, ஜூன் 81 இறுதியில் 31.8 சத வீதத்திற்குக் குறைத்ததோடு அல்லாமல், அவ்வங்கிகள் அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் புதிய கடன்களைப் பெற தகுதி பெற்றுள்ளன. நடப்பு சம்பா பரு வத்திற்குப் பயிர்க்கடன் தேவைப்படும் தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவரும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களி டமிருந்து புதிய கடன்களைப் பெற்றுப் பயனடையலாம்.





# பருவத்தே பயிர் செய்!

டாக்டர் ஆர். குழந்தை வேலு,
உழவியல்துறை, வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை.

பருவம் என்பது ஒரு குறிப் பிட்ட காலத்தைக் குறிக்கும். தமிழ்நாட்டில் உள்ள பருவங் களை நான்காகப் பிரிக்கலாம். ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களையும் குளிர்காலமென் றும், மார்ச் முதல் மே மாதம்வரை கோடை காலமென்றும், ஜூன் முதல் செப்டம்பர் வரை தென் மேற்குப் பருவகாலமென்றும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடமேற்குப் பருவகாலமென்றும் கூறுகிறோம். ஒவ்வொரு பருவ காலத்திலும் தட்ப வெப்பநிலை யும் மழையும் வெவ்வேறாக உள் ளது. குளிர்காலத்தில் மழை யில்லாமல் குளிராகவும், பனி பெய்து கொண்டும் இருக்கும். கோடை காலத்தில் வெப்பம் அதிகமாகவும் இரண்டொரு கனத்த மழையும் இடியும் மின்ன லுடன் பெய்யும், தென்மேற்கு பருவகாலத்தில் நீலகிரி, கொடைக் கானல், பொள்ளாச்சி, தென் காசி போன்ற பகுதிகளில் அதிக மழையும் மற்றப் பகுதிகளில் சுமா ரான மழையும் பெய்யும். இப் பருவத்தில் தென்மேற்குப் பருவக் காற்று அதிக விசையுடன் அடிக் கும். நாம் இதைக் காற்றடி காலம் என்றும் கூறலாம். இப்பருவத் தில் வட மாவட்டங்களில் நல்ல மழையும் தெற்கே செல்லச் செல்ல மழை குறைவாகவும் பெய்யும். வடகிழக்குப் பருவ காலத்தில் தமிழ்நாடு முழுவதும் அதிக மழை பெய்து மானாவாரி சாகுபடி செய்ய ஏற்றதாக உள் ளது. இப்பருவத்தில் முதல் இரண்டு மாதங்களில் அக்டோபர் நவம்பர் மாதங்களில் பெரும் பாலான மழை பெய்துவிடுகிறது. டிசம்பர் மாதம் மழை மிகவும் குறைவாகவும் வெப்பநிலை தணி வாகவும் இருக்கும். இப்பருவத் தில் கடற்கரைப் பகுதிகளில் சூறாவளிக்காற்று வீசுவதுடன் அதிக மழை பெய்து வெள்ளம் ஏற்படும் நிலையும் உள்ளது.

முன்பு கூறிய பருவகாலத்தை நாம் பட்டம் என்றும் அழைக் கிறோம். தமிழ்நாட்டில் பல வித பட்டங்கள் உண்டு. உதாரண மாக சித்திரைப்பட்டம், ஆடிப் பட்டம், புரட்டாசிப் பட்டம், தைப்பட்டம் என்றும் வழங்கி வருகிறது. நாம் ஒவ்வொரு பயிரும் விதைக்கும் பருவத்தை அம்மாதத்தின் பெயரைவைத்துப் பட்டமாக அழைக்கிறோம். விஞ் ஞான முறைப்படி பார்க்கும் பொழுது ஒவ்வொரு பட்டமும் அப்பொழுது பயிரிடப்படும் பயி ருக்கு உகந்த தட்பவெப்பநிலை, சூரிய ஒளி, மழை முதலியவை உகந்ததாக உள்ளது. நாம் தற் பொழுது ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ற பருவகாலத்தைக் கவனிப் போம்.

**நெல்:**

நம் மாநிலத்தில் நெல் பயிர் எல்லாப் பருவங்களிலும் பயிரி டப்படுகிறது. இதற்கு முக்கிய மாக வேண்டியது தண்ணீர் மட்டும்தான். மற்ற காலநிலை ஆண்டு பூராவும் ஏற்றதாக உள் ளது. ஆற்றுப் பாசனத்தில் பயிரி டப்படும் நெல்லுக்கு ஏற்ற பட்டம் அணைக்கட்டில் உள்ள நீரைப் பொறுத்து உள்ளது. குளத்துப் பாசனத்தில் பயிரிடப் படும் நெல்லானது அங்கு பெய் யும் மழையின் அளவைப் பொறுத்து உள்ளது. நெல்லின் மகசூல் அங்கு உள்ள தட்பவெப்ப நிலையைப் பொறுத்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக்கழகம் கோவையில் மாதம் இரு முறை வீதம் ஒரு ஆண்டில் 24 முறைகள் விதைக்கப்பட்டு மகசூலை ஆராய்ந்ததில் தைப் பட்டத்தில் விதைக்கப்பட்ட நெல்லின் மகசூல் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் வெப்ப நிலை அதிகமாகவும், காற்றில் உள்ள ஈரப்பசை குறை வாகவும், சூரிய ஒளி அதிகமாக வும் மழையே இல்லாமல் இருந்த தால் பயிர் நன்றாக வளர்ந்து மகசூலை அதிகப்படுத்தியுள்ளது. ஆனால் இப்பருவத்தில் கிணற் றில் நீர்மட்டம் குறைவாக உள்ள தால் நெல்லுக்குத் தேவையான அளவு நீர் கிடைப்பதில்லை. மழை காலத்தில் நெல் பயிரிடும் பொழுது வெப்பம் [illegible] வானத்தில் மேகங்கள் [illegible] வும் உள்ளதால் சூரிய[illegible] வாகவும், காற்றில் ஈரப்பசை

# பாவலர் பாட்டினில் பாரதிக் கவிஞர்

ஆன்ற கவிஞர் அனைவோர்க்கும் முன்முதலாய்த்
தோன்றுங் கவிதைச் சுடரொளியே! நீவாழ்க!

பேசுந் தமிழிற் பெரும்பொருளைக் கூறிவிட்ட
வாசத் தமிழ்மலரே! வாரிதியே! நீவாழ்க!

தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கும் கவிக்கடலே!
பட்டமரந் தழைக்கப் பாட்டெடுத்தோய்! நீ வாழ்க!

எங்கே தமிழ் எனறு என்தமிழர் தேடுகையில்
இங்கே தமிழென் றெடுத்துவந்தோய்! நீ வாழ்க!

கருக்கிருட்டில் பாழ்குழியில் கால்பதிந்த செந்தமிழை
உருக்குமொளி மண்டபத்தில் உலவவிட்டோய்! நீ வாழ்க!

நெஞ்செலும்பு கூடாகி நிலைகுலைந்த மானிடரை
அஞ்சுதலை விட்டு அழைத்துவந்தோய்! நீவாழ்க!

முட்டறுந்து கால்முடங்கி மூக்கா லழுதவரைக்
கூட்டிவந்து வேல்கொடுத்த கொற்றவனே! நீ வாழ்க!

நாடுமொழி நாடாது நாடுவென கேடாகக்
கூடெடுத்தோர் மேனிக்குக் குருதிதந்தோய்! நீவாழ்க!

இமயமலை மேற்றொடங்கி இளங்குமரி எல்லைவரை
தவழ்ந்துவரும் சந்திரனே! சாரதியே! நீவாழ்க!

என்றுவரும் என்றே ஏங்கிநின்ற சுதந்தரத்தைக்
கண்டவன்போல் பாடிவைத்த கற்பனையே! நீவாழ்க!

தாயின் மணிக்கொடியைத் தலைமேல் மிதக்கவிட்டுச்
சேயாய் அகங்குளிர்ந்த சித்தனே! நீவாழ்க!

காலக்கடல் கடந்து கவிதையெனும் தோணியிலே
நீளவழி வந்தவனே! நித்திலமே! நீவாழ்க!

பாரதத்தை வாழவைக்கப் பாட்டெழுதிப் பாட்டெழுதிப்
பூரதத்தில் ஏறிவிட்ட பொன்மகனே! நீவாழ்க!

**—கவியரசு கண்ணதாசன்**



சோற்றினுக் கறிவை விற்றுத்
தூர்த்தரைப் புகழ்ந்து பாடிச்
சோம்பரைச் செல்வ ரென்று
தொழுதுடல் சுகித்து வாழ்ந்து
கூற்றினுக் குடலம் போகக்
குப்பையிற் கவிகள் சோரக்
குறிவிடா திறந்து போகும்
கவிகளின் கூட்டம் சேரார்
வேற்றவர்க் கடிமை நீங்கும்
விடுதலை வரமே வேண்டி
வீரமும் ஞானம் பொங்கச்
சக்தியின் வேள்வி பாடி
நாற்றிசைத் தமிழ ரெங்கும்
நாட்டினைப் பணியச் செய்த
நாவலர் சுப்ர மண்ய
பாரதி நாமம் வாழ்க!

**— நாமக்கல் கவிஞர்**

ஊரறிய நாடறிய உண்மை யெல்லாம்
ஒருவரையும் அஞ்சாமல் எடுத்து ரைத்தோன்
ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்,
அமரகவி யென்றெவரும் புகழப் பெற்றோன்,
சீருயரும் தமிழ்மக்கள் செய்த வத்தால்
தென்னாடு சிறக்கவந்த சுப்ர மண்ய
பாரதியார் பெயர்போற்றி ஏத்து வோமே
பாமாலை புனைந்தவற்குச் சாத்து வோமே!

## பாரதி மண்டபம்

தேவருமே இங்குவந்து செந்தமிழைக் கற்றினிய
காவலராய் வாழமனம் பற்றுவரே; பூவுலகில்
வானுயரும் பாரதியார் மண்டபத்தை எட்டப்பன்
மாநகரில் கண்டு மகிழ்ந்து.

பாரதத்தாய் செய்ததவப் பயனாய் வந்த
பாவலன்சுப் பிரமணிய பாரதிக்குச்
சீருயரும் எட்டய்ய புரத்திற் கண்ட
திருக்கயிலை யனையமணி மண்ட பத்தைப்

பெருவகை தருசர்வ ஜித்தில் கன்னி
பிறந்தஇரு பானேழில் திறந்து வைத்தான்
தாரணியில் வங்கவள நாட்டை யாளும்
சக்கரவர்த்தி ராஜகோ பால மாலே!

**—கவிமணி**

# ஒருமைப்பாட்டுக்கு உருவம் கொடுத்த உயர் கவிஞர்



**கா. திரவியம், ஐ. ஏ. எஸ்.**

பாரதியாரின் கவிதைகள் இன்று நமக்கு உணர்த்துகின்ற முக்கிய படிப்பினை என்ன, தலையாய செய்தி என்ன என்று நாம் ஆராய்ந்து பார்த்தால், அது நாட்டின் ஒருமைப்பாடே. அன்றே அவர் வற்புறுத்தி வலியுறுத்தியதை, அன்றே அறிவுறுத்தியதை, இன்று நாம் சொல்லிலும், செயலிலும், சிந்தையிலும், நம்முடைய திட்டங்களிலும், பொது வாழ்விலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூக இயல்களிலும், கலாச்சார எழுச்சிகளிலும், நிகழ்ச்சிகளிலும், போற்ற வேண்டும்; அந்த ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டும். பாராட்ட வேண்டும், பலப்படுத்த வேண்டும், வளமாக்க வேண்டும், உண்மையானதாக்க வேண்டும், உயிருள்ளதாக்க வேண்டும் என்பதுதான் பாரதியாரின் பாடல்கள் இன்று நமக்குத் தரும் படிப்பினை.

நாட்டுக்கு என்ன நேரிட்டாலும் அது நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்கு மட்டும் நேரிட்டதல்ல; நாட்டு மக்களின் அடித்தளத்திலிருந்து அரண்மனைகளில் வாழ்கின்ற மக்கள் வரையில் அனைவருக்கும், நாட்டுக்கு ஏற்படுகின்ற ஒரே கதிதான் ஏற்படும்; நாட்டிற்கு ஏற்படும் நல்லதிலும், கெட்டதிலும் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் குடிமக்கள் அனைவருக்கும் பங்கு இருக்க வேண்டும், பங்கு உண்டு, என்பதை அவர் வலியுறுத்தினார்.

'எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்— வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'

அன்று அவர் கூறியதில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முப்பது கோடி என்பது மாறிவிட்டிருக்கலாம்; பொருளற்றதாகவோ, பொருத்தமற்றதாகவோ ஆகிவிட்டிருக்கலாம்; ஆனால், வாழ்ந்தால் அத்தனைகோடியும் வாழ்வோம்; வீழ்ந்தால் அத்தனை கோடி முழுமையும் வீழ்வோம் என்ற உணர்வு, நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்படுவது, நாட்டின் நலனுக்கு இன்றியமையாத ஓர் ஊக்கச் சக்தியாகும். இந்த நாடு என்பது ஒரு பூகோளப் பாகுபாடு அல்ல, ஓர் அரசியல் நிலையல்ல, இந்த நாடு என்பது கோடானு கோடி மக்களின் உயிர்நிலையிலிருந்து பிறக்கின்ற உண்மை, வரலாற்றிலிருந்து, கலாச்சாரத்திலிருந்து, பாரம்பரியத்திலிருந்து, பொருளாதார வளத்திலிருந்து ஆதாரம் கண்டு வலுப்பெற்று வளம் பெறுகின்ற ஓர் உண்மை, இந்த நாட்டின் ஒருமைப்பாடு என்பது, அவருடைய பாடல்கள் பலவற்றிலே பரந்து கிடக்க நாம் காணலாம்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'

என்ற அவர் சூத்திரம், நமக்குத் தாரக மந்திரமாக விளங்குவது. இந்த நாடு என்பது என்ன? இந்த நாடு என்பது இந்தியன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும், உதிக்கின்ற பெருமித உணர்வு, எழுகின்ற இலட்சிய வேகம், ஏற்படும் எக்காள உணர்வு. இந்த நாட்டிலே நான் வாழ்ந்தேன். இந்த நாட்டின் பாரம்பரியம் எனக்கு உரியது, இந்த நாட்டின் வரலாறு எனக்குச் சொந்தமானது, இந்த நாட்டின் பண்டைக் காலமும், தொன்மையும், தொன்று தொட்டு அவர்கள் கண்டு வந்த மாட்சியும் எனக்குச் சொந்தமானவை, இந்த நாட்டின் நிகழ் காலத்தினை உருவாக்குவதில் நான் பங்கு கொள்கிறேன். இந்த நாட்டின் எதிர் காலத்தில் எனக்கு உரிமை உண்டு என்று முக்காலத்தையும் தன்னுடைய சிந்தையாலும், செயலாலும், தன்னுடைய திட்டத்தாலும் கட்டித் தழுவுகின்ற உணர்வு ஒவ்வோர் இந்தியனுக்கும் ஏற்படுவதுதான், நாட்டின் ஒருமைப்பாட்டின் அடிப்படை.

**நாட்டுக்கு எல்லை, பாட்டிலே எல்லையற்ற நாட்டுப்பற்று:**

அந்த உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாட்டிற்கு ஆதாரமாக ஒரு நாட்டிற்கு எல்லை வேண்டாமா? இந்திய நாட்டின் எல்லைகளை, பாரதியார் சந்தம் துள்ளுகின்ற நடையிலே சொல்லுகின்றார், சித்தரிக்கின்றார். நாட்டின் பெயரென்ன ?

'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—
மிடிப்
பயங் கொல்லுவார், துயர்ப்பகை வெல்லுவார்'

இந்த நாட்டின் பெயர், இந்த நாட்டின் பண்டைக் காலப் பெயர், இந்த நாட்டின் அரசியல் சாசனம் இட்ட பெயர், இந்த நாட்டின் பெயரெனறு உலகெங்கும் ஏற்றப்பட்டு-போற்றப்பட்டு வருகின்ற பெயர்—'பாரத தேசம்' அந்தப் பாரததேசத்திற்கு வடக்கே வெளளிப் பனிமலை ஓர் எல்லை. தெற்கே 'நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் நித்தம் தவஞ் செய்யும் குமரி' எல்லை.

**பொதுவான பாரம்பரியப் பெருமை:**

இந்த எல்லைக்குள் அடங்கியது பாரத நாடு; எல்லை மட்டும்தான் நமக்குச் சொந்தமா? ஒரே பாரம்பரியம், ஒரு பொதுவான பாரம்பரியம், இந்த நாட்டுக்குச் சொந்தம். அந்தப் பொதுவான பாரம்பரியம் என்று, எவ்வாறு, உருவாகியது? நேற்று உருவானது அல்ல; இன்று உருவாகிக்கொண்டிருப்பதல்ல; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உருவான பாரம்பரியம். யாரால் உருவான பாரம்பரியம் ?

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்து'— இந்நாட்டில் உருவாக்கிய பாரம்பரியம். முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்து உருவாக்கியது. அவர் வாழ்ந்தது மட்டுமா, அவர் வாழ்வின் பலன்களையும், அவர் வாழ்விலே கண்ட சிந்தனைகளின பலன்களையும், அவர்கள் சிந்தனைக்கு ஆதரவாக, அரணாக இருந்த செயல்களின் பலன்களையும், நாம் இப்பொழுது வரலாற்றுப் பூர்வமாக அனுபவித்து வருகின்றோம்.

'சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே! இவ்வாறு சந்ததி சந்ததியாக, பரம்பரை பரம்பரையாக, முதிர்ந்த அறிவு பெற்று, ஆழ்ந்த அன்பு கொண்ட அனையாத அறவாழ்க்கையை ஒரு நெறியாகப் பின்பற்றி வந்த எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து வலுவூட்டி வளப்படுத்திய நாடு இந்த பாரத நாடு. முன்னோர்கள் என்றால் பெண்கள் மட்டும் அவர்களுக்கு உரிய பங்கையும், பொறுப்பையும் ஆற்றவில்லையா? பொது வாழ்வை ஆண்கள் உருவாக்கினார்கள்; அந்தப் பொது வாழ்வுக்கு ஆதாரமான இல்வாழ்க்கையை உருவாக்க மங்கையர்கள் இந்நாட்டை வளர்த்தார்கள். மங்கையர்கள் முயற்சி இவ்வாறு வீட்டிலும், நாட்டிலும், பெருமையும், நிறைவும் பொங்க ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடுபட்டு, அன்பு வழி நின்று அறவழி சென்று ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு; வீட்டையும் நாட்டையும் காத்து உருவாக்கிய பாரம்பரியம் உங்களுக்குச் சொந்தம். எனக்குச் சொந்தம். அந்தப் பாரம்பரியம் நம் அனைவருக்கும் சொந்தமானதால்தான் நாட்டின் ஒருமைப்பாடு என்பது ஒரு கோஷம் மட்டுமல்ல, ஒரு சூத்திரம் மட்டுமல்ல, ஒரு சுலோகம் மட்டுமல்ல, அது நம் வாழ்வின் உயிர் மூச்சாகி விடுகிறது.

**[1976ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து.]**



## "பாரதி" என்னும் சிறப்பு



சுப்பையாவின் (பாரதியாரின் இயற் பெயர்) தந்தை சின்னசாமி ஐயர், இரெட்டப்ப பூபதியின் அவைக்களப் புலவருள் ஒருவராக அரண்மனையில் இருந்தார். தந்தையாருடன் சுப்பையாவும் சேர்ந்து அரண்மனைக்கு அடிக்கடி சென்று வந்தார்.

அரண்மனை போக வர இருந்த சுப்பையாவுக்கு நட்பு ஒன்று கிடைத்தது. அதே அரண்மனையில் சோமசுந்தரம் என்னும் பெயருடைய சிறுவன் ஒருவன் வளர்ந்து வந்ததையறிந்தார். அவன் சுப்பையாவை விட மூன்றாண்டுகள் வயதில் மூத்தவர் எனறாலும், அவரது அழகிய தோற்றம், படிப்பில் திறமை, ஒழுக்க வாழ்வு ஆகியவை சுப்பையாவைக் கவர்ந்தன.

ஒரு சமயம், யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்ப் பெரும் புலவர் ஒருவர், திருநெல்வேலிக்கு வந்திருந்தார். சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினார். இறுதியில், ஒரு நாள், புலவர்கள் பலரையும் ஒருங்கே கூட்டி கவிதையில் தேர்வு ஒன்று வைப்பதாகக் கூறினார். அக்கூடத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிய, சுப்பையாவும் சோமசுந்தரமும் சென்றிருந்தனர். யாழ்ப்பாணப் பெரும் புலவர், அத்தேர்வில் தமிழறிந்த எவரும் கலந்து கொள்ளலாம் என அறிவித்தார்.

சுற்றடி ஒன்றைக் கொடுத்து, பொருளும் கூறி, கவிதை செய்யுமாறு அறிக்கை செய்யப்பட்டது. மாணவராக இருந்த சுப்பையாவும் சோமுவும் அக்கவிதைப் போட்டியில் கலந்து கொண்டனர். புலவர்களில் பலரும் கலந்து கொண்டனர். சில நிமிடங்களில், இம்மாணவர்கள் இருவரும் தத்தம் கவிதையை முடித்து யாழ்ப்பாணப் பெரும் புலவரிடம் கொடுத்தனர். ஏனைய புலவர்கள் பின்னரே கொடுத்தனர். கவிதைகள் பரிசீலனை செய்யப்பட்டன! சுப்பையா, சோமு ஆகிய இருவரின் கவிதைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. சுப்பையாவின் கவிதையில் கலைமகள் அருள் வெளிப்பட்டு நின்றது. அதைக் கண்ணுற்ற யாழ்ப்பாணப் பெரும் புலவர், இவ்விருவரையும் அழைத்து, 'பாரதி' எனனும் பட்டம் அளித்துச் சிறப்பித்தார். அன்று முதல் 'சுப்பிரமணிய பாரதி' 'சோமசுந்தர பாரதி' என இருவரும் அழைக்கப்பட்டனர்.

'பாரதியாரை' சுப்பையா எனற பெயரால் அழைப்பது படிப்படியாக நின்றுவிட்டது பிறகு அவர் 'பாரதியார்' என்ற பெயரால் அழைக்கப்பட்டார்!

**தகவல் : குளச்சல் இப்ராகீம்**

# பாட்டுப்புலவனின் நூல் முன்னுரைகள்

## ஸ்வதேச கீதங்கள்

"ஸ்வதேச கீதங்கள்'' என்னும் நூல் 1908-ல் முதன் முதல் வெளியாயிற்று. பின்வரும் ஸமர்ப்பணத்தோடும் முகவுரையோடும் கூடியது.

### ஸமர்ப்பணம்

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்துமநிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

**—ஆசிரியன்**


### முகவுரை

ஒருமையும் யௌவனத் தன்மையும் பெற்று விளங்கும் பாரத தேவியின் சரணங்களிலே யான் பின்வரும் மலர்கள் கொண்டு சூட்டத் துணிந்தது எனக்குப் பிழையென்று தோன்றவில்லை. யான் சூட்டியிருக்கும் மலர்கள் மணமற்றன என்பதனை நன்கறிவேன். தேவலோகத்துப் பாரிஜாத மலர்கள் சூடத் தகுதிகொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம் பூக்கள் அணிக் குறைவை விளக்கும் என்பதையும் யான் தெரிந்துள்ளேன். ஆயினும் உள்ளன்பு மிகுதியாக இச்செய்கையிலே துணிவு கொண்டு விட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான் மலர்களாகக் கருதி அங்கீகரிக்கவில்லையா ? அதனையொப்ப, எனது குணமற்ற பூக்களையும் பாரத மாதா கருணையுடன் ஏற்றருளுக!

மயிலாப்பூர்
1908 ஜனவரி 10.

**ஸி. சுப்ரமணிய பாரதி**

குறிப்பு : இந்தப் பாடல்களைப் பிரசுரிக்குமாறு என்னைத் தூண்டி, இவை வெளிப்படுவதில் மிகுந்த ஆவல் காட்டி உதவி களியற்றிய மித்திரர்களிடம் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.




பாரதி இறந்த பின்பு வெளியான முதல் நூலான சுதேச கீதங்கள் முகப்பு (1922)

## பாஞ்சாலி சபதம்

### பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதியாரின் ஸமர்ப்பணமும் முகவுரையும்

### ஸமர்ப்பணம்

தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும்
இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள்
செய்யப் போகிற
வர கவிகளுக்கும்

அவர்களுக்குத் தக்கவாறு
கைங்கரியங்கள் செய்யப்போகிற

பிரபுக்களுக்கும்

இந்நூலைப் பாதகாணிக்கையாகச்
செலுத்துகிறேன்.

**—ஆசிரியன்**

### முகவுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் [illegible] புதிய உயிர் தருவோனாகின்றான். [illegible] வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் [illegible] லோருக்கும் நன்கு பொருள் [illegible] எழுதுவதுடன், காவியத்துக்[illegible] குறைபடாமலும் [illegible]

அதிகமாக உள்ளதால் பூச்சி பூஞ்சான வியாதிகள் அதிகமாகப் பரவி விளைச்சலைப் பாதிக்கிறது. மேலும் இப்பருவத்தில் பயிரிடும் பொழுது அதிக உரம் தேவைப் படுகிறது. ஆகையால் தைப் பட்டத்தில் நல்ல நீர் வசதி உள்ள இடங்களில் நெல் பயிரிட்டு அதிக மகசூலைப் பெறலாம்.

**சோளம்:**

இப்பயிருக்கு அதிக வெப்பமும் பூக்கும் பொழுது மழையில்லாமலும் இருக்க வேண்டும். இறைவைப் பயிராக பயிரிடும் பொழுது பிப்ரவரி மாதம் 15 தேதிக்குள் விதைத்தால் நல்ல மகசூல் அடையலாம். இப்பயிருக்கு ஏற்ற பட்டம் தைப்பட்டமும் சித்திரைப் பட்டமும் ஆகும். இப்பட்டங்களில் பயிரிடும் பொழுது மணிகள் முற்றி அறுவடைக்கு வரும் பொழுது அதிக வெப்பம் உள்ளதால் நல்ல மகசூல் அடையலாம். மற்றப் பருவங்களில் சோளம் பயிரிடுவதானால் பருவத்திற்கு ஏற்ற ரகங்கள் தேர்ந்தெடுத்துப் பயிரிடலாம்.

**பருத்தி:**

பருத்திக்குப் பல பட்டங்கள் உள்ளன. கோவை மாவட்டத்தில் குளிர்கால கம்போடியா பருத்தி இறைவை பயிராகப் பயிரிடப்படுகிறது. இங்கு மிதமான சீதோஷ்ண நிலை இருப்பதால் அதிக விளைச்சல் கொடுக்கிறது. பருத்திக்கு முதல் மூன்று மாதத்தில் மிதமான வெப்பமும் குறைவான மழையும் காய் வெடிக்கும் பொழுது அதிக வெப்பமும் மழை இல்லாமலும் இருக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் நவம்பர் மாதம் அதிக மழை பெய்யும் ஆண்டுகளில் செடிகள் மிகுந்த வளர்ச்சி அடைந்து காய்பிடிப்பது குறைந்து விடுகிறது. மேலும் தொடர்ச்சியாக மேகம் மூடிக் கொண்டிருந்தால் சப்பை உதிர்வது அதிகமாவதுடன் சூரிய ஒளி குறைவதால் மகசூல் பாதிக்கப்படுகிறது. கோவையில் நடைபெற்ற ஆராய்ச்சி மூலம் குளிர் கால கம்போடியா பருத்தி ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்திற்குள் விதைத்து விட வேண்டும். அதற்குப் பின்பு விதைத்துப் பார்த்ததில் வாரத்திற்கு ஒரு குவிண்டால் பருத்தி விளைவு குறைகிறது.

**கரும்பு:**

கரும்பிற்கு மிதமான வெப்ப நிலையும் முற்றும் சமயத்தில் மிகவும் குறைந்த வெப்பமாக 16° சி இருப்பது நல்லது. கோவை மாவட்டத்தில் நில விவரம் சீதோஷ்ண நிலை கரும்பு வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது. மற்ற மாவட்டங்களில் அறுவடை செய்யும் பொழுது அதிக வெப்பமும் இருப்பதால் சர்க்கரைச்சத்து குறைகிறது. கோவையில் வருடம் பூராவும் கரும்பு வளர்ச்சிக்கு ஏற்ற காலநிலை உள்ளது. இதனால் எல்லாப் பருவத்திலும் கரும்பு நடலாம். ஆலையும் அடிக்கலாம். கரும்பு நடவுக்கு ஏற்ற பட்டமானது ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் முடியும் வரை இப்பட்டத்தில் நட்டால் நல்ல மகசூல் அடையலாம். மற்ற பருவங்களில் நடும்பொழுது அந்தந்தப் பருவங்களுக்கு சிபாரிசு செய்யப்படும் ரகங்களை நடவும். கரும்பு அறுவடையாகும்பொழுது வெப்பநிலை குறைவாக இருந்தால் அதிக சர்க்கரை கண்டு முதலாகும்.

**பயறு வகைகள்:**

உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயறு, மொச்சை, துவரை முதலியவைகள் மானாவாரியாக ஆடிப்பட்டத்தில் அதிக அளவு பயிரிடப்படுகிறது. பெரும்பாலும் இவைகளை நிலம் ஊடுபயிராகவும் கலப்புப்பயிராகவும் பயிரிடுகிறோம். பயறு வகைகள் அனைத்தும் குறிப்பிட்ட பருவத்தில் விதைக்காவிட்டால்



செடிகளின் வளர்ச்சி அதிகமாகி அல்லது குறைந்தோ மகசூலைப் பாதிக்கும். ஆனால் தற்பொழுது ஆராய்ச்சி மூலம் எல்லாப் பருவத்திலும் நன்கு வளரக்கூடிய குறுகிய கால உளுந்து, பச்சைப் பயறு, துவரை, அவரை, தட்டைப் பயறு ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் நெல் அறுவடைக்குப் பின்பு தை மாதத்தில் நஞ்சை நிலங்களில் உளுந்து, பயறு தெளிப்பது வழக்கம். தைப்பட்டம் தவறி விதைத்தால் செடியின் வளர்ச்சி அதிகமாகி காய் பிடிப்பது குறைந்து விடும். மேலும் மண்ணில் உள்ள ஈரமும் குறைந்து காய் முதிர்ச்சி அடைவது தடுக்கப்படுகிறது. புதிதாக வெளியிடப்பட்டுள்ள ரகங்கள் இவ்வாறு காலநிலையில் பாதிக்கப்படுவதில்லை.

புதிய பயறு வகையான சோயா மொச்சை நம் மாநிலத்தில் எல்லா பருவத்திலும் நன்றாக வளருகிறது. இதை நாம் ஆண்டு தோறும் பயிரிடலாம்.

**நிலக்கடலை:**

நிலக்கடலை அதிகப் பரப்பளவில் மானாவாரியாக ஆடிப்பட்டத்திலும் பொள்ளாச்சி தென் காசிப் பகுதியில் சித்திரைப்பட்டத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது. கடலைக்கு முன் பகுதியில் நல்ல மழையும் பின்பகுதியில் காய் முற்றும் தருணத்தில் குறைவான மழையும் அதிக வெப்பமும் தேவைப்படுகிறது. அதிக மழை பெய்வதால் காற்றில் ஈரப்பசை அதிகமாவதுடன் இலைப்புள்ளி நோய், துருநோய் பரவி மகசூலைப் பாதிக்கிறது. மேலும் பூச்சிகள் அதிகம் பரவுகின்றன. பவானிசகார் ஆராய்ச்சி நிலையத்தில் ஆவணிப்பட்டத்திலும், மார்கழிப் பட்டத்திலும் இறவை கடலை சாகுபடி செய்து பார்த்ததில் ஆவணியில் விதைத்த பயிர் மார்கழியில் விதைத்த பயிரைவிட கால் பங்கு அதிக மகசூல் கொடுத்தது. இதற்குக் காரணம் ஆவணிப் பட்டத்தில் விதைத்த பயிருக்கு அதிக வெப்பமும், குறைந்த மழையும், அதிக சூரியஒளியும், காற்றில் குறைந்த ஈரப்பசையும் நிலவி வந்ததால் நோய் நொடி இல்லாமல் பயிர் நன்றாக வளர்ந்தது. மழை காலத்தில் பயிரிடப்பட்ட கடலை அதிக மழையினாலும் குறைந்த வெப்பத்தாலும் பூச்சி நோய்களால் பாதிக்கப்பட்டு மகசூல் குறைந்துவிட்டது. ஆகையால் இறவை கடலை சாகுபடி செய்ய ஏற்ற பட்டம் மார்கழிப்பட்டம் தான்.

நாம் எந்தப் பயிரானாலும் அதற்கேற்ற பருவத்தில் பயிரிட வேண்டும். பட்டம் தவறி விதைப்பதால் மகசூல் பாதிப்பதுடன், பூச்சி பூஞ்சானநோய்கள் தாக்குவதுடன் மூட்டுவனிச் செலவுகள் அதிகமாகின்றன. ஆகையால் நாம் பருவத்தே பயிர் செய்வோம். பட்டத்திற்கேற்ற புதிய இரகங்களைத் தேர்ந்தெடுத்து விதைப்போம்.





# தானியங்களைத் தாக்குபவை

மு. கோபாலன்
எஸ். லட்சுமணன்
ஜி. பாலசுப்பிரமணியம்
பூச்சி இயல்கல்லூரி
வேளாண் கல்லூரி, கோவை.

சமீப கால பசுமைப் புரட்சியினால், இந்தியா ஓரளவு உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலையினை எட்டியுள்ளது. உணவு உற்பத்தி முன்னணியில் பல முற்போக்கான உத்திகளைக் கையாண்டு, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறோம். ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களைச் சேமித்து, அவை சேதமடையாது காப்பதில், அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் சேமித்து வைக்கும் தானியங்களை பல வகையான பூச்சிகள், எலியினங்கள் 25 சதம் வரை சேதப்படுத்துகின்றன. தானியங்களை சேமித்து வைக்கும் பொழுது அளவிற்கு அதிகமான ஈரம், அதனால் எழும் வெப்ப ஏற்றம் ஆகியவை, பூசணங்களும் பூச்சிகளும் பெருக, ஏதுவாக உள்ளன. இதனால் விதைப்பொருட்களின் வீரியம் குறைகின்றது. முளைப்புத்திறன் குறைவதோடு, தரமும் விரைவில் கெடுகின்றது. இவ்வாறான சேதங்களுக்கு காரணமாக உள்ள பூச்சிகள், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி இங்கே அறியலாம்.

**(அ) உள்ளிருந்து உண்டு வாழும் பூச்சிகள் :**

1. அரிசி கூன்வண்டு (சைட்டோஃபைலஸ் ஒரைசே) இவ்வண்டு நெல், சோளம், மக்காச்சோளம், கோதுமை ஆகிய தானியங்களை அறுவடைக்கு முன்பும், சேமிப்பு நிலையிலும் சேதப்படுத்துகின்றன. நன்கு வளர்ச்சி அடைந்த வண்டுகள் கரும்பழுப்பு நிறத்துடன் காணப்படும். முன் இறக்கைகளில் நான்கு இளஞ்சிவப்பு அல்லது மஞ்சள் நிற புள்ளிகள் காணப்படும். தாய் வண்டுகள், தானியத்தைதோண்டி முட்டையிட்டு, ஒருவகையான பிசுபிசுப்பான திரவத்தால் மூடி விடும். முட்டைகளிலிருந்து வெளிவரும் கால்களற்றபுழுக்கள் உள்ளிருந்து தின்று சேதப்படுத்தும்.

2. நெல்வண்டு (ரைசோபெர்த்தா டெமினிக்கா) இது நெல்லைத் துளைத்து, அரிசிப் பகுதியைத் தின்றும் மாவாக்கியும் சேதப்படுத்துகிறது. தாக்கப்பட்ட முட்டைகளில் மாவு சிதறி இருக்கும். இவ்வண்டு கரும்பழுப்பு நிறத்துடனும் தலைப் பகுதி மார்புப் பகுதியைச்சார்ந்து வளைந்தும் உடலின் பின்பகுதி மொட்டையாகவும் காணப்படும்.

3. நெல் அந்துப்பூச்சி (சைட்டோட்ரோகா சீரியலெல்லா) இந்த அந்துப்பூச்சி, உமி நீக்கப்படாத பெரும்பாலான தானியங்களையும், குறிப்பாக நெல்லையும் தாக்கும். இது வெளிர் மஞ்சள் நிறமுடையதாக இருக்கும். இதனுடைய புழுக்கள் நெல்லைக் குடைந்து சேதம் விளைவிக்கின்றன.

4. பயறு வண்டு (கலசோபுரூக்கஸ் இனங்கள்) இவை எல்லா பயறு வகைகளையும் தாக்கிச் சேதப்படுத்துகின்றன. இது 4 மி.மீ. நீளமும், கரும் பழுப்பு நிறமும், பின்பகுதி மழுங்கலான உருண்டையானதாகக் காணப்படும். இதனுடைய புழுக்கள், நேரிடையாகப் பயிறுகளைத் துளைத்து உட்சென்று, உண்டு சேதம் விளைவிக்கின்றன. இவ்வண்டுகள், சேப்பிடங்களில் மட்டுமின்றி, பயிர்களிலும்சேதம் விளைவிக்கின்றன.

5. மருந்துக்கடை வண்டு (ஸ்டகோபியம் பனிசியம்) நாட்டு மருந்துக் கடைகளில் சேமிப்பில் உள்ள மூலிகைகளைத் தாக்கி சேதப்படுத்துகின்றன. பொதுவாக சேமிப்பில் உள்ள மஞ்சளே, சுக்கு, கொத்தமல்லி, காய்ந்த மூலிகைத் தாவரங்களைத் தாக்குகின்றன. இந்த வண்டு செம்பழுப்பு நிறத்துடன் காணப்படும் தாக்கப்பட்ட பொருட்களிலிருந்து மாவுபோல் கொட்டும்.

6 சிகரெட் வண்டு (லேசியோடெர்மா செர்ரிகார்னிஸ்) இவை இளம்பழுப்பு நிறமுடையதாகவும், வட்டமாகவும் காணப்படும். தலைப்பகுதி கீழ்நோக்கி வளைந்திருக்கும். இதன் புழுக்கள் புகையிலை, சிகரெட், சுருட்டு, மிளகாய் விதைகள் ஆகியவற்றைச் சேதப்படுத்துகின்றன.

7. சர்க்கரை வள்ளிக்கிழங்கு மூக்கு வண்டு (ஸைலாஸ்ஃபார்மிக்கோயஸ்) இது எறும்பைப் போன்ற தோற்றத்துடன் நீண்ட மூக்குடன், செம்பழுப்பு நிறத்துடன் காணப்படும். இதன் புழுக்கள் கிழங்கினைக் குடைந்து உண்பதால், துர்நாற்றம் ஏற்படும் உண்பதற்கு தகுதியற்றவையாகி விடும்.

8. உருளைக்கிழங்கு அந்துப் பூச்சி (தொரிமியா ஒப்பர்குலல்லா) கரும்பழுப்பு நிறமுள்ள தாய் அந்துப்பூச்சியின் புழுக்கள், வயல்களிலும் சேமிப்பில் உள்ள உருளைக்கிழங்குகளைத் துளைத்து, உண்டு சேதப்படுத்துகின்றன.

**(ஆ) வெளியிலிருந்து உண்டு வாழும் பூச்சிகள் :**

1. சிவப்பு மாவு வண்டு (டிரைபோலியம் காஸ்டேனியம்) இது 3 மி.மீ. நீளமுள்ளதாகவும், செம்பழுப்பு நிறமுடையதாகவும், சற்று தட்டையாகவும் இருக்கும். இவைகளின் புழுக்கள் தானியங்கள், உலர்ந்த பழங்கள், பிண்ணாக்குகள் ஆகியவற்றைத் தாக்கிச் சேதப்படுத்தும்.

2. அரிசி அந்து (கார்ஸைரா செபலோனிக்கா) இது சாம்பல் நிறமுடையதாகக் காணப்படும். இதன் புழுக்கள் பட்டுப் போன்ற நூலாம் படையால், தானியங்களைப் பிணைத்து, அவற்றின் உள் இருந்து கொண்டு, சுரண்டி உண்ணும், உடைந்த தானியங்கள், அரைத்த மாவு ஆகியவை, எளிதில் பாதிக்கப்படும்.

3. அத்திப்பட்டான் ([illegible] காட்டெல்லா) இது [illegible] அளவில், சாம்பல் [illegible] துடன் காணப்படும். [illegible] அரிசி அந்துப்புழுக்கள் [illegible] தானியங்கள், [illegible]

கடலை, கோதுமை ஆகியவற்றைத் தாக்கி சேதம் விளைவிக்கும்.

**4. எலிகள் :** வீடுகளிலும், சேமிப்புக்கிடங்குகளிலும், பல்வகை உணவுப் பொருட்களை எலிகள் சேதப்படுத்துகின்றன. வீட்டு எலிகள் மற்றும் சுண்டெலிகள், தானியங்களைச் சேதப்படுத்துவதுடன் மட்டுமல்லாமல் அவைகளின் கழிவுப் பொருட்களும் உரோமங்களும், உணவுப்பொருட்களைத் தரம் குன்றச் செய்கின்றன.

**சேமிப்பில் நிகழும் சேதத்தைத் தவிர்க்க தடுப்புமுறைகள் :**

1. முற்காப்பு : (1) சேமிப்புக் கலங்கள், அறைகள், கிடங்குகள் சுத்தமாக இருத்தல் அவசியம். (2) சுவர்கள், தரைகளில் உள்ள வெடிப்புக்களை சிமெண்ட் வைத்து மூடவேண்டும். (3) சுத்தம் செய்த பின், சேமிப்பு இடங்களில் மாலத்தியான் 4 சதவீதம் தெளித்து அல்லது பாஸ்டாக்ஸின் மாத்திரைகளினால் மூட்டம் போட்டு, பூச்சிகளைக் கொல்ல வேண்டும். (4) சேமிக்கப்படும் தானியங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். (5) மூட்டைகளை அடுக்கும்போது, மூங்கில் பாய் அல்லது மரப் பலகை மீது, தேவையான இடைவெளிவிட்டு அடுக்க வேண்டும். இதனால் நல்ல காற்றோட்டமும் மருந்தடிக்க வசதியும் ஏற்படும். (6) மூட்டைகளின் மீது பூச்சிகள் காணப்பட்டால், மாலத்தியான் 50 சத மருந்தினை, 15 மில்லியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து, 150 சதுரமீட்டர் பரப்புக்கு அடிக்கலாம். (7) பூச்சிகளால் சேதப்படுத்தப்பட்ட தானியங்களை, நல்ல தானியங்களோடு சேர்த்து அடுக்கக்கூடாது.



**2. தடுப்பு முறைகள் :**

1. சேமித்த தானியங்களை 15 நாட்களுக்கு ஒருமுறை, சோதனையிட்டு பூச்சிகள் காணப்பட்டால், வெளியில் கொட்டி உலர்த்த வேண்டும். (2) ஒரு டன் தானியத்திற்கு ஒன்று அல்லது இரண்டு பாஸ்டாக்ஸின் மாத்திரைகளை, தானியத்திற்கிடையே வைக்க வேண்டும். பின்னர் தார் பாய் கொண்டு மூடி, ஓரங்கள் முழுவதையும், களிமண்கொண்டு வாயு நஞ்சு வெளியாகாதவாறு தரையோடு ஒட்டி 4 நாட்கள் வைக்கவேண்டும். பின்னர் மூட்டத்தைப் பிரித்து காற்றோட்டம் செய்து முறைப்படி அடுக்கவேண்டும்.

3. மிதைல் புரோமைடு திரவம் 100 கன மீட்டர் அளவுக்கு 2.5 முதல் 3 கிலோ அல்லது ஈ. டி. சி. டி. 100 கனமீட்டர் அளவுக்கு 24 முதல் 32 கிலோ வரை, 24 மணி முதல் 48 மணி நேரம் வரை மூட்டம் போட்டு, பின்னர் காற்றோட்டம் செய்யலாம். இதனைக் கவனமாகக் கையாள வேண்டும்.

(4) வீடுகளில் சிறிதளவே சேமிக்கப்படும் தானியங்களுக்கு மினி பியூம் அல்லது எதிலின் டை புரோமைடு வில்லைகளை குவிண்டாலுக்கு ஒரு வில்லை வீதம் பயன்படுத்தலாம். உணவுக்குப் பயன்படும் எண்ணெய்வித்துக்கள் மற்ற மாவுப்பொருட்களுக்கு இதைப் பயன்படுத்தக்கூடாது.

5. பயறு வகைகளைத்தாக்கும் வண்டுகளின் சேதத்தைத் தடுக்க தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் அல்லது கடலை எண்ணெய் ஏதாவது ஒன்றை 1 கிலோ விதைக்கு 10 மில்லி வீதம் கலந்து வைக்கலாம். அல்லது ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து வைக்கலாம்.

**எலிகளைக் கட்டுப்படுத்த வழிகள்:**

1. சேமிப்புக் கிடங்கிலுள்ள எலிகள் வராதவாறு சுற்றிலும் 'எலிதடுப்புகள்' அமைக்கவேண்டும்.

2. எலி வளைகளில், பாஸ்டாக்ஸின்மாத்திரையைவளைக்கு ஒன்றுவீதம் போட்டு மூடவேண்டும்.

**3. விஷ உணவு: உடன் கொல்லும் விஷம் :**

முதலில் விஷம்கலக்காத அரிசிப் பொரி, எண்ணெயில்வறுத்தவெங்காயம், கருவாடு போன்றவற்றை முதல் மூன்று நாட்கள் வைக்க வேண்டும். இதனால் எளிதில் எலிகள் ஈர்க்கப்படும். நான்காவது நாள் முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு விஷம்கலந்த உணவு (ஜிங்க் பாஸ்பைடு என்ற மருந்தை 2 சதவீதம் உணவில் கலக்கவேண்டும்) 20 முதல் 30 நாட்கள் இடைவெளியில் வைத்துத் கட்டுப்படுத்தலாம்.

மெதுவாகக் கொல்லும் விஷம் வார்ஃபரின், ரோடாபரின் போன்ற நஞ்சுகள் மெதுவாகக் கொல்லும் தன்மை பெற்றுள்ளன.




அண்மையில் இந்தியத் தலைநகராம் டில்லி மாநகரில், அனைத்திந்திய இதயநோய் மருத்துவர்கள், மாநாடொன்று நடைபெற்றது. அம்மாநாட்டில், சென்னை மாநகரில் வெற்றிகரமாக நடத்தப் பெற்ற 'திறந்த இதய அறுவைச் சிகிச்சை 'ஒன்று பற்றித் தெரிவிக்கப்பட்ட செய்தி மற்ற மாநில . மருத்துவர்கள் அனைவராலும் வியந்துபேசப்பட்டது.

சென்னையிலுள்ள அரசுபொது மருத்துவமனையில், இதய சிகிச்சைப் பிரிவுத் தலைவரான டாக்டர் சி. லட்சுமிகாந்தன், இந்தியாவிலேயே முதன் முதலாக அந்த அதிசயச் சிகிச்சையைச் செய்தமைக்காக, பெரிதும் பாராட்டப்பட்டார் !

'கருமமே கண்ணாயினார் கண் துஞ்சார்' என்பார்களே, அப்படிக்கூட அல்ல; கவனக் குறைவோடு கண்ணிமைத்தாலும்கூட சிகிச்சை பெறுகிறவரின் உயிருக்கே ஆபத்தாகி விடும். அவ்வளவு ஆபத்தான விஷயம் இது.

அந்த ஆபத்தையும் விரும்பி வரவேற்று, தன்னுடைய வாழ்




அபூர்வமாகும். அப்படியே அங்கொருவர் இங்கொருவருக்கு ஏற்பட்டதென்றால் இடதுபுறத்திலேயே அது உருவாகியிருக்கும். அதை அகற்றுவதும் அத்தனைச் சிரமமாக இருந்திருக்காது.

இப்படி வலதுபுறத்தில் எவருக்குமே ஏற்பட்டதில்லையா என்றால் - ஒரிஸ்சாவில் ஒருவருக்கும், பூனாவில் ஒருவருக்கும் தான் அண்மைக்காலத்தில் ஏற்

தூரம் நடந்தாலும் களைப்பு உண்டாகிவிடும்; மூச்சு வாங்கும்; காறித் துப்பினால் எச்சிலோடு இரத்தம் வரும்.

இப்படிப்பட்ட துன்பங்களுக்கு தன்னுடைய உடல் பருமனே காரணம் என்று நினைத்த அவர், பருமனைக் குறைப்பதற்கான உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி போன்றவற்றை மேற்கொண்டிருக்கிறார். உடற்

# புகழ்க் கிரீடத்தில் புதிய முத்து

— பி.எல்.ராஜேந்திரன்

வைப் புதுப்பித்துக் கொண்ட— வாழ்நாளைக் கூட்டிக் கொண்ட அந்த இதயக் குறையோடிருந்தவர் பற்றி தெரிந்து கொள்கிற ஆர்வம் எவருக்கு இருக்காது?

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளன்று, அந்த அதிசய அறுவை சிகிச்சைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டவர், திரு பி. எஸ். முகமது மீரான் என்பவரேயாவார்! நெல்லை- மாவட்டம், தென்காசி வட்டத்திலுள்ள வடகரை என்கிற சிற்றூரைச் சேர்ந்தவரான இவர், 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்', என்ற வள்ளுவர் வார்த்தையை மதிக்கும் உழவே தலையாய்க் கொண்டவர். வயது 42.

**இவருக்கு முன் இருவர்**

பிடியளவு இதயத்தின் வலது புறத்தில், 'ட்யூமர்' என்கிற வீணான தசை வளர்ச்சி - கட்டி ஏற்பட்டு தொல்லைப்பட்டு வந்தார் இவர்.

இதயத்திலே தசை வளர்ச்சி ஏற்படுவதென்பது மிகவும்

பட்டதாக மருத்துவத்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலத்த ஆலோசனைகளுக்குப் பின் அவர்களும் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள். முடிவு, விபரீதமாயிற்று. ஒருவர் அறுவைச் சிகிச்சை முடிந்த அடியோடு மாண்டு போனார்; இன்னொருவர் அப்படியொரு கட்டி இதயத்திலிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்கு நாள் குறிக்கப்பட்டிருந்த காலத்திலேயே இறந்துபோனார்!

இத்தகைய இறப்புச் செய்திகளெல்லாம் காதில் விழுந்தும்கூட சிறிதும் கலங்காமல் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெருமையுடைய முகமது மீரானின் மனைவி பெயர் மீராள். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள்; ஐந்து பெண்கள்.


**நலக் குறைவு**

கடந்த ஓராண்டுக்காலமாகவே இனந்தெரியாத சில இதய வேதனைகளுக்கு ஆளாகியிருந்திருக்கிறார் முகமது மீரான். உரத்த குரலில் பேச இயலாது; சிறிது

பருமன் எந்த அளவுக்குக் குறைய வேண்டுமென அவர் எண்ணினாரோ, அதற்கு மேலேயே உடல் மெலிந்தும்கூட உபாதைகள் ஒரு சிறிதும் மட்டுப்படாத நிலையில் செங்கோட்டையில் ஒரு டாக்டரை அணுகியிருக்கிறார்.

அவரோ, இவரைப் பரிசோதித்து விட்டு-காசநோயாக இருக்கக்கூடும் என்ற யூகத்தோடு மதுரை மருத்துவமனை ஒன்றுக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்.

அங்கே இவர் 'எக்ஸ் - ரே' பிடிக்கப்பட்டிருக்கிறார். இதயத்திலுள்ள ஏதோ ஒரு வால்வு



டாக்டர் லட்சுமிகாந்தன்

காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது; ஆகையால் இதனை எழுதி வெளியிடுகின்றேன், பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழி காட்டியாக.

இந்நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும் சூதில் விருப்பமில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோருமுளர். எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழி பெயர்ப் பென்றே கருதிவிடலாம் அதாவது 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம் வந்தே மாதரம்.

**ஸி. சுப்ரமணிய பாரதி**

## ஜன்ம பூமி

**1909-ல் "ஜன்ம பூமி" (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் பாகம்) வெளியிடப்பட்டது. அதிலுள்ள ஸமர்ப்பணமும் முகவுரையும் வருமாறு:**

ஸமர்ப்பணம்

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும், சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கின்றேன.

**ஸி. சுப்ரமணிய பாரதி**

**முகவுரை**

இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம் அவாங்க்மனகோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில் ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னையறியாது குதூஹலமடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத், திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தர்மம்—ஓர் மார்க்கம்-தோன்றுமேயானால், மேல் மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்தி மலர்போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபுங்களுக்கும் மூவாதாரமாகிய ''தேச பக்தி'' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்கும் புனைந்தேன்.

நான் எதிர்பார்த்திராத வண்ணமாக மெய்த்தொண்டர்கள் பலர் ''இம்மலர்கள் மிக நல்லன'' என்று பாராட்டி மகிழ்ச்சியறிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பதமலர்க்குச் சில புதியமலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்குமென்றே நினைக்கின்றேன்;

'குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்'
எனபது வேதமாதலின்.

இங்ஙனம்,

**ஸி. சுப்ரமணிய பாரதி**

## கவிதைத் திறன்


**—டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்**

சிறு பிராய முதற்கொண்டே இவருக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாயிற்று. அக்காலத்திலேயே தேசத்தின் நிலைமை இவருடைய மனத்திற் பதிந்தது. தெய்வத்தினிடத்திலும், தேசத்தினிடத்திலும், பாஷையினிடத்திலும் அன்பில்லாதவர்களைக்கண்டு இவர் மிக வருந்தினார். புதிய கருத்துக்களை மிக எளிய நடையில் அமைத்துப் பாடவேண்டுமென்ற உணர்ச்சி இவருக்கு வளர்ந்து கொண்டே வந்தது.

தேசத்தின் பெருமையை யாவரும் அறிந்து பாராட்டும்படியான பாட்டுக்களைப் பாட வேண்டுமென்ற ஊக்கம் இவருக்கு நிரம்ப இருந்தது. அதனால் இவர் பாடிய பாட்டுக்கள் மிகவும் எளிய நடையில் அமைந்து படிப்பவர்களைத் தம்பால் ஈடுபடுத்துகின்றன. இவர் உண்மையான தேசபக்தியுடன் பாடிய பாட்டுக்களாதலின் அவை இவருக்கு அழியாத பெருமையை உண்டாக்குகின்றன.

பாரதிய தேசியப் பாட்டுக்களைப் பாடியதோடு வேறு பல துறைகளிலும் பாடியிருக்கிறார். இசைப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். சங்கீதத்திலும் பழக்கம் உடையவர்

பாரதியார் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஜனங்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்ற கொள்கையை யுடையவர். தைரியமுடையவர், இவருடைய புகழ் தமிழ் நாட்டின் புகழாகும்.



# பாரதி நூல் அறுபது

## தொகுப்பு: சீனி விசுவநாதன்

| புத்தகத்தின் பெயர் | பதிப்பாளர் (அ) பதிப்பாசிரியர் | முதற் பதிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு |
| --- | --- | --- |
| 1 ஸ்வதேச கீதங்கள்; முதற்பாகம் | பாரதியார் | 1908 |
| 2 புதிய கட்சியின் கொள்கைகள் (திலகரின் பிரசங்கங்கள்; மொழி பெயர்ப்பு) | பாரதியார் | 1908 |
| 3 எங்கள் காங்கிரஸ் யாத்திரை | பாரதியார் | 1908 |
| 4 ஜன்மபூமி (ஸ்வதேசகீதங்கள் 2-ம் பாகம்) | பாரதியார் | 1909 |
| 5 [illegible] | பாரதியார் | 1910 |
| 6 [illegible]ரதம் | பாரதியார் | 1910 |
| 7 பா[illegible] சபதம் (முதற் பாகம்) | பாரதியார் | 1912 |
| 8 [illegible]வாசகம் | தென்னாப்பிரிக்காவில் வெளி[illegible] | 1914 |
| 9 புதிய ஆத்திசூடி | பாரதியார் | 1914 |
| 10 (பொன்வால்நரி) | பாரதியார் | 1914 |
| 11 கண்ணன் பாட்டு | பரலி. சு. நெல்லையப்பர் | 1917 |
| 12 நாட்டுப்பாட்டு | ,, | 1917 |
| 13 பாப்பாப் பாட்டு | ,, | 1917 |
| 14 முரசு | ,, | 1917 |
| 15 மகாகவி சர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாசங்கள் | சுதேசமித்திரன் புத்தகசாலை | 1918 |
| 16 பாரத ஜனசபை; முதற்பாகம் (காங்கிரஸ் சரித்திரம்; மொழிபெயர்ப்பு) | ,, | 1919 |
| 17 பாரத ஜனசபை; இரண்டாம் பாகம் | ,, | 1920 |
| 18 கதாமாலிகா | ,, | 1920 |
| 19 சுதேச கீதங்கள்-முதற்பாகம் | பாரதி ஆச்ரமம் | 1922 |
| 20 சுதேசகீதங்கள்; இரண்டாம் பாகம் | ,, | 1922 |
| 21 குயில்பாட்டு-கண்ணன் பாட்டு-பாரதி அறுபத்தாறு | பாரதி பிரசுரா | [illegible] |



# இதயத்திலிருந்து வெட்டி எடுத்த கட்டியோடு முகமது மீரான்-

சுருங்கியிருப்பதே அந்தத் துன்பங்கள் அனைத்திற்கும் காரணம் என்று கூறிய மருத்துவர்கள், வீட்டிலிருந்தே சாப்பிட சில மருந்து மாத்திரைகளைத் தந்திருக்கிறார்கள். அதிகம் பேசக் கூடாது; அதிகம் நடக்கக் கூடாது என்கிற நிபந்தனைகள் வேறு!

அப்படியெல்லாம் இருந்தும் எந்த ஒரு நிம்மதியும் இல்லாத நிலை. இரவெல்லாம் படபடப்பு; இதயத்துக்கு மேலேயே கேட்கும் துடிப்பு; உறக்கமின்மை— இவை தொடரவே உள்ளூர் டாக்டர் ஒருவரை அணுகியிருக்கிறார் முகமது மீரான்.

''நிம்மதியாகத் தூங்கினால் எல்லாம் சரியாகி விடும்'' என்று கூறி, அவர் இவருக்குத் தூக்க மாத்திரை தர - அதிலும் பயன் கிட்டாத பட்சத்தில் தனக்கு வேண்டியவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ரஸாக் அவர்களிடம் விவரத்தை வேதனையோடு விளக்கிச் சொல்லியிருக்கிறார் மீரான்.


### சென்னையில் சிகிச்சை

அவர் யோசனையின் பேரில் சென்னைக்கு வந்து டாக்டர் திருமலையை அணுகி-அவர் மூலம் அரசு பொது மருத்துவமனை இதயநோய்ப் பிரிவு தலைமை மருத்துவரான டாக்டர் சி. லட்சுமி காந்தனிடம் போய் மட்டுப்படாத தனது துன்பங்களை மனம் திறந்து சொல்லியிருக்கிறார்.

'எக்கோ கார்டியோ கிராம்' கருவிமூலம் மீரானின் நெஞ்சுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகள் படமாக்கிப் பார்க்கப்பட்டன. தனக்குள் நடக்கும் அந்த அதிசயச் சம்பவங்களைத் தானும் பார்த்ததாக வியப்போடு நம்மிடம் சொன்னார் மீரான் !

அரைமணி நேரச் சோதனை தான். அதற்கு முன்பு பரிசோதித்த அத்தனை மருத்துவர்களின் கணிப்பும் தவறே என்பது தெளிவாக்கப்பட்டது. இதயத்தின் வலது புறத்தில் வட்ட வடிவச் சதைக் கட்டி ஒன்று உருவாகியிருக்கிறதென்றும் அவருக்கு ஏற்பட்ட அத்தனைத் தொல்லைகளுக்கும் அதுவே காரணமென்றும் ஆழ்ந்து பரிசோதித்த பின் அவருக்கு எடுத்துச் சொன்ன டாக்டர் சி.லட்சுமி காந்தன் அதன் மூலம் நேரிடவிருக்கும் ஆபத்துக்களையும் விளக்கி, அறுவைச் சிகிச்சை மூலம் அதைச் சரிசெய்து விடலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

அறுவை என்றதுமே அஞ்சிய மீரான், 'அந்தக் கட்டி உயிருக்கே




நட்சத்திரக் குறியிட்ட வலது மேலறையில் தான் கட்டி உண்டாகியிருந்தது.
(டாக்டர் வாசுதேவன் வரைந்த படம்)

உலை வைத்து விடும் ; அறுவைச் சிகிச்சை மூலம் நீங்கள் நலமும் நீண்ட ஆயுளும்பெற்றிட முடியும்' என்பதை டாக்டர் எடுத்துச் சொல்லி தைரிய மருந்து தந்து தேற்றிய பின்னர்-அன்பு மனைவியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வந்து அறுவைச் சிகிச்சைக்கு உடன்பட்டார்.

### அபாயகரமான அந்த நேரம்!

செப்டம்பர் 15ஆம் நாளன்று இந்த அபாயகரமான அறுவைச் சிகிச்சை, அத்துறையில் தேர்ச்சி மிகப் பெற்ற டாக்டரான திரு எஸ். வாசுதேவன் அவர்கள் மூலம் நடத்தப் பெற்றது கண்ணுங் கருத்துமாய். சரியாக இரண்டரை மணி நேரம் நடந்தது இந்த அறுவைச் சிகிச்சை!

இந்த 'திறந்த இதய அறுவைச் சிகிச்சை'யின்போது இதயத் துடிப்பு நிறுத்தப்பட்டு, அறுவை சிகிச்சை நடக்கும்வரையில் செயற்கை இதயம் ஒன்று பொருத்தப்பட்டு, அதன் மூலமே இரத்தச் சுத்திகரிப்புப் பணி நடத்தப் பெற்றது. இதற்காக இரு ரப்பர் குழாய்கள் பொருத்தப்பட்டு கீழ்ப் பெருஞ்சிறையோடும் மேற் பெருஞ்சிறையோடும் பொருத்தப்பட்டது. இதயத்தின் மற்ற நடவடிக்கைகளும் கூட மிகக் கவனமாக இயந்திரங்களின் மூலமே இயக்கப்பட்டன.


மேலும், இதயத்தின் வலது மேல்பாகத்தில் 'காலி ஃப்ளவர்' போல வளர்ந்திருந்த அந்தச் சதைக் கட்டியை அறுத்து அகற்றும்போது, அதன் துண்டு துணுக்குகள் பரவி, நுரையீரல்களுக்குச் செல்லும் இரத்தக் குழாயை அடைத்து விடாதவாறு கவனமாகக் கண்காணிக்கப்பட்டது.

கையளவு இதயத்தில், தேவையின்றி ஏற்பட்டு, வளர்ந்து வரும் மருத்துவ அறிவால் திறமையோடு வெட்டி எடுக்கப்பட்ட அந்தக் கட்டியின் எடை 185 கிராம். பீங்கான் தட்டில் வைக்கப்பட்டபோது இரத்தமும் சதையுமாய் நீளக் காணப்பட்ட அதன் அளவு 13 செண்டி மீட்டர்.

### வாழவைத்த தெய்வங்கள்

மருத்துவமனையில் சேர்ந்து, சரியாக 23 நாட்கள் தங்கி, அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு நலத்தோடு வீடு திரும்பிய மீரான்-''என்னை வாழ வைத்த தெய்வங்களாகவே டாக்டர் திரு லட்சுமிகாந்தன் அவர்களையும், டாக்டர் திரு வாசுதேவன் அவர்களையும் நான் கருதுகிறேன்.'' என்று நன்றிப் பெருக்கோடும் உணர்ச்சிப்பெருக்கோடும் குறிப்பிட்டார்.

அவர்களைத் தவிர, அந்தச் சிகிச்சையின்போது உடனிருந்து கண்காணித்த உதவி மருத்துவர்



டாக்டர் வாசுதேவன்

களான திரு ஐயப்பன், திரு திருமலை, ஸ்ரீமதி,திரு. அளகேசன் ஆகியோரைப்பற்றியும் அவர் நன்றியோடு கூறினார்.

''இந்தச் சிகிச்சை,அரசு மருத்துவமனை என்பதால் அவருக்கு இலவசமாகவேசெய்யப்பட்டது'' என்று குறிப்பிட்ட டாக்டர் சி.லட்சுமிகாந்தன் - 'இதற்காக அரசுக்கு ஆன மருத்துவச் செலவு ஏறத்தாழ ஏழாயிரம் ரூபாய் இருக்கும். ஆனால் இந்த சிகிச்சையை அமெரிக்காவில் செய்வதென்றால், அதற்கான தொகை ஒரு லட்சத்தைத் தாண்டிவிடும்' என்றும் கூறினார்.

இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில்- ''சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் உள்ள நவீன கருவிகளும், தேர்ச்சி பெற்ற டாக்டர்களும், குறிப்புணர்ந்து நடக்கும் உதவியாளர்களுமே இத்தகைய எங்கள் வெற்றிக்கு அடிப்படைக் காரணமாவார்கள்'' என்றும் நன்றியோடு சொன்னார், அவர்.

இதயநோய்ப் பிரிவைஇன்னும் பல அதிசயங்களை நிகழ்த்தும் வகையில் மேலும் விரிவாக்குவது பற்றிய உத்தேசத் திட்டமொன்றையும் அரசுக்கு அளித்திருப்பதாகத் தெரிவித்தார் டாக்டர் சி. லட்சுமிகாந்தன்.

இந்த அரிய அறுவைச்சிகிச்சையிலே பெற்ற வெற்றி,சென்னை- அரசுப் பொது மருத்துவமனையின் புகழ் மகுடத்திலே புது முத்தாய் மின்னும் என்பது உறுதி !

# சத்துணவு மேம்பாட்டுத் திட்டங்கள்

வறுமை ஒழிப்பு மற்றும் குறைந்தபட்சத்தேவைத்திட்டங்களில் சத்துணவு முக்கியக் கவனத்தைப் பெற்றுள்ளது. திறமையான பொது வினியோகமுறை மட்டுமல்லாது சமுதாய உணவகம் மற்றும் சத்துணவு அளிக்கக்கூடிய பிற ஏஜன்ஸிகள் கிராம நகர்ப்புற ஏழைகளுக்குத் தேவைப்படுகிறது. நியாயமான விலையில் சத்துணவை மேம்பாடடையச் செய்யும் அரசு திட்டத்திற்கு இது ஏற்புடைய ஒன்றாகும்.

நாட்டு மக்களுக்கு உணவு தாராளமாகக்கிடைக்கவேண்டும். விவசாய உற்பத்தி பெருகவேண்டும், சத்துணவுப் பொருட்கள் அதிகரிக்க வேண்டும் என்பதில் புதிய அணுகுமுறை ஆர்வம் கொண்டுள்ளது. சமச்சீரான உணவு அனைவருக்கும் கிடைக்கும் வகையில் பலவிதமான உணவுப் பண்டங்கள் நல்ல தரமானவையாகவும், போதுமான அளவில் கிடைக்கும் வகையிலும் உணவு உற்பத்தித்திட்டம் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதற்கு உணவுப் பண்டங்களை பாதுகாப்பது இழப்பைத் தவிர்ப்பது, தகுந்த உணவுப் பழக்க வழக்கத்தை ஏற்படுத்துவது, ஆரோக்கியமான விஞ்ஞான ரீதியான சமையல் மற்றும் உணவுப் பொருள் கையாளும் முறைகளைப்பிரபலப் படுத்துவது, சத்துணவுக் கல்வியைப் பரப்புவது, சத்துணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது ஆகியவை நாட்டின் உணவு மற்றும் சத்துணவு அபிவிருத்தி அணுகுமுறையில் அடங்கும்.

இதுவரை பயன் படுத்தப் படாத ஆதாரங்களிலிருந்து சத்துணவு பெறுவதற்காக விஞ்ஞான தொழில்நுட்ப வழிமுறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. குழந்தை உணவு மேம்பாடு போன்றவை இதில் அடங்கும். உணவு வழங்கல், நுகர்வு, தகுந்த பயன்பாடு, சத்துணவுக்கல்வி, துணை ஊட்டச்சத்து, சுகாதார முறைகள் ஆகியவற்றை பரப்புவதற்காகப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் குழந்தைகள், கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. புரதச்சத்து நிறைந்த பல உணவுப் பொருட்கள் மலிவான விலையில் வழங்கப் படுகின்றன. ஏழை எளிய மக்களுக்குச் சத்துணவு வழங்குவதற்கான பண்டங்களை உற்பத்தி செய்வதற்காகப் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி எளிய நுட்பங்கள் மூலம் இவை உருவாக்கப்படுகின்றன. இந்த வகையில் கணிசமான அளவு ஆராய்ச்சியும், சோதனைகளும் நடத்தப்படுகின்றன.

சத்துணவுக் கல்வி மூலம், அறியாமை, சம்பிரதாயங்கள் போன்ற தடைக்கற்களை அகற்றுவதற்குத் திட்டமிட்ட வகையில் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற மக்கள் மத்தியில் துணை உணவு முறைகளை எடுத்துக் கூறவும் தகுந்த உணவுப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்தவும் விஞ்ஞான ரீதியாக உணவுப் பண்டங்களை தயாரிப்பது, அவற்றைப் பாதுகாப்பது போன்றவற்றைப்பரப்பவும் சுற்றுப்புறச் சுகாதாரம், சத்துணவு பற்றிய அறிவை வளர்க்கவும் விரிவாக்கப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதோடு வினியோகம், சேமிப்பு, போக்குவரத்து, உலர வைத்தல், பதப்படுத்துதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதையும் அரசு முக்கியமாகக் கருதுகிறது. விவசாய மற்றும் தொழிற்சாலை கழிவுகளைப் பயன்படுத்த த் தேசிக்கப்பட்டுள்ளது. அரிசி அறவை ஆலைகளை நவீனமயம் செய்தல், சேமிப்பு மற்றும் பிற பணிகளில் விஞ்ஞான நுட்பங்களைக் கடைப்பிடித்தல் மூலம் நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவு 4 சதவிகிதம் கூடுதலாகக்கிடைக்க வழியிருக்கிறது. பழம், காய்கறி பொருட்களைப் பதப்படுத்தும் பணிபல்வேறு சமுதாய பதப்படுத்தும், மற்றும் காய்கறி பாதுகாப்பு மையங்கள் மூலம் செய்யப்பட்டுவருகின்றன.

**இந்திய அரசு பத்திரிகைத் தகவல் அலுவலகம்**

# யானையின் தியாகம்

—பி.வி.கிரி



சாலையில் போய்க் கொண்டிருக்கிறோம். பஸ்ஸில் யாரேனும் அடிபட்டுக் கிடந்தால் உடனே நாம் 'ஐயா பாவம்!' என்கிறோம். மனித உயிர் மட்டுமல்ல, ஆடு அல்லது மாடாக இருந்தாலும் நாம் அதற்காக இரக்கப்படுகிறோம்; துக்கப்படுகிறோம்.

இந்த ஒருமைப்பாட்டுணர்ச்சி மனிதனுக்கு மட்டும்தானா? விலங்குகளுக்கு இல்லையா என்று கேட்கலாம். விலங்குகளுக்கும் இந்த இரக்க உணர்ச்சி, துன்புறும் தன்மை உண்டு என்பதை ஒரு குட்டிக் கதையின் மூலம் விளக்குகிறது, ஜைனர்களின் 'மகா புராணம்.'

ஒரு பெரிய காடு.

அது திடீரென தீப்பற்றிக் கொள்கிறது. 'காட்டுத் தீ' என்பார்களே அதைப் போல அது வேகமாகப் பரவியது. மரஞ்செடி கொடி புதர்கள் ஒன்றையும் அது விடவில்லை. எங்கு பார்த்தாலும் தீயின் கோரத் தாண்டவம்!

பாவம்! காட்டு விலங்குகள் அனல் கக்கும் தீக்கு அஞ்சி நாலா பக்கமும் சிதறி ஓடின. புகலிடம் ஏதாவது கிடைக்குமா என அங்கும் இங்கும் அலைந்து தவித்தன.

ஒரு யானை தும்பிக்கையைத் தூக்கிக் கொண்டு பயங்கரமாய்ப் பிளிறிக் கொண்டு ஒரு மலைக் குகையை நோக்கி ஓடியது. அதைபார்த்த புலி, சிங்கம், கரடி, காட்டெருமை முதலான விலங்குகளும் அதற்குப் பின்னால் ஓடின.

யானை குகையின் வாசலில் வந்து நின்றது. அனலின் கொடுமை தாங்காத மற்ற விலங்குகளும் அந்தக் குகைக்குள் ஓடிவந்து தஞ்சமடைந்தன. யானை, வாயிலின் பக்கம் நின்று கொண்டு, திக்கு அஞ்சி ஓடிவரும் விலங்குகளுக்கெல்லாம் புகலிடம் கொடுத்தது. குகையோ நிரம்பி வழிந்தது. புகலிடம் கொடுத்த யானைக்கே அங்கே இடமில்லை! வாயிலை அடைத்துக் கொண்டு நின்றது. பெரிய உருவமாயிற்றே!

அப்போது—

எங்கிருந்தோ ஒரு சிறு முயல் ஓடி வந்தது. குகையிலோ கொஞ்சங் கூட இடமில்லை. யானைக்கோ அதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அப்போது அதன் காலில் ஏதோ ஒன்று உறுத்தியது. அதனால் அந்த ஒரு காலை சற்று மேலே தூக்கியது. இதுதான் சமயம் என்றிருந்த அந்தச் சிறுமுயல், யானையின் காலுக்கு அடியில் வந்து தங்கிக் கொண்டது. யானை தன் காலைக் கீழே வைத்தால், முயலின் கதி என்னவாகும்? அதனால் யானை காலைத் தூக்கி வைத்துக் கொண்டே இருந்தது.

தீயெல்லாம் அணைந்தன.

குகைக்குள்ளிருந்த விலங்குகள் எல்லாம் ஒவ்வொன்றாக வெளி வந்தன. சிறு முயலும் வெளியே வந்தது.

ஆனால், யானை?

பல மணி நேரம் காலைத் தூக்கி வைத்துக் கொண்டு நின்றதால், அது செயலற்றுப்போய்க் கீழே விழுந்தது! ஆம். பிற உயிர்களைக் காப்பாற்ற அது தன் உயிரையே தியாகம் செய்தது.

# சென்னையில் குழந்தைகள் பட விழா

சென்னையில் நவம்பர் மாதம் 14ந் தேதி முதல் 23ந் தேதிவரை நடக்கவிருக்கும் இரண்டாவது அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழாவில் 21 நாடுகள் பங்கு கொள்ளும். இப்படவிழாவில் 113 படங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

பட விழாவில் இந்தியா, அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், கனடா, செக்கோஸ்லோவாகியா முதலான நாடுகள் பங்கு கொள்ளுகின்றன. இப்பட விழாவில் திரைப்பட போட்டியும் நடைபெறவுள்ளது.

''திரைப்படப் போட்டிக்காகவும், சாதாரணமாகக் காட்டவும் அனுப்பப்பட்டுள்ள படங்களில் கதைப் படங்கள், துண்டுப்படங்கள், கார்ட்டூன் முதலியவை அடங்கியுள்ளன.

விழாவின்போது, படங்களின் விற்பனையும் நடைபெறும். இப்பட விழாவை நடத்தும் இந்தியக் குழந்தைகள் சொஸைடி சில சிறந்த வெளிநாட்டுப் படங்களை [illegible] இட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் குழந்தைகள் இப்பட விழாவில் தீவிரப் பங்கு கொள்வர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பட விழாவுக்கு வரும் படங்கள் நகரில் 10 இடங்களில் பொது மக்களுக்கும் காட்டப்படும். படங்கள் 9 முதல் 15 வரையிலான வயதுப் பிரிவினருக்கானவை. 4 முதல் 8 வயது வரையிலான வயதுப் பிரிவினருக்கானவை என இருவகைப்படுத்தப்படும்.

பிரபல படத் தயாரிப்பாளர் எல்.வி. பிரசாத் தலைமையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் கொண்ட நடுவர் குழு ஒன்று இருக்கும்.

9-15 வயதுப் பிரிவில் சிறந்த படத்துக்கு 'தங்க யானை'' பரிசளிக்கப்படும். இதேபோல 4-8 வயதுப் பிரிவிலும் சிறந்த படத்துக்கு தங்க யானை பரிசளிக்கப்படும். இந்த இரு பிரிவுகளிலும் சிறந்த காமிராமென், சிறந்த குழந்தை நடிகர், சிறந்த குழந்தை நடிகை, சிறந்த டைரக்டர், சிறந்த இசையமைப்பாளர் முதலானோருக்கு 'வெள்ளி யானைகள்' பரிசளிக்கப்படும்.

''ஞான தீப'' விருதுகளுக்கான படங்கள் குழந்தைகளைக் கொண்ட நடுவர் குழு தேர்ந்தெடுக்கும். விழாப் படங்கள் காட்டப்படும். கொட்டகையில் குழந்தைகளுக்குத்தலா ஒருரூபாய் வீதமும், பெரியவர்களுக்குத் தலா ரூ. 2 வீதமும் கட்டணம் வசூலிக்கப்படும்.

படங்கள் கலைவாணர் அரங்கத்திலும், மற்றும் அலங்கார், ஈகா, அபிராமி, பிராட்வே, மகாராணி, ஏவிஎம் ராஜேஸ்வரி, ஜெயந்தி, ஸ்ரீநிவாசா, காமதேனு ஆகிய தியேட்டர்களிலும் காட்டப்படும்.

குழந்தைகளைக் கொண்ட நடுவர் குழுவினர் துவக்கவிழா, நிறைவு விழாவில் கலந்துகொள்வதுடன், திருபர்கள் கூட்டத்திலும் பேசுவர்.

பட விழாவுக்கென ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், யூனியன் பிராந்தியத்திலிருந்தும் 5 குழந்தைகளைத் தமிழ்நாடு அரசு அழைத்துள்ளது.

# நீர்ப்பாசனத்திற்கு கடல் நீர்

**விளைநிலங்களுக்குக் கடல் நீரைப் பாய்ச்சிப் பாசனம் செய்யும்போது-சில சமயம், நல்ல நீரை விடவும் அதிகமாக - பயிர்களுக்கு ஊட்டச் சத்து கிடைக்கிறது என்று சோவியத்து விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.**

**கடல்நீர்ப் பாசனம் சம்பந்தமாக, கடந்த 10 ஆண்டுகளாக நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் புதிய உண்மைகள் வெளியாகியுள்ளன.**

சாதாரண கிணற்று நீர், வடிகால் நீர் ஆகியவை, (கடல் நீருடன் ஒப்பிடும் போது) நல்ல நீர் என்று கருதப்படுகிறதல்லவா? இந்த நீரிலும் தாது உப்புக்கள் இருப்பது வழக்கம். பயிர்களுக்குத் தீங்கு நேராதபடி இருக்க வேண்டுமானால், பயிருக்குப் பாசனம் செய்யும் இந்த நல்ல நீரில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் தாது உப்புக்கள் இருக்கக் கூடாது. அதாவது சராசரியாக ஒரு லிட்டருக்கு 5 கிராம் உப்புத்தான் இருக்கலாம்.

ஆனால் கடல் நீரில், ஒரு லிட்டருக்கு 10 முதல் 12 கிராம் வரை, உப்பு இருந்தாலும், அதனால் பயிர்களுக்குப் பாதகம் விளைவதில்லை என இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது.

இந்த அற்புதம் எப்படி, எதனால் நிகழ்கிறது? பயிருக்குத் தீங்கான உப்பு மட்டுமல்லாமல், கடல் நீரில் பயிர்களுக்கு வேண்டிய ஊட்டச் சத்துகளும் அடங்கி இருக்கின்றன. பிராண வாயு, நைட்ரஜன், நுண்ணூட்டங்கள் மற்றும் தாவரப் பொருள்கள் ஆகியவை கடல்நீரில் இருப்பதால், பாசனம் செய்யப்படும் நிலத்து மண்ணை வளப்படுத்துகிறது. ஆக, செடிகளுக்கு நீர் மட்டுமன்றி, உரமும் கிடைக்கிறது.

கடல் நீர் பாசனத்தில், பைன் மரங்கள் நன்கு வளர்கின்றன.

காந்த சக்தியைப் பயன்படுத்தி செய்யப்பட்ட பரிசோதனைகளில், தக்காளி, சூரிய காந்தி முதலியவற்றையும் கடல் நீரைக் கொண்டு பயிர் செய்யமுடியும் எனத் தெரிய வந்திருக்கிறது.

கரிப்பான உப்பைக் கொண்ட கடல்நீரைப் பாய்ச்சி, இனிப்பான திராட்சையையும் சாகுபடி செய்வது விரைவில் சாத்தியமாகும் என்று சோவியத்து விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

# தமிழ்மாநிலம்- வெள்ளிவிழா

அட்டை சொல்லும் செய்தி

—மாமூலன்

"வளர்ந்து வரும் தேசிய இன உணர்ச்சி, தொன்மையான எல்லைக்கோடு காரணமாகவும் பூகோளத் தொடர்பு காரணமாகவும் ஏற்படவில்லை; தாய்மொழிகள் காரணமாகவே ஏற்பட்டிருக்கிறது''

—என்று மாநிலங்கள் சீரமைப்புக்குழு அறிக்கையின் மொழிவழி மாநிலங்களுக்கான அடிப்படைக் காரணங்களை விளக்கும் பொழுது ஏ.ஜே. டாயின்பீ குறிப்பிட்டுள்ளார்.

மொழிவழி மாநிலங்கள் அமைப்பை அறிவதற்கு முன்பு நம் நாட்டின் முந்தைய நிலையை நாம் சுருக்கமாக நினைவு கூர்வோம்.

கே. ஆர். பாம்வால் என்பவர் தமது நூலில் ''1773 வரை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு என ஒன்றே (இந்தியாவில்) கிடையாது''— என்று எழுதியுள்ளமை வேடிக்கையல்ல!

1600-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி துவக்கப்பட்டது. கம்பெனியார் வியாபார உரிமைகளைப் பெற்று சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் வியாபார நிறுவனங்களைத் துவக்கினர். கட்ற் கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும் இதர ஐரோப்பிய வியாபாரக் கம்பெனிகளோடு போட்டியிடுவது போன்ற தேவைகள் மூலமாகவும், இந்தியாவிலிருந்து மன்னர்களுக்கு உதவுதன் மூலமாகத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகளாலும் காலப் போக்கில் ஒரு இராணுவ சக்தியாக உருவெடுத்தார்கள்.

தொடக்கத்தில் மூன்று கிளைகளும் தனித்தனியாக இயங்கின. பலவீனமான மன்னர்களிடமிருந்து அந்த மூன்று இடங்களைச்சுற்றியிருக்கும் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தும் உரிமையைப் பெற்றனர்.

அவுரங்கசீப் 1707ல் இறந்ததும் மொகலாய சாம்ராஜ்யத்தின் உயிர்நாடி ஒடுங்கத் தொடங்கியது. கம்பெனியின் ஆதிக்கம் மேலும் பரவத் தொடங்கியது. பம்பாயில் நாணயம் அச்சடிக்கும் உரிமையையும் அதை இந்தியா முழுவதும் செலாவணி செய்யும் உரிமையையும் காலப் போக்கில் அவர்கள் பெற்றனர். அந்தமூன்று கிளைகளும் வங்காள மாகாணம், பம்பாய் மாகாணம், சென்னை மாகாணம் என்று மூன்று மாகாணங்களாக உருவெடுத்தன.


இம்மூன்று மாகாணங்களுக்கும் தனித்தனி இராணுவமும் அரசும் இருந்தன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு தனி கவர்னரும் நிர்வாக சபையும் உண்டு. வியாபார நிறுவனமாக இருந்த இவை நிலப் பரப்பையும் அதில் வாழும் மக்களை ஆளும் பொறுப்பையும் ஏற்கத் தொடங்கியதும் [illegible] மாறியது. பிரிட்டிஷ் பாராளுமன்றம் இதில் குறுக்கிட்டது. அதனால் 1873-ஆம் ஆண்டில் ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act) இயற்றி வங்காள மாகாணத்திற்கு இதர மாநிலங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தை அளித்தனர். வங்காளத்து கவர்னர், கவர்னர் ஜெனரல் என்கிற தலைமைப் பெயரால் அழைக்கப்பட்டார். கல்கத்தாவில் சுப்ரீம் கோர்ட்டும் அமைக்கப்பட்டது. இப்படி கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகராக ஆயிற்று. பின்னர் 1911ல் தான் தலைநகரத்தைகல்கத்தாவிலிருந்து புதுதில்லிக்கு மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மொத்தம் மூன்று மாகாணங்களாக இருந்தவற்றை காலப் போக்கில் பல மாகாணங்களாகப் பிரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1874ஆம் ஆண்டுவரை இந்தியாவில் மூன்று மாகாணங்கள்தான் இருந்தன. வங்காளத்திலிருந்து முதன் முதலாக அசாம் பிரிக்கப்பட்டது. 1905ல் வங்காளத்திலிருந்து பீகாரும் ஒரிசாவும் பிரிக்கப்பட்டன. இது போன்றே பம்பாயிலிருந்து பஞ்சாப், எல்லைப்புறம், சிந்து ஆகிய மாநிலங்களும் பிரிக்கப்பட்டன.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் கட்சி பல்வேறு கட்டங்களில் பல்வேறு நிலைகளில் வற்புறுத்தியதன் விளைவாகவே இப்படி மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.



1905-ஆம் ஆண்டில் வங்காளத்தை கிழக்கு வங்காளம்மேற்கு வங்காளம் என ஆங்கில ஆட்சி துண்டாட முனைந்த பொழுது எதிர்த்த காங்கிரஸ் கட்சி மொழிவாரியாக இந்திய மாநிலங்கள் அமைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியது. 1920 ஆம் ஆண்டில் அண்ணல் காந்தியடிகள் தலைமையில் நாக்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மொழி வழியாக நம் நாட்டு மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1927ஆம் ஆண்டில் Indian Statutory Commission ஏற்பட்ட பொழுது காங்கிரஸ் கட்சி தனது தீர்மானத்தில் 'The time has come for the Re-distribution of Provinces on a linguistic Basis' என்று குறிப்பிட்



டது. பின்னர் காங்கிரஸ், மொழிகள் அடிப்படையிலேயே மாநிலக் காங்கிரஸ் கமிட்டிகளை அமைத்தது.

1928-ஆம் ஆண்டில் நடந்த அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் அமைக்கப்பட்ட நேரு குழு, மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று பரிந்துரைத்தது.

காங்கிரஸ் கட்சியின் இடைவிடாத கோரிக்கைகள் காரணமாக 1937 வரை (கமிஷனர் பிரதேசங்கள் நீங்கலாக) நம்நாடு 11 மாகாணங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டது.

1909 முதல் 1937 வரை பிரிட்டிஷாரால் தரப்பட்ட மிண்டோ-மார்லி சீர்திருத்தம், மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம், சைமன் கமிஷன் அறிக்கை ஆகியவற்றைக் காங்கிரஸ் அங்கீகரிக்க மறுத்ததற்கான காரணங்கள் சிலவற்றில் மாகாணங்கள் மொழிவழி பிரிக்கப்படுமென வாக்குறுதி தரப்படவில்லை என்பதும் ஒன்றாகும்.

காங்கிரஸ் கட்சி இந்த அளவுக்கு மொழிவழி மாநிலஅமைப்பில் ஈடுபாடு கொண்டிருந்தது.

மொழிவழி மாநிலங்கள் அமைக்கப் படுவதால்தான் தாய்மொழியின் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு உருவாகும் என்பதை அண்ணல் காந்தியடிகளும் மற்ற அனைவரும் வலியுறுத்தி வந்தனர்.

காங்கிரஸ் கட்சி தேர்தல் பிரகடனங்களிலும் காங்கிரஸ்கட்சி ஆட்சிக்கு வந்தால் மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப் பாடுபடும் என்று உறுதி அளித்திருந்தது.

சென்னை மாகாணத்திலிருந்த ஆந்திர மாநிலத்தைத் தனியாக பிரிக்க வேண்டும்என்றகோரிக்கை 1909 முதற்கொண்டே இருந்து வந்தது. 1912ல் கொண்டா வேங்கடப்பையா போன்ற தேசியவாதிகளால் ஆந்திர மகா சபை தோற்றுவிக்கப்பட்டது. ஆந்திர மாகாணம் தனிமாநிலமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள்.


மொழிவழி மாநில அமைப்பு வேண்டும் என்ற குரல் ஓங்கியிருந்தாலும் நாடு விடுதலை அடைந்தபிறகு, மொழிவாரி மாநிலங்களை உருவாக்குவதில் விரைவான ஆர்வம் காட்டப்படவில்லை.

1948ல் அமைக்கப்பட்ட 'தார் கமிஷன்' மொழிவாரி மாநில அமைப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தை வெளியிடவில்லை.

பின்னர் பொட்டி ஸ்ரீராமுலு போன்றோர் உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த பின்னர், 1953ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது.

மாநில சீரமைப்புக்குழு 1953 ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் நாள் அமைக்கப்பட்டது. பாஸில் அலி தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில் டாக்டர் எச்.என். குன்சுரு, கே. எம். பணிக்கர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் பி.சி.சந்துரி செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்கள்.

இக் குழு தனது அறிக்கையை 1955ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாள் தாக்கல் செய்தது.



1955ஆம் ஆண்டு அக்டோபரில் மாநிலச் சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டன. அதன்படி இந்தியாவில் மொத்தம் 16 மாநிலங்களும் 3 மத்திய அரசு நிருவாகப்பகுதிகளும் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1955ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இவ்வறிக்கை பத்தி விவாதிக்கப்பட்டது.

1956ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் நாள் இந்திய அரசு, மாநில சீரமைப்புக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது.

இவ் வறிக்கையின்படி திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யத்தி



| | | | |
|---|---|---|---|
| 22 | பாஞ்சாலி சபதம்; இருபாகங்களும் இணைந்தது | ,, | 1924 |
| 23 | பகவத் கீதை முன்னுரை | ,, | 1924—25 |
| 24 | பகவத் கீதை உரைவிளக்கம் | ,, | 1924—25 |
| 25 | சுதேச கீத சங்கிரஹம் | ,, | 1925 |
| 26 | சந்திரிகையின் கதை | ,, | 1925—26 |
| 27 | தராசு | பாரதி பிரசுராலயம் | 1928 |
| 28 | நவதந்திரக் கதைகள் | ,, | 1928 |
| 29 | வேதரிஷிகளின் கவிதை | ,, | 1928 |
| 30 | பதஞ்சலியோக ஸூத்ரம் | ,, | 1928 |
| 31 | விநாயகர் நான்மணிமாலை | ,, | 1929 |
| 32 | தேசிய கீதங்கள் | ,, | 1929 |
| 33 | தோத்திரப் பாடல்கள் | ,, | 1930 |
| 34 | வேதாந்தப் பாடல்கள் | ,, | 1930 |
| 35 | காட்சி | ,, | 1930 |
| 36 | சித்தக் கடல் | ,, | 1930 |
| 37 | பாரதி நூல்கள்-கட்டுரைகள் | ,, | |
| | 1. தத்துவம் | ,, | 1935 |
| 38 | 2. மாதர் | ,, | 1930 |
| 39 | 3. கலைகள் | ,, | 1935 |
| 40 | 4. சமூகம் | ,, | 1935 |
| 41 | ஆசாபங்கம் (தாகூர் கதை மொழி பெயர்ப்பு) | கமல நிலையம் | 1937 |
| 42 | நஷ்டபூஷணம் | ,, | 1937 |
| 43 | கதைக்கொத்து | பாரதி பிரசுராலயம் | 1937 |
| 44 | Agni and other poems and translations | ,, | 1937 |
| 45 | Essays and other prose Fragments | ,, | 1937 |
| 46 | ஸ்வசரிதையும் பிறபாடல்களும் | ,, | 1938 |
| 47 | பத்திராதிபர் (தாகூர் கதை; மொழி பெயர்ப்பு) | கமலநிலையம் | 1939 |
| 48 | வேதரிஷிகளின் கவிதை தொடர்ச்சி | பாரதி பிரசுராலயம் | 1941 |
| 49 | பாரதி கீதத்திரட்டு (2ம் பதிப்பு) | ,, | ... |
| 50 | பாரதி மணிமலர் | ,, | 1948 |
| 51 | பாரதி தமிழ் | அமுதநிலையம் | 1953 |
| 52 | சின்னச் சங்கரன்கதை | பாரதி புத்தக நிலையம் | 1956 |
| 53 | தாகூர் சிறுகதைகள் (மொழி பெயர்ப்பு) | அமுத நிலையம் | 1958 |
| 54 | பாரதி புதையல்-முதல் தொகுதி | ,, | 1958 |
| 55 | பாரதி புதையல்-இரண்டாம் தொகுதி | ,, | 1959 |
| 56 | பாரதி புதையல்-மூன்றாம் தொகுதி | ,, | 1975 |
| 57 | பாரதி தரிசனம்-முதல் தொகுதி | நியூசெஞ்சுரி ஹவுஸ் | 1975 |
| 58 | பாரதி தரிசனம்-இரண்டாம் தொகுதி | ,, | 1977 |
| 59 | சக்ரவர்த்தினி-கட்டுரைகள் | வானவில் பிரசுரம் | 1970 |
| 60 | மும்மணிகள் | ,, | 1979 |

**பின் குறிப்பு:**

கூடியவரை மகாகவி பாரதியாரே தமது நூல்களுக்குத் தலைப்பெயரிட்டு விட்டார்.

லுள்ள அகத்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை தாலுகாக்கள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டன.

மலபார் மாவட்டம், தென் கன்னட மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கொள்ளேகால் தாலுகா முதலியன சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டன.

*1956*ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல்நாள் மொழிவழி மாநிலமாக அமைக்கப்பட்ட தமிழ் மாநிலம் 'சென்னை மாநிலம் எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டது.

ஆந்திரர்கள் சென்னை நகரை ஆந்திர மாநிலத்தின் தலைநகராக மாற்ற முயன்ற பொழுது அது தமிழ் மாநிலத் தலை நகரமாக அமையப் பாடுபட்டவர் அன்றைய முதல்வராக இருந்த மூதறிஞர் ராஜாஜி.


தமிழ் மாநிலம் அமைந்த பொழுது முதல்வராக இருந்தவர் பெருந்தலைவர் காமராஜர்.

தமிழ்நாட்டின் வடக்கெல்லையைக் காத்து, தமிழ்நாட்டுடன் சேர அரும்பாடுபட்டவர்களுள் முக்கியமானவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம்.

திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் 'தாய்த் தமிழகத்துடன் இணைக்கப் பாடுபட்டுள்ளவர்களுள் முக்கியமானவர் மார்ஷல் நேசமணி.

கட்சி அரசியல் வேறுபாடு கருதாது தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் மொழி வழி மாநிலம் அமைய அரும்பாடு பட்டனர்..

**மார்ஷல் நேசமணி**



மொழி வழி மாநிலமாக அமைக்கப்பட்ட தமிழ்மாநிலம் சென்னை மாநிலம் என்றே வழங்கப்பட்டு வந்தது.

*1967*-ஆம் ஆண்டில் முதலமைச்சர் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டினார்கள்.

அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் தமிழ்மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரால் சட்டப்பூர்வமாக மாற்றி அமைக்கப்பட்டது.

நோய்வாய்ப் பட்டிருந்த பொழுதும் மருத்துவர்கள் தடுத்தும் தமிழ்நாடு பெயர் சூட்டும் விழாவில் பங்கேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள்—

''இந்த விழாவுக்கு வரும் போது, உடல்நிலை காரணமாகக் கலந்து கொள்ள வேண்டாமென்று மருத்துவர்கள் தடுத்தார்கள். இவ் விழாவில் கலந்து கொள்ளாமல் இந்த உயிர் இருந்தென்ன, போயென்ன?'' என்று உணர்ச்சி பொங்கக் கேட்டார்கள்.



தமிழுணர்ச்சி உள்ளவர்கள் இவ்வரிகளை எப்படி மறக்க முடியும்?


தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளி விழா கொண்டாடும் இந்நாளில் தமிழ் மாநிலம் அமையப் பாடுபட்ட அனைவருக்கும் நம் நெஞ்சார்ந்த வணக்கங்களை உரித்தாக்குவோம்!

## 1984 ஒலிம்பிக் பந்தயச் சின்னங்கள்

Games of the XXIIIrd Olympiad Los Angeles 1984

அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுகள் 1984-ல் கலி:போர்னியா மாநிலத்தில் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடக்கவிருக்கின்றன. விளையாட்டுகளுக்கு உரிய ஒரு சின்னம் இப்பொழுது முடிவாகியிருக்கிறது. சிவப்பு, வெள்ளை, நீல நிறங்கள் கொண்ட பின்னணியில், விரைந்து பாயும் பான்மையில் நட்சத்திரங்கள் பொறித்த சின்னம், இது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒலிம்பிக் நடப்பது இது இரண்டாவது தடவை; முதல் தடவை 1932-ல் நடந்தது. 1896-ல் தொடங்கிய ஒலிம்பிக் போட்டிகள், அமெரிக்காவில் நடைபெறுவது இது மூன்றாவது முறையாகும். முதன் முறை 1904-ல் செயிண்ட் லூயிஸ் நகரில் நடந்தது.


பாரதியின்
கடித முத்துக்கள்...


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்

# கனவை நனவாக்க கவிதை துணைபுரியும்

பரலி
சு.நெல்லையப்பர்

சக்தி காரியாலயம் வெளியிட்டுள்ள 'பாரதியார் கவிதைகள்' மலிவுப் பதிப்பிற்கு பரலி நெல்லையப்பர் முகவுரை!

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனி தாவ தெங்கும் காணோம்'

என்றும்,

'தே மதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்'

என்றும் பாடிய பாரதியார் பாடல்களின் பெருமையை இன்று பாரெல்லாம் அறிந்து போற்றத் தொடங்கியிருக்கிறது.

அடிமைப்பட்டுக்கிடந்த நாட்டுக்கு விடுதலை ஊக்கம் அளித்த தமது பாடல்களை லட்சக் கணக்காக அச்சிட்டு வெளியிட்டு, வாயுள்ள மக்களெல்லாம் பாடவேண்டுமென்றும், காதுள்ள மக்களெல்லாம் கேட்க வேண்டுமென்றும், கருத்துள்ள மக்களெல்லாம் சிந்திக்க வேண்டுமென்றும், பாரதியார் அந்நாளில் விரும்பினார். ஆனால் அவர்கள் கனவு நனவாக இத்தனை ஆண்டுகள் ஆயின. பழந்தமிழ் மக்களுக்கு மட்டுமன்றிப் பார் அனைத்துக்குமே பொதுவான பாரதியார் பாடல்கள் ஒரு சிலரின் தனியுடைமையாக இருந்த நிலை நீங்கி, சில ஆண்டுகளுக்கு முன் மக்களின் பொது உடைமையாக மாறியது. ஆனால் பெயரளவில் பொது உடைமையாக இருந்த பாரதியார் பாடல்கள் செயலளவில் அவ்வாறு மாறுவது எளிய வேலையல்ல. ருஷியாவிலும், அமெரிக்காவிலும் அரசாங்கத்தாரே தங்கள் நாட்டுச் சிறந்த இலக்கியங்களைக் கோடிக் கணக்காக அச்சிட்டு இலவசமாகவும், பரம ஏழைகளும் வாங்கக் கூடிய மிகக் குறைந்த விலைக்கும் கொடுத்து வருகிறார்கள். பழந்தமிழ் நாட்டிற்குப் புத்துயிரும் புது வாழ்வும் அளித்துவரும் பாரதியார் பாடல்களை நமது அரசாங்கத்தாரே அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டும் என்பது என் போன்றவர்கள் கருத்து. ஆனால் அதிகாரிகள் செய்ய முன்வராத பெரிய வேலையைப் பாரதி பக்தரும், எனது நண்பருமான வை. கோவிந்தன் செய்ய முன்வந்தமை பெரிதும் போற்றுதற்குரியது. என்போன்ற பாரதி நண்பர்களின் கனவு இன்று நிறைவேறி விட்டதை நினைத்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள படித்தவர்கள்; ஆண் பெண்கள் அனைவரும் இந்த நூலை வாங்கிப் படித்துத் தாங்கள் புது வாழ்வு பெறுவதுடன் நாடெங்கும் மலர்ந்து வரும் புதுவாழ்வு பெருவாழ்வாகுமாறு அவர்கள் துணைபுரிதலும் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

பாரதியார் தேசபக்தர் மட்டுமல்லர். அவர் சிறந்த தெய்வபக்தரும் ஆவார். அது பற்றியே தேசபக்தி ஒன்று மட்டுமே உடைய சாதாரண மக்கள் காண முடியாத அரிய உண்மைகளையெல்லாம் கண்டு அவற்றைப் பாடியும் எழுதியும் சென்றார். அதனால் அவர் ஒரு தீர்க்கதரிசி ஆவார். பூலோகத்தில் புதியதோர் சத்திய யுகம் தோன்றிக்கொண்டிருக்கிறதென்பதை அவர் பல இடங்களில் பாடியும் எழுதியும் இருக்கிறார்.

'வீழ்க கலியின் வலி யெல்லாம், கிருத
யுகந்தான் மேவுகவே' என்றும்

''பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே கொணர்வேன்
தெய்வ விதியிஃதே!''

'கிருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்'

என்றும் அவர் பாடியிருக்கிறார்.

''இன்று தேவர்களை அழைக்கிறோம். இந்த மண்ணுலகத்திலே மீண்டும் கிருத யுகத்தை நாட்டும் பொருட்டாக, அறிவீனம், அசுத்தம், வறுமை, சிறுமை, நோய், கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்ற ராட்சஸக் கூட்டங்களை, அழித்து, மனித ஜாதிக்கு விடுதலை தரும் பொருட்டாக' என்று அவர் எழுயிருக்கிறார்.

அசத்தியமும் அதர்மமும் மிகுந்த கலி யுகம் ஒழிந்து புதியதோர் சத்திய யுகம்—கிருத யுகம் தோன்றிக் கொண்டிருக்கிறதென்பதை நாட்டு நடப்பையும் உலகப் போக்கையும் ஆழ்ந்து நோக்குவார் இன்று தெளிவாகக் காணலாம்.

தமிழ் ஜாதியைப் பற்றி பாரதியார் கூறும் ஓர் உறுதிமொழியை இறுதியாகக் கூறி இந்தச் சிறிய முன்னுரையை நான் முடிக்கிறேன்:

'இந்த நிமிஷத்தில் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியம் இல்லை. நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பேரை மாற்றி அழையுங்கள்'.


இந்த வாக்கியங்களை பாரதியார் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் 1916-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாந் தேதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் வெளியிட்டார். தமிழ் மொழி ஆட்சி மொழியாய் விட்டது இன்று. தமிழ் ஓசை இன்று உலகமெங்கும் கேட்கிறது. பூமிதேவியின் தலைப் பிள்ளையான தமிழன் வையகத்தில் மீண்டும் தலைமைப் பதவி வகிக்கப் போகிறான் என்பது பாரதியார் கருத்து. பாரதியார் கனவை நாம் நனவாக்க வேண்டும். அதற்கு அவரது பாடல்கள் அருந்துணை, பெருந்துணையாக விளங்கும்.

வாழ்க பாரதியார் நாமம். வாழ்க தமிழ் மொழி. வந்தே மாதரம்.

குரோம்பேட்டை
சென்னை
13-4-1957.

பரலி சு. நெல்லையப்பர்.

# சங்கீத விஷயம்



## மகாகவி பாரதியார்

பொதுப் பள்ளிக்கூடத்தில் சங்கீதம் கற்றுக் கொடுக்க வேண்டும். இது மற்ற நாகரிக தேசங்களில் சாதாரணமாக நடந்து வருகிறது. உயிரிலே பாதி சங்கீதம். சாஸ்திரத்தை யாருமே பேணாமலிருந்தால், பாடகர்கூட அதைக் கைவிட்டு விடுவார்கள். ஆதலால் 'சுதேசமித்திரன்' (விசேஷ அனுபந்தம்) பத்திரிகையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் சங்கீதம் சீர்திருந்த வேண்டுமென்ற கருத்துடன் எழுதிய லிகிதத்தை படித்தபோது எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று.


இங்கிலிஷ் பாஷையிலே ஒரு பெரிய கவிராயன் சங்கீத ஞானமில்லாதவரைக் கள்ளரென்றும் குறும்பரென்றும் சொல்லிப் பழிக்கிறான். பாட்டு சகலருக்கும் நல்லது. தொண்டையும் எல்லோருக்கும் நல்ல தொண்டைதானென்பது என் மதம். கூச்சத்தாலும் பழக்கக் குறைவாலும் பலர் தமக்கு நல்ல குரல் கிடையாதென்று வீணே நினைத்துக் கொள்கிறார்கள்.

பாட்டுக் கற்க விரும்புவோர் காலையில் சூரியனுக்கு முந்தியே எழுந்து பச்சைத் தண்ணீரிலே குளித்துவிட்டுக் கூடியவரை சுருதியும் லயமும் தவறாதபடி சரளி வரிசை முதலியன பழக வேண்டும். உச்ச ஸ்தாயிதான் எப்போதும் நல்லது. உடம்பை நிமிர்த்து முகத்தை நேரே நிறுத்தி, முகத்திலும் வாயிலும் கோணல் திருகலில்லாதபடி வாயை ஆவென்று சிங்கம் போலே திறந்து பாட வேண்டும். தொண்டையிலே கரகரப்பிருந்தால் வெறு மிளகைத் தின்னவேண்டும். கற்கண்டு சேர்ப்பது நல்லதில்லை.


பாட்டுக் கச்சேரி நடத்தும்போது, நடுவிலே மற்ற வாத்தியக்காரரை வாசிக்கச் சொல்லிவிட்டுப் பாடகர் வெறுமே இருப்பதும் தெம்மாங்கு முதலான வேடிக்கைப் பாட்டுக்கள் பாடுவதும் தமக்கு ரசப்படவில்லை யென்று ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லுகிறார். அதை நான் ஒரு பகுதி ஆட்சேபிக்கிறேன். வீணை, குழல் முதலிய இசைக் கருவிகளும், மத்தளம் முதலிய தாளக் கருவிகளும் வாய்ப்பாட்டின் உதவியில்லாமல் தனியே இன்பந் தருகின்றன.

வாத்யம் எட்டாத ஸ்வரத்தைத்தொடப் போய்க் கஷ்டப்படாது. தொண்டையிலே கரகரப்பும், அடைப்பும் இருக்கும்போது கச்சேரி நடத்த வராது. சரியானபடி சுருதி சேர்ந்த பிறகுதான் தொழில் செய்யத் தொடங்கும்.


வீணையும் குழலும் பறையும் வாய்ப் பாட்டில்லாமல் தனியே ஒலிப்பது பழைய நாளிலும் உண்டு. கண்ணன் குழலுக்கு இடைப்பெண் ஒத்துப் பாடியதும். எம்பெருமான் தனியே இசைப்பதுமுண்டு. தெம்மாங்கு முதலியன ஹாஸ்ய ரசத்தை உடையவை. அவற்றை முழுதும் நிறுத்திவிடக் கூடாது.





1928ல் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட தராசு நூல் முகப்பு




பாரதியாரின் மனைவி 1941ல் எழுதிய பாரதியார் சரிதம் முதல் பதிப்பு முகப்பு




முதல் முறையாக விரிவான முறையில் வெளியாகிய பாரதி வாழ்க்கை வரலாற்று நூல் (ஆசிரியர் சுத்தானந்த பாரதி-1932)



பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C) PP-23 தமிழரசு


1956-ல் அமைந்த தமிழ் மாநிலம்



# தமிழரசு

16-11-1961 50 காசு.
திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி - கார்த்திகை : 1





# தமிழரசு

1-12-1981

இதழ்

# பாரதியார் நூற்றாண்டுச் சிறப்பிதழாக

மலருகிறது!

# காக்கும் கரங்கள்



## மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சர்

## திரு. சி. பொன்னையன்

"மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை, கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையாகும். இதற்கு மக்கள் தயாராகி விட வேண்டும். சுய நலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்க வேண்டும்" என்று மக்கள் சமூகம் வாழ்க்கையில் வெற்றி பெற ஏற்ற சாதனம் கூட்டுறவு நெறி என்பதை விளக்கினார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள்!

கூட்டுறவு என்பது வெறும் தத்துவ விளக்கமல்ல. மனிதனின் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களுக்குத் தீர்வு காண ஏற்ற புதிய நெறி. அது இதயத்தைத் தொடுகின்ற சக்தி. தன்னிறைவும் சேவையும் துலங்கிடும் சாதனம்.

'கூட்டுறவியக்கம் ஒரு பொருளாதார இயக்கம் மட்டுமல்ல; அறநெறி சார்ந்த இயக்கமும் ஆகும்' என்றார் அண்ணல் காந்தி. கூட்டுறவு இயக்கத்தோடு இந்தியாவை இணைக்க வேண்டும். இந்தியாவின் பொது எண்ணமே கூட்டுறவு முறையில் இருக்க வேண்டும் என்று கனவு கண்டார் பண்டித நேரு. சமுதாயத்தில் தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாகக் கூட்டுறவியக்கம் உருவாகியுள்ளது என்று விளக்கமளித்தார் பேரறிஞர் அண்ணா.

சமுதாயத்தைச் சூழ்ந்துள்ள சீர்கேடுகள் என்ற காரிருளை நீக்கவும் நலிந்த பிரிவினரின் நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலவாகவும் கூட்டுறவியக்கம் விளங்கி வந்துள்ளது என்பது வரலாற்று உண்மை.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டில், எளிய நெசவாளர்களின் எண்ணத் தொட்டிலிலே தவழ்ந்த கூட்டுறவுக் குழந்தை-இன்று உலகம் தழுவிய மாபெரும் பேரியக்கமாக விரிந்து பரந்து வேரூன்றியுள்ளது. அன்று தேவைக்காகப் பிறந்த இயக்கம் இன்று மக்கள் சேவைக்காகக் காத்திருக்கிறது.

தொன்மைமிக்க இந்த இயக்கத்தின் வளமான வளர்ச்சியில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன; முன்னேற்றங்களும் முகிழ்த்தன. மக்க


தமிழரசு

16—11—1981 திருவள்ளுவர் ஆண்டு 2012

மலர் : 12 இதழ் : 10 துன்மதி - கார்த்திகை : 1

ஆனால் ஒரே மெட்டை வளைத்து வளைத்து போன இடமெல்லாம் சொல்லிப் பயனில்லை. தமிழ் பிழையாகவும், பொருள் ரஸமில்லாமலும் பாட்டுக்கள் இருந்தால் அவற்றை மன்றிலே கொண்டு வருதல் நியாயமில்லை.

இருந்தாலும் மத்தளக்காரனுக்குப் பாட்டுக்காரன் பயந்து கட்டுப்பட்டு நடக்கும் விபரீதம் சில இடங்களிலே காணப்படுவதைக் கண்டனை செய்து ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லும் வார்த்தை ஒப்புக் கொள்ளத்தக்கது.

ஏனென்றால்.. பாட்டுக்காரன் தனது பாட்டுக்களுக்குத் தவறாமல் தாளம்போட்டு வர வேண்டும். இவ்வளவு தாள ஞானம் இருந்தால், பாடகனுக்குப் போதும். அதிகமிருந்தால் மிச்சம். இந்த விஷயந் தெரியாமல் மத்தளக் காரனுக்குப் பாட்டுக்காரன் பயப்படுவது மிகவும் வேடிக்கை.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ராகப் பழக்கம், வர்ணங்கள், கீர்த்தனங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி எழுதியிருப்பதெல்லாம் (பெரும்பகுதி) கேட்டவுடன் நியாயமென்று கொள்ளத்தக்கது. கீர்த்தனங்கள் பழகுவது மாத்திரம் அவரவரிஷ்டப்படி போக வேண்டும். எது எப்படியாயினும் யாராவதொரு வித்வான் இந்தத் தமிழ்நாட்டுக்குப் புதிய கீர்த்தனங்கள் ஏற்படுத்தும் வழிகாட்டிக் கொடுத்தால், ஆயிரம் பேர் அதைப் பின்பற்றி மேன்மை பெறுவார்கள்.

இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்குந்தான் பாடத் தெரியும். மற்ற மிருகங்களுக்குப் பாட்டு வராது. பறவைகள் வானத்திலே பறக்கும் வழக்கமிருப்பதால், அவற்றின் மனநிலை சங்கீதத்திற்கு இசைகின்றது போலும்! மனிதன் உடம்பினாலே பறக்காவிட்டாலும் உள்ளத்தைத் திசைவெளியிலே பறக்கும்படி செய்கிறான். அப்போது. இயற்கையிலே பாட்டுத் தோன்றுகிறது. ரசங்கள் ஒன்பது :—

(1) வீரம், (2) ரௌத்ரம் (கோபம்), (3) அற்புதம் (வியப்பு), (4) சாந்தம் (நடுவுநிலை), (5) பயாநகம் (அச்சம்), (6) பீபத்ஸம் (வெறுப்பு), (7) ஹாஸ்யம் (நகை), (8) கருணை சோகம் (துயரம்)இதை அவலம் என்பது பழைய தமிழ் வழக்கு. (9) சிருங்காரம் (காமம்).

வெளிப் பொருள்களைக் காணும்போது அல்லது நினைக்கும்போது மனிதனுடைய உள்ளத்திலே இந்த ஒன்பது சுவைகளில் ஏதேனும் ஒன்று தோன்றும். இரண்டு மூன்று கலந்தும் தோன்றக்கூடும். ரஸ உணர்ச்சியிலே உள்ளத்தை முழுதும் ஈடுபடுத்தக்கூடிய சிலர் கவிதை, பாட்டு, சித்திரம் முதலிய தெய்வக் கலைகளிலே சிறப்படைகிறார்கள். ரஸ உணர்ச்சி இல்லாவிடின் இக்கலைகள் நசித்துப் போகும்.


பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிற துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவராயின், முந்தியவன் உண்மையான கவிதையை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான்; இவனுடைய தொழிலிலே கவிதையிராது. இப்படியேதான் ஒவ்வொன்றிலும்.

ரச ஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து சங்கீத வித்வான்களிலே பலர் 'சங்கீதத்திற்கு நவரசங்களே உயிர்' என்பதை அறியாதவர்.

முத்துசாமி தீஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக சங்கதிகளுடன் பாடுவோரே 'முதல்தர' வித்வான்கள். இந்தக் கீர்த்தனங்களெல்லாம் சம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி வித்வான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும், விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரசம்' தெரிய நியாயம் இல்லை.

நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக் கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராமாநீ சமான மெவரு' 'மரியாதை காதுரா' வரமுலொ சகி'...ஐயையோ, ஐயையோ ஒரே கதை.

## பாரதியின் கையெழுத்து



எந்த ஜில்லாவுக்குப் போ, எந்த கிராமத்திற்குப் போ, எந்த 'வித்வான்' வந்தாலும் இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுகளை வருஷக் கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேர்ந்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

'பூர்விக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்து போய்விட வேண்டும்' என்பது என்னுடைய கட்சியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாட வேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக்கூடாது. பதங்களை வாய் விட்டுத் தெளிவாகச் சொல்ல வேண்டும். விழுங்கிவிடக் கூடாது. பத்து முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி சங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது.

புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவர வேண்டும். இப்போது சங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர், தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயலவேண்டும். நவரசங்களின் தன்மைகளையும், இன்னின்ன ராகங்களை இன்னின்ன விதங்களிலே பாடினால், இன்னின்ன ரசங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

[ஆதாரம்: 'பாரதி தமிழ்']



## அற்புதம் விளைக்கும் கவிதை

— சொ. முருகப்பா

பண்டைப் பழம் பெருமையோடு நம் புது வாழ்வை இணைக்க முயன்ற பெரியார் இருவருள் பாரதியார் ஒருவராவர். பாரதியார் ஓர் உண்மையான தமிழ்க்கவி. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்னும் தமிழ்நாட்டுப் பழமொழியின் தத்துவத்தை நன்குணர்ந்தவர், பாரதியார். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பது இக் கவி தம் சொந்த அனுபவத்தால் கண்டறிந்த உண்மையேயாகும். 'தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப் புலவர் பெருமான்' தமிழ்நாட்டு ரவீந்திரராவர். இவர் வங்க நாட்டுப் புலவர் திலகம் போல் ஆழ்ந்தகன்ற பாண்டித்யம் வாய்ந்தவரல்லர். எனினும், கவிதையழகில் இவரது அருட்கவிகள் ரவீந்திரரின் பாடல்களுக்குச் சிறிதும் இளைத்துக் காணப்படுவன அல்ல. 'பண்டொரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்;தோற்றம் உனக்கே பெருந் துயில்தான் தந்தானோ' என்று ஆண்டாள் அருளியவண்ணம், பேருறக்கத்தில் கும்பகருணனையும் வென்று பேச்சு மூச்சின்றி அசையாது கிடந்த தமிழகத்தைத் தம் கவி முழக்கத்தால் தட்டியெழுப்பிய பெருமை நம் செந்தமிழ்க் கவிச்சிங்கமான பாரதிக்கே யுரியது. இத்தகைய கவிச்சிங்கத்தை இனிது போற்றாது, கொன்ற 'பெருமை'யும் தமிழ் நாட்டிற்கேயுரியதாகும். பாரதியார் பாடல்களில் சில, 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' தேசபக்தி வெள்ளத்தே அழுத்தும் ஆற்றல் வாய்ந்தன. சில வற்றியுலர்ந்த தோல்களுக்கும் என்புக்கூடுகளுக்கும் இன்னுயிர் அளிப்பன. இன்னும் சில வறண்டயர்ந்த இதயங்களுக்கு உயர்வெனும் அமுதம் ஊட்டி, பாலைவனமும் பசுஞ்சுடர்ச் சோலையாகப் பொலியும் வண்ணம் அற்புதம் விளைப்பன.

ஆதாரம்: 'குமரன்" வார இதழ் 27-9-1928



துணைவி செல்லம்மாளுடன் பாரதியார்.

## துன்பம் போக்கும் தூய கவிதை

— விபுலானந்த அடிகள்

கலைமகளுடைய அருளினைப் பெற்ற உண்மைக் கவிவாணர் பாடிய பாடல்கள் அனைத்தும் நலனிறைந்த நீர்மையனவேயாம். தமிழ்நாடு செய்த பெருந்தவப் பயனாக உதித்த சுப்பிரமண்ய பாரதியார் இளவயதிலே வாணியின் அநுக்கிரகத்தைப் பெற்றவராய் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுங்கொண்ட இன்றமிழ்ப் பாடல்கள் பலவற்றை உலகுக்கு அளித்தார். இவருடைய செய்யுட்களை ஆராய்ந்து கற்ற ஆன்றோர் பலர் இவரை உலகத்திலே சிறந்து விளங்குங் கவிவாணருள் ஒருவராக மதிக்கின்றனர். கவிச்சுவை மானிடர்க்கு இன்பத்தை விளைக்குங் கால வெல்லை வரையும் இனிமையும் எழிலும் ததும்பி விளங்கும் பாரதியார் பாடல்கள் போற்றப்படுவது நிச்சயம். துன்பத்திலே படிந்து வாழ்க்கையில் வெறுப்புற்றோர்க்குப் பாரதியாருடைய சுவை நிறைந்த இன்றமிழ்ச் செய்யுட்களைக் காட்டிலும் சிறந்த மருந்து வேறில்லையென்னலாம்.

தம்முடைய தேசத்தாருக்குத் தேசிய உணர்ச்சியை உண்டுபண்ணும் நோக்கமாக வீரமுரசம் போன்ற தேசியப் பாடல்களை மாத்திரமே பாரதியார் பாடினாரென அனேகர் கருதுகின்றார்கள். உண்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து பாரதியார் எழுதிய தேசிய பாடல்கள் மொத்தச் செய்யுட்டொகையில் ஏழிலொன்றுகூட இருக்காது. பாரதியாரின் உண்மைப் பெருமையைக் காண விரும்புவோர் அவருடைய தேசியப் பாடல்களை மாத்திரம் வாசித்து மகிழ்ச்சியடைவதோடு நில்லாது அவரெழுதிய கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு காட்சி, வேதாந்தப் பாடல்கள், பாஞ்சாலி சபதம்-என்னும் இவற்றையும் கருதிப்படிக்க வேண்டும். தமிழ்மொழியறியாத மாந்தர் பொருட்டாகப் பாரதியாருடைய இன்னிசைப் பாடல்களைப் பிறமொழியிற் பெயர்த்தெழுதி உலகெங்கணும் பரப்புதல் வேண்டும்.

(ஆதாரம்: குமரி மலர், ஆகஸ்ட் 1981)

# யுகக் கவிஞன் பாரதி!

'சக்தி காரியாலயம் வெளியிட்டுள்ள 'பாரதியார் கவிதைகள்' மலிவுப் பதிப்பின் முகவுரை!

பாரதி நூல்கள் எதற்குப் புதியதோர் பதிப்பு வந்தாலும் நாம் மனமகிழ்வோம். அதிலும் பாரதி கவிதைகளில் கிடைத்தவை களையெல்லாம் தொகுத்து ஒரே பெரு நூலாக்கி நம்ப முடியாத மலிவு விலையில் ஒரு பிரசுரகர்த்தர் தருகிறாரென்றால், இது சிறந்த பாரதி சேவை என்று உளம் பூரிக்கா மல் வேறென்ன செய்வோம்?

பாரதி உயிரோடிருந்த காலத்தில், தமது நூல்களைத் தாமே ஒழுங்கு செய்து பதிப்பித்து வெளியிட விரும்பினார். தமது கவிதை களையும் வசன நூல்களையும் நாற்பது பிரிவு களாக்கி, ஒவ்வொரு பிரிவிலும் 10,000 பிரதி அச்சடித்து, கவிதைப் பிரிவுகளைப்பிரிவு நாலணா வீதமும் வசனப் பிரிவுகளைப்பிரிவு எட்டணா வீதமும் விற்கத் திட்டமிட்டார். "மண்ணெண்ணெய் தீப்பெட்டியிலும் சாதாரணமாக"த் தம் நூல்கள் எங்கும் பரவ வேண்டுமென்று துடித்தார். 1920-21-ல் போடப் பெற்ற இத்திட்டம் நிறைவேறவில்லை.

முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின், இன்று, பாரதி கூடக் கருதியிராத அளவு மலிவான விலையில், பாரதி நினைத்ததைவிட அதிகப் பக்கங்கள் கொண்டு பாரதி கவிதைத் தொகுதியின் பதிப்பொன்று வெளியாகிறது. புத்தக வெளியீட்டுத் துறையில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ள சக்தி காரியாலய அதிபர் ஸ்ரீவை. கோவிந்தனே இந்தச் சாதனையையும் நிகழ்த்தி வைக்க முன் வந்துள்ளார். இதில் வியப்பேதுமில்லை.

புதிய பாரதத்தை சிருஷ்டித்து, உலகில் கலி ஒழித்துக் கிருதயுகம் கொண்டு நிறுத்த விரும்பினான் யுகக் கவிஞன் பாரதி. கவிதையால் புதுயுகம் படைப்போமென்ற துணிவு அவனுக்கிருந்தது. அந்தத் துணிவு வெறியில் மூண்ட கவிதைகள் பன்றிப் போத்தையும் சிங்க ஏறாக்கி, விந்தை தோன்றிட, இந் நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கச் செய்யும் திறன்கொண்டு விளங்குகின்றன. இக் கவிதைகள் ஆயிரக் கணக்கில், பல்லாயிரக் கணக்கில் அச்சானால் கூடப் போதாது. பாரதி நூல் இல்லாத இல்லம் இல்லையென லட்சக் கணக்கில் அச்சாக வேண்டும். பாரதியின் கருத்துக்கள் வீடுதோறும் இவ்வாறு பரவுமேயானால் நம்மைப் பீடித்த பற்பல இன்னல்கள் ஒழிந்துபோம். நம் முன் கிருதயுகம் கண்டு, நந் தமிழ் நாட்டிலும் உலகிலும் கிருதயுகம் மேவச் செய்வோம்.

பாரதி நிலையம்
தி. நகர்,
சென்னை—17.
2-4-1957

**ரா. அ. பத்மநாபன்.**

## எனது குருவை இழந்தேன்...


சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 1 மணிக்கு எனது குருவாகிய ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் இம்மண்ணுலகைவிட்டு, விண்ணுலகை மடைந்தார் என்ற துக்கச் செய்தியைக் கேட்டு ஆற்றொணாத் துயரடைந்தேன். அவர் புதுச்சேரியிலிருந்த காலத்தில் 'ஜாதி வித்தியாச' மென்னும் தொத்து வியாதியை இந்தியாவிலிருந்து ஓட்டினால்தான் நம் பாரத மாதா விடுதலை பெறுவாள் என்று என்னிடம் அடிக்கடி சொல்லி போதிப்பார். அவர் கவி சிரேஷ்டர் மாத்திரமல்ல. வேத வேதாங்க வேதாந்தி சாஸ்திரார்த்திகளிலும் நிகரில்லா பாண்டித்திய முள்ளவர். இவர் தம்முடைய சக்தி முழுவதையும் மத விஷயங்களிலும், ராஜீய விஷயங்களிலும், ஜாதி விஷயங்களிலுமே உபயோகப்படுத்தி வந்தார். காளி தேவியின் சுய ரூபத்தை அவர் கண்ணால் பார்த்ததாகவும் சொல்லியிருக்கிறார். அவர் பயமென்பதே கிஞ்சிற்றுமில்லாத தீரபுருஷரென்றும், பேசும் திறமை உள்ளவர்களுள் சிறந்தவரென்றும், ராஜதந்திரியெனவும் இப்படிப் பல விதங்களில் சிறந்த புகழ் பெற்ற இப்புண்ணிய புருஷர் நம்மெல்லோரையும் விட்டுப் பிரிந்து சென்றதானது பாரதப் புத்திரர்கள் எல்லோரையும் துக்கக் கடலில் ஆழ்த்தியதற்கு எம்மாத்திரமும் தாங்கமுடியவில்லை. பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஆத்மாவுக்கு சாவு இல்லை என்று சொல்லியிருப்பது போல, எனது குருவாகிய ஸ்ரீமான் பாரதியார் சரீரம் மறைந்து போனாலும், அவருடைய ஆத்மாவானது நம்மையே சுற்றிக் கொண்டே இருக்கும். அவரைப் பிரிந்து தவிக்கும் அவரது மனைவியாருக்கும், இரு குழந்தைகளுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவிப்பதாக சீஷன் ஸ்ரீமான். ரா. கனகலிங்கம் எமக்கு எழுதுகிறார்.

(சுதேசமித்திரன் 1921 செப்டம்பர் 14ல் வெளியானது)

* * * * * *

(ரா. கனகலிங்கம் புதுவையில் கவி பாரதியாருடன் நெருங்கிப் பழகிய அரிசன மாணவன். இவருக்குத்தான் கவி பாரதியார் புரட்சி முறையில் பூணூல் போட்டு பிராம்மணனாக்கினார்.)

தொகுப்பு: ரகமி



ளது வாழ்வின் பொருளாதாரப் பிரச்சினை களுக்கும் மருந்து காண்பதோடு இந்த இயக் கத்தின் பணி நின்று விடவில்லை. எங்கும் எதிலும் கூட்டுறவு என்று பல்கிப் பெருகி, எளியோரை வாட்டும் பல பொல்லாங்குகளை எதிர்த்துப் போராடும் கருவியாக -மறுமலர்ச்சி காணும் மக்கள் இயக்கமாக - கூட்டுறவியக்கம் மலர்ந்து விட்டது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடும் புகழோடும் முன்தோன்றி முதிர்ந் நாகரிகத்தில் விளங்கியது தமிழகம். தொன் மைப் புகழ் வாய்ந்த தமிழகத்தில், கூட்டுற வியக்கம் துளிர்விட்டு முக்கால் நூற்றாண்டுக்கு மேலாகி விட்டது. இந்தியாவில் கூட்டுறவியக் கத்தின் வரலாறு தமிழகத்தில் தான் துவங்கு கிறது என்ற பெருமையை நமக்களித்தது முதல் கூட்டுறவுச் சங்கம் தோன்றிய திரூர் என்ற மூதூர்!

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'. என்றார் நூற்றாண்டுக் கவிஞர் பாரதியார். உலகத்துக்கு உயிரூட்டும் உழவர் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக -அன் றும் இன்றும் என்றும்-உதவுவது வேளாண் மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலார் பாடிய வண் ணம்—உதவியின்றி வாடிக்கிடந்த உழவர் களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி, தமிழகத்தில் 4742 வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங் கங்கள் பல்வகை உதவிகள் செய்து வருகின் றன. குறுகிய கால, நடுத்தர காலக் கடன் களைத் தந்து உழவர்களுக்கு, கிராம மட்டத் தில் முறையாக உதவுகின்ற அமைப்பு கூட் டுறவைத் தவிர வேறு இல்லை என்றே கூற லாம். தமிழகத்தில் உள்ள மொத்த வேளாண்மைக் குடும்பங்களில் 77 சதவீதம் கூட்டுறவின் பயனைப் பெற்று வருகிறார்கள். தமிழகத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்டுள்ள நலிந்த பிரிவினரில் 74 சதவீதம் கூட்டுறவின் பயனைத் துய்த்து வருபவர்களா வார்கள். 1981-82ம்ஆண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சுமார் 40,000 வேளாண் மைக் குடும்பங்களைக் கூட்டுறவின் மூலம் பயன்பெற ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள் ளது.

தமிழக உழவர் பெருமக்களின் நீண்ட காலக் கடன் தேவைகளை 182 பிரதம நில வள வங்கிகள் கவனித்து வருகின்றன. நடப்பு ஆண்டில் உழவர்களுக்கு, குறுகிய, நடுத்தர கால, நீண்டகாலக் கடனாக மொத்தம் ரூ. 140 கோடி அளவுக்கு வழங்கக் குடியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோடி கோடியாகக் கடனுதவியை வாரிக் கொடுத்து உழவர்களுக்கு உதவிய தமிழக அரசு, கடன் சுமையால் வாடி நின்ற போது குறிப்பாக சிறு உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கத் தவறவில்லை. சுமார் 4.50 இலட் சம் சிறு உழவர்களின் கடனாக ரூ. 50 கோடியை, தமிழக அரசு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, சிறு உழவர் களின் சார்பில் திருப்பிச் செலுத்தியுள்ளதை உழவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள சிறிய மிகச் சிறிய உழவர்களுக்கு வேளாண்மை இடு பொருட்கள் வாங்க, ரூ. 294 இலட்சம் அளவுக்கு தமிழக மானிய மாக வழங்கியுள்ளது. குறுகிய காலக் கடன் கள் மீதான சாதாரண வட்டி, அல்லது அப ராத வட்டி தள்ளுபடி சலுகை 31.12.81 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. மேலும், 'ஒரு கடன்தாரர், தான் பிணை நின்ற கடன் மீது டிகிரி ஆகி இருந்தாலும், தான் பெற்ற கடனை முழுவதும் செலுத்தியிருந்தால், அவர் புதுக் கடன் பெற 31.3.82 வரை அனுமதிக் கப்பட்டுள்ளது. உழவர்கள் தாங்கள் பெற்ற கடனைக் குறித்த தவணையில் செலுத்திவிட ஊக்குவிக்கும் பொருட்டு 2 சதவீதம் வட்டி தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் தம் ஆட்சிக்காலத்தில் தான், இதுகாறும் பாரத வர லாற்றில் எந்த மாநிலத்திலும் இல்லாத அள விற்கு விவசாயிகளின் பொருளாதார நிலையை செம்மைப்படுத்த-அவர்கள் - தம் பன்னெடு ஆண்டுகாலக்கடன் தொல்லையிலிருந்து விடு பட -சுமார் 192 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் தள்ளுபடி போன்ற சலுகைகள் அளிக் கப்பட்டுள்ளன. மேற்கண்ட இத்துணை உதவி களும் சலுகைகளும் தமிழக முதல்வர்புரட்சித் தலைவர் அவர்களால் உழவர்களின் தேவை யறிந்து - பால் நினைந்தூட்டும் அன்னை போல - வழங்கப்பட்டவையாகும்.

தமிழகத்தில் நகையீட்டுக் கடன் வழங்கு வதில் கூட்டுறவு நிறுவனங்கள் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளன. 1980-81ல் சுமார் ரூ. 116 கோடி அளவுக்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால், 9.50 இலட் சம் பேர் பயனடைந்துள்ளார்கள்.

வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் இடர்களால்ஏற்படும் இழப்பிலிருந்து உழவர் களைக் காக்கப் பயிர்க் காப்புறுதித் திட் டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது. 1979-81ல் சுமார் ரூ.113 கோடி மதிப்புக்குப் பயிர்க்கடன் காப்புறுதி செய்யப்பட்டது. 1981-82ல் நெல் முதல் பருவத்தில் ரூ. 30 இலட்சம் அளவுக்குக் காப்புறுதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கைவினைஞர்களுக்கும் நலிந்த பிரிவின ருக்கும் சிறு தொழில் புரிய உதவுவதற்கு 64 நகர வங்கிகளும், 26 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் 4 சதவீதம் வட்டியில் கடனுதவி செய்ய முனைந்துள்ளன.



**கூட்டுறவு முயற்சியானது, அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட ஓர் இயக்கமாகும். கட்சி வேறு பாடுகளுக்கு அதில் எவ்வித இடமும் கிடையாது.**

**— அறிஞர் அண்ணா**

உழவர்களின் விளைச்சலுக்கு ஆதாய விலை பெற்றுத் தரும் சீரிய நோக்கத்துடன் தமிழகத்தில் 115 கூட்டுறவு விற்பனைச் சங் கங்கள் பணிபுரிகின்றன. 1980-81ல் சுமார் ரூ. 85கோடி அளவுக்கு விற்பனைச் சங்கங்கள் விளைபொருட்களை விற்றுத் தந்துள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1979-80 மற்றும் 1980-81 ஆகிய ஆண்டு களில் சுமார் ரூ. 170 இலட்சம் மதிப்புள்ள விளை பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இவ்விணையம் இந்தி யாவில் எந்த மாநிலத்திலும் இதுகாறும் மேற் கொள்ளப்படாத ஒரு புதிய பணியை மேற் கொண்டு 1981 சம்பாப் பருவத்தில் 96,170 டன் நெல் கொள்முதல் செய்து, விவசாயிகள் நல்ல விலை பெற உதவியது குறிப்பிடத் தக்கதாகும். நடப்பு ஆண்டில் சுமார் ரூ.71 கோடி அளவுக்குக் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தரமான பண்டங்களை, சரியான எடையில், நியாய விலையில் வழங் கும் பணியில் தமிழகத்தில் 3,639. பிரதமப் பண்டக சாலைகள் ஈடுபட்டுள்ளன. மாணவர் களுக்குப் பாட நூல்கள், குறிப்பேடுகள் வழங்கும் பணியிலும் அவை பாராட்டத் தக்க பங்கு வகிக்கின்றன. 1980-81ல் இவை அனைத்தும் ரூ. 182 கோடி மதிப்புக்கு விற் பனை செய்துள்ளன. கிராம மக்களுக்கும் இன்றியமையாப் பண்டங்களை நியாயவிலை யில் வழங்க, 11 மாவட்டங்களில் 11,101 கிராம அங்காடிகள் இயங்கி வருகின்றன. இவை, 1980-81ல் ரூ. 29 கோடி அளவுக்கு விற்பனை செய்தன. கிராம மக்கள் தங்களது தேவைக்குக் கால் கடுக்க நீண்ட தூரம் நடக்க வேண்டிய கவலையை மாற்றியுள்ளன இந்த கிராம அங்காடிகள்.

## நமது கடமை

விடுதலைப் போராட்டக் காலத்தைவிட மகத்தானதொரு பணியை அதாவது புதுப் பார தத்தை உருவாக்கும் திருப் பணியை இப்போது நாம் நிறை வேற்ற வேண்டியிருக்கிறது.

வறுமையை, துன்பத்தை, வேலையில்லாக் கொடுமையை ஒழித்து நம்மிடையே இன்ப வாழ்வை தீர்மானிக்கும் பெரும் பணி அது.

மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இது போன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது. மொழி வேறுபாடு களும் நம்மைப் பிரிக்க முடியாது. பாரதத்தின் மொழிகள் எல்லாம் தொன்மை வாய்ந்தவை. நன்கு நிலைபெற்றவை. பிரமாதமான முறையில் முன்னேற்றம் அடைந்தவை. அவையெல்லாம் சகோதர மொழிகள். அவற்றை எந்த விதத்திலும் உதாசீனம் செய்ய முடியாது. அவற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டியது நம்முடைய கடமை யாகும்.

—பண்டித ஜவகர்லால் நேரு

மலைவாழ் மக்களின் இருண்ட வாழ்வில் ஒளியேற்றவும், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், ஒரே இடத்தில் கடன் மற்றும் விற் பனை வசதிகளைப் பெறவும், தமிழகத்தில் 12 லேம்ப் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் மலைவாழ் பழங் குடியினர் பயிர்த் தொழில் மற்றும் துணைத் தொழில்புரிய குறைந்த வட்டியில்(4 சதவீதம்) கடன் தருகின்றன.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் நல் வாழ்வுக்காகத் தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. உழைப்பையே மூலதன மாகக் கொண்ட அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி வருவதும் கூட்டுறவியக்கமாகும். மனி தாபிமான உணர்வுடன் அவர்களைப் பேணிக் காத்து வருவது கூட்டுறவு நிறுவனங்களாகும். தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவோர்

ஆகியோர் பெரும்பயனடைந்து வரு கிறார்கள். மேலும், எளியவர்கள் சுயவேலை வாய்ப்புப் பெற்று, தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து வாழ, கூட்டுறவு நிறுவனங்கள் உதவக் காத்திருக்கின்றன.

இம்மாதம், படித்த - வேலை கிட்டாத இளைஞர்களுக்காக அவர்களிடையே உள்ள வேலையில்லா திண்டாட்டத்தைக் களைந்து அவர்கட்கு சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்த இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு கூட் டுறவு நிறுவனம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணப்படி தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. முயன்றால் முடியாதது இல்லை. கூட்டுறவு முயற்சி இருந்தால் முடி யாதது எதுவும் இல்லை. இதைத்தான், ''வாடித் தொழிலின்றி வறுமையால் சாவ தெல்லாம் கூடித் தொழில் செய்யாக் குற்றத் தால் தோழர்களே!'' என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.


கூட்டுறவு நிறுவனங்கள் சமூக முன்னேற் றத்தின் அரிய சாதனங்கள். அவை திறம்படப் பணிபுரிய அவற்றை நன்கு பயன்படுத்த வேண்டும்.

''சமூக அமைதிக்கும் பொருளாதார நீதிக்கும் பயன்படும் கூட்டுறவு நமது நாட்டில் நன்கு பரவவேண்டும்; அதன் முழுப்பயனை யும் அனைவரும் அடைய வேண்டும். நல்ல ஆர்வத்துடன் இந்த இயக்கத்தில் அனைவரும் பணியாற்றினால் மக்களின் பொருளாதாரம் மேம்பாடடையும் - நாடும் முன்னேற்றமடை யும்'', என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டுறவுச் சமுதாயம் மலரக் கனவு கண்டார். அண்ணாவின் கனவு நனவாக, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர், தமிழக முதல் வர் அவர்கள் தலைமையில் ஆக்கப் பணிகள் நிறைவேற, கூட்டுறவுப் பாதையில் [illegible] வோம்!






குவளைக் கண்ணன் என்று அழைக்கப்பட்ட குவளைக் கிருஷ்ண மாச்சாரியார்.



வ.வே.சு. ஐயர்




பாரதியாரின் சீடர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# மகாகவியின் நண்பர்கள்



நீலகண்ட பிரம்மச்சாரி






பாரதியாரால் பூணூல் அணிவிக்கப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கனகலிங்கம்.



மண்டயம் சீனிவாசாச்சாரியார்.



# கூட்டுறவுத் துறையில் புதிய முயற்சி

—ஜி. ஆனந்தன்.

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு தேடித் தருவதை நோக்கமாகக் கொண்ட ''NAESEY'' என்னும் நிறுவனம் 5 ஆண்டுகளுக்குமுன்புதொடங்கப்பட்டது. இத்தகைய நிறுவனம் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. தமிழகத்தில் மட்டுமே உள்ளது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களே இந்நிறுவனத்தைத் தொடங்கினர்.

1. படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களை ஓரணியில் திரட்டி, ஆக்கப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துதல்.

2. தகுந்த வேலைகளைத் தேடிப் பெற தேவையான தொழில் நுணுக்கப்பயிற்சிகளைப் படித்த வேலையற்ற வாலிபருக்கு கிடைக்கச் செய்தல்.

3. படித்து வேலையற்றோருக்குத் தொழில் தொடங்கவும், பொருள்களை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் தேவையான அனுமதிகள் பெற்று தருவது, லைஸன்சுகள் கிடைக்க உதவி செய்வது ஆகியவை 'NAESEY' நிறுவனத்தின் முக்கிய கொள்கைகளாகும்.

'முன்னேற்றத்துக்குச் சுய வேலை வாய்ப்பு' என்பதே இந்நிறுவனத்தின் குறிக்கோள் ஆகும்.

படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்கள், பெண்கள் ஆகியோரை விரக்திக்கும், தோல்வி மனப்பான்மைக்கும் ஆளாகாமல் அவர்களுக்கு இந்த நிறுவனம் நம்பிக்கை ஊட்டியிருக்கிறது.

1. சிற்றுண்டி தேநீர் விற்பனை நிலையம்

2. பாதுகாப்புக் காவல் சேவை.

3. பால் உற்பத்திப் பொருள்கள்

4. ரயில்களில் வாடகை நூல் நிலையங்கள்

இவற்றைத் தொடங்கி நடத்துவது இந்நிறுவனத்தின் திட்டங்கள்.

பட்டதாரி உறுப்பினர்கள் 500 பேர் இந்த நிறுவன உதவியுடன் தேநீர்விற்பனை நிலையங்களைத் தொடங்கி நடத்துகின்றனர். 500 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் இதன் தொடர்பாக ரொட்டி போன்ற தின்பண்டங்கள் தயாரிக்கும் 5000 பேருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

பொது மக்களிடம் வசூல் செய்வது இரவு நேர காவல் பணியில் மேலும் ஒரு 500 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இத்திட்டத்துக்கு ஒரு லட்சம் குடிமக்கள் சந்தா செலுத்தி ஆதரவு தருகின்றனர்.

பால்பொருள் உற்பத்தி விற்பனை மூலம் 150 பேர்களும், ரயில்களில் நூல் வாடகைக்குத் தருவதன் வாயிலாக 15 பேரும் ஆக மொத்தம் 15 ஆயிரம் வாலிபர்கள் 'நாசே' நிறுவனத்தினால் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் 300 மேல்நிலைப் பள்ளிகள், 65 கல்லூரிகள் இவற்றில் சிறு தேநீர் கடைகள் தொடங்க தமிழக அரசு அனுமதியளித்துள்ளது. இதனால் 365 பட்டதாரிகளுக்கு நேரடி வேலை வாய்ப்பும், நான்காயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மேலும் ''நாசே'' நிறுவனம் தனது நடவடிக்கைகளைப் பரவலாக்கி அதன் வாயிலாகக் கிராமப் புறங்களிலும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குகிறது.

ரயில்வே நிலையங்களில் தேநீர் கடை வைக்க ரயில்வே நிர்வாகம் அனுமதி அளித்தால், அதன் வாயிலாக ஆறு ஆயிரம் படித்த வாலிபர்களுக்கு நேரடிவேலை வாய்ப்பு கிடைக்கும். 50 ஆயிரம் மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

இதுவரை யாரும் பயன்படுத்தியிராத பல துறைகளை ''நாசே'' பயன்படுத்த எண்ணியுள்ளது. இதன் வாயிலாகப் படித்த வேலையில்லா வாலிபர்களுக்குப் புது நம்பிக்கை ஊட்ட இயலும்.

''நாசே''யின் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கத்தை 9.11.81 அன்று சென்னையில் மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

விழாவில் கூட்டுறவுத்துறை செயலாளர் திரு என். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், கூட்டுறவுத் துறை பதிவாளர் திரு கே. சந்திரசூடன், திரு வெள்ளச்சாமி எம்.எல்.ஏ. அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.எல்.ஏ அவர்கள், 'நாசி' நிறுவனத்தின் தலைவர் திரு ஜே. ராமச்சந்திரன் அவர்கள், செயலாளர் திரு சிதம்பரம் அவர்கள் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நாசேயின் கூட்டுறவு கடன்வழங்கும் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மற்ற ஏழைகளுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும், ஆதரவற்ற மாதர்களுக்கும் கடன் வசதி அளிக்க முன் வந்துள்ளது.

நாசே தற்போது 25 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவர்களில் 10 ஆயிரம் பேர் படித்த பட்டதாரிகள்.

கூட்டுறவுச் சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் அமைப்பை தனக்காகவே நாசே ஏற்படுத்திக் கொண்டுள்ளதன் வாயிலாக சமுதாயத்தின் பலவீனமான பிரிவினருக்கு இன்னும் கூடுதலான பயன் தரும் முறையில் உழைக்க முடியும் என்று ''நாசே'' நிறுவனம் நம்புகிறது.



# சமத்துவச் சித்தன்

## கவியரசர் கண்ணதாசன்

அறநெறி கண்ட அரசியல் வாய்ப்பு
அமைதியோ டார்ந்த அற்புதக் கொள்கைகள்
தந்தவன் ஒருவன்! தாயகத் தலைவன்!
சிந்தனை யாளன்; செயற்கரு ஞாலம்!
விந்தை மனிதன்; வீழ்வார் தாங்கும்
வியன்றோள் மறவன்; வெம்புலி யன்னான்!
சிறகுவி ரித்துத் தேசங்கள் தோறும்
அமைதி வழங்கும் அழகிய வெண்புறா!

கூரிய கண்கள்; குலுங்கும் புன்னகை
சீரிய நெறிகள் சிந்தும் திருமுகம்
மலரினும் மெல்லிய மனத்தன்; பூமியில்
மழையினும் பெரிய வளம்மிக வுடையான்
சமத்துவச் சித்தன்; நம்தலைமுறைப் புத்தன்!

தன்சொல் செஞ்சொல் தனிச்சொல் லுடையான்!
இமய முதற்றே குமரிக் கடல்வரை
இவனல் லாதொரு நாயகன் இலையென
உலகம் வியக்கும் உன்னத மனிதன்!

குழந்தையின் மழலை; கோபமும் கொஞ்சும்!
எழுந்துநின் றானேல் இயற்கையே மயங்கும்
முதலா ளித்துவம் தொழிலா ளித்துவம்
மோதும் உலகில் மூன்றாம் நிலையவன்!

அவன்தலை மைத்தே அமைந்தது பாரதம்!
அவன்செய லாலே அமைந்தது பேரிடம்!

(வானதி பதிப்பக வெளியீடான
கண்ணதாசன் கவிதைகள் 3ம்
தொகுதியிலிருந்து.....)






பாரதியார் நடத்திய ஏடுகளில் சில...



எட்டையபுரம் 'பாரதி மணிமண்டபம்'

# பாரதியின் பெருந்தன்மை

1920-ம் வருஷம் 'சுதேசமித்திர'னில் 'ரெயில்வே ஸ்தானம்' என்றொரு கதையை எழுதினார் பாரதி. ஒருவன் பல மாதரை மணம் புரிந்து கொண்டால், அதனின்றும் அவனுக்கு துன்பம்தான் விளையும் என்பதும், விவாகத்தில் ஒருவன் இன்பம் காண வேண்டினால், அவன் ஒருத்தியை மணந்து கொண்டு, அவளிடம் மாறாத, தீராத உண்மைக்காதல் செலுத்துவதே உபாயமாகுமென்பதும் மேற்படி கதையினால் குறிப்பிடப்படும் உண்மைகளாகும்.

இந்த உண்மைகளை விளக்கும் பொருட்டாக எழுந்த கதையில், முகம்மதியப் பிரபு ஒருவர் சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொண்டதாக எழுதிவிட்டார்.

மேற்படி கதையைப் படித்த பாரதியாரின் முகம்மதிய நண்பரொருவர் அவரைச் சந்தித்து, ''தங்கள் கதையில் ஒரு பிழை இருக்கிறது. ஒரு முகம்மதிய பிரபு மூன்று சகோதரிகளை மணம் செய்ததாக எழுதியிருக்கிறீர்கள். அப்படி சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொள்ளுதல் முகம்மதிய சாஸ்திரப்படி 'ஹராம்' (பாதகம்) ஆகக் கருதப்படுகிறது. தன் மனைவி உயிருடனிருக்கையில், அவளுடன் பிறந்த மற்ற ஸ்திரியை ஒரு முஸ்லீம் மணம் புரிந்து கொள்ளக்கூடாது என்பதே எங்களுடைய சாஸ்திரங்களின் கொள்கை' என்று குறிப்பிட்டார்.

முகம்மதிய நண்பரின் விளக்கத்தைக் கேட்ட பாரதி 'சரிதான் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. மனைவியொருத்தியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் ஹிந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அதுபோல முகம்மதியர்களுக்குள்ளேயே இருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவறாக எழுதி விட்டேன். எனவே அந்தக் கதாநாயகனாகிய முகம்மதியப் பிரபுவுக்கு அவனுடைய சிற்றப்பன்தன் மூன்று குமாரத்திகளையும் மணம்புரிவித்தானென்பதை மாற்றி தன்னினத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் புரிவித்தானென்று திருத்தி வாசிக்கும்படி 'சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதி விடுகிறேன்' என்று பதிலும் சொல்லிவிட்டார்.

நண்பரிடம் கொடுத்த வாக்குப்படி பாரதி ''சுதேசமித்திரன்'' பத்திரிகையில் வெளியிட்ட திருத்தப்பகுதி வருமாறு:

''ரெயில்வே ஸ்தானம்'' என்ற கதையில் நான் மேலே கூறிய சாதாரணத் தவறு புக விட்டது பற்றி பத்திராதிபரும், பத்திரிகை படிப்போரும் என்னைப்பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி நடப்பதை அனுசரித்து, முஸ்லீம்களும் ஏகபத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண்—பெண் சமத்துவம் என்ற கொள்கைகளைப் பற்றி மேன்மை அடைய வேண்டுமென்பது என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும்படி பரமாத்மாவான அல்லா [illegible] அருள் புரிவாராக.'



# அனைத்து நாட்டு குழந்தைகள் திரைப்பட விழா

— வ. சம்பந்தம்

சென்னை மாநகரம் எத்தனையோ விழாக்களைக் கண்டிருக்கிறது; களித்திருக்கிறது. புகழ்க் கிரீடத்தில் புதிய முத்து பதித்தாற் போல் இப்பொழுது இன்னொரு விழா... நவம்பர் திங்கள் 14ஆம் தேதியிலிருந்து 23-ஆம் தேதி வரை சிங்காரச் சென்னையிலே—கலை ரசனை மிகுந்த தமிழகத்தின் தலைநகரிலே இரண்டாவது அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழா நடக்கிறது.

இவ்விழாவிலே இந்தியா உட்பட 30 நாடுகள் பங்கேற்கின்றன. அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், செக்கோஸ்லோவாக்கியா, கனடா முதலிய 30 நாடுகள் பங்கேற்கும் இப்பாங்கான விழா நவம்பர் 14-ஆம் நாள் தொடங்குகிறது.

கார்ட்டூன் படங்கள், கருத்துப்படங்கள், சிறுசிறு துண்டுப் படங்கள் எனப் பல்வகைப் படங்கள் இவ்விழாவில் திரையிடப்படும். 100க்குமேல் படங்கள் திரையிடப்படும்.

இப்பொழுது நடைபெறப் போகும் இத் திரைப்பட விழா மிகப் பெரிய குழந்தைகள் திரைப்பட விழாக்களில் ஒன்றாகும். பாரிஸ், கிஜியான், லாஸ்ஏன்ஜல்ஸ், மாஸ்கோ ஆகிய இடங்களில் நடைபெற்ற பிரம்மாண்டமான குழந்தைகள் திரைப்பட விழாக்களுடன் சென்னையில் நடைபெறும் இவ்விழாவும் ஒப்பிடத்தக்கதான பிரம்மாண்டமான ஒன்று என்ற தனிப் பெருமையினைப் பெற்றுள்ளது.

இத்திரைப்பட விழாவின் நோக்கங்கள் தான் என்ன? சீரிய உன்னத நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது இவ் விழா.

(அ) குழந்தைகளுக்கான திரைப்பட இயக்கத்தை வளர்த்து மேம்பாடு அடையச் செய்வது.

(ஆ) குழந்தைகளுக்கான திரைப் படங்கள் தயாரிக்கும் திரைப்படத் தயாரிப் பாளர்கள் மற்றும் நிறுவனங்களிடையே நெருக்கமான தொடர்பினை, ஒன்றிய உணர்வினை உருவாக்குவது.

(இ) மற்ற நாடுகளில் தயாரிக்கப்படும் குழந்தைகளுக்கான திரைப்படங்களை இந்தியாவுக்கு அறிமுகம் செய்வதுடன், பல்வேறு நாடுகளில் உருவாக்கப்படும் திரைப்படங்களை ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொள்ளச் செய்வது.

இவையே இளைஞர் திரைப்பட விழாவின் சீரிய நோக்கங்களாகும்.

இவ்விழாவினை இந்தியக் குழந்தைகள் திரைப்படங்கள் சங்கம் (CHILDREN'S FILM SOCIETY, INDIA) தமிழக அரசின் ஒத்துழைப்புடன் முன்னின்று நடத்துகிறது. இச்சங்கத்தின் தலைவர் முதுபெரும் திரைப்பட இயக்குநர் திரு வி. சாந்தாராம் அவர்கள் ஆவார்.

இககுழந்தைகள் திரைப்படச் சங்கம் 26 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. இப்பொழுது நடைபெறப்போகும் இத்திரைப்பட விழா இச்சங்கத்தினால் நடத்தப் பெறும் இரண்டாவது அனைத்து நாட்டுத் திரைப்பட விழாவாகும்.

சென்னையில் நடைபெறும் இவ்விழாவின் சிறப்பு அம்சம் என்னவென்றால் இந்தியத் திரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து குழந்தைகள் இவ்விழாவில் பங்கு கொள்வர் என்பதேயாகும். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், யூனியன் பிரதேசத்திலிருந்தும் ஐந்து குழந்தைகளைத் தமிழ்நாடு அரசு இவ்விழா







எட்டையபுரம் 'பாரதி மணிமண்டபம்'

# பாரதியின் பெருந்தன்மை

1920-ம் வருஷம் 'சுதேசமித்திர'னில் 'ரெயில்வே ஸ்தானம்' என்றொரு கதையை எழுதினார் பாரதி. ஒருவன் பல மாதரை மணம் புரிந்து கொண்டால், அதனின்றும் அவனுக்கு துன்பம்தான் விளையும் என்பதும், விவாகத்தில் ஒருவன் இன்பம் காண வேண்டினால், அவன் ஒருத்தியை மணந்து கொண்டு, அவளிடம் மாறாத, தீராத உண்மைக்காதல் செலுத்துவதே உபாயமாகுமென்பதும் மேற்படி கதையினால் குறிப்பிடப்படும் உண்மைகளாகும்.

இந்த உண்மைகளை விளக்கும் பொருட்டாக எழுந்த கதையில், முகம்மதியப் பிரபு ஒருவர் சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொண்டதாக எழுதிவிட்டார்.

மேற்படி கதையைப் படித்த பாரதியாரின் முகம்மதிய நண்பரொருவர் அவரைச் சந்தித்து, ''தங்கள் கதையில் ஒரு பிழை இருக்கிறது. ஒரு முகம்மதிய பிரபு மூன்று சகோதரிகளை மணம் செய்ததாக எழுதியிருக்கிறீர்கள். அப்படி சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொள்ளுதல் முகம்மதிய சாஸ்திரப்படி 'ஹராம்' (பாதகம்)ஆகக் கருதப்படுகிறது. தன் மனைவி உயிருடனிருக்கையில், அவளுடன் பிறந்த மற்ற ஸ்திரியை ஒரு முஸ்லீம் மணம் புரிந்து கொள்ளக்கூடாது என்பதே எங்களுடைய சாஸ்திரங்களின் கொள்கை'என்று குறிப்பிட்டார்.

முகம்மதிய நண்பரின் விளக்கத்தைக் கேட்ட பாரதி 'சரிதான் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. மனைவியொருத்தியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் ஹிந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அதுபோல முகம்மதியர்களுக்குள்ளேயே இருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவறாக எழுதி விட்டேன். எனவே அந்தக் கதாநாயகனாகிய முகம்மதியப் பிரபுவுக்கு அவனுடைய சிற்றப்பன்தன் மூன்று குமாரத்திகளையும் மணம்புரிவித்தானென்பதை மாற்றி தன்னினத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் புரிவித்தானென்று திருத்தி வாசிக்கும்படி 'சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதி விடுகிறேன்'என்று பதிலும் சொல்லிவிட்டார்.

நண்பரிடம் கொடுத்த வாக்குப்படி பாரதி ''சுதேசமித்திரன்'' பத்திரிகையில் வெளியிட்ட திருத்தப்பகுதி வருமாறு:

''ரெயில்வே ஸ்தானம்'' என்ற கதையில் நான் மேலே கூறிய சாதாரணத் தவறு புக விட்டது பற்றி பத்திராதிபரும், பத்திரிகை படிப்போரும் என்னைப்பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி நடப்பதை அனுசரித்து, முஸ்லீம்களும் ஏகபத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண்—பெண் சமத்துவம் என்ற கொள்கைகளைப் பற்றி மேன்மை அடைய' வேண்டுமென்பதே என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும்படி பரமாத்மாவான அல்லா ஹுத்த ஆலா அருள் புரிவாராக.'

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR




# பாரதி-யார்?

பொய்க்குங் கலியைக் கொன்று மெய்க்கும கிருத யுகத்தைப் படைக்க—பண்டைச் சிறுமைகளைப் போக்கிட—புதியஞானம் புதியநெறி, புதிய வாழ்க்கை இவை யாவும் தழைத்தோங்கிட—நேரமெலாம் தமிழ்க்கவி பாடிய சக்திக்கவிஞ.

பக்தியுடன்தொழுது, மாநிலமாந்தர் மனம் வெளுக்க வழிதேடி, தமக்கு உண்மையென்று தெரிந்ததை நாட்டு மக்களுக்கு உரைத்த உண்மைக் கவிஞர்.

''வந்தேமாதரம் என்போம்; எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்'' என்று செவியினிக்கத் தமிழிலே பாடி தேசியத்தை வளர்த்த பாரதக் கவிஞர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உயர் ஞானத்தை நாளெலாம் உணர்த்திப் பாடிய உயர்கவிஞர்.

'நீணிலம் வாழ்பவரெல்லாம் நிகரென்று' முரசு கொட்டிய உலக மகாகவிஞர்

'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி' என்று சமதர்மம் போதித்த புத்துலகக் கவிஞர்

## கவிஞருக்கு ஞாபகச் சின்னம்—

பாரதியார் திருவாக்கு:

தமிழ்நாட்டு வீரருக்கும் கவிகளுக்குப் லோகோபகாரிகளுக்கும் இதுவரை எவ்வித மான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்துச் சக்தி மான்களை வியப்பதும், அவர்களுடையபெருமையை உலகமறிய முழக்குவதும், கூடியவரை பின்பற்ற முயல்வதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கணிப்பார்கள்?

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது; எதனை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும்; பழக்கத்தில் இல்லாத திறமை இழந்துவிடப்படும். அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும் வீரரையும் கொண்டாடாத தேசத்திலே அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப் போகும். தமிழ்நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் தமோ குணம் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## மறந்தது எது?

பாரதியார் வாழ்ந்து வந்த கடையத்தில் நடந்த ஒரு திருமணத்தின்போது தேவகோட்டை வித்துவான் ஒருவர் 'வள்ளி திருமணம்' காலட்சேபம் செய்தார்.

வேடர்கள் தங்கள் பயிர்களை மிருகங்கள் அழித்துப் பாழாக்குவதைத் தடுப்பதற்காகச் சாமிக்குப் பூசை போட்டனர். அவர்களில் ஒருவனுக்குச் சாமி ஆவேசம் வந்து, 'பாக்கும் வச்சான், பழமும் வச்சான்; வெத்திலை வச்சான், போயிலை வச்சான்—ஒண்ணு வைக்க மறந்திட்டான். சுண்ணாம்பில்லே, சுண்ணாம்பில்லே'' என்ற பாட்டைப் பாடுவது வழக்கம். இந்தப் பாட்டைக் கேட்டதும் பாரதியார் 'கொல்' என்று சிரித்தார்.

அருகிலிருந்தவர்கள் 'ஏன் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். ''இந்தப் பாட்டு நமது நாட்டு மக்களுக்கும் ஒருவாறு பொருந்தும்!' என்றார் பாரதி. 'எப்படி?' என்று அவர்கள் திருப்பிக் கேட்டனர். 'தமிழ் மக்களுக்குக் கடவுள் நிலமும் வச்சான், பலமும் வச்சான், நிகரில்லாத செல்வம் வச்சான்—ஒண்ணு வைக்க மறந்திட்டான்; புத்தியில்லே, புத்தியில்லே!' என்றார். நண்பர்கள் விழுந்து சிரித்தார்கள். பாரதியார் சொன்ன உவமை அவர்கள் நெஞ்சை விட்டு அகலவே இல்லை.

—தகவல்: **சீனி விசுவநாதன்.**

# பெண்களுக்கு!

"பெண்களுக்கு மிக முக்கியமானது கற்பு. அதை உயிரைக் காட்டிலும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவது முதற் கடமை. அதற்காகக் கூண்டுக்கிளிபோல் அடைபட்டுக் கிடக்க வேண்டாம்.

உலகத்தில் கணவன் ஒருவன் தவிர பாக்கிப் புருஷர்களெல்லாம் அண்ணன் தம்பிமார்கள். எல்லோருக்கும் பதுங்கி அஞ்ச வேண்டியதில்லை. முக்கியமாகக் கூச்சம்,




வினைக் கண்டு களிக்க அழைத்துள்ளது.

முதுபெரும் படத் தயாரிப்பாளர் திரு எல். வி. பிரசாத் தலைமையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் கொண்ட நடுவர் குழு ஒன்று சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும்.

இரண்டு "தங்க யானைகள்" உட்பட மொத்தம் 14 பரிசுகள் வழங்கப்பட உள்ளன. 9 லிருந்து 15 வயது வரையிலான சிறுவர்களுக்கான சிறந்த திரைப்படத்துக்கு ஒன்றும் 4லிருந்து 8 வயது வரையிலான சிறுவர்களுக்கான சிறந்த திரைப்படத்துக்கு ஒன்றும் என இரண்டு 'தங்க யானைகள்' பரிசுகள் வழங்கப் பெறும்.

இதே போல் சிறந்த காமிராமேன், சிறந்த குழந்தை நடிகர், சிறந்த குழந்தை நடிகை,



நடுவர் சிறப்பு விருது பெறுபவராகியோருக்கும் 'வெள்ளி யானைகள்' பரிசு வழங்கப்படும்.

இன்னொரு சிறப்பு அம்சம், குழந்தைகளே அடங்கிய நடுவர் குழு ஒன்றும் இருக்கும். அவர்கள் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கும் மூன்று படங்களுக்கு 'ஞானதீபம்' அதாவது 'அறிவுச் சுடர்' என்ற விருது வழங்கப்படும்.

சின்னஞ்சிறார்களின் அறிவுச் சுடரைத் தூண்டி நாட்டின் நல்ல குடிமகனாக, எதிர்காலத்தில் நாட்டுக்குப் பயனுள்ள பணி பல புரியும் சீரிய பண்பாளர்களாக அவர்களை உருவாக்குவதில் திரைப்படம் மகத்தான சாதனமாகப் பயன்படவேண்டும். இப்படிப்பட்ட சர்வதேச விழாக்களின் அடிப்படை இலட்சியமே அதுவாகத்தான் இருக்க முடியும். முதுபெரும் இயக்குநர் திரு. சாந்தாராம் அவர்களே குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் தலைவராக இருந்து-இந்தப் பணியை ஆற்றி வருகிறார் என்றால்-நாட்டின் ஒளிவிளக்காய்த் திகழும் நல் மக்களை உருவாக்கிட திரைப்படம் மகத்தானதொரு சாதனம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளெனத் தெளிவாகிறது. பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு கலவாமல்-நல்ல கருத்துக்களைப் பதிய வைக்கும் நல்ல குழந்தைகள் திரைப்படங்கள் எதிர்காலத்தில் மேன்மேலும் உருவாகிடவும்-அப்படி உருவாகியுள்ள திரைப்படங்களைக் கண்டு களிக்கவும்-சிந்திக்கவும்-அதன்படி செயலாற்றவும்-குழந்தைகள் திரைப்படச் சங்கம் முன்னின்று நடத்திடும் அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழா அரியதொரு அடித்தளமாக அமைகிறது - அமையவேண்டும் என வாழ்த்துவோம்!

# தமிழ்நாட்டில் பால் வளர்ச்சி


ஏ. எம். சுவாமிநாதன் இ. ஆ. ப.

பால் பெருக்குத்துறை ஆணையர் மற்றும் நிர்வாக இயக்குநர்.
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை.


1920ம் ஆண்டிலிருந்தே தமிழ்நாட்டில் பால்துறையில் வளர்ச்சிப்பணிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன. கடந்த 60 ஆண்டுக்காலத்தில் பல கூட்டுறவு பால் விநியோகம் செய்யும் ஒன்றியங்களும் 1,000க்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்களும் நிறுவப்பட்டன. தமிழ்நாட்டில் 8 பால் உற்பத்தி கூட்டுறவு ஒன்றியங்களில் பால் பதனிடவும் பால் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1960ம் ஆண்டிலிருந்து பால் கொள்முதல், பால் பதனிடுதல், நகரத்தில் பால் விநியோகம் போன்ற பணிகள் அரசாங்கத்தினராலும் மேற்கொள்ளப்பட்டன. பால் பண்ணைத்தொழில் ஒரு சக்தி வாய்ந்த வளர்ச்சிக்கான சாதனமாகும். பால் உற்பத்தி நகர மக்களுக்கு சத்துள்ள உணவை அளிப்பதாகவும் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்கு நிலையான துணை வருமானத்தை கொடுக்கக் கூடியதாகவும் அமைகிறது.

இந்தியாவின் பால் பெருக்குத்திட்டம் உலகத்திலேயே இத்துறையில் மிகப்பெரிய வளர்ச்சித் திட்டமாக அமைந்துள்ளது. இத்திட்டம் கிராமப்புறங்களிலுள்ள சிறிய உற்பத்தியாளர்களின் முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுகின்றது. இத்திட்டம் உணவு உதவியையும் தொழில் நுட்ப வசதியையும் வளர்ச்சிக்காக நல்ல முறையில் பயன் படுத்துவதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்திட்டம் கிராமப்புறங்களில் பாலை சேகரிப்பது, பதப்படுத்துவது, நகரங்களில் விற்பனை செய்வது போன்ற அம்சங்கள் உள்ளடக்கியுள்ளது. கால்நடைகளை பராமரித்தல், அவற்றுக்கு மருத்துவ வசதிகள் அளித்தல், செய்முறை கருத்தரிக்க ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்படுகின்றன.

பால் பெருக்குத் திட்டம் 1-ஐ நிறைவேற்ற விரைவாக முடிவெடுக்கக்கூடிய ஒரு மாறுபட்ட நிறுவனம் தேவைப்பட்டது. ஆகவே 1972ம் ஆண்டு மே மாதத்தில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஒரு பொது நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, செயல்படத் தொடங்கியது. தமிழ்நாட்டில் 9 (ஒன்பது) மாவட்டங்களில் (செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், பெரியார், கோவை, தருமபுரி நீலகிரி மற்றும் மதுரை) பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. சென்னை மற்றும் மதுரை நகரங்களில் பாலைப் பதப்படுத்துதல் பால் விநியோகம் செய்தல் முதலிய பணிகளை இந்நிறுவனம் நடத்தி வந்தது.

இந்நிறுவனத்தின் சில முக்கியமான சாதனைகள் பின் வருமாறு:—

1972-73ம் ஆண்டில் பால் கொள்முதல் 40,000 லிட்டர்களிலிருந்து 1980-81ல் 3 லட்சம் லிட்டர்களாக உயர்ந்துள்ளது. 1972-73ம் ஆண்டில் பால் விநியோகம் நாளொன்றுக்கு 80,000 லிட்டர்களிலிருந்து 1980-81ல் 3.43 லட்சம் லிட்டர்களாக உயர்ந்துள்ளது. பால் கொள்முதலை அதிகரிக்க வேண்டி கிராமப்புறங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பால் பெருக்குத் திட்டம் செயல்படும் 9 மாவட்டங்களில் 4,500 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.



. பாதவரம் பால் பண்ணையின் திறன் நாளொன்றுக்கு 1.25 லட்சம் லிட்டர்களாக விரிவாக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 2லட்சம் லிட்டர்கள் பதப்படுத்தும் திறனுடன் ஒரு பால் பண்ணை அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. பால் புட்டிகளிலும் பாலிதீன் பைகளிலும் விநியோகம் செய்வதுடன் தானியங்கி இயந்திர மூலமும் சென்னையில் பால் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

. மதுரையில் நாளொன்றுக்கு 1.5 லட்சம் லிட்டர்கள் பதப்படுத்தக்கூடிய திறன் கொண்ட ஒரு பால் பண்ணையும், 1.0 லட்சம் லிட்டர் பாலை, பால் பவுடராக மாற்றும் வசதியுடன் ஒரு ஆலை அமைக்கப் பட்டுள்ளது.

. ஈரோட்டில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் ஒன்றியத்தின் கீழ் ஒரு பால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 1.5 லட்சம் லிட்டர்கள் பாலை பதப்படுத்தக்கூடிய திறன் கொண்ட சமப்படுத்தும் பால் பண்ணையும் நாளொன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பாலை பால் பவுடராக மாற்றும் வசதியும் இப்பண்ணையில் அமைந்துள்ளது. நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு கால்நடைத் தீவன ஆலையும் ஈரோட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாக மற்றும் ஒரு உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணையும் சேலத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழில் நுட்ப உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கால்நடை அபிவிருத்தி மற்றும் கால்நடை மருத்துவ வசதிக்காக இத்திட்டம் அமைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு ஜெர்ஸி பண்ணையும் அமைக்கப்பட்டுள்ளது. உறைவித்து முறை இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது.

பால் பெருக்குத்திட்டம் 1-ஐ 9 மாவட்டங்களில் செயல்படுத்த ரூ. 15 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. இதே போன்ற திட்டங்கள் இதர மாவட்டங்களிலும் பால்வளத் துறையினரால் சற்று சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் எதிர் காலத்தில் பால் வளர்ச்சித் திட்டங்கள் அமைய மூன்று அடுக்குகள் கொண்ட நிறுவனங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளது. கிராம அளவில் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட அளவில் ஒன்றியங்களும் மாநில அளவில் இணையமாகவும் இவ்வடுக்குகள் அமையும். தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் அமைக்கப்பட்டு தமிழ்நாடு பால்வள நிறுவனம் செயல்படுத்திய பணிகள் அனைத்தும் இவ்விணையத்தினால் 1-2-81 முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் மாநில அளவில் ஆறு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன இது போன்ற ஒன்றியங்கள் இதர மாவட்டங்களிலும் அமைப்பதின் மூலம் பால் பெருக்குத் திட்டங்கள் மாவட்ட அளவில் ஒன்றியங்களாலும் மாநில அளவில் இணையத்தின் மூலமும் செயல்பட வழி வகுக்கப்படுகிறது.

முதலாவது பால் பெருக்குத் திட்டம் 31-3-81 அன்று முடிவடைந்தது. இதன் தொடர்ச்சியாக 40 கோடி ரூபாய் நிதி உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் -2. செயல் படுத்த ஆயத்தமாகயுள்ளது. இந்திய பால் பண்ணைக் கழகத்திடமிருந்து நிதி உதவியும் தேசிய பால்வள வாரியத்திடமிருந்து தொழில் நுட்ப வசதியும் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:-

. 1984-85ம் ஆண்டிற்குள் 3,000 கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்கள் 9 மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும்.

. நாளொன்றுக்கு 10.90 லட்சம் லிட்டர்கள் பால் கொள் முதல் செய்யப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. பால் கொள்முதலுக்காக 13 லட்சம் கறவை மாடுகள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும். இதில் 50 சதவிகிதம் செயற்கை முறை கருத்தரித்தல் இத்திட்டத்தின் கீழ் அமையும்.

50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகர்ங்களில் பாலும், பால் பொருட்களும் நுகர்வோர் பயனடையும் விதத்தில் நேரடி விநியோக முறையில் அமைக்கப்படும். இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேற கூடுதலான பால் கொள்முதல் செய்வதற்கும் சமப்படுத்துவதற்கும் போதுமான வசதிகள் அமைக்கப்படும்.

இவ்வாறாக . தமிழ்நாட்டில் பால்வளத்துறையின் முன்னேற்றத்திற்கும் கிராமப் பொருளாதார மேம் பாட்டிற்கும் ஏழை விவசாயங்களின் ஏற்றத்திற்குமாகப் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசினரால் வகுக்கப்பட்டு நல்லமுறையில் நிறைவேற்றப் படுகின்றன.

## வேரிலும் சிற்பம் செய்யும் கலைஞர்கள்!

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் உள்ள சிற்பக்கலைஞர்கள், மரத்தில் அற்புதமான பேசும் சிற்பங்களைச் செய்வதோடு, வெள்ளெருக்கஞ்செடி வேரில் ஓர் அங்குலத்தில் விநாயகர் போன்ற சிற்பங்களை அழகிய வேலைப்பாட்டுடன் செய்கிறார்கள்.

பூசைக்கான இந்த அழகுச் சிற்பங்கள், நம்மோடு மௌன மொழியில் பேசி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

பாபநாசத்தைச் சேர்ந்த சிற்பிகள் சீனிவாச ஆச்சாரி (தேசிய விருது பெற்றவர்), சில்பி சாட்சிநாதன், ஏகாம்பரம், திருப்பாலைத்துறை சில்பி நெல்லையப்பர் ஆகியோர் இந்தக் கலையில் ஆற்றல் பெற்று ஈடில்லாத சிற்பங்களைச் செய்து தருகின்றனர்.

அன்னிய நாட்டுக் கலை மோகத்துக்கும் இந்த வேர்ச்சிற்பங்கள் பெரும் தூண்டுகோலாக இருக்கின்றன. அகில இந்தியக் கைத்தொழில் வாரியமும், தமிழகத்தின் பூம்புகார் நிறுவனமும் இதற்கு ஆதரவு திரட்டியுள்ளன.

தகவல்: கலாநிதி, பாபநாசம்



# நல்லது செய்வோம் நாம்!

— மாமூலன் —

"நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை-வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு"

என்று செந்தமிழ் நாட்டின் எல்லைகளைப் பாடிய கவியரசர் பாரதியாரின் நூற்றாண்டு விழா அடுத்த திங்களில் தொடங்கவிருக்கிறது. அன்று கவியரசர் தமிழ்நாட்டின் வடஎல்லையாக மாலவன் குன்றத்தைக் கூறினார். ஆனால் இன்றைய தமிழ்மாநிலத்தின் வட எல்லையாக வேலவன் குன்றம்தான் அமைந்துள்ளது. இந்நிலையும் மொழிவழி மாநிலம் அமைந்த பிறகே வந்தது.

நாட்டு விடுதலைக்குப் பின் மொழிவழி மாநிலமாகத் தமிழ்மாநிலம் 1956ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாள் அமைக்கப்பட்டது. தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளிவிழா ஆண்டைத் தமிழ்நாடு அரசு சென்னைக் கலைவாணர் அரங்கில் நவம்பர் முதல் நாளன்று சிறப்புடன் கொண்டாடியது.

விழாவின் தொடக்க நிகழ்ச்சியாக அமைந்த 'நாயன இசை விருந்து' எல்லாரையும் இசை வெள்ளத்தில் மிதக்க வைத்தது.

திருப்பாம்புரம் டி. கே. எஸ். சுவாமிநாதன், டி. கே. எஸ். மீனாட்சி சுந்தரம் ஆகியோரது நாதஸ்வரமும், திரு. நாகேஸ்வரம் டி. ஆர். கோவிந்தராஜு, டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோரது தவிலும், அத்துவாரமங்கலம் ஏ. கே. பழனிவேல் [illegible] [illegible] தொடக்கத்தை மிக இனிமையாக்கியது.

வரவேற்புரையின் போது....

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். அமைச்சர் தமது வரவேற்பு உரை நிகழ்த்திய பொழுது, நாடு விடுதலை அடைந்தபிறகு பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தைப் பற்றி எடுத்துக்கூறிய பொழுது பழைய சென்னை மாகாண தேசப்படம் ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவிட்டு பிரகாசித்தது.

1.10.1953 அன்று அமைக்கப்பட்ட ஆந்திர மாநிலம் பிரிந்தபிறகு அமைந்திருந்த சென்னை மாநிலம் பற்றி எடுத்துக்கூறிய பொழுது அப்போதைய சென்னை மாநில தேசப்படம் ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவிட்டு பிரகாசித்தது.

மாநில சீரமைப்புக் குழுவின் அறிக்கைக்குப் பின்னர் மொழிவழி மாநிலமாக அமைக்கப்பட்ட சென்னை மாநிலத்தைக் குறிப்பிட்ட பொழுது மொழிவழி மாநிலமாகக் கன்னியாகுமரி மாவட்டமும் செங்கோட்டை பகுதியும் தாய்தமிழகத்துடன் 1956 நவம்பர் முதல் நாள் இணைந்த புதிய தமிழ் மாநிலத்தின் தேசப்படம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

1.4.1960 அன்று சென்னை மா[illegible] தின் வடக்கு எல்லையாக இருந்த [illegible] தமிழ்நாட்டு[illegible] [illegible] அமைந்த சென்னை [illegible]

வெட்கப் [illegible] அகங்காரமாய் [illegible] நீ பேசுவதை [illegible] [illegible] முதல் [illegible] அதுவும் [illegible] [illegible] எல்லாரும் [illegible] இருக்கிறார்கள்.

நீங்கள் தைரியமாக இருக்கவேண்டும். உங்கள் வயிற்றில் பிறக்கிற குழந்தைகள் தைரியமாக இருக்கும். [illegible] இந்தியாவின் மேன்மையை நாசம் செய்து விட்டது. அதேபோல் [illegible] செய்தது.

''நீ புத்தகத்திற்குப் [illegible] அதிகமாக இருக்க [illegible] கேட்காதே. பிறர் குற்றங்களை உற்றுப் பார்க்காதே; மனத்தில் உள்ளதை [illegible] சொல்லிவிடு. மனத்தில் வைத்து [illegible] வாயால் சொல்லி விடுவது நல்லது. உன்னால் முடிந்த அளவு அவர்கள் [illegible]. உன்னால் முடியாவிட்டால் விஷயத்தைச் சுத்தமாகச் சொல்லிவிடு. மறைக்காதே! அதில் நன்மை உண்டு.

உன்னை விலை கொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றாக விளங்க வைத்து விருந்து செய்யப் போகிறாய். அந்த வீட்டில் உனக்குப் பூரண உரிமை உண்டு. பணம் காசு விஷயங்களில் ஆசைப்படாதே. அதைப் பெரியவர்களுக்கு விட்டுவிடு. வேலை செய்யப் பின் வாங்காதே. சக்தி மீறிச் செய்யாதே! செய்வதை உன் மனம் ஒப்பச் செய். படிப்பை விடாதே. உன் தாய் தகப்பனார் என்னவோ கஷ்டப்பட்டு [illegible] அதுபோல விஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பழுத்தால் அபிவிருத்தி செய்; பழுயாவிட்டால் இருப்பதை மறக்காதே.

''நான் உன்னைப் போல் ஆறு [illegible] போதிக்கமாட்டேன். உலகத்தில் பிறந்து எல்லா கஷ்டங்களையும் அநுபவித்து, உலகத்திற்கு உபகாரியாக வாழ வேணும். இந்த வெள்ளம் [illegible] கடமை யாவும் என்பது என் எண்ணத்திற்கு தோன்றுகிறது.

நீ இரண்டு வீட்டுக்கும் விளக்கைப்போல் பிரகாசிக்க வேண்டும். இரண்டு குடும்ப வாழ்க்கைக்கும் [illegible] இருக்கும். பழமையின் வழக்கமாய் வீட்டில் கேவலம் அடிமைத் தனத்திற்கு ஒத்துக் கொள்ளாதே. உனக்கு உரிமை உண்டு; பக்தி உண்டு. ஸ்வதந்திரம் உண்டு. தலைநிமிர்ந்து நட. உன் இருபுறமும் உள்ள இயற்கையைக் கண்குளிரப் பார். நேர்ப் பார்வையில் பார், கடைக்கண் பார்வையில் பார்க்கத் தகுந்தவன் கணவன் ஒருவனே. தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் முதலியோரை நேராக நிமிர்ந்து பார். இவர்களைக் கடைக் கண்ணால் பார்க்காதே. நிமிர்ந்து [illegible]. [illegible] தைரியமாய்ப் போ. இதில் கற்பு கெடுவதில்லை. [illegible] அவசியம் இல்லை!''

(திருமதி யதுகிரி அம்மாளுக்குப் பாரதி சொன்ன புத்திமதிகள். ஆதாரம்: பாரதி நினைவுகள்—திருமதி யதுகிரி அம்மாள்.)

# நேசம் மறக்காத நெஞ்சம்

—தீரர் சத்தியமூர்த்தி



ஸ்ரீ பாரதியாரின் தமிழ்ப் பாடல்கள் எளிய நடையில் இயற்றப்பட்டு மனதை மிகவும் உருகச் செய்துவிடும் தன்மையுடையன. ஆயினும் எவ்வளவு பிரபல்யம் அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு அவருடைய கவிகள் பிரசித்தியடையவில்லை. ஆனால், அக்கவிகளை எங்கு பாடிய போதிலும் ஒரு மாயசக்தி அதில் மறைந்து கிடத்தல் புலப்படாமற் போகாது. இதை நான் அநுபவத்திற் கண்டிருக்கிறேன்.

* * *

ஒரு கவியின் மனத்தே உதயமாகிற வெளிவரும் விஷயம் எப்போதுமே லாயமான் யமா யிராது. ஸ்ரீ பாரதியார் போன்றவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால் ஆண்மனைக் கவியாக அவர் கொண்டாடப்பட்டிருப்பார். சுயேட்சை அடைந்த எந்த நாட்டிலாவது அவர் ஜனித்திருப்பாராகில், இவ்வளவு பால் யத்தில் மாண்டிருக்க மாட்டார். தேச பாஷைக்கும், தாம் பிறந்த ஜாதிக்கும் ஒரு மஹத்தான செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பார்.

பங்காள ஸ்ரேஷ்டர் ரவீந்திர நாதருக்கு அவர் சமமானவர். நான் மிக படப் பேசுவதாக நினைக்கக் கூடாது. ஸ்ரீ பாரதியாரை அறிந்தவர்களுக்கே நான் சொல்வதன் உண்மை செம்மையாகப் புலப்படும். தமது ஆயுள் காலத்தில் பெரும் பாகத்தை அவர் வனவாசத்தில் செலவழித்து விட்டார். தமிழ்நாட்டில் பிறந்து, படாத கஷ்டங்கள் எல்லாம் பட்டு இளவயதிலேயே அவர் இறந்து போய்விட்டார். ஆயினும் சுடுகளவாவது இத்தமிழ் நாட்டுக்குத் தேசாபிமானம் இருக்குமளவும், தமிழ் பாஷை இந்நாட்டை விட்டு மறையாதிருக்கும் வரையிலும் ஸ்ரீ பாரதியாரின் ஞாபகம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

# மகாத்மாவும்-மகாகவியும்!



1919-ம் வருடம் அண்ணல் காந்தியடிகள் சென்னை வந்திருந்த சமயம் திரு ஜி. ஏ. நடேசன் அவர்களது சகோதரர் திரு ஜி.வி. கல்யாணம் அவர்களது இல்லத்தில் அண்ணல் தங்கியிருந்தார்.

ஒருநாள் பகல் இரண்டு மணி இருக்கும். காந்திஜி ஒரு கட்டிலில் மெத்தையில் சாய்ந்திருந்தவண்ணம் தம் காரியதரிசி மகாதேவ தேசாய்க்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். சேலம் பாரிஸ்டர் ஆதி நாராயண செட்டியார் குடகுக் கிச்சலிப் பழங்களை உரித்துப் பிழிந்து காந்திஜி அருந்துவதற்காகப் பழரசம் தயாரித்துக் கொண்டிருந்தார். அறையில் ஒரு பக்கம் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், எஸ். சத்தியமூர்த்தியும் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள். எதிரே ராஜாஜியும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்தனர். அறையின் வாயில் காப்போனாக வ. ரா. நின்றுகொண்டிருந்தார். யாரையும் உள்ளே விட வேண்டாமென்று கண்டிப்பான உத்தரவு. அச்சமயம் பாரதி அங்கு வந்தார். புதுவையில் தமக்கு அறிமுகமான வ. ரா. அங்கு நிற்பதைக் கண்டு ''என்ன ஓய்'', என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் நுழைந்து விட்டார்.

பாரதி நேரே காந்தியடிகளை வணங்கி விட்டு அவர் பக்கத்தில், மெத்தையில் உட்கார்ந்துவிட்டார். ''மிஸ்டர் காந்தி! இன்று மாலை ஐந்தரை மணிக்குத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப் போகிறேன். அக்கூட்டத்திற்குத் தாங்கள் தலைமை வகிக்கமுடியுமா?'' என்று கேட்டார்.

அன்று மாலை தமக்கு என்ன அலுவல் என்று காந்தியடிகள் மகாதேவ தேசாயைக் கேட்டார். வேறு ஒரு அலுவல் இருந்தது.

''இன்றைக்கு நான் வர இயலாது. தங்கள் கூட்டத்தை நாளைக்கு ஒத்திப் போட முடியுமா? என்றார் காந்தியடிகள்.

'முடியாது. நான் போய் வருகிறேன். மிஸ்டர் காந்தி, தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்.' என்று சொல்லிவிட்டு பாரதி வெளியே போய்விட்டார்.

பாரதி போனதும், காந்தியடிகள் 'இவர் யார்?' எனறு வினவினார். யாரும் பதில் சொல்லவில்லை. இராஜகோபாலாச்சாரியார்தான், 'இவர் எங்கள் தமிழ்நாட்டுத் தேசியக் கவி' என்று அழகுற சொன்னார்.

இதைக்கேட்ட காந்தியடிகள், 'இவரைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டில் எவருமில்லையா?' என்றாராம்.



டியைச் சேர்ந்த பலரும் இதற்கான போராட்டங்களில் ஈடுபட்டு கைதாகினர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த தியாகிகளுக்கு நாஞ்சில் எல்லையில் மார்த்தாண்டத்திலோ-ஆரல்வாய் மொழியிலோ தமிழ்நாடு அரசு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்.

**குமரி அனந்தன், எம்.எல்.ஏ.**

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டும் என்பதற்காகப் போராடிய பெரியவர்கள் எல்லாம் மேடையின் பின்னால் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் போராடிய பொழுது இளைஞர்களாக இருந்த என்போன்றவர்கள் மேடையின் முன் பகுதியில் அமர்ந்திருக்கின்றோம்.

மலர் மாலையை எடுத்துவர மேலே சுற்றிவரும் இலை மேல் பகுதியில் தான் இருக்கும்.மலர்மாலை போன்ற அவர்களைச் சுற்றி வந்த இலையாக நாங்கள் இருக்கிறோம்.

மாலைதான் கழுத்தில் விழும். காலடியில் தான் இலை கிடக்கும். தியாகத்திரு உருவங்களான அவர்கள் என்றும் போற்றுதலுக்கு உரியவர்களாக விளங்குகிறார்கள்.

தியாகத்தை மதிக்கும் நமது அரசு வாஞ்சியின் பெயரை நிலைநிறுத்த பாடுபடுவதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லைப் போராட்டத் தியாகிகளின் தேவை அறிந்து தமிழக அரசும் நமது முதல்வரும் உதவி செய்வார்கள் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

**நாவலர்:.**

மாண்பு மிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

நமது தமிழ் மாநிலம் சென்னை ராஜதானியாக இருந்தது முதல் [illegible] அது



சென்னை மாநிலமாக ஆகியது இரண்டாவது கட்டம். தமிழ்நாடு என்று மாற்றப்பட்டது மூன்றாவது கட்டம்.

47-வது ஆண்டு வழிகாட்டியது, 56ஆம் ஆண்டுக்கு, 56-ஆம் ஆண்டு வழி காட்டியது.

68-ஆம் ஆண்டுக்கு.68-ஆம் ஆண்டு வழிகாட்டியது, 81-ஆம் ஆண்டுக்கு. அரிமா நோக்கு என்பார்கள். இலக்கியத்தில் சிங்கம் ஓரிடத்தில் நின்று வந்த வழியைத் திரும்பிப் பார்க்கும் பின்பு செல்லும் வழியை எம்பிப் பார்க்கும் என்பார்கள். அந்த வகையில்தான் வெள்ளி விழா கொண்டாட்டம் நமக்குப் பயன்படுகிறது.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே'' என்று 60 ஆண்டுகளுக்கு முன்பு பாரதி பாடியிருக்கிறார்.

தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமா என்று கேட்டவர்களும் இருக்கிறார்கள்.

ராஜ்ய சபையில் அண்ணா இருந்தார். அப்போது புபேஷ்குப்தா ''சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர்வைக்கத் தனிநபர் தீர்மானம் கொடுத்து அது விவாதத்திற்கு வந்தபோது, அண்ணாவிடம் தனி நபர் தீர்மானம் கொடுத்து விவாதத்திற்கு வந்துவிட்டது. நீங்கள் உடனிருந்து எடுத்துக் கூறுங்கள்'' என்றார். மாநிலங்களவையில் அண்ணா அவர்கள் பேசியபோது சிலர் 'பெயர் வைப்பதில் என்ன இருக்கிறது' என்றார்கள். அப்போது அண்ணா அவர்கள், ''இந்தியாவை பாரதமாகவும், நாடாளுமன்றத்தை லோக் சபா வா கவும், கவுன்சிலை ராஜ்யசபாவாகவும் மாற்றுவதில் உங்களுக்கு என்ன மகிழ்ச்சி இருக்கிறதோ அதுபோல தமிழ்நாடு என மாற்றுவதிலே இருக்கிறது'' என்றார்.

உங்களுக்கு ஆதரவில்லை என்றார்கள். ''அதனால் தான் நான் இங்கே வந்து விவாதித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் அண்ணா.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றும் தமிழ் என்ற நிலை உருவாகவேண்டும் என்றார் அண்ணா. இதை சொல்வதற்குக் காரணம் தமிழிலே அறிவு பெற வேண்டும் என்பதற்சாகத் தானே தவிர தமிழைப் புதிதாக வளர்க்க வேண்டும் என்பதற்காக அல்ல. தமிழ் வளரவேண்டிய வகையில் வளர்ந்திருக்கிறது. இன்றைய தமிழகத்தை உருவாக்கப் பொருளை உடைமையை உயிரை ஈந்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

கோபுரம் எழுந்த பிறகு அடித்தளமாகப் பயன்பட்ட பாறாங்கல் தெரியாது. அதன் பின்பு எழுப்பப்பட்ட கற்கள் தான் தெரியும். கோபுரத்தில் கடைசியாக உட்காருவதுதான் கலசம். எல்லோரும் அதைத் தான் பார்ப்பார்கள். அதற்கு காரணமாக இருந்தது பாறாங்கல்தான்.

கும்பாபிஷேகம் என்பார்களே [illegible] கோபுர அபிஷேகம் என்று சொல்லிவில்லை. ஆகவே எதற்கும் அடிப்படையாக இருந்தவர்கள் வெளியே தெரிவதில்லை. [illegible]

இல்லாமல் சொல் இல்லை; செயல் இல்லை. அதைத் தூண்டுபவர்கள்தான் அடிப்படையாக அமைகிறார்கள். நாம் செல்ல வேண்டிய வழியைப் பார்த்து முழுவெற்றி பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

திருத்தணியைத் தமிழகத்தில் சேர்ப்பதா ஆரணியாற்றைச் சேர்ப்பதா என்ற கருத்து வேறுபாடு வந்தபோது அண்ணா சொன்னார். ஆரணியாறு வந்தால் யாருக்கும் தெரியாது. திருத்தணி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. திருத்தணி, வடஆர்க்காடு மாவட்டத்தில்தான் இருந்தது. வெள்ளையர்கள் பிரித்து சித்தூரில் சேர்த்து விட்டார்கள். ஆகவே திருத்தணியைத்தான் தமிழகத்தில் சேர்க்க வேண்டும். அதை சேர்த்து வரலாற்று புகழை காப்பாற்ற வேண்டும்'' என்றார்.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவர் வாக்குப்படி தமிழ் மாநிலத்திற்குப் பாடுபட்ட அத்தனை பேருக்கும் வணக்கம் செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் நமது முதல்வர் இந்த விழாவை எடுத்திருக்கிறார். இதனால் கிடைக்கும் பாராட்டு இந்தக்கொள்கைகளைத் தந்த அண்ணாவுக்குத்தான். அண்ணாவின் கொள்கைகளால் நாங்கள் வேறுபாடு இல்லாமல் நடுநிலையோடு செயல்பட முடிகிறது.

**சிலம்புச் செல்வர் :**

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் போராட்டத் தலைவர்களின் சார்பில் பதிலுரை நிகழ்த்தி ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:—

வடக்கு எல்லைகளுக்காக மட்டும் நான் போராடியதாகப் பலர் நினைக்கிறார்கள், தாய்த்தமிழகத்துடன் குமரி மாவட்டம் சேரவும் நான் போராடினேன்.

அன்றைய திருவிதாங்கூர் கொச்சி அரசு நான் கன்னியாகுமரிப் பகுதியில் நுழையும் பொழுதே கைது செய்ய முயற்சி எடுத்தது. அந்தப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் சேரவேண்டும் என்ற அங்குள்ள தமிழர்களின் துடிப்பை ஒவ்வொரு பகுதிக்கும் நேரிலேயே சென்று அறிந்து கொண்டேன்.

இவ்வளவு பாடுபட்டும் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் சேரும் விழாவில் நான் கலந்து கொள்ள கொடுத்து வைக்கவில்லை. அன்று முதல்வராக இருந்தவர் நான் அவ்விழாவில் கலந்து கொள்வதை விரும்பவில்லை. ஆனால் அதன் வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளும் பேற்றினைப் பெற்றிருக்கின்றேன். 'தர்மம் வெல்லும், உழைப்பு வீண் போவதில்லை' என்பதையே இது காட்டுகிறது.

இப்போராட்டத்திற்கு உதவிய கலைவாணர் என்.எஸ்.கே. கவிமணி, தேசிய விநாயகம் பிள்ளை போன்ற பலரும் இந்த நேரத்தில் நினைவுக்கு வரவேண்டியவர்கள். வடக்கு எல்லைப் போராட்டத்திலும் குமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் சேர்ப்பாடுபட்ட அனைவருக்கும் இன்று சிறப்பு செய்யப்படவில்லை. இப்போராட்டங்களில் [illegible]

தியாகிகளைப் பாராட்டும் வகையில் திருத்தணியிலும் குமரி மாவட்டத்திலும் தனியாக அரசு விழா எடுக்கும்.

இந்த நேரத்தில் சென்னை மாநகரத்தினை தங்கள் மாநிலத்தின் தலைநகராக வைத்துக்கொள்ள ஆந்திரர்கள் முயன்ற பொழுது அது தமிழ்நாட்டின் தலைநகராக இருக்கப் பாடுபட்ட பெருமை மூதறிஞர் ராஜாஜியைச் சேரும். அவர்களையும் இந் நாளில் நினைவு கூர்வோம்.

தமிழ்நாடு பெயர் சூட்டும் விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்து கொண்டேன். தமிழ்நாடு மாநிலம் மொழிவழியாகப் பிரிய பாடுபட்ட அனைவரையும் பாராட்டும் இந்த அரசை நன்றியுடன் போற்றுகின்றேன்.

**மாண்புமிகு முதல்வர்**

வெள்ளிவிழா நிறைவுரையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றினார்கள். அவர்கள் உரையில் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

'எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தவர்கள்கூட சுதந்திரப் போராட்டக் காலத்தில் வெள்ளையனே வெளியேறு, என்று குரல் கொடுத்தனர்.

மகாத்மா காந்தி கூட இந்தியா வேண்டுமா இந்துஸ்தான் வேண்டுமா என்பதனை விட வெள்ளையன் வெளியேற வேண்டும் என்பதே முக்கியம் என்றார்.

அந்த உணர்வு-அடிமை உணர்வு கூடாது என்பது தமிழர்களுக்கு ஆக்கத்தைக் கொடுத்தது. சகோதரர்களால் ஏற்படுகிற எதிர்ப்பு, தாக்குதல், இழிவு ஆகியவை தாங்கிக்கொள்ள முடியாது.

மற்றவர்கள் ஒன்றாகி விடுகிறார்கள். நம்மவர்களால் ஒன்றாக முடிவதில்லை என்றார் ம.பொ.சி. காரணம் நம்மவர்களுக்குச் செயலும் அறிவும் அதிகம். அதனால்தான் ஒன்றாக முடிவதில்லை, ஆனால் கடைசியில் அதுவே நன்மையாக முடியும்.

இங்கே வந்திருக்கும் தியாகிகளுக்கு விருது வழங்குகிறோம். அது அவர்களுக்குப் போதுமா என்று கருதலாம். ஒரு மனிதனுக்கு ஒருவேளை உணவு கொடுத்து திருப்தி படுத்தலாம். அது ஜீரணமாகி விட்டால் பிறகும் மீண்டும் தரவேண்டும்.

விருது வழங்குவது அவர்கள் மன திருப்திக்குத்தான். அதற்கு மேல் எதைக் கொடுத்தாலும் அது விலை பேசுவதாகும். தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொண்டவர்களுக்கு எதைக் கொடுத்தாலும் ஈடாகாது. விருது அளிக்கும் போது சொல்கிறேன். அவர்கள் குடும்பங்களுக்கு ஏதாவது தேவை என்றால் தமிழக அரசு உதவும்.

எல்லைப் போராட்டத்தில் [illegible] 11 தியாகிகள் குடும்பத்திற்கு [illegible] ரம் ரூபாய் அளிக்கப்படும். [illegible] உதவிப்பணம் [illegible] போராட்டத்தின் [illegible]



மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுமேடையில் பிரகாசித்தது.

இப்படி அமைச்சரின் பேச்சின்பொழுது மேடையில் மொழிவழி மாநிலம் அமைந்த முறை, ஒளிவிளக்குகளால் வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் வகையில் தேசப்படங்கள் வைக்கப்பட்டிருந்த விதம் விழாவுக்கு மேலும் சிறப்பூட்டியது.

''மொழிவழி மாநிலமாகச் சென்னை மாநிலம் அமைக்கப்பட்டாலும், அப்பொழுது அது தமிழ்நாடு எனும்பெயரைப்பெற்றிருக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு தான் தமிழ்மாநிலம், 'தமிழ்நாடு' என்னும் பெயரைப் பெற்றது. இந்நிகழ்ச்சியை எடுத்துரைத்த அமைச்சர் அவர்கள் 1968 டிசம்பர் முதல் நாள் தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியதை அண்ணாவின் குரலிலேயே கேளுங்கள்'' என்றதும் 'டேப்' செய்யப்பட்டிருந்த அண்ணாவின் உரை ஒலிபரப்பாகியது.

தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையை எதிர்பாராத விதமாக கேட்டது, விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது.

மகிழ்ச்சியான விழா - உணர்ச்சிப் பெருக்குடன் நிகழ்ந்தது. விழாவுக்கு மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் தலைமை வகித்தார். வெள்ளி விழா புகைப்படக் கண்காட்சியை, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார்.

மறைந்த போராட்டத் தலைவர்களின் படங்களை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி. ஆர். அவர்கள் மூதறிஞர் ராஜாஜி பெருந்தலைவர் காமராஜ், பேரறிஞர் அண்ணா ஆகிய முன்னாள் முதலமைச்சர்களின் திருஉருவப் படங்களைத் திறந்து வைத்தார்கள்.



**தலைவர் தமது உரையில்**

விழாத் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளி விழாவை கொண்டாடுவது பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும். இப்படியொரு மாநிலம் அமைய பல கட்டங்களில் போராடவேண்டிய நிலை தமிழ்நாட்டில் தான் ஏற்பட்டது. நமக்குள்ள சாபக்கேடு தமிழ்நாட்டில் தான் தமிழ்மொழியில் பாடவேண்டும் என்பதற்கு ஓர் இயக்கம் தேவைப்பட்டது. அதற்காகப் போராட வேண்டியிருந்தது.

'தமிழ்நாடு' என்ற பெயரை வைக்க வேண்டும் என்பதற்காக உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த தியாகச் செம்மல் சங்கரலிங்கனார் அவர்கள் உண்ணா நோன்பிருந்து உடல்நலம் கெட்டிருந்தபொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்று பார்த்தார்கள். அப்பொழுது சங்கரலிங்கனார் அவர்கள் ''உங்களைத்தான் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

சங்கரலிங்கனார் நம்பியவாறே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரானவுடன் சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயரை வைத்தார்கள்.

தமிழ்ப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேரப்பாடுபட்ட அனைவரையும் இந்த நேரத்தில் நினைவுகூர்வோம். தமிழ்ப் பேசும் பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேரவேண்டும் என்பதற்காக அனைத்துக் கட்சிகளும் தமிழவேள் பி.டி. ராசன் அவர்கள் தலைமையில் 1956 பிப்ரவரி 20ஆம் நாள் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் அனைவருடைய தொண்டுகளையும் இந்தநாளில் நினைவு கூர்வோம்.''

**பி. முகமது இஸ்மாயில், எம்.எல்.ஏ.**

ஜனதா கட்சித் தலைவர் முகமது இஸ்மாயில் எம்.எல்.ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''தமிழ்நாட்டுக்கு எல்லை வடித்துத் தந்தவர்கள்-புதிய வடிவத்தை அளித்தவர் அனைவரும் நம் பாராட்டுக்குரியவர்கள். கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்ததால் அந்த மாவட்டத்து இளைஞர்கள் அனைவருக்கும் தாய்த் தமிழகத்தில் வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன.

குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பாடுபட்ட நேசமணி அவர்களின் பெயரைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க முடிவெடுத்துள்ள தமிழ்நாடு அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

**தி. சு. கிள்ளிவளவன்**

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தி.சு. கிள்ளிவளவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது.—

''ஆண்டுதோறும் மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்ட நாளை அண்டை மாநிலங்கள் கொண்டாடுகின்றன. அதுபோன்று நமது மாநில அரசும் கொண்டாட வேண்டும்.

1955ஆம் ஆண்டு நவம்பர் 21, 22, 23 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சீரமைப்புக்குழு அறிக்கைப் பற்றிய விவாதம் நடைபெற்றது. அப்பொழுது தமிழ்நாட்டின் பல்வேறு கட்சித் தலைவர்கள் ஆற்றிய உரைகளைப் படிக்கும்தோறும் நாம் புதிய உணர்ச்சிகளைப் பெறுகிறோம்.

**கே.எஸ்.ஜி. ஹாஜா செரீப், எம்.எல்.ஏ.**

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.எஸ்.ஜி. ஹாஜா ஷெரீப் எம்.எல்.ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மொழிவழி மாநிலம் அமைந்த நிகழ்ச்சியை மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மொழிவழி மாநிலம் அமைந்த பிறகு ஐந்தாண்டுத் திட்டங்களால் நம் நாடு இப்பொழுது மாபெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டமாக வகுத்திருக்கிறோம். இதனால் நம்நாடு மாபெரும் வளர்ச்சி அடையும்.

**எஸ். கே. பாலசுப்பிரமணியம்**

தமிழரசுக் கழகப் பொதுச் செயலாளர் எஸ்.கே. பாலசுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''காந்தியடிகள் ஒவ்வொரு காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்திலும் மொழிவழி மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள். ஆனால் நாடு விடுதலைஅடைந்த பிறகு மொழிவழி மாநிலம் அமைப்பதில் பல தடங்கல்கள் ஏற்பட்டன.

பலருடைய தியாகங்களுக்குப் பிறகு மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. தியாகத்தை மதிக்கும் நமது அரசு அப்போராட்டங்களில் ஈடுபட்டுள்ள தியாகிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும். நம் முதல்வர் அவர்கள் செய்வார்கள் என்று நாம் நம்பலாம்.

**செங்கம் ஜபார்—**

முற்போக்கு முஸ்லீம் கட்சியைச்சேர்ந்த செங்கம் ஜபார் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''நமது உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இந்த விழா அமைந்துள்ளது. நம்முடைய மாநில அரசு தியாகத்தைப் போற்றும் அரசு. எனவே அரசு எடுக்கும் இந்த விழாவினால் தியாகிகள் மதிக்கப்படுகிறார்கள். தியாகிகளுக்குத் தேவையான உதவிகளை நம் முதல்வர் அவர்கள் கண்டிப்பாக செய்வார்கள்; செய்துவருகிறார்கள்.

**ஜி. மூர்த்தி, எம்.எல்.ஏ.**

குடியரசுக் கட்சியைச்சவாய் சேர்ந்த ஜி. மூர்த்திஎம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

தமிழக அரசு தியாகத்தை மதிக்கும் அரசு என்பதை இவ்விழா காட்டிக் கொண்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தியாகத்தை மதிப்பவர். எனவே, எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டத் தியாகிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.



**பி. எச். பாண்டியன்:**

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் பி. எச். பாண்டியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''25 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரத்திற்காகப் போராடவேண்டிய நிலை இருந்தது. மொழிவழி மாநிலம் அமைவதற்காக பல போராட்டங்களைச் சந்தித்து வெற்றி பெற்றிருக்கின்றோம். ரூ. 6 அல்லது ரூ.7 கோடி செலவில் புதியதாகக் கட்டவிருக்கும் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கட்டடத்தை தமிழகத்தின் மையப் பகுதியில் கட்டுவதற்கு உரிய இடத்தை முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**என். வரதராசன், எம்.எல்.ஏ.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த என். வரதராசன் எம்.எல்.ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நாடு விடுதலை அடைந்த பிறகு மொழி வழி மாநிலம் அமைக்கப்பட்ட பிறகும் அதற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட நமக்குள்ளேயே போராட வேண்டியிருந்தது. இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் மொழிவாரி மாநில அமைப்பினால் பல நன்மைகள் நாம் அடைந்திருக்கிறோம்.

**கே. சட்டநாதக்கரையாளர், எம்.எல்.ஏ.**

லோக்தளம் கட்சியைச் சேர்ந்த கே. சட்டநாத கரையாளர் எம்.எல்.ஏ. குறிப்பிட்டதாவது:

திருவிதாங்கூர் கொச்சியிலிருந்து தமிழ்ப் பேசும் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்காகப் போராட வேண்டியிருந்தது.

திருவிதாங்கூர் தமிழ்க் காங்கிரஸ்



# பத்திரிகைப் பணிகள்

பாரதியார் 'தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை' எனப் போற்றப்படும் திரு ஸ்ரீ. சுப்பிரமண்ய ஐயரின் 'சுதேசமித்திரன்' இதழில் 1904-ம் வருடம் துணையாசிரியராகச் சேர்ந்தார். இப்பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டே, 1905-ம் வருடம் ஆகஸ்ட் முதல் 1906 ஆகஸ்ட் வரை 'சக்ரவர்த்தினி' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பையும் வகிக்கிறார்.

இதன்பின், 1906 ஏப்ரலில் உதயமான ''இந்தியா'' வாரப்பத்திரிகையில் பெயர் போடாத ஆசிரியராகத் தொழிற்படுகிறார். ''இந்தியா'' பத்திரிகையின் நோக்கங்களையும் நடைமுறைகளையும் கொண்ட பத்திரிகையாக ஆங்கிலத்தில் வெளிவந்த 'Bala Bharata' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை அணி செய்கிறார் பாரதி.

அரசியல் சூழ்நிலை காரணமாக, 1908 செப்டம்பரில் புதுச்சேரி சென்று வனவாசம் புரிகிறார். மீண்டும், அதே ஆண்டு அக்டோபர் மாத மத்தியிலிருந்து 'இந்தியா' வெளிப்படுகிறது. தம்முடைய நெஞ்சத்து எழும் உணர்ச்சிகளை—அரசியல், சமூக, ஆன்மீகக் கொள்கைகளை; வெளிப்படுத்த ஒரு பத்திரிகை மட்டும் போதாது எனக் கருதிய பாரதியார் 1909-1910 ஆகிய ஆண்டுகளின் கால கட்டங்களில் ''கர்மயோகி'' 'தர்மம்' 'சூர்யோதயம்' 'விஜயா' போன்ற இதழ்களிலும் நிறைய எழுதுகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரே சமயத்தில் அனைத்து பத்திரிகைகளும் மக்களின் செல்வாக்கைப் பெற்றுவிட்டன. இதனால், மேற்கண்ட பத்திரிகைகளையெலாம் அரசு பறிமுதல் செய்து விடுகின்றது; அல்லது தடைசெய்து விடுகின்றது.

1913-1915ம் ஆண்டுகளிலேதான் தியாகி சுப்ரமண்ய சிவா அவர்களின் 'ஞான பாநு' மாதப் பத்திரிகையில் கவிதைகள் கதைகள், கட்டுரைகள், வேதாந்த விஷயங்கள் என்றிப்படி எழுதி வந்தார்.

1914-1915 ஆகிய கால கட்டங்களில் சுதேசமித்திரன், ஆங்கிலப் பத்திரிகைகளான New India, Commonwealth, Arya Hindu ஆகியவற்றில் பல்வேறு பிரச்னைகள் குறித்து எழுதினார். 1920 நவம்பர் 15-ந் தேதி முதற் கொண்டு, 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கே பணியாற்ற வந்து, இறக்கும் வரையிலும் எழுதிக்கொண்டே இருந்தார்.



காரைக்குடி. இந்து மதாபிமான சங்கத்தில் கருப்பன் செட்டியார், வி. நாரா
ராய சொக்கலிங்கம், பாரதியார், சொ. முருகப்பா,
யணன் செட்டியார், நு. நடராஜன் (நிற்பவர்).



# மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்புகள்

தொகுப்பு—ஏகமி

(டிசம்பர் 11, 1882 —— செப். 12, 1921)

| | |
|---|---|
| தகப்பனார்: | சின்னச்சாமி அய்யர் |
| தாயார்: | லட்சுமி அம்மாள் |
| பிறந்த இடம்: | எட்டயபுரம்(திருநெல்வேலி மாவட்டம், |
| 1882 டி. 11 | சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் 27ம் தேதி பிறந்தார். |
| 1887 | 5 வயது முடிவதற்குள் தாயார் லட்சுமி அம்மாள் காலமானார். |
| 1889 | சுமார் 2½ ஆண்டுகள் கழித்து தகப்பனார் சின்னச்சாமி ஐயர், வள்ளியம்மாளை மறுமணம் செய்து கொண்டார். அதே முகூர்த்தத்தில் மகன் சுப்பிரமணியனுக்கு உபநயனமும் நடந்தது. |
| 1893 | 11 வயதான சுப்பிரமணியனுக்கு எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்களால் 'பாரதி' (கலைமகள்) என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. |
| 1894 ஜனவரி | சிற்றன்னை வள்ளியம்மாளுக்கு லட்சுமி என்ற ஒரு பெண் குழந்தை பிறந்தது. |
| 1894—1897 | திருநெல்வேலி ஹிந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் பாரம் வரை பயின்றார். |
| 1897 | சிற்றன்னை வள்ளியம்மாளுக்கு விசுவநாதன் என்ற புதல்வர் பிறந்தார். |
| 1897 ஜூன் 27- | 14 வயதான பாரதிக்கும், 7 வயதான கடையம் செல்லப்பா ஐயரின் மூன்றாவது பெண் செல்லம்மாளுக்கும் கடயத்தில் திருமணம் நடந்தது. |
| 1898 ஜூன் | தகப்பனார் சின்னச்சாமி ஐயர் காலமானார். அப்போது பாரதிக்கு வயது 15 , தம்பி விசுவநாதனுக்கு வயது 1 . |
| 1898—1899 | காசியில் ஹனுமான் கட்டம் சிவமடத்திலுள்ள அத்தை குப்பம்மாளின் அழைப்பின் பேரில் பாரதி காசிக்குச் சென்றார். அங்கு ஜெய் நாராயண பள்ளியில் சேர்ந்து படித்தார். |
| 1900—1901 | காசியில் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் எண்டரன்ஸ் தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். |
| 1901 | டெல்லியில் நடந்த தர்பாருக்குச் சென்றிருந்த எட்டயபுர ஜமீன்தார் ஊர் திரும்பி வருகையில் காசியில் பாரதியின் அத்தை வீட்டில்-இரு தினங்கள் தங்கி, பாரதியைத் தன்னுடன் எட்டயபுரத்திற்கு அழைத்துவிட்டார். |
| 1901—1904 | 3 ஆண்டுகள் எட்டயபுரம் ஜமீன்தாரிடம் சமஸ்தானத்தில் வேலை பார்த்தார் |

வெட்கம் இரண்டும் அநாவசியமான சரக்குகள். நீ பேஷாக எல்லாருடனும் பேசலாம். கணவனிடம் முதல் முதல் வெட்கம், பழகப் பழக அதுவும் வேண்டியதில்லை. அச்சம், நாணம், பயிர்ப்பு என்று புத்தகப் பாடத்தை உருப்போட்டு நம் நாட்டுப் பெண்கள், புருஷர்கள் எல்லாரும் அடிமை வாழ்வில் மூழ்கி இருக்கிறார்கள்.

நீங்கள் தைரியமாக இருந்தால்தான், உங்கள் வயிற்றில் பிறக்கிற குழந்தைகள் தைரியமாக இருக்கும். கோழைத்தனம் இந்தியாவின் மேன்மையை நாசம் செய்து விட்டது. அதோடு காலமும் உதவி செய்தது.

''நீ புக்ககத்திற்குப் போனாலும் தைரியமாக இரு; பயப்படாதே; ஒட்டுக் கேட்காதே. பிறர் கடிதங்களை உடைத்துப் பார்க்காதே; மனத்தில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்து உருகுவதைவிட வாயினால் சொல்லி விடுவது நல்லது. உன்னால் முடிந்த அளவு அவர்கள் சொற்படி நட. உன்னால் முடியாவிட்டால் விஷயத்தைச் சுத்தமாகச் சொல்லிவிடு. மறைக்காதே! அதில் நன்மை உண்டு.

உன்னை விலை கொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றாக விளங்க வைத்து விருத்தி செய்யப் போகிறாய் அந்த வீட்டில் உனக்குப் பூரண உரிமைஉண்டு. பணம் காசு விஷயங்களில் தலையிடாதே. அதைப் பெரியவர்களுக்கு விட்டு விடு. வேலை செய்யப் பின் வாங்காதே. சக்தி மீறிச் செய்யாதே! செய்வதை உன் மனம் ஒப்ப செய். படிப்பை விடாதே. உன் தாய் தகப்பனார் எவ்வளவோ கஷ்டப்பட்டு முக்கியமான சாசுவதமான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். முடிந்தால் அபிவிருத்தி செய்; முடியாவிட்டால் இருப்பதை மறக்காதே.

''நான் ஐயரைப் போல் துறவு போதிக்க மாட்டேன். உலகத்தில் பிறந்து எல்லா சுகங்களையும் அநுபவித்து, உலகத்திற்கு உபகாரியாக வாழ வேணும். இரத்த வெள்ளம் பெருக்கி அதனால் சுகமடையலாம் என்பது என் எண்ணத்திற்கு நேர் விரோதம்.

நீ இரண்டு வீட்டிற்கும் விளக்கைப்போல் பிரகாசிக்க வேண்டும். இரண்டு குடும்ப வாழ்க்கை கலப்பது முதலில் கஷ்டமாக இருக்கும். பழகியபின் வழக்கமாய் விடும் கேவலம் அடிமைத் தனத்திற்கு ஒத்துக் கொள்ளாதே. உனக்கு உரிமை உண்டு; புத்தி உண்டு. ஸ்வதந்தரம் உண்டு. தலைநிமிர்ந்து நட. உன் இருபுறமும் உள்ள இயற்கையைக் கண்குளிரப் பார். நேர்ப் பார்வையில் யார், கடைக்கண் பார்வையில் பார்க்கத் தகுந்தவன் கணவன் ஒருவனே. தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் முதலியோரை நேராக நிமிர்ந்து பார். இவர்களைக் கடைக் கண்ணால் பார்க்காதே. நிமிர்ந்து உட்கார். பேசுவதை ஸ்பஷ்டமாகப் பேசு. தைரியமாகப் பேசு. இதில் கற்பு கெடுவதில்லை. மேலுக்கு வேஷம் அவசியம் இல்லை!''

**(திருமதி யதுகிரி அம்மாளுக்குப் பாரதி சொன்ன புத்திமதிகள். ஆதாரம்: பாரதி நினைவுகள்—திருமதி யதுகிரி அம்மாள்.)**

## நேசம் மறக்காத நெஞ்சம்

**—தீரர் சத்தியமூர்த்தி**



ஸ்ரீ பாரதியாரின் தமிழ்ப் பாடல்கள் எளிய நடையில் இயற்றப்பட்டு மனதை மிகவும் உருகச் செய்துவிடும் தன்மையுடையன. ஆயினும் எவ்வளவு பிரபல்யம் அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு அவருடைய கவிகள் பிரசித்தியடையவில்லை. ஆனால், அக்கவிகளை எங்கு பாடிய போதிலும் ஒரு மாயசக்தி அதில் மறைந்து கிடத்தல் புலப்படாமற் போகாது. இதை நான் அனுபவத்திற் கண்டிருக்கிறேன.

* * *

ஒரு கவியின் மனத்தே உதயமாகிற வெளிவரும் விஷயம் எப்போதுமே ஸாமான்யமா யிராது. ஸ்ரீ பாரதியார் போன்றவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அர்ண்மனைக் கவியாக அவர் கொண்டாடப்பட்டிருப்பார். சுயேட்ஸை அடைந்த எந்த நாட்டிலாவது அவர் ஜனித்திருப்பாராகில், இவ்வளவு பால்யத்தில் மாண்டிருக்க மாட்டார். தேச பாஷைக்கும், தாம் பிறந்த ஜாதிக்கும் ஒரு மறைத்தான செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பார்.

பங்காள சிரேஷ்டர் ரவீந்திர நாதருக்கு அவர் சமமானவர். நான் மிக படப் பேசுவதாக நினைக்கக் கூடாது. ஸ்ரீபாரதியாரை அறிந்தவர்களுக்கே நான் சொல்வதன் உண்மை செம்மையாகப் புலப்படும். தமது ஆயுள் காலத்தில் பெரும் பாகத்தை அவர் வனவாசத்தில் செலவழித்து விட்டார். தமிழ்நாட்டில் பிறந்து, படாத கஷ்டங்கள் எல்லாம் பட்டு இளவயதிலேயே அவர் இறந்து போய்விட்டார். ஆயினும் கடுகளவாவது இத்தமிழ் நாட்டுக்குத் தேசாபிமானம் இருக்குமளவும், தமிழ் பாஷை இந்நாட்டை விட்டு மறையாதிருக்கும் வரையிலும் ஸ்ரீபாரதியாரின் ஞாபகம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

# மகாத்மாவும்-மகாகவியும்!



**1919**-ம்வருடம் அண்ணல் காந்தியடிகள் சென்னை வந்திருந்த சமயம் திரு ஜீ. ஏ. நடேசன் அவர்களது சகோதரர் திரு ஜீ. வி. கல்யாணம் அவர்களது இல்லத்தில் அண்ணல் தங்கியிருந்தார்.

ஒருநாள் பகல் இரண்டு மணி இருக்கும். காந்திஜி ஒரு கட்டிலில் மெத்தையில் சாய்ந்திருந்தவண்ணம் தம் காரியதரிசி மகாதேவ தேசாய்க்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். பிரபல பாரிஸ்டர் ஆதி நாராயணச் செட்டியார் குடகுக் இச்சலிப் பழங்களை உரித்துப் பிழிந்து காந்திஜி அருந்துவதற்காகப் பழரசம் தயாரித்துக் கொண்டிருந்தார். அறையில் ஒரு பக்கம் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், எஸ். சத்தியமூர்த்தியும் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள். எதிரே ராஜாஜியும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்தனர். அறையின் வாயில் காப்போனாக வ. ரா. நின்றுகொண்டிருந்தார். யாரையும் உள்ளே விட வேண்டாமென்று கண்டிப்பான உத்தரவு. அச்சமயம் பாரதி அங்கு வந்தார். புதுவையில் தமக்கு அறிமுகமான வ. ரா. அங்கு நிற்பதைக் கண்டு "என்ன ஓய்", என்று சொல்லிக் கொண்டே ... நுழைந்து விட்டார்.

பாரதி நேரே காந்தியடிகளின் ... பக்கத்தில் ... கார்ந்துவிட்டார். ''மிஸ்டர் காந்தி! இன்று மாலை ஐந்தரை மணிக்குத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப் போகிறேன். அக்கூட்டத்திற்குத் தாங்கள் தலைமை வகிக்கமுடியுமா?'' என்று கேட்டார்.

அன்று மாலை தமக்கு என்ன அலுவல் என்று காந்தியடிகள் மகாதேவ தேசாயைக் கேட்டார். வேறு ஒரு அலுவல் இருந்தது.

''இன்றைக்கு நான் வர இயலாது' தங்கள் கூட்டத்தை நாளைக்கு ஒத்திப் போட முடியுமா? என்றார் காந்தியடிகள்.

'முடியாது. நான் போய் வருகிறேன். மிஸ்டர் காந்தி, தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்.' என்று சொல்லிவிட்டு பாரதி வெளியே போய்விட்டார்.

பாரதி போனதும், காந்தியடிகள் 'இவர் யார்? என்று வினவினார். யாரும் பதில் சொல்லவில்லை. இராஜகோபாலாச்சாரியார்தான், 'இவர் எங்கள் தமிழ்நாட்டுத் தேசியக் கவி' என்று அழகுற சொன்னார்.

இதைக்கேட்ட காந்தியடிகள், 'இவரைப் ... பத்திரமாய்ப் பாதுகாக்க ... தமிழ்நாட்டில் ...

'தனிமை இரக்கம்' என்ற முதல் பாடல் அச்சாகியது.

1904 ஆகஸ்ட். 1 முதல் 1904 நவம்பர் 10 வரை — எட்டயபுரம் ஜமீன்தாரிடமிருந்து விலகிய அவர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மூன்று மாதங்கள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

1904 நவம். — 'சுதேசமித்திரன்' ஸ்தாபகரும், ஆசிரியருமான ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் பாரதியைத் தமது பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார்.

1905 — பாரதியாருக்கு மூத்த பெண் தங்கம்மாள் பிறந்தார்.

1905 ஜூன் — மித்திரனில் கவி பாரதியார் எழுதிய 'வங்கமே வாழிய' என்ற பாடலை முதன் முதலில் வெளியிட்டனர்.

1905 நவ — வங்கமொழியில் பக்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' கீதத்தின் மொழி பெயர்ப்பை அவர் 'சக்கரவர்த்தினி'யில் வெளியிட்டார்.

1905 — காசியில் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1906 — கல்கத்தாவில் நடைபெற்ற தாதாபாய் நௌரோஜி தலைமையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். பின்னர், டம்டம் நகரில் மாதா நிவேதிதா தேவியையும், பின்னர் புரட்சித் தலைவரான விபின்சந்திரபால் அவர்களையும் சந்தித்தார்.

1906 ஏப்ரல் — 34, சென்னை பிராட்வேயில் பாரதியார் 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகையைத் துவக்கினார்.

1906 — சென்னை 'இந்தியா' பத்திரிகை அலுவலகத்தில் வ. உ. சிதம்பரம் பிள்ளை பாரதியைச் சந்தித்தல். இருவருமாக 'சென்னை மக்கள் சங்கம்' அமைத்தனர். பின்னர் வ. உ. சி. பிள்ளை அவர்கள் பம்பாய் செல்வதை பாரதியார் வழியனுப்பினார்.

1907 — விபின் சந்திரபாலை சென்னைக்கு கவி பாரதியார் முன் நின்று வரவழைத்து, கடற்கரையில் பிரசங்கங்கள் செய்வித்தார்.

திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுக்கூட்டம் நடத்த இடத்திற்கு 'திலகர் கட்டம்' என்று பெயர் சூட்டிய விழாவில் பாரதி, சுப்பிரமணிய சிவாவைச் சந்தித்தார்.

## அறிஞர் கடமை

**—தமிழ்த் தென்றல் திரு.வி.க.**

இந்நாளில் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெரும் பாவலராயிலங்கிப் புகழுடல் தாங்கிய திரு. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி அறியாத தமிழறிஞர் இருத்தல் அரிது. சுப்பிரமணிய பாரதியாரைத் தேசபக்தர் சுப்பிரமணிய பாரதியார் என்று சொல்வது வழக்கம். தேசபக்தி இஃது என்னும் உண்மை கண்டவருள் பாரதியாரும் ஒருவர். திரு பாரதியார் தேச பக்தியின் இயல்பைப் பலவாறு பாக்களால் ஓதியிருக்கிறார். அவர் பாடல்களை நேயர்கள் ஓதுவதோடு நில்லாது அவைகளைத் துருவித் துருவி ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்தால் தேசபக்திக்குரிய செம்பொருள் பல காணலாம். அவைகளை அகழ்ந்தெடுத்துப் புலவர்கள் சொற்பொழிவுகள் வாயிலாகவும், கட்டுரைகள் வாயிலாகவும் நாட்டார்க்கு அறிவுறுத்தல் நல்லது. அது நாட்டில் தேச பக்தியை வளர்ப்பதாகும். சிறப்பாக நமது நாட்டுக்கு இப்பொழுது அத்தகைய போதனை மிக மிக இன்றியமையாதது. தேச பக்தியை விழ்த்தும் பலதிறக் கிளர்ச்சிகள் தலைவிரித்தாடும் இந்நாளில் பாரதியார் பாடல்களின் உள்ளக்கிடக்கைகளை நாட்டில் உலவச் செய்ய வேண்டுவது அறிஞர் கடமை.

1907 — சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் கலந்து கொண்டு லோக மான்ய திலகரின் கொள்கைக்குத் தீவிரமாகப் பாடுபட்டார்.

1908 ஜன. — 14 பாடல்கள் கொண்ட நூல் தொகுப்பை 'ஸ்வதேச கீதங்கள்' என்ற தலைப்பில் பாரதியார் தாமே வெளியிட்டார். இதே ஆண்டு, 'ஞானரதம்' என்ற முதல் உரைநடைக் காவியம் 'இந்தியா' பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அப்போது எருக்கூர் நீலகண்டனைத் தன்னிடம் பயிற்சியாளராக சேர்த்துக் கொண்டார்.

1908 ஏப்ரல் — வ. உ. சி. கைது செய்யப்பட்ட வழக்கில் கவி பாரதியாரும் சாட்சியம் கூறினார்.

1908 செப். — சென்னையில் 'இந்தியா' பத்திரிகை தடை செய்யப்பட்டது. கவி பாரதியார் மீதும் போலீஸ் நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று நண்பர்கள் கூறிய ஆலோசனையின் பேரில் பாரதியார் புதுவைக்குச் சென்றுவிட்டார்.

1908 அக். — புதுவையில் பாரதிக்கு குவளையூர் கிருஷ்ணமாச்சாரியார் (குவளைக்கண்ணன்) குள்ளச்சாமி, நெருங்கிய நண்பர்களாயினர்.

1908 அக். — சென்னையில் நிறுத்தப்பட்ட 'இந்தியா' வார இதழ் புதுவையிலிருந்து மீண்டும் வெளிவந்தது.

1909 மார்ச் 11 — பாரதியாருக்கு இரண்டாவது மகள் சகுந்தலா பிறந்தாள்.

1909 — புதுவையில் பாரதியார் 'விஜயா' என்ற பத்திரிகையை வெளியிட்டதோடு, தொடர்ந்து 'கர்மயோகி' 'தர்மா' முதலிய பத்திரிகைகளையும் தமிழில் வெளியிட்டார்.

1910 மார்ச் 12 — புதுவையில் 'இந்தியா' பத்திரிகை தடை செய்யப்பட்டது.

1910 ஏப். — ஸ்ரீ அரவிந்தர் புதுவைக்கு வந்து பாரதியைச் சந்தித்தல்.

1910 அக். — பாரீஸ் நாட்டிலிருந்து புதுவைக்கு வந்த வ. வே. சு. ஐயர், பாரதியை சந்தித்தார்.

1910 டிச. — வாஞ்சி புதுவையில் பாரதியையும் வ. வே. சு. ஐயரையும் சந்தித்தல்.

தர்மா பத்திரிகை அலுவலகத்தில் புத்தகம் வெளியிடும் விஷயமாக நீலகண்டனுக்கும், வாஞ்சிக்கும் ஏற்பட்ட தகராறைப் பாரதி தீர்த்து வைத்தார்.

1911 ஜூன் — திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கில் போலீஸாரால் தேடப்பட்ட மாடசாமி புதுவையில் பாரதியைச் சந்தித்தல், பாரதி தமது சிஷ்யரான கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) மூலம் மாடசாமியை மாறுவேடத்தில் தப்பிக்கச் செய்தல்.

1911 ஆகஸ்ட். — திருநெல்வேலி கலெக்டர் கொலை வழக்கு சம்பந்தமாகப் புதுவையில் பாரதியார், வ. வே. சு. ஐயர் மீது நடவடிக்கைகள் எடுத்ததோடு, பாரதியாரின் வீட்டையும் போலீஸ் சோதனையிட்டனர்.

1912 — புதுவையில் பாரதியார் 'கண்ணன் பாட்டு', 'குயில் பாட்டு' மற்றும் 'பாஞ்சாலி சபதம்' முதல் பாகம் முடித்தல்.

1913 — புதுவையில் கவிபாரதியாரின் நண்பரும், அரிஜன சிஷ்யனுமான ரா. கனகலிங்கத்திற்கு 'பூணூல்' அணிவித்துப் புரட்சி செய்தார்.

1914 — தென்னாப்பிரிக்காவிலுள்ள நேடால் தமிழ்ச் சங்கத்திற்கு நிதி திரட்டியனுப்பும் பணியில் ஈடுபட்டார்.

1915 நவ. — மித்திரனுக்கு ஏ. ரங்கசாமி ஐயங்கார் ஆசிரியராக வந்ததும் புதுவையிலுள்ள கவி பாரதியாரை மித்திரனுக்கு விஷயங்கள் எழுதச் செய்தார்.

1915 டிச. — புதுவையிலிருந்து பாரதியார் 'மித்திர'னுக்கு 'காளிதாசன்' 'சக்திதாசன்' என்ற புனைப் பெயர்களில் கட்டுரைகளும் நகைச் சுவைப் பாடல்களும் எழுதினார்.

1916 ஏப். 20 — 'மித்திரன்' ஸ்தாபகரும், ஆசிரியருமான ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் (ஏப். 18) காலமானதைக் குறித்து புதுவையிலிருந்து பாரதி 'ஸ்ரீமான் ஐயரவர்களின் ஆத்மா சாந்தியடைக' என்று அநுதாபச் செய்தி வெளியிடல்.

1917 ஆகஸ்ட் — 'கண்ணன் பாட்டு' முதல் பதிப்பை சென்னையில் பரலி சு. நெல்லையப்பர் வெளியிட்டார்.

1918 நவ. 20 — பாரதியார் புதுவையை விட்டு பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் திரும்பி வருதல்.

1918 நவ. — வில்லியனூருக்கு அருகில் கவி பாரதியைக் கைது செய்து ரிமாண்டில் வைத்தனர்.

1918 நவ. 24 — சிதம்பரத்தில் கேம்ப் செய்திருந்த மாவட்ட மாஜிஸ்டிரேட்



களின் குடும்பத்தில் பிறந்த குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதில் தமிழக அரசு முன்னுரிமை அளிக்கும்.

மொழிப் போராட்டத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்பட்டபோது தரக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட் நிறுத்தி விட்டது. மொழியை எதிர்த்தவர்களுக்கு தானே தரக்கூடாது. நாங்கள் அப்படித் தரவில்லை.

அந்தத் தமிழ் மொழியைக் காக்கப் போராடியவர்களுக்கு நாங்கள் உதவி செய்வோம்.

சுதந்திரப் போராட்டத்தை மறந்த மக்கள் இருக்கிறார்கள்.

1930-ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலை நான் கண்ணால் பார்த்தவன். அந்த

## விடிவு காலம் இல்லை!

**சா**தியை நான் வெறுக்கிறேன். சாதி மீது எனக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது.

சென்ற பல நூற்றாண்டுகளாக, சாதி முறையானது இந்தியாவின் சாபக்கேடாகவே இருந்து வந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

சாதிப் பாகுபாடு இந்தியாவின் சக்தியைச் சீரழித்தது. பலவீனப்படுத்தியது. பாரதத்தை அது தாழ்மைப் படுகுழியில் தள்ளி மீளவொட்டாமல் அழுத்தியது.



நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டதன் மூலகாரணமே, நம்மிடையேயிருந்த சாதிப் பிளவுகள்தான். நம்முடைய ஐக்கிய பாவத்தை அழித்தது சாதியுணர்வுதான். நம்முடைய சகோதரர்களிலேயே ஒரு பகுதியினரை இழிவுபடுத்தும் துர்நோக்கத்தை விளைவித்தது சாதி முறைதான்.

கடந்த காலத்தில் சாதி முறையினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய உலகத்தில் சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம் என்பதென்னவோ மறுக்க முடியாத உண்மை.

இந்த சாதி முறை நம்மிடையே நீடித்திருக்கும் வரை, நமக்கு விடிவு காலமே இல்லை. நமது குறிக்கோளை நாம் ஒருநாளும் அடைய முடியாது.

—பண்டித ஜவகர்லால் நேரு

சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் மூலம் பெற்ற சுதந்திரத்திற்கு மதிப்பும்மரியாதையும்இருக்கிறது. என்பதும் இளைஞர்களுக்கு எவ்வளவு கடமை இருக்கிறது என்பதையும் உணர முடியும்.

தேவிகுளம். பீர்மேடு என்று இங்கே பேசப்பட்டது. அதைச் சேர்க்கும் போது, 4, 5 மைல் தூரம் தள்ளி வைத்திருந்தால் இத் தண்ணீர் பஞ்சம் வந்திருக்காது.

அடுத்துப் பிர்காவாகப் பிரிக்காமல் கிராமம் கிராமமாக பிரித்திருக்கிறார்கள். இதைப் பற்றி முதலமைச்சர் பேசினால் பிரச்சினை வரலாம். ஆகவே இப்பொழுது காலம் இடம் கொடுக்கும்வரை காத்திருப்போம் என்று நான் சொல்லலாம் அல்லவா? இதைச் சொன்னால் அமைதியான உறவைக் கெடுக்கப் பார்க்கிறார் என்பார்கள்.

இங்கே வந்திருக்கும் தியாகிகள் அண்ணா தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்களா? திருவிதாங்கூர் காங்கிரஸ் என்றெல்லாம் கட்சியிலிருந்து போராடியவர்கள் எந்த இனத்தை, ஜாதியை சேர்ந்தவர் என்றா பார்க்கிறோம்?

செங்கோட்டையைப் பற்றி சிலம்புச் செல்வர் ம.பொ.சி. சொல்லியது எனக்குப் புரிகிறது, பலர் எதிர்பார்த்ததுபோல செங்கோட்டையில் வாஞ்சியின் சிலை வைக்கப்படும்.

யாரிடம் எந்தச் செய்தி வருகிறது என்பதல்ல. எத்தகைய நல்ல கருத்து வருகிறது என்பதைப் பார்த்து அதை எடுத்து செயல் படுத்துகிறோம்.

இந்த அரசை யார் யாரோ பாராட்டுகிறார்கள் என்றால் அது நாங்கள் செய்யும் நல்ல பணிகளைப் பாராட்டிதான்.

நல்லதை நாட்டுக்குத் தேவையானதை நாளும் செய்வதில் நாங்கள் முன்னணியில் இருப்போம். அண்ணாவின் கொள்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம்''

பின்னர் கன்னியாகுமரி மாவட்டத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் 11 பேர் குடும்பத்தினருக்குத் தலா ரூ. 10,000 முதல்வர் வழங்கினார். எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகள் 78 பேருக்கு விருதுகள் வழங்கினார்.

எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு விருது அளிக்கும் வகையில் முதலில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

விழா இறுதியில் செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் ஐ.ஏ.எஸ். நன்றி கூறினார்.

மொத்தத்தில் தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளிவிழா நிகழ்ச்சி. நல்லதைக் கொண்டாடும் - நாட்டுக்கும் பாடுபட்டோருக்கு நன்மைகளைச் செய்யும் நன்றி பாராட்டும் தமிழக அரசு என்பதை மீண்டும் உறுதிப் [illegible]



# ஆயிரம் ஆயிரம் பள்ளிக் கட்டடங்கள்

எச். பி. என். ஷெட்டி,
ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர் மற்றும்
அரசுச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை.

**க**ளிமண், கூழாங்கற்களால் எழுப்பப்பட்ட சுவர்கள், பனை ஓலை, நாணல்களால் வேயப்பட்டு மழை, வெயிலால் சீரழிந்த கூரைகள், மேடு பள்ளம், குழிகள் ஈரக்கசிவினால் பாதிக்கப்பட்ட தரை, சூரிய ஒளியோ, காற்றோ புக இயலா இடங்கள் என்ற சூழ்நிலையில் இளஞ்சிறார்களும் சிறுமிகளும் போதிய இடவசதியின்றி நெருக்கியடித்துக்கொண்டு நச நசவென்று கல்வி பயின்று வந்தனர்



இவையே... வெகு அண்மைக் காலம் வரை நிலவிய ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் பெரும்பான்மையான நிலை, ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டடங்கள் கட்ட முடிக்கும் பணி முடிவுறும்? அந்நாள் எப்போது மலரும்?

எனவே இது போன்ற குடிசைகள், நிலையில்லாத கட்டடங்களைத் தகர்த்தொழித்து சிறந்த நிலையான பாதுகாப்பான காற்றோட்டமான இயற்கை வெளிச்சமுள்ள இந்த பள்ளிக்கட்டடங்களைக் கட்டி நம்முடைய வருங்கால சந்ததியினரைச் சிறந்த சூழ்நிலைகளிலேயே கல்வி கற்கும் நிலையை உருவாக்க வேண்டும் எனவும், அதற்கேற்ப காலக் கெடு வைத்துப் பள்ளிக் கட்டடங்கள் துரிதமாகக் கட்டி முடிக்கப்பட வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசு பெரிதும் விரும்பியது.

அதற்கேற்ப தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் 1982-83ஆம் ஆண்டு முடிவுறும்போது, தமிழ்நாட்டில் எந்தெந்த ஊர்களுக்குச் சென்றாலும் அங்கங்கே சிறந்த பள்ளிக் கட்டடங்கள் இருக்கும். தற்போதுள்ள கட்டடங்கள் போதவில்லையென்றால் கூடுதலாக கட்டடங்கள் கட்டப்பட்டு [illegible] மாணவ மாணவியருக்கும் போதிய வசதிகள் செய்யப்பட்டிருக்கும். இது உறுதி.


கட்டடங்கள் உருவாக்கப் படும் வேலை தற்போது எப்படி நடைபெறுகிறது என்பதனை அறிவோம்...

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்த தன்னிறைவுத் திட்டத்திலே ஒரு முக்கிய பணியாக எடுக்கப்பட்டுள்ள வேலை பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதாகும். இத்திட்டத்தின் கீழ் வேலைகள் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படுகின்றன. முதல் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் 928 பள்ளிக்கட்டடங்கள் ரூ. 482.41 இலட்சம் முதலீட்டில் கட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலையாக இத்திட்டம் தற்போது செயலில் உள்ளது. இதில் 150 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ரூ. 922.91 இலட்சம் செலவிட்டு 1808 பள்ளிக்கட்டடங்கள் கட்டப்படும். இவ்வேலைகள் அண்மையில் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில் மைய அரசின் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இத்திட்டத்திலே மைய அரசு, உணவுப் பொருள்கள், தளவாடப்பொருள்கள், ரொக்கம் ஆகியவற்றை மாநில அரசுகளுக்கு அளிக்கிறது. இவ்வுதவியைச் சிறு சிறு வேலைகளிலே செலவிட்டு வீணாக்காமல் நிலையான சொத்துக்களை உருவாக்கும் பணிகளைத் தமிழ்நாடு அரசு தேர்ந்தேடுத்தது. அவற்றில் தலையாயதுதான் பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதாகும்.

1980-81ஆம் ஆண்டிற்கென மைய அரசு அளித்த 60,000டன் அரிசி, தளவாடப் பொருள்களுக்காக ரூ. 582 இலட்சம் [illegible] மாக அளிக்க ரூ. 186.50 [illegible] சம் ஆகியவற்றை ஒருமுகப்படுத்தி ரூ. 60,000 என்ற [illegible] டடம் என மதிப்பிட்டு 3,000 பள்ளிக் கட்ட[illegible] வாக்க [illegible]




மைய அரசு வெளியிட்ட அஞ்சல் தலை (11-9-1960)

ஸடோடர்டிடம் கவி பாரதியாரை ஆஜர் செய்தல்.

**1918 நவ. 25** 'மித்திரன்' ஆசிரியர் ஏ. ரங்கசுவாமி ஐயங்கார் சென்னை போலீஸ் கமிஷனர் கானிங்டனுடன் தொடர்பு கொண்டு கவி பாரதியின் விடுதலைக்கு ஏற்பாடுகள் செய்தார்.

**1918 டிச. 14** கவி பாரதியாரை நிபந்தனைகளுடன் விடுதலை செய்தனர்.

**1918 டிச. 16** கவி பாரதியார் விடுதலையான செய்தி 'மித்திரனில்' ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் விடுதலை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

**1919 மார்ச்** பாரதியாரின் மூத்த மகள் தங்கம்மாள் பாரதிக்கும் ஸ்ரீஸ்தானு ஐயருக்கும் திருமணம் கடயத்தில் நடந்தது.

சென்னை கதிட்ரல் ரோடிலுள்ள ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் தங்கியிருந்த மகாத்மா காந்தியடிகளை தரிசித்தல்.

**1919 ஏப்.** கவிபாரதியார் கடயத்தில் தங்கினார்.

**1919 மே. 2** எட்டயபுரத்தில் தங்கியிருந்த போது தமக்கு உதவி அளிக்கும்படி ஸ்ரீ வெங்கடேச ரெட்டப்ப பூபதி ஜமீன்தாருக்கு இரண்டு சீட்டுக் கவிதைகள் எழுதியனுப்பினார்

**1919 அக்.** கானாடு காத்தான் வை. சு. ச. சண்முகனார் வீட்டில் தங்கிய பின், திருவனந்தபுரம், திருநெல்வேலி ஆகிய ஊர்களுக்குச் சென்றார்.

**1919 நவ.** காரைக்குடியில் சில நாட்கள் தங்கிய பின்பு கடயத்திற்குச் சென்றார்.

**1920 ஜூன் 2** பொட்டல் புதூரில் இஸ்லாமியப் பெருமைகளைப் பற்றி பிரசங்கம் செய்தார்.

**1920 ஜூன் 28** பாரதியார் தாம் எழுதிய கட்டுரைகளையும், பாடல்களையும் புத்தகமாக வெளியிட நிதி சகாயத்திற்காகச் சுற்றறிக்கைகளை நண்பர்களுக்கு அனுப்பினார்.

**1920 நவ. 15** 'மித்திர'னில் கவி பாரதியார் மீண்டும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

**1921 மார்ச் 21** கடலூர் பொதுக்கூட்டத்தில் ஆன்மீக விஷயத்தைப் பற்றி பிரசங்கம் செய்தார்.

**1921 ஜூன்** சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கோவில் யானை 'அர்ஜுனன்' கவி பாரதியார் போர்த்திருந்த அங்கவஸ்திரத்தைத் தனது துதிக்கையினால் பிடித்திழுத்து, கீழே தள்ளி விட்டது. விழுந்த அதிர்ச்சியால் ஏற்பட்ட காயங்களுக்குச் சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

**1921 ஜூலை** தன்னை கீழே தள்ளிய கோவில் யானையைப் பற்றி பாரதியார் மித்திரனில் 'கோவில் யானை' என்ற தலைப்பில் வேடிக்கையான கட்டுரையை எழுதினார்.

**1921 ஆகஸ்ட் 23** ஈரோடு அடுத்த கருங்கல் பாளையை வாசக சாலை ஆண்டு விழாவில் பாரதியார் உடல்நலமின்றியே பிரசங்கம் செய்தார்.

**ஆகஸ்ட் 23** தீராத வயிற்றுப் போக்குடன் கவி பாரதியார் 'மித்திரன்' வேலையினின்று ஒருவார காலம் ரஜாவில் சென்றார்.

**1921 செப்.** புதன் கிழமை பாரதியார் 'மித்திரன்' ஆசிரியருக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் 'பராசக்தியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு திங்கட்கிழமை (12-9-'21) வேலைக்கு வந்துவிடுகிறேன்' என்று துண்டுக் காகிதத்தில் தகவல் அனுப்பின

**1921 செப். 11** ஞாயிறு இரவு தாண்டி (12ந் தேதி திங்கட்கிழமை அதிகாலை) 1.30 மணிக்குத் தமது 39-ம் வயது முடிவதற்குள் காலமாகி விட்டார்.

(1921 செப்டம்பர் 12-ந் தேதி மகாகவி பாரதியார் காலமாகிவிட்டார், என்ற செய்தியோடு 'மித்திரன்' உப தலையங்கத்தில் ''திங்கட்கிழமை 'மித்திரன்' வேலைக்கு வந்துவிடுகிறேன் என்று சொல்லியனுப்பியவர் திங்கட்கிழமையே சாம்பராகிவிட்டது என்ன கொடுமை?'' யென்று வெளியிட்டது குறிப்பிடத் தக்கது.).

**ஆதாரம் :**

1. சுதேசமித்திரன்
2. ஸ்ரீ புவனேஸ்வரி வெளியீடு ''தமிழகம் தந்த மகாகவி''
3. திருநெல்வேலி மாவட்ட சுதந்தரப் போராட்ட வரலாறு

# மகாகவியும் கப்பலோட்டிய தமிழரும்

என். நாகசாமி





இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கத்தார் அளித்த ஆறு வருஷக் கடுங்காவல் சிறைவாசத்தை அனுபவித்து விட்டு வெளியே வந்த தேசபக்தர் வ.உ. சிதம்பரனார் பாரதியாரைப் பார்க்கப் புதுவைக்கு ஓடோடி வந்தார்.

சிதம்பரனார் ரயிலைவிட்டுக் கீழே இறங்கி, ரயில் நிலையத்துக்கு வெளியே வந்து ஒரு வண்டிக்காரனை அழைத்து ''நான் பாரதியார் வீட்டுக்குப் போகவேண்டும்; உனக்கு அவர் வீடு சரிவரத் தெரியுமா ?'' என்று கேட்டார். வண்டிக்காரன் உடனே 'ஐயா அவர் வீடு எனக்குத் தெரியும்; அவரும் எனக்கு நன்றாய்த் தெரியும்; வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள், நான் உங்களை அவரிடம் பத்திரமாய்க்கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்' என்று வணக்கமாய்ச் சொன்னான். பிள்ளையும் அந்த வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டிக்காரன் அவரை ஏற்றிவந்து பாரதியார் வீட்டுக்கு முன்னால் வண்டியை நிறுத்திவிட்டு, வீட்டுக்குள்ளே வந்து 'சாமி உங்களைத் தேடி ஒரு ஐயா வெளியே வந்திருக்கிறார்; அவர் உங்களைக் கூப்பிடுகிறார்' என்று சொன்னான். குளிக்கப்போன பாரதியார் தெருவில் யார் வந்திருக்கிறது என்று போய்ப் பார்த்தார். பாரதியாரைக்கண்ட பிள்ளை வண்டியைவிட்டுக் கீழே இறங்கி அதிவேகமாய் வந்து பாரதியாரைக் கட்டி ஆலிங்கனம் செய்தார். பாரதியாருக்கு கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பிற்று. பிள்ளையை பாரதியார் மகிழ்ச்சியுடன் இருகரங்களையும் பிடித்துக் கொண்டு மெத்தைக்கு அழைத்துச் சென்றார்.

பாரதியாரும் பிள்ளையும் சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நான் கீழேபோய் பிள்ளைக்கு நாஸ்தா தயார் செய்துகொண்டு வந்தேன். அவரும் பல்தேய்த்து, கைகால்கள் கழுவிக்கொண்டு திருநீறு நெற்றியில்பூசிக்கொண்டு சூரிய நமஸ்காரம் செய்தார். பிறகு அவர் நாஸ்தா புசித்தார். பாரதியாருக்கு 'இந்தியா' ஆபீஸ் போய் நாட்டுக்குச் சேவை செய்ய நேரமாய் விட்டது. ஆதலால் உடனே பிள்ளையை இளைப்பாற சொல்லிவிட்டு பாரதியார் நாட்டுத் தொண்டுக்குச் சென்றார். பிரயாணத்தில் தூக்கமில்லாததால் பத்திரிகைகளை, பாய்போல் விரித்து, பத்திரிகைகளையே கட்டாகக்கட்டித் தலையணையாக வைத்துக்கொண்டு, பாய்போல் விரித்த பத்திரிகைகளின் மேல் படுத்துக் கொண்டு அயர்ந்து தூங்கினார் பிள்ளை.

பன்னிரண்டு மணிக்கு மதியச் சாப்பாட்டுக்காக களைப்புடன் பாரதியார் வந்தார். அவர் வந்ததும் பிள்ளையிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். கீழே ஒரு அறையில் எல்லாரும் ஒரே பந்தியாகச் சாப்பிட யாவும் தயார் செய்துவிட்டு, நான் மெத்தைக்குச் சென்று பிள்ளையையும், பாரதியாரையும் சாப்பிட அழைத்தேன்.

நான் அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு கீழே சாப்பாட்டு அறைக்கு வந்தேன். ஒரு வரிசையில் பாரதியாரும் அவருடன் ஆபீசில் தொண்டு புரிந்த மூவரும் மற்றொரு வரிசையில் அதியாகிய பிள்ளையும் ஜாகையில் அன்று சமையல் செய்த மூவரும்சாப்பிட உட்கார்ந்தோம். நான் எல்லாருக்கும் சாப்பாடு பூங்கிட்டுவிட்டு மீதியை மத்தியில் வைத்தேன். தேவையானதை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட வைத்துவிட்டு நானும் அவர்கள் கூடச் சாப்பிட உட்கார்ந்தேன். எல்லாரும் உரையாடிக் கொண்டு தேவையானதை எடுத்துச் சாப்பிட்டோம். 'சிறைவாசத்திலிருந்து வந்த பின் இன்றே நான் சுவையுடன் வயிறு நிறைய சந்தோஷமாய் சாப்பிட்ட நாளாகும்' என்று சொன்னார் பிள்ளை. பிறகு கைகளை அலம்பிக் கொண்டு அவரவர்கள் வேலைக்கு எல்லோரும் போய் விட்டோம். பிள்ளை மட்டும் பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டு நேரத்தைச் செலவழித்தார்.

சாயங்காலம் ஆறு மணிக்கு பாரதியார் 'இந்தியா' ஆபீசிலிருந்து வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து, பிள்ளையைக் கடலோரம் அழைத்துச் சென்றார். சிறிது நேரம் கடலோரம் உளாவி சுத்தமான குளிர்ந்த காற்றை உட்கொண்டுவிட்டு இருவரும் திரும்பி வந்தார்கள். சற்று நேரம் [illegible] எல்லாரும் மத்தியானம் [illegible]



ஒவ்வொரு மாவட்டத்திலு முள்ள ஊராட்சி ஒன்றியங்களைக் கணக்கிட்டு மாவட்ட வாரியாக இந்த 2000 கட்டடங்களும் பிரித்தளிக்கப்பட்டன. வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, மதுரை, சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 200க்கும் மேற்பட்ட கட்டடங்கள் துரிதமாகக் கட்டப்படுகின்றன.

இவற்றில் தன்னிறைவுத் திட்டத்தில் கட்டப்படும் பள்ளிக் கட்டடங்கள் சேராது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தவிர கிராம வேலைகள் திட்டத்தில் சென்ற ஆண்டு 1830 கட்டடங்கள் கட்டப்பட்டன. மேலும் நடப்பாண்டில் 1,500 கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

தன்னிறைவுத்திட்டம், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்ற திட்டங்கள் ஆகியவற்றில் கட்டப்படும் பள்ளிக்கட்டடங்கள் மொத்த எண்ணிக்கை 8066.

இத்துணை பெரிய சாதனைகளைத் தமிழ்நாடு அரசு மட்டுமே சாதித்து இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க முடியும்.

இவ்வேலைகள் முடிவுறும் போது தமிழ்நாட்டிலே எந்த ஒரு பள்ளியும் சீரற்ற நிலையில்லாத இடங்களிலே இயங்காது. அவற்றின் அடிச்சுவடே இருக்காது என திண்ணமாகக் கூறலாம்.

# நூல் நயம்

## எனக்குத் தொழில் கவிதை

ஆசிரியர்: கவிஞர் வண்ணை மூர்த்தி,
வெளியீடு: தனம்மாள் பதிப்பகம், 39, முத்தையா தெரு, சென்னை—600021

விலை: ரு. 4-90 பக்கம்: 99

நாற்பத்தேழு கவிதைகளின் தொகுப்பு இந்நூல். அனைத்தும் மரபுக் கவிதைகளாகத் திகழ்ந்து படிப்போர் தம் மனத்தில் நல்லெண்ணத்தைப் பதிக்கின்றன. தமிழ் மொழி குறித்தும் தமிழகத் தலைவர்களின் பெருமை குறித்தும், சமுதாய இயல்பு, சமூக முன்னேற்றம் ஆகியவை குறித்தும் சுவையான கவிதைகளை வடித்திருக்கிறார் நூலாசிரியர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பாரதியார் ஆகியோரைக் குறித்து யாக்கப் பெற்ற கவிதைகள் சிறப்பாக அமைந்துள்ளன. தொகுப்பின் இறுதியாக உள்ள 'எண்ண அலைகள்' என்னும் கவிதை நல்ல ஓட்டத்துடன் அமைந்துள்ளது.

## எலுமிச்சை மரம்

ஆசிரியர்: எஸ். ஏ. குலைராஜா.
வெளியீடு: ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

விலை: ரு. 3-00 பக்கம்: 64

விருந்துக்கும் மருந்துக்கும்; சுப காரியங்களுக்கும் அசுப காரியங்களுக்கும் பயன்படுவது எலுமிச்சம்பழம். அதனை வழங்குகின்ற மரத்தைக் குறித்துப் பல அரிய தகவல்களைத் தருகிறது இந்நூல்.

எலுமிச்சை பயிரிடப்படும் விதம், அதன் பலன், பயன்படுத்தப்பெறும் நாடுகள் ஆகியவை குறித்துப் பல செய்திகளை நூலாசிரியர் கொடுத்திருப்பதுடன், எலுமிச்சம் பழத்தினால் நீங்கப் பெறும் நோய்களைக் குறித்தும் விரிவாக எழுதியுள்ளார். அறிவியல் நூல் போல இது விளங்கினாலும் உயர்ந்த மருத்துவ நூலாகத் திகழ்கிறது என்றே கூறலாம். இந்நூலைப் படித்தபின், எலுமிச்சையின் பேராற்றலையும் பெருமையையும் எளிதில் அறிந்து கொள்ள இயலுகிறது. —மகு.





# சென்னையில் புறநகர் மின்சார ரயில் நிலையம்

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை அடுத்துள்ள மூர் அங்காடிப் பகுதியில், புறநகர் மின்சார ரயில் நிலையம் 42 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய ரயில் நிலையத்தின் தொடக்க விழா 17.10.81 அன்று நடந்தது.

விழாவுக்கு மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தப் புதிய ரயில் நிலையத்தொடக்க விழா நிகழ்ச்சி தமிழகத்திலுள்ள 5 கோடி மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகும்.

''இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசுக்குக் குறைந்த விலையில் நிலத்தைத் தமிழக அரசு கொடுத்திருக்கிறது.

''மூர் அங்காடிக்குப் பதிலாக 1½ கோடி ரூபாய் செலவில் கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஓராண்டுக் காலத்திற்குள் அது முடிவடைந்துவிடும் என்று நம்புகிறேன். மிருகக் காட்சிச் சாலை வேறு இடத்தில், நகரத்திற்கு அப்பால் காடுகள் உள்ள இடத்தில் உருவாக இருக்கிறது.''

புதிய ரயில் நிலையத்தை மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், ''இந்திய ரயில்வே துறை, உலக அரங்கில் குறிப்பிட்ட வளர்ச்சியைப் பெற்று இருக்கிறது. பயணிகள் ரயில் போக்குவரத்தில் உலகில் 2வது இடத்தையும், சரக்குரயில் போக்குவரத்தில் 4வது இடத்தையும் இந்தியா பெற்று இருக்கிறது என்ற அவர், ''6வது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசியில் பாதாள ரயில் திட்ட வேலைகள் தொடங்கப்படும்'' என்றும் குறிப்பிட்டார்.


விழாவில், மாண்புமிகு மத்திய ரயில்வே துணையமைச்சர் திரு சி.கே. ஜாபர் ஷெரீப், ரெயில்வே போர்டு உறுப்பினர் திரு என். நீலகண்ட சர்மா ஆகியோர் பேசினார்கள்.

புறநகர் மின்சார ரயில் நிலையத்தின் மதிப்பு ரூ. 1.4 கோடியாகும். புதிய கட்டடம், மக்கள் புழங்குவதற்கான இடம், மற்றும் கார்கள், வாடகை வண்டிகள் நிற்கும் இடம் ஆகியவைகள் மதிப்பு ரூ. 1.6 கோடியாகும்.

மிருகக்காட்சிச் சாலையின் ஒரு பகுதி, ''பீப்பிள்ஸ் பார்க்'' எஸ். ஐ.ஏ.'' திடல் மற்றும் மூர் அங்காடி ஆகியன அடங்கிய 42ஏக்கர் நிலத்தை (பக்கிங்காம் கால்வாய்க்கு மேற்கே) குறைந்த விலையில் ரூ. 2.7 கோடிக்குத் தமிழக அரசு வழங்கியுள்ளது. இதில் மூர் அங்காடி தற்பொழுது பரவியுள்ள இடத்தை மட்டும், ரயில்வே தனது பயனுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.



# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி! தொழில் வளர்ச்சிக்குத் தேவை டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

டான்சி
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR


# புதுக்கோட்டை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம்


எஸ். டி. காசிராஜன். ஐ. ஏ. எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை.


நாடு விடுதலை பெற்று முப்பதாண்டுகள் கடந்தும் கிராம மக்களுக்கு முக்கியமான சில அடிப்படைத் தேவைகள் முழுமையாகக் கிட்டாத நிலையில் இத் தேவைகளைக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் துரிதமாகத் தீர்த்து வைக்கும் நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது தன்னிறைவுத் திட்டமாகும். நகரங்களும் நகரை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளும் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களிலும் முறையான வளர்ச்சி ஏற்படவும் அதனடிப்படையில் குடிநீர் வசதி, சாலைவசதி (சிறு பாலங்கள் உட்பட) பள்ளிக்கட்டட வசதி, தாய்சேய் நலவிடுதிக் கட்டடங்கள், கழிப்பிடங்கள், சமுதாய மண்டபங்கள் போன்ற வசதிகளுடன் கிராமங்கள் திகழ வேண்டும் என்ற பெருநோக்கின் செயல் வடிவம்தான் தமிழ்நாடு அரசின் தன்னிகரில்லாத தன்னிறைவுத் திட்டமாகும்.

தன்னிறைவுத் திட்டம் முதல் கட்டமாக—

தமிழகத்திலுள்ள 69 ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு 10 கோடிரூபாயில் இம்மாவட்டத்தில் ஐந்து ஒன்றியங்களில் செயல்படுத்துவதற்கு அரசு உதவித் தொகையாக மிக உயர்ந்த அளவில் ரூ. 190.93 இலட்சம் அதாவது இம்மாவட்டத்திற்கு மட்டும் 19 சதவீதம் நிதி ஒதுக்கீடு வழங்கியது தனிச்சிறப்பாகும்.

பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை - கிராமப்புறச் சாலை வசதிகள், இணைப்புச் சாலை வசதிகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் அதிக அளவில் துரிதமாக செயலாற்றப்பட வேண்டியதின் அவசியத்தை அறிந்து, அரசு அதிக அளவு வழங்கிய உதவித்தொகை ரூ. 213.668 இலட்சம் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகை ரூ. 112.332 இலட்சம் ஆகமொத்தம் 3 கோடியே 26 இலட்சம் செலவில் குறியீட்டளவு 2309 பணிகள் செயலாக்கம் பெற்றுள்ளன.

ஒதுக்கப்பட்ட நிதியில் குறியீட்டளவு பணிகள் முடிக்கப்பட்டு அதில் மீதப்படுத்திய சேமிப்பு நிதியில் மேலும் 130 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும்.

இவ்விதம் தன்னிறைவுத்திட்டச் செயலாக்கத்தின் முதல் கட்டத்தில் மாநிலத்திலேயே மிகவும் அதிகமான தொகையை அரசிடம் பெற்று, இருக்கும் குறைந்த வசதிகளையும் மனித சக்தியையும் கொண்டு இயற்கையின் இடர்பாடுகளையும் கடந்து அளவிறந்த பணிகளைக் கிராம மக்கள் வாழ்வு வளம் பெறும் வகையில் செய்து முடிக்கப்பட்டுள்ள (முதற் கட்டத் தன்னிறைவு திட்டப் பணிகள்) மற்றும் செய்யப்பட்டு வரும் இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டப்பணிகள் அறிய சாதனைகளின் தொகுப்பினை மகிழ்ச்சியுடன் அளிக்கிறேன்.

## முதற் கட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசல், அரிமளம், குன்னாண்டார்கோவில், திருமயம், விராலிமலை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் ரூ 3 கோடியே 26 இலட்சம் செலவில் 2039 பணிகள் செய்து முடிக்கப்

சித்தன்னவாசல் சாலையில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 16,000 மதிப்பீட்டில கட்டப்பட்ட சிறு பாலம்.



உட்கார்ந்து இராச் சாப்பாட்டைச் சாப்பிட்டோம்.

அதன்பின் அன்று நல்ல நிலவாயிருந்ததினால் மெத்தைக் களத்தில் பத்திரிகைகளை விரித்து எல்லோரும் உட்கார்ந்தோம். 'நமது தாய்நாட்டுக்காக நான் சிறையில் பாடுபட்டதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள்' என்று பிள்ளை சொல்ல ஆரம்பித்தார். 'என் தேச சேவையை அடக்க வேண்டுமென்ற ராஜ நிந்தனை வழக்குக் கொண்டு வந்து ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனை எனக்கு ஆங்கில அரசாங்கம் கொடுத்தது. நான் சிறைவாசம் செய்தபொழுது கேழ்வரகு அரைத்தல், கருங்கல் உடைத்தல், எண்ணெய்ச் செக்கு இழுத்தல், போன்ற கடின வேலைகளையே செய்தேன். கடவுளை வேண்டிக் கொண்டு நம் நாட்டுக்காகவே இவ்வித கஷ்டமான வேலைகளையெல்லாம் செய்தேனென்ற எண்ணம் என் மனத்தில் அப்படியே ஊறிவிட்டது. கஷ்டமான வேலையை நான செய்த பொழுது எனக்கு அது சிரமமாகவே தோன்றவில்லை. அவ்வித ஆழ்ந்த எண்ணத்துடன் நான் மனப்பூர்வமாய் என்னை அர்ப்பணம் செய்திருந்த நம் நாட்டின் பொருட்டே பாடுபட்டேன். நீங்களும் அவ்வித எண்ணத்துடன் உங்களை நாட்டுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பாடுபட வேண்டும்'' என்று சொல்லி முடித்தார் பிள்ளை. அவர் சிறையில் பட்ட கஷ்டங்களை நாங்கள் மனம் உருகக் கேட்டு வருந்தினோம். பிறகு நாங்கள் எழுந்து போய் பேப்பர் படுக்கைகளை விரித்து, இறைவனை வணங்கிவிட்டுத் தூங்கினோம்.

பிள்ளை மூன்று தினங்கள் எங்கள் ஜாகையில் தங்கினார். அதிகாலையில் பாரதியாருடன் உடற்பயிற்சி செய்தார் பிள்ளை. மூன்று தினங்களும் வெவ்வேறு சாப்பாட்டுப் பண்டங்களை மிகவும் ருசியாய் அவர் சாப்பிட்டார். எல்லாவற்றையும் நாங்களே செய்து கொண்டு. எங்கள் கால்களிலேயே நின்று கொண்டு, நாட்டுக்குப் பத்திரிகை மூலம் தொண்டு செய்து கொண்டு இருந்ததைக் கண்ட பிள்ளை எங்களை மனமார மெச்சினார்.

மூன்றாம் நாள் இரவு பிள்ளை தம் ஊருக்குப் புறப்பட்டார். எல்லோரும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அவரை ரயிலில் அனுப்பினோம். பிள்ளை பாரதியாரை ஆலிங்கனம் செய்த பிறகு எங்களைப் பார்த்து ''எவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாது நாட்டுக்கு உங்களை அர்ப்பணம் செய்து விட்டு சோர்வடையாது நாட்டுக்கே பாடுபடுங்கள், பாடுபடுங்கள்' என்று சொல் எல்லோரையும் வாழ்த்தினார். நாங்களும் அவரை நமஸ்கரித்து மகிழ்ச்சியுடன் அனுப்பினோம்.

*[சென்னை சாரதி பிரசுரம் வெளியிட்டுள்ள "புதுவையில் தேச பக்தர்கள்" என்ற புத்தகத்திலிருந்து.]*



## "சாதி மதங்களைப் பாரோம்!"

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரொடு பெயர்த்து எறிந்துவிட வேணும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராய பேதப்படுவார். வீட்டின் சமையலறையில் செல்லம்மா 'மடி' யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து, கை, கால், கழுவி, நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டுவிடுவார். 'பத்து, தொட வேண்டாம்!' என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார் இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில் இவரது பேச்சே உயர்ந்து நிற்கும்; செல்லம்மா பேசாமல் இருந்துவிடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறு மொழியில்லாமல் ஒப்பி விடுவார். ஜாதி, மதம் ஒன்றையும் பார்க்க மாட்டார். வாயில் பாடுவதைப் போலவே, நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும்காட்டி விடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார்; யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

—"பாரதி நினைவுகள்" என்னும் நூலில் யதுகிரி அம்மாள்.

## காவடிச் சிந்து

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் புகழ் பெற்றவை. ஒருசமயம் எட்டயபுரம் அரசரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளம் பாரதி லேசாக நகைத்தார். 'நகைத்துப் பயனில்லை உங்களால் முடியுமானால் இயற்றுங்கள் பார்க்கலாம்' என்றார் ஒரு புலவர். 'இன்று மாலைக்குள் ஒரு சிந்துடன் வருகிறேன்' என்று கூறி, அப்படியே மாலையி கீழ்வரும் சிந்துடன் அரண்மனைக்கு வந்தார் பாரதி. உடனே புலவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் இப்பாடலை அரங்கேற்றம் செய்வித்தார் அரசர். புலவர் யாவரும் போற்றினர். அந்தச் சிந்தின் ஒரு பகுதி மட்டும் இடைத்துள்ளது.

இப்பாடலைப் பாரதியாரின் தம்பி ஸ்ரீ சி. விசுவநாதன் 1929ல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பாரதி சரிதத்திலும், இ. ஜ. ர. அவர்கள் 1940ல் வெளியிட்ட 'புதுமைக் கவி பாரதியார்' என்ற நூலிலும் காண்கிறோம்.

பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன், கௌ மாரன்-ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன், அடி
பணி சுப்பிர மணியர்க்கருள்
அணி மிக்குயர் தமிழைத்தரு
பக்தர்க் கெளியசிங் காரன்-எழில்
பண்ணு மருணாசலத் தூரன்.

ஆதாரம்: ரா. அ. பத்மநாபன்
தொகுத்த 'பாரதி புதையல்





# பாரதிக்கு நூற்றாண்டு

## வரலாற்றில் சில ஏடுகள்

தொகுப்பு : சீனி விசுவநாதன்

| | |
|---|---|
| 1921 செப். | மகாகவி பாரதியார் மரணத்தைக் கடந்த பின்னர், தீரர் சத்திய மூர்த்தி அவர்கள் அம் மகாகவியின் நூல்களை முறையாகப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். |
| 1922 | பாரதி நூல்களைப் பதிப்பிக்கப் 'பாரதிஆச்ரமம்' என்றதொரு அமைப்பு உருவானது. |
| 1923 | எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை உற்சாகப்படுத்தும் அளவுக்கு இல்லாததால், நூற் பதிப்புப் பணியில் தேக்கம் ஏற்பட்டது. |
| 1924 | 'பாரதி பிரசுராலயம்' தோற்றம்; முறையாகத் திட்டமிட்டு, பாரதியார் நூல்களைப் பதிப்பிக்கக் கருதிச் செயல்பட்டது. |
| 1924 செப். 11 | முதன் முதலாகச் சென்னையில் பாரதியின் திருநாள் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. திரு சுப்ரமணிய சிவா இந்தமுயற்சியை மேற்கொண்டார். |
| 1944 | பாரதிக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த பேராசிரியர் கல்கி அவர்கள் முயற்சி எடுத்தார்; அதற்காக நிதியும் திரட்டினார். |
| 1945 ஜூன் 3 | மகா கவி பாரதி மணிமண்டப அடிக்கல் நாட்டு விழா எட்டயபுரத்தில் நடைபெற்றது. மண்டபத்திற்கான அடிக்கல்லை ராஜாஜி நாட்டினார். இவ்விழாவில் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். |
| 1947 அக். 13 | எட்டயபுர காணி நிலத்தில் கவின் பெருமாளிகையாம் 'பாரதி மணி மண்டபம்' எழுந்தது. ராஜாஜி அவர்களே திறப்பு விழா நிகழ்ச்சிக்கு நாயகராய்த் திகழ்ந்தார். |
| 1949 | சென்னையில் இயங்கி வந்த 'பாரதி சங்கம்' என்ற அமைப்பை கல்கி முறைப்படிப் பதிவு செய்தார்; பாரதியார் நூல்களைப் பொதுவுடைமையாக்க வேண்டும் என்ற கிளர்ச்சியும் தமிழகத்தில் எழுந்தது. அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு ஓ. பி. ராமசாமி ரெட்டியார் பாரதி நூல்களின் பதிப்புரிமையைப் பாரதியாரின் இளைய சகோதரர் திரு. சி. விசுவநாத ஐயரிடமிருந்து பெற்று, அரசுடைமையாக்கினார். திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் தம்மிடமிருந்த பாரதி பாடல்களின் ஒலிப் பதிவு உரிமையை அளித்தார். |
| 1949 ஆக 6. | மகாகவியின் கையெழுத்துப் பிரதிகளில் சிலவற்றைத் திரு சி. விசுவநாத ஐயர் அரசிடம் ஒப்படைத்தார். |
| 1950—52 | சென்னை அரசு பாரதி நூல்களைப் பதிப்பிப்பதற்காக ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்தது. |
| 1953—54 | ''பாரதியார் கவிதைகள்'' நூல் அரசுப் பதிப்பாக வெளியீடப் பெற்றது. |
| 1957 ஏப். | பாரதியாரின் கவிதைகள் வசன கவிதை ஆகியவை கொண்ட தொகுதியின் மலிவுப் பதிப்பு சக்தி காரியாலயத்தினால் ரூ. 1.50 விலையில் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவில் அறிஞர் அண்ணா கலந்து கொண்டார். |
| 1959 | பாரதி உரை நூல்களின் பதிப்பு அரசு வெளியீடாக வெளிவரத் தொடங்கியது. |
| 1960 செப். 11 | மத்திய அரசு பாரதியாரின்அஞ்சல் தலையை வெளியிட்டது. |
| 1982 டிச. 11 | தமிழக அரசு, மகாகவியின் [illegible] பிறந்த நாளைச் சிறப்பான முறையில் சென்னையில் கொண்டாடியது. கட்சி வேற்றுமைகளை மறந்து எல்லா அரசியல் [illegible] களும், அறிஞர்களும் [illegible] |

பட்டுள்ளன. குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரியம் இவற்றின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கான செலவு இதில் அடங்காது.

**குடிநீர் வசதி:**

266 குடியிருப்புகளுக்கு ரூ. 57 இலட்சம் செலவில் குடிநீர்வசதிப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் மயானங்களுக்குச் சாலை வசதி:**

191 பணிகள் ரூ. 10.74 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அமைக்கப்பட்ட சாலைகளின் நீளம் 163.49கி.மீ.

**சிறுபாசன வசதி:**

சிறு பாசன ஆதாரங்கள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துப் 131 பணிகள் ரூ. 10.82 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**கிராமச் சாலை வசதி:**

புதிய சாலை அமைத்தல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ. 2 கோடியே 30 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட மற்றும் மேம்பாடு செய்யப்பட்ட சாலைகளின் நீளம் 1266 கி.மீ.

**சிறு பாலங்கள்:**

சிறு பாலங்கள் மற்றும் மதகுகள் கட்டும் 404 பணிகள் ரூ. 53.76 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**பள்ளிக் கட்டடங்கள்:**

31 புதிய பள்ளிக் கட்டிடங்கள் ரூ. 13.5 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

**தாய் சேய் நல விடுதிகள்:**

11 தாய்சேய் நலவிடுதிக் கட்டடங்கள் ரூ. 5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஊரக மருந்தகம்:**

ரூ. 50 ஆயிரம் செலவில் ஓர் ஊரக மருந்தகம் கட்டப்பட்டுள்ளது.

**ஊராட்சி மன்றக் கட்டடங்கள்:**

இரண்டு ஊராட்சி மன்றக் கட்டடங்கள் சுமார் ரூ. 1 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

**மகளிருக்கான பொதுக் கழிப்பிடங்கள்:**

மகளிருக்காக பத்து பொதுக் கழிப்பிடங்கள் ரூ. 63 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் வீட்டு வசதி:**

ஒரு வீடு ரூ. 3000 மதிப்பீட்டில் 651 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கட்ட வேண்டிய வீடுகளின் இலக்கு 375. இலக்கைப் போல் சுமார் இருமடங்கு அளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளது தனிச்சிறப்புமிகு சாதனையாகும்.

ரூ. 3000 த்தில் ரூ. 1000 அரசு மான்யமாக அளிக்கப்படுகிறது.

மேற்கண்ட ஐந்து முதல் கட்ட தன்னிறைவுத்திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 1965 ஆதி திராவிடக் குடிசைகள் உட்பட 6715 கிராமக் குடிசைகளுக்கு மின்ஒளி வழங்குத் திட்டத்தின் கீழ் மின் வசதி பெற்றுள்ளன.

## இரண்டாம் கட்டம்

தன்னிறைவுத் திட்டம் இரண்டாம் கட்டமாக ஆவுடையார் கோயில் கறம்பக்குடி, திருவரங்குளம், பொன்னமராவதி, கந்தர்வக்கோட்டை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 2 கோடி 8 இலட்சம் செலவில் 1116 பணிகள் செயலாக்கம்பெறுகின்றன. குடிநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம் மற்றும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மதிப்பீடு இதில் அடங்காது. மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் முன்னேற்ற நிலையில் உள்ளன. பணிகளின் செயல்பாடு குறித்து செப்டம்பர் மாதம் முடிய அரசு ஆய்வு செய்ததில் இம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 61.7 சதவீதம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் (1981-82க்குள்) செய்து முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**குடிநீர் வசதி:**

336 குடியிருப்புகளுக்கு ரூ 90 இலட்சம் செலவில் குடிநீர்வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 133 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 203 பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

**சிறு பாலங்கள்:**

428 பணிகள் ரூ. 68.14 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

**கிராமச் சாலை வசதி:**

637 புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் மேம்பாட்டுப்பணிகள் ஒரு கோடி 19 இலட்சம் ரூபாய் செலவில் (மொத்தம் 718 கி.மீ. நீளம்) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பள்ளிக் கட்டடங்கள்:**

34 பள்ளிக் கட்டடப் பணிகள் ரூ. 13.6 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தாய் சேய் நல விடுதிகள்:**

11 தாய் சேய் நல விடுதிக் கட்டடங்கள் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊரக மருந்தகக் கட்டடங்கள்:**

6 கட்டடப் பணிகள் ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் வீட்டு வசதி:**

500 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு சுமார் 342 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**குடிசைகளுக்கு மின் வசதி:**

மேற்கண்ட ஐந்து இரண்டாம் கட்டத் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 1902 ஆதி திராவிடர் குடிசைகள் உட்பட 6251 குடிசைகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது.


அரிமளத்தில் தாய் சேய் நல விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் 3.8.81 அன்று, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



மலைக்குடி பட்டியில் அன்னவாசல் ஒன்றியத்தில் ரூ. 50,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தாய் சேய் நல விடுதி.



இலுப்பூர் பேரூராட்சியில் ரூ 40,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி.



பங்கு கொண்டு பாரதிக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

1968 தமிழகத்தின் தலைநகரான சென்னைக் கடற்கரையில் 2-ம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி பாரதியின் சிலை திறக்கப்பட்டது.

1976 செப். 'ஒருமைப்பாட்டு விழா'வாகப் பாரதி விழாவைத் தமிழக அரசு பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்து வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடியது.

பாரதி ஒளி-ஒலிக் காட்சியை அரசு சென்னையிலும் மாவட்டங்களிலும் நடத்தியது.

சென்னை 'பைகிராப்ட்ஸ் சாலைக்குப் 'பாரதியார் சாலை' எனப் பெயர் சூட்டப்பட்டது.

1981—82 பாரதி நூற்றாண்டு.

---



# அண்ணலின் கண்டனம்!

[பாரதியாரின் பாடல் நூல்களை 1928ல் அன்றைய சென்னை அரசாங்கம் பறிமுதல் செய்து தடையுத்தரவு பிறப்பித்த போது அண்ணல் காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' எனும் பத்திரிகையில் எழுதியதில் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பு :]

நான் இந்த இதழின் பிறிதோரிடத்தில் காலஞ்சென்ற பாரதியார் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் முதற் பகுதியை வெளியிட்டிருக்கிறேன். சரியாகச் சொல்ல வேண்டுமானால் பர்மா அரசாங்கத்தின் உத்தரவின் மீது சென்னை அரசாங்கம் பாரதியின் பாடல்களைப் பறிமுதல் செய்துள்ளது. பர்மா அரசும் எந்த நீதிமன்றத்தின் உத்தரவின் மீதும் பறிமுதல் செய்ததாகத் தெரியவில்லை. தன் சொந்த நிருவாகப் பொறுப்பிலேயே இம்மாதிரி செய்துள்ளது. இந்தப் புகழ் பெற்ற கவிஞனின் பாடல் புத்தகங்கள் சென்ற முப்பது ஆண்டுகளாக மக்கள் புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. சென்னை அரசாங்கத்தின கல்வி இலாகாவும் இக்கவிஞனின் பாடல்களைப் பள்ளி மாணவர்களின் பாடப் புத்தகங்களில் சேர்க்கத் தீவிரமாக ஆலோசித்து வந்திருக்கிறது என்பது இப்போது நீதிமன்றத்தின் முன்னுள்ள சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. இப்பாடல் புத்தகங்கள் இந்தியாவில் எங்கிருந்தாலும் பறிமுதல் செய்யப்பட வேண்டியவையாம். மாகாண அரசுகளுக்கு இவ்வளவு விரிவான அதிகாரம் இருக்கிறதென நான் கேள்விப்பட்டதுகூட இல்லை. நாம் வாழும் காலத்தின் தன்மை இது. எனினும் அரசின் செய்கை நாளடைவில் மக்களின் கவனத்தை ஈர்த்துவிட்டது. இந்தி பிரசாரக் காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீஹரிஹர சர்மாவும், பதிப்பாளர்களும் காலஞ்சென்ற கவிஞரின் ஏழை மனைவியின் சார்பில் பொதுஜன விழிப்பை ஏற்படுத்தினர். இவ்விஷயம் சென்னைச் சட்டசபை வரை எட்டி அங்கு விவாதிக்கப்பட்டது. சட்ட விரோதமானது என்று மிகத் தெளிவாகத் தெரியப்படுத்திப் பறிமுதல் உத்தரவை ரத்து செய்யும்படி அரசாங்கத்துக்கு நீதி மன்றம் உத்தரவிடவேண்டுமெனறு கோரி ஸ்ரீஹரிஹர சர்மா வழக்குத் தொடுத்தார். அதன் விளைவாக ஒரு சமாதானம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசு தன் பறிமுதல் உத்தரவை வாபஸ் பெற்று நூல்களைப் பதிப்பகத்தாருக்குத் திருப்பித்தர இருக்கிறது. கவிஞரின் ஏழை மனைவிக்கும் அரசு நஷ்ட ஈடு கொடுக்க இருக்கிறது. எனவே வழக்கு திரும்பப் பெறப் பட்டது.

**தகவல்: எஸ். வி. எஸ்.**

## பாரதி குடும்பத்தினர் எழுதிய நூல்கள்—விவரம் :

தம்பி : சி. விசுவநாதன் பி.ஏ. எல். டி;
Barathi and his works (1929)

மனைவி : செல்லம்மாள்:
பாரதியார் சரித்திரம் (1944)

மூத்தமகள் : தங்கம்மா பாரதி
அமரன் கதை (1946)
பாரதியும் கவிதையும் (1947)
பிள்ளைப் பிராயத்திலே
எந்தையும் தாயும் (1978)

இளையமகள் : சகுந்தலா பாரதி
என் தந்தை (1974)

பேத்தி : விஜயபாரதி
1. சக்தி வாழ்க (1967).
2. C. Subramaniya Barathi.
3. C. Subramaniya Barathi personality and poetry (1975).
4. மகாகவி பாரதி—ஒரு திறனாய்வு—1978.






# பாரதி ஒரு பத்திரிகையாளர்

**சி. என். கிருஷ்ணபாரதி**
தனி அலுவலர்,
பாரதி நூற்றாண்டு விழாக்குழு

பாரதி ஒரு சுதந்திரப் போராட்ட வீரன்; நாட்டிற்படரும் சாதிப்படைக்கு மருந்து ; மீண்டும் மதங்கள் அண்டா நெருப்பு; 'பெண் விடுதலையின் பொருட்டாக தர்மயுத்தம் தொடங்குங்கள்' என்று குரல் கொடுத்த மாவீரன், தமிழால் எதுவும் முடியுமெனச் சாதித்த பேரறிஞன், உலகின் பல்வேறு முடை நாற்றமிக்க மூடப்பழக்க வழக்கங்களைச் சாடிய மனிதன் என்றெல்லாம் அவனைப் பற்றியறிகிறோம். இத்தகைய முற்போக்கு உணர்வுகளால் மட்டுமே உருவாக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற உயிர்த் தத்துவம் இவரெனக் கண்டோம்.

ஒரு மகாகவி என்ற முறையில் தனது கவிதைத் திறத்தால் மட்டுமே பெருநீதிகளை நிலை நாட்ட முற்படவில்லை. ஷெல்லி, விட்மன் போன்ற பெருங்கவிஞர்களின் கவிதைப் படைப்புகளில் காணப்படும் புரட்சி எண்ணங்களைக் கண்டெடுத்து அன்றைய மேலை நாடுகளில் வாழ்ந்த புரட்சியாளர்கள் மக்களை தட்டி எழுப்பியதாக வரலாறு கூறும். ஆனால் பாரதி அக்கவிஞர்களுக்கு மேலே ஒருபடி சென்று விடுகிறார். தான்பாடும் ஒவ்வொரு பாட்டும், எழுதும் ஒவ்வொரு கட்டுரையும், கதையும் மக்கள் உள்ளத்தை மாற்றுகிறதா என்பதைப் பரிசோதனை செய்தறிந்த மாபெரும் விஞ்ஞானியாகத் திகழ்ந்தார்.

பாரதிக்குக் கவிதையுணர்வு சொல்லாமற் பாகம்பட்டது. அவரது தந்தையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பல்லக்குக்குப் பின்புறமும், பாழடைந்த கோயிலுக்குள்ளும் மறைந்திருந்து கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவையும் சங்க இலக்கியங்களையும், பிற்கால சமய இலக்கியங்களையும் ஆர்வத்தோடு கற்றார். 'தமிழைப் படிக்காதே, தாத்தா வீட்டிற்குப் போகாதே' என்பது தான் அவரது தந்தையின் கட்டளையாம். இயற்கையிலேயே புலமை பெற்றவராக நாவலர் சோமசுந்தர பாரதியாரால் அழைக்கப்படும் பாரதியாரின் தந்தைக்கு ஒரு சலிப்பு. ''தமிழைப் படித்து என்ன செய்யப் போகிறான்?' ஆங்கிலமும், கணிதமும், பொறியியலும் கற்றால் தமது பெருங்கனவான ஓர் தொழிற்சாலையை உருவாக்கலாமே என்பது தந்தையின் நினைவு. அந்தக் காலத்திலேயே (1884 வாக்கில்) சொந்தமாக ஒரு பஞ்சறைக்கும் தொழிற்சாலை நிறுவியவர் பாரதியாரின் தந்தை திரு. சின்னச்சாமி அய்யர். அதனை வெற்றி பெறாது தடுத்தனர் அன்றைய ஆங்கிலப்பஞ்சாலை முதலாளிகள். அவர் உருவாக்கிய பஞ்சாலையின் இடிபாடுகளை இன்றும் எட்டயபுரத்திற்கருகில் காணலாம்.

தனது தந்தையின் பெருங்கனவு பாரதிக்கு வெறும் பணம் சேர்க்கும் ஆசையாகத்தான் தெரிந்தது.

'ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்
ஊணர் செய்த சதியால்
இழந்தான்' என்றும்
'வேர்ப்ப வேர்ப்பப் பொருள்
செய்வ தொன்றையே
மேன்மைகொண்ட தொழிலெனக்
கொண்டனன்' என்றும்
'தேசத்தார் புகழ் நுண்ணறி
வோடுதான்
திண்மை விஞ்சிய நெஞ்சின
னாயினும்
நாசக்காசினில் ஆசையை
நாட்டினன்
நல்லன் எந்தை துயர்க்கடல்
வீழ்ந்தனன்'

என்றும் தனது சுயசரிதைக் கவிதையில் கோடிட்டுக் காட்டுகிறார்.

பாரதியின் கவிதைப் போராட்டம் வென்றது. இத்தகு தந்தையின் உள்ளத்தையும் குளிர வைக்கும் புலவர் அவையில் தனது ஒன்பதாவது வயதிலிருந்தே பீடுமிக்க கவிஞராக ஒளிரத் தொடங்கி, பதினோராவது வயதில் 'சுப்பையா'—சுப்பிரமணிய பாரதியாகப் பட்டம் பெற்றுத் திகழ்கிறார்.

பாரதியின் வாழ்வில் அரண்மனை வாழ்வு நீண்டநாள் சுவைக்கவில்லை. சந்திரவம்சம் சூரியவம்சம், சனிசுவர் வம்சம் என்றல்லாம் ஒரு ஜமீந்தாரைப் புகழ்ந்தாக வேண்டும். தனது சுயசரிதமாகப் புனை பெயர்களுடன் எழுதிய 'சின்ன சங்கரன் கதை'யில் அந்த காலத்து [illegible] ராயர்களது [illegible] இப்படித்தான் [illegible] கொண்டே போகிறார்.

தந்தை இறந்ததும் காசிக்குச் செல்லுகிறார். அங்குதான் பரந்த உலகத்தைக் காணத் தொடங்குகிறார். சமுதாயத்தில் இழிவு படுத்தப்படும் பெண்களின் நிலைகண்டு குமுறத் தொடங்குகிறார். பலமொழித் தேர்ச்சியும் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட போக்கும், முறுக்கு மீசையும், தொங்கு தலைப் பாகையும், கோட்டும் அணியும் வழக்கத்தை மேற்கொள்ளுகிறார். மீண்டும் எட்டயபுர ஜமீன்தாரின் நேரடி விருப்பத்திற்கிணங்க சிலகாலம் எட்டயபுரத்திலிருந்து விட்டு விடுதலை பெற்ற பின்னர் சிட்டுக்குருவியாய் பறந்து விடுகிறார்.

மதுரையில் ஒரு 'தற்காலிக விடுப்பினால் காலியாக இருந்த பணியில் தமிழாசிரியராக மூன்று மாதங்கள் பணிபுரியத் தொடங்கியபோதுதான் மதுரைத் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவர், அரசஞ்சண்முகனார் போன்ற தமிழறிஞர்களின் அறிமுகத்தைப் பெறுகிறார். அவரது முதல் கவிதை விவேகபானு என்னும் இதழில் முதன் முதலாக வெளியிடப்படுகிறது. பாரதியின் மேதை ஒரு பள்ளிக்குள் மட்டும் அடங்கிக் கிடக்க முடியுமா ?

பத்திரிகைகள் என்பவை மேல் தட்டில் வாழ்பவர்களது சுகதுக்கங்கள் – ஆசை, நிராசைகள் இவைகளைப் பற்றி மட்டுமே சொல்லிவரும் ஏடுகளாக அன்றிருந்தன. சமுதாயத்தின் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்பதற்காகவும், உரிமைக் குரலெழுப்பவும் பிறந்தது 'இந்து' ஆங்கில ஏடு. அதன் ஆசிரியர். குழாத்தில் ஒருவராக இருந்த திரு. ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு இதிலும் மனநிறைவில்லை. மக்களது உணர்வை இன்னும் பெருமளவில் பகிர்ந்து கொள்ள ஏடுகள் தமிழில் வரவேண்டுமென ஆர்வங்கொண்டு 'சுதேசமித்திரன்' நாளிதழைத் தொடங்கினார். ஆனால் அதற்கும் நல்ல தமிழில் எழுதி மக்களோடு உறவாட ஆசிரியர்கள் வேண்டுமே? அப்படித் தேடியபோது கிடைத்த மாமணிதான் அன்றைய தமிழாசிரியர் சுப்பிரமணிய பாரதியார்.

1904-ஆம் ஆண்டிலிருந்து இறுதி மூச்சுவரை 17 ஆண்டுகள் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார் பாரதி. அவரது 39 ஆண்டு வாழ்வில் பெரும்பகுதி பத்திரிகைக்காரராகவே தானிருந்தார். முதலில் ஆங்கிலச் செய்திகளைத் தமிழாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். மக்களது உள்ளத்தைச் சார்க்கும், எளிய தமிழில் கட்டுரைகள் வரைந்தார். 'சர்வதேச வர்த்தமானங்களும்' 'உள்நாட்டு விவகாரங்களும்' எழுதிக் குவித்துக் கொண்டிருந்த பாரதிவெறும் பேனா பிடித்த இயந்திரமாக மட்டும் இருந்துவிட முடியுமா? அன்றிருந்த தேசியக் கனல் அவரையும் பற்றியது. அன்றைய காங்கிரசில் வளர்ந்து வந்த மிதவாதக் கொள்கையைச் சாடினார். ஆனால் அவர்கள் வளர்த்த சமூகச் சீர்திருத்தக் கொள்கைகள் இவரை ஈர்த்தன. இருப்பினும் பெரியவர் தாதாபாய் நவ்ரோஜி, மராட்டிய மாவீரர் திலகர், வங்கத் தலைவர் விபின்சந்திர பாலர், பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி ராய் ஆகியோர்களது சுதந்திர வேட்கைமிக்க சொற்பொழிவுகளும், எழுச்சி மிக்க எழுத்துக்களும், தட்டி எழுப்பிய செயல்களும் பாரதியைச் சுதந்திரப் பாசறை வீரராக்கிவிட்டன. தமிழகத்தின் திலகராயிருந்த வ. உ. சி. யின் நட்பும், சிந்தனை வீரன் சுப்பிரமணிய சிவாவின் உறவும்அவரது நாட்டுப் பற்றுக்கனலை மேலும் வளர்த்தன. சுதேசமித்திரன் ஆசிரியர் தீவிர தேசபக்தராக இருந்தும் பாரதியின் கனல் அவருக்கும் கொஞ்சம் அச்சத்தைக் கொடுக்கத் தொடங்கியது. ஆசிரியரைக் காப்பாற்ற பாரதி புனை பெயரில் பல ஆவேசக் கட்டுரைகள் எழுதினார். அவரது வரலாற்று உணர்வுக்கு வடிகாலாகச் 'சக்கரவர்த்தினி' என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது. தனது எழுத்தால் மட்டுமே மனநிறைவு பெறாத பாரதி இருமுறை தமிழ் நாட்டுக் கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். தேசபக்திப் பாடல்கள் எழுதும் கவிஞர்கள் தமது பத்திரிகைக்கு எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அதனால் பலனேதும் கிடைத்ததாகத் தெரியவில்லை. பாரதியின் கவிதை உள்ளம் இன்னுமா உறங்கிக் கிடக்கும் ? தேசிய உணர்வோடு கலந்த கவிதை மழை பொழியத் தொடங்கிவிட்டது. தமிழ் நாடெங்கும் இப்புதுக் கவிதைகள் வியப்பையும், ஆர்வத்தையும் தூண்டிவிட்டன. தமது கவிதை செய்த மாபெரும் மாயா ஜாலத்தைப் பார்த்த பாரதி அவைகளைப் பட்டி தொட்டியெல்லாம் பரப்ப ஆர்வங்கொண்டார். சிறுகவிதை நூலொன்று இலவசமாக வெளியீட்டு மக்களிடை வினியோகிக்க உள்ளங்கொண்டு பணவுதவி தேடினார். அவரால் மிதவாதியெனப் பெரிதும் தாக்குதலுக்குள்ளான திரு. கிருஷ்ணசாமி ஐயர் இக்கவிதைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே அதன் பதிப்பிற்கான தொகையைக்கொடுத்துவிட்டார். அதன் பின்னர்தான் கவிஞர் தம்மைச் சாடி எழுதிய சுதேசமித்திரன் துணை ஆசிரியர் என்று தெரிந்து கொண்டார். "தீவிரவாதிகளென்போர் இவ்வளவு ஆழமான தமிழ்ப்பற்றும் தேசபக்தியும் கொண்டவர்களாக இருக்கிறார்களே!" என்று கூறி பாரதியை ஊக்குவித்தார். *

உணர்ச்சி வேகத்தில் மட்டுமே பாரதி தனது கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதி வெளியிடவில்லை. அவரது ஒவ்வொரு எழுத்தும் தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப வேண்டும் என்பதிலேயே கருத்துக் கொண்டார். தமிழ்ச் சாதியை மேன்மையுறச் செய்ய தனது எழுத்துப் பணி மட்டுமின்றிநல்லகருத்துகள் கிடைக்குமிடமெல்லாம் தேடியலைந்தார்.

'சக்கரவர்த்தினி' மாத இதழில் அன்று வங்காளத்தில் பெரும்புகழ் பெற்றிருந்த வந்தே மாதரப் பாடலைத் தமிழில் மொழி பெயர்த்தார். அதற்காகச் சிறப்பானதோர் முன்னுரையும் எழுதினார். இம்மாத இதழின் ஆசிரியராகத் துவக்க முதல் பதிமூன்று மாதங்கள் மட்டுமே இருந்ததாகத் தெரிகிறது. இவ்விதழின் சிலஇதழ்கள் தற்போதுதான் திரு. சீனி. விசுவநாதன் முயற்சியால் கிடைத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவ்விதழ்களில் பாரதி பெரும்பாலும் மக்களுக்கு அறிவூட்டும் கட்டுரைகளையும், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் எழுதி வந்தார். பெண் விடுதலை பற்றிய கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. தனது கொள்கையிலிருந்து மாறுபட்ட கோகலே பற்றியும் கட்டுரை வெளிவந்துள்ளது. 'பாரதகுமாரிகள்' என்ற கட்டுரையில் பழம்பெருமை வாய்ந்ததாகக் கூறப்படும் பாரத நாட்டில் "இப்போது ஆண்மையிழந்து, சுயமதிப் பற்று தேசாபிமானத்தின் பெயரறியாமல் நோய், மிடி, அறியாமை என்ற படுகுழிகளிலே வாழ்ந்துகிடக்கும் பேதைகளா பிறக்க வேண்டும்?" என்றும் மனம் வெதும்புவதுடன் புதிய நாடுகளான ஜப்பான், ரஷ்யா போன்ற நாட்டு மக்களின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டி விளக்குகிறார். தேசத்தின் சக்தி ரூபங்களாகிய மாதர்களை அறிவின்மையென்னும் பேரிருளில் ஆழ்த்தி வைத்துவிட்டுத் 'தேசாபிவிருத்தி, தேசாபிவிருத்தி' என்று கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்போம் என்று இடித்துக் காட்டுகிறார்.

சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி ஆகிய இதழ்களில் நிறுவனர்களின் கட்டுக்குள் நின்று எழுதுவதில் முழு நிறைவு பெறவில்லை பாரதி. பரந்த உணர்வோடும், தேசியப் பற்றுடனும் இவ்விதழ்கள் நடத்தப் பெற்றிருப்பினும் பாரதியின் தீவிரவாதப் பெருக்கு அவற்றையும் விஞ்சி நல்லதோர் வடிகாலை எதிர் நோக்கி ஏங்கி நிற்கும் நேரத்தில் மண்டயம் சீனிவாச அய்யங்கார் 'இந்தியா' வார இதழைத்துவக்கினார். இவ்விதழைப் பாரதியாருக்காகவேதான் துவக்கினாரோ என்னவோ? முதலில் மித்திரனில் இருந்து கொண்டு பகுதி நேர ஆசிரியராகப் பணிபுரிந்த பாரதி பின்னர் முழுநேர ஆசிரியராகிவிட்டார். தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் போன்றவர்கள் சுதேசமித்திரன் பத்திரிகையிலேயே தொடர்ந்திருக்கவேண்டுமென இரு தரப்பிலும் வாதாடிய போதும் பாரதியார் முடிவை மாற்ற முடியவில்லை. பதிப்பாளர், ஆசிரியர் பெயர்கள் வேறாக இருப்பினும் 'இந்தியா' அவருக்குச் சொந்த வீடாயிற்று.

தனது தீவிர வாதக் கொள்கைகளைத் தட்டுத் தடங்கலின்றி மக்கள் உள்ளத்தில் பதியுமாறு எழுதத் தொடங்கினார். மிதவாதத் தலைவர்களைப் பற்றியும் அவர்களது கொள்கைகளையும் அஞ்சாது விமர்சித்தார். அன்றைய ஆங்கில அரசின் கொள்கைகளையும், அயல்நாட்டு செய்திகளையும் தெளிவாக மக்கள் விரும்பி ஆவலுடன் படிக்குமளவு கதைபோல் எழுதுவார். அன்றைய அரசியல் நிலவரங்களை வேடிக்கைக் கதைகளாக்கி விமர்சித்ததும் உண்டு. இதழ்களென்றால் வெறும் அரசியல் விவகாரங்கள்தான் எழுத வேண்டுமென்ற நிலையை மாற்றி சமுதாயமாற்றத்திற்கான ஆக்கபூர்வ யோசனைகள், பெண் விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவை பற்றி அவ்வப்போது ஆய்வுக் கட்டுரைகள் மக்கள் கருத்துக்களை சார்க்கும் கருத்து மேடை, கடிதங்கள் ஆகிய புதிய துறைகள் பலவற்றை ஊக்குவித்தார். அவரது மற்றொரு போற்றத்தக்கதும் துணிச்சலானதுமான செயல் கருத்துப்படங்களை மிகப் பெரிய அளவில் வெளியிட்டதுதான். பெரும் பிரச்சினைகளையெல்லாம் உடனே மனதில் பதியுமாறு கருத்துப் படங்களாக வரைய வைத்தார். அப்படங்கள் தலையங்கம் பக்கத்தில் மட்டுமின்றி அட்டைப் படத்திலும் வரத்தொடங்கின. கருத்துப் படங்களின் விபரத்தைக் கதையாகவோ, விளக்கமாகவோ எழுதத் தவறியதேயில்லை. ஓரளவு படித்த மக்களையும் சார்க்க வேண்டுமென்பதில் பெருங்கவனம் செலுத்திய முதல் பத்திரிகையாளர் பாரதிதானென்றால் அது மிகையல்ல. பத்திரிகைத் துணுக்குகள், கேலித் துணுக்குகள் எல்லாவற்றிலுமே முற்போக்குச் சிந்தனைதான்! பெருங்கருத்துகளை மிக எளிதாகப் புரிந்து கொள்ள அவர் பயன்படுத்திய சாதனங்கள் பலப்பல.

1906, 1907-ஆம் ஆண்டுகளில் இந்தியா இதழில் பாரதி எழுதி வெளியிட்ட கட்டுரைகளின் இரண்டு தொகுப்புக்களைத் திரு இளசை மணியன் அவர்கள் 'பாரதி தரிசனம்' என்ற பெயரில் பெருமுயற்சி எடுத்து வெளியிட்டிருக்கிறார். தவறுகள் எங்கு எவர் செய்தாலும் கண்டிப்பது மட்டுமல்ல நல்லவை எவர் செய்தாலும் ஏற்கும் பண்பினை இக்கட்டுரைகளில் காணலாம். எட்டையபுரம் ஜமீன்தார் தேசியப் போக்குக்கு எதிர்ப்புக் காட்டியபோது கண்டித்தும், அதன்பின் அவர் பணிந்து வந்த போது போற்றியமையும் இதற்கொரு சிறந்த சான்றாகும்.

கோகலே மிதவாதியாக இருப்பினும் ஒரு காலத்தில் அன்னியத் துணிகளை வெறுத்தொதுக்கினார் என்று செய்தியறிந்து பாராட்டுகிறார். அத்துடன் அச்செய்தி அனுப்பியவரையும் பாராட்டத் தவறவில்லை.

வ. உ. சி. யின் தேசியப் பணிகள், கப்பலோட்டிய தீரம் ஆகியவற்றைக் கட்டுரைகளாகவும் கருத்துப் படமாகவும் 1907 சனவரி முதல் மே வரைக்கும் வெளியிட்டுள்ளார். தொழிலாளர் இயக்கங்களுக்கு அவர் அளித்து வந்த ஒத்துழைப்பும் ஆர்வமும் அளவிடற்கரியனவாகும்.

இந்தியா பத்திரிகை 'யங் இந்தியா' 'பால பாரதா' என்ற ஆங்கில இதழ்களையும் பாரதியை ஆசிரியராகக் கொண்டு நடத்தியது. திலகர் போன்ற பெருந்தலைவர்களின் கொள்கைகளை ஆங்கிலம் கற்றவர்களிடமும் பரவச் செய்ய இவ்விதழ் பயன்பட்டது. ஆங்கிலத்திலும் மிகவும் வலிமை மிக்க ஆசிரியராகப் பாரதி திகழ்ந்தார்.

பாரதியின் அதிதீவிர எழுத்துக்கள் அன்றைய அன்னிய அரசை நடுநடுங்கச் செய்தன. "இந்தியா"வின் மீது அவர்களது பார்வை திரும்பியது. "இந்தியா"வின் சட்டரீதியான ஆசிரியராகவிருந்த திரு. சீனிவாசன் கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்தார். அடுத்து பாரதியார் கைது செய்ய வேண்டிய நிலை உருவாகிவரும்போது நண்பர்களது உறுதியானவேண்டுகோளை ஏற்று பாண்டிச்சேரியில் புகலடைந்தார்.

அங்கு சென்றும், அவரது எழுத்தார்வம் குன்றவில்லை. 'இந்தியா'வும் பாரதியில்லாது வாழ முடியவில்லை. மண்டயம் சீனிவாச்சாரியார் அவர்கள் பெருமுயற்சி செய்து 'இந்தியா' வார இதழை அச்சகத்துடன் பாண்டிச்சேரிக்கு மிகக் குறுகிய காலத்தில் மாற்றிவிட்டார். பாரதியின் இடந்தேடி விருந்துவந்துவிட்டது. சொல்ல வேண்டுமா ஆர்வத்திற்கு? கனல் கக்கும்கட்டுரைகள் மீண்டும் தொடர்ந்தன. கார்ட்டூன்கள் நிறைந்த "பத்திரிகை மீண்டும் மலர்ந்தது. இந்தியப் பகுதியிலிருந்து எத்தனையோ ஆர்வமிக்க இளைஞர்கள் செய்திகளைச் சேகரித்து அனுப்பத் தொடங்கினர். விற்பனையும் பெருகியது. பாரதிக்கு இடமாற்றமே தவிர ஆர்வப்பணிக்குக் குந்தகமேதும் ஏற்படவில்லை. ஆனால் ஒரு சர்வதேசிய நிகழ்ச்சி இப்பணிக்கும் தொல்லை அளிக்க ஆரம்பித்தது.

முதல் உலகப் போர் தொடங்கியதும் இங்கிலாந்தும் பிரான்சும் நட்பு நாடுகளாயின. ஆகவே ஆங்கில அதிகாரிகள், காவல் துறையினர் ஆகியோரின் நடமாட்டம் புதுச்சேரியில் பெருகத் தொடங்கியது. 'இந்தியா' இதழும் செல்ல முடியவில்லை. அதற்கான செய்திகளின் வருகையும் குறைய ஆரம்பித்தது. 'இந்தியா' மிகவும் தொல்லைகளுக்குள்ளான நிலையில் பாரதியின் பத்திரிகைப் பணி துவள ஆரம்பித்தது.

இக்காலத்தில் அரவிந்தர் தொடங்கிய 'கர்மயோகின்' இதழின் தமிழ் வெளியீடாகிய 'கர்மயோகி' என்ற இதழை நடத்தும் பொறுப்பைப் பாரதி ஏற்றார். 'தர்மம்' 'சூரியோதயம்' இதழ்களிலும் எழுதி வந்தார். பின்னர் 'விஜயா' என்ற நாளேட்டிலும் பணி புரியத் தொடங்கினார். சுப்பிரமணிய சிவா நடத்திய 'ஞானபானு'விலும் பின்னர் எழுதத் தொடங்கினார். New India, Common wheal Arya, Hindu போன்ற இதழ்களுக்கும் கட்டுரைகள் எழுதி வந்தார்.

புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் பாரதியின் தத்துவக் கருத்துக்கள் யோகி அரவிந்தர், வ. வே. சு. அய்யர் போன்றாரின் நட்பால் புதுவடிவு பெற்றன. இலக்கியப் பணியும் பெருமளவில் வளர்ந்தது. கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்போன்ற இலக்கியப் படைப்புகள் இக்காலத்தில் உருவாயின. 'சுதேசமித்திரன்' தனது ஆரம்ப துணை ஆசிரியரைக் கைவிடாது அவ்வப்போது சில கட்டுரைகள், கவிதைகள், கதைகள் பெற்றுக் கொண்டு மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை அனுப்பிவந்தது.

மகாகவி


# பாரதியார் நூற்றாண்டு விழா


## ஓர் அறிவிப்பு

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை 1981 டிசம்பர் 11ம் நாள் முதல் 1982 டிசம்பர் 11-ம் நாள் வரை சிறப்பாகக் கொண்டாட அரசு தீர்மானித்துள்ளது. இந்நூற்றாண்டு விழாவினையொட்டி, பாரதியார் நூல்களை வெளியிடுதல், நூற்றாண்டு மலர் வெளியிடுதல், கண் காட்சி, கலைக்கூடம், நினைவு மண்டபங்கள் அமைத்தல் ஆகியவற்றிற்கு அரசு திட்டமிட்டுள்ளது. பாரதியாரோடு தொடர்புடைய பெருமக்கள் தமக்குத் தெரிந்த, தம்மிடமுள்ள வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்புகள், புகைப் படங்கள், கடிதங்கள், கட்டுரைகள், எழுத்து வடிவங்கள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள் ஆகியவற்றை ஆதாரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம். பணி முடிந்ததும் அவை மறுபடியும் உரியவர்களிடம் நன்றியுடன் ஒப்படைக்கப்படும். அரிய சேமிப்புகளாக இருப்பின் உரிய அன்பளிப்பு அளிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

**தனி அலுவலர்,**
**மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா,**
**செய்தி, சுற்றுலா (தமிழ்)**
**பண்பாட்டுத்துறை**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை-600 009.**






மகாகவி பாரதியாரின் மறைவினை ஒட்டி அத்துயர நிகழ்ச்சி சென்னை மாநகராட்சி மரணக் குறிப்பேட்டில் பதியப்பட்டதின் அசல் படிவம்.

'September 12, Brahmin, C. Subramaniya Bharathi, Male, 38, Sub-Editor, acute dysentery 10 days, 67, T. P. Koil street, C. Viswanatha Iyer, Brother, 67, T. P. Koil street'' என்று ஆங்கிலத்தில் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா

கடந்த நூற்றாண்டில் தோன்றி, இந்த நூற்றாண்டில் நம் நாட்டின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக விளங்கிய பெருமக்களில் ஒருவர் மகாகவி பாரதியார்.

பாட்டுக்கொரு புலவனாக-பைந்தமிழ்த் தேர்ப்பாகனாக-செந்தமிழ்த் தேனீயாக-சிந்துக்குத் தந்தையாக–அனைத்துக்கும் மேலாக மக்கள் கவியாக விளங்கிய மாபெரும் மனிதர் கவியரசர் பாரதியார்.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாவை 1981 – ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் முதல், 1982-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் முடிய ஓராண்டுக காலம் சிறப்பான முறையில் கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. தொடக்க விழா, பாரதியார் பிறந்த ஊரான எட்டையபுரத்தில் டிசம்பர் 11, 12, 13 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறும்.

தொடக்க விழாவிற்கும் 1982-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் முடிய நடைபெறவிருக்கும் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கும் இடையிலுள்ள ஓராண்டுக் காலத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் ஏனைய மாநிலத் தலைநகரங்களிலும், டெல்லியிலும், குறிப்பிட்ட சில வெளிநாடுகளிலும் விழாவினை நடத்தலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இருந்து திரும்பிய பின்னரும் கடையம், எட்டயபுரம் போன்ற ஊர்களில் வாழ்ந்த போதிலும் சுதேசமித்திரன் போன்ற இதழ்களுக்கு எழுதி வந்தார். அவரது பத்திரிகை உணர்வு சும்மாயிருக்க விடவில்லை. உடல் நலம்குன்றியிருந்த போதிலும் பிடிவாதமாக மீண்டும் சுதேசமித்திரன் நாளிதழில் சேர்ந்து பணிபுரிந்தார். இறுதிக் காலம் வரை பாரதி பத்திரிகைப் பணிகளிலேயே ஈடுபட்டார். உடல் நலமில்லாது விடுமுறை எடுத்திருந்து மீண்டும் திரும்பி வருவதாக எழுதியிருந்தநாளுக்கு முந்தைய நாளில் உயிர் நீத்தார். அவர் மறைவிற்கு வருத்தம் தெரிவித்து மித்திரன், இந்து போன்ற நாளிதழ்கள் தலையங்கம் எழுதின.

பாரதியின் பத்திரிகைப்பணி பாரதியின் வாழ்வில் மட்டுமின்றி தமிழ்நாட்டுப் பத்திரிகை வாழ்வில் ஒரு புரட்சிகரமான திருப்புமுனை என்பதை நாம் மறக்கக் கூடாது. ஒரு மகாகவியாகவும் தேசிய சமூகச் சீர்திருத்தத் தலைவராகவும் பெருமளவு உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பாரதியின் இதயத்தின் அடித்தளத்தில் மக்கள்தொடர்பு உணர்வு மண்டிக் கிடந்ததை நாம் மறந்துவிட முடியாது.

சிறந்த கருத்துக்கள், எண்ணங்கள், விஞ்ஞானப் புதுமைகள் ஆகியவை மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தார். கருத்துக்களோ செய்திகளோ தவறாக வெளியிடப்பட்டால் அவற்றைத் திருத்திக் கொள்ளுவதில் பாரதி பின்னடையவேயில்லை. தமது செய்தி அல்லது எழுத்தால் திருந்தியவர்களைப் போற்றவும் தவறியதில்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக தமது ஆதர்சத் தலைவர்களென ஏற்றுக் கொண்ட பெருந்தலைவர்களது பேச்சிலும், சொல்லிலும் தவறாகப் பட்டதையும் எடுத்துக் காட்டத் தவறவில்லை.

காந்தியடிகளின் பெருமையையும் சிறப்பையும் தென்னாப்பிரிக்காவில் அவர் போராட்டம் நடத்தியபோதே முதன்முதலாக அனைந்திந்திய அளவிலேயே உணர்ந்த மாபெரும் தீர்க்கதரிசி பாரதிதான். திலகரின் தீவிர வாதத்தைப் பரப்பி வந்த பாரதி காந்தியடிகளிடம் எதிர்கால அரசியல் தலைமைக் கரு வளர்ந்து வருவதை நன்குணர்ந்தார். அவரது இந்தியாவில் வெளியான கட்டுரைகள் மாத்திரமின்றி கருத்துப் படங்களும் இதைப் பறை சாற்றுகின்றன. வங்காளம், பாஞ்சாலம், மராட்டியம் போன்ற மாநிலங்களுக்கு ஈடாகத் தீவிரவாத அரசியலில் வீறு நடை போடத்துவங்கிய தமிழகத்தைக் காந்தி யுகத்திற்குத் தயார் செய்த பெருமையும் பாரதியைத்தான் சாரும். காந்தியத் தலைமையை ஏற்ற ராஜாஜி போன்ற தலைவர்களும் இதனை நன்குணர்ந்து போற்றியுள்ளனர்.

அதுபோன்ற சமதர்மக் கருத்துக்களையும் ரஷ்யப் புரட்சியின் துவக்க காலத்திலேயே உணர்ந்து அதன் சிறப்பை மக்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்தவரும் பாரதிதான். சமதர்மக் கருத்து பரவ இந்திய நாட்டில் அமைதிப் புரட்சி நடத்த வேண்டுமென்பதையும் அவரது 'செல்வம்' என்ற கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

தீவிரவாத அரசியலில் பழிக்குப் பழி வாங்கும் உணர்வை முழுக்க முழுக்க ஆதரிக்காத முதல் தீவிரவாதி பாரதி. ஓர் ஆங்கில நாளிதழ் கொடுங்கோலனான லார்டு கர்சனின் மனைவியின் மரணம் தெய்வ தண்டனை என்று கூறியதைக் கண்டித்து எழுதினார் பாரதி. காரணம், 'பகைவனுக்கு அருள்வாய்' என்ற பண்பை பத்திரிகையாளர் வளர்க்க வேண்டுமென்பது பாரதியின் கருத்து ஆகும்.

ஆவேசக் கவிஞனாகவும், பத்திரிகையாளராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்த பாரதியின் நகைச்சுவை, நையாண்டிக் கட்டுரைகள் ஆகியவை ரசித்துப் பின்பற்றத்தக்கன. பெரிய கருத்துக்களையும் தத்துவங்களையும்கூட மனதைத் தொடும் கதைகள் மூலம் வெளியிட்டார். மக்களைக் கொதிக்க வைக்கும் பல நிகழ்ச்சிகளையும், சிரிக்க வைத்தே சிந்திக்கச் செய்தார். அவரது 'தராசு'க் கட்டுரைகள் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

பாரதியின் பத்திரிகைப்பணி மகத்தான தொன்றாகும். இன்றைய புதுமைப் பத்திரிகையுலகிற்குப் பெரியதோர் வழிகாட்டியான பணிகள் பலவும் செய்த பெருமை பாரதிக்கு உண்டு. அவரது மேதைத்தன்மையும், துன்பங்களைக் கண்டு பொங்கும் அருட் பண்பும் தமிழன் உயர உயரப் பறக்க வேண்டுமென்ற பேரார்வமும் அவரைப் பெருங் கவிஞராய் பெரும் போராட்ட வீரராய் புகழ்மிகு பத்திரிகையாளராய் திகழச் செய்த ..

வாழ்க பாரதி.



# கற்றோரை ஈன்ற கரிசல்மண் பூமி



இளசை;

எட்டையபுரத்துக்கு இப்பெயரும் உண்டு.

1557—ல் தோன்றிய ஊர் எட்டையபுரம் என்பர். திருநெல்வேலிச் சீமையில் ஒட்டப்பிடாரம் வட்டத்தில் அமைந்த இவ்வூர் கரிசல் மண் நிறைந்த ஊராகும்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் வீரம் கமழ்ந்த ஊரெல்லாம் இதனைச் சுற்றியுள்ளன.

'மானம் பொழியுது பூமி விளையுது' வாணிபத்துக்கு வந்து இங்கே ஆள முயல்பவனே, அந்நியனே உனக்கு ஏன் கப்பம்' என்று சூளுரைத்த கட்டபொம்மன் ஆண்ட பாஞ்சாலங்குறிச்சி:

கப்பலோட்டிய வீரத்தமிழ்மகன் வ. உ. சிதம்பரனார் பிறந்த ஒட்டப்பிடாரம்:

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற தியாக மறவர்கள்-விடுதலைப் போராட்ட வீரர்களும் வாழ்ந்த தென்பாண்டி மண்டலத்தின் பெருமைக்குரிய ஊர்களில் ஒன்றுதான் எட்டையபுரம்.

எட்டையபுரத்தில்தான் எத்தனைப் புலவர்கள், எத்தனைக் கவிஞர்கள்.

தமிழுக்கு அணி சேர்த்த கடிகை முத்துப் புலவர் எட்டையபுரத்தில் பிறந்தவர். அவரின் மாணாக்கராக இருந்தவர் உமறுப்புலவர்.

சீறாப்புராணத்தை அளித்த உமறுப் புலவர் எட்டையபுரத்துக்காரர். இவரின் தர்க்காவும் எட்டையபுரத்தில் உள்ளது.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீக்ஷிதர் இறுதிநாட்களில் வாழ்ந்த ஊரும் இதுவே. அவரது நினைவகம் இங்கேதான் உள்ளது.

பாட்டுக்கொரு புலவனாக விளங்கிய பாரதி இந்த நூற்றாண்டின் ஈடில்லா மக்கள் கவியாக திகழ்ந்த பாரதியார் பிறந்த ஊர் இது.

பாரதியோடு படித்து பைந்தமிழ் வளர்த்த அருந்தமிழ்ப் புலவர் நாவலர் சோமசுந்தர பாரதியார் பிறந்த ஊரும் இது.

கன்னித் தமிழ் வளர்த்த கற்றோரை ஈன்ற இந்தக் கரிசல் மண் பூமியில்தான் நெல்லைச் சீமையில் விளையும் பருத்தியில் பாதி விளைகிறது. பாரதியால்—பைந்தமிழ் வளர்த்த பாவலர்களால் பெரும் பேற்றினைப் பெற்ற எட்டையபுரம் எதிர்காலத்தில் மேலும், சீரும் சிறப்பும் பெற தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வமான பல திட்டங்களை நிறைவேற்றிட உள்ளது.

## "வந்தே மாதரம்" பாரதி

1920-ம் ஆண்டு சுதேசமித்திரன் காரியாலயம் சென்னை ஜார்ஜ்டவுன் எர்ரபாலு செட்டி தெருவில் இருந்தது. அச்சமயம் கவிபாரதியார் புதுச்சேரியிலிருந்து திரும்பி வந்து மீண்டும் சுதேசமித்திரனில் பணியாற்றினார். தினசரிகாலை ஆபீசுக்கு வந்ததும் ஆசிரியர் ஸ்ரீ. ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் அறை மற்றும் நிர்வாகி பதவியிலிருந்த ஸ்ரீ ஸி. ஆர் ஸ்ரீநிவாஸன் அறைபக்கம் மூடிய பாதி கதவுகள் வரை வந்து எட்டிப் பார்த்துவிட்டு, ''வந்தேமாதரம்! பாரதி வந்துவிட்டேன்'' என்று கணீரென்ற குரல் கொடுத்தவாறு தமது இருப்பிடத்திற்குச் சென்று விடுவார். பாரதியார் நடையில் விறைப்பு இருக்கும். தனக்கே உரித்தான பாணியில் மூன் பாதங்களை எம்பி எம்பி நடந்து வருவார். கையை இடுப்பில் கட்டிக் கொண்டு உலாவுவார். பத்திரிகை வேலைகள் முடிந்ததும் ஊழியர்கள் பாரதியார் இருப்பிடத்திற்கு வந்து பேசுவதுண்டு. பேச்சு வாக்கிலேயே ஊழியர்கள் பாரதியாரை, ''ஏதாவதுபாட்டுப் பாடுங்கள் கேட்கிறோம்' என்று கேட்பார்கள். அதற்கு பாரதியார் 'பாட்டா பாட வேண்டும்? நினைத்தபோது பாட வராதே. பராசக்தி என்னைத் தூண்டினால் தான் பாடுவேன். வேண்டுமானால் அவளிடம் முறையிடுங்கள்' என்று கூறிவிட்டு. தனது மீசையை முறுக்கி விட்டு விறைப்பாக இங்குமங்கும் நடப்பார். ஊழியர்கள் விட்டு விடுவார்களா? உடனே, 'தாயே! பராசக்தி! எங்கள் பாரதியைப் பாடச் சொல்லுங்கள்' என்று வேடிக்கையாக கூறுவார்கள். இது கேட்டதும் பாரதி 'பாட்டுதானே கேட்டீர்கள். இதோ பாடுகிறேன். கேளுங்கள்' என்று கூறிவிட்டு ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டேபராசக்திப் பாட்டுகளைப் பாடிவிட்டுச் செல்வார்.

இதுபோலவே பிற்பகலில் சாப்பிடுவதற்காகப் பச்சை வாழைப்பழமும் நாட்டுச் சக்கரையும் வாங்கி வந்து கொடுத்ததும் அதனைக் கையில் வாங்கி ஆகாயத்தில் சூரியனுக்குக் காட்டிவிட்டு ஏதோ முணுமுணுத்துவிட்டு பின்னர் தான் சாப்பிடுவது வழக்கம். வாழைப்பழம் சக்கரையை நண்பர்களுக்கும் கொடுப்பார்.

**ஆதாரம்:** அமரகவி பாரதியாரின் 50-வது ஆண்டு நினைவு அஞ்சலி-சிறப்புப் பகுதி 'சுதேசமித்திரன்' 11-9-1971.

தொகுத்தது:



# தமிழருக்கு வாழ்த்து!

## மகாகவி பாரதியார்

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர், சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ''ஜாதியிரண்டொழிய வேறில்லை'' என்ற பழந் தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை ''வாழ்க்கைத் துணை'' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின்பு நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்து கொள்ளாதே.

தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகிகக் கொள்கைகள், வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும் தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் எப்போதும் நேர்மையிருக்க வேண்டும். உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தலங்களுக்கெல்லாம் உயிர்.

உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் நிலவும்படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. ''முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்'' என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? ''தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லிய மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்'' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது, உனக்கும் உனது சுற்றத்தாருக்கும், பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. 'பிறர்' என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும்' கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும் கலையும் புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸவஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம் தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவின் அறிவு கலந்து நிற்பது ''வீடு'' என்ற சொல்லுக்கு ''விடுதலை'' என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிப் பெரியாருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான். தமிழா, உனது புருஷார்த்தங்கள் கூடுக!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி—கார்த்திகை 16




"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு"

Licence No. TN




16-12-1981 50 காசு






காவல் துறைப் படையினருக்

# தமிழக முதல்வரின்
## விருதுகள் வழங்கும் விழ

சென்னை 30-11-198









# சுற்றுலா வட்டம்!

மாண்புமிகு செய்தி-அறநிலையத்
துறை அமைச்சர்
திரு. இராம. வீரப்பன்

இம்மாநாட்டில் கலந்துகொள்வதிலும் மதிப்பிற்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துக்களையும் நல்லெண்ணத்தையும் இங்குள்ள பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துக்கொள்வதிலும் நான் மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

**சுற்றுலா வட்டம்!**

சுற்றுலா வட்டங்களை (Travel Circuits) மேம்படுத்தும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு வரவேற்று ஆதரவு நல்கிட உள்ளதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்முயற்சிக்காக திரு. ஏ.பி. சர்மா அவர்களின் திறன்மிக்க தலைமையில் இயங்கும் இந்திய அரசின் சுற்றுலாத் துறையைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாட்டிலுள்ள நாங்கள் இம் முயற்சியை ஏற்கனவே மேற்கொண்டு பயணிகள் நலனிற்காகச் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மேம்படுத்துவதற்கான பணியில் முனைப்போடு செயல்பட்டுவருகிறோம். இதுகுறித்து இந்திய அரசு கேட்டிருந்த எல்லா விவரங்களையும் கொடுத்துள்ளோம். உரிய நடவடிக்கையை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

**நிதி உதவி தாரீர்!**

இத்திட்டத்தை ஊக்குவித்து மாநில அரசுகளிடம் பலவிதமான விவரங்களைக் கேட்டுப்பெற்ற பின் அதை நிறைவேற்றிட இந்திய அரசு நிதி உதவி அளித்திடவேண்டுவது அவசியமாகும். ஆனால் இப்போதைய நிலையில் இந்திய அரசு இத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டு முழுதும் மாநில அரசுகளின் பொறுப்பாகவேவிட்டு விட இருப்பது அறிந்து பெரிதும் வருத்தமடைகிறேன். இத்தகைய 'சுற்றுலா வட்டங்கள்' திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் நிதி ஆதாரத்தில் மாநில அரசுகளிடம் சிறு பகுதி கூட இல்லையென்பதைத் தமிழ்நாடு அரசின் சார்பில் கூறிக்கொள்கிறேன்.

**6-வது திட்டம்**

மூன்று ஒப்புக் கொள்ளப்பட்ட சுற்றுலா வட்டங்கள் திட்டத்தை நிறைவேற்றி முடிக்கத் தேவைப்படும் ரூ 60 கோடியில் ஆறாவது திட்டக்காலத்தில் மாநிலத்திட்டத்திற்குச் சுற்றுலாவிற்கு ரூ.8 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட இந்த நிதி ஒதுக்கீட்டில், இம்மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்பட்ட பிற திட்டங்களையும் நிறைவேற்றிட வேண்டியவர்களாக உள்ளோம். இம்மாநிலத்தில் புகழ்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த மூன்று சுற்றுலா இடங்களான கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மாமல்லபுரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ரூ 54 கோடி செலவாகுமெனத் தெரிகிறது.

இத்தகைய வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி ஒதுக்கிட மாநில அரசால் இயலாதாகையால் வேறு வகையில் இதற்கான வழிவகைகளைக் கண்டிடும் நிலையில் உள்ளோம். இதே நிலைதான் மற்ற மாநில அரசுகளுக்கும் உள்ளதென்றே கருதுகிறேன். சுற்றுலா வளர்ச்சிக்காக நாம் முனைந்திடும் திட்டங்களும் பயணிகளும் வெறும் கனவாய்ப் போகாமல் தடுத்திட இந்த இடர்பாடான நிலைக்கு வழி கண்டிட வேண்டும். சுற்றுலா வட்டங்கள் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு நிதி உதவிட மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சித்திட்டம் போன்று திட்டத்தின் கீழ் வராமல் சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கிட வேண்டுமென்று கூறிக்கொள்

*[மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் புதுடில்லியில் 2-12-1981 அன்று சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரையின் சாரம்.]*

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி—மார்கழி 1
16-12-1981
மலர்: 12
இதழ்: 12

கிறேன். இக்கருத்தை பிற மாநில அமைச்சர்களும் ஒப்புக்கொண்டால் இதற்கான தீர்மானம் இம்மாநாட்டிலேயே நிறைவேற்றப்படலாம்.

**விமானப் போக்கு வரத்து**

மற்றொரு கருத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் போர்க்காலத்தில் அமைக்கப்பட்டு இப்போது வீணே உள்ள விமானத் தளங்கள் பல உள்ளன. இவற்றைச் சீரமைத்துப் பயன்படுத்தினால் இராமேஸ்வரம், தஞ்சாவூர், திருநெல்வேலி முதலிய முக்கிய சுற்றுலா இடங்கள் மேலும் பயனடைய முடியும். பேங்காக், ஹாங்காங், டோக்கியோ முதலிய இடங்களுக்குச் செல்லும் விமானப் போக்குவரத்தைச் சென்னை மூலமாகச் செல்ல ஏற்பாடு செய்யவேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை வலியுறுத்த விரும்புகிறேன். தற்போது கொழும்புவில் நின்றுவிடும் சார்டர் போக்குவரத்தைச் சென்னைவரை நீடிக்க வேண்டும் இவ்வகை முயற்சி, தென்மாநிலங்களில் சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகமாக்கும். மேலும், சுற்றுலா வளர்ச்சிக்காக மத்திய அரசு நல்கிடும் உதவி, மக்கள் தொகை அடிப்படையாலோ தனிநபர் வருமானத்தின் அடிப்படையிலோ இல்லாமல் சுற்றுலா வாய்ப்புக்கான அடிப்படையாகக் கொண்டே அமைதல் வேண்டும்.

**உலக நிதியுதவி**

நமது நாட்டில் அந்நியச் செலாவணியை ஈட்டும் ஆதாரங்களில் வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மூன்றாவது இடத்தை வகிக்கிறார்கள். இவ்வவாறிருக்க, தக்க உலக நிதி உதவி நிறுவனங்களிட்மிருந்து நிதி பெறும் வகையில் ஆதாயம் நல்கும் சுற்றுலாத் திட்டங்கள் ஏன் அளிக்கப்பட கூடாது?

'வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் யாவரும் பெருஞ்செல்வந்தர்கள் அல்லர். சிக்கனமான வகையில் அவர்களின் விருப்பத்திற்கொப்ப அதிகச் செலவில்லாத பயணிகள் இல்லங்களையும் நாம் ஏற்படுத்தியாக வேண்டும். இத்தகைய இல்லங்கள் நமது நாட்டிலுள்ள பயணிகளுக்கும் பயன்படும். தமிழ்நாட்டில் இத்தகைய சாதனையைச் செய்துள்ளோம். நடுத்தர வருமானமுள்ளோரும் தங்கும் வகையில் பயணிகள் இல்லங்கள் உள்ளன. இளைஞர் இல்லங்கள் இவ்வகையில் பெரிதும் பயன் தருகின்றன.

**தமிழ்நாடு அரசு விருப்பம்**

சுற்றுலாக் கிராமங்களை ஏற்படுத்தும் திட்டத்தைத் தமிழ் நாடு அரசு வரவேற்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் அத்தகைய கிராமங்களை ஏற்படுத்த தேவையான வசதிகளை அளிக்கத் தமிழ்நாடு அரசு விருப்பம் தெரிவிக்கிறது. மாமல்லபுரம் மேம்பாட்டுத் திட்டத்தில் இதையும் ஒரு பகுதியாக இணைத்துள்ளோம்.

பயணிகளுக்கு வசதிகளைப் பெருக்க வேண்டுமென்று குறிப்பிடுகையில் விமானப்போக்குவரத்துடனும் சாலைப் போக்குவரத்துடனும்ஒத்துழைத்து அதற்கேற்ற வகையில் ரயில் போக்குவரத்தை விரிவாக்கம் செய்கிட நாட்டம் செலுத்தப்படவேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திறனை வளர்ச்சியடையச் செய்ய, போக்குவரத்துத் துறைகள் யாவும் ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டிராத பஸ் முதலாளிகளுக்கு அகில இந்திய உரிமங்கள் வழங்குதல் குறித்துக் குறிப்பிடப்பட்டது. தற்போது இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுற்றுலா வளர்சிக்கழகங்கள், சுற்றுலாச் செயல்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கே அகில இந்திய உரிமங்கள் கொடுக்கும் வகையில் தற்போதுள்ள விதிமுறைகளைத் திருத்தலாமெனக் கருதுகிறேன்.

**வெளிநாட்டுப் பயணிகள்**

பயணிகளை ஒருசேர அழைத்து செல்லும் சுற்றுலாத்திட்டத்தைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சிறப்பான முறையில் செயற்படுத்தி வருவது பெருமையளிப்பதாகும். இது வெளிநாட்டுப் பயணிகளுக்குப் பெரிதும் உதவுகிறது

சுற்றுலா வழிகாட்டு நிலையங்கள் அமைப்பது தொடர்பாகக் குறிப்பிடவேண்டுமானால், சுற்றுலாப் பயணிகள் செய்தி நிலையங்கள் இருபது நிறுவப்பட்டுள்ளன. விமான நிலையத்தில் மட்டுமன்றி ரயில் நிலையங்களிலும் முக்கியமான சுற்றுலா இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இவற்றை விரிவுபடுத்த, மத்திய அரசு ஓரளவு நிதி உதவிட வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் புகார் நிலையம் அமைக்கும் கருத்து வரவேற்கத்தக்கது. அதே போன்று அக்குறைகளை உடனடியாகப் போக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனியார் துறையும் சுற்றுலா வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்க முடியுமென்பதை நாம் அறிவோம். இத்துறையில் தனியார் நிறுவனங்கள் மேலும் முதலீடு செய்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படுவது இன்றியமையாதது. இவ்வகையில் தமிழ்நாடு இயன்ற அனைத்து முயற்சியும் மேற்கொள்ளுமென உறுதியளிக்கின்றேன்.

இறுதியாக, சுற்றுலாத்துறைக்கு மத்திய அரசு அளித்திடும் முன்னுரிமை குறித்துச் சில சொல்ல விரும்புகிறேன்.

விதிக்கப்படும் வரிகளாகட்டும் மத்திய அரசு நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அளிக்கும் சலுகைக் கடன்கள் ஆகட்டும் ஆண்டுத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்வதிலாகட்டும், தெளிவான, திட்டவட்டமான கொள்கை தற்போது செயலில் இல்லை. இந்நிலையில் சுற்றுலா மேம்பாட்டில் உரிய சாதனையை எய்திட முடியாது. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையேயும் பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் இடையேயும் இணக்கமான தொடர்பும் ஒத்துழைப்பும் இருந்தால்தான் இந்த நாட்டில் சுற்றுலாவளர்ச்சி சீர்பெற்று சிறப்படைய முடியுமென்று தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. இம் முறையில் இத் தேசீயப் பணியைச் செவ்வனே நிறைவேற்றிடப் பிற மாநிலங்களின் ஒத்துழைப்பையும் மத்திய அரசின் ஆதரவையும் தமிழ்நாடு அரசு எதிர்பார்ப்பதுடன் ஒத்துழைத்துச் சுற்றுலா வளர்ச்சியை மேலும் விரிவடையச் செய்யும் பணிக்குக் காத்திருக்கிறது.


"தமிழரசு" அடுத்த இதழுடன்
மாண்புமிகு முதல்வர் அவர்களின்
எழில்மிகு தோற்றத்துடன்
பெரிய அளவு வண்ணப்படம் அமைந்த
1982-ஆம் ஆண்டு
தமிழரசு நாட்காட்டி
இலவச இணைப்பு




வளரும் தமிழகம்

# உழவர்க்கு உதவும் புதிய திட்டங்கள்


மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்
திரு டாக்டர் கா. காளிமுத்து அவர்கள்


"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை''

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, உழவுத் தொழிலையே வாழ்க்கை வழியாகக் கொண்டு உலகம் வாழ உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து வழங்கிவரும் தமிழக உழவர் பெருமக்களே! தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று வறட்சியை வென்று வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முயன்று வரும் உங்கள் அனைவருக்கும் முதற்கண் தமிழக அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு முழுவதும், இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களிலும் வறட்சி வாட்டியதால் தமிழக வேளாண்மைப் பொருளாதாரம் குன்றிவிடுமோ என்ற ஐயம் பலரிடம் எழுந்தது. ஆனால் எதையும் தாங்கும் இதயத்தோடு புரட்சித் தலைவர் அரசு இந்தியப் பேரரசின் நிதி உதவியுடன் வறட்சியை வென்றிட அயராது பாடுபட்டது. இயற்கையும் இன்முகம் காட்டியது. அதன் பயனாய், தமிழகமெங்கும் பரவலாய் நல்ல மழை பெய்தது. பெய்த மழையையும், கிடைத்த தண்ணீரையும் பயன்படுத்தி சாகுபடியைத் தொடங்க வேளாண்மைத்துறை வேண்டிய இடுபொருள்களை விரைந்து வழங்கியது. உழவர் பெருமக்களும் விரைந்து சாகுபடி வேலைகளைத் தொடங்கினர். வடகிழக்குப் பருவ மழையும் வாய்ப்பாக அமைந்து உள்ளதால் இந்த ஆண்டில் வேளாண்மை உற்பத்தி குறையாதுஎன்று எதிர்பார்க்கிறோம்.

நடப்பு ஆண்டில் 65 இலட்சம் டன்கள் அரிசி, 23 இலட்சம் டன்கள் சிறுதானியங்கள், 4 இலட்சம் டன்கள் பயறு வகைகள், 23 இலட்சம் டன்கள் வெல்லம் என்னும் அளவில் கரும்பு, 5 இலட்சம் பேல்கள் அளவில் பருத்தி ஆகியவற்றை உற்பத்தி செய்யத் தமிழ்நாடுஅரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த ஆண்டின் முற்பகுதியில் நிலவிய வறட்சியின் காரணமாகப் பல்வேறு பயிர்களின் சாகுபடி பரப்பு குறைந்திருந்தாலும் குறிப்பாக மானாவாரிப் பயிர்களின் பரப்புக் குறைந்திருந்தாலும், அதனால் ஏற்படும் உற்பத்திக் குறைவை ஈடுசெய்யத் தற்பொழுது நீர்த்தேக்கங்களில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி இறவைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க வேளாண்மைத்துறை முனைப்பாகச் செயலாற்றி வருகிறது. இம்முயற்சியில் வெற்றி கிட்டவும், அதன் மூலம் பயன் பெறவும் தமிழக உழவர் பெருமக்கள் தமிழக வேளாண்மைத் துறைக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று வேண்டுகிறேன்.

தமிழக வேளாண்மைத்துறை உருவாகி நூறு ஆண்டுகள் ஆகின்றன. மாவட்டந்தோறும் நூற்றாண்டு விழா கொண்டாடி வருகின்றோம். இந்த நூறு ஆண்டுகளில் வேளாண்மைத்துறை ஆற்றியுள்ள அரும்பணிகள் ஆயிரம் ஆயிரம் உள்ளன என்பதை உழவர் பெருமக்களாகிய நீங்கள் உணர்வீர்கள். வளர்ந்துவரும் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை உங்களிடம் பரப்பி உங்களுக்கு மேலும் உதவி செய்து வேளாண்மையை ஊதியம் தரும் தொழிலாக ஆக்க வேண்டும் என்ற குறிக்கோளிலேதான், நூற்றாண்டு விழாக்காணும் இவ்வாண்டிலே புரட்சித் தலைவர் அரசு இந்திய அரசின் மூலம், உலக வங்கியிடம் ரூ. 36.5 கோடி நிதி உதவி பெற்று கடந்த 1.9.1981 முதல் 'பயிற்சி மற்றும் தொடர்பு வழி திட்டம்' அதாவது Training and visit system என்னும் திட்டத்தைத் தமிழகத்தின் 8 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாவட்டம் நீங்கலாக மீதமுள்ள 7 மாவட்டங்களில் இத்திட்டம் 1.7.1982 முதல் செயல்படுத்தப்படும்.

பயிற்சி மற்றும் தொடர்பு வழித்திட்டத்தின் மூலம் 800 வேளாண் குடும்பங்களுக்கு ஒரு கிராம விரிவாக்க அலுவலர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு கிராம விரிவாக்க அலுவலரும் ஒவ்வொரு நாளும் 100 வேளாண் குடும்பங்களைக் சந்தித்து அவர்களுக்கு நவீன சாகுபடி முறைகளைப் பற்றி எடுத்துக் கூறியும், செயல் விளக்க முறையில் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை விளக்கிக் காட்டியும் அதிக உற்பத்திக்கும் அதிக வருவாய்க்கும் வழிகாட்டுவர். பயிற்சி

மற்றும் தொடர்பு வழி திட்டத்தின் மூலம் வேளாண்மைத்துறை மறுமலர்ச்சி பெற்றுள்ளது. இதனால் தமிழக உழவர் பெருமக்கள் உற்பத்தியைப்பெருக்கி அதிக வருவாய் பெற்று வாழ்வை வளப்படுத்திக்கொள்ள வழி பிறந்துள்ளது. நூற்றாண்டு விழா ஆண்டில் புரட்சித் தலைவர் அரசு தமிழக உழவர் பெருமக்களுக்குச் செய்துள்ள மகத்தான பணி இது எள்ளளவும் ஐயமில்லை.

உழவர் பெருமக்களுக்கு ஒல்லும் வகையிலெல்லாம் உதவி செய்து அவர்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேதான் இந்த அரசு ஒரே துறையாக இருந்த வேளாண்மைத்துறையைப் பிரித்து, வேளாண்மை விளைபொருள் விற்பனைத்துறை, தோட்டக்கலைத்துறை, எண்ணெய் வித்துக்கள் துறை, விதைச் சான்றளிப்புத்துறை, வேளாண்மைப் பொறியியல்துறை ஆகிய 5 புதிய துறைகளைத் தொடங்கியுள்ளது.

நெற்றி வியர்வை நிலத்திலே விழப்பாடுபடும் உழவர்களுக்கு உற்பத்தியைப் பெருக்கும் வழிகளைக்கூறி, இடு பொருள்கள் மற்றும் கடன்களை வழங்கி உற்பத்தியைப் பெருக்கிவிட்டால் மட்டும் போதாது. விளைவித்த பொருள்களுக்கு நல்ல விலையும் கிடைக்கச்செய்ய வேண்டும். விளைபொருள்களை விற்கும்போது இடைத்தரகர்களின் இரும்புப் பிடியில் சிக்கித் திணறும் உழவர்களை விடுவிக்கவேண்டும் என்ற இலட்சியத்திலே தான் புரட்சித் தலைவர் அரசு விளைபொருள் விற்பனைக்கு என்று தனியாகஒரு புதிய துறையை 14.10.77-ல் தொடங்கியது. 1937 முதல் தனித்துறை தொடங்கப்படு முன்பு வரை 140 ஆக இருந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தற்பொழுது 245 ஆக உயர்ந்துள்ளன. தமிழக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் சிறப்பாகப் பணியாற்றி வருவதை உலக உணவு விவசாயக் கழகம் பாராட்டியுள்ளது. தமிழகத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்துவதற்காக உலகவங்கி ரூ. 102.11 கோடியை வழங்க முன்வந்துள்ளது. கிராமப்புறங்களில் விளைபொருள்களைச் சேமித்து வைப்பதற்கான 99 கிடங்குகளைச் சுமார் 500 இலட்சம் செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் இந்திய அரசு 25 சத மானிய அளிக்க முன்வந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா பற்றாக்குறை நாடாகவே உள்ளது. ஆண்டு தோறும் சுமார் ரூ. 1,000 கோடி அளவுக்கு எண்ணெய் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை இந்தியாவில் உள்ளது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழ்நாடு குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியான நிலையில் உள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் 114 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களில், தமிழ்நாடு 14 இலட்சம் டன்களை உற்பத்தி செய்கிறது. உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருந்தாலும் சமையல் எண்ணெய் உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாகவே இருக்கிறது. தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கப் பெரும்வாய்ப்பு இருப்பதால், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தனித்துறை ஒன்று 12.2.1981-ல் தொடங்கப்பட்டது.

கடந்த ஆண்டின் கோடைப் பருவத்தில் 74 ஆயிரம் எக்டேரில் கூடுதலாக எண்ணெய் வித்துக்கள் இறவையாகப் பயிரிடப்பட்டது. அதன் காரணமாகச் சென்ற கோடைப் பருவத்தில் நிலக்கடலைச் சாகுபடிப் பரப்பின் இலக்கு 2.66 இலட்சம் எக்டேரில் இருந்து 3.40 இலட்சம் எக்டேராக உயர்த்தப்பட்டது. நடப்பு ஆண்டின் கோடைப் பருவத்தில் 3.6 இலட்சம் எக்டேரில் நிலக்கடலையை இறவையாகப் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னார்க்காடு ,வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய 3 மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தியைப் பெருக்குவதற்காக எண்ணெய் வித்துக்களைப் பயிரிடுவோர் கூட்டுறவு இணையம் அமைக்கப்பட்டுள்ளது. குசராத் மாநிலத்திலுள்ள 'ஆனந்த்' முறையில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடுவோர்களுக்குச் சாகுபடிக் கடன் வழங்கவும் விளைபொருள்களை வாங்கி விற்கவும் உதவும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. எள், ஆமணக்கு, சூரியகாந்தி, தென்னை ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.







வெப்ப மண்டலத்தில் பயிராகக்கூடிய வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளும் மித சீதோஷ்ண மண்டலத்தில் வளரக்கூடிய ஆப்பிள், பிளம், பேரி, பீச்சஸ் ஆகிய கனிகளும் காபி, தேயிலை, மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய் ஆகிய மலைப் பயிர்களும், ஆந்திரப் பிரதேசத்தில் வளரக்கூடிய மலர் வகைகளும் தமிழக மலைகளில் ஒரு சேர பயிராவதால் இவ்வளங்களை மேம்படுத்துவே தோட்டக்கலைத் துறையை 1979, ஆகஸ்ட் திங்களில் அரசு தொடங்கியது. ரூ. 296 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் துவக்கப்பட்ட தோட்டக்கலைத்துறை நடப்பு ஆண்டில் ரூ. 405 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் செயல்பட்டு வருகிறது. குறுகிய காலத்திலேயே இத்துறை 40 புதிய திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தோட்டக்கலைத்துறைப் பணிகளுக்கு ரூ. 20.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும், மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டங்களுக்குத் தனியாக ரூ. 14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும் மையத்திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அதிக மகசூலுக்கு வித்தே அடிப்படை என்பதால், தரமான வித்துக்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்காகப் புதிதாக உருவாகிய விதைச் சான்றிதழ் வழங்குதுறை பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் பணிகளின் முக்கியத்துவம் கருதியும், நில சீர் நிர்வாகப் பணிகளின் இன்றியமையாமையைக் கருதியும் இந்த அரசு, 31.1.1981ல் வேளாண்மைப் பொறியியல் துறையை உருவாக்கிற்று.

நடப்பு ஆண்டில் 4,500 குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 2,700 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தவும், 2,300 கிணறுகளில் துளையிட்டு நீர் பெருக்கை அதிகப்படுத்தவும் 2,800 பாறைக் கிணறுகளை ஆழப்படுத்தவும் 72 ஆயிரம் எக்டேர் பரப்பில் நிலம் சமன்படுத்தும் பணியை மேற்கொள்ளவும், 50 ஆயிரம் எக்டேரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செய்யவும், 15,000 எக்டேர்களில் நீர் நிர்வாகப் பணிகளைச் செய்யவும் இலக்கு குறிக்கப்பட்டு,' பணிகள் பாராட்டத்தக்கவகையில் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலாக உயர்மட்டக் குழுவை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைப்படி ரூ. 118 கோடிக்கு வழிவகை கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ரூ. 26.84 கோடி அளவில் தக்காவிக் கடய்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்படி அடுக்கடுக்கான நன்மைகளை உழவர் பெருமக்களின் நலன் கருதிப் புரட்சித் தலைவர் அரசு செய்து வருகிறது.



''ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்பது போல் வேளாண்மைத்துறையின் உழைப்புக்கும் சாதனைக்கும் ஒருசான்று கூறிட விரும்புகின்றேன். நூறு ஆண்டு காலம் வேளாண்மைத்துறை அயராது பாடு பட்டதால் 17 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல் தற்பொழுது 71 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகிறது. 19 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, தற்பொழுது 62 இலட்சம் டன்களளாக உயர்ந்துள்ளது. வேளாண்மைத்துறையின உழைப்புக்கும், சாதனைக்கும் இச்சாதனை ஒன்றே போதும் என்று எண்ணுகிறேன்.

''வளரும் தமிழகம்'' என்ற தொடரில் பேசும் இவ்வரிய வாய்ப்பை எனக்களித்த சென்னை வானொலி நிலையத்தவர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத்துறை மேலும் சிறப்பாகப் பணியாற்றிட உங்கள் ஒத்துழைப்பை நல்கிடுவர் என தமிழகத்து உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

[சென்னை வானொலி 19-11-81]



# காவல் துறையினருக்கு பரிசளிப்பு விழா

**2-வது அட்டை சொல்லும் செய்தி**

**கா**வல்துறைப் படையினருக்கு தமிழக முதல்வரின் விருதுகள் வழங்கும் விழா 30-11-'81 அன்று சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. விருதுகள் பெறும் காவல்துறைப் படையினருக்கும், ஊர்க்காவல் படையினருக்கும் தங்கப் பதக்கங்களையும் பரிசுத் தொகையையும் மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்கள். மாண்புமிகு முதல்வர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''இத்தகைய நிகழ்ச்சி நடப்பதே தியாகம் செய்த காவல் துறை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு ஓரளவு உதவி செய்வதற்காகத்தான்.

''தியாகம் செய்தவர்கள் நினைவாக மக்கள் மனத்தில் அவர்கள் என்றும் நிலைத்து நிற்கும் அடையாளச்சின்னமாகப் பதக்கமும், சிலருக்கு பணமும் இங்கே கொடுக்கப்படுகிறது.

''நீண்டகாலமாக காவல் துறையினரின் குறையைத் தீர்க்க வேண்டும் என்ற அக்கறை இந்த அரசுக்கு இருந்து வந்துள்ளது. அதன் விளைவுதான், இந்தப் பதக்கமும் பரிசும் அளிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

''மேலும், 1982-ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் மாவட்டங்கள் அனைத்திற்கும் என்ற வகையில் 1,500 காவல்துறையினருக்கு பரிசும், பதக்கமும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''தமிழ்நாட்டில் 5? ஆயிரம் காவலர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களில் 5 பேருக்கோ 10 பேருக்கோ தங்கப் பதக்கமும் பரிசும் அளிக்கும் நிலை இருந்தால், காவலர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறும் காலம் வந்தாலும் இந்தப் பரிசு கிடைக்காமல் போகலாம் என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது.

''மாவட்டக் காவல்துறை அதிகாரி (டி.எஸ்.பி.)களுக்கு வீட்டு வசதி அல்லது வீட்டு வாடகை தரவேண்டும் என்ற கோரிக்கையைக் காவல்துறை அதிகாரி இங்கே எடுத்துவைத்தார்.

நிச்சயமாக அதை இந்த அரசு நிறைவேற்றும்.

''நேர்மையாக - நியாயமாக நடந்துகொள்ளும்காவலர்களுக்கு இருபது ரூபாயோ அல்லது இருபத்தைந்து ரூபாயோ கூடுதலாகத் தரப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்ளும்போது ஒரு நிபந்தனையையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''நேர்மையாகவும்-நியாயமாகவும் நடந்துகொள்ளும் காவலர்களுக்கு கூடுதலாக அப்படியொரு தொகை அளிக்கப்படும்பொழுது அவர்கள் எப்போதாவது தங்களுடைய நேர்மையிலும்-கடமையிலும் தவறுகிறார்கள் என்று தெரியுமானால், நேர்மைக்காகக் கொடுக்கப்படும் அந்தப் பணம் குறைக்கப்படும் அல்லது பிடிக்கப்படும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைக் காவலர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.



''பெண் காவலர்கள் தங்கள்மேல் சட்டையைக் கால்சட்டைக்குள் போட்டுக்கொள்ளும் முறையை மாற்றி அவர்களுக்கு வசதியாக இருக்க, கோட்டு போன்ற மேல் உடை முறையும் வருகிற ஜனவரி மாதம் பொங்கலிலிருந்து அமலுக்கு வரும்

''காவலர் துணைஇல்லாதபோது மக்கள் தியாக உணர்வோடு சில சமுதாய தீய சக்திகளைப் பிடிக்கும்போதோ - தடுக்கும்போதோ ஆபத்து ஏற்பட்டு அவர்கள் உயிர் இழக்கும் நிலை ஏற்பட்டால், காவல்துறை அதிகாரிகள் குடும்பத்துக்குக் கொடுப்பது போன்றே ரூ. 10 ஆயிரம், உயிர் இழந்த அந்தத் தியாகிகளின் குடும்பத்திற்கும் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இப்படிச் செய்வதால் சமூக விரோத சக்திகளை ஒடுக்க, மக்களும் காவல் அதிகாரிகளைப் போன்று முன்வர முடியும் என்று நம்புகிறேன்.

''குற்றம் செய்தவர்களைப் பிடித்துக் கொடுக்கும்பொது மக்களுக்கு ரூ.1000 முதல் ரூ.5000 வரை அரசு பரிசாகத் தரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

முன்னதாகக் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது.

தொடக்கத்தில் காவல்துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு) திரு ராதாகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.


**1.1.1982 முதல் 'தமிழரசு' இதழின்**
**விலை 75 காசு**

ஆண்டு சந்தா ரூ 18.00

ஆறு மாத சந்தா ரூ 9.00

விவரங்கட்கு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
(சர்குலேஷன்)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

# பாரதி நூற்றாண்டு பொலிக!

கவிஞர் சுத்தானந்த பாரதி



பொலிக பொலிக பாரதியார்
புலமை நூறு நூறாண்டுகள்
பொலிக பொலிக நாட்டிலே
புதுயுகக் கவிகளே!

பாரதியாருக்கு நூற்றாண்டு
பாரதி பாட்டுக்குப் பல்லாண்டு
பாரதி பாட்டுக்குப் பின்னாலே—புதுயுகப்
படை நடக்குது தன்னாலே

ஆணும் பெண்ணும் சரிநிகராய்
அறிவுச் சோலையில் உலவுகிறார்
பூணிற் பொன்னும் மணியும்போல்
புன்னகை யின்பம் பூத்திடவே

தேனும் பாலும் தீங்கனியும்
தின்னத் தின்னத் தித்திக்கும்
வானும் புவியும் வரகவியின்
வண்ணம் கேட்டுப் பூரிக்கும்

வேற்றுமைச் சண்டை விலகிவிடும்
வீறுபெற்ற ஒற்றுமையால்
ஆற்று வெள்ளம் வளர் பயிர்போல்
அன்பின் வழியே உயிரோங்கும்

எங்கும் பொங்கும் மங்கலமே!
இல்லாதொழியும் சங்கடமே
சிங்கம் போலே குரலெடுத்தே
ஜய ஜய பாரதி என முழக்கி

மங்கல நூற்றாண்டி சைத்திடுவோம்
மகாகவி பாரதி வாழியவே!





# குழந்தைகள் திரைப்பட விழா

**ந**வம்பர் திங்கள் 14-ஆம் நாள்

பண்டித ஜவகர்லால் நேரு பிறந்த நாள்-குழந்தைகள் தினமான அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், அனைத்து நாட்டுச் சிறுவர்கள் திரைப்படத் துவக்க விழா மிகச் சிறப்பாக நடந்தது.

அரங்கத்தின் முகப்பில் யானை ஒன்று அனைவரையும் வரவேற்றது.

அரங்கத்தின் உள்ளே, அழகிய மேடையில் அனைத்து நாட்டுப் பிரதிநிதிகள் வீற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இந்த விழாவில் 30 நாடுகள் பங்கு கொண்டன.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு மத்திய செய்திஒலிபரப்பு, திரைப்பட அமைச்சர் திரு. வசந்த் சாத்தே அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்து, விழாவைத் தொடங்கி வைத்தார்.

இந்தத் திரைப்பட விழா சம்பந்தமான மலர் ஒன்றை மாண்புமிகு முதல்வர் திரு எம் ஜி. ஆர். அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்பு திரைப்பட அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொடக்கத்தில், திரைப்பட இயக்குநர் திரு வி. சாந்தாராம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில், 'இந்தப் பட விழாவினை முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தனது குழந்தையாகத் தத்து எடுத்து, இந்த விழா வெற்றிகரமாக நடக்க அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார். சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்பட அவர் அதிக அளவில் பல உதவிகளைச் செய்து வருகிறார்' என்றார்.

இந்த விழாவில், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத் தலைவர் திரு டி. ராமானுஜம் அவர்கள் பேசுகையில், 'குழந்தைகளுக்கான படங்களைத் தயாரிப்பதில் தமிழகம், இது வரை போதுமான கவனம் செலுத்தாவிட்டாலும், இனி அவ்வாறு இல்லாமல் சிறந்த படங்கள் உருவாக தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்குவார்கள்' என்றார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசும்போது கூறியதாவது:

'ஏகலைவன் தன் மானசீக குருவாக துரோணரை ஏற்றுக் கொண்டதுபோல, நான் சாந்தாராம் அவர்களை என் ஆசானாக ஏற்றுக் கொண்டவன்.

''இளைஞர்களின் துணைவராக இறுதிவரையில் இளைஞராக வாழ்ந்து காட்டிய, நமது இதயத்தை விட்டு நீங்காத ஜவகர்லால் நேருவின் பிறந்த நாளில், நாம் அனைவரும் ஒன்றுகூடி எதிர்காலச் சந்ததிகளை ஊக்குவிப்பதற்காக, வளர்ப்பதற்காக, கண்ணியத்தோடு, நேர்மையோடு கடமை உணர்வோடு, கட்டுப்பாட்டோடு வாழ வழி வகுத்துக் கொண்டு இருக்கும் நாளில் இந்த விழாவை நடத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

''இந்த விழாவைத் தமிழ் நாட்டில் நடத்துவதற்காக மைய அரசுக்கும், அகில இந்தியக் குழந்தைகள் திரைப்படச் சங்கத் தலைவரான இயக்குநர் சாந்தாராமுக்கும், தமிழக மக்களின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் நன்றியைக் காணிக்கையாக்கிக், கொள்கிறோம். இங்கு ராமானுஜம் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டார். மக்கள்தொகையில் 3-ல் 2 பங்கு உள்ள பெரியவர்களுக்காக ஆயிரக்கணக்கான படங்களைத் தயாரிக்கும்போது 3ல் 1 பகுதி இருக்கும் குழந்தைகளுக்காக மிகக் குறைவாகவே படங்கள் தயாரிக்கப்படுகின்றன என்றார்.

''குழந்தைகளுக்காகப் படம் தயாரிப்பவர்களுக்காகப் பல வசதிகளைச் செய்து தமிழக அரசு முன்வந்தபோது, குழந்தைகளுக்காகப் படம் எடுக்க முன் வந்தவர்கள் மிகவும் குறைவு.

''குழநதைகளுககாக எனறு சொல்லும்போது, நாட்டுக் கலாச் சாரத்துக்கேற்ப, ஒழுக்கம், பண் பாடு, கண்ணியம் ஆகியவற்றை வளர்க்கக்கூடிய, மற்றவர்களை மதிக்கத்தக்க பண்பை சொல்லிக் தருகிற, குழந்தைகள் வாழ்க்கை யில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இணைத்து, நாட்டுக்கும் மொழிக் கும் உள்ள தொடர்பு என்று சொல்கிறபடமாக, செய்திகளைச் சொல்கிற படமாகத் தயாரிக்க வேண்டும். அப்படிப்பட்ட படங்களைத் தயாரித்தால், தமிழக அரசு அந்தப் படங் களுக்கு வரிவிலக்கு அளிக்கும்.

''டெக்னீஷியன்கள், எழுத் தாளர்கள் போன்றவர்கள் 'திறமை இருக்கிறது. பணம் இல்லை' என்ற தகுதிக்குச் சொந் தக்காரர்களாக இருந்தால், அவர் கள் இத்தகைய படங்களைத் தயா ரிப்பதற்காக உதவி செய்யும் வகையில் 25 இலட்சம் ரூபா யில் ஒரு நிதியைத் தமிழக அரசு தொடங்கும்.

''நேரு பதக்கங்கள் என்று 3 பதககஙகள ஏறபடுத்து, ஆண்டு தோறும் சிறந்த முறையில் குழந் தைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட முதல் 3 படங்களுக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்படும். நேரு உருவம் பொறிக்கப்பட்ட அந்தப் பதக்கங்கள் அவர்களுக் குத் தரப்படும்.

''குழந்தைகளுக்காக 'பால யோகினி'' படம் எடுத்த திரு கே. சுப்பிரமணியத்தை இந் நேரத்தில் நினைவுகூரக் கடமைப் பட்டு இருக்கிறேன். அடுத்த ஆண்டு இதுபோல மாநில அளவி வில் ஒரு படவிழா அமரர் நேரு பிறந்த நாளில் சென்னையில் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

''வேண்டாத இசைகளை, இரு பொருள் உள்ள கருத்துக்களைக் கலக்காமல், தமது குழந்தை களுக்கு என்ன கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறோமோ அதே கருத்துக்களைச் சொல்லும் வகையில், வியாபாரத்தைத் தனியே வைத்து விட்டு, எதிர் காலச் சந்ததிகளின் வளர்ச்சிக் கென்று இத்தகைய படங்களைத் தயாரிக்க வேண்டும். தமிழக அரசு அந்த முயற்சிக்கு உதவி செய்யும்.


''தடம் புரளுகின்ற சினிமாத் துறைக்கு முட்டுக்கட்டைபோட்டு சமுதாயத்துக்கு நல்லவற்றைச் சொல்லி, அல்லவற்றைத் தள்ளி மக்களுக்கு மகிழ்ச்சி தரும் அள வுக்குப் படம் எடுக்க வேண்டும்''

மாண்புமிகு மத்திய அமைச் சர் திரு வசந்த் சாத்தே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''குழந்தைகளால் 'நேருமாமா' என்று அன்புடன் அழைக்கப் பட்ட முன்னாள் பிரதமர் ஜவகர் லால் நேருவின் பிறந்த நாளன்று இந்த விழா தொடங்கப்படுவது, மிகவும் பொருத்தமானதாகும்.

''இந்தப் பட விழாவில் இந்தி யாவில் தயாரிக்கப்பட்ட படங்கள் தவிர, வெளிநாடுகளில் தயாரிக் கப்பட்ட 110 படங்கள் திரை யிடப்படுகின்றன. இத்தகைய உலகத் திரைப்பட விழா நடத்து வதன் நோக்கம் குழந்தைகள்—





இளைஞர்களுக்கு இத்தகைய படங்கள் மூலம் ஒவ்வொருவரு டைய கலாசாரம், வாழ்க்கை முறையை மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

'மேலும் இத்தகைய விழாக்கள் பட அதிபர்களுக்கு குழந்தை களுக்கான படத் தயாரிப்புக் கேற்ற புதிய எண்ணங்கள் பரி மாற்றத்துக்கு உதவ வாய்ப்ப ளிக்கும்.

''இந்தியக் குழந்தைகளில் 75 சதவீதம் பேர் சினிமா பார்க்க வசதியில்லாத கிராமப்புறங் களில் வசிக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகை யில், சாந்தாராம் கிராமப்புறங் களில் உள்ள குழந்தைகளுக்காக இத்தகைய படங்களை 'நட மாடும் வேன்'களில் எடுத்துச் சென்று திரையிடும் செயல் முறையைத் தொடங்கி இருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடை கிறேன்.

''அடுத்த நூற்றாண்டைப் பற்றி நாம் கவலைப்படும் காலம் இது. இப்போது 10-லிருந்து 15 வயது வரை உள்ள குழந்தைகள் தான் 21-வது நூற்றாண்டுத் தொடக்கத்தில் உலகத்தின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய குடி மக்களாக இருப்பார்கள். இதைக் கருத்தில் கொண்டு நமது தயாரிப் பாளர்கள் படங்களைத் தயாரிக்க வேண்டும்.''

விழா முடிந்த பின், வால்ட்

### விருது பெற்ற திரைப்படங்கள்

சென்னையில் நடைபெற்ற இரண்டா வது அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழாவில் நடுவர் குழுவினால் விருதுக்குரியன எனத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரைப்படங்கள் — கலைஞர்கள் விவரம்.

**9 முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் விருது:**

1. சிறந்த படத்திற்கான தங்க யானை விருது ''ஸ்னோ மெய்டன்'' (ரஷ்யா)
2. சிறந்த இயக்குநருக்கான வெள்ளி யானை விருது ''போரிஸ் ரிட்சரின் ஸ்னோ மெய்டன்'' (ரஷ்யா)
3. சிறந்த ஒளிப்பதிவாளருக்கான வெள்ளி யானை விருது ஏ கொரிலோவ் ''ஸ்னோ மெய்டன்'' (ரஷ்யா)
4. சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான வெள்ளி யானை விருது மாஸ்டர் ஆனந்த் ஜோஷி ''பால் சிவாஜி'' (இந்தியா)

**4 முதல் 8 வயது வரையிலான குழந்தைகள் விருது:**

1. சிறந்த படத்திற்கான தங்க யானை விருது: ''தி ஹவுஸ் இன் கொட்சர்-கோவோ வில்லேஜ்'' (செக்கோஸ்லோவாகியா)
2. நீதிபதிகளின் விசேஷ பரிசு (வெள்ளி யானை) விருது: ''குபேகல் அண்ட் தி கோஸ்ட்'' (ஜெர்மன் ஜனநாயக குடியரசு)
3. சிறந்த அனிமேட்டர்/பப்பட்டருக்கான வெள்ளி யானை விருது:
   அ) வில் வின்டன் (பப்பட்டர்) ''கிறிஸ்துமஸ் கிப்ட்'' (அமெரிக்கா)
   ஆ) ருமென் பெட்கோல் (அனிமேட்டர்) ''ஷெரோ பெய்ண்ட்ர்'' (பல்கேரியா)
4. சிறந்த இசையமைப்பாளருக்கான வெள்ளி யானை விருது: ரீஜிரோ [illegible] ''அட்வெ[illegible] [illegible]ப் தி போனார்-கபஸ்'' (ஜப்பான்)



டிஸ்னி தயாரிப்பான ''தி ஜங்கிள் புக்'' என்னும் அற்புதமான கார்ட்டூன் படம் காண்பிக்கப் பட்டது. இந்தப் படத்தின் இயக்குநரான திருஉல்பாங் ரெய்தர்மேன் அவர்கள் விழாவுக்கு வந்திருந்தார். படம் முடிந்தவுடன அவரை மேடைக்கு அழைத்து சிறுவர் திரைப்பட கழகத்தலைவர் திரு சாந்தாரராம் அவர்கள் மாலை அணிவித்து வாழ்த்தியபோது பலத்த கரவொலி எழுந்தது.

# குழந்தைகள் திரைப்பட நிறைவு விழா

அனைத்து நாட்டுச் சிறுவர் திரைப்பட நிறைவு விழா நவம்பர் 22-ஆம் நாளில் சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார்.

இந்தியாவின் சிறுவர் திரைப் படக் கழகத்தின் தலைவரும் புகழ் பெற்ற திரைப்பட இயக்குநருமான டாக்டர் வி. சாந்தாராம்· அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

''30 நாடுகளைச் சேர்ந்த படங்கள் இதில் பங்கு பெற்றன. தமிழக அரசும் மக்களும் இந்த விழாவைச் சிறப்பாக நடத்த உதவி செய்தார்கள். பலரது ஒத்துழைப்பால் விழா சிறப்பாக நடந்து முடிந்தது. உலக சிறுவர் திரைப்படச் சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''

போட்டிக்குரிய திரைப்படங்களைப் பார்வையிட்ட நடுவர் குழுத் தலைவர் திரு எல். வி. பிரசாத் அவர்கள் பரிசு பெற்ற படங்களின் பெயர்களையும், தொழில் நுணுக்கக் கலைஞர்களின் பெயர்களையும் அறிவித்தார். அரங்கத்தில் அமர்ந்திருந்த கலைஞர்களும் பெருமக்களும் அவரது அறிவிப்பை மிகுந்த கையொலி எழுப்பி வரவேற்றனர்.

தங்க யானை, வெள்ளியானை பரிசுகளை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், நடுவர்களில் ஒருவரான திருமதி இவான்கா க்ரபசேவா பரிசுக்குரிய படங்கள் தெரிந்தெடுக்கப்பட்டமை குறித்து விவரமான அறிக்கையைப் படித்தார்.

அதன் பின்னர்· மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

'இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்திய சிறுவர் திரைப் படக் கழகத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றிருக்கிறார்கள் என்னும் செய்தியை நாம் எண்ணிப் பார்த்தால்,

இதற்கு எந்த அளவு முக்கியம் கிடைத்திருக்கிறது என்பதை நாம் உணரலாம். இன்று கிடைத்துள்ள டாக்டர் வி. சாந்தாராம் அவர்களின் தலைமை, இளைஞர் சமுதாயத்திற்குத் தக்க வழி காட்டியாக அமைந்திருக்கிறது என்று நிச்சயமாக நம்பலாம்.

''ஏழ்மை, வறுமை, துயரங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள் கொண்ட நாட்டில் சிறுவர்கள் பெறுகின்ற கல்வி வசதிகள் மட்டுமல்ல—வாழ்க்கையில் இளைஞர்களுக்கு உண்மையிலேயே திரைப் படங்கள் வழி காட்ட முடியும்.

''சிறுவர் திரைப்படத்துறை ஒரு இயக்கமாக உருவாகி-தொய்வில்லாமல் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இதன் அருமையை இந்திய நாடும் உணர்ந்திருக்கிறது. ஜனநாயக நாடுகள் அனைத்தும் இந்த உணர்வை அடிப்படையாகப் பெற்றிருக்கின்றன.

''அனைத்து நாட்டுச் சிறுவர் திரைப்பட விழாக்கள் பல்வேறு





நாடுகளில நடைபெற்றிருக்கின்றன. என்றாலும் மராட்டிய மாநிலத்தில் பம்பாயிலும் தமிழகத்தில் சென்னையிலும் நடைபெற்ற விழாக்கள்தான் போட்டியின் அடிப்படையில் நடைபெறுகின்றன.''

அமைச்சரின் உரைக்குப் பின்னர், அனைத்து நாட்டுச் சிறுவர்கள் திரைப்பட மையத்தின் தலைவர் திருமதி கிரா பரமோனோவா அவர்கள் குழந்தைகள் படம் குறித்த சர்வதேச நிலையத்தின் சிறப்புப் பரிசை இயக்குநர் சாந்தாராம் அவர்களுக்கு வழங்கி உரையாற்றினார்.

பின்னர், விழாவுக்குத் தலைமை ஏற்ற மேதகு ஆளுநர் உரையாற்றினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

'குழந்தைகள் படங்கள் - தக்க வகையிலே திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டால் - அவை சிறுவர்களின் வளர்ச்சிக்கும் கேளிக்கைக்கும் உதவுகின்ற வலுவான ஓர் அங்கமாகத் திகழ முடியும். குழந்தை, புதிய உலகத்தின் சிந்தனையையும் நடவடிக்கைகளையும் தனது அறிவுக்கு எட்டிய விதத்திலேயே தொடர்பு கொள்கிறது. வரிவடிவமும் ஒலிவடிவமும் குழந்தைகளின் கல்விக் களத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள் தான் எனினும் திரையிலே காணும் காட்சி, குழந்தைகளின் நெஞ்சத்தில்இடம் பெறுவதுடன், புதிய உத்வேகத்தை அவர்களுக்கு அளிக்கிறது. இந்தக் காட்சிகளின வாயிலாக, குழந்தைகள் கேளிக்கையில் மகிழ்வதுடன், எந்தவிதமான தனிப்பட்ட முயற்சிகளும் இன்றி அவர்களின் மனநிலை விரிவடைய வாய்ப்பு ஏற்படுகிறது. கடந்த 10 நாட்களாக நடைபெற்ற குழந்தைகள் திரைப்பட விழா நம்மைக் குதூகலப்படுத்தியதுடன் இளைஞர்களுக்குரிய திரைப் படங்கள்-குழந்தைகளின் வாழ்க்கையில் முக்கியமான் புங்கு பெறுகின்றன என்பதையும் எடுத்துரைக்கிறது. நாம் காணும் சிறுவர் திரைப்படங்கள் பலநாடுகளில் ஒரு தத்துவமாகத் திகழ்கின்றன.''

ஆளுநரின் உரைக்குப் பின்னர் குழந்தைகள்திரைப்படப்போட்டியில் கலந்து கொண்டஇரு திரைப் படங்கள் (*SNOW MAIDEN, THE HOUSE IN KOTSURKOVO VILLAGE*) திரையிடப்பட்டன. அவை குழந்தைகளின் படங்கள் தான் என்றாலும் வயது வந்தோரும் கண்டு வியந்து போற்றும் அளவுக்குச் சிறந்ததாக இருந்தன என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

பத்துநாள் விழா-அனைவரின் இதயங்களிலும் பதிந்துவிட்ட திருவிழாவாகத் திகழ்ந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**தமிழ்ப்பித்தன்,**

**—பி. வி. கிரி.**

### பாடமொழி உணர்வு

தமிழ்மொழி வாயிலாகக் கல்வி அமைய வேண்டும் என்னும் கருத்து இன்று அரசின் கோட்பாடாக எழுந்து அதற்கும் எதிர்ப்பைக் காண்கின்றோம். இக்கோட்பாட்டிலும் பாரதியின் உணர்வு ஒலித்தது :

''இந்துக்களின் கூட்டம்'' என்றொரு கட்டுரை. அதில்,

''அ..................................ன்.''

''மேலே காட்டிய குறியின் பொருள் யாது?

தமிழ்நாட்டில் தேசிய கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா வ்யவகாரங்களும் தமிழ் பாஷையில் நடத்த வேண்டும்''

என்ற கருத்தை எழுதி அதற்குத் தமிழ் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதை,

''அங்கு நூல்களெல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவதுமன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றுக்கும் தமிழில் பெயர் சொல்ல வேண்டும். 'ஸ்லேட்' 'பென்சில்' என்று சொல்லக்கூடாது''

என வற்புறுத்தினார். இக்கொள்கையை ஏற்காதோரை கண்டித்தும் எழுதினார். கல்கத்தா அறிஞர் சர்க்கார் என்பவர் தாய்மொழி மூலம் கற்பிப்பதை விளக்கி ஆங்கில ஏட்டில் எழுதினார். அதனை மறுத்துத் தமிழ்நாட்டு வரலாற்றறிஞர் நீலகண்ட சாத்திரியார் எழுதினார். இதனைப் பாரதியார் வன்மையாகக் கண்டித்துச் சுதேசமித்திரனில் எழுதினார். தமிழ் எழுத்தாளர் ஆங்கிலங் கலந்த தமிழ் எழுதுவதையும் பாரதி நோக்கினார்.

''தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ் நடையைவிட்டு இங்கிலீசு நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகின்றது'' என்று எழுதி, இந்நடை பற்றி

''நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக்கொண்டால் கை நேரான தமிழ்நடை எழுதும்'' (மாலை என்னும் கட்டுரையில்)

என்று காட்டி நேரான 'தமிழ் நடை' என்றும் 'தமிழ்ச் சக்தி' என்றும் தமிழ் உணர்வைக் காட்டினார்.

முதன் முதலில் புதினமாகக் 'கமலாம்பாள் சரித்திரம்' எழுதிய இராசம் ஐயர் தமிழ் எழுத்தால் வருவாய் இல்லாமை கருதி ஆங்கிலத்தில் எழுதத் துவங்கினார். இதனைக் குறித்து எழுதிய பாரதி,

''மேற்படி பிராமணஸ்தர் தமிழ் மணத்தை விரும்பாமல் இருந்ததால் இந்த நிலைமை உண்டாய்விட்டது.' (நூலாசிரியர் பாடு கட்டுரையில்)

தமிழ் மணம் என்றெழுதினார்.



### தமிழ்ப்பற்று என்றால்

தமிழில் பற்று ஏற்பட வேண்டும்; அப்பற்று தமிழ் வளர்ச்சியாக விளங்க வேண்டும் என்பதில் ஆழ்ந்த கருத்துக் கொண்டவன் பாரதி. தமிழ்ப் பற்றிற்கு விளக்கத் தந்தான்:

''தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்திலே ஒருவன் தமிழபிமானியாகமாட்டான்.

பள்ளிக்கூடத்துச் சாத்திரங்கள் எல்லாம் தமிழ் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழ் அபிமானி.

தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலெல்லாம் தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும்போதும் இதர பாஷைகள் பேசாமல், தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழ் அபிமானி.

தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள்

புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழ் அபிமானி''

தமிழ்ப் பற்று பற்றிய பாரதியின் இவ்விளக்கம் 'ஆக்க முயற்சியே உண்மையான தமிழ்ப் பற்று' என்று காட்டுகின்றது.



தமிழ் வளர்ச்சிப் பணிக்கு முதற்படி காட்டினான் :

''இங்கிலீசு படித்த தமிழ் மக்கள்—முக்கியமாக வக்கீல்களும் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும்—தமது வாக்கிலும் மனத்திலும் தமிழரசியைக் கொலுவீற்றிருக்கும்படி செய்து வணங்க வேண்டுமென்றும், அதுவே இப்போதுள்ள நிலையில் தமிழ் வளர்ப்புக்கு மூல சாதனமாகுமென்றும் அறிக்கையிட்டுக் கொள்கிறன்'' (நூலாசிரியர் பாடு கட்டுரையில்)

இஃதொரு வேண்டுகோள்.

இக்கட்டுரையிற் காட்டப்பட்ட உரை நடைப்பகுதிகள் மட்டுமன்று பாரதியின் கட்டுரைகள் பலவற்றிலும் மொழியுணர்ச்சி இழையோட்டமாக உளது. கவிதைகளில் ஒளிவிடும் மொழியுணர்ச்சி தனித்துக் காணத்தக்கது.

இத்தொடர்பில் ஒன்றை நினைக்க வேண்டியவர்களாக உள்ளோம். பாரதி காலத்துத் தமிழ் நிலையிலும், உணர்விலும் நாம் எந்த அளவில் முன்னேறியுள்ளோம் என்றுநினைத்தால் எந்த அளவில் மன நிறைவு கொள்வோம்? விடை அவரவர் அறிய வேண்டியதாகின்றது.

ஆனால், பாரதியின் நம்பிக்கை உறுதியாக இருந்தது. அதனையும் அவனது உரை நடைகொண்டு காட்டுவதே இக்கட்டுரையில் நிறைவாகும்.

''[illegible]வும் விரைவிலே தமிழ் ஒளி உலக
முழுவதிலும்
பரவாவிட்டால் [illegible] பெயரை [illegible]
[illegible]
பார[illegible]

# கண்கள்

## பாரதியார்

'கண்கள் சிவந்து பெரியவாய்' என்றார் நம்மாழ்வார்.

எம்பெருமானுடைய கண்களைச்சொல்லுகிறார். விடுதலை பெற்ற ஜீவன் முக்தர்களுடைய கண்ணும்திருமாலுடையகண்ணைப் போலவே இருக்கும். தாமரைப் பூவைப் போலே கண் வேண்டும் என்பர். திறந்த பார்வை வேண்டும்.

மூடின கண் மறைந்த ஒளியைக் காட்டுகிறது. யோகி கண்மூடி ஜெபம் பண்ணுகிறானே அதை நான் சொல்லவில்லை. ஸாமான்ய ஜனங்கள் கண்ணை முழுதும் விழித்துப் பார்க்காமல் அரைப் பார்வையும், கோணற் பார்வையும் பார்க்கும்படி செய்கிற அஞ்சானத்தையும் பயத்தையும் பழிக்கிறேன். இது நிற்க.

நான் சென்னைப்பட்டணத்தில் இருந்தபோது ஒரு சாமியாருடன் சிநேகப்பட்டேன். அவர் சுதேசியம், அன்னிய வஸ்து பகிஷ்காரம், ஸ்வராஜ்ய ஸ்தாபனம் என்ற விஷயங்களைப் பற்றி ஆத்திரத்தோடு பேசுவார். அவர் கண்ணை இமைக்காமலே நெடுநேரம் இருப்பார்; மனிதர் இமைக்காமலே இருந்துவிடலாம் என்று அந்தச் சாமியார் சொல்வதுண்டு. அது நல்ல பழக்கம். ஸூர்யனையே பார்த்துக் கொண்டிருந்தால் ஞானதிருஷ்டி உண்டாகும். கண்ணில் வீரம் ஏற்படும்.

சாதாரணமாக இவருடைய கண்கள் சந்தித்தால், 'இவன் ஏனடா நம்மைமுறைச்சுப் பார்க்கிறான்?' என்கிற எண்ணம் இருவர் மனசிலும் உண்டாகிறது. ஒருவன் கண்ணைச் சாய்த்துக் கொள்ளுகிறான். அல்லது இருவரும் சாய்த்துக் கொள்ளுகிறார்கள். நேருக்கு நேர் கண்ணுக்குக் கண் பார்த்து இரண்டு பேர் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பது துர்லபம்.

பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும்!

கவனி!
பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.
பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.
கவனி !
பொய் தீர்ந்தால் பயம் தீரும்;
பயம் தீர்ந்தால் பொய் தீரும்.

நேரே பார்த்தால் விரோதக் குறியென்று யோக்யன் ஏன் நினைக்க வேண்டும்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உன் மனசில் என்ன இருக்கிறதென்று தெரிந்து கொள்ளும் பொருட்டாக உன் கண்ணை நேரே பார்க்கிறேன். விரோதமில்லை. அவமரியாதையில்லை. விஷயம் தெரிந்து கொள்ளும் பொருட்டு.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு நாள் முழுதும் சூர்யனை இடை விடாமல் பார்த்து உபாசனை செய்தாராம். இது நல்ல வழக்கம். கண் இருக்கும்போது சூரிய நமஸ்காரம் செய்வோம். அதனால் ஞான திருஷ்டியேற்படும்.



# கடல் மணலில் ஒரு கூட்டம்

1908-ல் பாரதத்தில் இருந்த அரசியல் குமுறலை நேரில் பார்த்து விவரிக்க நம் நாட்டுக்கு ஹென்றி டபிள்யூ. நெவின்ஸன் என்ற பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையாளர் வந்தார். வடக்கே திலகர், லஜபதிராய், கோகலே முதலியோரைச் சந்தித்தது போலவே தெற்கே பாரதியையும் அவர் சந்தித்தார். பிரிட்டன் திரும்பியதும் தாம் எழுதிய ''இந்தியாவில் புதிய உணர்ச்சி'' என்ற பிரசித்தமான நூலில் ''கடல் மணலில்'' என்ற ஓர் அத்தியாயம் முழுவதும் சென்னையில், திருவல்லிக்கேணி திலகர் கட்டத்தில் ,பாரதி முதலானோர் நடத்தியதோர் கூட்டத்தைப் பற்றி தெரிவான் வர்ணனையாக இருக்கிறது. கூட்டத்தில் [illegible] பாரதி பாடிய மூன்று பாடல்களின் பொருளையும்கூட நெவின்ஸன் தந்திருக்கிறார். அவரது வர்ணனையின் சாரமாவது:

மாலை நேரம். மாரிக்கால சூரியன் வானில் வர்ண ஜாலம் பரப்பி அஸ்தமிக்கிறான். மானாவில் கோச்சு வண்டிகள் ஒன்றிரண்டே போகின்றன. ஆங்கிலோ இந்திய யுவர்களும் யுவதிகளும் சுகமாய்ப் போலோ முதலிய விளையாட்டுகளில் அலுத்து வீடு திரும்புகிறார்கள். போக்குவரத்து ஓய்கிறது. ஆனால், மணல் வெளியில், விளக்குவைத்த ஒரு மேடையைச் சுற்றி நாலைந்தாயிரம் பேர் கூடியிருக்கிறார்கள். பெரும்பாலும் இளைஞர்கள் .பொதுக் கூட்டம். எங்கோ கண்காணாத பஞ்சாப் மாகாணத்தில் சமீபத்தில்தான் பிரபலமான ஸர்தார் அஜித் சிங், லாலா லஜபதிராய் என்ற இருவர் விடுதலையானதைக் கொண்டாடும் கூட்டம்.

கூட்டம் ஆரம்பமாயிற்று. ஒரு இறுவன் உச்சஸ்தாயியில் ''வந்தே மாதர'' கீதத்திற்கு பாரதி செய்துள்ள தமிழ்மொழி பெயர்ப்பைக் பாடுகிறான். பாட்டு முடிந்ததும் ஆயிரமாயிரமான குரல்களும் ''வந்தே மாதரம்'' ''தாயை வணங்குகிறோம்! என்று அதிர முழங்குகின்றன. பாட்டு கனிவு மிக்க நயமான கீதம்; பிரஞ்சு கீதம் 'லா மார்ஸலேஸ்' போன்ற கொதிப்பூட்டும் புரட்சிக் கீதமில்லை. ஆனால் மக்களின் வந்தே மாதர கோஷத்தில் புரட்சியின் அதிர்ச்சி முழுவதும் ஒலித்தது.

இனி பாரதி எழுந்து பாட ஆரம்பிக்கிறார். நெவின்ஸன் வாக்கில் இதைக் கவனிப்போம்.

''இந்த தேசிய கீதம் பாடி முடிந்தபின், சென்னையின் தமிழ்க் கவிஞர் தாம் லஜபதிராய் நாடு கடத்தப்பட்டபோது இயற்றியதோர் [illegible] பாடினார். அது நாடு கடத்தப்பட்ட [illegible] குமே [illegible]

# தமிழ் உணர்வில் பாரதி!

**கோவை இளஞ்சேரன்**



"அருமையான உள்ளக்காட்சிகளை
எளிமைகொண்ட நடையிலே எழுதுவது
நல்ல கவிதை''
—இது கவிதைக்கு ஓர் இலக்கணம்;

பாரதி வகுத்தது. உள்ளக் காட்சியின் வெளிப்பாடுதான் கவிதை என்றான். உள்ளக் காட்சி என்றால் உணர்ச்சி உருவம் என்று பொருள். ஆம், உணர்ச்சியின் சொல்லுருவந்தான் கவிதை. பாரதி வகுத்த இலக்கணத்திற்குப் அவன் இலக்கியமாகத் திகழ்கின்றான்.

பாரதி ஓர் உணர்ச்சிக் கவிஞன். அவனது உணர்ச்சி நாட்டுணர்ச்சியாக, இறையுணர்ச்சியாக, மொழியுணர்ச்சியாக, குமுகாய உணர்ச்சியாக வெளிப்பட்டது. இவற்றுள் பாரதியின் மொழி உணர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்று மட்டுமன்று, ஒரு தனித் தன்மை கொண்டதுமாகும்.

பாரதிக்கு முன்னர் தமிழ் மொழி உணர்ச்சியில் ஊறியவர் பலர். ஊக்கமூட்டியோர் பலர். ஆக்கங்காட்டியோர் உளர். ஆனால், பாரதி தமிழின் மறுமலர்ச்சிப் போக்கில் மொழியுணர்ச்சியை ஊன்றிய தலைமகன். இவ்வாறு எழுதும்போதே பாவேந்தர் பாரதிதாசன் இவ்வுணர்ச்சியின் முடிமகன் என்பதையும் குறிக்க வேண்டும். இவை இரண்டும் நேர்மையான கணிப்புகள்.

அப்படியென்ன பாரதியின் மொழியுணர்ச்சி மேலோங்கிக் காட்டுகின்றது? கீழ் வரும் பாரதியின் தொடர்களில் நம் உணர்வை ஊன்ற வேண்டும் :

''தம்பி,—நான் ஏது செய்வேனடா?
தமிழைவிட மற்றொரு மொழி சுகமாக
இருப்பதைப்
பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது.
தமிழனைவிட மற்றொரு சாதியான் அறிவிலும்
வலிமை
யிலும் உயர்ந்திருப்பது எனக்குச் சம்மதமில்லை.
தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு
சாதிக்காரி
அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம்
புண்படுகிறது."

முதல் தொடர் காட்டும் மொழிநோக்கில் பாரதியின் வருந்து உணர்வு வெளிப்படுகின்றது. அடுத்த தொடரின் கருத்தில் அவனது இசையா உணர்வு தெரிகின்றது. இறுதித் தொடரின் பார்வையில் புண்படும் உணர்வு புரிகின்றது. மற்றதை—மற்றவரை ஒப்பிட்டு எழும் வருத்தம், இசையாமை, புண்பாடு ஆகிய உணர்வுகள் ஒருவகையில் வேண்டாதவைகளாகப் படலாம். ஆனால் இவ்வுணர்வுகளுக்கு அடிந்தளமான 'மூல உணர்வு' ஏற்கத்தக்கது; குறிக்கத்தக்கது; ஏற்றுப் போற்றற்குரியது.

இதுபோன்று ஆழமான மொழி உணர்வைப் பாரதி தனது கவிதைகளிலும் வடித்துள்ளான். இங்கு அவனது உரைநடைப் பகுதியை எடுத்துக்காட்டுவதில் ஒரு கருத்து உண்டு. இதனை எழுதிய சூழலை நோக்கும் போதுதான் அவனது மொழி உணர்வின் உண்மையும் ஆழமும் தெளிவுபடும்.

இவ்வுணர்வுத் தொடர்கள் பாரதி, பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய தனி முடங்கலின் ஒரு பகுதி. தனிப்பட்ட வகையில் எழுதப்படும் முடங்கலில் வடிக்கப்படும் கருத்து உணர்வின் நேர்முக உருவம். இவ்வகையில் இத்தொடர்கள் உணர்ச்சியின் நேர்முக உருவமாகும். இத்துடன் இம்முடங்களிலேயே முன்பகுதியில் வடித்துள்ளவற்றையும் இணைத்துக் காண வேண்டும்.

''தமிழ், தமிழ், தமிழ்—என்று எப்போதும்
தமிழை
வளர்ப்பதே கடமையாகக் கொள்க! ஆனால்,
புதிய புதிய
செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய
உண்மை
புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே
போகவேண்டும்'.

இவ்வரிகளில் அவனது ஆக்க உணர்வைக் காண்கின்றோம். வருத்தமாகவும் இசையாமலும் புண்ணாகவும் எழும் உணர்வுகளை முந்திக் கொண்டு முழங்கிய இவ்வாக்கஉணர்வு அவனது மொழி உணர்வின் ஊற்றம் பளிச்சிடுகின்றது.

மேலே காணப்பட்ட பாரதியின் தமிழ்த் தொடர்களில் வடமொழிச் சொற்கள் செறிந்துள்ளன. வடமொழி எழுத்துக்களும் கையாளப்பட்டன. (அவை தமிழ் எழுத்துக்களாக இங்கு எழுதப்பட்டுள்ளன) இஃது ஒரு குறைதான். ஆனால், காலத்தை நோக்க இது குற்றமாகாது. இம்முடங்கல் 1915-இல் எழுதப்பட்டது. அஃதாவது இற்றைக்கு 66 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சூழல் நம்மை அடக்கி ஆண்ட ஆங்கிலத்தை ஒதுக்கும் போக்கில்தான் இருந்தது.

### தமிழுக்கு முதன்மை

''தென் ஆப்பிரிக்காவில் பெண்கள் விடுதலை'' என்று ஒரு கட்டுரை. அதில் ''மெம்பர்'' என்னும் ஆங்கிலச் சொல்லை எழுதினான். அதற்கு ஓர் அடிக்குறிப்பை எழுதினான்.

''மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை.......... 'அவயவி' சரியான வார்த்தையில்லை. 'அங்கத்தான்' கட்டிவராது. 'சபிகன்' சரியான பதந்தான். ஆனால் பொதுசனங்களுக்குப் புரியாது. யாரெனும் பண்டிதர்கள் நல்ல பதங்கண்டு பிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன். 'உறுப்பாளி?' எழுதலாமா என்று நினைத்தேன். ஒன்றும் மனத்திற்குப் பொருந்தவில்லை. கடைசியாக 'மெம்பர்' என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆற, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்லுகிறேன்.''

இக்குறிப்பு கொண்டு பாரதியின் ஆங்கில நீக்க எண்ணத்தையும், தமிழ் ஆக்க முனைப்பையும் உணரலாம்.

அவர் காலத்துத் தமிழ் வார இதழ்ஒன்றில் தலைப்பு [illegible] தமிழிலும் [illegible] ஆங்கிலத் [illegible] தொடர் [illegible] மாக [illegible] எழுதியவை.

''ஆகா நான் மாற்றி எழுதுகிறேன். தமிழை முதலாவது போட்டு இங்கிலீசைப் பின்னே போட்டேன். அந்தப் பத்திரிகையில் அப்படியில்லை. இங்கிலீசை முன்னே போட்டு, தமிழைக் கீழே போட்டிருந்தது. 'அமெரிக்கா ஸ்திரீ' பார்த்தாயா என்னைத் தெரியாமலே என் கை முதலாவதுதமிழ் வார்த்தை (தமிழ் எழுத்துக்களில் எழுதுவதைக் குறிக்கின்றார்) எழுதுகிறது.— என்று எழுதினான்.

இதுபோன்றே காலப்போக்கில் பாரதிக்கு வடமொழி தமிழ் மொழி வேறுபாட்டெண்ணமும் எழுந்தது.

'சவி என்பது ஒளி; இது வடசொல் கம்பன் காலத்தில் அதிக வழக்கில்இருந்தது போலும்' (புனர் சென்மம்(1) கட்டுரை)

''சமஸ்கிருத பாஷையின் கலப்புக்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் மிகவும் உயர்ந்த நாகரீகமொன்று நின்று நிலவி வந்ததென்பதற்கு அடையாளமாகத் தமிழில் மிக உயர்ந்த தரமுடைய பல பழைய இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன'' (தமிழ் நாட்டு மாதருக்கு கட்டுரையில்.)

இவ்வெண்ணம் போகப் போக முதிர்ந்தது. பிற்கால எழுத்துக்களில் நல்ல தமிழ்ச் சொற்களைக் கவிதையிலும் உரைநடையிலும் அமைத்தான்.

வடமொழிபால் பாரதிக்கு வழிபாட்டு எண்ணமே உண்டு. அதனைத் ''தெய்வ மொழி' என்றும் எழுதினான். அதே நேரத்தில்,

''ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்''
என்று தமிழ்த்தாய் பேசுவதாக பாடினான்.

''நாடு முழுதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக'' என எழுதியவன் தொடர்ந்து அடுத்த தொடராக,

''எனினும், தமிழ் நாட்டில் தமிழ்மொழி
தலைமை பெற்றுத் தழைத்திடுக''
(தேசியக் கல்வி கட்டுரையில்) என வலியுறுத்தினான்.

### தமிழ் இசை!

யாவும் தமிழில் என்னும் கொள்கைக்கும் பாரதியின் உணர்வூற்று இருந்தது. தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னரே பாரதியின் கருத்து முளை தோன்றியது.

''தமிழ்ச் சபைகளில் எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாசைகளில் பழம் பாட்டுக்களை மீண்டும் மீண்டும் சொல்லுதல் நியாயமில்லை'' (சங்கீத விசயம் கட்டுரையில்)

இது 1916-இல் எழுதப்பட்டது. இவ்வாறு பிற மொழிப் பாடல்களை [illegible] மீண்டும் கேட்கும் தமிழர்களை '[illegible] காது உள்ளவர்கள்' என் [illegible] ''தோல் காது [illegible] இன்பத்தைப் [illegible] மாட்டார்கள் என் [illegible] பாடினான்.

இருந்தது. தன் இல்லத்தைப் பற்றிய இன்ப நினைவுகள், தன் இளமையைக் கழித்த தாய்த் திரு நாட்டிடம் ஆழ்ந்த பற்று, அந் நியர்களிடையே, விளங்காத மொழி பேசுவோரிடையே, வாழ் வதிலுள்ள ஏக்கம் நிறைந்த தனிமை - இவையாவும் அப் பாடலில் அமைதியுடனும் எளி மையுடனும் சொல்லப் பட்டன. பின்னர் கவிஞர் திடீரெனத் தம் போக்கை மாற்றிக் கொண்டு .எள்ளச் சுவையில் புகுந்தார். இந்திய மந்திரி ஜான் மார்லிக்கும் இந்தி யாவுக்கும் 'ஹோம் ரூல்' என்ற சுயராஜ்யம் பற்றி நடப்பதாக ஒரு சம்பாஷணையைப் பாட்டில் விவரித்தார் அவர்.

முதல் பாட்டு ''லஜபதிராய் பிரலாபம்'' ('நாடிழந்து மக்க ளையும் நல்லாளையும் பிரிந்து..'..). அடுத்தபடி பாடியவை, தொண்டு செய்யும் அடிமை '' ('ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாசிக்கு ஆங்கிலேய உத்தி யோகஸ்தன் கூறுவது') என்று துவங்கும் பாட்டும், ஆங்கிலேய னுக்குப் பாரதவாசி பதிலளிப்ப தான ''சுதந்திரப் பெருமை'' (வீர சுதந்திரம்') என்ற பாட்டு மாகும்.

பாரதி பாடிய பின் வேறு சிலர் பேசினார்கள். சிலர், ஆங்கி லத்தில், வெள்ளையரும் வியக் கும் வாதங்களுடன் 'தீவிரவாதி கள்' கட்சியையும் சுதந்திரத்தின் அவசியத்தையும் எடுத்துரைத் தார்களாம். முடிவில், காவிதரித்த சந்நியாசி ஒருவர் - 'உயரமான வர், கையில் தடிகொண்டவர், பூர்வத்தில் பிராமணர். இப் போது எல்லாரும் ஒன்றெனக் கொண்டவர், பெரிய தாடியுள்ள வர்' -தாம் லஜபதிராயைச் சமீ பத்தில் சந்தித்ததாகவும், லஜ பதி தியாக சீலர், மக்களுக்காக எதையும் அளிக்க அஞ்சாதவர் என்றும் பேசினார். கூட்டம், வானதிரும் 'வந்தே மாதர' கோஷத்திடையே கலைந்தது. வ்ளவு சுதந்திர உணர்ச்சி வேகம் இருந்தும் கூட்டத்தில் களேபர மில்லை, கூச்சலில்லை, ஆர்ப் பாட்டமில்லை; அவ்வளவு அமைதியாக நடந்தது, லண்டன் ட்ரபால்கர் சதுக்கத்தில் கூட இவ்வளவு ஒழுங்காகக் கூட்டங் கள் நடப்பதில்லை; அன்று கூட் டம் போடப்படுமென்று பகிரங்க மாய் அறிவித்திருந்தும், அங்கே ஒரு போலீஸ்காரன் கூட இல்லை. ஒரு சிப்பாயும் இல்லை; தேவைப் வில்லை. ''எதிர்பார்க்கத் தக்க படி, அங்கு இருந்த ஒரே ஐரோப்பியன் நான்தான்'' என்று நெவின்ஸன் வியக்கிறார்.

# பார்த்தோம் படித்தோம்

தமிழரசு 1-11-81 ஏட்டில் கவி யரசு கண்ணதாசன் அவர்களின் ஒளிப்படம், வாழ்க்கைக் குறிப்பு, இரங்கல் செய்திகள் முதலான வற்றைப் படித்தேன். மறைந்த கவிஞருக்கு நல்ல முறையில் புகழ் வணக்கம் செய்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது இரங்கற் செய்தி யில் ''பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு, தமிழுக்கு அவர்தான் என்பது நிலைமை'-என்று கூறி யுள்ளது குறிப்பிடத்தக்கது.

''பாரதி பாரதிதாசனுக்குப் பிறகு'' என்ற வரிசை முறை யைப் பல ஏடுகள் மறந்துவிட்ட —மறைத்து விட்ட நிலையில் 'தமிழரசு' முறையான இரங்கல் செய்தியினை வெளியிட்டுள்ள தைத், தமிழ்க் கவிஞர் மன்றம் நன்றியுடன் குறித்துக் கொண் டுள்ளது.

—வான் முகில்,
தமிழ்க் கவிஞர் மன்றம்
நீலகிரி மாவட்டம்.

16-11-81 இதழில் ''பண் பாளர் பண்டித நேரு'', என்ற தலைப்பில் திரு எஸ்.எம். மருதம் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை, கட்டுரைக்கோர் இலக்கணம்.

—எஸ். கணேசன்,
வளவனூர்.

தமிழரசின் ஒவ்வொரு இதழின் அட்டைப் படமும் 'பளிச்' என்று அருமையாகவும், புதுமையாக வும் இருப்பது அழகாக இருக் கிறது. கண்ணைப் பறிக்கிறது.

ச. புகழேந்தி,
திருவையாறு

பொதுவாகத் 'தமிழரசு' இதழ் களில் வெளிவரும் கட்டுரைகள் சிறப்பாக இருக்கின்றன. 'தமிழ் வளர்த்த பெரியோர்கள்' கட்டு ரைகள் வரவேற்கத்தக்கன.

—க. சண்முகசுந்தரம்,
கைலாசபுரம்.

சுவடிப் புலத்தின் அருமை பெருமைகளை விளக்கி வரையப் பட்டு இருந்த திரு. சு. அழகப்ப ராசு அவர்களின் கட்டுரை அருமை, இனிமை !

—பு. இளங்கோ,
ஐயாறு.

பாரதியின் நூற்றாண்டைச் சிறப்பிப்பது போல 'தனி ஒருவ னுக்கு!' என்ற புதுமைப்பித்த னின் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள சமுதாயச் சங்கடங்களைப் பிரதிபலிக்கும் கதையைத் 'தமிழ ரசு' வெளியிட்டிருப்பது, தேசிய கவியின் நினைவுக்கு நாம் செலுத் தும் ஆக்கப்பூர்வமான அஞ்சலி யாகிறது.

—கவிஞர் என். ஜே. கந்தமாறன்,
திருக்காட்டுப்பள்ளி.

பண்டித நேருவின் மலர்த் தொகுப்பு நன்றாக அமைந்திருந் தது. பாராட்டுக்கள். மருத் துவம், அறிவு, ஆய்வு, நூதன ஆராய்ச்சி போன்ற துணுக்கு களையும் வெளியிடுங்கள். சிறந்த ஓவியங்கள் பற்றிய குறிப்புகளை யும் வெளியிட வேண்டுகின்றேன்.

—பி. கலாநிதி,
பாபநாசம்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தொகுப்பு: தே. மணி.

## 1—11—81

இன்றைய கன்னியாகுமரி மாவட் டத்தைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வும் வடக்கெல்லையை மீட்கவும் பாடு பட்ட தியாகிகளின் குடும்பங்களுக்குத் தமிழக அரசு உதவும் என்றும் கன்னியா குமரிப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 11 பேரின் குடும்பங் களுக்குத் தலா ரூ. 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

## 3—11—81

புழலேரியிலிருந்து கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குப் புதிதாகச் சுரங்கக் கால்வாய் கட்டப்பட்டு வரு கிறது என்றும் சென்னையில் 600 தெருக் களில் புதிதாகக் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் அறிவித் தார்கள்.

## 8—11—81

இந்த ஆண்டு மே மாதம் 2-ஆம் தேதி முதல் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட சுமார் 879 துணை விவசாய அதிகாரிகளை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

## 9—11—81

தமிழ்நாட்டுவீட்டுவசதி வாரியம் அடுத்த ஆண்டில் ரூ. 9.8 கோடி செலவில் பல் வேறு வீடுகட்டும் திட்டங்களை நிறை வேற்றும் என வாரியத்தின் தலைவர் திரு வேலூர் நாராயணன் அறிவித்தார்.

## 10—11—81

'சிமெண்ட்' விநியோகத்தில் நடை பெற்று வந்த ஊழல்களையும் முறை கேடுகளையும் ஒழித்து மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

## 14—11—81

நாட்டின் ஒருமைப்பாட்டையும், கலாச் சாரத்தையும் ஒழுங்கையும் மொழி, நாடு ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவு முறையையும் வலியுறுத்தக்கூடிய நல்ல திரைப்படங்களை எடுக்க முன் வந்தால், அத்தகைய படங்களுக்கு வரி விலக்கு அளிக்கத் தமிழக அரசு தயாராக உள்ளது என்று மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் அறிவித்தார்கள்.

## 15—11—81

எட்டையபுரத்தில் பாரதியார் பெயரில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று தொடங்கப் பெறும் என்று செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 21—11—81

தேசிய படை மாணவர்கள் 170 பேருக்கு மேற்படிப்பு உதவித்தொகையாக ஒன் றரை இலட்சம் ரூபாய் தமிழக அரசு வழங்கியுள்ளது.

## 23—11—81

பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்த கட்கூரில் 1 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர்த்

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டை முன்னிட்டு, தொடர்ந்து 'தமிழரசு' இத[illegible] பாரதியாரைக் குறித்த செய்திகள்-க[illegible] இடம் பெறுகின்றன என்பதை மகி[illegible] தெரிவித்துக் கொள்கிறோம்!

திட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

**25—11—81**

விழுப்புரத்திற்கு அருகில் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**29—11—81**

தமிழ் நாட்டில் கோவை உள்பட 75 நகரங்களின் வளர்ச்சிக்காக உலக வங்கி உதவியுடன் ரூ. 125 கோடி செலவில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

**30—11—81**

1982-ஆம் ஆண்டுப் பொங்கல் திருநாளில் தமிழகம் முழுவதும் மாவட்டந்தோறும் 1,500 காவலர்களுக்கு முதலமைச்சர் விருதும் பரிசுகளும் வழங்கப்படும் என்று, வீரச் செயல்கள் புரிந்த காவலர்களுக்குப் பரிசளிக்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாவட்டக் காவல் துறைத் தலைவர்களுக்கு வீட்டு வசதி அல்லது வீட்டு வாடகை தர வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ்நாடு அரசு நிச்சயமாக நிறைவேற்றி தரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

காவலர்கள் நேர்மைக்குப் பதக்கம் அளிக்கும்போது, சம்பளத்தோடு அவர்களுக்கு 20 ரூபாய் அல்லது 25 ரூபாய் கூடுதலாகக் கொடுக்கலாம் என்ற கோரிக்கையை அரசு ஏற்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பெண் காவலர்கள் அணியும் சட்டையைக் கால்சட்டைக்குள் போடும் நிலையை மாற்றி மேலே கோட்டு போல அணியும் வாய்ப்பு செய்து தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

### நியூ சிலாந்தில் தமிழ் எழுத்து

நியூசிலாந்து நாட்டு ஆழ்கடல் ஆய்வாளர்கள், அவர்கள் நாட்டுக் கடற்கரைக்கு அப்பால் மூழ்கிப் போன ஒரு கப்பலை முப்பது ஆண்டுகட்கு முன் கண்டுபிடித்தனர். அக்கப்பலில் தமிழோசையை எழுப்பிய மணியொன்று கண்டெடுக்கப்பட்டது. அம்மணியின் மீது தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன! அந்த மணி 500 ஆண்டுகள் பழமையுடையதாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

பதினான்காவது நூற்றாண்டிலேயே பழம்பெருந் தமிழர்கள் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா முதலிய நாடுகளில் இந்திய நாட்டு வாணிபக் கொடியைப் பறக்கவிட்டிருக்கின்றனர் என்பதற்கு இது ஓர் அரிய சான்றாகும்.

இந்தியக் கடல் வாணிப வரலாற்றை விளக்கும் பொருட்காட்சியில் தமிழர் பெருமையைப் பறைசாற்றும் அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மணி மீது காணப்பட்ட தமிழ்-லிபியின் புகைப்பட நகல் ஒன்று தற்போது வைக்கப்பட்டுள்ளது.



## விவசாயிகளுக்கு ரூ.93 கோடி சலுகை

விவசாயிகளுக்குக் கடன் ரத்து, வெவ்வேறு தேதிகளில் அபராத வட்டி தள்ளுபடி, செலுத்தப்பட்ட அபராத வட்டியைத் திருப்பிக் கொடுத்தது, தவணையை நீட்டித்து மற்றக் கடன்கள் மீதான சாதாரண வட்டியைத் தள்ளுபடி செய்தது முதலியவற்றிற்கு இதுவரையில் 92 கோடியே 68 இலட்சம்ரூபாய் அளவிற்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தமிழக அரசு வேளாண்மை உயர்மட்டக் குழுவின தலைவரான திரு. முனு ஆதி தெரிவித்துள்ளார். இதனால் 4 இலட்சத்து 52 ஆயிரம் சிறு விவசாயிகள் பெரிதும் பயன டைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

• • • •

பயன்படுத்தப்பட்டு மீண்டும் எதற்கும் பயன்படாது என்று தள்ளிவிடும் நிலக்கரி கழிவுப் பொருள்களைக் கொண்டு மின்சார உற்பத்தி செய்யலாம் என்று திருச்சியிலுள்ள 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்' நிறுவனம் கண்டுபித்து அதில் வெற்றியும் அடைந்துள்ளது.

• • • •

சிலந்திப் பூச்சி மற்றும் வண்டு, பூச்சி ஆகியவற்றின் செயல்களைக் கொண்டு இரண்டு நாட்களில் மழை, புயல், கடும்பனி ஆகியவை வருவது குறித்து மிகவும் துள்ளியமாக முன்னறிவிப்பு கொடுக்கும் அதிசய மனிதர் ஒருவர் ரஷ்யாவில் இருக்கிறார். இவரது அறிவிப்புக்களைச் சோவியத்து மக்கள் ஆவலுடன் கேட்டு நன்கு பயனடைந்து வருகிறார்கள்.

# காசநோய்

## பி.ஸி.ஜி. தடுப்பு மருந்து

இந்தியாவில் இன்று பரவலாக உள்ள நோய் காசநோய். சுகாதாரப் பிரச்னைகளுள் முதன்மையானது. சுமார் ஒரு கோடி மக்கள் நம் நாட்டில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் சுமார் 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம். நம்மில் ஒரு சிலருக்கு இந்நோயினைப் பற்றி காரணம், பரவும் முறை, தடுப்பு முறை, சிகிச்சை ஆகியவைகளைப் பற்றி தெரிந்திருக்கலாம். ஆனால் பொதுவாக மக்களில் பெரும்பாலோருக்கு இந்நோயினைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

ஆகவே காசநோயினைப் பற்றிய மேற்கூறிய விவரங்கள் கேள்வி-பதில் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம்.

**1. காசநோய் யாருக்கு வரும்?**

காசநோய் எவருக்கும் வரலாம். ஆடவர், பெண்டிர், மூத்தோர், இளையோர், செல்வர், வறியர் பாகுபாடின்றி அனைவரையும் அல்லலுக்கு உள்ளாக்கும்.

**2. காசநோய் பரம்பரை நோயா?**

இல்லை. பிறக்கும் போதே வருவதில்லை. பெற்றோருக்கு காசநோய் இருந்தாலும், குழந்தை பிறக்கும் போது தொற்று இன்றி பிறக்கும். நோயாளிகளோடு தொடர்பு கொண்டால்தான் குழந்தைகளுக்கு தொற்று ஏற்பட்டு, நோய் உண்டாகலாம்.

**3. எதனால் காசநோய் உண்டாகிறது?**

காசநோய் நுண்ணிய கிருமிகளால் உண்டாகிறது. இக்கிருமிகளை ஒரு நுண் கிருமிகளைக் காணும் கருவி மூலம்தான் காணமுடியும். நோயாளிகளின் சளியிலேதான் பெரும்பாலும் இக்கிருமிகள் காணப்படும். காசநோயாளி இருமும் போதும், தும்மும்போதும், எச்சில் துப்பும் போதும், கோடிக்கணக்கில் இக்கிருமிகள் வெளிப்பட்டு, காற்றோடு கலந்து விடுகின்றன. முறையான காற்றோட்டம் இல்லாத அறையில், இக்கிருமிகள் அடங்கிய காற்றை சுவாசித்தால்; காசநோய் உண்டாகலாம்.

**காசநோய் உள்ளதா என்பதை எவ்வாறு அறிவது? அல்லது காசநோயின் அறிகுறிகள் யாவை?**

தொடக்க நிலையில் காசநோய் எவ்வித அறிகுறியையும் காட்டாது. ஒரு சிலருக்கு காசநோய் ஏற்பட்டிருந்தாலும் அது அவர்களுக்கே தெரியாது. தொடர்ந்து பல நாட்கள் உள்ள இருமல், களைப்பு, எடை குறைதல், பசியின்மை, மார்பில் வலி ஆகியவைகள் காசநோய் ஏற்படுவதின் அறிகுறிகள். சளியில் ரத்தம் கூட வரலாம். இவைகளும் இரு வாரங்கள் தொடர்ந்து இருமல் இருந்தால் அதுவே முக்கிய அறிகுறியாகும்.

**இத்தகைய அறிகுறிகள் இருந்தால் என்ன செய்வது?**

இத்தகைய அறிகுறிகள் இருந்தால், உடனே அருகாமையிலுள்ள மருத்துவ மனைக்கு மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

**காசநோய் குணமாக்க முடியுமா?**

தொடக்கத்திலேயே நோய் கண்டு பிடிக்கப்பட்டு, உடனே சிகிச்சையினைத் தொடங்கினால், காசநோயினைக்

குணப்படுத்தலாம். ஒரு மருத்துவர் சளி பரிசோதனை, எக்ஸ்-ரே மூலம் நோயைக் கண்டுபிடிக்க முடியும். சளியில் கிருமிகள் இருந்தால், நோய் உள்ளது என்பது உறுதி. மருத்துவரின் அறிவுரைப்படி நடந்து, மருத்துவரால் மருந்துகளை ஒழுங்காக அவர் மருந்து வேண்டாமென்று கூறும் வரை இடையே நிறுத்தாமல் கொடுத்து காச நோயை உறுதியாய் குணப்படுத்தலாம்.

**காசநோயினைக் கண்டு பிடிக்கும் வசதிகள் எங்கு உள்ளன?**

எல்லா மருந்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவ மனைகள், காசநோய் நிலையங்கள் மூலமாக வசதிகளைப் பெறலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காசநோய் நிலையம் இத்தகைய வசதிகளை எல்லா மருத்துவ, சுகாதார நிலையங்களில் ஏற்பாடு செய்யும். இத்தகைய நிலையங்கள் எக்ஸ்-ரே மற்ற சோதனைகள் செய்ய மாவட்ட காசநோய் நிலையங்களுக்கு அவசியமானால் நோயாளிகளை அனுப்பலாம். இத்தகைய சிகிச்சை இலவசம்.

**காசநோய் சிகிச்சை எங்கு பெறலாம்?**

நோயாளிகள் வீட்டிலிருந்து கொண்டே அருகாமையிலுள்ள மருத்துவ மனையிலிருந்து மருந்துகளை பெற்று சிகிச்சை பெறலாம். சிகிச்சை முடியும் வரை மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்.

**சிகிச்சையின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான கொள்கைகள் யாவை?**

1. மருத்துவர் கூறும் வரை, கொடுக்கப்பட்ட மருந்துகளை ஒழுங்காக தவறாமல் அருந்த வேண்டும். சிகிச்சை தொடங்கி சில நாட்கள் கழித்து, நோயாளிகளுக்கு இருமல் தொல்லை இல்லா விட்டாலும், மருந்துகள் அருந்துவதை நிறுத்தக்கூடாது. இது முக்கியமானது.

2. மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை. நோய் முற்றிய நிலையில் உள்ளவர்களுக்கும் கடினமானநோய் உள்ளவர்களுக்கும் படுக்கை வசதி அளிக்கப்படும். மருத்துவர் அதற்கான அறிவுரை வழங்க ஏற்பாடுகள் செய்வார்.

3. எளிய சத்துணவே போதும். உயர் ரக உணவு, படுக்கையில் ஓய்வு நோயாளிகளுக்குத் தேவையில்லை.

4. சிகிச்சை அளிக்கும் மருத்துவர் கூறினால் சிறிது காலம் ஓய்வு எடுக்கலாம். பின்னர் நோயாளி தன் அன்றாட வேலைகளைக் கவனிக்கலாம். குடும்ப வாழ்க்கையில் செய்யும் பணியில் மாற்றம் தேவையில்லை.

5. நோயாளிகள் நோயைப் பரப்பா வண்ணம் வழி முறைகள் கூறப்படும். அவர்கள் மூலம் குடும்பத்தாருக்கும், சுற்றியுள்ளோருக்கும் காசநோய் பரவக்கூடாது. ஒழுங்காக சிகிச்சை செய்து கொள்வது முக்கியமானது. இதனால் நோயாளி மூலம் காசநோய் பரவுவது சில வாரங்களில் தடுக்கப்படுகிறது.

**காசநோயினைத் தடுக்க முடியுமா? எங்ஙனம்?**

முடியும். காசநோயினைத் தடுத்துக் கொள்ள முடியும். சில முன்னெச்சரிக்கைகள் எடுத்துக் கொண்டால் தடுத்துக் கொள்ள முடியும். காற்றோட்டம் இல்லாத அறைகளில் காசநோயாளிகளோடு இருப்பதை தவிர்க்க வேண்டும்.

இருமல், மார்பில் வலி, காய்ச்சல், சளியில் இரத்தம் ஆகியவை இருப்போரை உடனே அருகாமையிலுள்ள மருத்துவ மனைக்கு சோதனை செய்து கொள்ள போகுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள, நமது உடலின் தடுப்பு சக்தியை நல்ல நிலையில் வைத்துக் கொள்வது அவசியமானதொன்றாகும். அத்தகைய சக்தி பெற பாதுகாப்பான வாழ்வு, நல்ல சமசத்துள்ள உணவு, சுகாதார சூழ்நிலை, முறையான உடற்பயிற்சி, ஓய்வு ஆகியவையும் உதவும்.

காசநோய் தடுப்பு மருந்தான பி.ஸி.ஜி. மூலம் தடுப்பு சக்தி பெறலாம். குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் குறிப்பாக இத்தடுப்பு ஊசி தேவை.

**கண்ட இடங்களில் எச்சில் துப்புவதனால் என்ன விளைவுகள் ஏற்படும்?**

கண்ட இடங்களில் எச்சில் துப்புவது கொடிய வழக்கம் இதனால் நோய் பரவும். இருமும் போதும் தும்மும் போதும் வாயைத் துணியால் மூடிக் கொள்ள வேண்டும். காசநோயாளி தன் எச்சிலை ஒரு மூடியுள்ள பாத்திரத்தில் துப்பி, அதை நெருப்பில் கொட்டிவிடவேண்டும். இருமும் போதும், தும்மும் போதும் பயன்படுத்திய துணியை கொதிக்கும் நீரில் 15 நிமிடங்கள் வரை ஊறவைத்து துவைத்து மீண்டும் பயன்படுத்தலாம், அல்லது எரித்துவிட வேண்டும்.

**குழந்தைகளை இந்நோயினின்றும் காப்பது எப்படி?**

பி.ஸி.ஜி. காசநோய் தடுப்பு மருந்தினால் காக்கலாம்.

**பி.ஸி.ஜி. என்றால் என்ன?**

காசநோய் தடுப்பு மருந்து, காசநோய் எதிர்க்கும் சக்தியை பெற உதவி செய்யும்.

**பி.ஸி.ஜி. யாருக்குத் தேவை?**

குழந்தைகள், சிறுவர், சிறுமியர், இளைய வயதினருக்குத் தேவை.

காசநோயாளிகளோடு தொடர்பு உள்ளோர், மருத்துவ மனையில் பணிபுரிவோர், செவிலியர், பணியாளர்கள் ஆகியோருக்கும் தேவை.

சில குழந்தைகளுக்கு தொற்று ஏற்படும் முன், எவ்வளவு முன்னதாக கொடுக்க முடியுமோ, அதற்குள் போட்டு விடவேண்டும்.

**பி.ஸி.ஜி. எவ்வாறு அளிக்கப்படுகிறது?**

இடது தோளில் மேல் தோலின் கீழே சிறு ஊசி மூலம் செலுத்தப்படுகிறது.

**பி.ஸி.ஜி. குத்திய பிறகு ஏற்படும் மாறுதல்கள் யாவை?**

சில நாட்களுக்கு ஊசி குத்தப்பட்ட இடத்தில் ஒரு மாறுதலும் இருக்காது. பின்னர் 3 அல்லது நான்கு வாரங்கள் கழித்து ஒரு சிறிய வலியற்ற வீக்கம் ஊசி குத்திய இடத்தில் தோன்றும். ஒரு சிலருக்கு இது சற்று பெரியதாக இருக்கலாம். பின்னர் அது மிருதுவாகி, ஒரு வித நீரை வெளிப்படுத்தலாம். இவ்வாறு ஏற்பட்டால், ஊசி குத்தியதின் பலன் ஏற்பட்டு விட்டது என்று பொருள். இதற்கு சிகிச்சையே தேவையில்லை. தானாகவே ஆறிவிடும்.


**பி.ஸி.ஜி. எங்கே பெறலாம்?**

எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மூலமும், காசநோய் சிகிச்சை நிலையங்கள், மக்கட் பேறு நிலையங்கள் ஆகியவற்றில் பெறலாம். பி.ஸி.ஜி. இலவசம், அபாயமற்றது.

**நினைவில் நிற்க வேண்டியவை:**

- காசநோய் எளிதில் பாஸிலஸ் கிருமிகளால் பரவக் கூடியது.
- காசநோய் பரம்பரை நோயல்ல.
- காசநோயாளி மூலம்தான் நோய் மற்றவர்களுக்கு பரவுகிறது.
- காசநோய் தடுக்கக் கூடியது (குணமாகக் கூடியது)
- காசநோய் முக்கிய அறிகுறி-தொடர்ந்த இருமல்
- காசநோய் இலவச சிகிச்சை எல்லா மருத்துவ மனைகளிலும் உண்டு.
- நோய் குணம் அடைய மருந்துகள் உள்ளன.
- மருத்துவர் கூறும்வரை சிகிச்சையை தொடர்ந்து பெற வேண்டும்.
- காசநோய்க்கு பாதுகாப்பு அளிப்பது பி.ஸி.ஜி.
- குழந்தைகளுக்கு, பிறந்தவுடன் காலம் தாழ்த்தாமல் பி.ஸி.ஜி. அளிப்பது நல்லது.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR










## அஞ்சல் தலை சேகரிப்புப் பயிற்சிச் சாலை

பள்ளிச் சிறுவர்களுக்கென்று தமிழ்நாடு அஞ்சல் துறை யானது அஞ்சல் தலை சேகரிப்பு பற்றிய பயிற்சிச் சாலை ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அஞ்சல் தலை சேகரிப்புக் கலையில் பயிற்சி பெறவும் அதுபற்றிய விதி முறைகளைத் தெரிந்து கொள்வதுமே இந்த பயிற்சிச் சாலையின் முக்கிய நோக்கமாகும்.

இந்தப் பயிற்சி சாலையானது குழந்தைகள் தினமான நவம்பர் 14ஆம் தேதியன்று சென்னை மாநில அஞ்சல் துறைத் தலைவரின் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தமக்கென அஞ்சல் தலை சேகரிப்புச் சங்கம் வைத்துக் கொண்டுள்ள, அங்கீகாரம் பெற்ற பிளஸ்டூ வகுப்பு வரையுள்ள கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் இதில் பங்கு கொள்ளலாம்.

எப்படி அஞ்சல் தலை சேகரிப்பது, அவற்றை எவ்வாறு 'ஆல்பமாக'த் தயாரிப்பது, 'ஆல்பம்' தாள்களில் எவ்வாறு காண்பிப்பது போன்ற விஷயங்கள் இந்தப் பயிற்சிச் சாலையில் மாணவர்களுக்குக் கற்றுத் தரப்படும்.

பள்ளி வகுப்பு நேரங்கள் பாதிக்கப்படாதவாறு மதியம் 11.00 மணி முதல் 1.00 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பதிமூன்று கல்விச்சாலைத் தலைமையாசிரியர்கள் முதல் வர்களுக்கு இதுபற்றி எழுதிய கடிதத்தில் பள்ளியொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு மாணவர்களை இந்தப் பயிற்சிச் சாலையில் பங்கு கொள்ள அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அஞ்சல் தலை சேகரிப்பு பற்றிய விஷயங்களை அறிந்து கொள்ள ஆர்வமுடைய மாணவர்கள், அவர்களுள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## தாயெனும் தெய்வம் !

தாயினை விஞ்சும் தெய்வங்கள் — இத்
தாரணி எங்கும் கிடையாது
கோயிலைப் போலே உடனிருந்து — அவள்
கொடுக்கும் அன்பில் குறைவேது !

பாசம் என்னும் மழையமுதை — கண்
பார்வை தன்னால் பொழிந்திடுவாள்
நேசம் கொண்டு வாழ்வதிலே — ஓர்
நிம்மதி தன்னை அடைந்திடுவாள் !

எறும்பு உன்னைக் கடித்தாலும் — தன்
இதயம் நோகப் பார்ப்பாளே
சிறந்தே நீயும் வாழ்ந்திடவே — தினம்
சிரமம் யாவும் ஏற்பாளே !

நாடு உந்தன் புகழ்பாட — பல
நல்வழி நூறு சொல்வாளே
மாடாய் உனக்கு உழைப்பதிலே — பெரும்
மலையாய் மகிழ்ச்சி கொள்வாளே !

—செங்கதிர்வாணன்

### காச நோயால் நிமிடத்திற்கு ஒருவர் சாவு:

நம் நாட்டில் ஆண்டிற்கு 5 இலட்சத்திற்கு மேற்பட்டோர் காசநோய் காரணமாக இறக்கின்றனர். ஒவ்வொரு நிமிடமும் ஒரு இந்தியன் காச நோயால் இறக்கிறான்.

உலகில் உள்ள மொத்தம் 20 இலட்சம் காச நோயாளிகளில் பாதிப்பேர் இந்தியாவில் உள்ளனர். இவர்களில் 25 சதவிகிதத்தினர் மற்றவர்களுக்கும் நோயை ... கடுமை கொண்டவர்கள்.



# மதுரை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம்

நம் நாடு விடுதலையடைந்து 33 ஆண்டுகளுக்கு மேலாகியும், கிராம மக்களுக்கு இன்னும் கிட்டாத குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், பள்ளிக்கட்டடங்கள், மகப்பேறு நிலையங்கள், மருந்தகங்கள், சிறுபாசன ஆதாரங்களின் மேம்பாடு, ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்புகள் மற்றும் அவர்களின் குடியிருப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தும் மயானச் சாலை வசதிகள் ஆகியவை முழுமையாகவும் விரைவாகவும் கிடைக்க வகை செய்வதற்காகத் தமிழ்நாடு அரசு தன்னிறைவுத் திட்டத்தினை உருவாக்கிச் செயல்படுகிறது.

**திரு எச். பி. என். ஷெட்டி,**
**ஐ.ஏ.எஸ்.,**
**ஆணையாளர்- அரசுச்செயலாளர்,**
**ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை.**

இந்தியாவில் வேறு எந்த மாநில அரசும் மெற்கொள்ளாத இத்தன்னிறைவுத் திட்டம் தமிழ் நாட்டில் சிறப்புற நிறைவேற்றப் பட்டு வருகிறது. இத்திட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஈடுபாடு கொண்டுள்ளதால், அனைத்துத் துறைகளையும் சார்ந்த அலுவலர்கள் பெரிதும் கவனம் செலுத்தி, மிக்க குறுகிய காலத்தில் பல குறிப்பிட்ட முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம் முதல் கட்டமாக 1979-80இல் பழனி, திண்டுகல், பெரியகுளம், போடிநாயக்கனூர் மற்றும் நிலக்கோட்டை என்ற 5 ஊராட்சி ஒன்றியங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த 5 ஒன்றியங்களிலும் 1014 வேலைகள் மேற்கொள்ளப் பட்டு ரூ 194.65 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் குடிநீர்த்திட்டவேலைகள் 169, இணைப்புச்சாலைகள் 290, சிறுபாசனங்கள் 250, பள்ளிகளுக்கு மின் வசதி செய்த 126 பணிகள் பெருவாரியான வேலைகளாகும். தவிர ஆதிதிராவிட மக்களுக்கு 62 இடங்களில் மயானச்சாலைகள் அமைத்தலும், மருந்தகங்கள், தாய்சேய் நல நிலையங்கள் ஊராட்சி மன்றங்கள் கட்டியதும் இவற்றில் அடங்குவதாகும்.



தவிர கிராமங்களில் வசிக்கின்ற பெண்கள் சுகாதாரமான சூழ்நிலையிலேயே காலைக்கடன்களைக் கழிக்க தக்கதொரு இடமின்றி தவிக்கும் நிலைமையை அகற்ற ஒரு மாதிரித் திட்டமாக 10 ஊராட்சிகளில் பெண்களுக்கென கழிவறைகளையும் ரூ. 86,766 செலவில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இவ்வசதியைப் பெண்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

மதுரை மாவட்டத்திலே தற்போது தன்னிறைவுத் திட்டம் இரண்டாம் கட்டத்தில் செயல்படத் தொடங்கியுள்ளது. இதற்கென 18 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவை மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், கொட்டாம்பட்டி, அலங்காநல்லூர், சேடப்பட்டி, தே.கல்லுப் பட்டி, வத்தலக்குண்டு, கள்ளிக் குடி, சாணார்பட்டி உசிலம்பட்டி, ரெட்டியார் சத்திரம், குஜிலியம் பாறை, தொப்பம்பட்டி, ஒட்டன் சத்திரம், கொடைக்கானல், ஆண்டிப்பட்டி மற்றும் சின்னமனூர் ஆகிய ஒன்றியங்களேயாகும்.

மேற்கண்ட ஒன்றியங்களில் 1671 வேலைகளன்றி 984.7 கி. மீ. சாலைகளும் ஒன்றியங்கள் மேற்கொண்டு ரூ. 361.20 செலவிட்டு இணைப்புச்சாலைகள், சிறுபாலங்கள், ஆதிதிராவிடர்களுக்கான மயானப்பாதைகள், பள்ளிக்கட்டடங்கள், சிறுபாசன வேலைகள், ஊரக மருந்தகங்கள் மற்றும் மகப் பேறு நிலையங்கள் கட்டி முடிக்கும்.


தவிர, குடிநீர் வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியமும், கிராமமக்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டத்தை ஊரகக் கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கங்கள் மூலமும், குடிசைகளுக்கு மின்னொளி வழங்குவதைத் தமிழ்நாடு மின்சார வாரியமும், ஊராட்சி ஒன்றிய சாலைகளை, நெடுஞ்சாலை - ஊராட்சி பணித்துறையும் செயல் படுத்துகின்றன. மேலும் மகப் பேறு நிலையக் கட்டடங்கள் உலக வங்கி நிதி உதவியுடனும் கட்டப்படுகின்றன. மேற்கண்டவாறு பல துறைகளால் நிறைவேற்றப்பட்டு, ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறையால் ஒருங்கிணைக்கப்படும் வேலைகளின் மொத்த எண்ணிக்கை 11,331 ஆகும். இவற்றிற்கான முதலீடு ரூ.669.97 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்திலேயே 18 ஒன்றியங்களில் ரூ. 11.75 கோடி செலவிட அரசு திட்டமிட்டுள்ளது. இம்மாபெரும் தொகையைச் செலவிட்டு, மக்களுக்கு வசதிகளைத் தேடித்தரும் 13,002 பணிகள் செய்து முடிக்கப்படும்.



கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையிலே தன்னிறைவுத்திட்டம் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கத் தொடங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படத் தொடங்கியநாளிலிருந்து இதுவரையில், இவ்வாறு பெரும் முதலீடு செய்து, அரும் பெரும்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளதாக வரலாறே இல்லையென்ற உறுதியிட்டுக்கூறலாம்.

தன்னிறைவுத் திட்டத்தின் சாதனைகளால் கிடைத்த, கிடைக்கவிருக்கும் நன்மைகள் எண்ணற்றவை. கிராமப்புறங்கள்





தடுக்கப் பாடுபட்ட முயற்சியான தேவதாசி முறை ஒழிப்பை ஆணி வேராகக் கொண்ட காவியம் இது. கவிதைகளில் ஆங்காங்கே புரட்சிக்கருத்துக்கள் பூத்திருக்கக் காண்கிறோம்

பக்தி என்ற பெயரில் பால லாகக் கோயில்களில் நடக்கும் கொடுமைகள் நூலாசிரியரால் சாடப்படுகின்றன.

'இலக்கணம் என்றால் என்ன வென்றே தெரியாது' என நூலாசிரியர் முன்னுரையில் குறிப்பிட்டிருந்தாலும் எல்லாப் பாக்களும் விருத்தப்பாக்களாகவே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரஞ்சுப் பழத்தைச் சுவைக்கையில் விதை கடிபடுவதுபோல, இரண்டொரு இலக்கணப் பிழைகள் தென்படுகின்றன. பரவாயில்லை.

கவிதைப் பிரியர்களுக்கு இது கரும்பு.

உப்புச் செல்வம்

**ஆசிரியர்: கலைமுகிலன்.**
**வெளியிட்டோர்: காயத்ரி பப்ளிகேஷன்ஸ், காயத்ரி. 26, வேதாசல கார்டன்ஸ், மந்தைவெளி,**
**சென்னை 600 028**
**விலை ரூ. 4.50**

'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்கிறோம்.

அவ்வளவு அவசியத் தேவையான உப்பைப்பற்றி 15 தலைப்புகளின் கீழான பலவிதக் கட்டுரைகளை எழுதித் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள நூல் இது. நூலாசிரியர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சியின் சிரமம் கட்டுரைக்குக் கட்டுரை தெரிகின்றது.

உப்பைப் பற்றிய செய்திகள் எல்லாம் திரட்டப்பட்டுள்ளன. இந்நூலில் எங்காவது 'உப்புச்சத்தியாக்கிரகம் பற்றியும் தொட்டிருக்கலாம்.

மொத்தத்தில் இது ஒரு அரிய முயற்சி.

**—பி. எல். ஆர்.**

**நன்னூல் தெளிவுரை:**

**உரையாசிரியர்: த. இன்பசேகரன்,**
**வெளியீடு: கல்வி உலகம், இலத்தேரி-632 202.**
**விலை ரூ. 6. பக்கம்: 153.**

இலக்கணம் என்றாலேயே சிலர் முகம் சுளிப்பதைப் பார்க்கலாம். அதைப் படிக்கப் படிக்கத்தான் அதன் இனிமையை நாம் உணர முடியும்.

தமிழ்க் கடலில் எத்தனையோ முத்துக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் நன்னூல். பவணந்தி முனிவர் எழுதிய இந்த இலக்கண நூலுக்கு உரையாசிரியர், தெளிவாக, மாணவர்கள் புரிந்துகொள்ளும்படியாக உரை எழுதியுள்ளார். தமிழ் ஆர்வலர்களும், மாணவமணிகளும் படிக்க வேண்டிய நல்ல நூல் இந்த நன்னூல்.

**புழுதிப்பூக்கள்**

**ஆசிரியர்: மானாமதுரை மாசி.**
**வெளியீடு: தமிழரசி பதிப்பகம், 85, சல்லிவன்ஸ் கார்டன்ஸ் ரோடு, சென்னை-600 004.**
**விலை ரூ. 6. பக்கம்: 112.**

தமிழில் புதிய புதிய சிந்தனை ஏறிக்கொண்டே போக வேண்டும் என்றான் பாரதி. அந்த வகையில் தமிழன்னைக்குப் புத்தம் புதிய அணியாரங்கள் சேர்ந்து கொண்டே போகின்றன. அவற்றுள் ஒன்றாகத் திகழ்கிறது இந்தப் 'புழுதிப் பூக்கள்' என்னும் கவிதைத் தொகுப்பு நூல்.

திரு மானாமதுரை மாசியின் மனத்திலே எழுந்த கவிதைப்பூக்கள்தான் இந்தப் புழுதிப்பூக்கள். 34 கவிதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையிலும் சிந்தனையின் சிதறல்களைப் பார்க்க முடிகிறது.

**திரு.வி.க. வாழ்க்கையும் தொண்டும்—ஒரு கை விளக்கு**

**ஆசிரியர்: டாக்டர் அ. நாகலிங்கம்,**
**வெளியீடு: பர்வதவாத்தினி பதிப்பகம், 51, வ. உ. சி. தெரு, காமராசர் நகர், சீனிவாசநகர் அஞ்சல், சென்னை 600 063.**
**விலை ரூ. 7. பக்கம்: 80**

தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

திரு.வி.க.வின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், படித்த பள்ளி, பாடம் சொன்னோர், பணியாற்றிய நிலையங்கள், நூல்கள், சொற்பொழிவுகள் முதலான தலைப்புகளில் சுவையான குறிப்புகள் படிப்போரைப் பரவசத்தில் ஆழ்த்தும்.

திரு.வி.க.வை அறிய விரும்புவோரும், ஆராய விரும்புவோரும் படிக்க வேண்டிய பயனுள்ள தொகுப்பு இது.

**—பி. வி. கிரி.**

---

## குப்தர்கால தங்க நாணயங்கள் கணக்கெடுப்பு


**கி.பி.** 4-வது நூற்றாண்டைச் சேர்ந்த சமுத்திர குப்தர், கச்குப்தர், சந்திரகுப்தர்-2 ஆகிய மன்னர் காலத்திய தங்க நாணயங்கள் சமீப காலத்தில் டோங்க் மாவட்டத்திலுள்ள சாயலா கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.


சில குழந்தைகள் மண்ணைத் தோண்டி விளையாடும்போது, [illegible]குடம் ஒன்றைக் கண்டெடுத்தனர். அதனுள் அந்த நாணயங்கள் இருந்தன. அவை டோங்க் மாவட்ட [illegible] [illegible]

## கடற்படை வாரவிழா நிதிக்கு முதல்வர் நன்கொடை

கடற்படை வாரவிழா நிதிக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடற்படை வீரர்கள் குடும்பத்திற்கு வேலைவாய்ப்புப் பயிற்சி தருவதற்கும் அவர்களது குழந்தைகளுக்குப் பள்ளி வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படும் என்றும் அறி[illegible]ளது.





## சரிகைக்கு வரிச்சலுகைகள்:

காஞ்சிபுரத்திலுள்ள 'தமிழ்நாடு சரிகை நிறுவனம்' உற்பத்தி செய்து விற்பனை செய்யும் சரிகைக்கு வரி விலக்கு அளிக்கத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

# அறிவுச் சுடர்

- உலகின் மிகப் பழைய உயிர்வாழும் இனம் ''கிரிரோட் புதர்கள்'' இவை 12,000 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியவை; மெக்சிகோ, கலிபோர்னியாவில் உள்ளன.
- ஓராண்டில் நாம் பயன்படுத்தும் சக்தியும், ஒரு மணி நேரம் சூரிய ஒளி மூலம் உலகம் பெறும் சக்தியும் ஒன்றாகும்.
- உலகத்தில் 50 இலட்சம் உயிரினங்கள் உள்ளன. இவற்றில் 5-இல் ஒரு பங்கு கி.பி. 2000-ஆம் ஆண்டிற்குள் அழிந்து விடுமென 'பியூச்சரிஸ்ட்' (Futurist) என்ற இதழில் சூழ்நிலையியல் வல்லுநர் நார்மன் மேயர்ஸ் கூறியுள்ளார். 1980-ஆம் ஆண்டு முதல் ஒரு மணி நேரத்துக்கு ஒரு உயிரினம் அழிந்து விடும்.
- மாஸ்கோவிலிருந்து நியூயார்க்குக்கு ரேடியோ சமிக்ஞை கிடைக்க சில வினாடிகளே ஆகும்.
- மாறுகுரல் உடைய ஒரே பறவை குயில் மட்டுமே.
- ஒரு ஆப்பிள் துண்டிலுள்ள சக்தி சராசரியாக ஒரு ஆண் 35 நிமிடம் ஓடவும் அல்லது ஒரு பெண் 50 நிமிடம் ஓடவும் தேவையான சக்திக்கு நிகரானது.
- ஓராண்டில் 19 பில்லியன் ஆஸ்பிரின் மாத்திரைகள் அமெரிக்காவில் மட்டும் விற்பனை ஆகின்றன.
- பறக்கும்போது ஒரு வினாடிக்கு 120 முறை சிறகுகளை அசைக்கும் ஈயைப் போன்ற ஒரு பூச்சியின் பெயர் கிகாடாஸ்.

## பிளாஸ்டிக் மின் விசிறி



பிளாஸ்டிக் பிளேடுகளைக் கொண்ட எளிய மின் விசிறி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டே பிளேடுகளைக் கொண்ட இவ்விசிறியை நிறுத்துவது எளிது. நடுவில் கையை வைத்தால் நின்று விடும். ஓடிக்கொண்டிருக்கும் விசிறி மீது சிறு குழந்தை கை வைத்தால் கூடக் காயம் எதுவும் ஏற்படாது. பாதுகாப்பானது. இரண்டு வித வேகஅளவுகள் இதில் உள்ளன. சாதாரண மின் விசிறியில் கிடைக்கக்கூடிய அளவு மென்மையான காற்று இதில் கிடைக்கிறது. ஓடும் போது இரைச்சல் வராமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கான பயிற்சி

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கான பயிற்சிக்குரிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுயவேலை வாய்ப்புக்குத் தேவையான திறமையும், தொழில் நுணுக்கமும் கிராமப்புற இளைஞர்கள் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பொதுவாக 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், நிலமற்ற உழவுத் தொழிலாளிகள், கிராமப்புற கைத் தொழிலாளிகள் ஏழ்மையான நிலையில் உள்ளவர்கள் ஆகியோர்களே இந்த இலக்கிற்கான பிரிவைச் சேர்ந்த கிராமப்புற இளைஞர்கள் ஆவர்.

பயிற்சிக் காலத்தில், இந்த கிராமப்புற இளைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் முதல் 126 ரூபாய் வரை உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

பயிற்சியின் விவரங்கள், பயிற்சி நிறுவனங்களின் பெயர்கள் அடங்கிய பல்வேறு பயிற்சி மையங்களில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள், அந்தந்தப் பகுதியின் வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## நீண்ட ஆயுளின் ரகசியம்

15 ஆண்டுகள் 220 பேரை (60-75 வயதுடையோர்) ஆராய்ந்து கீழ்க்கண்ட உண்மைகளை அளிக்கிறார் செர்மானிய பான் (Bonn) பல்கலைக்கழகப் பேராசிரியர் உர்சுலா லெஹர்.

சில வேளைகளில் அதிக நாட்கள் வாழும் பண்பு பரம்பரை காரணமாகவும் ஏற்படுகிறது. குடும்பத்தின் முதல் குழந்தையும் இளம் வயதுத் தாய்மார்களுக்குப் பிறந்த குழந்தைகளும் நெடுநாட்கள் வாழ்கின்றன.

பெற்றோரால் குழந்தை வளர்க்கப்படும் முறை, அதன் கல்வி அறிவு, அறிவுக்கூர்மை ஆகியவைகூட இதற்குக் காரணம்.

75 வயதுள்ள பெரியவர்களை ஆராய்ந்ததில் அவர்கள் உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இருப்பதை அறிய முடிந்தது. அவர்களது ஆர்வம் பலதரப்பட்ட பொருள்களைப் பற்றியதாகவும் அவர்கள் எதிர்காலத்தைப் பற்றிய நோக்கு நம்பிக்கை தருவதாகவும் இருக்கிறது.

# நூல் நயம்

## தமிழ் வளர்த்த பெரியார்

### தேநோபிலி அடிகள்

ஆசிரியர் : மதுரை இளங்கவின்
விலை: ரூ. 1.25. பக்கம்: 20

இத்தாலி நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்து தமிழைக் கற்றுத் தமிழ்த் தொண்டாற்றி, தத்துவ போதகர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற தேநோபிலி அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சுருக்கமாக - தெளிவாக - மாணவர்களுக்குப் பெரிதும் உதவும் வகையில் - தெரிவிக்கிறது இந்நூல்.

நோபிலி அடிகள் கிறித்துவ மதப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்தார் என்றாலும், தமிழ் வளர்ச்சிக்குப் பெரும்பாடுபட்டார் என்பதை இக் குறுநூல் தெளிவாக விளக்குகிறது. தமிழில் முதல் உரைநடை எழுத்தாளர் என்னும் சிறப்பைப் பெற்றவர் அவர் என்பதையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

### வீரமாமுனிவர்

ஆசிரியர்: மதுரை இளங்கவின்
விலை: 1.25. பக்கம்: 26

இத்தாலி நாட்டைச் சார்ந்த சமயத் தொண்டரான பெஸ்கி என்பார், தமிழகத்திற்கு வந்து செந்தமிழ்ப் புலமை பெற்று, காவியங்களையும், கலம்பகங்களையும் படைத்துப் புகழ்பெற்ற வரலாற்றை இச் சிறு நூல் எடுத்துக் கூறுகிறது.

தமிழ்மொழிக்குப் புதிய வடிவத்தை - புலவர்கள் ஒப்புக் கொள்ளும் வகையில் எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். தமிழ் அகராதியை முதன் முதலில் உருவாக்கியவரும் இவரே. இவரது அறச்செயலும் தமிழ்த் தொண்டும் நகைச்சுவை உணர்வும் இந்நூலில் நன்கு எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. இனிய, எளிய நடை கொண்ட இந்நூலை அனைவரும் படிக்கலாம்; குறிப்பாக மாணவர்க்கு மிகவும் ஏற்றது.

### வேதநாயகம் பிள்ளை

ஆசிரியர் : கவியழகன்
விலை: 1.25 பக்கம்: 20

மாயூரத்தில் நீதிபதியாகப் பணிபுரிந்து, தமிழ் இசைக்கும் தமிழ் மொழிக்கும் பெருந்தொண்டாற்றிய வேதநாயகம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இக்குறு நூல் விவரமாக எடுத்துரைக்கிறது.

> இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படுவதில்லை.
>
> —ஆசிரியர்.

வாழ்க்கையில் நடைபெற்ற பல்வேறு தொல்லைகளையும் அவர் தாங்கி, அவற்றை வெற்றி கொண்டு, தமது பணிகளை மிகுந்த பொறுப்புடன் நிறைவேற்றிய செய்திகளையும்-பெண் கல்வி—பெண்கள் முன்னேற்றம் போன்றவற்றில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் நூலாசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்உரை நடையில் முதல் நவீனத்தைத் தந்த வேதநாயகர், இசை மேடைகளில் பாடுவதற்கேற்ற எளிய, இனிய பாடல்களையும் உருவாக்கியுள்ளார். இயலும் இசையும் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் இந்நூல் அனைவரும் பயில வேண்டிய ஒன்று.

### தனிநாயக அடிகள்

ஆசிரியர்: கவியழகன்
விலை: ரூ. 1.25. பக்கம் 20

உலகத் தமிழ் மாநாடுகள் உருவாவதற்குக் காரணமாக இருந்த தனிநாயக அடிகளாரின் வாழ்க்கைச் சரிதம் குறித்துக் கூறும் சிறு நூல் இது.

பதின்மூன்று மொழிகளை நன்கறிந்த தனிநாயகர், தமிழின் மீது மாறாத விருப்பம் கொண்டிருந்த செய்தியையும்—அவர் தமிழுக்குச் செய்த தொண்டுகளையும் எளிய, இனிய நடையில் விவரிக்கிறார் ஆசிரியர். உலகத் தமிழ்த் தூதராக அவர் விளங்கிய செய்தியும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நூல் சிறிதென்றாலும் அருஞ்செய்திகளை எடுத்துரைப்பதில் பெரிதாகத் தருகிறது.

மேற்கண்ட நான்கு நூல்களையும் வெளியிட்டோர்:

சோமு புத்தகநிலையம்,
9ஏ, செட்டிகுருநாதன் கோயில் தெரு,
தெற்குமாசி வீதி,
மதுரை-625 001.

புலவர் தமிழ்ப்பித்தன்

### அறிவியல் பூங்கா

ஆசிரியர் வே. தமையந்திரன்,
வெளியிட்டோர்: புகழ் பப்ளிகேஷன்ஸ், 14, சித்திரக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை 600 004.
விலை ரூ. 7.50

தமிழால் அறிவியலை விளக்குவது என்பது அத்தனைச் சுலபமில்லை என்பதைப் பொய்யாக்கும் வகையில் வெளிவந்துள்ள நூல் இது. பூமியின் வயது முதலான 25 அரிய அறிவியல் கட்டுரைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் அறிவியல் உண்மைகளும் அறிவியல் துறை ஆர்வம் அற்றவர்களாலும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் இதில் எளிமையாக எழுதப்பட்டுள்ளன.

படித்துப் பயன் பெறத் தக்க நூல்.

### முல்லை மாலை

ஆசிரியர்: கவிஞர் காவனூர் வேலவன்.
வெளியிட்டோர்: பாவலன் பதிப்பகம், 21, காயிதேமில்லத் சாலை, சென்னை-600 005.
விலை ரூ. 4.00

தமிழகத்[illegible] டாக்டர் மு[illegible] வட்சுமி செட்டி போன்றவர்கள்



## தமிழ்நாட்டின் படைவீரர்களின் கைம்பெண்கள்/போரில் ஊனமுற்றோர்/முன்னாள் படை வீரர்/அவர்களைச் சார்ந்தவர்களுக்கு உதவிட செயல் படுத்தப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்கள்—

- சுதந்திரத்துக்குப் பின் நடந்த போர்களில் தங்களது கணவன்களை இழந்த எல்லா கைம் பெண்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்புப் படியாக ரூ. 600/– அளிக்கப்படுகிறது.
- வயது 60 மற்றும் அதற்கு மேற்பட்ட அனாதை யான முன்னாள் படைவீரர்கள்/கைம்பெண்–களுக்கு மாதம் ரூ. 30/- ஒய்வூதியம் அளிக்கப் படுகிறது.
- 1-1-64க்கு முன்னர் படையிலிருந்து விலகி சேவைக்கான ஓய்வூதியம் பெற்று வந்து பின்னர் குடும்ப ஓய்வூதியம் ஏதுமின்றி இறந்து விட்ட முன்னாள் படைவீரர்களின் கைம்பெண் களுக்கு மாதம் ரூ. 50/- நிதி உதவி அளிக்கப் படுகிறது. இதைத் தவிர அவர்தம் இரண்டு குழந்தைகளுக்கு, ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 10/– வீதம் வழங்கப்படுகிறது.
- போரில் உயிரிழந்த படைவீரர்களின் எல்லா மகள்களுக்கும் திருமணச் செலவுக்காக ரூ. 1500/-ம், முன்னாள் படைவீரரின் கைம் பெண்களின் ஒரு மகளின் திருமணச் செலவுக் காக ரூ. 500/-ம் வழங்கப்படுகிறது.
- போரில் இறந்த படைவீரர்களின் கைம்பெண் களுக்கு வீடு கட்டுவதற்காக ரூ. 5000/. மானியமளிக்கப்படுகிறது.
- 1971 இந்தியா-பாகிஸ்தான் போரில் ஊனமுற்றவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 500/. பராமரிப்புப் படி அளிக்கப்படுகிறது.
- முன்னாள் படைவீரர்கள் இலாபகரமான தொழிலில் ஈடுபட வங்கியிலிருந்து பெறும் கடனுக்கு ரூ. 5000/– வரை அதன் மீது 4% வட்டிக்கு மேல் வங்கிபெறும் அதிகப்படி வட்டித் தொகையும், ரூ. 25000/- வரை பெறும் கடனுக்கு அதன் மீது 7% வட்டிக்கு மேல் வங்கி பெறும் அதிகப்படி வட்டித் தொகையும் மானியமாக அளிக்கப்படுகிறது.
- முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு கல்விக்காக எல்லா வகுப்புகளுக்கும் உதவிச் சம்பளம்/உதவித் தொகைகளும் ஆண்டுக்கு சுமார் ரூ. 5.6 இலட்சம் அளிக்கப்படுகிறது.
- தமிழ்நாடு முழுவதிலும் 200 ஜவான்கள் கடைகள் நிறுவப்பட்டுள்ளன. வேலூர், திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூரில் எல்லா ஜவான்கள் அங்காடிகளிலும் சலுகைக் கட்டணத்தில் கடைகள் முன்னாள் படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.
- மாத உதவித் தொகை, திருமண மானியம், மொத்த மானியம், உடனடி உதவி மானியம், காச/தொழு நோய் உள்ளவர்களுக்கு உதவி, இடுகாட்டுச் செலவு ஆகியவைகளுக்கு ஆண்டுக்கு ரூ. 5.8இலட்சம் அளிக்கப்படுகிறது
- தொழில் பயிற்சி கழகங்களில் தொழில்/தொழில்நுட்பப் பயிற்சி பெறும் எல்லா முன் னாள் படைவீரர்களுக்கும் மாதம் ரூ. 200/. மானியமளிக்கப்படுகிறது.
- O.M.T.S. கிர்கி, புனே-யில் பயிற்சி பெறும் எல்லா ஊனமுற்ற முன்னாள் படைவீரருக்கும் மாதம் ரூ. 250/- மானியமளிக்கப்படுகிறது.
- எல்லா மாவட்ட தலைமையகங்களிலும் நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிலையங்களில் கைம்பெண்கள், மனைவிமார்கள் மற்றும் குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு தையல் கலை, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் காகிதம் வெட்டுதல், புத்தகம் பைண்ட் செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப் படுகிறது.



# அமோக விளைச்சலுக்கு





## உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY




சமச்சீர் உரமிட
விஜய்

HTM-MFL-2826




# ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டி

— எல். ராஜேந்திரன்

— அட்டை சொல்லும் கட்டுரை —

உடல் ஊனமுற்றோர் ஆண்டின் இறுதிக் கட்டமான இந்நாளில் - சென்னையில் சிறப்புமிகு நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

சமூக நலத்துறை சார்பில் நடத்தப்பெற்ற ஊனமுற்றோருக்கான மாவட்ட விளையாட்டுப் போட்டியே அது.

எழும்பூரிலுள்ள ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் (10.11.81) காலை 10 மணி இளம்வெய்யிலில் விழாத்தொடர்பான நிகழ்ச்சிகள் தொடங்கின. தூய லூயிஸ் செவி கேளாதோர் பார்வையற்றோர் பள்ளி மாணவர்கள் இருவர் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை இனிமையாகப் பாடினார்கள்.

ஊனமுற்றோருக்கான [illegible] மாவட்ட விளையாட்டுப் போட்டியில் [illegible]

பெறுகின்ற-இருபது பள்ளிகளைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

கயிறு தாண்டி ஓடுதல், 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், சிறு கரண்டியில் எலுமிச்சம் பழத்தை - ஏந்தியபடி அது கீழே விழாமல் விரைந்தோடுதல், மூன்று சக்கர வண்டிப் பந்தயம், சாக்கில் பாதி உடல் மறைத்து ஓடுதல் போன்ற 80 விதமான விளையாட்டுக்கள் தொடர்பான போட்டிகள் இங்கே நடத்தப்பட்டன. போட்டிகளில் சுமார் 600 பேர் பங்கேற்றனர். மாணவர்களும் மாணவிகளுமாய்.

போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் கலந்து கொண்டோரை ஊக்குவிப்பவர்களுமாய் ராஜரத்தினம் விளையாட்டரங்கத்தில் நிறைந்திருந்த [illegible]

செவி கேளாத பேச்சுத்திறனற்ற பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் பெண்களின் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தை முதலாகக் கொண்டு விளையாட்டுப் போட்டி தொடங்கியது.

போட்டிகளில் முதலாவது இரண்டாவது மூன்றாவது பரிசு பெற்றோருக்கு—முப்பது ரூபாய், இருபது ரூபாய், பத்து ரூபாய் பெறுமானமுள்ள பரிசுகள் அளிக்கப்பட்டன.

### நீதிபதிகள் குழு

உடல் ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கெனத் தனித் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதன் விவரம் வருமாறு:



செவி கேளாதோர் தொடர்பான போட்டிகளுக்குத் திரு. ஜிந்துதாஸ் தலைமையில் 14 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது. பார்வையற்றோர் தொடர்பான போட்டிகளுக்குத் திரு. எஸ். செல்வராஜ் தலைமையில் 16 பேர் குழு அமைந்திருந்தது.

மனநோய்உற்றவர்களின் விளையாட்டுகளைத் திரு. ஜெய்சிங் பொன்னுதுரை தலைமையில் 14 பேரும், ஒற்றை உறுப்பிழந்தோர் விளையாட்டுகளைத் திரு. வேலாயுதம் தலைமையிலான 13 பேரும், முடமானோர் தொடர்பான விளையாட்டுகளைத் திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான 15 'பேரும் முன் நின்று கவனித்து வெற்றி பெற்றோரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

எஸ். எஸ். வி. மேனிலைப் பள்ளி 'ஸ்கவுட்' மாணவர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்த ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு செயல் அலுவலர் திரு. ஏ. பிச்சை, உதவி இயக்குநர் திரு. கோவிந்தராஜன், திரு. எம். விக்டர் வில்சன், திரு. தாசப்பன் திரு. பி. எம். இஸ்மாயில் முனவர் போன்றவர்கள் முன்னின்று போட்டியைச் சிறப்புற நடத்தினார்கள்.

### முடிவுகளும் விருதுகளும்

மாவட்ட ஊனமுற்றோருக்கான முழு நாள் போட்டிகளின் முடிவும் பிற்பகலில் தெரிவிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்குமென ஐந்து கேடயங்கள் பரிசாக அளிக்கப்பட்டன.

முடமானோர் தொடர்பான போட்டிகளில் ஆந்திர மகிள சபாவினரும் (85 பாயின்டுகள்), செவிகேளாதோர் பள்ளிகளில் சி. எஸ். ஐ. பள்ளியினரும் (67 பாயின்டுகள்) கண்பார்வையற்றோர் சிறுமலர் பள்ளியினரும் (54 பாயின்டுகள்), மன ஊனமுற்றவர்களில் பாலவிகாரைச் சேர்ந்தவர்களும் (42 பாயின்டுகள்) முதன்மை பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் கேடயங்கள் அளிக்கப்பட்டன.

அதிக பாயின்டுகளைப் பெற்றதற்காக ஆந்திர மகிள சபாவுக்கு 'சாம்பியன்ஷிப்' கேடயம் தரப்பட்டது.

இந்தக் கேடயங்கள் ஐந்தும் தென்னிந்திய ரயில்வேயால் செய்து வழங்கப்பட்டிருந்தன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கெல்லாம்; சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. வி. செல்வராஜ், இ. ஆ. ப. பரிசுகளை வழங்கினார்.

சமூகநலத் துறை இணை இயக்குநர் திரு. சி. டபிள்யூ அப்பாத்துரை விழா முடிவில் நன்றி கூறினார்.



## மாநில விளையாட்டுப் போட்டி

மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியினைத் தொடர்ந்து, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி நவம்பர் 27, 28 ஆகிய இரு நாட்களும் சென்னை எழும்பூரில் உள்ள இராசரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

முதல் நாள் காலை 10 மணியளவில் தூய லூயிஸ் செவிகேளாதோர்-பார்வையற்றோர் பள்ளி மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட நிகழ்ச்சி தொடங்கியது.

சமூக நலத்துறை ஆணையாளரும், செயலாளருமான திருமதி அஞ்சனி தயானந்த் இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

### கல்வியமைச்சர்

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.

உடல் ஊனமுற்றோர் ஆண்டினை ஒட்டி தமிழக அரசு ஊனமுற்றோருக்கு அளித்துள்ள சலுகைகள் பற்றியும் கல்வித்துறையில் ஊனமுற்றோருக்குத் தரப்படும் ஊக்கம் பற்றியும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தமது உரையில் தெளிவுபடக் கூறினார்.

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி, வைத்துப்போட்டியைத் துவக்கி வைத்தார்.

மாவட்ட அளவில் நடந்ததுபோல் அத்தனைப் போட்டிகளும் இதிலும் நடைபெற்றன. இந்தத் தொடக்க விழாவில் ஊனமுற்றோரும், பார்வையாளர்களுமாக மூவாயிரத்துக்கும் மேலானோர் கலந்துகொண்டனர். போட்டிகளில் பல மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் ஆயிரம் ஊனமுற்றோர் பங்கேற்றனர். விழாமுடிவில் சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ஓ. பி. சோசம்மா, இ. ஆ. ப. அவர்கள் நன்றி கூறினார்கள்.

### திரு கி. இராதாகிருஷ்ணன்

28ஆம் நாள் நடந்த இரண்டாவது கட்ட போட்டி விழாவுக்கு, காவல்துறைத் தலைவர் (குற்றம், சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு கி. இராதாகிருஷ்ணன் ஐ. பி. எஸ் அவர்கள் தலைமை தாங்கினார்.

அவர்கள் தனது உரையில் - உடல் ஊனம் பலருக்கு இயற்கையாகவே அமைந்துவிடுகிறது; சிலருக்கு விபத்து காரணமாக உண்டாகிறது. ஆகவே எல்லோரும் எதிலும் கவனமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்றார்.

### சமூகநலத் துறை அமைச்சர்

மாநில விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உடல் ஊனமுற்றோருக்குப் பரிசுகள் வழங்கி, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

உடல் ஊனமுற்றோர் அந்தக் குறையையே மறக்கின்ற அளவில் அரசு மூலம் [illegible] பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். எந்த நாடும் செய்யாத அளவில்

**திருமதி சோசம்மா**

விளையாட்டுப் போட்டிக்கு வந்திருந்தோரனைவரையும் வரவேற்று, சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ஓ. பி. சோசம்மா, இ. ஆ. ப. அவர்கள் இவ்வாறு பேசினார்கள்:

இந்த, உலக ஊனமுற்றோர் ஆண்டின் முக்கிய நோக்கமே ஊனமுற்றவர்களுக்குச் சமத்துவமும், சம வாய்ப்புகளும் வழங்க வேண்டும் என்பதேயாகும். இந்த இலட்சியத்தின் கீழ் அவர்களுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, தொழில் பயிற்சி, வேலை வாய்ப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் முக்கியத்துவம் கிடைப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

ஊனமுற்றவர்களுக்குப் பல புதிய திட்டங்களின் மூலம் நமது அரசு உதவிவருகிறது. ஊனமுற்றவர்களுக்குச் சிறப்புப் பள்ளிகள் தொடங்குவது, தொழிற் பிரிவுகள் ஏற்படுத்துவது, வேலையின்றி இருக்கும் கண்தெரியாதவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவது ஆகிய - ஊனமுற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு மேற்கொண்டுள்ளபுதிய திட்டங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

ஊனமுற்றவர்களுக்கான விளையாட்டுப் போட்டி இப்போது மாவட்ட அளவில் நடைபெறுகிறது. கடைசியாக மாநில அளவில் சென்னையில் நடைபெறும். அதில் வெற்றி பெறுகிறவர்கள் அனைத்திந்திய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளுவார்கள்.

—இவ்வாறு சமூக நலத்துறை இயக்குநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

**திரு. செல்வராஜ்**

விழாத் தலைமையேற்று உரையாற்றிய சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. வி. செல்வராஜ் இ. ஆ. ப. அவர்கள் உரையாற்றுகையில் —''உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளிப்பதில் நாங்கள் தனி அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணமான தமிழக அரசுக்கும், குறிப்பாக சமூகநலத் துறை இயக்குநருக்கும் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்'' என்றார்.

**அணி வகுப்பு அழகு**

இதைத் தொடர்ந்து, உடல் ஊனமுற்றவர்களின் அணிவகுப்பு, காவல் துறை 'பேண்டு வாத்தியக் குழு' வினரின் தலைமை இசை நடையோடு நடைபெற்றது.

அணி வகுப்பு மரியாதையைக் காவல் துறை ஆணையாளர் திரு. எஸ். ஸ்ரீபால், ஐ.பி.எஸ். அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

அணிவகுப்பின் முகப்பில் —'தமிழ் நாடு அரசு சமூகநலத்துறை-உலக ஊன முற்றோர் ஆண்டு 1981- சென்னை விளையாட்டுப் போட்டி' என்றெழுதப்பட்ட பதாகை ஊனமுற்றோர் இருவரால் ஏந்தி வரப்பட்டது.

அதைத் தொடர்ந்து—

ஆந்திர மகிளசபா, சி.எஸ்.ஐ. சேவி கேளாதோர் பள்ளி, புனித லூயிஸ் பார்வையற்றோர் பள்ளி, சி.எஸ்.ஐ. மன ஊனமுற்றோர் பள்ளி, சிறுமலர்ப்பள்ளி, இந்திய செஞ்சிலுவைச் சங்க சென்னைப் பிரிவு, எஸ்.எஸ்.வி. பள்ளி சாரணப் பயிற்சி மாணவர்-ஆகிய இக்குழுவினர் அணிவகுப்பில் பங்கேற்றார்கள்.

**திரு. ஸ்ரீபால்**

தேசியக் கொடியினை ஏற்றிவைத்து காவல்துறை ஆணையாளர் திரு. எஸ். ஸ்ரீபால், ஐ.பி.எஸ். அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

நம்மில், இப்படிப்பட்ட ஊனமுற்றவர்களைப் பார்க்கிறபோது நாம் நெக்குருகிப் போகிறோம். இறைவன் படைப்பில் இத்தகைய அதிசயங்கள் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் - பாதிக்கப்பட்டவர்களைப் பல்வேறு பணிகளில் பயிற்றுவித்து





அந்தக் குறை பற்றிய கவலை மறக்கச் செய்துவருகிறோம்.

ஒரு குறையும் இல்லாதவர்களுக்கு உள்ள ஆற்றல் எங்களுக்கும் உண்டு என்பதை உடல் ஊனமுற்றவர்கள் பலவகையிலும் மெய்ப்பித்து வரக் காண்கிறோம். அந்த வகையிலேயே இந்த விளையாட்டுப் போட்டியும் நடத்தப்படுகிறது.

அமெரிக்க நாட்டில், ஊனமுற்றவர்களால் தொழிற்சாலைகளே நடத்தப்படுகின்றன.

ஆகவே, ஊனமுற்றோர் நாம் என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவர்களுக்கு ஏற்றபல உதவிகளைத் தமிழக அரசு தொடர்ந்து செய்துவருகிறது.

ஆனால் ஒன்று; அரசு மட்டுமே இவ்வகைப் பணியை முழுமையாகச் செய்துவிட முடியாது. ஆகவே, இப்படிப்பட்டவர்களைக் கை தூக்கிவிடும் வகையில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பங்கைச் செய்திட வேண்டும்.

—இவ்வாறு காவல்துறை ஆணையாளர் உரை நிகழ்த்தினார்.

விளையாட்டுப் போட்டி உறுதிமொழியினை லட்சுமணராவ் எடுத்துக் கொண்ட பின்னர் போட்டிகள் தொடங்கின.

பச்சைப் பட்டு விரித்தாற்போலிருந்த ராஜரத்தினம் விளையாட்டரங்கத்தைச் சுற்றிலும் பல வண்ணக் கொடிகள் அணி செய்தன. உடல் ஊனமுற்றோர், பட்டாம் பூச்சிகளாக அரங்கில் இறங்கினர்.

பார்வையற்றோர், [illegible] கேளாதோர், மனநோய் உடையோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தோர் என உடல் ஊனமுற்றோர் அத்தனைப் பேரும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

அவ்வளவு பேருக்கும் விழா நாளன்று காலையில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலம் பால் வழங்கப்பட்டது. சமூக நலத் துறை மூலம் நடுப்பகல் உணவும், மாலைச் சிற்றுண்டியும் அளிக்கப்பட்டது.



சமூகநலத் துறை இயக்குநர் திருமதி சோசம்மா

இந்த வகையில் நாங்கள் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறோம்.

எங்கள் கவனத்திற்கும் எட்டாமல் ஊன முற்றோருக்குச்சிலபல குறைகள் இருக்கலாம். அதைச் சம்பந்தப்பட்ட அமைச்சராகிய என்னையோ, அதிகாரிகளையோ சந்தித்துத் தெரிவித்து பிரச்சினைகள் பற்றிப் பேசித் தீர்வு காணவேண்டுமே தவிர, மற்றவர்கள் தூண்டுதலுக்கு ஆளாகிவிடக்கூடாது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்று அகமதாபாத்தில் நடக்கும் உலக ஊனமுற்றோர் போட்டியில் கலந்துகொள்ளச் செல்லவிருக்கும் அனைவருக்கும் என் வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**பரிசுகள் விவரம்**

மாநில விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றவர்களில் 360 பேருக்கு முதலாவது இரண்டாவது மூன்றாவது பரிசுகள் வழங்கப் பட்டன. முறையே ரூ. 25, ரூ. 20, ரூ. 15 பெறுமானமுள்ளவைகளாக அப்பரிசுகள் இருந்தன.

பெரும்பாலோர் வெற்றி பெற்ற நிறுவனங்களுக்குக் கேடயங்கள் அளிக்கப்பட்டன. அக்கேடயங்களை நியூ பேங்க் ஆஃப் இந்தியா வழங்கியிருந்தது.

அப்படி முதனிலை பெற்று கேடயங்கள் பரிசு பெற்றோர் பற்றிய விவரங்கள் பின் வருமாறு:

1. அரசு பார்வையற்றோர் மேனிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி - பார்வையற்றோருக்கான போட்டிகளில் அதிக மதிப்பெண்.
2. சி.எஸ்.ஐ. செவிகேளாதோர் பள்ளி, மயிலாப்பூர் - செவிகேளாதோருக்கான போட்டிகளில் பெரும் வெற்றி.
3. ஈஸ்வரி பிரசாத் தத்தாத்ரேயா முடநீக்கு மையம், அடையாறு - ஊனமுற்றோருக்கான போட்டிகளில் முதன்மை.
4. பாலவிகார் சென்னை - மன ஊனமுற்றுக் குணமானோருக்கான போட்டிகளில் அதிக மதிப்பெண்.
5. எஸ்.எல்.ஆர். அண்டு டி.சி., கரிகிரி (வ.ஆ. மாவட்டம்) - தொழுநோயுற்றுக் குணமானோருக்கான போட்டிகளில் பெரும்பான்மை.
6. புனித லூயி பள்ளி, அடையாறு-பல வகைப் போட்டிகளிலும் 'சாம்பியன் ஷிப்!'

—இவ்வாறு தேர்ச்சி பெற்ற 360 ஊனமுற்றோரில் 310 பேர் சென்னையைச் சேர்ந்தவர்களேயாவார்.

பல மாவட்டங்களிலுமிருந்து வருகை தந்தோரைத் திருப்திப் படுத்தும் வகையில் - பிற மாவட்டத்தினருக்கெல்லாம் லட்சுமி மில்ஸ்' மூலம் அளிக்கப்பட்ட சட்டை, ரவிக்கை - கவுன் துணிகள் வழங்கப்பட்டன.

பரிசுகள் அனைத்தும் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களாலேயே அளிக்கப்பட்டன.



# ஊனமுற்றோர் ஆண்டில் ஓர் உன்னதத் திட்டம்

**— தமிழ்ப்பித்தன்**

"காணார் கேளார் கால்முடம் பட்டோர்

பேணுநர் இல்லோர் பிணிநடுக்குற்றோர் யாவரும் வருக'' என,

அமுதசுரபியைக் கையிலேந்தியவாறு உடலூனமுற்றவர்களை அழைத்து அவர்களுக்கு உணவளிக்கிறாள் மணிமேகலை என்ற செய்தியை மணிமேகலைக் காப்பியம் நமக்குத் தெரிவிக்கிறது.

''உறுப்புக் குறைவு என்பது பழியல்ல' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

உடலூனமுற்றவர்களை எள்ளி நகையாடக் கூடாது; இரக்கத்துடன் அணுக வேண்டும் என்னும் தத்துவத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே தமிழகம் உணர்ந்திருக்கிறது என்பதற்கு இலக்கியங்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

மைய அரசும், மாநில அரசும் உடல் ஊனமுற்றவர்களைத் தக்க விதத்தில் கவனித்து வருகின்றன.

1981-ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றவர் ஆண்டு எனக் கொண்டாடப்படுவதால் மாநில அரசும் மைய அரசும் தமது துறைகளில் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை அதிக அளவில் நல்கி வருகின்றன

சென்னை மாநகர ஷெரீப் டாக்டர் ரெக்ஸ் அவர்கள் - ஊனமுற்றோர் ஆண்டு முடிவுறப் போகும் சமயத்தில் ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்கு ஒரு புதிய திட்டத்தை-உயர்ந்த திட்டத்தை செயலாக்க இருக்கின்றார்.

ஊனமுற்றவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றிவைக்கும் உன்னதத்திட்டம் ஒன்றினை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார் அவர்.

மணமகன் அல்லது மணமகள் ஊனமுற்றவராக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அவர்கள் தமிழ்நாட்டில் எந்த குக்கிராமத்தில் இருந்தாலும் சரி அவர்களின் திருமணச் செலவு ஷெரீப் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்பதுதான் அந்தத் திட்டம். ஒவ்வொரு இணைக்கும் ரூபாய் 500 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

சென்னையில் 1981-ஆம் ஆண்டு இறுதிக்குள் இவ்வாறு இருபது இணைகளின் திருமணம் நடைபெற உள்ளது என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திருமண விழாவில் கலந்துகொள்ளவிருக்கிறார் என்றும் ஷெரீப் தெரிவிக்கிறார்.

இது குறித்து மாநகர ஷெரீப் அவர்கள் சில நாளேடுகளில் ஏற்கனவே அறிவிப்புச் செய்திருக்கிறார். ஆனால், அந்த அறிவிப்பைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் பலரும் பல் வேறு விதங்களில் வேண்டுகோள்களை விடுத்திருக்கின்றனர்.

ஊனமுற்ற ஒருவர் ஒரு பெண்ணை மணப்பதற்கு பொருளாதார வசதிக் குறைவு இடையூறாக இருப்பின், அதனைக் களைந்து மணவாழ்க்கையை அவர்களுக்கு அமைத்துக் கொடுப்பதுதான் ஷெரீப்பின் திட்டம். இது, மக்களால் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை.

''நான் ஊனமுற்றவன், எனக்குத் தகுந்த பெண் இருந்தால் சொல்லுங்கள்''—இப்படி ஓர் ஆடவன்.



**சென்னை மாநகர ஷெரீப் பி.எம்.ரெக்ஸ்**

'நான் ஊனமுற்ற பெண், எனக்கு ஏற்ற மாப்பிள்ளை இருந்தால் தெரிவியுங்கள்''— இப்படி ஒரு பெண்.


இவ்வாறு பலநூறு கடிதங்கள் ஷெரீப்பைத் தஞ்சம் புகுந்துள்ளன.

மாப்பிள்ளையோ, பெண்ணோ பார்த்து ஏற்பாடு செய்யும் திருமணத் தகவல் நிலையத்தின் பணியை மாநகர ஷெரீப் செய்யவில்லை. ஊனமுற்ற ஒருவர், ஏற்கெனவே மணமகனைப் பார்த்து முடிவு செய்து வைத்திருந்து, திருமணம் நடத்து வதற்குரிய பொருளாதார வசதி இன்றித் தவித்தால் இலவசமாகத் திருமணம் செய்து வைக்கப் பெறும். தாலி, ஷெரீப்பின் நிதியிலிருந்து வாங்கி வழங்கப்படும்.

''ஊனமுற்றோருக்கு உதவுகின்ற இந்த உன்னதத் திட்டம் உலகில் வேறு எங்கும் நடைபெற்றதாக நமக்குத் தெரியவில்லை. எனவே வரலாற்றுப்பெருமை தமிழகத்துக்குக் கிடைக்கப்போகிறது; கிடைக்கவேண்டும் என்பதுதான் எனது வேட்கை-பேரவா'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கும் சென்னை மாநகர ஷெரீப் டாக்டர் பி. எம். ரெக்ஸ் அவர்கள், ''அதிக அளவு இணைகளுக்குத் திருமணம் செய்து வைக்க நினைக்கிறோம். இதுவகையில் சமூகநிலையங்களின் [illegible] ஆர்வம் காட்டுவதாக இல்லை'' [illegible] கவலையுடன் குறிப்பிடுகிறார்.

ஊனமுற்றோர் [illegible] வதற்கு வழிவகுக்கும் இந்த [illegible] புண்ணியம் தரும் திட்டம் [illegible] தவறில்லை என்றே [illegible]

# பாரதி பெருமை



## பாரதி என்னும் தமிழ்க் கவிஞன்

**மூதறிஞர் இராஜாஜி**

இந்த நூற்றாண்டில் இந்தியாவில் எழுந்த தேசிய விழிப்பின் தென்னகத்துக் கவி உருவம் சுப்பிரமண்ய பாரதி. அவர் தமிழ கூத்து மக்களின் அன்பினால் ஏகோபித்து ஏற்கப்பட்ட ஆஸ்தான கவிஞராவார். அவரு டைய பாடல்கள் நாடு முழுவதிலும் பொதுக் கூட்டங்களிலும் சரி, இல்லங்களிலும் சரி, சிறுவர்களாலும் பெரியவர்களாலும் பாடப் படுகின்றன. சாதி, சமயப் பாகுபாடுகள் யாவற்றையும் கடந்து எல்லா மக்களின் உள் ளங்களில் நிரந்தரமான இடம்பெற்றுவிட்டன. பாரதி ஒரு பிராம்மணர். ஆனால் அவரது கவிதா விலாசம் சமத்துவத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை அவரது பாடல்களிலும், வாழ்க்கையிலும் காணலாம். உயர் சாதியினருக்கும், தாழ்த் தப்பட்டவர்களுக்கும், ஆண்களுக்கும் பெண் களுக்கும் சமத்துவமும் சுதந்தரமும் வழங்க வேண்டும் என்பதே அவருடைய ஆத்ம வேட்கை. அந்த வேட்கையே அவர் பாடல் இயற்ற உந்திய ஊக்கமுமாகும். பழைய சிந்தனைகளிலிருந்தும் கட்டு திட்டங்களி லிருந்தும் தைரியமாக வெளிப்பட்டு மக்களின் பேச்சுத் தமிழையும், நாட்டுப் பாடல் மெட் டுக்களையும், கையாண்டு விழிப்படைந்த பாரதத்தின் ஆசைக் கனவுகளை-லட்சியங் களை-தமது பாடல்கள் மூலம் வெளியிட்டார்.

[13-12-1928 "யங் இந்தியா"வில் எழுதியதன் மொழிபெயர்ப்பு.]

**தகவல்: எஸ். வி. எஸ்.**

''பாரதியாரின் கவிதா சக்தியைப் பற்றி அவருடைய கவிதைகளில் காணப்பெறும் அழகு, இனிமை, எளிமை, கருத்து முதலி யவைபற்றி, அவருடைய தெளிவான உரை நடையைப் பற்றி எவ்வளவோ பேசலாம்; எவ்வளவோ எழுதலாம்; அப்படிப் பேசியும் எழுதியும் பாரதியாரின் அதிமேதையை உல கத்திற்கு அறிமுகப்படுத்திவைக்க வேண்டுவது அவசியமாகும். அந்த அரும்பணியைச் செய்ய முன் வரவேண்டுமென்று அதிமேதையர்களான தமிழ்ச்சகோதரர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.''.

—வெ. சாமிநாத சர்மா





## இதய ஒலி

— காமராஜ்

பாரதியார் பாமர மக்களின் உணர்ச்சி யைத் தட்டி எழுப்பிய மாபெரும் கவிஞர். அடிமைத் தளையிலே சிக்குண்டு அச்சம் நிறைந்த நெஞ்சோடு பதுங்கிக் கிடந்த நம் தமிழ்ப் பெருமக்களை, ஆண்மைகொண்டு 'அச்சம் இல்லை—அச்சம் இல்லை' என்ற வெற்றி முரசு கொட்டிப் போராட்டத்தில் குதிக்கச் செய்தவர். சுதந்தரம் வெறும் கற்பனை யல்ல; அதை நாம் அடைந்தே தீரு வோம் என்ற நம்பிக்கையை அனைவரின் மனத்திலும் ஒன்றச் செய்தவர். அதோடு மட்டுமல்லாமல் சுதந்தரம் பெற்ற மக்கள் எவ்வாறு களிப்போடு வாழ்வார்கள் என்ப தையும் தம்முடைய கற்பனைக் கண்ணால் கண்டு களித்து மற்றவர்களும் களிப்படையச் செய்த மாபெரும் கவிஞர். 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற பாட்டை அறி யாதவர்கள் நம்மில் யார் இருக்கின்றார்கள்?'

சமூகத்தில் மண்டிக்கிடக்கும் எல்லா அநீதிகளைப் பற்றியும் மூடப் பழக்க வழக்கங் களையும் அவர் குறிப்பிட்டார். அவைகளைப் போக்க வேண்டிய அவசியத்தையும் பாடி யுள்ளார். பழமைக்கு ஒரு புதிய மெருகேற்றி அதைப் பாஞ்சாலி சபதமாக நமக்குக் கொடுத் துள்ளார். நாம் அனைவரும் கற்பனையில் திளைப்பதற்காகக் குயில் பாட்டையும் பாடி யுள்ளார். இன்னும் கடவுள், வேதாந்தம், பெண் விடுதலை முதலிய எல்லாவற்றைப் பற்றியும் அவர் பாடியுள்ளார். அவர் பாடாத துறை எதுவுமே இல்லை என்று சொல்லலாம்.

இவ்வாறு மக்களின் வாழ்க்கைத் துறை யைப் பல கோணங்களிலிருந்து பார்த்து, அதை வளமூட்டும் வழிகளையும் பாடிய பாரதியாரின் புகழ் விளங்கப் பாடுபடுவது நம்முடைய கடமையாகும்.





# ராஜாஜியின் பண்புகள்

மீ. ப. சோமசுந்தரம்,
இயக்குநர்,
தமிழ்ப் பழங்கலை இயக்ககம்,
தமிழ்நாடு அரசு.



ராஜாஜியின் அரசியல் உறவில் அடிக்கடி ஆள் மாறுதலும் உறவு மாறுதலும் ஏற்பட்டதற்கு நேர் மாறானது, அவரது . சொந்த வாழ்வின் நட்புறவு! தமது தனிப் பட்ட வாழ்விலே அவர் ஒருவரை நண்பராக வரிப்பது மிகவும் கஷ் டம். அப்படி ஒருவரைத் தேர்ந் தெடுத்து நட்பு பூண்டுவிட்டார் என்றால், பிறகு அது மாறவே மாறாது. அந்த உறவை எவரா லும் மாற்றவும் முடியாது. அந்த உறவுக்குச் சமுதாய ஏற்றத் தாழ் வுகள், வயது வித்தியாசங்கள், பதவி வித்தியாசங்கள், சூழ்நிலை மாறுதல்கள் எதனாலும் மாற்றம் உண்டாகாது. இதை என் சொந்த அனுபவத்தில் நான் சந்தேகத் துக்கு இடமில்லாமல் எத்த னையோதடவை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளேன்.

எனக்கும் அவருக்கும் வயதில் எத்தனை வித்தியாசம்! சமுதாய நிலைகளில் எப்பேர்ப்பட்ட பதவி களை எல்லாம் வகித்தவர் அவர். என்றாலும் என்னிடம் அவருக்கு இருந்த அந்த உறவு எந்தச் சூரர் களாலும், எந்த மாறுதல்களா லும் மாற்ற முடியாதபடி, ஆரம் பத்திலிருந்து நாளுக்கு நாள் அதி கமாகிக் கொண்டே வந்ததே தவிரக் குறையவில்லை. எவர் புகுந்து தலையிட முயன்றபோ தும் (ஊக்கத்தோடு சிலர் முயன் றார்கள் என்பது உண்மை!) அந்த நட்புறவை யாராலும் அசைக்க முடியவில்லை! அவரே ஒருசமயம் 1961-ம் ஆண்டில் யாதவப்பெரு மாள் கோயில் சந்நிதியில் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார். [illegible]

எனக்கும் சோமுவுக்கும் உள்ள இந்த நட்புறவு -'' என்று:

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், என் பெருமையை அல்ல, அவர் பெருமையைக் காட்டுவதற்கு! அரசியல் வாழ் விலே அவருடைய நட்புறவுகள் எப்படி மாறிக்கொண்டு போனா லும், சொந்த வாழ்வில் அவர் தமது நட்புறவை உறுதியோடு போற்றி வந்தார். ஒரு சில நண் பர்களே அவருக்கு வாழ்வின் அந் தரங்க நண்பர்களாக விளங்கிய தால், அந்த ஒருசிலரை அவர் கண்ணேபோல் எப்போதும் போற்றி வந்தார். அந்த உறவு களில் மாறுதல் ஏற்படாதவாறு நாளும் வளர்த்து வந்தார்.

காலையில் ஒன்று
கடும்பகலில் ஒன்று
மாலையில் ஒன் றாவார்
மனிதரெல்லாம்

என்று புலவர்களால் பாடப் பெற்ற இந்த விந்தை உலகிலே, மாறாத நிலைத்த அன்போடு தமது ஒருசில அந்தரங்க நண்பர் களிடம் பழகியவர் ராஜாஜி.

அரசியல் வேலைகளும், அர சாங்க நிருவாக அலுவல்களும், பெரும் பெரும் பொறுப்புக்களு மாக எத்தனையோ பல தொல் லைகள் அவருடைய மூளையில் கொந்தளித்துக் கொண்டிருந்த காலத்திலுங்கூட, என் வீடு தேடி வந்து மணிக்கணக்காக இருந்து ராஜாஜி உறவாடியதை என் நண்பர்கள் பலரும் நேரிலே அறி வார்கள். இந்த அரிய நட்பு நலத்தை என்னென்று சொல்லி வர்ணிப்பது!

மாறுதல்களும் மனமாற்றங்க ளும் நிரம்பிய நட்புலகிலே மாறு தல்களுக்கெல்லாம் அப்பால் இருந்து இயங்கிய நிலையான நட்பு நலமே ராஜாஜியின் உறவு! அவருக்கிருந்த உறுதி, அவருக்கி ருந்த வினைத்திட்பம் அவருடைய நட்புக்கும் இருந்தது. அவரைப் போன்றே அவருடைய உறவும் அசையாத வீரத்தோடு விளங்கி யது.

அவர் செய்கிற உதவிகளைப் பற்றி வெளி உலகுக்குத் தெரி யாத ஒரு பெரிய உண்மையை இங்கே சொல்லவேண்டும். [illegible]

அட்டகாசமாகப் பூக்காமல் மௌனமாகவே காய்க்கிற மரங்கள்போல் (பலர்) சொல்லாமலே செய்வார்கள் பெரியவர்கள். பூத்துக் காய்க்கிற மா மரங்களைப்போல் ''செய்கிறேன்'' என்று வாக்குக் கொடுத்து அதன்படி செய்வார்கள் சாமானிய மனிதர்கள். ''செய்கிறேன்'' என்று வார்த்தையளவிலே சொல்வார்கள், ஆனால் சொன்னபடி செய்யமாட்டார்கள் கயவர்கள். பூத்தும் காய்க்காத பாதிரி மரங்கள் இவர்கள் என்று அவ்வையார் ஒரு வெண்பா பாடியிருக்கிறார்.

சொல்லாமலே பெரியார்
  சொல்லிச்செய் வர்சிறியர்
சொல்லியும் செய்யார்
  கயவரே - நல்ல
குலாமாலை வேற்கண்ணாய்
  கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப்
  பார்!

ராஜாஜியின் செயல்முறைகளை எண்ணும்போது பூக்காமலே காய்க்கும் கனிமரம் என்றுதான் அவரைச் சொல்ல வேண்டும்.

அவர் செய்கிற உதவி, அறிவிப்பு யாதொன்றும் இல்லாமல் நடைபெறும். நாலுபேருக்குத் தெரியாமல் செய்வார் என்பது மட்டுமில்லை. யாருக்கு உதவி செய்கிறாரோ அந்த மனிதருக்குமே தெரியாமல் உதவி செய்துவிடுவார் ராஜாஜி. அவ்வையார் சொல்லுகிற ''சொல்லாமலே செய்வார் பெரியர்'' என்ற பெரியவரின் இலக்கணம் அவரிடம் அப்படிப் பரிபூரணமாகக் கூடியிருந்தது. பொதுக் காரியம் தனிக்காரியம் இரண்டிலும் அப்படியிருந்தார் அவர்.

ஒரு சமயம் ஒரு முக்கிய இலக்கியக் கழகத்தின் ஆலோசனைக் குழுவில் என்னை உறுப்பினராக நியமித்து, பாரத அரசாங்கத்தின் கல்வி அமைச்சரகத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. 1955-ல்! இந்தக் கடிதத்தை ராஜாஜியிடம் காட்டினேன். ''ஒப்புக்கொள்'' என்று சொன்னார். அதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை. பிறகுதான் தெரியவந்தது, அவர்தான் என்னையும் வேறு இரண்டு பத்திரிகை ஆசிரியர்களையும் அந்தக் குழுவுக்குப் பரிந்துரை செய்து எழுதியிருந்தார் என்பது. மற்ற இரண்டு நண்பர்களும் இந்தச் சிறப்புக்கு ராஜாஜிதான் காரணம் என்பதை நீண்டநாள் வரை அறியார்கள்.

இது ஒரு சிறு சான்று. ஒரு சிறிய நிகழ்ச்சி. எத்தனையோ பல பெரிய செயல்களையும் இப்படித்தான் ஓசைப்படாமல் ராஜாஜி செய்வார். தமது கருத்துப்படி ஒருவர் ஒரு பதவிக்குத் தகுதியுடையவர் என்று அவருடைய காரண காரிய அறிவுக்குப் படவேண்டும். அப்படிப் பட்டுவிட்டால் யாருடைய பரிந்துரையுமே வேண்டாம். சம்பந்தப்பட்டவர்களுடைய வேண்டுகோளும் வேண்டியதில்லை. ராஜாஜியே முன்வந்து முன்னின்று செய்து முடித்துவிடுவார். தகுதியில்லை என்று அவர் கருதினால் எத்தனை வேண்டியவர்களாக இருந்தாலும் சரி. எத்தனைப் பேர் வந்து எத்தனை வேண்டிக்கொண்டாலும் சரி, செய்யமாட்டார். ஒரு மனிதரைப் பற்றி அவருடைய கணிப்பு மற்றவர்களுக்குச் சரி என்று படலாம், அல்லது மாறாகவும் தோன்றலாம். ஆனால் அவருக்குச் சரி என்று படவேண்டும். வெறும் தாண்யம் வெறும் தயவு இவற்றுக்கு இடம் கிடையாது அவரிடம். தம்மோடு ஆயுள் முழுதும் எதிரியாக நின்று போரிடுபவர் ஆனாலும், சரி. அந்த மனிதருக்கு ஒரு தகுதியிருப்பதாக ராஜாஜி கருதினால், அதற்கு வாய்ப்பு வரும்போது யாரும் நினைவுபடுத்தாமல் அவரே முன்வந்து 'இதனை இதனால் இவன் முடிப்பான்' என்று, அதனை அவர் கண் ஒப்படைப்பார். இதுவே ராஜாஜியின் செயல் முறை!

அரசியல் வாழ்க்கையில் ராஜாஜியின் செயலாற்றும் திறன், பெரிய பெரிய முடிவுகளையும் உறுதியோடு எடுத்து, உறுதியோடு நின்று, உறுதியோடு செயல்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றுக்கு நமது தேசத்தின் வரலாற்றில் பல சான்றுகள் உண்டு. சொந்த வாழ்விலும் அவர் அப்படியேதான் இயங்கிவந்தார் என்பது நெருங்கிப் பழகியவர்களுக்கே தெரியும்

ஒரு பெரிய வைத்தியர் வந்து அவருக்கு ஒரு மருந்து கொடுப்பதானாலுங்கூட, முதலில் அந்த மருந்தின் உட்பொருள்கள், அதன் இயல்பு, இயக்கத்தன்மை முதலியவற்றைக் குறித்து ராஜாஜி அந்த டாக்டரிடம் உரையாடுவார். டாக்டருக்குப் பொறுமை இருந்தால் மட்டும் போதாது. ராஜாஜியின் நுட்பமான கேள்விகளுக்கு விளக்கம் சொல்லக்கூடிய அறிவும் ஆற்றலும் அந்த டாக்டருக்கு இருக்க வேண்டும். அதன் பிறகுதான் அந்த மருந்தை உட்கொள்ளுவார் ராஜாஜி.

காலையில் எழுந்திருப்பதுமுதல் இரவு படுக்கும் வரை, எந்தச் செயலைச் செய்தாலும் இப்படி ஒரு தெளிவும், உறுதியும், மன



ஒப்பமும் சேர்ந்து அவரிடம் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

'ஷெட்யூல்' - என்று சொல்கிறோமே திட்டங்களின் வரையறை அதில் மிகவும் கண்டிப்பாக இருப்பார். தாம் சென்று ஒருவரைப் பார்க்கப் போனாலும் சரி, ஒருவர் தம்மைப் பார்க்க வருவதானாலும் சரி, குறித்த நேரத்தில் குறித்தபடி அந்த நிகழ்ச்சி நடக்க வேண்டும். 'வருகிறேன்' என்றால் வந்துவிடுவார். எத்தனை மணிக்கு என்று சொன்னாரோ அத்தனை மணிக்கு வினாடிபிசகாமல் வந்துவிடுவார். பிறரும் தம்மிடம் அப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பார். வர இயலாது என்று முடிவாகச் சொல்லிவிட்டார் என்றால், இமயமலையே தலைகீழாக நின்றாலும் அசையமாட்டார்.




கடிதங்கள் எழுதுவது, கோப்புக்களைப் படித்து உடனுக்குடன் முடிவுகள் வரைவது, கேட்ட கேள்விக்கு டக் டக் என்று விடை கூறுவது, எல்லாவற்றிலும், ஒரு விரைவும், அதேசமயம் பதற்றமில்லாத அமைதியும், நெறிபிறழாத ஒழுங்கும் இருக்கும்.

அறையிலே எந்தெந்தப் பொருள்கள் எங்கெங்கு இருக்க வேண்டும் என்று ஒரு சட்ட திட்டம். கண்ணை மூடிக்கொண்டு போய் அந்த இடத்தில் கை வைத்தால் அந்தப் பொருள் அங்குதான் இருக்கும். அப்படி ஒரு நிரல்முறை, ஒரு நியதி.

எந்தச் செயலும் அரைகுறையாகச் செய்யமாட்டார். தெளிவும் முழுமையும் அதில் இருக்கும். ஒரு கடிதத்துக்குப் பதில் எழுதுவதானாலும் முழுமையாக எழுதி முடித்துவிட்டு, ஓர் உறையிலே அதை வைத்து, முகவரியை எழுதி ஒட்டித் தபால் தலையையும் கணக்குப் பார்த்து அதிலே பதித்த பிறகுதான் அடுத்த வேலைக்கு வருவார். சில சமயங்களில், அதிலும் உடல் வலுவாக இருந்த அவரது ஆரம்பக் காலத்தில், கடிதங்களைத் தபால் பெட்டியில் சேர்ப்பதுகூட அவரே செய்வார்!

அவருடைய உடை நடை பாவனை எல்லாவற்றிலும் எளிமைஇருக்கும். ஆனால்எளிமை என்றால் ஏழ்மை இல்லை அது. தரித்திரம் இல்லை அது. அது ஓர் அறிவாளியின் எளிமை. ஒரு பெரிய உள்ளம் படைத்த சீலம் மிகுந்த தியாகியின் எளிமை. அந்த எளிமையில் ஓர் அழகு இருக்கும். வறுமையோ தாபமோ இராது. அந்த எளிமையில் ஒரு துப்புரவு, தூய்மை இருக்கும். அருவருப்பு, ஆற்றாமை இராது. ஒரு கண்ணியம் இருக்கும். அந்த எளிமை ஒரு புனிதமான அழகிய வெண்தாமரை மலரின் எளிமை. கலைமகள் வந்து அமரவேண்டிய ஆசனம் அது!

செயல்முறைகளிலே இப்படி எளிமை, ஒழுங்கு, கண்ணியம் இவற்றைப்போலவே ஒரு கட்டுப்பாடும் இருக்கும். பத்து நிமிஷம் ஒரு ரேடியோப் பேச்சு ஒலி பரப்புகிறார் என்றால், ராஜாஜியின் பேச்சு ஏடும் பத்து நிமிஷந்தான் இருக்கும். அதை ஒத்திகை பார்ப்பார். அரை நிமிஷம் அதிகமாக இருந்தால் அந்த அரை நிமிஷத்தை அப்படியே அடித்துவிடுவார். பன்னிரண்டு நிமிஷம் பேசவேண்டும் என்றால் பன்னிரண்டு தான் இருக்கும். 11 யும் இராது. 12 யும் இராது. அப்படி ஒரு கணக்கு ஒரு கட்டுப்பாடு. பலமுறை ரேடியோவில் பேசிப் பழக்கம் இருந்தாலும், ஒவ்வொரு முறையும் ஒத்திகை பார்ப்பார். குரல் ஏற்ற இறக்கம் சரியாக இருக்கிறதா என்று எதிரே இருப்பவரைக் கேட்பார். ஒலிப்பதிவு முடிந்தபிறகு முழுதும் போட்டுக் கேட்டுச் சரியாக இருந்தால் ஒழிய ஒப்புக்கொள்ள மாட்டார். தமது நிகழ்ச்சியிலேயே இத்தனை கண்டிப்பும் கணக்கும் வைத்து எடைபோடுவார்!

அவருடைய உணவு முறை, தினப்படியான நிகழ்ச்சிகள், உறக்கம், நடை, பேச்சு, எழுத்து எல்லாவற்றிலும் விதி முறைகள் துலங்கும்.

இந்த ஒழுங்குக்கு மாறாக ஏதாவது நடந்துவிட்டால் வெகுண்டு கண்டிப்பார்! சில சமயங்களில் எத்தனை வேண்டியவர்களானாலும் எத்தனை நெருங்கியவர்களானாலும், செயலின் முறைகேடு கண்டுவிட்டால் அவர் அதை வன்மையாகவே கடிந்திருக்கிறார்.

வாழ்க்கை என்ற அரங்கத்தில் எல்லைக்கோடுகள் வரைந்து கொண்டு அந்த அரங்கத்திற்குள் இருந்து, வாழ்வை ஆடும்போது அந்த அழகே தனி! செயல்முறை என்பதும், நெறிமுறை என்பதும், தருமம், அறம், ஒழுக்கம் என்று பெரிய பெரிய சொற்களிலே சொல்லுவதும், எல்லாம் இந்த எல்லைக் கோடுகளைத்தானே!

ராஜாஜியின் வாழ்க்கை, சொல்லே செயலாகவும், செயலே சொல்லாகவும் திகழ்ந்த ஒரு அறநூலாகும். அந்த அறநூல் இலக்கண விதிகளை மீறிச்செல்லாத செய்யுளாக இருந்தது என்பதே ராஜாஜியினுடைய வாழ்வின் தனித் தன்மையும் சிறப்பும் ஆகும்.



# தமிழ்நாட்டில் பனைத் தொழில்

இரா. பூர்ணலிங்கம், ஐ.ஏ.எஸ்.,
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம்.

முதன் முதலில் தமிழ்நாட்டில் மதுவிலக்கைச் செயல்படுத்திய போது தொழில் வாய்ப்பை இழந்த பனைத் தொழிலாளர்களின் புனர் வாழ்வுக்கான வளர்ச்சித் திட்டங்களை வகுத்து அனைத்து இந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் கூட்டுறவுத்துறையும் பின்னர் தொழில் வர்த்தகத் துறையும் செயல்படுத்தி வந்தன. 1960-ல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அமைக்கப் பட்ட பின்னர் பனைத் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

சிதறிக் கிடந்த பனைத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி, கிராம அளவில் பனைத் தொழில் திட்டங்களை முறையாகச் செயல்படுத்தும் பொருட்டு தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டன. அவற்றின் மூலம், இலவசமாகப் பதநீர் சேகரிக்கவும், பதநீரை விற்கவும் உரிமங்கள் வழங்கப்பட்டன. தற்போது தமிழ்நாட்டில் 1601 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 1568 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், 25 ஆரம்பப் பனை ஓலைப்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 4 தாலூகா மட்ட பனை ஓலைப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும்.

இக் கூட்டுறவுச் சங்கங்களில் 3.37 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 2.98 லட்சம் பேர் பதநீர் இறக்குதல், பனைவெல்லம் உற்பத்தி செய்தல், இதர பனைப்பொருட்களை உற்பத்தி செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பனை மரங்களிலிருந்தும் கோவை, பெரியார் மாவட்டங்களில் தென்னை மரங்களிலிருந்தும் பதநீர் இறக்கி, பெரும் பகுதியை வெல்லமாக உற்பத்தி செய்கிறார்கள். பதநீர் இறக்கும் தொழிலை ஆண்களும், பதநீரைக் காய்ச்சிப்பனைவெல்லம் உற்பத்தி செய்வதைப் பெண்களும் குடும்பமாக ஈடுபட்டுச் செய்கிறார்கள். ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் சராசரியாக ரூ. 12 முதல் 14 கோடி மதிப்புள்ள பனைவெல்லத்தை உற்பத்திசெய்கிறார்கள். இது, சிறப்பாகக் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மதுரை மாவட்டங்களில் அதிகம் தயாரிக்கப்படுகிறது. இவ்வெல்லம் முழுவதும் தேக்கமின்றி அந்தந்த ஆண்டிலேயே விற்பனையாகிவிடுகிறது.

நகரப் பகுதிகளை அடுத்துள்ள ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தாங்கள் இறக்கும் பதநீரைக் குடி பதநீராகவும் விற்பனை செய்கிறார்கள். இவ்விற்பனையில் 11,000 ஆண்களும், பெண்களும் ஈடுபட்டுள்ளனர்.

**ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களின் பணி:**

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக உள்ள மற்றெல்லா மாவட்டங்களிலும் பெரும்பான்மையான கிராமங்களில் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் பனைஏறும் தொழிலாளர்கள் ஒரு ரூபாயைப் பங்குத் தொகையாகச் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்து கூட்டுறவு அமைப்பின் கீழ் தொழில் செய்கிறார்கள். பனை ஓலைத் தொழிலாளர்கள், பனைநார் தொழிலாளர்கள், (Palmyrah Naar Artisans) பனந்தும்புத் தொழிலாளர்கள் (Palmyrah Fibre Artisans) ஆகியவர்களுக்குத் தனித் தனி ஆரம்பச் சங்கங்களும் அமைத்துச் செயல்பட்டு வருகின்றன.

இச்சங்கங்கள் மாநில, மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களில் உறுப்பினர்களாக இணைந்து பனைத் தொழில் வளர்ச்சித் திட்ட நிதிகளைப்பெற்று பயனடைகின்றன. உறுப்பினர்களுக்கு ஆரம்பச் சங்கங்கள் மூலமாக மட்டுமே கடனும், மானியமும் வழங்கப்படுகிறது. இச் சங்கங்கள் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யும் பனைவெல்லத்தை விற்றுக்கொடுக்கின்றன. சில சங்கங்கள் நேரடியாகவே பனைப்பொருட்களை வாங்கி வியாபாரம் செய்கின்றன. கோவை மாவட்டம் கலிக்கநாயக்கன் பாளயத்திலுள்ள ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் திறனுடைய சீனி ஆலை ஒன்றையும் நடத்துகிறது.

திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் பகுதியில் உள்ள ஆரம்பச் சங்கங்கள் மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையத்தின் உதவியுடன் பனங்கற்கண்டை உற்பத்தி செய்து வருகின்றன. இவ்வுறுப்பினர்களுக்குத் தேவையான பனங்கற்கண்டு படிகத் தொட்டிகளை மாநில இணையம் ஆரம்பச் சங்கங்கள் மூலமாகவே குறைந்த வாடகைக்குக் கொடுத்து உதவுகிறது.

பருவமற்றகாலங்களில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பனை ஓலைப் பொருள் உற்பத்தித் தொழிலிலும், பனந்தும்பு உற்பத்தித் தொழிலிலும் பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும் அரசின் பல்வேறு துறைகள் முனைப்புடன் பனை மரங்களை வளர்ப்பதில் ஈடுபட்டிருப்பதால் அதற்கான பனங் கொட்டைகளை இச்சங்க உறுப்பினர்களிடம் மாநில, மாவட்ட இணையங்கள் வாங்கி விநியோகப்படுத்துகின்றன.

**மாவட்டச் சம்மேளனங்கள்:**

தமிழ்நாட்டில் மாவட்ட அளவில் தற்போது ஆறு மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் இயங்கி வருகின்றன.

இம்மாவட்டச் சம்மேளனங்கள் சென்னையில் இயங்கும் தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையத்திடமிருந்து திட்ட நிதிகளைப் பெற்று, அவற்றை உறுப்பினராக உள்ள பிரதம சங்கங்களுக்கு வழங்குகின்றன. உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பனை வெல்லத்தில் ஏறத்தாழ 50 சதவிகிதம் அளவுடையதை இம்மாவட்டச் சம்மேளனங்களே வாங்கி விற்றுக் கொடுக்கின்றன. மேலும் இவை ஏற்றுமதிக்குரிய பனந்தும்பு, பனை ஓலைப் பொருட்களையும் வாங்கி பனைத் தொழிலாளர் குடும்பங்களின் மேம்பாட்டிற்கு உதவுகின்றன.

தொழில் புரிய கருவிகள் வாங்கவும், வல்லுநர்கட்கு (Tapper Artisans) வீடுகள் கட்டவும், தோப்புகளைக் குத்தகைக்கு எடுத்து தொடர்ந்து தொழில் வாய்ப்பு அளிக்கவும், வியாபாரம் செய்யவும் அகில இந்திய கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு வழங்கும் (கடன்மானியம்) திட்ட நிதியை மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையத்தின் மூலமாகப் பெற்று ஆரம்பச் சங்கங்களுக்கு வழங்குகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் (D P A P) கீழும் கிராம ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (I.R.D.P.) கீழும், கிராம இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் (TRYSEM) கீழும் சிறு உழவர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழும் (S F D A) தமிழ்நாடு அரசு அளிக்கும் நிதியைக் கதர் வாரியத்தின் மூலமாகவும் மாநில இணையம் பெற்று பனைத் தொழிலில் பயிற்சி அளிப்பதற்கு உதவுகிறது.

பனை ஏறும் தொழில், வல்லுநர்கட்கு (Tapper Artisan) பல ஆபத்துக்களை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகும். பனை மரம் ஏறும்போது தவறி விழுந்து இறப்பவர் குடும்பத்துக்கும், பெரு விபத்து சிறு விபத்துகளுக்கு ஆளாவோருக்கும் மாவட்ட சம்மேளனங்கள் தமிழக அரசு வழங்கும் நிதியை வாங்கிக் கொடுக்கின்றன. பனை ஏறுபவர்களை ஜனதா இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திலும் சேர்த்து விபத்துக்கு உள்ளாகும்போது அதற்கான நிதியினைப் பெற்றுத் தருகின்றன. இதுகாறும் தமிழ்நாட்டில் 43,057 பேர் ஜனதா இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

மாநில, மாவட்ட பனைவெல்லக்கூட்டுறவுச் சம்மேளனங்களில் 5,664 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ.37 லட்சம் பங்குத்தொகையாகச் செலுத்தியுள்ளனர்.

**மாநில அளவில் இயங்கும் தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம், (சென்னை-8)**

மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம் 1958 முதல் இயங்கி வருகிறது. இதில் 1316 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வுறுப்பினர்கள் ரூ. 19.54 லட்சம் பங்குத் தொகையாகச் செலுத்தி



யுள்ளனர். இதில் சுமார் 100 நிரந்தர ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

மாநில இணையம் 1980—81-ம் ஆண்டில் ரூ. 60.91 லட்சத்துக்கு வியாபாரம் செய்து ரூ. 6 லட்சம் வியாபார லாபமாக ஈட்டியுள்ளது.

**பெருந்திட்டங்கள்:**

மாநில இணையம் பெரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பனையிலிருந்து கிடைக்கும் எல்லாப் பொருட்களையும் ஒரே இடத்தில் வைத்து பனைப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் வேலை வாய்ப்பை அளிக்கிறது. சென்னைக்கு அருகிலுள்ள குமரப்பாபுரத்தில் ஒரு பனைப் பண்ணை இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர தருமபுரி மாவட்டத்திலுள்ள மத்தூரில் ஒரு பனைப் பெருவளத் திட்டத்தை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் நடத்திக் கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர், மண்டபம் ஆகிய இடங்களில் பனைப் பெருவளத் திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு நிதி வழங்கியுள்ளது. இத் திட்டங்களால் சுற்றுப்புற கிராம மக்களுக்குப் பனை மூலம் சுயவேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

**ஆராய்ச்சி:**

மாநில இணையம் பனை நடுதல், பனங்கிழங்கிலிருந்து மாவு தயாரித்து உண் பொருட்களை உற்பத்தி செய்தல், நுங்கைப் பனஞ்சீனிப் பாகில் பதப்படுத்துதல், பனம்பாகு தயாரித்து ஏற்றுமதிக்கான வாய்ப்பை உருவாக்குதல், நவீன ரகப் பனந்தும்பு பிரஷ்களை கிராமங்களிலேயே உற்பத்தி செய்தல், ஏற்றுமதி ரகப் பனை ஓலைப்பொருட்களை உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் முனைப்புடன் ஈடுபட்டு ஆராய்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

**ஏற்றுமதி**

மாநில இணையம் நேரடியாக பனந்தும்பை 40-க்கும் மேற்பட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. ஆண்டுதோறும் ரூ.40 லட்சம் மதிப்புள்ள பனந்தும்பு மாநில இணையத்தில், தூத்துக்குடி கிளை மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**பதநீர் மற்றும் 'பாம்டா - 'பாம்கூலா'' குளிர் பானங்கள்**

இந்த இரட்டைக் குளிர் பானங்களை மாநில இணையம் பனஞ்சீனியினால் (Palm Sugar) தயாரித்து விற்பனை செய்து வருகிறது. 1980-81-ல் மட்டும் ரூ. 2.3 லட்சம் மதிப்புள்ள பாம்கூலா பாம்டா, தயாரிக்கப்பட்டு ரூ. 2.53 லட்சம் மதிப்புக்கு விற்பனை செய்துள்ளது. மேலும் 'பதநீர்' குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து கோடை காலங்களில் விற்பனை செய்யப்படுகின்றது. இதுவன்றி பனஞ்சீனியைக் கொண்டு, 'ஜனதா சர்பத்' தயாரித்து சென்னையில் விற்பனை செய்யப்படுகிறது.

**பனைத் தொழில் பயிற்சி**

கடலூரில் மாநில இணையம் ''மண்டல பனைப்பொருள் பயிற்சி நிலையம்'' ஒன்றை நடத்துகிறது. இதற்கான நிதி உதவி அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கிறது. இப்பயிற்சி நிலையத்தில் குறிப்பாக நான்கு தென் மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு (பாண்டிச்சேரி உட்பட) மற்றும் உப மாநிலங்களிலிருந்தும் அனுப்பப்படும் படித்த இளைஞர்களுக்கும், பனைத் தொழிலாளர் குடும்பத்தினருக்கும் நல்ல பனைப்

பொருள் உற்பத்தி முறைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

''மாநில மரம் – பனை''

தமிழ்நாடு அரசு பனை மரத்தை மாநில மரமாக அறிவித்து, பனைத் தொழிலுக்குப் பெருமை அளித்துள்ளது.

பனை ஏறுவோர் குடும்பத்துக்கு 100 பனை

பனை ஏறுபவர்களுக்குச் சொந்தமாகப் பனை மரங்கள் இல்லாததால் அக்குடும்பம் ஒவ்வொன்றுக்கும் குறைந்த குத்தகைக்கு 100 பனைகள் வீதம் வழங்க மாநில இணையம் திட்டமிட்டுள்ளது.

தஞ்சைச் சத்திரம் நிர்வாகத்துக்கு உட்பட்ட பனைகளையும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோரையாற்றுப் படுகைக் கரைகளிலுள்ள பனைகளையும் மாநில இணையம் குத்தகைக்கு எடுத்துள்ளது. இப் பனைகளை முதல் கட்டமாகப் பிரித்துக் கொடுக்க மாநில இணையம் உத்தேசித்துள்ளது.

ஊராட்சிகளுக்குச் சொந்தமான பனைகளைப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களுக்கு முந்திய மூன்றாண்டுக் குத்தகைத் தொகையில் சராசரிக்குக் குத்தகைக்குவிட வேண்டும் என ஏற்கனவே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் பொதுப் பணித்துறைக்கு சொந்தமான நிலங்களிலுள்ள பனை மரங்களையும், பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களுக்கே குத்தகைக்குக் கொடுக்க வேண்டுடும் என அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். இப் பனைகளை மாநில இணையமே ஒட்டு மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்து மாவட்ட சம்மேளனங்கள் மூலமாகப்பனை ஏறும் குடும்பங்களுக்குப் பிரித்துக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம மக்களுக்கு கிராமங்களிலேயே பனை மூலம் சுய வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என மாநில இணையம் தற்போது முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும், தமிழ்நாடு அரசும் அனைத்து இந்திய கதர்- கிராமத் தொழில் ஆணைக்குழுவும் தற்போது பனைத் தொழில் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி வருவதால் பனைத் தொழில் மூலம் வேலை வாய்ப்புப் பெருகிட எல்லா சாத்தியக் கூறுகளும் உள்ளன.



# திரைப்படப் பொன்விழா

இந்தியாவில் பேசும் படங்கள் தயாரிக்கத் தொடங்கி 50 ஆண்டுகள் ஆவதை முன்னிட்டு திரைப் படப் பொன்விழா கொண்டாடப் பட்டது. டிசம்பர் 1-ஆம் நாளன்று சென்னையில் பொன்விழா துவக்ககம் ஆகியது.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் பிற்பகல் 5 மணியளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் விழா தொடங்கியது.

பொன்விழா நிருவாகக் குழுவின் தலைவர் திரு டி. ராமானுஜம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

திரைப்படத் தொழில், இந்தியாவில் உள்ள மிகப் பெருந் தொழில்களாகக் கருதப்படும் பத்துத் தொழில்களில்ஒன்றாகும். எத்தனையோ தொழில்கள் பொன்விழா கொண்டாடியுள்ளன. எனினும் திரைப்படத் தொழில் மட்டும் பெரும் புகழ் பெற்றுத் திகழ்கிறது. இந்திய நாட்டின் இலட்சோப இலட்ச மக்களின் இதயங்களை அது கவர்ந்திருப்பதுதான் இதற்குக் காரணம். அந்தத் தொழில் ஒவ்வொரு கால கட்டத்திற்கு ஏற்ற விதத்தில் தன்னைச்சரிப்படுத்திக் கொண்டு - தன்னைத் தானே மாற்றிக் கொண்டு, சமூகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் வேண்டிய பணிகளை, பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் உருவாக்கி வருகிறது. நேற்று வரவேற்கப்பட்ட செய்திகள் இன்று ஏற்கப்படாது போக நேரலாம். இன்று, நடைமுறைக்கு ஒவ்வாது காணப்படும் சில விஷயங்கள் எதிர்கால உலகில் அன்றாட நடைமுறையாக மாறலாம். எனவே பொது மக்களின் ரசனைக்கு எந்தவிதமான அளவுகோலும் கிடையாது.' என்றாலும் திரைப்படத் தொழில் காலத்தில் சோதனையில் தேர்ச்சி பெற்று வளர்ச்சியுற்று, இன்றைய மகோன்னத நிலையை அடைந்துள்ளது''

இந்தியத் திரைப்பட வளர்ச்சி கழகத்தின் தலைவர் திரு டி.வி. எஸ். ராஜு அவர்கள் குடியரசுத் தலைவர், ஆளுநர், முதல்வர் ஆகியோருக்கு மாலை அணிவித்தார்.

விழாவுக்குத் தலைமை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்.



''சினிமாத்துறை தென்னகத்தில் தொடங்கிய நாள் முதற் கொண்டு எத்தனை கலைஞர்கள் பங்கு கொண்டார்கள் என்பதையும், இந்தத்துறை எப்படி முன்னேறியது என்பதையும் எத்தகைய தியாகத்தால் முன்னேறியது என்பதையும் நினைவுபடுத்தும் விழா இது.

''நன்றி கூறுவது என்பது தென்னகத்தில், குறிப்பாக தமிழகத்தில் உள்ளவர்களுக்கு உரித்தாகும் என்ற வகையிலும், தங்கள் விசேஷத்திறமையாலும் தொழில் நுட்பத் திறமையாலும் மக்களிடையே தனி இடத்தைப் பெற்றுக்கொண்ட சிவாஜி கணேசன், ராஜ்குமார், நாகேசுவரராவ் மற்றும் ஏனையோருக்கும் பரிசு வழங்கிப் பெருமைப்படுத்தும் இந்த நல்ல விழாவில் எத்தனையோ வேலைகள் இருந்தும், வெளிநாட்டுக்குப் போகும் அவசரத்தில் உள்ள குடியரசுத்தலைவர் இங்கு வந்து கலைஞர்களைப் பெருமைப் படுத்தியதற்காகத் தமிழக அரசின் சார்பில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

''இந்தத் துறைக்கு, தென்னக மக்கள் நல்ல ஆதரவு அளித்து வருகிறார்கள். இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இருக்கும் கலைஞர்கள், கலை நுணுக்க வல்லுநர்கள், திறனாய்வு செய்வோர், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையிடுவோர் அனைவரும் ஒருங்கிணைந்து ஒன்றாக கூட்டார்ந்து பேசி, இப்படித்தான் நமது பண்பாட்டுக்கு ஏற்ற வகையில், தமிழ்ப்படங்களைத் தயாரிக்க வேண்டுமென்று முடிவு எடுக்க வேண்டும்.

''இதை நான் நடிகர் என்ற முறையில் அல்ல, நடிகரை-முதலமைச்சராக்கிய தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். கலைஞர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்த தமிழக மக்கள் நடிகரின் தலைமையில் ஆட்சியை அமைத்தார்கள்.

''இதற்காக அஸ்திவாரம் இட்ட பேரறிஞர் அண்ணாவை நினைத்து வணங்குகிறேன். நடிகர்கள் காட்சிப்பொருளல்ல. சமுதாயத்தில் நல்லவைகளைத் தோற்றுவிக்க, அல்லவைகளை நீக்கி, தியாக உணர்வோடு வாழ அண்ணா 'கல்கி' ஆகியோர் கொடுத்த வழி முறைகளை அடிப் படையாக வைத்து சினிமாத் துறையில் வாழ வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

''நன்றி மறப்பது கூடாது என்பதோடு, தொடக்க காலத்தில் இக்கலைஞர்கள் எவ்வளவு துன்பப்பட்டு இருப்பார்கள் என்பதை நினைக்கும் போது அவர்கள் தியாகம் தெரிகிறது. எவ்வாறு மற்றவர்களின் ஏளனச் சொற்கள், கேலிச் சொற்களுக்கும் அவர்கள் ஆளாக வேண்டியது இருந்தது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

'' நான் நடிக்கத் தொடங்கி 47 ஆண்டுகள் ஆகின்றன என்றார்கள். நடிக்கத் தொடங்கி 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் கதாநாயகனாக நடிக்க முடிந்தது. ஆனால் சிவாஜி கணேசன், நாகேஸ்வரராவ், என்.டி. ராமராவ், ராஜ்குமார் ஆகியோர் முதலில் எடுத்த எடுப்பிலேயே கதாநாயகனாக நடிக்க முடிந்ததை எண்ணி அவர்களையும் இன்று பாராட்டுவது மிகச் சிறந்தது.

தமிழ்நாட்டில் தயாரிப்பாளர்களுக்கென்று ஒரு சங்கம், விநியோகஸ்தர்களுக்கென்று ஒரு சங்கம்,' திரையிடுவோருக்கென்று ஒரு சங்கம் என்று 3 சங்கங்கள் இருப்பதாக அறிகிறேன். அது உண்மையாக இருக்குமானால் அந்த சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரே சங்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். மூன்றாகப் பிரிந்து இருப்பது தேவையில்லை. பிரிவினால் பலம் குறைந்து போகும். ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். நகரங்களிலும் ஒட்டு மொத்த வரி பற்றிக் கூறுகிறார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழக அரசை அணுகினால் இது பற்றி அரசு பரிசீலிக்கும்.

இந்த விழாவில் எனக்கும் பரிசு கொடுப்பதாகச் சொன்னார்கள். நான்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். முதலமைச்சர் பதவியில் இருக்கும் வரையில் எந்தப்பட்டமும், பதவியும் வாங்கக்கூடாது என்ற கொள்கையில் நான் இருக்கிறேன். ''

பின்னர் மாண்புமிகு ஆந்திர மாநில நீர்ப்பாசன அமைச்சர் திரு தாஸ், கர்நாடக மாநில முதல்வர் திரு. குண்டுராவ் ஆகியோர் உரையாற்றினர்.

மேதகு தமிழக ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள், பேசும் படம் பொன்விழா மலரை வெளியிட்டு உரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''1931-ஆம் ஆண்டில் ஆண்டொன்றிற்கு 28 படங்கள் தயாரித்த நிலையிலிருந்து 1980-ல் 752 படம் தயாரிக்கும் அளவுக்கு இந்தியா உயர்ந்திருக்கிறது. இதில் 3ல் 2 பங்கு படங்கள் தென்னகத்தில் தயாரிக்கப்படுகின்றன. தென்னகத்தில் இந்திப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன. புதிய பாரதத்தைப் படைக்கவல்ல திறம் படைத்த சினிமாத் துறை நல்ல விஷயங்களை எடுத்துக்கூற வேண்டும்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களுக்கு - பொன்விழா ஆண்டின் [illegible] நினைவுப் பரிசு ஒன்றினை மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், [illegible] யரசுத் தலைவர் [illegible] அவர் [illegible]

85372

இந்தியத் திரைப்பட பொன் விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய பழைய நண்பர்களையும் சகாக்களையும் சந்திக்கும் வகையில் சென்னை வருவதற்கு இந்த விழா ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

''இங்கு குழுமி இருப்பவர்களில் பலர் ஏற்கனவே எனக்குத் தெரிந்தவர்கள். திரைப்பட உலகில் சாதனை படைத்தவர்கள். திரைபடத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பம்பாய் நகரத்தையும் விஞ்சும் அளவுக்கு மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. இதற்குப் பொறுப்பானவர்கள் இவர்கள். இந்தியாவில் திரைப்படக் காட்சி 1896 ஜூலை 7-ந் தேதி ஆரம்பித்தது. அமெரிக்க-பிரிட்டிஷ் திரைப்பட ரசிகர்கள் போன்று சென்னையில் உள்ளவர்களும் அதே காலத்தில் திரைப்படம் பார்க்கின்ற வாய்ப்பினைப் பெற்றவர்கள். சுமார் 20 ஆண்டுக்காலம் இந்த நாட்டில் மௌனப்படங்களே கோலோச்சி வந்தன. தகவல் தொடர்பு சாதனம் என்ற முறையில் சினிமா மாபெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால் சினிமா ஓர் கலைவடிவம் என்ற முறையில் ஒலி இல்லாமல் அதன் ஆக்க சக்தி அனைத்தையும் பயன்படுத்த முடியாது.

''இந்திய சினிமாவின் ஒலி அறிமுகமானதன் மூலம் திரைப்படத் தொழில் பல்வேறு வழிகளில் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டன. மொழியைச் சரியாகப் பேசத் தெரிந்தவரே முக்கிய வேடத்தில் நடிக்க முடியும். வசனம், பாடல், ஆடல் ஆகியவை திரைப்படத்தின் தேவையான அம்சங்களாக அமைந்தன. எல்லா வகையான சம்பிரதாயக் கலைகளையும் தன்னுள் அடக்கிய கலைவடிவமாக, மிகவும் நவீன தொழில் நுட்பமாக அது படிப்படியாக உருப்பெற்றது. தொழில் முன்னேற்றம் அடைந்த மேலை நாடுகளிலிருந்து சினிமா நுட்பத்தை நமது நாட்டுக்குக் கொண்டு வருவதில் எந்தவித கால இழப்பும் அனுமதிக்கப்படவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக சினிமா இப்போது அமைந்து விட்டது. வளர்ச்சி மற்றும் ஆற்றலின் மகத்தான வடிவமாக நமது திரைப்படத் தொழில் காட்சி தருகிறது.

''மக்கள் தொடர்புக்கான மிக சக்தி வாய்ந்த சாதனம் என்ற முறையில் சினிமா பிரபலமடைந்து சமுதாய பாதிப்பை உருவாக்கும் சக்தியாகத் திகழ்கிறது. அறிவு வளர்ச்சி மற்றும் கல்வி அறிவை ஊட்டுவதிலும் சமுதாய மாற்றத்திற்கான உந்து விசையாகத் திகழ்வதிலும் சினிமாவின் ஆற்றல் அபரிமிதமானது.

நமது படங்கள் அவற்றின் கலையம்சங்களுக்காகவும் தொழில் நுட்பத்தரத்துக்காகவும் சர்வதேசப் பாராட்டைப் பெற்றுள்ளது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவை இந்தியக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆற்றல்மிக்க வெளிப்பாடாக அமைந்துள்ளன. ஆனால் நமது படங்களில் பல இந்தியக் கலாச்சாரத்திற்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. வெளிநாட்டு வாழ்க்கை முறைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இது நீண்டகால அடிப்படையில் எதிர்விளைவுகளை உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. நமது நாட்டின் கலாச்சாரத்தில் ஏராளமான அழகும் வேற்றுமையும் ஒற்றுமையும் உள்ளன. எனினும் உண்மையான திரைப்படத் தயாரிப்பாளர்கள் இவற்றை முழு அளவு வெளிக்கொண்டுவர முடியும். தங்கள் முன் உள்ள இத்தகைய களஞ்சியத்தை அவர்கள் பயன்படுத்துவார்கள். அரைத்த மாவை அரைத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். தேசிய ஒருமைப்பாட்டுக்கும் சமுதாய ஒற்றுமைக்கும் இந்திய சினிமா எப்போதுமே பாடுபட்டு வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் இந்த வகையில் நமது சினிமாக்கள் தொடர்ந்து ஆக்கபூர்வமான பணியை ஆற்றி நமது ஒற்றுமையைக் காக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

''சிறுவர்களுக்காக தயாரிக்கப்படும் படங்கள் மிகக்குறைவாக இருக்கின்றன என்பதைத் தயாரிப்பாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவர' விரும்புகிறேன். பல மாநில அரசுகளின் திரைப்பட வளர்ச்சிக்கழகங்கள் மூலமாகவும், மற்றும் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் மூலமாகவும் கிடைக்கின்ற உதவியைப் பயன்படுத்தித் தரமான பல படங்களைத் தயாரிக்க நமது தயாரிப்பாளர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

நிகழ்ச்சி தொகுப்பு:
எஸ்.எஸ். சுந்தரம்.

## நான்காவது அட்டை

இந்திய பேசும்பட பொன்விழாவினை சென்னையில் 1-12-81-ல் மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்கள் குத்துவிளக்கினை ஏற்றி தொடக்கி வைத்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்க, மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் விழா மலரினை வெளியிட்டார். மாண்புமிகு கர்நாடக மாநில முதல்வர் திரு ஆர். குண்டுராவ் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். தென் இந்திய திரைப்பட வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு டி. இராமானுஜம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

'தென்னகத் திரையுலகில் நெடுங்காலமாகப் பணியாற்றி வரும் நடிக நடிகையர், தொழில் நுணுக்கக் கலைஞர்கள் ஆகியோருக்குக் குடியரசுத் தலைவர் அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். விருது பெற்ற கலைஞர்களின் வரலாற்றுச் சுருக்கத்தை செல்வி ஜெயலலிதா ஆங்கிலத்தில் விளக்கிச் சொன்னார்.

இந்தியத் திரைப்படக் கழகத்தின் தலைவர் திரு ஜி.பீ. சிப்பி நன்றியுரையாற்றினார்.

மொத்தத்தில் திரைப்பட பொன்விழாவின் துவக்க விழா மெத்தவும் புகழ்பெற்ற விழாவாக — மக்கள் நெஞ்சங்களில் நிலைபெற்ற விழாவாகத் திகழ்ந்தது என்றே சொல்ல வேண்டும்.



